சொல்கிறார்கள். எங்களுக்கு மிகவும் வேதனையாக இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நானும் 15, 20 வருடங்களாக கல்லூரிகள் நடத்திக்கொண்டிருக்கிறோம். எனவே, அதிலுள்ள சிரமங்கள் அனைத்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஒன்று, வருடா வருடம் Examination Fees*–ஐ ஏற்றிக்கொண்டே வருகிறார்கள். அதேபோன்று, மாணவர் சேர்க்கையைவிட ஆசிரியர் பணியிடங்களை அதிகப்படுத்த வேண்டும் என்று ஒரு* G.O. *போட்டிருக்கிறார்கள். அதேபோன்று 2 அல்லது 3 வருடத்திற்கு ஒரு முறை* syllabus*–ஐ மாற்றிக்கொண்டே வருகிறார்கள். அதுவும் இல்லாமல் கணினிகளை 2*G *ஆக இருப்பனவற்றை 4*G *ஆகவும், 5*G *ஆகவும் மாற்றுங்கள் என்று ஏகப்பட்ட* conditions*–ஐ போட்டுக்கொண்டே வருகிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் தற்போது* college*–ஐ* continue *பண்ணப் போகிறீர்களா?* Wind–up *பண்ணப் போகிறீர்களா?*

திரு. K.C. கருப்பணன்: *தற்போதைய சூழலில், தெரிந்த விஷயம்தான்.* Mechanical *என்று சொன்னால், அதில் இரண்டு* subjects *வைத்திருக்கிறோம். 120* seats *உள்ள இடத்தில் 60* seats fill–up *ஆகின்றன என்றால், 60* seats *அதற்கு அடுத்த வருடம்* fill–up *ஆகும் வாய்ப்புகூட உள்ளது. ஆனால், அவ்வாறு 60* seats *மாணவர் சேர்க்கை இல்லாத இடங்களிலும் ஆசிரியர்களை நியமிக்க வேண்டிய நிலை குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. K.C. கருப்பணன்: *இவற்றையெல்லாம்* relax *செய்து, பழைய நடைமுறையைக் கொண்டுவர வேண்டும். 15 வருடங்களுக்கு முன்பு, 1 இலட்சம் ரூபாயாக இருந்த* fees, *இன்றைக்கு ரூ.75,000, ரூ.50,000, ரூ.35,000 என்று குறைந்துவிட்டது. ஆனால், ஆசிரியர் சம்பளம். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள். என்ன வேண்டும் என்பதை மட்டும் கேளுங்கள். உங்கள்* college*–க்கு என்ன வேண்டும் என்பதை மட்டும் கேளுங்கள்.*

[*2022 மே 6*

திரு. K.C. கருப்பணன்: *ஆசிரியர் சம்பளம் ஏறிக்கொண்டே செல்கிறது. Syllabus–ஐ மாற்றி, பல conditions–ஐ போடுகிறார்கள். மாணவர் சேர்க்கையைவிட ஆசிரியர் பணியிடங்களை அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். இவற்றையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரிசெய்து கொடுத்தார்களேயானால், கல்லூரிகள் மேலும் சிறப்பான முறையில் திறம்பட நடைபெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–20

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றுதான் அவருடைய கட்சி உறுப்பினர் அவர்கள், 'தனியார் கல்லூரிகளில் கல்விக் கட்டணம் கட்டவில்லையெனில், Certificate கொடுக்க மாட்டேன் என்கிறார்களே' என்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினரும் தனியார் கல்லூரியை நடத்திக்கொண்டிருப்பவர். எனவே, இவருடைய கஷ்டத்தை முதலில் அவரிடம் சொல்லச் சொல்லுங்கள். சுயநிதிக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) அதுபோன்ற சூழ்நிலைகள் இருக்கின்ற காரணத்தினால், தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், பொறுப்பாக, அனைத்துக் கல்லூரிகளிலேயும் அவரவர்களின் தேவைக்கேற்ப என்ன பணிகளைச் செய்ய வேண்டுமோ அவை அனைத்தையும் செய்து கொண்டிருக்கிறோம்.*

அதே நேரத்தில் சுயநிதிக் கல்லூரிகள் தன்னிச்சையாகச் செயல்பட முடியாது. அவையும் அரசாங்கத்தினுடைய, பல்கலைக்கழகத்தினுடைய கட்டுப்பாட்டில் இயங்க வேண்டும். பாடத் திட்டத்தை அடிக்கடி மாற்றுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். வேலைவாய்ப்புகள் கிடைப்பதற்கேற்ப பொறியியல் கல்லூரிகளின் பாடத் திட்டத்தை மாற்ற வேண்டுமென்றுதான் ஒரு Syllabus Committee–ஐ அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டு, அண்ணா பல்கலைக்கழகத்தில் ஒரு Syllabus Committee–ஐ அமைத்திருக்கிறோம். வேலைவாய்ப்புகள்

2022 மே 6]

கிடைப்பதற்கேற்ப, பாடத் திட்டங்களை மாற்றியமைத்து, அதை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 233, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

233—

தொழிற்பூங்கா

***12040—திருமதி க. சிவகாமசுந்தரி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி ஒன்றியத்தில் தொழிற்பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கிருஷ்ணராயபுரம் தொகுதி அடங்கிய கரூர் மாவட்டத்தில் சர்வதேச தரத்திலான ஜவுளிப் பூங்கா ஒன்றினை 200 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்க நிலம் தெரிவு செய்யப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி அவர்கள்.*

திருமதி க. சிவகாமசுந்தரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதி அடங்கிய கரூர் மாவட்டத்தில் இடம் தெரிவு செய்யப்பட்டு, விரைவில் தொழிற்பூங்கா அமைக்கப்படும் என்று தெரிவித்தமைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதியின் பெரும்பகுதி மிகவும் வறட்சியான பகுதியாகும். கடவூர் வட்டத்தில் 23 வருவாய் கிராமங்கள் உள்ளன. இங்கு

சுமார் 1,17,000 மக்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் வேலைவாய்ப்பிற்கான வழிவகைகள் ஏதும் இல்லாததால், பொதுமக்கள் மற்றும் படித்த இளைஞர்கள் பிழைப்பு தேடி, சுமார் 50 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கரூர், திண்டுக்கல், திருச்சி, வேடசந்தூர் போன்ற நகரங்களுக்குச் சென்று தினக்கூலியாக வேலைபார்த்து வருகின்றனர். எனவே, இப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும்வகையில், கடவூர் வட்டப் பகுதியான தரங்கம்பட்டியில் புதிய தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டத்திலுள்ள கிருஷ்ணராயபுரம் தொகுதி, மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதியாக இருக்கக்கூடிய காரணத்தினால்தான், கடந்த முறை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரினுடைய பரிந்துரையின் அடிப்படையில், அவர்கள் வலியுறுத்தியதன்பேரில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த இடத்திலே ஒரு புதிய தொழிற்பூங்கா அமைப்பதற்கான அனுமதியினை வழங்கினார்கள்.* SIPCOT *மூலமாக அமையவிருக்கின்ற அந்தத் தொழிற்பூங்காவில், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய பலருக்கும் வேலைவாய்ப்புகளை நிறைவான வகையிலே உருவாக்குவதற்காகத்தான் ஒரு புதிய ஜவுளிப் பூங்கா*–Textile Park-*ஐ உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. எனவே, அது அமைகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப்போல, கடவூர் வட்டாரப் பகுதியிலே இருக்கக்கூடிய பொதுமக்கள், அங்கே வேலைவாய்ப்பை நாடக்கூடியவர்கள் நிறைவான வகையிலே வேலைவாய்ப்பினைப் பெறக்கூடிய சூழல் நிச்சயமாக உருவாகும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி அவர்கள்.*

திருமதி க. சிவகாமசுந்தரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத்*

2022 மே 6]

தெரிவித்துக்கொள்கிறேன். தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், வெள்ளியணை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் மிகவும் வறட்சியான பகுதிகளாகும். இங்கு வசிக்கும் மக்கள் வேலைக்காக தினந்தோறும் கரூர் வந்து செல்கின்றனர். இப்பகுதியில் புதிய சிமெண்ட் ஆலை அமைத்துத் தர அரசு முன்வருமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய சிமெண்ட் ஆலைகளை அமைக்கக்கூடிய உத்தேசம் அரசிற்கு தற்போது ஏதுமில்லை. தனியார் நிறுவனத்தினர் முன்வரக்கூடிய சூழ்நிலை உருவானால், அதற்கான உரிய சுற்றுச்சூழல் அனுமதி உள்ளிட்ட அனுமதிகளைப் பெற்று, அதற்கான மூலப்பொருட்கள், உற்பத்தி போன்றவற்றையெல்லாம் கணக்கிலே எடுத்துக்கொண்டு அவர்கள் முன்வந்தால், அரசாங்கம் Guidance Tamil Nadu மூலமாக அவர்களுக்கு உரிய வழிகாட்டுதல்களை வழங்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. G.V. மார்க்கண்டேயன் அவர்கள்.

திரு. G.V. மார்க்கண்டேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி, மதுரையிலிருந்து தூத்துக்குடி செல்கின்ற Industrial Corridor பகுதியில் அமைந்திருக்கிறது. ஏறக்குறைய 60 கிலோ மீட்டர் தேசிய நெடுஞ்சாலை அமைந்திருக்கிற அந்தப் பகுதியில், எந்த ஒரு தொழிற்சாலையும் இல்லாத நிலை உள்ளது. எனவே, அனைத்து மக்களும் பயன்பெறுகிற அளவிற்கு விளாத்திகுளம் தொகுதியில், ஓர் உணவு பதப்படுத்துகிற தொழிற்பூங்கா அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

[*2022 மே 6*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை–தூத்துக்குடி* Industrial Corridor, *தமிழ்நாடு முதலமைச்சராக மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இருந்த காலத்திலே, அவருடைய கனவுத் திட்டமாக உருவாக்கப்பட்டது. அதற்குப் பிறகு, ஒரு* Special Purpose Vehicle *என்கின்ற வகையிலே ஒரு நிறுவனம் துவக்கப்பட்டாலும்கூட நீண்டகாலமாகச் செயல்படாத நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு, அந்த* Corridor*–க்கு ஒரு புத்துயிரை ஊட்டியிருக்கிறார்கள்.*

முற்பகல் 10–25

தூத்துக்குடியில் பல முக்கியமான நிறுவனங்கள் இன்றைக்கு வர இருக்கின்றன. 'Furniture Park'*–க்காக இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய விளாத்திகுளம் தொகுதியிலேயே சிப்காட் மூலமாக நிலம் எடுக்கும் பணியும் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அது ஒரு முக்கியமான தொழில் வழித்தடம் என்பதில் மாறுபட்ட கருத்தில்லை. எனவே, அவர் விரும்பியவாறு அந்த இடத்திலே* 'Food Park' *அமைக்கக்கூடிய வசதிகள் உருவாகும்பட்சத்தில் விளாத்திகுளம் பகுதியை நிச்சயமாக அரசு முன்னுரிமை அடிப்படையில் கருத்தில்கொள்ளும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *ஜெயக்குமார் அவர்கள்.*

திரு. S. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பெருந்துறை சிப்காட் 2,500 ஏக்கர் பரப்பளவில் சிறப்பாக இயங்கி வருகின்றது. கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்னால், 60–க்கு 40 என்ற அளவில் 200 கட்டடங்கள் தயாராக இருந்தும், அவை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வராமல் உள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவற்றைப் பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

2022 மே 6]

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட் நிறுவனத்தினுடைய கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய பெருந்துறை சிப்காட் ஒரு முக்கியமான தொழில் வளாகம் என்பதில் மாறுபட்ட கருத்தில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல அங்கு தொழில்மனைகள் பயன்பாட்டிற்கு வராமல் இருக்கிறதா, கட்டி வைத்திருக்கிறார்களா என்பது குறித்து அரசாங்க உயரதிகாரிகளோடு உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். நான் குறிப்பிட்டதைப்போல, இப்போது பல்வேறு நிறுவனங்கள் Plug and Play model வருவதற்கு ஆர்வம் காட்டுகிறார்கள். அப்படித் தயார் நிலையில் இருந்தால், அதனை அப்படியே occupy செய்து தொழிலைச் செய்யலாம். அவ்வாறு பயன்படுத்தக்கூடிய நிலையில் இருந்தால், நிச்சயமாக அரசு அதனைப் பரிசீலிக்கும். உரிய அதிகாரிகளைக் கொண்டு விசாரித்து, உடனடியாக அதனைச் செயல்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்கள்.

டாக்டர் வை. முத்துராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சிப்காட் தொழிற்சாலையில், ஏறத்தாழ 209 தொழிற்சாலைகள் இயங்கி வந்தன. கடந்த பத்தாண்டுகளில் அவை நலிவடைந்து, தற்போது வெறும் 50 தொழிற்சாலைகள் மட்டுமே இயங்கி வருகின்றன. வானம் பார்த்த பூமியான புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளும் தண்ணீர் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இங்குள்ள படித்த இளைஞர்கள் வேலைக்காக வெளி மாவட்டங்களுக்கும், வெளி மாநிலங்களுக்கும், வெளி நாட்டிற்கும் செல்லும் நிலை உள்ளது. இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக இருக்கும் தமிழ்நாட்டில் புதுக்கோட்டை மாவட்டம் கடைநிலையில் உள்ளது. தொழில் துறையில் சரித்திரம் படைத்து வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வழியில் செயல்பட்டு வரும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை சிப்காட் தொழிற்சாலையை மேம்படுத்த ஆவன செய்ய வேண்டுமென தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளைச் செய்து, தொழில் முனையக்கூடிய வாய்ப்புகளைத் தேடி வரக்கூடியவர்களுக்கு, தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய இத்தகைய தொழிற்பூங்காக்களை நாங்கள் காட்டுகிறோம். இத்தகைய தொழில் வளர்ச்சி சமச்சீரான வகையில் தமிழ்நாடு முழுவதும் அமைய வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு அறிவுரைகள் வழங்கியிருக்கிறார்கள். குறிப்பிட்ட பகுதியில் மாத்திரமில்லாமல் அது எல்லா இடங்களிலும் இருக்க வேண்டுமென்பதை அவர்கள் குறிப்பாக வலியுறுத்தியிருக்கின்றார்கள். ஆகவே, தொழில்முனைவோர்கள், தொழில் முதலீடு செய்யக்கூடியவர்களுக்கு எல்லா இடங்களையும் காட்டுகிறோம். அவர்கள் விரும்புகிற இடங்களை அவர்கள் தேர்வு செய்கிறார்கள்.

தொழிலைப் பொறுத்தவரையில், திருச்சிராப்பள்ளி மிக வளர்ந்து வரக்கூடிய ஒரு தொழில் நகரமாக இருக்கிறது. அதனை நீங்கள் நன்றாக அறிவீர்கள். இப்போது பாதுகாப்புத் துறை சம்பந்தமான தொழில்கள் அங்கே அதிகளவில் வர இருக்கக்கூடிய நிலையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்திருக்கக்கூடிய இந்த சிப்காட் தொழில் வளாகத்திலும் அதிகளவில் தொழில்கள் வருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நாங்கள் கனிவோடு கவனத்தில் கொண்டு, அத்தகைய தொழில் முதலீடுகள் வருகிறபோது புதுக்கோட்டை மாவட்டத்தில், நிச்சயமாக அவர்களுக்கு ஒரு வாய்ப்பினை உருவாக்கக்கூடிய வகையில் நாங்கள் வழிகாட்டுவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 234, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

234—

தார்ச் சாலை

***3415—திரு. தி. ராமச்சந்திரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 மே 6]

(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி வட்டம், மேல்மங்கலம் ஊராட்சி, தெற்கு குடியிருப்பில் தார்ச்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையினை பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், மேல்மங்கலம் ஊராட்சியில் மூன்று சாலைகள் பயன்பாட்டில் உள்ளன. அவையாவன, மேல்மங்கலம் அறந்தாங்கி கட்டுமாவடி சாலை முதல் மேல்மங்கலம் தெற்கு சாலை வரை 1,050 மீட்டர் நீளமுள்ள சாலையாகவும், அதேபோன்று குன்னூர் தொண்டைமானேந்தல் சாலை முதல் மேல்மங்கலம் தெற்கு குடியிருப்பு வரை தார்ச்சாலையாக 2.7 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையாகவும் இருக்கின்றது. அதேபோல், மேல்மங்கலம் தெற்கு ஆத்தங்கரை சாலை வரையில் 1,000 மீட்டர் மண் சாலையாக உள்ளது. ஆக, அந்த வகையில் மேல்மங்கலம் ஊராட்சியில் குன்னூர் தொண்டைமானேந்தல் சாலை முதல் மேல்மங்கலம் தெற்கு குடியிருப்பு வரையில் உள்ள தார்ச்சாலையில், 2.7 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை பழுதடைந்துள்ள நிலையில் உள்ளதால், இந்த மூன்று சாலைகளுக்கும் முன்னுரிமை தந்து, 2022–2023 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு ஊரக சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.105 இலட்சம் மதிப்பீட்டில் சாலைகள் மேம்படுத்தப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன் அவர்கள்.*

முற்பகல் 10–30

திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சாலையைச் சீர்செய்தால் இப்பகுதியில் மேலமங்கலம் கிழக்கு, தெற்கு, காரணியேந்தல், வேம்பூர், குன்னூர், பள்ளத்திவயல், கிடங்கிவயல் போன்ற பல குக்கிராமங்கள் பயன்பெறும். இதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு*

எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எனது தொகுதியில் மூன்று ஊராட்சி ஒன்றியங்களும், 88 ஊராட்சிகளும் உள்ளன. இவற்றில் நிறைய சாலைகள் பழுதடைந்துள்ளன. ஆகவே, ஒவ்வோர் ஒன்றியத்திற்கும் குறைந்தபட்சம் 15 சாலைகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றை இந்த நிதியாண்டிலேயே முன்னுரிமை அளித்து, சீர்செய்துதர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது மட்டுமல்ல; கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற மானியக் கோரிக்கை விவாதத்தின்போது அவர் ஆற்றிய உரையைக் கவனித்தேன். தனது தொகுதியின் வளர்ச்சியில், தனக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்த தொகுதி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வத்தோடு இருக்கிறார்கள். அதேநேரத்தில், மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமையிலான இந்த அரசும் மக்களுக்கு எல்லா வசதிகளையும், குறிப்பாக அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை கிராமப் பகுதிகளில் உருவாக்கித்தர வேண்டும் என்று முனைப்போடு செயல்பட்டு வருகின்றது. ஆக, உங்களுடைய எண்ணங்களும், இந்த அரசின் எண்ணங்களும் ஒன்றாக இருக்கின்றன. நிதிநிலைகளுக்கேற்ப நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்வதைப்போல, நிறைவேற்றப்பட்டவைதவிர, இன்னும் நிறைவேற்றப்படாத பல காரியங்களையும் குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து முடிப்போம். அந்த உறுதிமொழியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன் அவர்கள்.

திரு. தி. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம், சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. இது மிகவும் பழுதடைந்துள்ளது. இதற்கும் ஒரு புதிய கட்டடம்

2022 மே 6]

கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதியாண்டில் குறைந்தபட்சம் ஓர் ஒன்றியத்திற்கு 4 ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள் கட்டித்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களுடைய தேவைகளுக்காக சாலைகள், சுகாதாரம், தெருவிளக்கு என்று இப்படி பல்வேறு அடிப்படை வசதிகளைச் செய்து தருவதோடு, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் தங்களுடைய பணிகளை முறையாகச் செய்வதற்கும், பொதுமக்கள் அவர்களை வந்து சந்திப்பதற்கும் வசதிகளை உருவாக்கித்தர வேண்டும் என்ற நோக்கத்தோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இந்த அரசு செயல்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில்தான் சமீபத்தில் ஏறத்தாழ 56 ஊராட்சி ஒன்றியங்களுக்கான கட்டடங்களுக்கு, ஒவ்வொரு கட்டடமும் ரூ.3.95 கோடி மதிப்பீட்டில் ஏறத்தாழ ரூ.221 கோடிக்கு அலுவலகக் கட்டடங்களைக் கட்டுவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. அதேநேரத்தில் அங்கு செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய அலுவலகங்கள் எந்த நிலையில் இருக்கின்றன, பழுதடைந்த நிலையில் இருக்கின்றனவா, அதற்கான இடவசதிகள் எல்லாம் இருக்கின்றனவா என்பதையெல்லாம் துறைவாரியாக ஆய்வு செய்து, கேட்டறிந்துதான் செய்யப்படுகிறது. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களும் இங்கு இருக்கின்றார்கள். தங்களது மாவட்டத்திற்கு நிறைய கட்டடங்கள் வேண்டும் என்று குறிப்பிட்டுச் சொல்லி கேட்டுள்ளார்கள். நிச்சயமாக தகுதியின் அடிப்படையில், ஒன்றிய அலுவலகத்திற்கான கட்டடம் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

இதுவரை ஒன்றிய அளவில், ஊராட்சிகளில், கிராம நிருவாக அலுவலர் அலுவலகம், அதைப்போல ஊராட்சி மன்றத் தலைவர்கள் போன்றவர்களுக்கு தனித்தனியாக அலுவலகங்கள் உள்ளன. ஆகவே, பொதுமக்கள் தங்களது தேவைகளைப் பெறுவதற்கு இடம் விட்டு இடம் செல்ல வேண்டிய சூழ்நிலையை உணர்ந்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவற்றை ஒருங்கிணைத்து ஊராட்சி மன்றத் தலைவர் அலுவலகம், கிராம

நிருவாக அலுவலர் அலுவலகம் இவற்றையெல்லாம் இணைத்து அவர்களுக்குத் தனித்தனி அறைகளை ஒதுக்கி, கூட்டரங்கை அமைத்து, இதுவரை இல்லாத அளவில் தலா ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் 600 புதிய ஊராட்சிக் கட்டடங்கள் கட்டுவதற்கு, விதி 110—ன்கீழ் அறிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இடவசதி இருக்குமேயானால், நீங்கள் குறிப்பிட்ட நான்கு இடங்களில் மட்டுமல்ல, அதற்கு மேலும் செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 235, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

235—

அங்கன்வாடி மையம்

***1625—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவையாறு தொகுதி, கடுவெளியில் உள்ள அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களது அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, திருவையாறு வட்டாரம், கடுவெளியில் உள்ள குழந்தைகள் மையமானது 1998 ஆம் ஆண்டு முதல் அரசு சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வந்தது. இம்மையக் கட்டடம் பழுதடைந்த காரணத்தினால், குழந்தைகள் பாதுகாப்பு கருதி, இம்மையம் அருகில் உள்ள வாடகைக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டு, தற்போது செயல்பட்டு வருகிறது. பழைய கட்டடத்தை பழுதுநீக்கி சீர்செய்ய முடியாத நிலையில் உள்ளதால், அதனை முழுவதுமாக இடித்துவிட்டு இம்மையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2022 மே 6]

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார் அவர்கள்.*

திரு. கோ. செந்தில் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதியில், எடப்பாடியார் அவர்களின் ஆட்சிக்காலத்தில், 8 அங்கன்வாடி மையங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டு, இன்னும் பணி துவங்கப்படாமல் இருக்கிறது. அந்தப் பணிகள் துவங்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி தொகுதியில் 8 அங்கன்வாடி மையங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டதாகக் கூறினார்கள். அது ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே, நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கோரிக்கைக்கு அரசு சிறப்பு கவனம் செலுத்தி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கூறி, சரி செய்யப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 236, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி, மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

236—

கால்நடை மருத்துவமனை

***10138—திரு. ஆ. கோவிந்தசாமி:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி ஒன்றியம், நடுப்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 மே 6

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தருமபுரி ஒன்றியம், நடுப்பட்டியில் புதியதாக கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள்.*

திரு. ஆ. கோவிந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், துணைத் தலைவர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும், எங்கள் மண்ணின் மைந்தர் அண்ணன் கே.பி. அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

தருமபுரி ஒன்றியம், அக்கமனஅள்ளி, சோளக்கொட்டாய் பகுதியில்தான் கால்நடை கிளை நிலையம் வேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தேன். அந்தப் பகுதியில் உள்ள பசுக்களின் எண்ணிக்கை 2,712; எருமைகளின் எண்ணிக்கை 707; செம்மறி ஆடுகளின் எண்ணிக்கை 85; வெள்ளாடுகளின் எண்ணிக்கை 205; கோழி வகைகள் இவையெல்லாம் சேர்ந்து 3,709 கால்நடைகள் அங்கே இருக்கின்றன. அருகில் உள்ள கால்நடை கிளை நிலையங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால், ஏறக்குறைய 5 கி.மீ. தூரம் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது; அரசு நிர்ணயித்துள்ள தேவையான அலகுகள் இந்தப் பகுதியில் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த பகுதியில் ஒரு கால்நடை கிளை நிலையம் அமைத்துக் கொடுக்க முன்வருவாரா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விதிமுறைகளின்படி பொதுவாக கால்நடை மருத்துவமனைகளை நேரடியாகத் துவக்க இயலாது. முதலில் கால்நடை கிளை நிலையம்தான்*

2022 மே 6]

துவக்க முடியும். அந்த கிளை நிலையத்திற்கு நாள்தோறும் 30 கால்நடைகள், மருத்துவ சேவை மற்றும் இதர சேவைகள் பெறுவதற்கு வரும்பட்சத்தில், அந்தக் கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும்.

கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்திக் கொடுப்பதற்கு, அம்மருந்தகத்தில் சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் சராசரி எண்ணிக்கை 40–க்குமேல் இருக்க வேண்டும். மேலும், அந்த கால்நடை மருந்தகம் 20 சென்ட் நிலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும். உள் நோயாளிகளுக்கான சிகிச்சைப் பிரிவு வசதிகள், மருந்துகள் வைப்பறை, அலுவலக அறை, சிகிச்சை அறை போன்றவற்றிற்குப் போதிய இட வசதிகள் இருத்தல் அவசியம். மேலும், அரசின் விதிமுறைகளின்படி கால்நடை கிளை நிலையம் துவங்க அந்தக் கிராமத்தில் 3,000 கால்நடை அலகுகள் இருக்க வேண்டும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கால்நடை மருத்துவமனை கோரியுள்ள நடுப்பட்டி கிராமத்தில் 2,010 பசு இனங்களும், 54 எருமை இனங்களும், 21 செம்மறி ஆடுகளும், 82 வெள்ளாடுகளும், 110 கோழி இனங்களும் ஆக மொத்தம் 2,277 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளன. எனவே, தருமபுரி ஒன்றியம், நடுப்பட்டியில் புதியதாக கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள்.*

திரு. ஆ. கோவிந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதில்கள், நான் சொன்னவை எல்லாம். . . (குறிக்கீடு) அரசு அதிகாரிகள் கொடுத்த விவரங்களைத்தான் நானும் சொல்லியிருக்கிறேன். அடுத்து, தென்கரைக்கோட்டை பகுதியில் உள்ள வடகரையில் ஒரு நாளைக்கு 3,000 லிட்டர் பால் கிடைக்கிறது. அங்கிருக்கிற பசுக்களின் எண்ணிக்கை 2,937, எருமைகளின் எண்ணிக்கை 300, ஆடுகளின் எண்ணிக்கை 120, இவ்வாறு அங்கு 3,357 கால்நடைகள் இருக்கின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *3,000 கால்நடைகள், 3,000 லிட்டர் பால் எப்படி போதும்?*

முற்பகல் 10—40

திரு. ஆ. கோவிந்தசாமி: *அந்தப் பகுதியில்* BMC Center, *பால் குளிரூட்டும் நிலையம் இருக்கிறது. 3,000 மாடுகள் இருந்தால் குறைந்தது ஒரு நாளைக்கு 30,000 லிட்டர் பால் வரும். 300 மாடுகள் இருந்தாலே 3,000 லிட்டர் பால் வந்துவிடும். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தருமாறு கேட்கவில்லை. நான் கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தருமாறுதான் கோரினேன். நான் ஏற்கெனவே கால்நடை கிளை நிலையம்தான் கேட்டிருந்தேன். ஆகவே, இந்த வடகரை பகுதியிலும் கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். இதற்கான பரிந்துரை ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, இதைத் தொடங்குவதற்கு அரசு முன்வர வேண்டும் எனத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது கால்நடை கிளை நிலையம் அல்ல, மருந்தகம். அந்தக் கேள்விக்குத்தான் முதலில் கால்நடை மருந்தகம் இல்லை என்ற பதிலை நான் சொன்னேன். அந்த வகையில் பாப்பிரெட்டிப்பட்டி தொகுதியில் 20—வது கால்நடை கணக்கெடுப்பின்படி, 77,000 மாட்டினங்களும், 64,000 ஆட்டினங்களும், 9 இலட்சம் கோழியினங்களும் விவசாயிகளால் வளர்க்கப்படுகின்றன. இவற்றுக்கு மருத்துவ மற்றும் இதர சேவைகள் வழங்குவதற்கு ஒரு கால்நடை மருத்துவமனையும், 22 கால்நடை மருந்தகங்களும், 3 கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. தருமபுரி ஒன்றியம், நடுப்பட்டி கிராமத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ள மூக்கனேரியிலும், 6 கி.மீ. தொலைவில் உள்ள செட்டிக்கரையிலும் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு ஊரை குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதையும் குறிப்பெடுத்துக்கொண்டு, இத்துறை அதிகாரிகளின்மூலம் ஆய்வு செய்து, கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்குமென்று*

2022 மே 6]

சொன்னால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய மேலான அனுமதியைப் பெற்று, நிதிநிலைமைக்கேற்றாற்போல் அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தியாகராஜன் அவர்கள்.*

திரு. ந. தியாகராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முசிறி சட்டமன்றத் தொகுதி, தாத்தையங்கார்பேட்டை யூனியன், கொம்பக்கரை பஞ்சாயத்தைச் சேர்ந்த பெருகனூரில் கால்நடை கிளை நிலையம் அமைத்துத்தர தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை கிளை நிலையங்கள் இருக்கும் கிராமங்களில் 3,000 கால்நடைகள் கண்டிப்பாக இருக்க வேண்டும். அருகிலுள்ள கால்நடை கிளை நிலையத்திலிருந்து குறைந்தபட்சம் 3 கி.மீ. தூரம் இருக்க வேண்டும். தினசரி வருகைதரும் கால்நடைகளின் எண்ணிக்கை 10 ஆவது இருக்க வேண்டும். அவ்வாறு இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற அந்தப் பகுதியில் எங்கள் துறையின்மூலம் ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையைப் பெற்று, நிதிநிலைக்கேற்ப அரசு சிந்திக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி அவர்கள்.*

திரு. அ. பண்ணாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். பவானிசாகர் தொகுதி, அரியப்பமலை பேரூராட்சியில் உள்ள பெரியூர் என்னுமிடத்தில் கால்நடை மருத்துவமனை உள்ளது. ஆனால், அது செயல்படாமல் உள்ளது. ஆகவே, அந்தக் கால்நடை மருத்துவமனையை கால்நடைகளின் பயன்பாட்டிற்குக் கொண்டு வர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் கால்நடை மருத்துவர்கள் நியமனம் சம்பந்தமாக பல்வேறு வழக்குகள் நீதிமன்றத்தில் நடந்துவந்தன. தற்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் அந்த வழக்குகள் நடத்தப்பெற்று, 1,089 மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். அந்த வகையில் தற்போது மருத்துவர்களே இல்லை என்ற நிலைமை இல்லாத வகையில், கால்நடை மருத்துவர்களை நியமனம் செய்திருக்கின்றோம். கால்நடை உதவியாளர்களும் தேர்வு செய்யப்பட்டு வருகின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியிலும் அதுபோன்ற நிலை இருக்குமேயானால், உடனடியாக அதற்குரிய நடவடிக்கைகளை எங்கள் துறையின்மூலம் எடுப்போம் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 237, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

237—

புதைவடங்கள்

***3695—திரு. ப. கார்த்திகேயன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் தொகுதி, தோட்டப்பாளையம், மண்டி தெரு, காந்தி சாலை, மூங்கில் மண்டி வீதி மற்றும் அண்ணா சாலை ஆகிய பகுதிகளில் உள்ள உயரழுத்த மின் கம்பிகளை புதைவடங்களாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2022 மே 6]

வேலூர் தொகுதி, தோட்டப்பாளையம், மண்டி தெரு, காந்தி சாலை, மூங்கில் மண்டி வீதி மற்றும் அண்ணா சாலை ஆகிய பகுதிகளில் உள்ள உயரழுத்த மின் கம்பிகளை புதைவடங்களாக மாற்றியமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.*

திரு. ப. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து பரிசீலனையில் இல்லை என்று சொல்கிறார்கள். சித்ரா பௌர்ணமி அன்று 8 புஷ்பப் பல்லக்குகள் வருகின்றன. அவற்றைக் குறித்து சொல்ல வேண்டுமென்றால், துர்க்கையம்மன் கோயிலிலிருந்து ஒரு புஷ்பப் பல்லக்கு வருகிறது. தோட்டப்பாளையம், தர்மராஜா கோயிலிலிருந்து ஒரு புஷ்பப் பல்லக்கு வருகிறது. மண்டித் தெருவிற்கு சேம்பாக்கம் செல்வ விநாயகர் கோயிலிலிருந்து ஒரு புஷ்பப் பல்லக்கு வருகிறது. வாணியர் தெரு, பிள்ளையார் கோயிலிலிருந்து ஒரு புஷ்பப் பல்லக்கு வருகிறது. மண்டித் தெரு பூக்கடை பல்லக்கின் சார்பில் பெருமாள் கோயில் தெருவிலிருந்து ஒரு புஷ்பப் பல்லக்கு வருகிறது. அதேபோல, பூக்காரத் தொழிலாளர்களின் சோலாபுரியம்மன் கோயிலிலிருந்து ஒரு புஷ்பப் பல்லக்கு வருகிறது. அதேபோல, வேலப்பாடியிலுள்ள கருமாரியம்மன் கோயிலிலிருந்து ஒரு புஷ்பப் பல்லக்கு வருகிறது.*

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், எல்லா ஊர்களில் இருந்தும் புஷ்பப் பல்லக்குகள் வருகின்றன. அங்கு என்ன வேண்டுமென்ற கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. ப. கார்த்திகேயன்: *சிறப்புமிக்க கோட்டைக் கோயிலிலிருந்து ஜலகண்டேஸ்வரர் புஷ்பப் பல்லக்கு வருகிறது. அதனால்* underground cable *அமைத்துத்தர வேண்டுமென்று, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியினுடைய அனைத்துப் பகுதிகளிலும் மேல்நிலை மின்கம்பிப் பாதைகளை புதைவடங்களாக மாற்றியமைத்து அந்தப் பணிகளை 100 சதவிகிதம் நிறைவு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவுகளை வழங்கியிருக்கின்றார்கள். பெரம்பூர், தாம்பரம், ஆவடி, அடையாறு,* IT corridor *ஆகிய 5 கோட்டங்களில் இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் பணிகள் இறுதி செய்யப்படுகின்றன. அடுத்த ஆண்டிற்கு 7 கோட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு, அதற்கான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. எனவே, முதற்கட்டமாக சென்னை மாநகராட்சி முழுவதும் அந்தப் பணிகள் நிறைவு செய்யப்பட்டபிறகு, மற்ற மாநகராட்சிகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, படிப்படியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், அப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய பகுதிகள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.*

திரு. ப. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொன்னதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேலூர் தொகுதியில் இருக்கிற* Division office*–ஐ மாற்றுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அது வேலூரிலேயே தொடர்ந்து இருந்து, வேலூர் மக்கள் பயனடைய உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துணை முதல்வராக இருந்த காலத்தில்தான், 2006–2011–ல், வேலூரில் பெரிய அளவில் நிறைய மாற்றங்கள் உருவாக்கப்பட்டன. ஆகவே, தற்போது அவசியம் இந்த* Underground cable*–களை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.*

2022 மே 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் Division office அந்த இடத்தில் செயல்படுவதில் எந்தவித மாற்றமும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்; அவருக்கு நான் ஏற்கெனவே சொன்ன பதில்தான். வரக்கூடிய ஆண்டுகளில் முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. செல்வராஜ் அவர்கள்.

திரு. க. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாநகரத்திற்குத் தடையில்லா மின்சாரம் கிடைக்கும் வகையில், திருப்பூர் மின் பகிர்மான வட்டத்தில் கூடுதலாக துணை மின் நிலையங்கள் அமைக்கப்படுமா என்பதையும், மேலும், திருப்பூர் தெற்கு வளையக்காடு வி.பி. சிந்தன் நகரில் 3 வீதிகளில் உயர் மின்னழுத்தக் கம்பிகள் குடியிருப்புகளுக்கு இடையூறாக உள்ளன. இவற்றை மாற்றியமைக்க பொது மக்கள் சார்பில் இரண்டு இலட்சத்து 58 ஆயிரத்து 121 ரூபாய் இரண்டு மாதங்களுக்கு முன்பு வங்கி வரைவோலைமூலம் அரசுக்குச் செலுத்தப்பட்டுள்ளது. அவற்றை உடனடியாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும், மேலும், வீடுகளில், குடிசைப் பகுதிகளில் பாத்திரத் தொழில் செய்பவர்களுக்கு இலவச மின்சாரம் வழங்க அரசு முன்வருமா என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டத்தில் 14 இடங்களில் புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கின்றார்கள். எனவே, அந்தப் பணிகளோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற அந்தப் பகுதிகளும் ஆய்விற்கு

எடுத்துக்கொள்ளப்படும் என்பதையும், அவர் கூறிய மற்ற கருத்துகள் பரிசீலிக்கப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்வேளூர் தொகுதியில் கீழ்வேளூர், கீழையூர், புதுச்சேரி, சோழஉத்தியாபுரம் ஆகிய கிராமங்களில் புதிதாக மின்மாற்றிகள் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 24,036 மின்மாற்றிகள் அமைக்கப்பட்ட நிலையில், கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதிகளில் ஆய்வுகள் செய்யப்பட்டு, தேவை ஏற்படின் இந்த ஆண்டு அந்தப் பணிகள் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 238, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

238—

நவீன தங்கும் விடுதி

***3230—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, மண்டைக்காடு அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு நவீன தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

முற்பகல் 10–50

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மண்டைக்காடு பகவதியம்மன் திருக்கோயில் கடற்கரையை ஒட்டியுள்ள திருக்கோயிலாகும். இது கேரளாவிலிருந்து பெண் பக்தர்கள் இருமுடி கட்டி நேர்த்திக்கடனைச் செலுத்துவதற்காக அதிகளவு வருகின்ற ஒரு திருக்கோயில். இந்தத் திருக்கோயிலுக்கு ஏற்கெனவே 10,000 சதுரடியில் Aluminium shed *அமைக்கப்பட்டு, உள்ளே இருக்கின்ற பஜனை மடம் மற்றும் பூஜைகள் செய்கின்ற இடத்தில் கூரைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அங்கே ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஓய்வெடுத்து, இளைப்பாறிவிட்டுச் செல்கின்ற சூழ்நிலை இருந்தாலும், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய வினாவிற்கிணங்க, அந்த இடத்தில் பழுதடைந்த நிலையிலே இருக்கின்ற கழிவறைகள் மற்றும் பக்தர்கள் தங்குகின்ற 4 அறைகள் ஏற்கெனவே முற்றிலுமாகச் சிதிலமடைந்திருப்பதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு ஒரு கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்து, பக்தர்கள் தங்குகின்ற வகையில் 12 அறைகளைக் கட்டுகின்ற பணி வெகுவிரைவில் துவக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாக ஸ்தாபிக்கப்பட்ட மண்டைக்காடு அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயிலுக்கு கேரளாவிலிருந்து, ஆந்திராவிலிருந்து, கர்நாடகாவிலிருந்து மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்வது வழக்கமாக இருக்கிறது. திருவிழாக் காலங்களில் இலட்சக்கணக்கான மக்கள் அங்கே சாமி தரிசனம் செய்ய வருவார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 12 அறைகள் உடைய கட்டடங்கள் கட்டித் தரலாம்; தங்கும் விடுதிகளைக் கட்டித் தரலாம் என்று தெளிவாகச் சொன்னார்கள்.*

அதற்காக அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், இலட்சக்கணக்கான மக்கள் வந்து தரிசனம் செய்யக்கூடிய திருக்கோயிலுக்குக் குறைந்தது 100 அறைகள் கொண்ட, சாதாரண வகுப்பு மற்றும் குளிர்சாதன வகுப்பு போன்ற அனைத்து வகுப்பினருக்கான கட்டடங்களைக் கட்டினால்தான், அங்கு சாமி தரிசனம் செய்ய வரும் மக்கள் தங்குவதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, கேரளாவிலிருந்து வரக்கூடிய பெண்கள் மற்றும் பக்தர்கள் அங்கே தங்கி தரிசனம் செய்வதற்கு வசதியான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். அதுமட்டுமல்ல, அங்கே ஆக்கிரமிப்புகள் அதிகமாக இருக்கின்றன. அந்த நிலங்களைத் திரும்பப் பெற வேண்டும். சாமி தரிசனம் செய்யக்கூடியவர்கள் பக்கத்திலிருக்கக்கூடிய மண்டைக்காடு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள், கேள்விக்கு வரமாட்டேன் என்கிறீர்கள்; அதுதான் பிரச்சினையே! கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: அங்குள்ள கடலுக்குச் சென்று புனித நீராடுவார்கள். அதற்கு வசதியில்லாமல் அலைகள் அதிகமாக இருந்தால், தமது கால்களை நனைப்பார்கள். இப்போது AVM Channel–ல் தண்ணீர் இல்லாத காரணத்தால், அதைத் தூர் வாரி சரி செய்யாத காரணத்தால், அங்கே குளிப்பதற்கு வசதியில்லை. ஆகவே, தரிசனம் செய்ய வரக்கூடியவர்களுக்கு, நீராடி விட்டு தரிசனம் செய்வதற்குரிய ஏற்பாடுகளையும் அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்துதர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், ஒரே ஒரு விஷயம், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் ஒரு கேள்வி கேட்க வாய்ப்பிருக்கிறது. (குறுக்கீடு) இதற்கொரு பதில் வாங்கிவிடலாம்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: அங்கே 9 மாதங்களுக்கு முன்பு தீ விபத்து ஏற்பட்டது; ஒரு சிறிய சம்பவம் ஏற்பட்டபோது, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தொலைபேசியில் பேசினேன். உடனடியாக அதை ஏற்றுக்கொண்டு, அந்த இடத்திற்கு மூன்று முறை வருகை தந்து ஒன்றேகால் கோடி ரூபாய் நிதியைத் தந்திருக்கிறார்கள். அவருக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு திறமையான அமைச்சர்;

2022 மே 6]

தன்னுடைய கடமைகளைத் திறமையாகச் செய்திருக்கிறார். அவருக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அன்பிற்குரிய அமைச்சர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, கேள்விக்குப் பதில் சொல்லிவிடட்டும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய பாராட்டிற்கு நன்றி. எல்லாப் புகழும் இறைவனுக்கே என்ற வகையில் அனைத்துப் புகழும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கே என்பதைக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மண்டைக்காடு அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயிலைப் பொறுத்தளவில், 10 நாட்கள் பெருவிழா, மாசி கொடைவிழா என்று ஒரு விழா நடைபெறும். அந்த விழாவிற்குத்தான் அதிகமான பக்தர்கள் வருகை தருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையின்படி, இந்த ஆண்டு இறுதிக்குள்ளாகவே 12 அறைகள் ரூ.1 கோடி செலவில் கட்டித்தரப்படும். தொடர்ந்து ஆக்கிரமிப்பிலே இருக்கின்ற இடங்களுக்கு துறையின் சட்டப் பிரிவின் சார்பில் Section 78 of HR&CE Act–படி Notice அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு நீங்களும், அங்கு இருக்கின்ற, இறைவன் பெயராலேயே அமைந்திருக்கின்ற, அந்த அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பு தந்தால், அந்த ஆக்கிரமிப்புகளை விரைவில் அகற்றி, அடுத்த ஆண்டிற்கு கூடுதலான கட்டடங்களை பக்தர்கள் தங்குவதற்கு கட்டித் தந்து அனைத்து வசதிகளோடு மேம்படுத்தித் தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று செயல்படுத்தப்படும். ஏற்கெனவே ஆண், பெண் இருவரும் பயன்படுத்துகின்ற வகையில் 35 கழிவறைகள் அங்கே பயன்பாட்டில் உள்ளன. (குறுக்கீடு) நீங்கள் இல்லை என்று சொல்லி தலையாட்டுவது தெரிந்துதான், நான் புகைப்படத்தோடு வந்திருக்கிறேன்; உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன். 35 கழிவறைகள் பயன்பாட்டிலே இருக்கின்றன. கூடுதலாக வேண்டுமென்றாலும் கழிவறைகளைக் கட்டித் தரலாம். அதோடு கடற்கரைக்குச் சென்று நீராடி விட்டு வருகின்ற பக்தர்களுக்கான உடை மாற்றும் அறைகள் அமைப்பதற்குண்டான ஏற்பாடுகளும் விரைவில் செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

முற்பகல் 10–55

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் உண்மைக்கு புறம்பாகச் சொல்லவில்லை.* Temporary *ஆக இருக்கக்கூடிய* bathroom, latrine *தான் இருக்கின்றதே தவிர,* permanent *ஆக இல்லை. அதைச் சரி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே வாகனங்கள் நிறுத்துவதற்குரிய வசதிகளைச் செய்து தரவேண்டும். மேலும், பக்தர்கள் வருகின்றபோது அவர்களுக்கு போக்குவரத்து வசதி சரியாக இல்லை. கடற்கரைப் பகுதியில் வருகின்ற பாதையைச் சரிசெய்ய வேண்டுமென்று வேண்டுகிறேன்.*

அடுத்தபடியாக, ஒரேயொரு question *மட்டும்தான். என்னுடைய தொகுதிக்குட்பட்ட திங்கள்நகரில் ராதாகிருஷ்ணன் கோயில் இருக்கிறது. பிரசித்திபெற்ற இந்தக் கோயிலுக்குப் பின்பகுதியில் அதிக அளவில் இடம் இருக்கிறது. அந்த இடத்தில் மிகவும் பாழடைந்த கட்டடங்கள் இருக்கின்றன. அந்தக் கட்டடங்களை மாற்றி அங்கே மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் ஒரு திருமண மண்டபம் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழாக் காலங்களில் கழிப்பிட வசதி போதுமான அளவு இல்லையென்று மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கின்றார். விழாக் காலங்களில் நிச்சயமாக தற்காலிகக் கழிப்பிடங்களை ஏற்பாடு செய்து தருவோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட திருக்கோயிலுக்குச் சொந்தமான அந்த இடத்தில், அந்தத் திருக்கோயிலுக்கு வருகின்ற நிதியாதாரத்தைப் பொறுத்து அல்லது அந்த இடத்தில் திருமண மண்டபம் அவசியம் என்று கருத்துரு வழங்கப்படுமானால், வருகின்ற காலங்களில் பரிசீலிக்கப்பட்டு, நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதி பெற்று நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு*

2022 மே 6]

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி அவர்கள்.

திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மானாமதுரை தொகுதி, இளையாங்குடி ஒன்றியத்தில் தாயமங்கலம் திருக்கோயில் அமைந்திருக்கிறது. இந்தத் திருக்கோயிலுக்கு சுற்றுவட்டாரத்தில் இருக்கக்கூடிய கிராமங்களிலிருந்தும், மதுரை, இராமநாதபுரம், விருதுநகர், காரைக்குடியிலிருந்தும் பக்தர்கள் மிக அதிகமாக வருகிறார்கள். ஆகவே, அங்கு வரக்கூடிய பக்தர்களுக்கு தங்குகின்ற அறையும், கழிப்பிட வசதியும், அந்தக் கோயிலில் திருமணங்கள் அதிகமாக நடைபெறுகின்ற காரணத்தினால், அங்கே ஒரு பெரிய திருமண மண்டபமும் கட்டித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அங்கே அதிகமான இடவசதி உள்ளது. ஏற்கெனவே தாயமங்கலம் திருக்கோயிலுக்குச் சிறப்பு பூஜைகள் செய்வதற்கான ஏற்பாடுகளை இந்த நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய கோரிக்கைகளை கனிவோடு பரிசீலித்து எங்கள் தொகுதிக்கு அவற்றை வழங்கவேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில், திருமணங்கள் அதிகமாக நடைபெறுகின்ற திருக்கோயில்கள், திருவிழாக் காலங்களில் பக்தர்கள் அதிகமாக வருகின்ற திருக்கோயில்கள் என்ற வகையில் கணக்கிடச் சொல்லி, கடந்த ஆண்டு 6 திருமண மண்டபங்களுக்கு 38 கோடி ரூபாயை துறையின் சார்பில் ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதியளித்தார்கள். அதேபோன்று, இந்த ஆண்டும் 7 திருமண மண்டபங்கள் 31 கோடி ரூபாய் செலவில் கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதியளித்திருக்கின்றார். தாயமங்கலம் பகுதியிலே இருக்கின்ற

திருக்கோயிலுக்கும், சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தபிறகு நேரடியாகச் சென்று ஆய்வு செய்து, திருக்கோயில் வசம், இடங்கள் இருக்குமென்றால், அந்தத் திருக்கோயில் சார்பில் நிதியாதாரம் இல்லையென்றாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையினுடைய ஆணையாளரின் பொது நிதியிலிருந்து திருமண மண்டபம் கட்டுவதற்குண்டான வழிவகைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 239, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. சங்கர், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

239—

நூலகத்தைச் சீரமைத்தல்

***389—திரு. கே.பி. சங்கர்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதி, 2–வது வார்டில் உள்ள நூலகத்தைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பாகவும், சட்டமன்றத்திலிருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும், இன்றைக்கு 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதிக்கொண்டிருக்கின்ற அனைத்து மாணவச் செல்வங்களுக்கும் பள்ளிக் கல்வித் துறையின் அமைச்சர் என்ற முறையில் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் தொகுதி, 2–வது வார்டில் பொது நூலகத் துறையின் சார்பாகக் கத்திவாக்கத்தில் ஒரு கிளை நூலகம் 1962 ஆம் ஆண்டிலிருந்து

ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருப்பது உண்மைதான். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல அந்தக் கட்டடம் மிகவும் சிதிலமடைந்திருக்கிறது. அந்தக் கட்டடத்தைச் சீரமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அந்தக் கட்டடத்தைச் சீரமைப்பதுகூட தேவைப்படாது. அந்தக் கட்டடத்தை முழுவதுமாக இடித்துவிட்டு, புதிதாகத்தான் கட்டவேண்டும். அதுமட்டுமல்ல, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டடம் கட்டுவதற்கு நிதி தருவதாக மனமுவந்து சொல்லியிருக்கின்றார். கண்டிப்பாக அந்த நிதி பெறப்பட்டபிறகு, உடனடியாகச் செய்து தரப்படும். ஏனென்றால், இப்பொழுது சொந்தக் கட்டடத்தில் இருக்கிறது. அந்தக் கட்டடத்தில் பருவ இதழ்கள் பிரிவு, நாளிதழ் பிரிவு என்ற பிரிவுகள் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், நூல்களை இரவலாகத் தருகின்ற பிரிவும் இருக்கின்றது; இந்த வசதிகள் எல்லாம் இருக்கின்றன. கண்டிப்பாக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி பெறப்பட்டதும் உடனடியாகக் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. சங்கர் அவர்கள்.

திரு. கே.பி. சங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். என்னுடைய திருவொற்றியூர் தொகுதியில் கத்திவாக்கம் பகுதியில் பொது நூலகம் உள்ளது. அந்த நூலகம் பராமரிப்பின்றி சேதமடைந்து, இடியும் நிலையில் உள்ளது. அந்த நூலகத்தில் சுமார் 4,500 மக்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆகவே, அந்த நூலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தருமாறு தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கோரிக்கை வைக்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே என்னுடைய பதிலிலேயே கூறியிருக்கிறேன். அந்நூலகத்திற்குக் கண்டிப்பாக புதிய கட்டடம்தான் கட்டித் தர வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த நூலகத்தைச் சீரமைத்துத் தர வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். நாங்கள் அதைச் சீரமைக்கப் போவதில்லை; புதிதாகக் கட்டித் தரப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறோம். அந்த நூலகத்தில் கிட்டத்தட்ட 43,000 புத்தகங்கள் உள்ளன; ஏற்கெனவே 4,500 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். தற்போதைய நிலையில், அந்நூலகம் 600 சதுர அடி பரப்பளவில் இருக்கிறது; 440 சதுர அடி பரப்பில் கட்டப்பட்ட* building *ஆக இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் நகராட்சி நிர்வாகத்திற்குச் சொந்தமான 5 சென்ட் நிலம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்நூலகத்திற்கு கூடுதல் இடம் தேவைப்படுமெனில், மேற்படி நிலமும் துறையின் சார்பாகக் கோரப்பட்டு, கண்டிப்பாகக் கட்டடம் கட்டித் தரப்படும் என்பதை தங்களின் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. சங்கர் அவர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அடிக் கற்கள் இல்லாமல் கோபுரங்கள் இல்லை, ஆணி வேர் இல்லாமல் மரங்கள் இல்லை. ஆயுதத்தால் கலகம் செய்வதைவிட அறிவால் புரட்சி செய்' என்றார் சட்ட மாமேதை அம்பேத்கர். அரசுப் பள்ளியில் படிக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாணவர்களும், ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களும் துறையின் சார்பாக மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட உயர் படிப்புக்கான நுழைவுத் தேர்வில் வெற்றி பெற பயிற்சி மையங்கள் தேவைப்படும் இடங்களில், அவற்றைத் தோற்றுவித்து தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மாணவர்களின் மருத்துவ, பொறியியல் கனவை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பசி என்று வருபவனுக்கு மீனை தருவதை விட மீன் பிடிக்கக் கற்றுக் கொடு' என்பது சீன பழமொழி. மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம், மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம், சீருடைப் பணியாளர் தேர்வாணையம், இரயில்வே மற்றும் வங்கிப் பணியாளர் தேர்வாணையம் ஆகியவை நடத்தும் தேர்வுகளில் தாழ்த்தப்பட்ட பழங்குடியின மக்கள் பங்கேற்று வெற்றிபெற தாட்கோ மூலமாக அனைத்து மாவட்டங்களிலும் நிரந்தரப் பயிற்சி மையங்கள் ஏற்படுத்தித் தரப்பட வேண்டும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் புரட்சித் தலைவி அம்மா ஆட்சியில், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட இலவச வீட்டு மனைகள் அளந்து அத்து காட்டப்படாமல் உள்ளது. அரசு சிறப்புக் கவனம்

செலுத்தி, ஏற்கெனவே வழங்கப்பட்ட வீட்டுமனைகளுக்கு அளந்து அத்து காட்ட வேண்டும்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த புதிய தொழில்முனைவோர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஆகியோர் தொழில் தொடங்க வேண்டுமென்ற ஆவலுடன் TAHDCO நிறுவனத்தை அணுகும்போது, அவர்கள் மனுக்களை ஆய்வுசெய்து கடன் பெறுவதற்கு வங்கிகளை அணுகுமாறு பரிந்துரை செய்கிறார்கள். ஆனால், வங்கிகள் surety கேட்டு மனுதாரரின் விண்ணப்பத்தை பெரும்பாலும் நிராகரித்து விடுகின்றன. எனவே, மக்கள் பயனுறும் வகையில் ஆதி திராவிடர் நலத் துறையின் மூலமாகவே TAHDCO வங்கி உருவாக்கி, அதன்மூலம் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்கு தொழில் கடன் வழங்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

சமுதாயக் கூடங்கள், சுப நிகழ்ச்சிகள் மற்றும் சமுதாய நிகழ்ச்சிகள் நடத்தும் மண்டபமாக இருப்பதில்லை. பேரிடர் காலங்களில் பொது மக்களின் புகலிடமாகவும் பாதுகாப்பு அளித்து வருகின்றன. எனவே, தமிழகத்தில் பெரிய அளவில் உள்ள ஆதி திராவிட குடியிருப்புகளைக் கண்டறிந்து, மக்கள் பயன்பாட்டிற்கு அனைத்து வசதிகளும் நிறைந்த பல்நோக்கு சமுதாயக் கூடங்கள் கட்டித் தரப்பட வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மலைப் பிரதேசங்களில் வாழும் பழங்குடியின மக்களுக்கு தரிசு நிலமுள்ள இடங்களில் நிபந்தனைப் பட்டா வழங்க வேண்டும். தமிழகத்தின் ஆதிகுடிகளான பட்டியலின மக்கள் நீர்நிலைகளில் நீண்ட காலமாக அதிக அளவில் வசித்து வருகின்றனர். ஆவணங்களில் நீர்நிலை என்று குறிப்பிட்டுள்ளபோதிலும் அங்கு நீர் இருப்பதில்லை. எனினும் அவர்களுக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. நீர்நிலைகள் என்று வந்து விட்டாலே அதை யாரும் தொட முடியாது. உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் வழிகாட்டுதல் சொல்லியிருக்கிறது. தமிழ்நாட்டில் மறைந்த தலைவர் கலைஞர் அவர்கள் மட்டும்தான் அதற்கு ஒரு விதிவிலக்கு கொடுத்து பட்டா கொடுத்தார்கள்.

திரு. மு. சக்ரபாணி: எனவே, அவர்களுக்கு அங்கே பட்டா வழங்குவது சட்டப்படி இயலாத காரியமாக இருந்தாலும், அவர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேறு யாரும் விதிவிலக்கு கொடுக்கவில்லையே!

திரு. மு. சக்ரபாணி: கொடுத்தார்கள். அதைச் சொல்கிறேன். அருகாமையில் மாற்று இடமாக இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டுமெனவும், அவர்களுக்கு நகர்ப்புறங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித்தர வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன். அரசு அலுவலகங்களில் அம்பேத்கர் படத்தை அரசே வைக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) ஏனெனில், ஓர் அமைப்பைச் சேர்ந்தவர்கள் படத்தை வைப்பதால் அங்கு பிரச்சினை ஏற்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேச ஆரம்பித்து 15 நிமிடங்களாகிவிட்டன. மணியடிக்கப்பெற்றவுடன் எதிர்க்கட்சிக் கொறடா என்னைப் பார்க்கிறார்கள்.

பிற்பகல் 12–15

திரு. மு. சக்ரபாணி: SC/ST வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யும் வழக்குகள் பெரும்பாலும் காவல் நிலையத்திலேயே முடித்து வைக்கப்படுகின்றன. பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி மறுக்கப்படுகிறது. எனவே, தமிழக அரசு தனிக் கவனம் செலுத்தி, இவ்வாறு முடித்து வைக்கப்படும் வழக்குகளுக்கு, மாநில, மாவட்ட அளவிலான உயர்மட்டக் குழுவை அமைத்து, அதன் அனுமதி பெற அரசாணை பிறப்பிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். தீண்டாமை, வன்கொடுமை போன்றவற்றை இந்த அரசு இரும்புக்கரம் கொண்டு தடுக்க வேண்டும்.

தமிழகத்தில் சுமார் 12 இலட்சம் ஏக்கர் பஞ்சமி நிலங்கள் இருந்ததாக ஆவணங்கள் தெரிவிக்கின்றன. ஆனால், அவற்றில் பெரும்பாலும் தாழ்த்தப்பட்டோர் அல்லாதோர் பயன்படுத்தி வருகின்றனர். அவற்றை மீட்டு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்குவது மட்டுமல்லாமல், பஞ்சமி நிலங்களை ஆக்கிரமித்து உள்ளவர்கள்மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையாற்றியது போதுமே! (குறுக்கீடு) அவர் தண்ணீர் குடிக்கிறார். நீங்கள் அவர் பேசுவதை நிறுத்திவிட்டார் என்று நினைத்துவிடாதீர்கள்.

திரு. மு. சக்ரபாணி: சென்னை அல்லாத பிற மாவட்டங்களிலிருந்து பணி நிமித்தமாக சென்னை வரும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்கள் தங்குவதற்கு இடம் இல்லாமல் சிரமப்படுகின்றனர். எனவே, அவர்கள் தங்குவதற்கு துறையின்மூலம் தங்கும் விடுதிகளை, இருபாலருக்கும் தனித்தனியாக கட்டித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

SC/ST மக்களுக்காக பட்ஜெட்டில் ஒவ்வோர் ஆண்டும் ஒதுக்கிய தொகை எவ்வளவு, செலவு செய்த தொகை எவ்வளவு என்பதை அரசு வெள்ளை அறிக்கையாக அளிக்க வேண்டும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக பட்ஜெட்டில் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின தொழில்முனைவோர்கள் உருவாக சிறப்புப் பயிற்சி அளிப்பது குறித்து எவ்வித அறிவிப்பும் இல்லை. எனவே, அரசு இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். 2021 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தி.மு.க. தேர்தல் அறிக்கையில் எண் 270–ல் குறிப்பிட்டுள்ளபடி, உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்ற. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எல்லோருமே தி.மு.க. தேர்தல் அறிக்கையை வாசித்தால் என்ன அர்த்தம்? நீங்களாகச் சொல்லுங்கள்.

திரு. மு. சக்ரபாணி: நீதிபதிகள் நியமனத்தின்போது இட ஒதுக்கீட்டைக் கடைப்பிடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த அரசு முன்னெடுக்க வேண்டும்.

அடுத்ததாக, முழுமையான சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பை எடுக்கவும், அதனை வெளிப்படையாக வெளியிடவும் மத்திய அரசை வலியுறுத்துவோம் எனவும், தேர்தல் அறிக்கை, எண் 271–ல் நீங்கள் வாக்குறுதி அளித்துள்ளீர்கள். அதனை உடனே செயல்படுத்த வேண்டும்.

அதேபோன்று, தேர்தல் அறிக்கை எண் 275 முதல் 280 வரை கூறியபடி, காலிப் பணியிடங்கள் நிரப்புதல், விடுதி மாணவர் கட்டணம் உயர்வு, வருடாந்திர விடுதி உணவுக் கட்டணம் உயர்வு, நரிக்குறவர், குருவிக்காரர், லம்பாடி, படுகர் இன மக்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்த்தல் போன்ற வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையாற்றியது போதுமே! மீதி இருப்பதைத் தாருங்கள். அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளலாம்.

திரு. மு. சக்ரபாணி: எனது தொகுதிக் கோரிக்கையினை ஒன்றை மட்டும் சொல்லி, மீதி கோரிக்கைகளை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்தில் முறையாக வழங்குகிறேன். அவற்றைப் பதிவு செய்து, நிறைவேற்றிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதிக்குட்பட்ட வானூர் ஒன்றியத்தில் திருச்சிற்றம்பலம் கூட்டுப்பாதையில் அம்மா அவர்களின் அரசால் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டு தற்காலிகமாக அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்று வருகிறது. (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேட்டுவிட்டுச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர், அவர் ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் அவர் முடித்து விடுவார். அவர் ஒரு நிமிடத்தில் முடித்தவுடன், வாய்ப்பு தருகிறேன்.

திரு. மு. சக்ரபாணி: மூன்று வருடங்களாக வருடத்திற்கு 300 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். 2021–2022 ஆம் நிதியாண்டில் கல்லூரி கட்டடம் கட்ட. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்கள் மாவட்டத்தில்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள்.

திரு. மு. சக்ரபாணி: நிதியும் ஒதுக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லிவிடுங்கள்.

திரு. மு. சக்ரபாணி: சென்ற நிதியாண்டில் கல்லூரி கட்ட நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. கல்லூரிக் கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு, சாலையும் போடப்பட்டுள்ளது. எனவே, மாணவர்கள் நலன் கருதி இக்கல்லூரிக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி. மீதியைத் தாருங்கள், அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளலாம்.

திரு. மு. சக்ரபாணி: இன்னும் ஒன்றே ஒன்று இருக்கிறது. வானூர் தொகுதிக்குட்பட்ட வானூர் ஒன்றியம், விவசாயம் நிறைந்த பகுதி. இந்தப் பகுதியிலுள்ள மாணவர்கள் தவறான வழியில் செல்வதைத் தடுக்க மாணவர்கள் நலன் கருதி, பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி (Polytechnic College) ஒன்று அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி. மீதியைத் தாருங்கள்.

திரு. மு. சக்ரபாணி: கடைசி கருத்தைப் பேசிவிடுகிறேன். நன்றி சொல்லிவிடுகிறேன். எங்கள் முதல்வர் அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டங்களையும், எங்கள் அண்ணன் எடப்பாடியார் கொண்டு வந்த மக்களுக்கு பயனளிக்கும் திட்டங்களையும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, இது போதும். தொகுதிக் கோரிக்கைகளைத் தாருங்கள். (குறுக்கீடு) போதும், எல்லாம் முடிந்துவிட்டது. தொகுதிக் கோரிக்கைகளை மட்டும் தாருங்கள், அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளலாம்.

திரு. மு. சக்ரபாணி: பெயர் மாற்றம் செய்ததும், மின் வெட்டும், மின் தடை ஏற்படுத்தியதும்தான் உங்கள் ஆட்சியின் ஓராண்டு சாதனை என்பதைச் சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

வானூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, வானூர் ஊராட்சி ஒன்றியம், கிளியனூர் ஊராட்சி ஒன்றியம் என நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும்.

வானூர் ஒன்றியத்தில் கிரானைட் தொழிற்சாலை அமைத்துத் தர வேண்டும்.

வானூர் ஒன்றியத்தில் உற்பத்தியாகும் பாலை கொள்முதல் செய்ய ஆவின் நிறுவனத்துடன் இணைந்து பால் கொள்முதல் நிலையம் அமைத்திட வேண்டும்.

வானூர் ஒன்றியத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் அமைத்துத் தர வேண்டும்.

வானூர் தொகுதிக்குட்பட்ட கிளியனூரைத் தலைமையிடமாகக் கொண்டு சார்–பதிவாளர் அலுவலகம் ஒன்று அமைத்துத் தர வேண்டும்.

வானூர் ஒன்றியத்தில் திருச்சிற்றம்பலம் கூட்டுரோடை தலைமையிடமாகக் கொண்டு ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைத்துத் தர வேண்டும்.

வானூர் தொகுதிக்குட்பட்ட திருச்சிற்றம்பலம் ஊராட்சியில் சுமார் 25,000 மக்கள்தொகையும், 15,000 வாக்காளர்களும் இருப்பதால் அதனைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்திட வேண்டும்.

கண்டமங்கலம் ஒன்றியம், சொரப்பூர் ஊராட்சியில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் உள்ள நிரந்தர அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும்.

கண்டமங்கலம் ஒன்றியம், பாக்கம் மற்றும் கொங்கம்பட்டு கிராமங்களுக்கிடையே மலட்டாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கண்டமங்கலம் ஒன்றியம், பாக்கம் கிராமம், தாழ்த்தப்பட்ட மக்கள் பயன்பெறும் வகையில் ஆதி திராவிட நலத் துறையின்மூலம் பல்நோக்கு சமுதாயக் கூடம் அமைக்க வேண்டும்.

வானூர் தொகுதி, கண்டமங்கலம் மற்றும் வளவனூர் காவல் நிலையங்களைச் சீராய்வு செய்து, போக்குவரத்து வசதிகள் நிறைந்த கோண்டூர் கூட்டுச் சாலையை மையமாகக் கொண்டு புதிய காவல் நிலையம் ஒன்று அமைக்க வேண்டும்.

விழுப்புரம் வட்டம், கண்டமங்கலத்தில் அனைத்து கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய புதிய தீயணைப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்தித் தர வேண்டும்.

கண்டமங்கலம் ஒன்றியம், வளவனூர், கண்டமங்கலம், சித்தலம்பட்டு ஆகிய குறுவட்டங்களை இணைத்து, கண்டமங்கலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கல்லூரி அறிவித்து, மூன்று ஆண்டுகளாகச் செயல்படுகிறது என்று

சொன்னார். இடமாவது வாங்கியிருந்தீர்களா? ஏதேனும் ஏற்பாடு செய்தீர்களா? ஒன்றுமில்லை. அங்கே, காந்தி மேல்நிலைப் பள்ளியில்தான் அந்தக் கல்லூரி temporary ஆக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்கான இடம், கட்டடம் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்லி, அதையும் நிறைவேற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. 'அந்தக் கல்லூரிக்கான கட்டடத்தை எப்படியாவது கட்டிக் கொடுங்கள்' என்று நீங்களும் என்னிடம் சொல்லியிருக்கிறீர்கள். அதற்கான ஏற்பாடுகள் செய்து, கண்டிப்பாக இந்த ஆண்டு புதிதாக வானூர் தொகுதியில் அந்தக் கட்டடம் கட்டப்பட்டு, கல்லூரி தொடங்கப்படும்.

பிற்பகல் 12—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.*

***திரு. செ. ஸ்டாலின் குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளத்தில் இருந்தவரையும் படுகுழியில் கிடந்தவரையும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) அவர்கள்* clarification *கேட்கிறார்கள்.*

***திருமதி ஆ. தமிழரசி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்ற முறை இந்த அவையில் இருந்தார்களா என்பது தெரியவில்லை. கடந்த 10 ஆண்டுகளில். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு இப்பொழுது என்ன சந்தேகம்? உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார், நீங்கள் பேசுங்கள்.*

திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றேயொன்று சொல்லி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)*

திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொன்ன அந்தப் பள்ளியைக் குறித்து மட்டும் சொல்லிக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) அவர்களைப் பேசுவதற்கு அனுமதிக்கவேயில்லையே! பிறகு ஏன் கேட்கிறீர்கள்? மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார், நீங்கள் பேசுங்கள்.

திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளத்தில் இருந்தவரையும், படுகுழியில் கிடந்தவரையும் கைதூக்கி ஏற்றிவிட்டு, மனிதப் பிறப்பில் உயர்வு–தாழ்வு என்னும் வேறுபாட்டை வேரோடு அகற்றிய அண்ணல் அம்பேத்கர் அவர்களை வணங்குகிறேன்.

“மானம் கெடுப்பாரை
அறிவைத் தடுப்பாரை
மண்ணோடு பெயர்த்த வந்த கடப்பாரை
வானம் உள்ள வரை
வையம் உள்ள வரை
யார் இங்கு மறப்பார் பெரியாரை?”

என்னும் வரிகளுக்கிணங்க சமூகநீதி வரைபடமாகவும், ஜாதி ஒழிப்பு நிறைகுடமாகவும் விளங்கும் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரை வணங்குகிறேன். தமிழ்நாட்டிற்கு ‘தமிழ்நாடு’ என பெயர்சூட்டிய தமிழ்நாட்டின் தலைமகன், இருமொழிக் கொள்கையைச் செயல்படுத்திய இணையற்ற தமிழ் வேந்தர், பேரறிஞர் பெருந்தகை அண்ணாவை வணங்குகிறேன். அண்ணாவின் இதயத்தை இரவல் பெற்று, தன் இறுதி நாட்கள் வரை உழைத்த தலைவர், சமத்துவபுரம் கண்ட சமத்துவ நாயகர், உலகத் தமிழர்களின் ஒரே முகம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். கழகத்தின் கொடி ஏந்தி, அன்னையின் அடி ஏந்தி, அயலவர்க்கு அடி தந்தாய்! ஆட்சியில் தூய்மை, காட்சியில் எளிமை, காண்போர்க்கு இனிமை, ஏர்பிடித்த கரங்களுக்கும் ஏற்றத்தைத் தந்தவர், கொரோனோ நோயாளிகளின் அறைக்கே சென்று ஆய்வு செய்கிறார். மழை வெள்ளமா! முட்டியளவு நீர் இருப்பினும் இறங்கி நடக்கிறார். குறவர் மக்களின்

குரலாகவும் இருக்கின்றார். எளியவனான என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் செங்கோலைத் தூக்க, தன் கரத்தில் செங்கல்லைத் தூக்கிய இளைஞரணி எழுச்சி நாயகன், சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருப்புமுனை தரும் திருச்சியின் எழுச்சி நாயகன், தலைமையேற்போரின் தலைமை தளகர்தா, திருச்சி மாவட்ட மக்கள் அனைவரின் இதயங்களிலும் இருக்கும் மாண்புமிகு ஐயா நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும், திருச்சி வடக்கு மாவட்டச் செயலாளர் முசிறி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும், நகர, ஒன்றிய, பேரூர், கிளை கழகச் செயலாளர்களுக்கும், கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த நிருவாகிகளுக்கும், எனது தந்தை செல்லதுரை அவர்களுக்கும், எனது அம்மா பூபதி அவர்களுக்கும், எனது சகோதரர், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும், மக்கள் பணியாற்ற எனக்கு வாய்ப்பளித்து, வாக்களித்து வெற்றிபெற வைத்த, பாசத்தையும், அன்பையும் வாரி வழங்குவதில் வள்ளலாய் திகழும் என் துறையூர் தொகுதி வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்வதற்கு ஒரு நிமிடம் ஆகியிருக்கின்றது.

திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். துறையூர் நகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம், புதிய சந்தை அமைக்க நிதியொதுக்கீடு செய்துள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமத்துவத்தை வென்றெடுத்த, சமரசமின்றி களமாடும் சமூக நீதி சரித்திரத் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் ஆதி திராவிட மக்களுக்கான அடுக்கடுக்கான

திட்டங்களும், அடுத்தடுத்த அறிவிப்புகளும் ஒடுக்கப்பட்ட மக்களை இது தங்களுக்கான ஆட்சி என்று பெருமைப்பட வைத்துள்ளது.

பல ஆண்டுகளாக அமைக்கப்படாமலிருந்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் குறித்து விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அதுவும் முன்பெல்லாம் ஆளுங்கட்சி மக்கள் பிரதிநிதிகள், ஆதரவு கட்சி மக்கள் பிரதிநிதிகளை மட்டுமே அழைத்து கூட்டம் நடத்தப்பட்டது. அதுபோலன்றி, அனைத்து இயக்கங்களையும் சார்ந்த நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்து 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 ஆம் தேதி மற்றும் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் தேதி என இரண்டு கூட்டங்களையும் தலைமையேற்று நடத்தியவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள். மாநில அளவில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சட்டபூர்வ உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களின் முக்கியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம் என்கின்ற புதிய அமைப்பை தன்னாட்சி அதிகாரத்துடன் உருவாக்கியவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்.

ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கும் பள்ளிகளை பொது நீரோட்டத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில், முதற்கட்டமாக அந்தப் பள்ளிகளின் கல்வித் தரத்தை மேம்படுத்த ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு, அறிவுத் திறன் வகுப்பு போன்ற வகுப்புகள் செயல்பட உத்தரவிட்டுள்ளவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் பதியப்பட்டுள்ள வழக்குகளை விரைவாக இறுதி செய்ய தற்போது தமிழகத்தில் 18 சிறப்பு நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. மேலும், நான்கு புதிய நீதிமன்றங்களை அமைக்க ஆணை வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமக்கு நாமே திட்டத்தில் ஆதி திராவிட இன மக்களுக்கான பங்களிப்பை மூன்றில் ஒரு பங்கிலிருந்து ஐந்தில் ஒரு பங்காக அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின தொழில்முனைவோர்களால்

தொடங்கப்படும் புத்தொழில் மற்றும் புத்தாக்கப் பயிற்சிக்கு– Tamil Nadu Startup and Innovation Mission (TANSIM) 30 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு நிறுவனங்களில் நடக்கக்கூடிய கொள்முதல்களில் 5 சதவிகிதம் தமிழ்நாட்டைச் சார்ந்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 12–25

பெண் கல்வி என்பது சமத்துவம் மற்றும் சமூக நீதியின் முக்கிய அங்கமாகும். பெண்கள் கல்வி பயில்வதை ஊக்கப்படுத்தும் வகையில், நமது அரசு பெண் கல்வி ஊக்கத் தொகைத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிட மாணவியர்கள் 100 சதவிகிதம் பள்ளியில் சேருவதை உறுதிபடுத்தவும், இடை நிற்றலைத் தவிர்க்கவும் 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவிகளுக்கு 500 ரூபாயும், 6 ஆம் வகுப்பு பயிலும் மாணவிகளுக்கு 1,000 ரூபாயும், 7 ஆம் வகுப்பு மற்றும் 8 ஆம் வகுப்பு பயிலும் மாணவிகளுக்கு 1,500 ரூபாயும் வழங்க இந்த நிதியாண்டில் 45.31 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உயர் கல்வியில் அதிக மதிப்பெண் பெற்று, தேர்ச்சிபெறும் மாணாக்கர்களை ஊக்குவிக்கும் விதமாக, இளங்கலை, முதுகலை மற்றும் தொழில் கல்வி பயில்வதற்கு, 60 விழுக்காட்டிற்கு மேல் மதிப்பெண் பெறும் 1,000 கிறிஸ்தவ மதம் மாறிய ஆதி திராவிட மாணாக்கர்களுக்கு ஊக்கத் தொகை வழங்க 2022–2023 ஆம் நிதியாண்டில் 42 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மருத்துவம், பொறியியல், கலை, அறிவியல், சட்டம், இலக்கியம், அரசியல் பிரிவில் ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்களை பொருளாதாரரீதியில் ஊக்குவிக்கும் வகையில், ஊக்கத் தொகை ஆண்டிற்கு ரூ.50,000/–லிருந்து ரூ. 1,00,000/– ஆகவும், மாணாக்கர்களின் எண்ணிக்கை 1,200–லிருந்து 1,600 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. கல்வி உதவித் தொகை பெற, ஆண்டு வருமானம் இரண்டரை இலட்சம் ரூபாயிலிருந்து 8 இலட்சம் ரூபாயாக உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

சமூக நிலையை உயர்த்த வீடற்ற, ஏழை, தாழ்த்தப்பட்ட பழங்குடியின மக்களுக்கு கிராமப்புறமாக இருந்தால் 3 சென்ட் நிலமும், நகராட்சிப் பகுதியாக இருந்தால் 1½ சென்ட் நிலமும்,

மாநகராட்சிப் பகுதியாக இருந்தால் 1 சென்ட் நிலமும் வழங்க பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்திற்கு, இந்த நிதியாண்டில் 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள கல்வி நிறுவனங்களில் சேர்க்கையினை மேற்கொள்ள TOEFL, IELTS, GRE, GMAT ஆகிய தகுதித் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதற்கு 500 மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு, அதில் 10 மாணவர்கள் வெளிநாடுகளில் கல்வி பயில உதவித் தொகை வழங்கியும், இந்த உதவித் தொகை பெறுவதற்கு ஆண்டு வருமானம் 3 இலட்சம் ரூபாயிலிருந்து 8 இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தி ஆணை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் குடியிருப்புகள் அனைத்தும் குடிநீர், சாலை, மின்சாரம் ஆகிய அனைத்து அடிப்படை வசதிகளையும் கொண்ட தன்னிறைவு பெற்ற கிராமங்களாக விளங்குவதை உறுதிசெய்ய 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப்புறத்தில் சற்று அதிகமாகவும், நகர்ப்புறத்தில் குறைவாகவும் தங்கள் வாழ்வாதாரத்தை நோக்கிச் செல்லும் பட்டியலின பழங்குடியின மக்கள் ஒரே தரத்திலான சமூக பொருளாதார நிலைகளில் இல்லை. வெவ்வேறு நிலைகளில் வாழும் இம்மக்களை மேம்படுத்த திட்டங்களை உருவாக்கம் செய்திட பட்டியலின பழங்குடியின துணைத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. வரவு—செலவுத் திட்டத்தில் விகிதாச்சாரரீதியான பங்கீடு இருக்கிறது. இம்மக்கள் மேலும் பலன்களைப் பெற்று, சமுதாயத்தில் சிறந்து விளங்குவதற்கு, தனித்துவமான திட்டம் வகுத்து, தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த சமூகக் குழுக்கள், மக்கள் பிரதிநிதிகள், அரசு ஆகியவை அடங்கிய குழுவை உருவாக்கிச் செயல்படுத்திட வேண்டும். தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்களின் பொருளாதார நிலை குன்றி, நிலமுமின்றி, வேலைவாய்ப்பும், வாழ்வாதார வழிகளும் இன்றி, பாகுபாடு, தீண்டாமைத் தடைகளும் வழிமறிக்க, தனியராகவும், சமூகக் குழுக்களாகவும் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. வேளாண்மை சார்ந்த பணிகளில் ஈடுபட்டு முன்னேற்றம் காண முடியாத நிலையில், கழக அரசுதான் நல்ல திட்டங்களை உருவாக்கி, அமலாக்கி வருகிறது. முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்

அவர்கள்தான் தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் துணைத் திட்டத்தை மறு ஆய்வுக்குக் கொண்டு வந்து, வாழ்வாதார முன்னேற்றத்தை உறுதி செய்யும் திட்டங்களை சிறப்புக்கூறு துணைத் திட்டத்தில் செயல்படுத்தினார்.

மனிதனின் முன்னேற்றத்திற்கு கல்விதான் முக்கியம். இத்தகைய கல்வியைக் கொடுப்பதற்கு ஆதி திராவிடர் பள்ளியை அரசு நடத்தி வருகிறது. இந்தப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் மருத்துவம், விவசாயம், கால்நடைத் துறைகளில் உயர் கல்வி பெறுவதற்கு இப்பள்ளிகளில் கட்டமைப்பு வசதிகள் மற்றும் கழிப்பறை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி, சிறப்பாகக் கல்வி கற்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்பள்ளிகளுக்கென்று தனியே கல்வி அதிகாரியை நியமிக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் கடந்த 30 ஆண்டுகளாக தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்களுக்கு ஆதி திராவிட நலத் துறையின் மூலமாக வழங்கப்பட்ட இலவச வீட்டுமனைகள் அந்த மக்களுக்கு அளந்து கொடுக்கப்படாமல் உள்ளன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த மக்களுக்கு உரிய இடத்தை அளந்து கொடுத்து, அவர்களுக்கு வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை சமத்துவ நாளாக அறிவித்துள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், அம்பேத்கர் வழியில் சாதி, மத பேதம் ஒழிக்க போராடிய சமத்துவப் போராளி இம்மானுவேல் சேகரனார் அவர்களுக்கு மணிமண்டபம் அமைத்து, அரசு விழா எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விளிம்புநிலையில் இருக்கும் இருளர் போன்ற பண்டைய பழங்குடியினருக்கு ரூ.20.7 கோடி மதிப்பீட்டில் 443 வீடுகள் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. வரும் நிதியாண்டில் மேலும் 1,000 புதிய வீடுகள் ரூ.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் என்று அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பழங்குடியினர் துணைத் திட்டம் அமலாக்கம் சீராக்கத்திற்கு உட்படுத்தப்பட்டு, வேறுபட்ட நிலவியல் வள ஆதாரங்கள்,

வாழிடம், பணிகள், வாய்ப்புகள், தேவைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, பலதரப்பட்ட சூழலுக்கு ஏற்ப வாழ்வாதாரங்களை ஏற்படுத்தித் தர வேண்டும்.

பழங்குடியின மக்களின் மருத்துவத் தேவைகளை, குறிப்பாக மகப்பேறு காலங்களில் கண்காணிப்பு மற்றும் மலைகளில், வனங்களில் சமவெளிக் காடுகளில் வாழும் பழங்குடியினர் மருத்துவத் தேவைகளை நிறைவேற்றித் தருமாறு தாய் மனதோடு செயல்பட்டுவரும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பழங்குடியின மக்களின் மேம்பாட்டிற்காக அவர்களால் உற்பத்தி செய்யப்படும் சிறு வனப் பொருட்கள், வேளாண்மைப் பொருட்களுக்கு Large Area Multipurpose Societies (LAMPS) போன்ற கூட்டுறவு பண்டகசாலைமூலம் உரிய வருவாய் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–30

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பசுமை தமிழ்நாடு இயக்கம் தொடங்கப்பட்டது. அடுத்த 10 ஆண்டுகளில், வனப் பரப்பை 23 சதவிகிதத்திலிருந்து 33 சதவிகிதமாக அதிகரிப்பதே இந்த இயக்கத்தின் சிறந்த நோக்கம். தமிழ்நாட்டில் பழங்குடியின மக்களைக் கொண்ட ஏராளமான கிராமங்கள் வாழ்வாதாரத்தைத் தேடிக்கொண்டிருக்கின்றன. இத்திட்டத்தின்மூலம் பழங்குடியினருக்கு நாற்றங்கால்களில் நாற்றுகளை வளர்க்க அனுமதிப்பதன்மூலம் அடுத்த 10 ஆண்டுகளில் வேலைவாய்ப்பு உறுதி செய்யப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பசுமை தமிழ்நாடு இயக்கம் மூலமாகவும், நாற்றங்கால்களை வளர்ப்பதற்கு விதைகளுக்கான பணத்தை வழங்குவதன் மூலமாகவும், பழங்குடியினருக்கு இந்த நாற்றுகளை வாங்கும் முறையின் மூலமாக உறுதி செய்யப்பட்ட வேலைவாய்ப்பை வழங்க வேண்டும்.

வன உரிமைச் சட்டத்தின்கீழ் மற்ற பாரம்பரிய வனவாசிகளுக்கு அவர்களின் தனிப்பட்ட மற்றும் சமூக உரிமைகள் இன்னும் வழங்கப்படவில்லை. எனவே, அவற்றைச் செயல்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு பழங்குடியின உண்டி, உறைவிடப் பள்ளியில் பல பழங்குடியின ஆசிரியர்கள் கடந்த 5 ஆண்டு காலமாக தற்காலிகப் பணியில் உள்ளனர். 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புத் தேர்வில் மாணவர்கள் 100 சதவிகிதம் தேர்ச்சி பெற்றுள்ளனர். எனவே, இந்தப் பழங்குடியின ஆசிரியர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின்கீழ் இந்த அரசு காலநிலைக்கு ஏற்ற சிறந்த கிராமங்களை உருவாக்குவதற்கான முயற்சிகளை எடுத்துள்ளது. தொலைதூரப் பகுதிகளில் உள்ள பெரும்பாலான பழங்குடியின குக்கிராமங்கள் அடிப்படை வசதிகள் இல்லாமல் இருப்பதை மனதில் வைத்து இந்த இயக்கத்தின்கீழ் பழங்குடியின கிராமங்களைக் கொண்டு வர அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற அறிவிப்பின்போது அனைத்து ஆற்றல் அம்சங்களிலும் தன்னிறைவு பெறும் 25 பசுமை பள்ளிக்கூடங்களை எடுக்க முன்மொழியப்பட்டது. இந்த அறிவிப்பின்கீழ் பழங்குடியின மேல்நிலைப் பள்ளியைப் பரிசீலிக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பல பழங்குடியின கிராமங்களில், வீடுகள் மிகவும் மோசமான சூழ்நிலையில் இருப்பதால், இந்த பழங்குடியின மக்கள் அனைவருக்கும் வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய துறையூர் தொகுதியில், சரபங்கா நதி, பொன்னியாறு, திருமணிமுத்தாறு மற்றும் அய்யாறு வழியாக மேட்டூர் அணையிலிருந்து வரும் 600 கன அடி தண்ணீரை கால்வாய்மூலம் துறையூர் தொகுதியில் உள்ள கிராமங்களின் வழியாக விவசாயத்திற்கும், குடிநீர் வசதிக்கும் பயன்படுத்துவதற்கு ரூ.328 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்து, அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதில் பட்டா நிலம் 77.84 ஹெக்டேரும், புறம்போக்கு நிலம் 5.12 ஹெக்டேரும் ஆகும். இதனால் துறையூர் தொகுதியிலுள்ள சுமார் ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு மறைமுகமாக பாசன வசதி கிடைக்கும். எனவே, அதிக கிராமங்கள் பயன்பெறும் இத்திட்டத்தினை, எங்கள் தொகுதி மக்களுக்கு நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய துறையூர் தொகுதியில், துறையூர் நகரில் உள்ள சின்ன ஏரியில், துறையூர் நகரின் கழிவுநீர் கலப்பதால் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படுகிறது. எனவே, துறையூர் நகரில் உள்ள சின்ன ஏரி நீரை சுத்திகரிப்பு செய்து, அந்த ஏரியின் சுத்தமான நீரை விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்து தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய துறையூர் தொகுதியில் உள்ள படித்த மாணவர்கள் தொழில் தொடங்குவதற்கு எங்களுடைய பகுதியில் எந்தவிதமான தொழில் வசதிகளும் இல்லாமல் இருக்கின்றன. எனவே, துறையூர், மண்ணச்சநல்லூர், முசிறி என மூன்று சட்டமன்றத் தொகுதிகளுக்கும் மத்தியில் SIPCOT தொழிற்பேட்டையை அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

துறையூர் தொகுதியில் உள்ள அனைத்து ஏரிகளிலும் உள்ள கருவேல மரங்களை அகற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். துறையூர் நகருக்கென்று தனியாக பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பாலகிருஷ்ணம்பட்டி பேரூராட்சி அலுவலகத்திற்கு புதிய பேரூராட்சி அலுவலகம் கட்டித் தருமாறு மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் துறையூர் தொகுதியில் உள்ள துறையூர் தாலுகா அலுவலகமானது பழமையான கட்டடத்தில் இயங்கி வருகிறது. அந்த தாலுகா அலுவலகத்திற்குப் புதிய அலுவலகம் கட்டித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

துறையூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகமானது பழமையான கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்குப் புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தைக் கட்டித் தருமாறு மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

துறையூர் நகரில் உள்ள அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 1,200 மாணவியர் பயின்று வருகின்றனர். இப்பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்பள்ளி முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, அவரது பெயரில் செயல்பட்டு வந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், 15 நிமிடங்கள் ஆகிவிட்டன.*

திரு. செ. ஸ்டாலின் குமார்: *மீண்டும் இப்பள்ளியை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியாக பெயர் மாற்றம் செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.*

அம்பேத்கர் பெயரில் சட்டப் பல்கலைக்கழகம், ஆதி திராவிடர்கள் அர்ச்சகர் ஆகலாம், அறங்காவலர் ஆகலாம், உயர் நீதிமன்ற நீதிபதி ஆகலாம் என்கின்ற நிலையை உருவாக்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில், வறியவர், வலியவர் என்கின்ற வேறுபாடின்றி ஒளிதரும் கதிர்போல் ஒட்டுமொத்தத் தமிழகத்திற்கு விடியலை தரும் சமத்துவ சூரியன், சமூக நீதி சரித்திரம், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை நன்றியோடு வணங்கி, உரையை நிறைவு செய்கிறேன்.

என்னுடைய தொகுதி சார்ந்த கோரிக்கைகளை நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி பதிவேற்றம் செய்துகொள்ளுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

துறையூர் தொகுதி, துறையூர் அரசு மருத்துவமனையில் CEmONC பிரிவு ஏற்படுத்தித் தர வேண்டும்.

உப்பிலியாபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் புற நோயாளிகள் பிரிவிற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும்.

துறையூர் தொகுதி, தளுகைபாதர்பேட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

சொரத்தூர், மேட்டு சொரத்தூர், நல்லியம்பாளையம், முத்தையம்பாளையம், புளியம்பட்டி, கீழகுன்னுபட்டி, மேலகுன்னுபட்டி, நடுவலூர், மேலநடுவலூர், அம்மாபட்டி, காளிபட்டி, சிங்களாந்தபுரம், சித்திரைபட்டி, மதுராபுரி, புதிய வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு, நாகலாபுரம், கிழக்குவாடி ஆகிய கிராமங்களில் வாழும் மக்களுக்கு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

கிளியனர்பட்டி, நரசிங்கபுரம், சோபனாபுரம் கிராமங்களில் கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

சோபனாபுரம் முதல் டாப்செங்காட்டுப்பட்டி வரை செல்லும் வனச் சாலைகளை புதிய தார்ச் சாலைகளாக அமைத்துத் தர வேண்டும்.

துறையூர் நகரில் சாலை, சாக்கடை மற்றும் தெருவிளக்கு வசதிகளைச் செய்து தர வேண்டும்.

துறையூரில் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நகராட்சி அருகில் உள்ள மதுராபுரி சிங்களாந்தபுரம் ஊராட்சியில் உள்ள மண் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்றித் தர வேண்டும்.

உப்பிலியாபுரம், பாலகிருஷ்ணம்பட்டி பேரூராட்சியில் சாலை, சாக்கடை வசதி, தெருவிளக்குகள் மற்றும் நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

உப்பிலியாபுரத்தில் புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

உப்பிலியாபுரம் ஒன்றியத்தில் சமத்துவபுரம் அமைத்துத் தர வேண்டும்.

உப்பிலியாபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய தாலுகா உருவாக்கித் தர வேண்டும்.

துறையூரில் அனைத்துத் துறைகளுடன்கூடிய புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைத்துத் தர வேண்டும்.

துறையூரில் இயங்கிவரும் பத்திரப் பதிவுத் துறைக்கு புதிய அலுவலகம் கட்டித் தர வேண்டும்.

எரகுடியில் இயங்கிவரும் புறக்காவல் நிலையத்தை, காவல் நிலையமாக மாற்றித் தர வேண்டும்.

துறையூரில் செயல்பட்டுவரும் தோட்டக் கலை மற்றும் வேளாண்மைத் துறை அலுவலகங்களுக்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும்.

துறையூர்–பெரம்பலூர் புறவழிச் சாலை முதல் ஆத்தூர் சாலையை இணைக்கும் PHASE–II புறவழிச் சாலைகளையும், ஆத்தூர்–துறையூர் செல்லும் சாலை, முசிறி–துறையூர் செல்லும் சாலையை இணைக்கும் PHASE III புறவழிச் சாலை திட்டத்தையும், துறையூர் நகரைச் சுற்றி, சுற்று வட்டச் சாலையையும் அமைத்துத் தர வேண்டும்.

துறையூர், உப்பிலியாபுரம் போக்குவரத்துப் பணிமனையிலிருந்து சென்னைக்குச் செல்லும் பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளையும், துறையூரிலிருந்து சென்னைக்கு குளிர்சாதனப் பேருந்தையும் இயக்க வேண்டும்.

B. மேட்டூரில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். கீழகுன்னுபட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும்.

கண்ணனூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும்.

கொப்பம்பட்டி அருள்மிகு சப்தரிஷீஸ்வரர் திருக்கோயில், B.மேட்டூர் மாரியம்மன் கோயில்களுக்கு மராமத்துப் பணிகள் செய்து தர வேண்டும். துறையூர் அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயில், அருள்மிகு வேணுகோபால் சுவாமி திருக்கோயில்களுக்கு மராமத்துப் பணிகள் செய்து, குடமுழுக்கு செய்து தர வேண்டும். கண்ணனூர் அருள்மிகு வரதராஜ பெருமாள் திருக்கோயிலுக்குத் திருப்பணிகள் செய்து தர வேண்டும்.

துறையூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். துறையூர் தீயணைப்பு நிலையத்திற்கு புதிய தீயணைப்பு வாகனம் வழங்க வேண்டும்.

துறையூர் சின்ன ஏரியில் உள்ள மதகு எண் 2–ல் உள்ள பைப்பை புதியதாக மாற்றித் தர வேண்டும். கழிவுநீர் இந்த ஏரியில் கலந்து சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்தி வருகின்றது. இதனைச் சீர்செய்ய நகராட்சி அலுவலகம்மூலம் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்தி, சுத்திகரிப்பு நிலையம் அமைத்து தண்ணீரை சுத்தகரிப்பு செய்து ஏரியில் விடுவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

நாகநாய்க்கன்பட்டி ஏரியில் கடைப்போக்கி எண் 2 பழுதடைந்துள்ளது. இதனைப் புதுப்பித்து, தூர்வாரி முழு கொள்ளளவிற்கு நீர் தேக்க ஆவன செய்ய வேண்டும்.

கலிங்கமுடையான்பட்டி ஏரியின் உபரிநீர் வாய்க்காலில் புதியதாகத் தடுப்பணை அமைத்துத் தர வேண்டும்.

ஆதனூர் பெரிய ஏரி, ஆதனூர் சின்ன ஏரி ஆகிய இரண்டு ஏரிகளையும் தூர்வாரி, முழு கொள்ளளவிற்கு நீர் தேக்க ஆவன செய்ய வேண்டும்.

கோட்டாத்தூர் ஏரியைத் தூர்வாரி, முழு கொள்ளளவிற்கு நீர் தேக்க ஆவன செய்ய வேண்டும். நடுவலூர் ஏரியின் உபரி நீர் வாய்க்காலில் முட்புதர்கள் மண்டி, மேடிட்டு தூர்ந்துள்ளது. இக்குறைகளை நிவர்த்தி செய்து தர வேண்டும்.

நாகலாபுரம் ஏரிக்கு வரும் நீர்வரத்து பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, இதனை நிவர்த்தி செய்து தர வேண்டும்.

துறையூர் பெரிய ஏரியில் உள்ள திருகு பம்பர கட்டைகள் பழுதடைந்துள்ளதைச் சரி செய்து தர வேண்டும். ஏரிக்கரையில், துறையூரிலிருந்து கோவிந்தபுரம் செல்வதற்கு தார்ச் சாலை அமைத்துத் தர வேண்டும். கடைக்கால் எண் 1–ல், நீர்க் கசிவு உள்ளது. இதனைச் சீர்செய்து தர வேண்டும். கடைக்கால் வாய்க்காலில் வடக்குத் தெருவில் உள்ள பாலத்தை, பெரிய பாலமாக அமைத்துத் தர வேண்டும்.

ஆலத்துடையான்பட்டி பெரிய ஏரியில் உள்ள பாசன வாய்க்காலைத் தூர்வாரி, அதன் கொள்ளளவை மேம்படுத்த வேண்டும். ஆலத்துடையான்பட்டி சின்ன ஏரியைத் தூர்வாரி, கரையைப் பலப்படுத்த வேண்டும். சிறுநாவலூர் ஏரியைத் தூர்வார வேண்டும். ஜம்பேரி ஏரியைத் தூர்வாரி, கரையைப் பலப்படுத்த வேண்டும். ஒக்கரை ஏரியைத் தூர்வாரி, கரையைப் பலப்படுத்த வேண்டும்.

மாராடி ஏரி மற்றும் சிக்கத்தம்பூர் ஏரி ஆகிய ஏரிகளைத் தூர்வாரி, கரையினைப் பலப்படுத்தித் தர வேண்டும்.

வெங்கடாசலபுரம், கீரம்பூர், சோபனாபுரம் ஆகிய ஏரிகளில் வடகிழக்குப் பருவமழையின்போது அதிகமான மழைநீர் வந்ததால் மதகுகள் பழுதடைந்துள்ளதைச் சரி செய்தும், ஏரியின் உபரிநீர் வாய்க்காலைத் தூர்வாரியும் கொடுக்க வேண்டும்.

பிற்பகல் 12–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சீ. கதிரவன் அவர்கள்.*

திரு. சீ. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையை சமநிலையில் நடத்தி, சபையின் நாயகராக விளங்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். ஓர் அழகான வீடு. 1967–ல் கட்டப்பட்ட அந்த வீட்டை பலரும் நிர்வகித்தார்கள். கடந்த பத்தாண்டுகளாக அந்த வீட்டில் இருள் சூழ்ந்து, ** தூசி படிந்து, வாழத் தகுதியில்லாமல் போய்விடுமோ என்று எல்லோரும் எண்ணியிருந்த வேளையில், (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டு மே 7 ஆம் தேதி வீட்டுக்கு புது வெளிச்சம் பாய்ச்சப்பட்டது. விடியல் எனும் அந்த வெளிச்சத்தின் மூலமாக இப்போது வீடு திறக்கப்பட்டுள்ளது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது. அதற்குப் பதிலாக நல்ல வார்த்தையாக மாற்றிக்கொள்ளலாம்.*

திரு. சீ. கதிரவன்: *ஆம். பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வீடு எனும் தமிழகத்துக்கு விடியலைத் தந்தவர்தான் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள். வீட்டுக்கு வெளிச்சம் பாய்ச்சியாகிவிட்டது. வீட்டைச் செப்பனிடுவது எப்படி? அதற்காக அவர் கையில் எடுத்த ஆயுதம்தான் 'திராவிட மாடல்' எனும் ஆயுதம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆயுதம் ஏற்ற இறக்கமாக இருக்கும் பகுதிகளை அடித்து, சமநிலைக்குக் கொண்டுவருவது. அவர் எடுத்த இந்த ஆயுதத்தை இப்போது மற்ற மாநிலங்களும் எடுக்கத் தொடங்கிவிட்டன. இது திராவிட மாடலுக்கு மட்டுமல்ல, அதை ஏந்தி நிற்கும் நம் முதல்வருக்கும் கிடைத்த வெற்றி. அவருக்கு என் முதல் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திராவிட மாடலைத்தான், நமது தமிழகத்தை நாளை வழிநடத்தப் போகும் வெற்றியின் உதயமாய், தமிழகத்தின் இதயமாய் உதித்திருக்கும் திராவிடத்தின் புதிய ஒளி, நமது இளம் சூரியன், இளம் தலைவர்

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். எப்படி என்கிறீர்களா? சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறைகள்மீதான மானியக் கோரிக்கை விவாதத்தில் அவர் பேசினார். அப்போது எதிர்க்கட்சித் தலைவரிடம், "எனது 'காரை' வேண்டுமானாலும் எடுத்துச்செல்லுங்கள். ஆனால், கமலாலயம் பக்கம் மட்டும் சென்று விடாதீர்கள்" என்றார். (மேசையைத் தட்டும் ஒலி) இதைத்தான் திராவிட மாடலுக்கு ஒரு வரி அர்த்தமாகப் பார்க்கிறோம்.

நாம் அனைவரும் எங்கே செல்ல வேண்டும்? என்ன செய்ய வேண்டும்? எப்படிச் செயல்பட வேண்டும் என்பதை நமக்கு எடுத்துரைப்பதே திராவிட மாடல். அதனை இரண்டடிக் குறளாக, 'கார்' வடிவில் எடுத்துரைத்த இளம் சூரியனுக்கு எனது பணிவான வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

அறிஞர் பெருமக்கள், அனுபவம் வாய்ந்த சான்றோர்கள் நிறைந்த இந்த மாபெரும் அவையில் என்னை அமரச் செய்த எனது தந்தையார், தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக வேந்தர், தனலட்சுமி சீனிவாசன் குழுமத்தின் நிறுவனர் மற்றும் தலைவர், எனது வாழ்வில் எல்லா வளங்களையும் எனக்களித்த உயர்திரு. அ. சீனிவாசன் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எள் என்றால் எண்ணெய் ஆக இருப்பவர்; இப்போது மட்டுமல்ல, எப்போதும் 20 வயது இளைஞன்போல் துள்ளிக் குதித்து வேலை செய்பவர். அந்தத் துள்ளலே எங்களைப் போன்றவர்களை இயக்கும் இயக்கம். ஆம். இந்த இயக்கத்துக்குக் கிடைத்த சிறந்த செயல்வீரர், 'திருச்சினா நேரு', 'நேருனா திருச்சி' என்று நமது முதல்வர் அவர்களால் பாராட்டப்பட்ட நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர், அருமை அண்ணன் மாண்புமிகு திரு. கே.என். நேரு அவர்களுக்கு எனது வணக்கம்.

திருச்சி வடக்கு மாவட்டச் செயலாளர் மற்றும் முசிறி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர், அண்ணன் காடுவெட்டி தியாகராஜன் அவர்களுக்கும், கழக ஒன்றியச் செயலாளர்கள், நகரச் செயலாளர்கள் மற்றும் அனைத்துக் கழக உடன்பிறப்புகளுக்கும் என் மனமார்ந்த வணக்கத்தையும், நன்றியையும்

தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என் நன்றி கலந்த வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசாங்கத்தில் 36–க்கும் மேற்பட்ட துறைகள் இருக்கின்றன. பல்வேறு துறைகளில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தினாலும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையில் செயல்படுத்தக்கூடிய திட்டங்களால்தான் ஒட்டுமொத்த சமுதாயமே முற்றிலும் பயன்பெறக்கூடும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்கள் எந்த திசையில் பயணிக்க வேண்டுமென்பதை கொள்கை விளக்கக் குறிப்பை எடுத்து படித்துப் பார்த்தாலே தெரிந்து விடுகிறது.

கடந்த ஓராண்டுக் காலத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையில் செய்யப்பட்ட மிகப் பெரிய புரட்சியாகப் பார்க்கப்படுவது, மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு புனரமைக்கப்பட்டதுதான். இதைத்தான் நான் எனது தொடக்க உரையிலேயே குறிப்பிட்டேன். பழுதாகிக் கிடந்த வீட்டைச் சீரமைத்துவரும் நம் முதல்வர், கண்டுகொள்ளப்படாத முக்கிய அம்சமாக இருந்த விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுவைச் சீரமைத்தார். மேலும், கடந்த ஆண்டு ஆகஸ்ட் 19 ஆம் தேதியன்று, சீரமைக்கப்பட்ட இந்தக் குழுவுக்கு அவரே தலைவராக இருந்து இரண்டு முறை அந்தக் கூட்டத்தைத் திறம்பட வழி நடத்தியுள்ளார்.

பிற்பகல் 12–40

அண்மையில் நடந்த அந்தக் கூட்டத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவுகள் எடுக்கப்பட்டன. இந்தக் கூட்டத்தில் பேசிய நமது முதல்வர், சமூகத்தில் அனைவரும் சமம் என்ற கோட்பாடுதான் 'திராவிட மாடல்' என்றார். இந்த மாடல், அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, வஞ்சிக்கப்பட்ட மக்களின் குரல். அவர்களது உரிமைகளைப் பெற்றுத் தரும் குரல். தோளோடு தோள் நின்று அவர்களைப் பாதுகாக்கும் குரல் என்றார். ஆம், இதுதான் திராவிட மாடலுக்கு நம் முதல்வர் அவர்கள் எழுதியுள்ள விளக்கவுரை.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் வாழ்வில் பொருளாதார முன்னேற்றத்திற்கு நமது அரசு எப்போதும்

துணை நிற்கும் என்ற நம் முதல்வர் அவர்களின் பேச்சு, அந்தத் துறையின்மீதும், அந்தச் சமுதாய மக்கள்மீதும் அவர் வைத்துள்ள பற்றையும், அன்பையும் பறைசான்றுகிறது. இந்தப் பற்று, அன்புக்கெல்லாம் முத்தாய்ப்பாக, ஒவ்வொரு சுதந்திர தினத்தின்போதும் நடைபெறும் சமபந்தி போஜனம் என்ற பெயரை 'சமத்துவ விருந்து' என அறிவித்துள்ளார். இந்த சமத்துவம்தான் நமது திராவிட மாடலின் அச்சாணி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் மட்டுமல்லாது, வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமன்ற வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் அறிவிப்பை வெளியிட்டார், நம் முதல்வர்.

அம்பேத்கர் பிறந்த தினத்தை 'சமத்துவ நாளாகக் கொண்டாடுவோம்' என அறிவித்தது மட்டுமின்றி, மறுநாளே அம்பேத்கர் பிறந்ததினத்தின்போது, நமது முதல்வர் அவர்கள் தலைமையிலேயே சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது. அம்பேத்கரின் மணிமண்டபத்தில் அவரின் முழு உருவ வெண்கலச் சிலை மற்றும் அவருடைய நூல்கள் தமிழில் வெளியிடப்படும் என்ற முக்கிய அறிவிப்புகளையும் இந்த மன்றத்தில் வெளியிட்டு, சட்டமேதை அம்பேத்கர் அவர்களுக்குப் பெருமை சேர்த்துள்ளார், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த சிறப்புமிகு பேரவையில் நின்று பேசுவதற்கு காரணம், என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய, எனது மண்ணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதி மக்களே. என் உடலில் உயிர் உள்ளவரை, என் தொகுதி மக்களை நான் மறவேன். அவர்களுக்காக அல்லும், பகலும் பாடுபடுவேன் என்பதைக் கூறி, எனது தொகுதி மக்களுக்குத் தேவையான கோரிக்கைகளை இப்பேரவையில் பட்டியலிடுகிறேன்.

மண்ணச்சநல்லூரை மையமாகக் கொண்டு காவல் துணைக் கண்காணிப்பாளர் முகாம் அலுவலகம் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவன்புடன் வணங்கி, கேட்டுக்கொள்கிறேன்.

மண்ணச்சநல்லூர் தொகுதிக்குட்பட்ட மாதவபெருமாள்கோவில் ஊராட்சி, நொச்சியம் கிராமத்திலுள்ள கீழத் தெருவில் வசிக்கும்

தகுதியான குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க பரிசீலனை செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தின் மின்சாரத் தேவையைக் கருதி, 110/22 KV திறன்கொண்ட புதிய துணை மின் நிலையம் ஒன்றை மண்ணச்சநல்லூர் பேரூராட்சியில் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் கோயிலுக்கு இலட்சக்கணக்கான பக்தர்கள் பாத யாத்திரையாக வருவதால், No.1 Toll Gate முதல் சமயபுரம் வரை 6 கிலோ மீட்டருக்கு நடைபாதை வசதி அமைத்துத் தருமாறும், மேலும், திருத்தலையூர் ஊராட்சியில் திருத்தலையூர் மற்றும் மேலக்கோட்டத்தை இணைக்கும் தரைப் பாலத்தை மேம்பாலமாக மாற்றியமைத்துத் தரவும், மேல்பத்து ஊராட்சி, சுனைபுகநல்லூர் கிராமத்திலுள்ள பெருவளை வாய்க்காலில் பாலம் கட்டித் தரவும், கோபுரப்பட்டி–பாச்சூர் இடையே உள்ள சேதமடைந்துள்ள கல்பாலத்தினைச் சீரமைத்துத் தருமாறும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் அதிகளவில் பட்டதாரி இளைஞர்கள் வேலையின்றி இருப்பதனால், அதனைக் கருத்தில்கொண்டு, சிப்காட் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட வாளவந்தி ஊராட்சியில் துணை ஆரம்ப சுகாதார சிகிச்சை மையம் செயல்பட்டு வருகிறது. வாளவந்தி ஊராட்சியைச் சுற்றியுள்ள 35 கிராமங்களில் 40,000–க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். அவர்கள் மேல்சிகிச்சைக்காக 25 கிலோ மீட்டர் தூரம் வரை சென்று வர வேண்டியுள்ளது. எனவே, எனது தொகுதி மக்களின் மருத்துவத் தேவையைக் கருதி, துணை சுகாதார மையத்தை, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார மையமாகத் தரமுயர்த்தித்

தருமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் நலனில் அரசு அதிக அக்கறை கொண்டிருக்கிறது என்பது, பகலில் அடிக்கும் சூரிய வெளிச்சத்தைப் போன்றது. மூடிய இருட்டு அறைக்குள் இருந்து பார்ப்பவர்களுக்கு விடியல் வந்ததே தெரியாது; தூக்கத்திலேயேதான் இருப்பார்கள். கதவைத் திறந்து, களத்தில் இருப்பவர்களுக்குத்தான் விடியல் பிறந்தது, காலை கடந்தது, நண்பகல் உச்சி வெயில் சுட்டெரிக்கப் போகிறது என்பது தெரியும். எனவே, கண்களை மூடிக்கொள்ளாதீர்கள்; கண்டதையெல்லாம் நம்பாதீர்கள். இதுதான் உண்மையான 'திராவிட மாடல்' ஆட்சி. இந்த ஆட்சியில் இதுவரை செய்யப்பட்டுள்ள அற்புதமான விஷயங்கள் அனைத்தும் Trailer–கள்தான். இன்னும் நான்கு ஆண்டுகள் இருக்கின்றன. இனிமேல்தான் Main Picture–க்கே வரப்போகிறோம்.

நாளை, முதலாம் ஆண்டு ஆட்சியை நிறைவு செய்யும் எங்கள் முத்தான மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு எனது திராவிட வணக்கங்கள்; நன்றிகள். வாழ்க தமிழகம்! வளர்க தமிழகம்! அனைவருக்கும் நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பாபு அவர்கள்.

திரு. மு. பாபு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்டப் பேரவையை மாண்புடனும், அறத்துடனும், அனைத்து உறுப்பினர்களுக்கும் சமவாய்ப்பும் அளித்து இந்தச் சபையை வழிநடத்துகின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தினைத் தெரிவித்துக்கொண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிட வாய்ப்பு தந்தமைக்காக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் வீறுநடை போடும் இந்த சமூக நீதி ஆட்சிப் பொறுப்பேற்று இன்றோடு ஓர் ஆண்டு நிறைவுற்று, வெற்றிகரமாக இரண்டாம் ஆண்டில் அடி எடுத்து வைப்பதை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மனதார வரவேற்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட மாடல் என்பது அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, வஞ்சிக்கப்பட்ட மக்களினுடைய குரல். அவர்களது உரிமைகளைப் பெற்றுத்தரும் குரல். தோளோடு தோள் நின்று அவர்களைப் பாதுகாக்கும் குரல் என்று மாநில விழிகண் கூட்டத்தில் சூளுரைத்து, ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்களின் பாதுகாவலனாய் விளங்கி, எண்ணற்ற சமூகநீதி, சமத்துவத் திட்டங்களை அறிவித்து, அவர்களின் வாழ்வில் ஒளியேற்றி, தமிழக மக்கள் அனைவரும் பாராட்டக்கூடிய வகையில், நல்லாட்சி புரிந்து வருகிற சமூக நீதி வேந்தராகத் திகழக்கூடிய, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் தளபதியார் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏழையெளிய, ஒடுக்கப்பட்ட மற்றும் விளிம்புநிலை மக்களுக்காகவே தன் வாழ்நாளை அர்ப்பணித்த ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் மக்களின் விடிவெள்ளி, புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் அரசியல் வாரிசு, விடுதலைச் சிறுத்தைகளின் ஒப்பற்ற தலைவர், முனைவர், எழுச்சித் தமிழர் அண்ணன் தொல். திருமாவளவன் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அண்ணன் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களுக்கும், கழகத்தின் காஞ்சி தெற்கு மாவட்டச் செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. க. சுந்தர் அவர்களுக்கும், எங்களது கட்சியின் சட்டமன்றக் குழுத் தலைவர் அண்ணன் திரு. சிந்தனைசெல்வன் அவர்களுக்கும், எனது செய்யூர் சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய சிற்பி, ஒடுக்கப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களின் விடிவெள்ளி, சட்ட மாமேதை, புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கர் அவர்களின்

பிறந்தநாளான ஏப்ரல் 14 ஆம் தேதியை சமத்துவ நாளாக அறிவிப்பு செய்திட, எமது தலைவர், எழுச்சித் தமிழர் அவர்கள் வைத்த கோரிக்கையினை ஏற்று, 12 மணி நேரத்திற்குள் அந்த அறிவிப்பினை நடைமுறைப்படுத்திய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழ்நாட்டில் வசிக்கும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியினரின் சட்டப்பூர்வ உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுடைய குறைகளுக்குத் தீர்வு காணவும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையம் உருவாக்கி, அதைச் செயல்படுத்திய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுத் துறைகளில் பட்டியலின மற்றும் பழங்குடியினர் பிரிவில் பின்னடைவு காலிப் பணியிடங்களாக உள்ள 10,402 பணியிடங்களை நிரப்ப, சிறப்பு முகாம் நடத்த அரசாணை வெளியிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் முதியோர் ஓய்வூதியம் மற்றும் கல்வி உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு நலத் திட்ட உதவித் தொகையினை, இதர நல வாரியங்களால் வழங்கப்பட்டு வரும் உதவித் தொகைக்கு இணையாக ரூ.1.53 கோடி உயர்த்தி வழங்கி, அரசாணை பிறப்பித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு நிறுவனங்களின் கொள்முதல்களில், 5 சதவிகிதம் தமிழ்நாட்டைச் சார்ந்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின தொழில்முனைவோர் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கென ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நீண்டநாள் கோரிக்கையான,

சாதி எதிர்ப்பு போராளி, மாவீரன் இமானுவேல் சேகரன் அவர்களுக்கு, பரமக்குடியில் மணிமண்டபம் அமைத்து, அவரது பிறந்தநாளை அரசு விழாவாகக் கொண்டாட வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோல, அகில இந்திய தீண்டாமை ஒழிப்பு கமிட்டியின் தலைவராகப் பணியாற்றி, இளையபெருமாள் கமிட்டி அறிக்கை என்ற புகழ்பெற்ற சீர்த்திருத்த அறிக்கையை வழங்கிய பெருந்தலைவர் இளையபெருமாள் அவர்களுக்கு, காட்டுமன்னார்கோவிலில் ஒரு மணிமண்டபத்தை அமைத்து, அவரது பிறந்தநாள் நூற்றாண்டையும் கொண்டாடி அரசு சிறப்பு செய்ய வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த சமூக நீதி அரசானது, சாதியின் பெயரால் நிலவும் ஏற்றத் தாழ்வுகளைக் களைந்து, சமத்துவ சமுதாயம் அமைத்திட, பொது மயானங்கள் அமைத்துள்ள சிற்றூர்களுக்கு ரூ.10 இலட்சம் பரிசுத் தொகை வழங்கியது, மாநிலம் முழுவதும் மீண்டும் சமத்துவபுரங்களுக்குப் புத்துயிர் ஊட்டியது போன்ற சமத்துவ புரட்சிகரமான முன்னெடுப்புகளை, ஆட்சி அமைந்த ஒரு வருட காலத்திற்குள் நிறைவேற்றியது பெருமகிழ்ச்சி அளிக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு அமைந்த பிறகு, முதல் மானியக் கோரிக்கை விவாதத்தின்போது பள்ளிப் பாடத் திட்டத்தில் உள்ள தலைவர்களின் பெயர்களில் இருந்த சாதி அடையாளங்களை நீக்கியதுபோல, தமிழ்நாடு முழுவதும் உள்ள பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் பெயர்களில் உள்ள சாதி அடையாளங்கள் நீக்கப்படுவதை உறுதி செய்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாடு முழுவதும் உள்ள 1,138 ஆதி திராவிடர் நலப் பள்ளிகளை பெயர் மாற்றம் செய்து, சமூக நலப் பள்ளிகள் என அறிவித்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் உள்ள ஆதி திராவிடர் நலப் பள்ளிகள்

மற்றும் மாணவ, மாணவியர் விடுதிகளின் செயல்பாடுகளை ஆய்வு செய்து, அதன் கட்டமைப்பு வசதிகள், சுகாதாரம், கல்விச் சூழல், உணவுத் தரம், பாதுகாப்பு ஆகியவற்றை மறுசீரமைக்கத் தேவையான பரிந்துரைகளை வழங்க ஓர் உயர்மட்டக் குழுவை நடப்பாண்டிலே அமைத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஆதி திராவிட நலப் பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு உணவுக்காக வழங்கப்படும் 1,000 ரூபாய் என்கிற அளவை தலா 3,000 ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டும் என அன்போடு அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாட்டில் உள்ள 83 ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் ஓராசிரியர் பள்ளிகளாகவே உள்ளன. இந்த நிலையினை மாற்றி, காலிப் பணியிடங்களை நிரப்பி, ஆதி திராவிடர் நலப் பள்ளிகளின் கல்வித் தரத்தினை உயர்த்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 2006–ல் அமைந்த முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையிலான கழக அரசு, ஆதி திராவிட விவசாயிகள், தாட்கோ நிறுவனத்தின் மூலம் பெற்ற கடன் தொகையினைத் தள்ளுபடி செய்தது. கடந்த 2 வருடங்களாக கொரோனா நோய்த் தொற்று காரணமாக ஊரடங்கு நிலை அமல்படுத்தப்பட்டதால், ஆதி திராவிட மக்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார நிலை மிகவும் மோசமாக உள்ளது. எனவே, ஆதி திராவிட மக்களின் வாழ்வு நிலையை மேம்படுத்த தாட்கோ மூலம் வழங்கப்பட்டுள்ள ரூ.3 இலட்சத்திற்கும் குறைவாக உள்ள கடன்களைத் தள்ளுபடி செய்து ஆதி திராவிட மக்களின் வாழ்வில் ஒளியேற்றிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த கடந்த 1974 ஆம் ஆண்டு முன்னாள் முதல்வர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தாட்கோ நிறுவனம் தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் தற்போது கட்டுமானப் பணிகளை மேற்கொள்வது மட்டுமல்லாமல்,

ஆதி திராவிட மக்கள் சுய தொழில் துவங்க 1 இலட்சம் ரூபாய்க்கு, 30 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கி, கடனுதவி பெற உதவி வருகிறது. அதன்படி, தாட்கோ மாவட்ட மேலாளர்கள், உரிய பயனாளிகளை மாவட்டந்தோறும் தேர்வு செய்து, கடன் பெற தேசிய வங்கிகளுக்கு பரிந்துரை செய்து அனுப்புகின்றனர். ஆனால், வங்கிகள் அவ்வளவு எளிதில் அம்மக்களுக்கு கடனுதவியை வழங்குவதில்லை. அவர்களிடம் பிணையம்–surety கேட்கின்றனர். அவர்களை அலைக்கழித்து, இறுதியில், அவர்களது விண்ணப்பத்தினை 3 அல்லது 4 மாதங்கள் கழித்து நிராகரித்து விடுகின்றனர். எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதியார் தலைமையிலான இந்த அரசு, ஆதி திராவிட மக்கள் சுய தொழில் துவங்க தாட்கோமூலம் வழங்கப்படும் கடன் உதவிகளை, தேசிய வங்கிகள் மூலமாக மட்டுமல்லாமல், தமிழ்நாடு அரசு கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும் வழங்கிட தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் குடியிருப்பிலேயே சக ஆதி திராவிட மக்களாக வாழ்ந்துவரும், கிறிஸ்தவம் தழுவிய ஆதி திராவிட மக்களுக்கு பட்டியல் வகுப்புக்கான இட ஒதுக்கீடு மறுக்கப்பட்டு வருகிறது. வன்கொடுமை தடுப்புச் சட்டப் பாதுகாப்பும் இல்லாத நிலை உள்ளது. எனவே, அவர்களைப் பட்டியல் வகுப்பில் இணைப்பதற்கான தீர்மானம் ஒன்றினை, ஒன்றிய அரசுக்கு சட்டமன்றத்தின் வாயிலாக நிறைவேற்றி அனுப்ப வேண்டும் எனவும், அந்தக் கோரிக்கை நிறைவேறும் வரை கிறிஸ்தவம் தழுவிய ஆதி திராவிட மக்களுக்கு தமிழக அரசு 3.5 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்க வேண்டுமெனவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிரை வண்ணார் நல வாரியம் என்பது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட மிக முக்கியமான திட்டமாகும். அதைப் புத்தாக்கம் செய்யும் முயற்சியை வரவேற்கிறோம். அதேசமயத்தில் கிறிஸ்தவம் தழுவிய வண்ணார் சமூகத்தைச் சார்ந்த மக்கள் அந்த வாரியத்தில் இடம் பெற முடியாத நிலை உள்ளது. சலவைத் தொழில் செய்யும் இம்மக்கள், புதிரை வண்ணான் என்ற பெயரோடும் பல பகுதிகளில் ஏகாலி, வண்ணான் என்கிற அடையாளங்களுடனும் வாழ்ந்து வருகின்றனர். எனவே, பட்டியல் வகுப்பில் உள்ள, பரம்பரையாகச் சலவைத் தொழில் செய்து வரும் பல்வேறு பெயர்களில் அறியப்படும்

மக்களையும், கிறிஸ்தவம் தழுவிய வண்ணார் சமூகத்தைச் சார்ந்த மக்களையும், இந்த வாரியத்தில் உறுப்பினர்களாக இணைத்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்களுக்கு வழங்கப்படும் இலவச வீட்டுமனைப் பட்டா திட்டத்தில், தற்போது இருக்கும் பயனாளிகளின் ஆண்டு வருமான வரம்பு ரூ.72 ஆயிரமாக உள்ளது. அதை 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும், தற்போது அவர்களுக்கு வழங்கப்படும் வீட்டுமனையின் அளவானது மாநகராட்சிப் பகுதியில் 1 சென்ட்டும், நகராட்சிப் பகுதியில் 1½ சென்ட்டும் என்பது மிகவும் சிறியதாகவும், கட்டுமானம் செய்வதற்கேற்ற அளவாக இல்லாததாலும், அதனை உயர்த்தி, எல்லாப் பகுதிகளுக்கும் 3 சென்ட் என வழங்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல ஆதி திராவிட நலத் துறைமூலம் வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள், முறையாக அவர்களுக்கு நில அளவை செய்து தரப்படாமலும், நீதிமன்ற வழக்குகள் நிலுவை போன்ற காரணங்களாலும் சுமார் 20 ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உயர்மட்டக் குழு ஒன்றை அமைத்து, ஆதி திராவிட நலத் துறைமூலம் வழங்கப்பட்ட நிலங்கள் உரிய பயனாளிகளுக்குக் கிடைப்பதற்கு ஆவன செய்திட வேண்டும் என அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கடந்த 10 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில், ஆதி திராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட தொகையில் 40 சதவீதத்திற்கும் குறைவாகவே செலவிடப்பட்டுள்ளது. 2012 முதல் இலவச வீட்டுமனைப் பட்டா வாங்குவதற்காக ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையின் அளவு 55.6 கோடி ரூபாய். இதில் செலவிடப்படாமல் திருப்பி அனுப்பப்பட்ட தொகை, 28.74 கோடி ரூபாய் ஆகும். அதிர்ச்சியூட்டும் இந்தப் புள்ளிவிவரம் ஆதி திராவிட நலத் துறையால், நில கையகப் பணியை வலிமையாகச் செய்ய முடியவில்லை என்பதை அப்பட்டமாக வெளிப்படுத்துகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, கடந்த பத்தாண்டுகளில் வீட்டுமனைப் பட்டா

வழங்குவதில் ஏற்பட்டுள்ள பின்னடைவைக் கருத்தில்கொண்டு, ஒருமுறை ஒதுக்கீடாக, ரூபாய் 500 கோடி ஒதுக்கி, காத்திருக்கும் அனைவருக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) வீட்டுமனைப் பட்டா வழங்குகிற புரட்சிகர திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ஆதி திராவிட மற்றும் பழங்குடியினருக்கான மாநில அளவிலான கண்காணிப்பு குழுக் கூட்டத்தினை, ஆட்சி அமைத்த ஒரு வருட காலத்திற்குள் இரு முறை கூட்டி, வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண பேருதவிகள் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தரவிட்டது குறித்து பெருமகிழ்ச்சியடைகிறோம்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அன்பழகன்) தலைமை]

அதேவேளையில், பல மாவட்டங்களில் வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் நிலம் மற்றும் அரசு வேலை போன்ற உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படாமல் ஆண்டுக் கணக்கில் நிலுவையில் உள்ளன. அதையெல்லாம் உடனடியாக அம்மக்களுக்கு வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் அரசு அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் குற்றவியல் நடைமுறைச் சட்டம்—CrPC 110 மற்றும் 107 பிரிவுகளில் பாதிக்கப்படும் மக்களில் பெரும்பாலானோர் பட்டியலின, சிறுபான்மை சமூக மக்களாகவே உள்ளனர். பொது அமைதிக்குக் குந்தகம் விளைவித்ததாகக் கூறி, அரசியல் மற்றும் சட்ட உரிமைகளுக்காகவும், அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்காகவும் போராடுகிற நபர்களை காவல் துறை அடையாளம் கண்டு, கோட்டாட்சியர்கள்மூலம் CrPC 110 பிரிவின்கீழ் அவர்களிடமிருந்து உறுதிமொழிப் பத்திரம் எழுதி வாங்கிக் கொள்கின்றனர். பிறகு, உறுதிமொழிப் பத்திரத்தை மீறிவிட்டதாகக் கூறி, கைது நடவடிக்கை அல்லது உண்மைக்கு மாறான வழக்கு என பட்டியலின மக்களைத் தொடர் மிரட்டலில் வைத்து வருகிறது காவல் துறை. இந்த நடைமுறை

நீண்ட காலமாகவே இருந்து வருகிறது. எனவே, அடிப்படை சமூக மற்றும் அரசியல் உரிமைகளுக்காகப் போராடுகின்ற பட்டியலின மக்களைப் பாதுகாத்திடவும், அவர்களின் ஜனநாயக உரிமைகளுக்காகக் களம் காண்கின்ற விடுதலைச் சிறுத்தைகள் போன்ற அரசியல் இயக்கத்தினரைப் பாதுகாக்கிற வகையிலும், CrPC 110 பிரிவினை வருவாய் நிர்வாகமும், காவல் துறையும் தவறான வகையில் நடைமுறைப்படுத்தாதவாறு உரிய வழிமுறைகளை அரசு ஆணையாக வெளியிட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

மேலும், தமிழகத்தில் கடந்த 10 ஆண்டுகளில் பல்வேறு இடங்களில் பல ஆணவப் படுகொலைகள் நடந்துள்ளன. அத்தகைய அருவருப்பான கொடூரங்கள், இனி ஒருபோதும் நிகழாவண்ணம் தடுக்கும் வகையில் ஆணவப் படுகொலைகளைத் தடுத்து நிறுத்திட, சிறப்புச் சட்டம் ஒன்றை இயற்ற வேண்டும் எனவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அன்பழகன்): மாண்புமிகு உறுப்பினர், இன்னும் 2 நிமிடங்களில் உரையை முடியுங்கள்.

திரு. மு. பாபு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதிலும் உள்ளாட்சித் தேர்தல்கள் ஊரகப் பகுதிகளிலும், நகர்ப்புற பகுதிகளிலும் நடைபெற்றுள்ளன. இவற்றில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பட்டியல் வகுப்பு மற்றும் பழங்குடியின ஊராட்சி மன்ற மற்றும் பேரூராட்சி மன்றத் தலைவர்கள் சுய சார்புடன், தனித்தன்மையுடன் செயல்பட முடியாதபடி, துணைத் தலைவர்களாலும், ஊராட்சி செயலர் போன்ற பொறுப்பாளர்களாலும் தடுக்கப்படுவதாகப் புகார்கள் வருகின்றன. இவற்றை ஆராய்ந்து, சரி செய்யக்கூடிய வழிமுறைகளைக் கண்டறிந்து, அவர்கள் சுய சார்புடன் பணியாற்றுவதை உறுதிப்படுத்திட வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அன்பழகன்): மாண்புமிகு உறுப்பினர், 13 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. மு. பாபு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் வகுத்துக் கொடுத்த பாதையில் ஆட்சியை வழிநடத்திச் செல்லும் மாண்புமிகு தமிழக

முதல்வர் அவர்களுக்கும், ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் நல மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு எனது கருத்துகளை எடுத்துரைக்க வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், அனைத்து சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும் நன்றி கூறி, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

இந்திய அணுமின் கழக நிருவாகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் கல்பாக்கம் அணுமின் நிலையத்தில், Group 'C' மற்றும் Group 'D' பிரிவு நிரந்தர தன்மையுள்ள பணியிடங்களில் 60% வேலைவாய்ப்பு உள்ளூர் இளைஞர்களுக்கு வழங்கிட ஆவன செய்திட வேண்டும்.

கல்பாக்கம் அணுமின் நிலைய நிர்வாகம் சார்பில், சுற்றுப்புறக் கிராமங்களில் கட்டுமானப் பணிகளைக் கண்காணிக்க கதிரியக்கப் பகுதி உள்ளூர் திட்டக் குழுமம் (நிலா கமிட்டி) எனும் அமைப்பு மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்த அமைப்பு குறிப்பிட்ட சர்வே எண்களில் உள்ள இடங்களை பத்திரப்பதிவு செய்ய வேண்டாம் என கடந்த ஆண்டு பரிந்துரைத்தது. அதனை ஏற்று, மாவட்ட நிர்வாகமும் 14 கிராமங்களில் பத்திரப்பதிவு செய்ய தடை விதித்தது. கிராம மக்களின் நிலங்களுக்கு உயிர் கொடுக்கும் விதமாக பத்திரப்பதிவு மேற்கொள்ள அதிகாரபூர்வ அரசாணை வெளியிட வேண்டும் எனவும், நிலா கமிட்டியின் அதிகாரங்களை வரன்முறைப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

பல்லவன்குளம் ஏரி மற்றும் மதுராந்தகம் ஏரி ஆகியவற்றின் உபரி நீர் பாலாற்றில் கலந்து, பிறகு கடலில் கலந்து வீணாகிறது. எனவே, செய்யூர் வட்டம், பரமேஸ்வரிமங்கலம் ஊராட்சியில் பொய்கை மடு அணைக்கட்டை கட்டித்தர நடப்பாண்டிலே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சூணாம்பேடு ஊராட்சி, விளாம்பட்டு முதல் புதுப்பேட்டை வரை சுமார் 7 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஓங்கூர் ஆற்றின் கரையோரம் தடுப்புச் சுவர் அமைத்து தர வேண்டும்.

செய்யூர் சட்டமன்றத் தொகுதியில் கிராம மக்கள் பாம்பு உள்ளிட்ட விஷப் பூச்சிக்கடிகளால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, செய்யூர் அரசு மருத்துவமனையைச் சிறப்பு விபத்து

அவசர சிகிச்சை வசதியுடன் பன்னோக்கு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள மிகப் பெரிய பேரூராட்சிப் பகுதியான இடைக்கழிநாடு பேரூராட்சியில் சேம்புளிபுரம் பகுதியில் துணை மின் நிலையம் அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சூணாம்பேடு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தி, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றித் தர வேண்டும்.

கிழக்குக் கடற்கரைச் சாலை வெங்கம்பாக்கம் முதல் வெண்ணாங்குப்பட்டு வரையிலான 35 கி.மீ. தொலைவு சாலை பகுதியில் சுமார் 25–க்கும் மேற்பட்ட சாலை விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே, செய்யூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வடபட்டினம் ஊராட்சியில் விபத்து சிகிச்சை மருத்துவமனை அமைத்துத் தர கேட்டுக்கொள்கிறேன்.

கிழக்குக் கடற்கரைச் சாலைப் பகுதியில் ஆம்புலன்ஸ் வாகன ஓட்டுனர்கள் மற்றும் பாராமெடிக் எனப்படும் துணை மருத்துவர்களுக்கு தங்கும் வசதிகள் ஏற்படுத்தித் தர வேண்டும்.

இடைக்கழிநாடு பேரூராட்சியில் நிலத்தடி நீரில் அளவுக்கு அதிகமான இரும்பு சத்துக்கள் உள்ளதால் ஒருங்கிணைந்த குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வருவாய் கிராமங்களில் உள்ள கிராம நிர்வாக அலுவலகங்களுக்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும்.

செய்யூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள இரண்டு வட்டார தலைநகரங்களான திருக்கழுக்குன்றம் மற்றும் செய்யூர் ஆகிய பகுதிகளை இணைக்கும் வகையில் புதிய வழித்தடத்தில் பேருந்து சேவை ஏற்படுத்தித் தர வேண்டும்.

கல்பாக்கம் முதல் சூணாம்பேடு வரை கிழக்குக் கடற்கரைச் சாலை வழியாக நகரப் பேருந்து சேவை ஏற்படுத்தித் தர வேண்டும்.

கல்பாக்கம் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனையில் பணிமனை மேலாளர் அலுவலகம், தொழிலாளர் ஓய்வறைக் கட்டடம், கழிவறைக் கட்டடம் ஆகியவற்றிற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும்.

வாயலூர் ஊராட்சியில் உய்யலிகுப்பம்–அஞ்சுகானி இருளர் குடியிருப்புப் பகுதியை இணைக்கும் வகையில் உயர்மட்ட தரைப் பாலம் அமைத்துத் தர வேண்டும்.

கல்பாக்கம் பகுதியில் புதியதாகப் போடப்பட்டுள்ள விரைவுச் சாலையின் இரண்டு சந்திப்புகளிலும் இராட்சத உயர்மின் கோபுர விளக்கு மற்றும் போக்குவரத்து சமிக்ஞைகள் அமைத்துத் தர வேண்டும்.

திருக்கழுக்குன்றம் ஒன்றியம், புதுப்பட்டினம் பகுதியில் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியை அமைத்துத் தர வேண்டும்.

வல்லிபுரம், நெரும்பூர், நெல்வாய் ஆகிய இடங்களில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 108 ஆம்புலன்ஸ் வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அன்பழகன்): *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி அவர்கள்.*

***திரு. க. கணபதி:** *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சாதியென்றும் மதமென்றும் பிரித்துக் காட்டி, சமர்விளைத்த சண்டாளர் சூழ்ச்சி மாய, தீதில்லாப் பகுத்தறிவை வாயால் பேசி, தீமூட்டித், தமிழர்களை எழவே செய்த, தாழ்வறுத்தும் நிலையாலே கீழே சாய்ந்து, தகவிழுந்து, உறவிழந்த தமிழர்க்கெல்லாம் வாழ்வென்னும் ஒளிக்கீற்றை மனதில் பாய்ச்சி வளர்த்த நல் பெரியாரை வணங்குகின்றேன்.*

தாயன்பு கொண்டிருந்த தம்பிமாரைத் தனிச்சிறப்பு காண வைத்தார், இந்த நாட்டில் தாயகமாம் தமிழகத்தின் பெயர் விளங்கத் தீர்மானம் பேரவையில் கொண்டு வந்தார், வீடுயர, நாடுயர வாழ்நாள் எல்லாம் விடியுமட்டும் பணிபுரிந்தார், எளிமையாக, ஏடுகளில் தன் கருத்தை எழுதி வந்த, எம் அண்ணா பெருந்தகையை வணங்குகின்றேன்.

ஆற்றல் மிக்க பேச்சால், எழுத்தால் தலைவர் ஆனவராம்; நேற்றும், இன்றும், நாளையும் மக்கள் நெஞ்சில் நிற்பவராம்; சீரிய நெறியில் ஜனநாயகத்தின் சிறப்பைச் சொன்னவராம்; கூரிய அறிவால் நம்மை ஆண்ட முத்தமிழறிஞர் அய்யா கலைஞரை வணங்குகின்றேன்.

பாட்டாளி வர்க்கத்தின் புகழ்பேசி, அவரன்புப் பாசத்தில் வாழும் தலைவர்; கூட்டாளி எமக்கென்று, குடிசையிலே வாழ்வோர்கள் கொண்டாடிப் போற்றும் தலைவர்; தந்தைதாய் பேற்றாலே, தமிழ்நாட்டு மண்மீது தகவோடு வாழும் தலைவர்; சிந்தையால் பார்போற்றும் கலைஞரின் வடிவான மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் தளபதி அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கண்ணுக்குள் கருமணியாய் தலைவர் வாழ்வில் நன்றாக இணைந்துள்ள எங்கள் இளைஞர்; மண்ணுக்குள் கழகத்தின் இலக்கணங்கள் வளம்பெறவே பாடுபடும் எங்கள் இளைஞர்; விண்சுமந்த முகிலாகத் துளிகள் தூவி, அண்ணாவின் கழகத்தை வளர்க்கும் பிள்ளை; மண்மீதில் மக்களுக்காய் உழைக்கும் பிள்ளை; மாண்புமிகு சின்னவரை வணங்குகின்றேன்.

இயக்கத்தின் மூத்த முன்னோடி, அன்புத் தலைவர், நம்முடைய உயிர் தலைவர் கலைஞர் அவர்களின் துணை, அவை முன்னவர் அவர்களை வணங்குகின்றேன்.

கருவிழியாய், உயிர்மொழியாய் நாட்கள்தோறும் கனிவாகப் பேரவையைச் செலுத்தும் தலைவர், பெருவிருப்பால் யாவரையும் ஈர்க்கும் மனிதர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆகியோரை வணங்குகின்றேன்.

பிற்பகல் 1–00

திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர், மக்களவை தி.மு.க. குழு தலைவர், மாண்புமிகு அண்ணன் திரு. டி.ஆர். பாலு அவர்களையும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், எங்கள் மாவட்டக் கழகச் செயலாளர், அண்ணன் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களையும் வணங்குகிறேன்.

எனது வெற்றிக்கு அரும்பாடுபட்ட மதுரவாயல் தொகுதிக் கழக நிர்வாகிகள், தோழமைக் கட்சி நிர்வாகிகள், வாக்களித்து வெற்றிபெறச் செய்த தொகுதி மக்கள் மற்றும் இந்த அவையில் உள்ளோர் அனைவரையும் அன்போடு வணங்குகிறேன்.

உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், திராவிட மாடல் ஆட்சிக்கு வித்திட்ட தலைவர், நம் நெஞ்சமெல்லாம் நிறைந்துள்ள தலைவர் முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்களுக்கு ஓமந்தூரார் வளாகத்தில் சிலை நிறுவப்படும்; அவரது பிறந்தநாள் அரசு

விழாவாகக் கொண்டாடப்படும் என்ற அறிவிப்பைத் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் தளபதி அவர்களுக்குக் கோடானு கோடி நன்றிகளை முதற்கண் தெரிவித்து, வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்திய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய சட்ட மாமேதை பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு அவருடைய நினைவிடத்தில் ஆளுயர சிலை அமைத்து, அவரது பிறந்தநாளை சமத்துவத் திருநாளாக அறிவித்த அன்புத் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 2006–2011 ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட சென்னை துறைமுகம்–மதுரவாயல் உயர்மட்ட மேம்பாலப் பணிகள், கடந்த ஆட்சிக் காலத்தில் நிறுத்தப்பட்டன. அதை மீண்டும் ஈரடுக்கு மேம்பாலமாக அமைக்க ரூ.5,770 கோடி நிதி ஒதுக்கீடு செய்தமைக்கும், எனது தொகுதியில் உள்ள வார்டு எண் 143, பூந்தமல்லி நெடுஞ்சாலையையும், நொளம்பூரையும் இணைக்கின்ற தற்போதுள்ள தரைப் பாலங்களை அகற்றிவிட்டு, இரண்டு உயர்மட்ட மேம்பாலங்கள் கட்ட ரூ.120 கோடி நிதி ஒதுக்கீடு செய்தமைக்கும், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, போரூர், காரம்பாக்கத்தில் உள்ள ஸ்ரீஇராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி வளாகத்தில் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட O.S.R. இடத்தில், பூங்கா அமைக்க ரூ.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், துறை சார்ந்த அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஓராண்டை எட்டுகிற தளபதியின் ஆட்சி திராவிட மாடல் ஆட்சி; திக்கற்றவர்களுக்கும், வக்கற்றவர்களுக்கும் வாழ்வும், வசந்தமும் தருகிற ஆட்சி; காலடிக்குக் கீழே காணாமல் போன காலங்களைக் கீழடியிலும், கொற்கையிலும் கண்டுபிடித்த ஆட்சி; தங்கச் சிம்மாசனத்தில் என் தாய்த் தமிழை உட்கார வைத்து அழகு பார்க்கிற ஆட்சி!

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

முதலீடுகளை ஈர்ப்பதில் குஜராத்தை பின்னுக்குத் தள்ளி, தமிழ்நாட்டை இந்தியாவில் முதல் இடத்திற்குக் கொண்டுவந்த ஆட்சி; வெண்மைப் புரட்சியிலும், பசுமைப் புரட்சியிலும் அதிரடிப் புரட்சியை ஓராண்டில் நிகழ்த்திய ஆட்சி; உரிமைக் குரல் கொடுத்து, முட்டுக் கட்டைகளை முறித்துப் போட்டு, தடைக் கற்களைப் படிக்கற்களாக்கி தடம் தோள் தட்டுகிற ஆட்சி; தொகை தொகையாய் வருகிற பகையைத் தொலைத்துக் கட்டிய ஆட்சி மட்டுமல்ல, பகைவனுக்கும் அருள் செய்யும் ஆட்சி!

கொத்துக் கொத்தாய் தமிழர்கள் உயிரைக் காவு வாங்கிய கொள்ளை நோயை விரட்டியடிப்பதில் இந்தியாவிற்கே வழிகாட்டிய ஆட்சி; வாக்களித்தவர்களின் நம்பிக்கையை மட்டுமல்ல, வாக்களிக்காதவர்களின் உள்ளங்களையும் கொள்ளைகொண்ட எங்கள் உள்ளம் கவர்ந்தவரின் ஆட்சி; கடந்த காலங்களில் குட்டக்குட்ட குனிகிற நிலை மாறி, இன்றோ வெட்ட வெட்டத் துளிர்க்கிற முதல்வரின் ஆட்சி என்று ஆகாயமும் அட்சதை தூவும் ஆட்சி; பச்சையம் இழந்த தமிழகத்திற்கு, நித்தம் நித்தம் ஒளிச்சேர்க்கை செய்கிற தங்கத் தளபதியின் ஆட்சி, காண வேண்டும் நூறாண்டு என கால மகளை யாசிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மரபுக் கவிதையில் மண் பார்த்து புதுக் கவிதையில் விண் பார்த்த மீரா என்ற கவிஞர் அன்றைக்குப் பாடினான்.

'தெருவோரச் சாக்கடையில் வருமா தெப்பம்!
தெய்வங்கள், திருநாட்கள் எங்களுக்கு இல்லை'

என்று. இன்று இன்னலுக்கும் இருட்டடிப்புக்கும் ஆளான இருளர் வாழ்கிற பூஞ்சேரியிலும், பாசிமணி ஊசி விற்கும் நரிக்குறவர் வாழும் குடியிருப்பிலும் தீபாவளி அன்றைக்கும், சித்ரா பவுர்ணமி அன்றைக்கும் தெப்பம் அல்ல, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது முதல்வர் தெப்போற்சவமே நடத்திவிட்டார்.

கடன் வலையில் சிக்கி, கொள்ளை நோயில் பாதித்து, அடிமைச் சகவாசத்தில் முகத்தை மட்டுமல்ல, முகவரியையும் இழந்து தமிழகம் தரை தட்டி நின்ற நேரத்தில், சரியாக ஓராண்டுக்கு முன்னால், முதலமைச்சரானார் தலைவர். முதலும் இல்லை, மூலதனமும் இல்லை; அறைகூவல் ஒரு பக்கம், ஆபத்தோ இன்னொரு பக்கம். மற்றொரு பக்கம் நெருக்கடி, போதாக் குறைக்கு ஒன்றிய அரசின்

ஒத்துழைப்பின்மை. இப்படியொரு இக்கட்டிலும், தலைகளை எண்ணுகிற தலைவர்களுக்கு மத்தியில், இதயங்களை எண்ணுகிற தலைவர் ஆட்சியில், வரி போடாமல் ஒரு பட்ஜெட்டைத் தாக்கல் செய்திருக்கிறாரே நிதியமைச்சர், இதுவல்லவா அதிசயம்!

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அன்பழகன்) தலைமை]

"பூவுக்குள் ஒளிந்திருக்கும் கனிக்கூட்டம் அதிசயம்
துளைசெல்லும் காற்று மெல்லிசையாதல் அதிசயம்
வண்ணத்துப் பூச்சி உடம்பில் ஓவியங்கள் அதிசயம்
குருநாதர் இல்லாத குயில்பாட்டு அதிசயம்"

என்கிறார் கவிஞர் வைரமுத்து. கவிஞர் வைரமுத்து வரிசைப்படுத்திய அதிசயங்களைவிட சுமையும், கடனும் கழுத்தை நெரிக்கின்ற நிலையில், மக்களுக்கு இமையாக இருக்க வேண்டும் என்று கருதுகிற முதல்வர், கவலைப்படுகிற முதல்வர், கண்ணை இமை காப்பதுபோல் மண்ணையும், மக்களையும் காக்கிற முதல்வர் தளபதி அவர்கள் வரி போடாமல் நம்மை இரட்சித்ததுதான், அதிசயம் எல்லாம் அசந்து போகிற அதிசயம்!

ஆறாவது விரலாக அலட்சியப்படுத்தப்பட்ட ஆதி திராவிடர்கள், இன்று நடுவிரல்போல் தலை தூக்கி நிற்கிறார்கள் தளபதியின் ஆட்சியில். ஆதி திராவிடர்கள் வானம் வெட்ட வெளியாக இருந்தது. இன்று விடிவெள்ளி பூத்திருக்கிறது. வெள்ளெருக்கக் காடாக இருந்த ஆதி திராவிடர்கள் இன்று முல்லை மலர்த் தோட்டம்போல் காட்சியளிக்கிறார்கள்.

ஆடுவாரில்லாத அரங்கமாய், பாடுவாரில்லாத பாடலாய், தீண்டுவாரில்லாத திண்பண்டமாய், தேடுவாரில்லாத திண்பண்டமாய் இருந்த ஆதி திராவிடச் சொந்தங்கள் இன்று தளபதியின் ஆட்சியில், ஏற்றி வைத்த விளக்காய், போற்றித் துதிக்கும் பாடலாய், கண்களைப் பறிக்கின்ற கலங்கரை விளக்கமாய் எல்லாத் துறைகளிலும் முத்திரை பதிக்கிறார்கள். சித்திரை நிலவாய்ச் சிரிக்கிறார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அரசனின் படைகள் ஆறு, அறுசுவை ஆறு, அறுபடை வீடுகள் ஆறு, ஆதாரங்கள் ஆறு, காலங்கள் ஆறு, சமய வழிபாடுகள் ஆறு, வாழ்த்துகள் ஆறு என ஆறின் பெருமைக்கு அழகு சேர்க்கும் ஆறாம் தேதியில்

நடைபெறும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் மாண்புமிகு முதல்வரின் அன்பான கனிவால், அவையிலே பேசுகிற வாய்ப்பு கிடைத்தமைக்காகப் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

பிற்பகல் 1–05

1923 ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது பொதுத் தேர்தலில் நீதிக் கட்சியானது பெருவாரியான இடங்களைக் கைப்பற்றி அரசை அமைத்தது. அந்த ஆட்சி சாதித்தது என்ன என்று இங்கே இருக்கிற நீங்கள் கேட்கலாம். தாழ்த்தப்பட்டவர்கள், அதாவது, இன்றைக்கு 'தலித்' என்று அழைக்கப்படுகின்ற ஒடுக்கப்பட்டவர்கள் தெருக்களில் நடமாடக் கூடாது; பொதுக் குளங்களில் தண்ணீர் எடுக்கக் கூடாது; காலில் செருப்பு போட்டு நடக்கக் கூடாது என்ற கொடுமைகளையெல்லாம் உடைத்துத் தகர்த்து எறிந்தது அந்தக் கட்சி. அதற்காகப் பல அரசாணைகளை அது பிறப்பித்தது. இனி 'பஞ்சமர், பறையர்' என்ற பெயர்களைப் பயன்படுத்தக் கூடாது; இனி அவர்களை ஆதி திராவிடர்கள் என்றுதான் அழைக்க வேண்டும் என்றெல்லாம் அறிவித்தது அந்த அரசாங்கம்.

ஒரு நெடிய வரலாற்றில், 1969 வரை ஆதி திராவிடர் நலத் துறையில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையும் இணைந்திருந்தது. 2–5–1969 அன்று பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை எனப் புதிய துறையை தனியே உருவாக்கி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, ஆதி திராவிடர், பழங்குடியினர் நலனுக்காகவே முழுவதுமாகச் செயல்படும் நிலையை உருவாக்கினார் நமது அன்புத் தலைவர், முத்தமிழறிஞர், டாக்டர் கலைஞர் அவர்கள். சாதி, சமயப் பிணக்குகளை அகற்றி, அனைத்துச் சமுதாய மக்களும் நல்லிணக்கமாக ஒன்றுகூடி, சமத்துவ உணர்வுடன் வாழ்கின்ற சூழ்நிலையை உருவாக்கும்வகையில் இந்தியச் சுதந்திரப் பொன்விழாவையொட்டி, 1997 ஆம் ஆண்டில், கழக அரசு உருவாக்கிய புதுமையான, புரட்சிகரமான திட்டம் தான், "பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம்!" ஒவ்வொரு ஆதி திராவிடர் வீட்டின் இருமருங்கிலும் பிற சமுதாயத்தினரின் வீடுகள் அமையுமாறு இத்திட்டத்தில் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. இவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு அடித்தளம் அமைக்கும் முயற்சியாக இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில்தான் "ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்" 15–2–1974 அன்று தொடங்கப்பட்டது.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தா. உதயசூரியன்) தலைமை]

மத்திய அரசில் உணவு அமைச்சராக இருந்த திரு. பாபு ஜகஜீவன்ராம் அவர்கள் 1975 ஆம் ஆண்டு சென்னைக்கு அருகில், செங்கற்பட்டு மாவட்டம், காட்டுப்பாக்கத்தில் ஆதி திராவிட வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் கட்டப்பட்டிருந்த குடியிருப்புகளைத் திறந்து வைத்து உரையாற்றியபோது, "மக்கள் நல அரசை, ஆட்சியை நாம் நடத்துகிறோம் என்றுதான் இந்தியாவில் கூறி வருகிறோம். மக்கள் நல அரசு என்ற வார்த்தைக்கு உண்மையான விசுவாசத்துடன் தமிழக அரசு பணியாற்றி வருவதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். வாடகை எதுவும் இல்லாமல் இலவசமாக இந்த வீடுகளை அரிசனச் சகோதரர்களுக்கு வழங்குவது என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முடிவு செய்திருப்பது அவருடைய சீரிய மனப்பான்மைக்கு ஓர் சிறந்த உதாரணம். இதை மற்ற மாநிலங்களும் பின்பற்ற முயலும் என்று நம்புவோமாக!" என்று பாராட்டியது இன்றைக்கும் பழைய நாளேடுகளில் அப்படியே இருக்கிறது.

1996–1997 கல்வியாண்டு முதலே ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் செயல்படும் உயர்நிலை மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கணினி பாடம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆதி திராவிடர்களைப் போற்றும்விதமாக, மதுரையில் தியாகி கக்கன் அவர்களின் சிலையை, 31–8–1997 அன்று அன்றைய முதல்வர், நம்முடைய அன்புத் தலைவர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள். 1997 ஆம் ஆண்டு மதுரையில் தீண்டாமை ஒழிப்பு மாநாடும், தமிழகமெங்கும் மனிதச் சங்கிலி, சமபந்தி விருந்து போன்றவை நடத்தப்பட்டு, தீண்டாமைக்கு எதிரான விழிப்புணர்வு வளர்க்கப்பட்டது. 1998 ஆம் ஆண்டு கட்டபொம்மனின் தளபதிகளில் ஒருவராக விளங்கிய ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த வீரன் சுந்தரலிங்கம் அவர்களின் வாரிசுகளுக்கு பாஞ்சாலங்குறிச்சிக்கு அருகில், "வீரன் சுந்தரலிங்கம் நகர்" என்ற பெயரில் அழகிய நகரை உருவாக்கி, அதனை 18–4–1998 அன்று அன்புத் தலைவர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

1972 ஆம் ஆண்டில் வியாசர்பாடியில் அம்பேத்கர் பெயரில் புதிய கலைக் கல்லூரி; அதே ஆண்டில் மயிலாப்பூர் Hamilton பாலத்திற்கு டாக்டர் அம்பேத்கர் பெயர்; 1990 ஆம் ஆண்டில் அம்பேத்கர் நூற்றாண்டு விழா; அதனையொட்டி சென்னை

சட்டக் கல்லூரிக்கு அம்பேத்கர் பெயர்; 20–9–1997 அன்று டாக்டர் அம்பேத்கர் பெயரில் சென்னையில் இந்தியாவிலேயே முதல் சட்டப் பல்கலைக்கழகம்; 1997 ஆம் ஆண்டில் அம்பேத்கர் பெயரில் சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் 25 இலட்சம் ரூபாய் முதலீட்டில் கல்வி அறக்கட்டளை; 10–6–2000 அன்று சென்னையில் அம்பேத்கர் மணிமண்டபம்; 1998 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்குப் பாடுபடும் ஒருவருக்கு ஆண்டுதோறும் அம்பேத்கர் பெயரில் விருது வழங்கும் திட்டம் அறிமுகம் என அனைத்தும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஆதி திராவிடர்களைப் பெருமைப்படுத்தத் தோன்றிய முற்போக்குச் சிந்தனைகளே என்பதை இந்த நேரத்தில் இப்பேரவையில் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

> "விவேகமெனும் வெள்ளி முளைத்து,
> சாதி மதப் பித்து எனும் சனி தொலைந்தால்தான்
> சமத்துவம் எனும் ஞாயிறு பிறக்கும்"

என்ற தலைவர் கலைஞரின் சொற்றொடர் இந்த உண்மையை அப்படியே ஒரு காலக் கண்ணாடியாகக் காட்டுகிறது என்றால், அது உண்மையிலும் உண்மை என்பதாகத்தான் நாம் பொருள் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தா. உதயசூரியன்): மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். 11 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. க. கணபதி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோரால் தொடங்கப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்திற்கு (TANSIM) 30 கோடி ரூபாய் நிதியாக வழங்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள்.

அரசு மற்றும் அரசு நிறுவனங்களின் பகுக்கக்கூடிய கொள்முதல்களில் 5 விழுக்காடு தமிழ்நாட்டைச் சார்ந்த ஆதி திராவிட, பழங்குடியின தொழில் முனைவோர் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது.

விளிம்புநிலையில் இருக்கும் இருளர்கள் போன்ற பண்டைய பழங்குடியினருக்கு இந்த ஆண்டு 20.7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 443 வீடுகள் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. வரும் நிதியாண்டில் மேலும் 1,000 புதிய வீடுகள் பண்டைய பழங்குடியினருக்கு 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தரப்படும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1–10

ஆதி திராவிட, பழங்குடியின மாணவர்களுக்கு வழங்கப்படும் உயர் கல்வி உதவித் தொகைக்காக 1,963 கோடி ரூபாயையும், உணவுக் கட்டணத்திற்கு 512 கோடி ரூபாயையும் நம்முடைய அரசு ஒதுக்கீடு செய்திருக்கிறது. தவிர, இம்மதிப்பீடுகளில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு 4,281.76 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்படி தொடர் அறிவிப்புகளால், ஆறாவது விரலாக அலட்சியப்படுத்தப்பட்டு, நம்மோடு வாழ்ந்துவரும் ஆதி திராவிடர்கள் இன்று நடுவிரல் போல தலைதூக்கி நிற்கிறார்கள்.

ஒன்றிய அரசின் Post Matric கல்வி உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளால் பயன்பெற இயலாத ஆதி திராவிடர் மற்றும் கிறிஸ்தவ மதம் மாறிய ஆதி திராவிட மாணாக்கருக்கு உதவிடும் வகையில், சிறப்பு Post Matric கல்வி உதவித் தொகையினை மாநில அரசு வழங்கி வருகிறது. இதற்கான 100 விழுக்காடு நிதியை மாநில அரசே வழங்குகிறது.

வெளிநாடுகளில் உள்ள கல்வி நிறுவனங்களில் முதுகலைப் பட்டம் மற்றும் அதற்கு மேற்பட்ட ஆராய்ச்சிப் படிப்புகளை மேற்கொள்ள விரும்பும் ஆதி திராவிட, கிறிஸ்தவ மதம் மாறிய ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் தகுதித் தேர்வுகளில் தேர்ச்சியுற, மொத்தம் 500 மாணாக்கர்களுக்குச் சிறந்த முறையில் பயிற்சி வழங்கப்படுவதை இந்த நேரத்தில் நாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். முழு நேர முனைவர். . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தா. உதயசூரியன்): கடைசிப் பக்கத்திற்கு வந்துவிடுங்கள்.

திரு. க. கணபதி: பேரன்பு கொண்ட மாற்றுத் தலைவர் அவர்களே, அன்புப் பெருந்தகை, நம்மையெல்லாம் ஆளாக்கிய

அறிஞர் பெருந்தகை, பேரறிஞர் அண்ணா அவர்கள், 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்று நமக்கெல்லாம் சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், எதிர்க்கட்சியினருக்கு 40 நிமிடங்கள் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்கிறார்கள். எங்களுக்கெல்லாம் 5 நிமிடங்கள் சேர்த்துக் கொடுங்கள் என்று மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இதுவரையில் வழங்கப்பட்டு வந்த ஊக்கத் தொகை ஆண்டிற்கு ரூ.50,000/–ல் இருந்து ரூ.1,00,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 1,200–லிருந்து 1,600 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.(மணியடிக்கப்பெற்றது) உரையை முடித்துவிடுகிறேன். மேலும், இக்கல்வி உதவித் தொகையைப் பெறுவதற்கான ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.2.50 இலட்சத்திலிருந்து ரூ.8.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இப்படி எண்ணற்ற திட்டங்களை திராவிட முன்னேற்றக் கழக அரசு அறிவித்திருக்கிறது. என்னுடைய தொகுதியிலுள்ள இரண்டே இரண்டு பிரச்சினைகளை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில் வார்டு எண் 144, பாரதியார் தெருவில் உள்ள ஆண், பெண் என இருபாலர் படிக்கும் அரசு ஆதி திராவிடர் மேல்நிலைப் பள்ளியை ஆண்கள் மட்டும் படிக்கும் பள்ளியாக்க அரசாணை பிறப்பித்து, கூடுதல் வகுப்பறைகள் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, வார்டு எண் 144–ல், MMDA காலனியில் உள்ள இருபாலர் படிக்கும் பள்ளியை பெண்கள் மட்டும் படிக்கும் வகையில் ஆதி திராவிடர் பள்ளியாக உருவாக்கித் தர வேண்டும்.

அதேபோன்று, இந்து ஆதி திராவிடர்களுக்கு SC என்று சாதிச் சான்று வழங்கப்பட்டு வருகின்றது. கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஆதி திராவிடர்களுக்கு BC என்று சாதிச் சான்று வழங்கப்பட்டு வருகின்றது. அதனால் இடையில் மதம் மாறிய இவர்களுக்கு அரசாங்கம் தருகிற சலுகைகள் கிடைப்பதில்லை. ஆகையால், கிறிஸ்தவ ஆதி திராவிடர்களுக்கும் SC சாதிச் சான்றிதழ் கிடைக்க வேண்டும் என்று மதுரவாயல் தொகுதியில் உள்ள ஆதி திராவிடர்கள் மட்டுமல்ல, தமிழகத்திலே இருக்கிற அனைவருமே

கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதனை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். உங்கள் தொகுதிக் கோரிக்கைகளை தாருங்கள். நீங்கள் படித்ததாகப் பதிவு செய்துகொள்ளப்படும்.

திரு. க. கணபதி: உரையை முடித்து விடுகிறேன். ஆட்சிக் கட்டிலேறி நாளைக்கு ஓராண்டை எட்டுகிற மாண்புமிகு முதலமைச்சரின் இந்த நல்லாட்சியாம் திராவிட மாடல் ஆட்சியை தமிழக மக்கள் மட்டுமல்ல, அனைத்துத் தரப்பினரும் மனதாரப் பாராட்டுகிறார்கள். திக்கற்றவர்களுக்கும், வாழ்வற்றவர்களுக்கும், வாழ்வும், வசந்தமும் தருகிற இந்த ஆட்சியில்தான் காலடிக்குக் கீழே காணாமல் போன காலங்களைக் கீழடியிலே கண்டுபிடித்துத் தந்திருக்கிறார்கள். முதலீடுகளை ஈர்ப்பதில், இந்தியாவிலேயே குஜராத்தை பின்னால் தள்ளி, தமிழ்நாட்டை முன்னால் கொண்டுவந்த இந்த ஆட்சியைத்தான் இன்று எல்லோரும் உற்று நோக்கிப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். 'பச்சையம்' இழந்த தமிழகத்திற்கும் நித்தம் நித்தம் ஒளிச்சேர்க்கை செய்கிற இந்த ஆட்சி 'இன்னும் நூறாண்டு தொடராதா' என்று மக்கள் ஏங்கும் அளவிற்கு இது பீடு நடைபோடுகிறது என்பதைப் பத்திரிகைகளும், ஊடகங்களும்கூட இன்று பறைசாற்றிக்கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

கல்விக்கோர் கம்பன் போலும்! கவிதைக்கோர் பரணர் போலும்! சொல்லுக்கோர் கீரன் போலும்! முத்துக்கோர் கடலே போலும்! முல்லைக்கோர் காடு போலும்! வில்லுக்கோர் ஓரி போலும் விளங்குகிறது மாண்புமிகு முதலமைச்சரின் இந்த ஆட்சி. ஆங்கிலத்திலே "We have been naught; we shall be all" என்பதைத் தமிழிலே மொழி பெயர்த்தோமானால், 'ஏதும் அற்ற நாம்–எல்லாம் பெறுவோம்' என்பதாக வரும். அதுமாதிரியாக இங்குள்ள ஆதி திராவிடர்கள் 'இந்த ஆட்சியில் நாம் எல்லாம் பெறுவோம்!' என்ற நம்பிக்கையிலே இருக்கிறார்கள். அந்தப் பூஞ்சோலைக்குள் உலவுகிற அந்தத் தென்றலை அனுபவிக்கிற வாய்ப்பை, நம்பிக்கையை, ஒளிச்சுடரை தங்கள் வாழ்விலே அவர்கள் நிச்சயம் காண்பார்கள். அதுவும், இந்த ஆட்சியிலே காண்பார்கள். ஆம், நமது தமிழகம் இன்னும் சேமமுற வேண்டுமெனில், தெருவெல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையை நாம் முழங்கச் செய்வோம் என்று சொல்லி, நல்ல வாய்ப்பிற்கு நன்றி பாராட்டி, அமர்வதற்கு முன்னால்,

என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளை இங்கே படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிய வைத்து, நிறைவேற்றித் தர வேண்டுமென்று, அன்போடு கேட்டுக்கொண்டு, நல்ல வாய்ப்பிற்கு நன்றி பாராட்டி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில், ஆதி திராவிட மாணவ, மாணவியர் தங்கிப் படிக்கின்ற விடுதி ஒன்று அமைத்துத் தர வேண்டுகிறேன்.

அயப்பாக்கம் ஊராட்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான மயான பூமிக்கு ஒதுக்கப்பட்ட இடம் தற்போது பயன்பாட்டில் உள்ளது. அதில் மின் தகன மேடை அமைக்க ஊரக உள்ளாட்சித் துறைமூலம் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது, எனவே, அந்த இடத்தை ஊராட்சிவசமே ஒப்படைக்க தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அயப்பாக்கம் ஊராட்சி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய, காவல் நிலையம் கட்டப்பட்டு 7 ஆண்டுகளாகத் திறக்கப்படாமல் உள்ளது. அந்தக் காவல் நிலையத்தினை பயன்பாட்டிற்குக் கொண்டுவர உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை போரூர் முதல் கோடம்பாக்கம் வரை ஆற்காடு சாலையில் மெட்ரோ இரயில் பணிகள் நடைபெறுவதால் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க, ஆற்காடு சாலையை அகலப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரவாயல் தொகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் வானகரம், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மண்டல அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்றும், உதவி ஆணையர் நியமனம் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரவாயல் தொகுதி, வார்டு எண் 146, ஆலப்பாக்கம் ஏரிக்கரைக்கு அருகாமையில் சலவைக் கூடம் ஒன்றை உரிய வசதிகளுடன் கட்டித்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 11, வார்டு எண் 153, போரூர், வன்னியர் தெரு அருகாமையில் உள்ள சிதிலமடைந்த பழைய நூலகக் கட்டடத்தை இடித்துவிட்டு, மூன்று அடுக்குகள்கொண்ட புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரவாயல் தொகுதி, வார்டு எண் 151, 152 மற்றும் 153 ஆகிய இடங்களில் மழைக்காலம் தொடங்குவதற்கு முன்னால், மழைநீர் வடிகால்வாய் கட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரவாயல் தொகுதி, வளசரவாக்கம், ராமாபுரம், போரூர், மதுரவாயல், நெற்குன்றம் ஆகிய பகுதிகளில் கே.கே. நகர் விரிவாக்கத் திட்டம் கொண்டுவரப்பட்டது. அதற்குப் பின் வந்த அரசு, நில உரிமையாளர்களுக்கு சரியான முறையில் இழப்பீடு வழங்காததாலும், திட்டத்தினைச் செயல்படுத்த காலதாமதம் ஏற்பட்டதாலும், இதனை எதிர்த்து நில உரிமையாளர்கள் நீதிமன்றம் சென்று தடையாணை பெற்றனர். பின்னர், வீட்டுமனைகளாகப் பிரிக்கப்பட்டு, விற்கப்பட்ட நிலங்களை வாங்கிய மக்களில் 95% மனைகளுக்கு சாலை வசதி, மின் வசதி, தெரு விளக்கு வசதி, குடிநீர் மற்றும் கழிவுநீர் வசதி செய்யப்பட்டது. மீதமுள்ள 5% மனைகளுக்கும் வீட்டு வசதி வாரியத்தின் தடையில்லா சான்று வேண்டும் என்று கட்டாயப்படுத்தாமல், வீடு கட்ட திட்ட அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள்.

***திரு. மா. சின்னதுரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–15

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை கல்வி மற்றும் சமூக பொருளாதார நிலைகளில் உயர்வடையச் செய்து, சமத்துவ சமுதாயத்தினை உருவாக்கிட நல்ல பல திட்டங்களை அறிவிப்பு செய்துள்ள மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் வசிக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சட்டபூர்வமான உரிமைகளைப் பாதுகாக்கவும், முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையம் தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இது பல்வேறு பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காண உதவிடும்.

மாநில ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையத்தில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அளித்த கோரிக்கைகளில், 'தேசிய ஆணையத்தில் நிலுவையில் உள்ள கோரிக்கைகளில் நாங்கள் தலையிட முடியாது' என்று மாநில ஆணையம் தெரிவிக்கிறது. தேசிய ஆணையத்தின் முடிவு இறுதியானது எனத் தெரிவிக்கிறார்கள். மாநில சட்டத்தில் இது சம்பந்தமான பிரிவுகளில் திருத்தம் கொண்டு வர வேண்டுமென்று நான் கோருகிறேன்.

தேசிய ஆணையம் தலையிட்டால், மாநில ஆணையங்கள் தலையிடக் கூடாதென்று தேசிய ஆணையத்தில் குறிப்பிடப்படவில்லை. மாநில அரசின் ஆணையத்திற்கு இந்தச் சட்ட ஆலோசனைகளை வழங்கி, திருப்பி அனுப்பி வைத்த வழக்குகளை மீண்டும் விசாரிக்க வேண்டும். தேசிய ஆணையம் கள ஆய்வு செய்யும்போது, மாநில ஆணையமும் விசாரணை மேற்கொள்வதற்குத் தகுந்த சட்டங்களைத் திருத்தம் செய்ய வேண்டும்.மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் நடத்தப்படாமல் காலம் கடந்தது. இதனைத் திருத்தி அமைத்து, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களைப் பங்கேற்கச் செய்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் முறையாகக் கூட்டம் நடத்தப்பட்டது. இது SC/ST மக்களின் வாழ்வில் ஒரு புதிய விடியலை ஏற்படுத்தியிருக்கிறது.

ஒரு சமூகம் முன்னேற வேண்டுமென்று சொன்னால், தரமான, வளமான சமூக வளர்ச்சியை ஏற்படுத்திட நிலம், வேலை, உணவுத் தேவைகளை ஆய்வுக்கு உட்படுத்தி, புதிய திட்டங்கள் தீட்டப்பட வேண்டுமென்று நான் கோருகிறேன்.

"இருட்டறையில் உள்ளதடா உலகம், சாதி
இருக்கின்றதென்பானும் இருக்கின் றானே"

என்ற பாரதிதாசனின் கூற்றைக் கவனத்தில்கொண்டு, இறுதிப் பயணத்திலும் பிரிவினை இருக்கக்கூடாது என சமத்துவ,

சமூகம் காண முன் மாதிரியாக விளங்கும் சிற்றூர்களுக்கு, ஊக்கத் தொகையாக ரூ.10 இலட்சம் அறிவிப்பு செய்யப்பட்டது. ஆனால், இதுவரையில் 10 மாவட்டங்களுக்கு மட்டும்தான் அது வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், எத்தகைய நிலைமை தமிழகத்தில் நீடிக்கிறது என்பதை நாம் பார்க்க முடியும். நாம் இன்னும் எவ்வளவு தூரம் பயணிக்க வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். கடந்த 10 ஆண்டுகளில் சிறப்பு உட்கூறு திட்ட நிதியாக ரூ.1,12,092.88 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர்களுக்கு என்று ஒதுக்கப்படும் நிதியின் பெரும் பகுதி, பொதுத் திட்டங்களுக்கு பயன்படுத்தப்படுகிறது. இது ஆதி திராவிட மக்களுக்குக் கவலை அளிக்கிறது. ஆகவே, காலங்காலமாக ஒதுக்கப்பட்டுக் கிடக்கிற இந்தச் சமூகத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வாறு செலவழிக்கப்பட்டுள்ளது என்பது குறித்து 'வெள்ளை அறிக்கையினை' அரசு வெளியிட்டு, தமிழக மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் கோருகிறேன்.

மக்கள் தொகை விகிதாச்சாரத்தில் SC/ST மேம்பாட்டிற்கான நிதி ஒதுக்கீட்டிற்கு தமிழகத்தில் ஒரு தனிச் சட்டம் இயற்ற வேண்டும். அருகில் இருக்கக்கூடிய அனைத்து மாநிலங்களிலும் அதற்கான தனிச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தமிழகத்திலும் அவ்வாறு நிறைவேற்றப்பட வேண்டும். மாநில நிதித் துறையின் கட்டுப்பாட்டிலிருந்து இதை விடுவிக்க வேண்டும். சுயமாக முடிவெடுக்கும் ஒரு துறையாக இது செயல்பட வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

உயர் கல்வி பயிலும் SC/ST மாணவர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் 60:40 என்ற அடிப்படையில் ஒன்றிய அரசும், மாநில அரசும் கல்விக் கட்டணத்தை வழங்கி வருகிறது. ஆனால், 2021–2022–ல் கட்டணம் மற்றும் பராமரிப்பு உதவித் தொகை இரண்டையுமே மாணவர்களது வங்கிக் கணக்கில் செலுத்துவது என்று முடிவு செய்து, மாவட்ட வாரியாக Online மூலம் பெறப்பட்டு, ஆதி திராவிடர் நல இயக்குநரகத்துக்கு அனுப்பப்பட்டுள்ள நிலையில், அந்த நிதியை விடுவிப்பதில் நிறைய சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. பெருவாரியான ஆதி திராவிட மாணவர்கள், இறுதித் தேர்வுகளை நோக்கியுள்ள சூழ்நிலையில், ஒரு மாத காலத்திற்கு மேலாகியும், கல்வி உதவித் தொகை பெறப்படாத

சூழ்நிலையில் அச்சமடைந்துள்ளனர். மாணவர்களிடையே தேவையற்ற பதற்றத்தையும், இடையூறுகளையும் தவிர்க்க கல்வி உதவித் தொகையை விரைந்து விடுவிக்க வேண்டுமெனக் கோருகிறேன்.

மொத்த நிதி ஒதுக்கீட்டில், புதிய திட்டங்களைத் தொடங்கிட SC, ST–யினருக்கு ஒவ்வொரு துறையும் 20 சதவிகித நிதியை ஒதுக்கீடு செய்வதை உறுதிபடுத்திட வேண்டும்.

தொழில்முனைவோர்களை ஊக்குவிக்க 4 சதவிகிதக் கொள்முதல் கொள்கையை அமல்படுத்த வேண்டும். இதற்கு தெளிவான திட்டத்தை உருவாக்க வேண்டும்.

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், ஈங்கூர் கிராமத்தில் ஆதி திராவிட மக்களுக்காக தாட்கோ திட்டத்தின்மூலம் 1996–ல் கட்டி முடிக்கப்பட்ட 200 பின்னலாடை தொழிற்கூடங்கள், 26 ஆண்டுகளாகியும் இதுவரை பயனாளிகளுக்கு வழங்கப்படவில்லை. தற்போது அந்தத் தொழிற்கூடங்கள் பழுதடைந்துள்ளன. எனவே, அவற்றைச் சீர்செய்து, ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–20

அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் உள்ள S.C./S.T. பின்னடைவு காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும். ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், விடுதிகள் அனைத்திலும் கழிப்பறை வசதி, தண்ணீர் வசதி, நூலகம், ஆய்வகங்கள் உட்பட உட்கட்டமைப்பைச் சீரமைக்க வேண்டும். துப்புரவுப் பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியில் உள்ள விடுதி பழுதடைந்து கீழே விழும் நிலையில் உள்ளது. இதனை உடனடியாகச் சீர் செய்ய வேண்டும். விடுதி மாணவர்களுக்கு ரேஷன் அரிசி உணவுதான் வழங்கப்படுகிறது. அதனை மாற்றம் செய்ய வேண்டும். தரமான உணவு வழங்க வேண்டும். உணவுக் கட்டணத்தை உயர்த்த வேண்டும்.

ஆதி திராவிட மாணவர்களுக்கு அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் துணை மருத்துவப் படிப்புகளான பாராமெடிக்கல் படிப்புகளைப் பயில்வதற்கு பத்து ஆண்டுகளுக்கு முன் தாட்கோமூலம் சிறப்புப் பயிற்சி அளித்து, அரசே

முழுக் கட்டணத்தைச் செலுத்தி வந்தது. இது தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. எனவே, இது தொடர வேண்டும். அதுபோல் Pilot, Catering Training போன்றவை தொடர்ந்து அளிக்கப்பட வேண்டும்.

பண்டிதர் அயோத்திதாசர், தந்தை பெரியார் மையங்களில் சமூக மாற்றம் குறித்த இடைநிலை ஆய்வுக்கான இருக்கைகளை ஏற்படுத்த வேண்டும். சம நீதி, சமூக நீதி குறித்த தெளிவுடன் அரசின் நலத் திட்டங்கள், தேவையறிந்து ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். ஏழையெளிய அரசுக் கல்லூரி மாணவர்களுக்கு மதிய உணவுத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும். வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் சேர்க்கைபெறும் S.C./ S.T. மாணவர்களுக்கான முனைவர் பட்ட உதவித் திட்டத்தை புதுப்பிக்க வேண்டும்.

2021–ல், மேதகு ஆளுநர் உரையில், பழங்குடியின மக்களுக்கு இனச் சான்றிதழ் வழங்கும் செயல்முறை எளிமைப்படுத்தப்படும், விரைவுபடுத்தப்படும், காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்ற அறிவிப்புகள் இருந்தன. அவற்றை நிறைவேற்ற அரசு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். பழங்குடியின மக்களின் வயிற்றில் பால் வார்த்ததுபோல் அத்தகைய அறிவிப்புகள் இருந்தாலும், இன்றைக்கு வரைக்கும் அதிகாரிகளால் அவை நிறைவேற்றப்படவில்லை. அதற்கு விரைந்து தீர்வுகாண வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இன்றையதினம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர், தோழர் G. ராமகிருஷ்ணன் அவர்கள் எழுதிய கட்டுரை 'தமிழ் இந்து' பத்திரிகையில் வெளிவந்துள்ளது. இதில் இனச் சான்றிதழ் வழங்குவதில் அதிகாரிகளின் கவனக்குறைவு எந்த அளவுக்கு இருக்கின்றது என்பதைத் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். அதனைக் கவனத்தில்கொண்டு, குறைகளைக் களைந்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோடு மலையாளி மற்றும் குறவன், குரும்பன்ஸ், வேட்டைக்காரன், புலையன், நரிக்குறவர் ஆகியோருக்கான இனச் சான்றிதழ் வழங்குவதில் காலம் கடத்துவதால் அப்பகுதி மக்கள் துயரப்படுகிறார்கள். மத்திய அரசின் வழிகாட்டுதலைப்பெற்று உடனடியாக இனச் சான்றுகள் வழங்க வேண்டும்.

பழங்குடியின மக்களுக்கு, சிறு வனப் பொருட்களைச் சேகரித்து சந்தைப்படுத்தலை உறுதிசெய்து, குறைந்தபட்ச ஆதார விலைத்

திட்டத்தை சிறந்த முறையில் மேம்படுத்த வேண்டும். பழங்குடியின மக்களைப் பாதுகாக்க 2006 வன உரிமைச் சட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

வனத்தில் ஆடு மாடு மேய்ச்சலுக்கு எதிராக உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்து மேய்ச்சல் உரிமையைப் பாதுகாத்துத் தர மாநில அரசு முயற்சிக்க வேண்டும் என்று கோருகிறேன். 9 துறைகளில் ஆதி திராவிட மக்களுக்காக எந்தவொரு திட்டமும் தீட்டப்படவில்லை. குறிப்பாக கல்வி, விளையாட்டு, ஊரக வளர்ச்சி, போக்குவரத்து, குடிநீர், துப்புரவுத் தொழில், கனிமத் தொழில், சமூகப் பணிகள், பொருளாதாரப் பணிகள் உள்ளிட்ட துறைகளில் ஒதுக்கீடுகள் என்பது திட்ட ரீதியில் ஒதுக்கப்படவில்லை என்பதை நான் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தமிழகத்தில் சாதி ஆணவப் படுகொலைகள் அதிகரித்து வருகின்றன. இதனைத் தடுப்பதற்கு ஒரு தனிச் சட்டம் கொண்டு வரவேண்டும் என நான் வலியுறுத்துகிறேன். புதிரைவண்ணார் நல வாரியம், தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியம், பழங்குடியினர் நல வாரியங்களைச் சீர்படுத்தி செயல்படுத்த வேண்டும் என்று கோருகிறேன்.

பல தலைமுறைகளாக கோயில் இடங்களில் குடியிருக்கும் ஏழையெளிய மக்களுக்கு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959, பிரிவு 34–ஐப் பயன்படுத்தி பட்டா வழங்கிட வேண்டும் என்று கோருகிறேன். கோயில் இடங்களைப் பயன்படுத்தும் வாடகைதாரர்களைப் பாதுகாத்திட வேண்டும். குறைந்தது 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை வாடகை நிர்ணயம் செய்திட வேண்டும். கந்தர்வக்கோட்டையில் தொழிற்பயிற்சி நிலையம் அமைத்திட வேண்டும். இலவசமாக வீட்டுமனைப் பட்டா வழங்கிட வேண்டும். வீடு கட்டுவதற்கு குறைந்தபட்சம் ரூ.6 இலட்சம் நிதியுதவி வழங்கிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், மார்ட்டின் லூதர்கிங், ஆர்ம்ஸ்ட்ராங், சுகி, மாமேதை காரல்மார்க்ஸ் போன்ற தலைவர்களின் வரலாற்றையும், பாலஸ்தீன விடுதலை இயக்கம், அயர்லாந்து போராட்டம், சாசன இயக்கம், அந்தமான் சிறை என பலதரப்பட்ட தலைப்புகளில் 98 புத்தகங்களை மறைந்த எழுத்தாளர், திரு. என். ராமகிருஷ்ணன் அவர்கள்

எழுதியுள்ளார்கள். அந்தப் படைப்புகளை நாட்டுடைமையாக்க வேண்டும். மாவட்டந்தோறும் பழங்குடியின மக்கள் வாழும் பகுதியில் பல்நோக்கு சமுதாயக் கூடம் அமைத்திட வேண்டும்.

பிற்பகல் 1–25

நீண்ட காலம் நிலம் இல்லாத ஏழைகளுக்கு நிலம் கிடைக்கச் செய்திட நிதி ஒதுக்கீடு செய்து, நிலம் வழங்கிட வேண்டும். தமிழகம் முழுவதும் சுடுகாடு, இடுகாடு இல்லாத பகுதிகளைக் கண்டறிந்து சாலை வசதிகளுடன் கட்டமைப்பு வசதிகளை செய்துதர வேண்டும்.

SC/ST இனத்தவர்கள் தொழில் தொடங்கிட 50 சதவிகிதம் மானியத்துடன் ஒரு கோடி ரூபாய் நிதி வழங்கிட கவனம் செலுத்த வேண்டும். இலவச தொழிற்கல்வி போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையங்கள் அமைத்திட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் இருக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இருக்கையிலிருந்து கடைசி வரிசையில்தான் இருக்கிறது. அநேகமாக தமிழகத்தில் இணையத்தில் அமைச்சர்களின் குறிப்புகளைப் பார்க்கின்றபோது, அதன் தலைப்புகளையெல்லாம் பார்க்கின்றபோது, ஆதி திராவிடர் நலத் துறை குறிப்புதான், தலைப்பில் முதலிடத்தில் இருக்கிறது. ஆனால், அமைச்சர்களின் வரிசையில் கடைசியில் வைத்திருக்கிறார்கள். முதல் வரிசையில் கொண்டு வருவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறி, உரையை நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2022–2023 ஆம் ஆண்டிற்கான ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்மீது இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு முதலில் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'பாராட்டிப் போற்றிவந்த பழமை லோகம்
ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார்'

என்று பெரியாரின் 95 ஆண்டு கால வாழ்க்கையை இரண்டே வரிகளில் வடிவமைத்துத் தந்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை நான் இந்த மாமன்றத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சாதி, மதத்தால், பொருளாதார ஏற்றத்தாழ்வால், பாலினப் பாகுபாட்டால், மூடப் பழக்கவழக்கங்களால், ஆண்டான், அடிமை என்ற உணர்வால், அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டிருந்த மனிதர்களையெல்லாம் ஒன்று திரட்டி, 'நீ மனிதன், அதுவும் சாதாரண மனிதன் அல்ல, சுயமரியாதை இருக்கக்கூடிய மனிதன்தான், நீ தமிழன்' என்ற உணர்வை ஊட்டி, எழுச்சி பெற வைத்து, இந்த நாட்டை மாற்றுவதற்காக, மகத்தான பணிகளைச் செய்தவர் நம்முடைய தந்தை பெரியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் இல்லையென்றால், அறிஞர் அண்ணா இல்லை; முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் இல்லை; ஏன், நாம் இல்லை; இந்த இயக்கம் இல்லை. இந்தத் திராவிட இயக்கம் தோன்றாமல் போயிருந்தால், இந்தத் தமிழ்ச் சமூகம் இன்று இத்தகைய நிலைக்கு வந்திருக்குமா என்பதை நாம் உணர்ந்து பார்க்க வேண்டும்.

வங்கக் கடலோரம் உறங்கிக் கொண்டிருக்கிற முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், எத்திசையில் இருக்கிறாரோ அத்திசை நோக்கி வணங்குகிறேன். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எண்ணமாய், செயலாய், சிந்தனையாய், மறுஉருவமாய், நல்லாட்சி செய்து 12 மாத ஆட்சிக் காலத்தில், தவழ்ந்து போகாமலும், ஊர்ந்து போகாமலும், வேகமாக நடந்து சென்று தமிழக மக்களைக் காப்பாற்றியவர் நம்முடைய தமிழகத்தின் முதல்வர் தலைவர் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி)

'உடன்பிறப்பே' என்ற ஒற்றை மந்திரச் சொல்லால் மக்களைக் கட்டிப்போட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அதேபோல்தான் எதிர்காலத்தில் இந்த இயக்கத்தை வழிநடத்த இருப்பவரும், இளைஞர்களின் வழிகாட்டியாக, ஓய்வறியாத உழைப்பாளியாக, ஒற்றைச் செங்கலால் மக்களின் மனங்களை வென்ற இளைஞர் அணியின் செயலாளர் சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு இளையசூரியன் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சாதாரண ஏழைக் குடும்பத்தில் பிறந்த என்னை, கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநராக, ஊராட்சி மன்றத் தலைவராக, ஒன்றியக் குழு உறுப்பினராக, 3 முறை ஒன்றியக் கழகத்தின் செயலாளராக, மாவட்டக் கழகத்தின் துணைச் செயலாளராக மற்றும் 2 முறை சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினராக அமர வைத்து அழகு பார்த்திருக்கும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் வணங்குகிறேன்.

கழகத்தின் பொதுச் செயலாளர், அவை முன்னவர், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் ஐயா மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும், அரசு தலைமைக் கொறடா அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும், எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், எதிர்க்கட்சிக் கொறடா அவர்களையும் வணங்கி, இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதியிலிருந்து 2–வது முறையாக என்னை வெற்றி பெறச் செய்த தொகுதி மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவட்டத்தில் 3 தொகுதிகளும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கோட்டையாக இருந்த நிலையை மாற்றி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டையாக மாற்றியதோடு, நடந்து முடிந்த ஊரக உள்ளாட்சித் தேர்தலில், நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் 100 சதவிகிதம் வெற்றி பெற்றிருக்கிற கழகத்தின் மாவட்டப் பொறுப்பாளர், மாநிலங்களவை உறுப்பினர் திரு. கே.ஆர்.என். ராஜேஷ்குமார் அவர்களையும், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் டாக்டர் மா. மதிவேந்தன் அவர்களையும் வணங்குகிறேன்.

பிற்பகல் 1–30

ஒன்றிய கழகச் செயலாளர் திரு. அசோக்குமார், திரு. பாலசுப்பிரமணியம், திரு. ராமசாமி, திரு. செந்தில்முருகன், திரு. நவலடி, திரு. பழனிவேல் அவர்களையும் வணங்குகிறேன். பேரூர் கழகச் செயலாளர் திரு. தனபாலன், திரு. பழனியாண்டி, திரு. அன்பழகன், திரு. செல்வராஜ் அவர்களையும் வணங்குகிறேன். மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளுடைய

தலைவர்களையும் வணங்குகிறேன். எனது வெற்றிக்காக அயராது உழைத்த எனது மனைவி திருமதி ஜெயமணி, எனது மகன் மாதேஸ்வரன், எனது மாப்பிள்ளை ராஜேந்திரன், பூமலர் மற்றும் என்னுடைய பேரன் ஜீவா ஆகியோருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், முதன்முதலாக இருளர் மற்றும் நரிக்குறவர் இன மக்களைத் தேடி, அவர்களுடைய இல்லங்களுக்கே நேரில் சென்று, அவர்களுடைய குறைகளைக் கேட்டறிந்து, அவர்களுடைய வீட்டிலேயே உணவருந்திய முதல்வர், கழகத் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பழங்குடி மக்களுடைய வளர்ச்சிக்காக, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் விதமாக பழங்குடியினருக்குத் தனி ஆணையத்தை உருவாக்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு என் சார்பாகவும், பழங்குடியின மக்களின் சார்பாகவும் நன்றி கலந்த வணக்கத்தை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டு கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரண நிதியாக தலா ரூ.4,000/- வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

குழந்தை, பாலுக்கு அழுகிறதா, நோயினால் அழுகிறதா அல்லது தாகத்தால் அழுகிறதா என்று அதன் தாய்க்குத்தான் தெரியும். அந்தத் தாயுள்ளத்தோடு, பதவியேற்ற முதல் நாளே, பால் விலையை 3 ரூபாய் குறைத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

> "வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போமென்ற
> விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்"

என்ற பாரதியாரின் கனவை நனவாக்க, நகரப் பேருந்துகளில் பெண்களுக்கு இலவசப் பயணச்சீட்டை வழங்கியவர் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் என்பதை நான் இந்த மாமன்றத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பெண்கள் தன்னம்பிக்கையோடு இந்தச் சமுதாயத்தில் வாழ, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட ரூ.2,000 கோடி கடனைத் தள்ளுபடி செய்தவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் என்பதை நான் இந்த மாமன்றத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் பதவியேற்றபோது, கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவமனைகளில் படுக்கைகள் இல்லை, Ambulance இல்லை, oxygen வசதிகள் இல்லை, ஏன், மயானத்தில்கூட இடமில்லை. ஆனால், அவர் பதவியேற்ற மூன்றே வாரங்களில் தமிழகத்தில் நோயாளிகளுக்கு oxygen வசதி கிடைத்தது. கொரோனா வார்டுக்குள் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் சொன்ன ஒரே முதல்வர், மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதி அவர்கள் என்பதை நான் இந்த மாமன்றத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மக்களுக்காக, மக்களால் நடைபெறக்கூடிய ஆட்சியைத்தான் மக்களாட்சி என்பார்கள். கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறுகின்ற இந்த ஆட்சி, மக்கள் நலன் காக்கும் அரசாக இன்னும் 4 ஆண்டு காலங்களில், சொன்னதை மட்டுமல்ல, சொல்லாத திட்டங்களையும் செய்து முடிக்கும் அரசாக இருக்கும் என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

'இல்லம் தேடிக் கல்வி' திட்டம், மாணவர்கள் மற்றும் இளைஞர்களுடைய தனித் திறமையை மேம்படுத்த 'நான் முதல்வன்' என்ற திட்டம், 'மக்களைத் தேடி மருத்துவம்', இன்னுயிர் காப்போம்–நம்மைக் காக்கும் 48' திட்டம் என பல முன்னோடித் திட்டங்களைத் தந்து, தமிழகத்தை நாட்டிலேயே முன்னோடி மாநிலமாக முன்னிலைப்படுத்தியவர் நம்முடைய கழகத் தலைவர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் என்பதை நான் இந்த மாமன்றத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதியில் பழங்குடியின மலைவாழ் மக்கள் அதிக அளவில் வசித்து வருகிறார்கள். அவர்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தும்விதமாக மற்றும் கலாச்சாரத்தைப் பாதுகாக்கும் விதமாக கொல்லிமலைப் பகுதியை மையமாகக் கொண்டு பழங்குடியினர் துணை ஆராய்ச்சி மையம் ஒன்றை அமைக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பழங்குடியினர் பட்டியலில் பிற இனத்தவரைச் சேர்ப்பது தவிர்க்கப்பட வேண்டும். வன உரிமைச் சட்டம், 2006–ன்படி பழங்குடியின மக்கள் வாழ்கின்ற அனைத்து மலைகளிலும், மலை சார்ந்த பகுதிகளிலும் வன உரிமைக் குழுக்களை வெளிப்படைத் தன்மையோடு அனைத்து கிராமங்களிலும் ஏற்படுத்த வேண்டும்.

நாடு சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து இந்நாள் வரை தமிழகத்திலிருந்து நாடாளுமன்றத்திற்கு பழங்குடியினர் பட்டியலினத்தைச் சார்ந்தவர்கள் ஒருவர்கூட செல்லவில்லை. ஆகையால், இந்திய ஒன்றியத்திலுள்ள மற்ற மாநிலங்களைப்போல் தமிழகத்திலும் பழங்குடியினர்களுக்கு ஒருவருக்கு நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டுவருகிறேன்.

பழங்குடியின மக்களின் நிலங்களை பழங்குடியினரல்லாதோர் பெயரில் பட்டா மாற்றம், பத்திரப் பதிவு செய்து வருவதைத் தடை செய்ய அரசு ஏற்கெனவே அமல்படுத்தியுள்ள, வருவாய்த் துறை (நிலை) ஆணை எண் 1540 அரசாணையை அனைத்து சார்–பதிவாளர் அலுவலகங்களிலும் உள்ள அறிவிப்புப் பலகையில் வைக்கும் நடைமுறையை அமல்படுத்திட வேண்டும்.

பழங்குடியின மக்கள், தங்களுடைய வாழ்வாதாரத்திற்காக அண்டை மாநிலங்களில் இடம் பெயர்ந்திருக்கிறார்கள். இதனால், அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்த பள்ளி செல்லும் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்படுகிறது. எனவே, இந்த மக்களின் வாழ்வாதாரத்தைக் கருதி, TAHDCO மூலம் வழங்கப்படும் கடனுதவி அல்லாமல், தனி நபர் கடனுதவி வழங்க, பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தைக் கண்காணிக்க குழு ஏற்படுத்தித் தர வேண்டுமாய் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–35

மலைப் பகுதியில் வாழ்கின்ற மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தும்விதமாக போட்டித் தேர்விற்கான பயிற்சி மையம் ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பழங்குடி மக்களுக்கு வேலைவாய்ப்பிலும், கல்வியிலும் ஒரு சதவிகித இட ஒதுக்கீட்டை முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான் வழங்கினார்கள். ஆனால், வேலைவாய்ப்பில் 50–க்கும் குறைவான பணியாளர்களை நியமனம் செய்யும்போது பழங்குடி மக்களுக்கு அப்பணிகளில் வாய்ப்பு கிடைக்காமல் போகிறது. அதனால் 50–க்கும் குறைவான காலிப் பணியிடங்களில் வேலைவாய்ப்பு வழங்கும்போது அந்த இட ஒதுக்கீட்டில் பழங்குடியின மக்களுக்கும் வாய்ப்பளித்தால் மிகவும் பயனடைவார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே பதிவு செய்ய நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

வனங்களைச் சார்ந்துள்ள அனைத்து கிராமங்களுக்கும் உடனடியாக சமூக, வன, வள உரிமைகளை வழங்க வேண்டும். 38 மாவட்டங்களிலும் 38 மானுடவியல் வல்லுநர்களை நியமிக்க ஆவன செய்ய வேண்டும். மலைப் பகுதியில் தரிசு நிலங்களில் பயிர் செய்யும் பழங்குடி மக்களுக்கு அரசாணை எண் 1168–ல் விலக்கு அளித்து பட்டா வழங்க வேண்டும்.

பழங்குடி மக்களுக்கு அனைத்துத் துறைகளிலும் இட ஒதுக்கீடு முறையாகப் பின்பற்றப்படாமல் உள்ளது. பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளை இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 5–வது அட்டவணையில் சேர்க்க வேண்டும். வன உரிமைச் சட்டம் 2006–ன்படி மேய்ச்சல் நில உரிமை பழங்குடியின மக்களுக்கு உள்ளது. எனவே, வனங்களில் ஆடு, மாடு மேய்க்கக்கூடாது என்ற சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின்மீது தமிழக அரசு மேல் முறையீடுசெய்து, பழங்குடி மக்களுக்கு மேய்ச்சல் உரிமைகளைப் பெற்றுத்தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பழங்குடியினர் நலனுக்காக தனித் துறையைச் செயல்படுத்தி, தனி முதன்மைச் செயலாளருடன் நடைமுறைப்படுத்த ஆவன செய்யுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள 23 LAMPS கூட்டுறவுச் சங்கங்களைப் பழங்குடியினர் நலத் துறையின் கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டும். இதன்மூலம் பழங்குடி மக்களுக்கான நலத் திட்டங்களின் மானியத்தொகை அச்சங்கங்களுக்கு வழங்குவதில் ஏற்படுகின்ற காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டும்.

தமிழகம் முழுவதும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில், 5 வருடங்களுக்கும் மேலாக 230–க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களில் இடைநிலை ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.8,000/–, பட்டதாரி ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.9,000/–, முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.10,000/– என்ற நிலையில் குறைவான ஊதியம் அளிக்கப்படுகிறது. இவர்கள், பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய பழங்குடியினத்தைச் சார்ந்த பட்டதாரி ஆசிரியர்களாவார்கள். இவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு, இவர்களைப் பணி நிரந்தரம் செய்தால், மிகவும் பயனுள்ளதாக இருக்கும், மாணவர்களின் கல்வித்தரமும் மேலும் உயரும் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பழங்குடியினர் வாழும் மலைப் பகுதிகளில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாதந்தோறும் ஆய்வுக்குச் செல்ல வேண்டும். அப்படி ஆய்வுக்குச் செல்கிறபோது, மாவட்ட வன அலுவலர் அவர்களையும் ஆய்வுக்கு அழைத்துச் செல்ல வேண்டும். இதனால் பழங்குடி மக்களுடைய வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் மற்றும் திட்டங்கள் வகுக்கவும் வழிவகை செய்யப்படும். பழங்குடியினர் நலப் பள்ளிகளில் ஆசிரியர்களின் வருகைப் பதிவேடு உறுதி செய்யப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் 10 இலட்சத்திற்கும்மேல் பழங்குடி மக்கள், மலைவாழ் மக்கள் தரைப் பகுதிகளிலே வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள், தங்கள் மலைப் பகுதிகளில் வாழ்வாதாரத்திற்காக வனம், தரிசு மற்றும் விவசாய பட்டா நிலத்தைச் சார்ந்து வாழ்கின்றார்கள். இவர்களில் வனம் சார்ந்து வாழ்வோர் கடுமையான போராட்டத்திற்குப் பின் வன உரிமைச் சட்டம், 2006–ஐப் பெற்றனர். ஆனால், சட்டம் வந்து 15 ஆண்டுகள் முடிந்தும், தமிழகத்தில் வன நிலம் கேட்டு 33,000 மனுக்கள் கொடுக்கப்பட்டதில், இதுவரை வெறும் 8,000 மனுக்களுக்கு மட்டுமே வன நிலத்தைக் கொடுக்க பட்டா உள்ளது, மீதி 25,000 மனுக்கள் நிலுவையில் உள்ளன. அதிலும், சட்டப்படி பழங்குடி

மக்கள் பயிர் செய்யும் நிலங்களில், 10 ஏக்கர் வரை பட்டா கொடுக்கலாம் என்று இருந்தும், பெரும்பாலான இடங்களில் ஒரு சென்ட், இரண்டு சென்ட் நிலங்கள் மட்டும் வழங்கப்பட்டு பழங்குடி மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். ஆனால், வனப் பகுதியில் வாழும் மக்களுக்கு 70 விழுக்காடு வருமானம், சிறு வன மகசூல்மூலம் வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், பேசியது போதுமே! உரையை முடியுங்கள்.

திரு. கே. பொன்னுசாமி: தேசிய பழங்குடியினர் கொள்கை சொல்கிறது. ஆனால், சிறு வன மகசூலை எடுக்க. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. கே. பொன்னுசாமி: வன நில உரிமை பெரும்பாலும் வழங்கப்படவில்லை. வன உரிமைச் சட்டம், 2006–ல் வன கிராமங்களை வருவாய்க் கிராமங்களாக மாற்ற அனுமதி அளிக்கப்படுகிறது. ஆனால், தமிழகத்தில் இதுவரை ஒரு வனக் கிராமம்கூட வருவாய்க் கிராமமாக மாற்றப்படவில்லை. இதனால் 25,000 பழங்குடி குடும்பத்தினர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மேலும், மலைப் பகுதிகளிலே 50,000–க்கும் மேற்பட்ட பழங்குடி மக்கள் அரசு தரிசு நிலங்களில் பயிர் செய்து வருகின்றார்கள். அவர்கள் பட்டா பெறுவதை வருவாய்த் துறையின் அரசாணை (நிலை) எண் 1168, நாள் 25–7–1989 தடுக்கிறது. இந்த அரசாணையை தமிழக அரசு திரும்பப்பெற வேண்டும்.

பிற்பகல் 1–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லுங்கள்.

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சட்டமன்றத் தொகுதி சம்பந்தப்பட்ட கோரிக்கைகளைச் சொல்லிவிடுகிறேன். கொல்லிமலைப் பகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைக்க மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதியில் ஐந்து பேரூராட்சிகள் உள்ளன. அப்பேரூராட்சிப் பகுதிகளிலே ஆதி திராவிட மக்கள் அதிகளவில் வசித்து வருகின்றனர். அவர்களுடைய சமுதாய

நிகழ்வுகளை நடத்துவதற்கு போதிய இடவசதி இல்லாத காரணத்தினால் மிகவும் சிரமப்படுகின்றனர். பேரூராட்சிப் பகுதிகளிலே அரசால் ஒதுக்கப்பட்ட இடம் உள்ளது. ஆகவே, அந்த இடத்தில் சமுதாய நிகழ்வுகளை நடத்துவதற்கு ஆதி திராவிட மக்கள் பயன்பெறும் வகையில் புதியதாக சமுதாய நலக் கூடம் கட்டித் தர மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தொகுதிக் கோரிக்கைகளையெல்லாம் என்னிடம் தாருங்கள். நீங்கள் அவற்றை இங்கே படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளலாம். (குறுக்கீடு) பேசுங்கள்.

திரு. கே. பொன்னுசாமி: சேந்தமங்கலம் பகுதியில் மாம்பழச் சாறு தயாரிக்கும் மாம்பழக் கூழ் தொழிற்சாலை அமைக்க மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதியில் வீட்டு வசதி வாரியம் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்பு கட்ட மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலைப் பகுதியில் மின் கம்பிகளை பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றிட மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எருமப்பட்டி ஒன்றியம், தலைமலை பெருமாள் கோயிலை ஆன்மீக சுற்றுலாத் தலமாக அறிவித்து, இருவழி கிரிவலச் சாலை அமைக்க மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

காரவள்ளி வனப் பகுதி நுழைவாயிலில் பூங்கா அமைக்க மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். காரவள்ளி வனக் காப்புக் காட்டில் உள்ள மூங்கில் மரங்களை அகற்றிவிட்டு, நீர்வளமுள்ள மரங்களை நட மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலைப் பகுதியில் மிளகு, காபி, மரவள்ளி போன்ற விளைபொருட்களுக்கான கொள்முதல் நிலையம் அமைக்க மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். சேந்தமங்கலம் ஒன்றியத்தில் உழவர் சந்தை அமைக்க மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலைப் பகுதியில் அரசுப் போக்குவரத்து வாகனங்களைப் பராமரிக்கும்வகையில், பணிமனை அமைக்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையாற்றியது போதும். அவற்றையெல்லாம் கொடுங்கள்; நான் அவைக் குறிப்பில் பதிவு செய்துவிடுகிறேன்.

திரு. கே. பொன்னுசாமி: கொல்லிமலைப் பகுதியில் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக பெட்ரோல், டீசல் பங்க் அமைக்க மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையாற்றியது போதும். நன்றி சொல்லுங்கள்.

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேந்தமங்கலம் தொகுதியினுடைய கோரிக்கைகளை நான் இந்த மாமன்றத்திலே படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பிலே பதிவு செய்யுமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

கொல்லிமலைப் பகுதியில் சித்தா மூலிகை ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டும். எருமப்பட்டி ஒன்றியத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்த வேண்டும். கொல்லிமலைப் பகுதியில் உடற்கூறு ஆய்வகம் அமைக்க வேண்டும்.

கொல்லிமலைப் பகுதியில் நெடுஞ்சாலைத் துறையின் புதிய பிரிவு அலுவலகம் அமைக்க வேண்டும்.

கொல்லிமலையில் இரண்டு காவல் நிலையங்கள் உள்ளன. அவற்றில் செம்மேடு காவல் நிலையத்திற்குக் கட்டடம் உள்ளது.

செங்கரையில் உள்ள காவல் நிலையம் தனியார் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இதற்குப் புதிதாக கட்டடம் கட்டித் தர வேண்டும்.

சேந்தமங்கலம் ஒன்றியத்தில் கலைக் கல்லூரி அருகில் அரசுக்குச் சொந்தமான இடம் உள்ளது. அந்த இடத்தில் தோட்டக் கலைத் துறை மூலமாக பழப் பண்ணை அமைக்க வேண்டும்.

சேந்தமங்கலம் அரசு கலைக் கல்லூரிக்கு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பெயரைச் சூட்ட வேண்டும்.

கொல்லிமலை ஒன்றியத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தெம்பளம் லேம்ப் கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும்.

சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள நீதிமன்றத்திற்கு கட்டடம் இல்லாமல் தனியார் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும்.

கொல்லிமலை ஒன்றியத்தில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டடம் இல்லாமல் தனியார் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும்.

கொல்லிமலை ஒன்றியத்தில் 14 ஊராட்சிகள் உள்ளன. இவற்றில், 7 ஊராட்சிகளைச் சார்ந்த மக்கள் நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தில் உள்ள பத்திரப் பதிவு அலுவலகத்திலும், 7 ஊராட்சிகளைச் சார்ந்த மக்கள் சேந்தமங்கலம் ஒன்றியத்தில் உள்ள பத்திரப் பதிவு அலுவலகத்திலும் பத்திரப் பதிவு செய்து வருகிறார்கள். எனவே, மக்களுக்குப் பயனுள்ள வகையில் கொல்லிமலைப் பகுதியிலேயே புதிய பத்திரப் பதிவு அலுவலகம் ஒன்றை அமைத்துத் தர வேண்டும்.

சேந்தமங்கலம் ஒன்றியம், பேளுக்குறிச்சி அரசு மேல்நிலைப் பள்ளியைச் சீரமைத்து கூடுதல் வகுப்பறைகளை கட்டித் தர வேண்டும்.

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மின்விசை பம்புகள் இயக்கும் ஆப்பரேட்டர்களுக்கு உரிய ஊதியம் போதிய அளவில் கிடைக்கப்பெறவில்லை. எனவே, அவர்களுக்குப் பணி வரன்முறை மற்றும் உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்க வேண்டும்.

சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதி, சேந்தமங்கலம் ஒன்றியத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டும். சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதி, சேந்தமங்கலம் ஒன்றியத்தில் கால்நடைகள் அதிகமாக உள்ளதால் புதிதாகக் கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டும்.

தொ.ஜேடர்பாளையத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியருக்கு கழிப்பிட வசதி மற்றும் அதிநவீன கணினி வசதி ஏற்படுத்தித் தர வேண்டும். தொ.ஜேடர்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்த வேண்டும்.

வெள்ளக்கால்பட்டி, தொ.ஜேடர்பாளையம் பகுதியில் உள்ள கால்நடை மருந்தகத்தை விரிவாக்கம் செய்ய வேண்டும். நாமகிரிப்பேட்டை, பச்சுடையாம்பாளையத்திற்கு புதியதாக கிராம நிருவாக அலுவலகம் அமைக்க வேண்டும்.

நாமகிரிப்பேட்டையில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை ஸ்கேன் வசதியுடன் தரமுயர்த்தி விரிவாக்கம் செய்ய வேண்டும். நாமகிரிப்பேட்டை, அரியான்கவுண்டம்பட்டி பகுதியில் விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டும்.

சீராப்பள்ளி பேரூராட்சி, உடவன்குறிச்சி பகுதியில் உள்ள அருள்மிகு காசிவிஸ்வநாதர் ஆலயத்திற்கு குடமுழுக்கு விழா நடத்த வேண்டும். கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாக சீராப்பள்ளி பேரூராட்சியில் அருள்மிகு செவ்வந்தீஸ்வரர் ஆலயத்திற்குட்பட்ட இடத்தில் குடியிருந்துவரும் மக்களுக்குப் பட்டா வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. T.M. தமிழ்செல்வம் அவர்கள். 1–52 மணிக்கு correct ஆக உரையை முடித்துவிடுங்கள்.

திரு. T.M. தமிழ்செல்வம்: பதினொரு பேப்பர் மட்டுமே வைத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று வெள்ளிக்கிழமை, அனைத்து உறுப்பினர்களும் 2–00, 2–30 மணிக்குள் செல்ல வேண்டுமென்று நினைப்பார்கள்.

திரு. T.M. தமிழ்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். மனிதருக்குள் மனித நேயம் இருக்கும். ஆனால், மனிதநேயமே ஒரு மனிதராக இருக்க முடியும் என்றால்,

அதன் வடிவம்தான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களைப் பணிந்து வணங்குகிறேன்.

எனக்கு முகம் தந்தது பெற்ற தாய்; எனக்கு முகவரி தந்தது புரட்சித் தலைவி அம்மா என்னும் தெய்வத் தாய். அவர்களைப் பணிந்து வணங்குகிறேன்.

அறிவியலுக்கு ரைட் சகோதரர்கள், ஆன்மீகத்திற்கு கணேசனும், முருகனும், இதிகாசத்திற்கு லவ–குசா, ஈடற்ற இசைக்கு விஸ்வநாதன்–ராமமூர்த்தி, விளையாட்டிற்கு விஜய் அமிர்தராஜ்–ஆனந்த் அமிர்தராஜ், வீரத்திற்கு சின்ன மருது–பெரிய மருது போல, எங்களுடைய இயக்கத்திற்கு தொண்டர்களால் கண்டெடுக்கப்பட்ட அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களையும், அண்ணன் திரு. இ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.

ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்து, ஒரு கடைகோடி தொண்டனாக இருந்த என்னை இந்தச் சட்டமன்றத்தில் முதன்முதலாகக் கால் பதிக்க வைத்த, எங்களுக்கெல்லாம் வழிகாட்டியாய் திகழக்கூடிய எங்களுடைய மாவட்ட மண்ணின் மைந்தர், கழகத் துணை ஒருங்கிணைப்பாளர், வேப்பனஹள்ளி சட்டமன்ற உறுப்பினர், அண்ணன் திரு. K.P.M. அவர்களையும் வணங்கி, இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த கொறடா அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

எங்கள் மாவட்டச் செயலாளர், கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர், அண்ணன் திரு. அசோக்குமார் அவர்களை வணங்கி, என்னை 28,750 வாக்குகள் வித்தியாசத்தில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த ஊத்தங்கரை தொகுதி மக்களுக்கு வணக்கத்தையும், நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்றத் தேர்தலில் எனக்காக உழைத்த கழகப் பொறுப்பாளர்களுக்கும், தொண்டர்களுக்கும் மற்றும் கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த பொறுப்பாளர்கள், தொண்டர்கள் அனைவருக்கும் மனதார நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆதி திராவிட மக்களுக்கு அற்புதமான இமாலய சாதனை ஒன்றினை நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்கள் என்பதற்கு இந்த ஒரு சாதனையை மட்டும் நான் இந்த அவையில் முன்வைக்க விரும்புகிறேன். அதாவது, கணக்குப்பிள்ளை பட்டாமணியக்காரர், கர்ணம் மணியக்காரர் என்கிற இரண்டு பதவிகளும் சமுதாயத்தில் உயர்ந்த நபர்களுக்கும், பொருளாதாரத்தில் மிக உயர்ந்த வசதி படைத்தவர்களுக்கும்தான் கிடைக்கும், சாதாரண மக்களுக்குக் கிடைக்காத ஒன்றாக இருந்தன என்பது வரலாற்று உண்மை. இதைப் பார்த்த மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், 14–11–1980 அன்று அவசரச் சட்டம் ஒன்றைக் கொண்டுவந்து, ஒரே இரவில் கர்ணம், பட்டாமணியக்காரர் என்ற இரண்டு பதவிகளையும் எடுத்துவிட்டு நள்ளிரவிலேயே அவர்கள் வைத்திருந்த கணக்குகளை எல்லாம் வாங்கி, அதற்குப்பின் கிராம நிருவாக அலுவலர் என்ற அற்புதமான ஒரு பதவியை உருவாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே 18 சதவிகிதம் இடத்தை, படித்த ஆதி திராவிட மக்களுக்கு வழங்கினார். அந்தப் பணியிடத்தில் ஆதி திராவிட சமுதாய மக்கள் 2,160 பேர் அன்றைக்கு கிராம நிருவாக அலுவலர்களாக பொறுப்பேற்றனர். இது வரலாற்றில் ஒரு மைல் கல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தைத் தொடர்ந்து அண்ணன் எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் தலைமையில் நடந்த ஆட்சியின்போது செய்த சாதனைகளை மாமன்றத்தில் பதிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழுநேர முனைவர் பட்ட ஆராய்ச்சிப் படிப்பு பயில ஆண்டொன்றுக்கு ஊக்கத் தொகை 50,000 ரூபாய் வீதம் 700 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த எண்ணிக்கையினை, 1,200 ஆக உயர்த்தி வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) கல்லூரி விடுதி மாணவர்களுக்கான உணவுக் கட்டணம் மாதம் ஒன்றிற்கு 875 ரூபாயிலிருந்து 1,100 ரூபாயாகவும், பள்ளி விடுதி மாணவர்களுக்கான உணவுக் கட்டணம் மாதம் ஒன்றிற்கு 750 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்பட்டது. 28 கோடி ரூபாய்

செலவில் 1,297 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் மாணவர்கள் உடைமைகளைப் பாதுகாக்க RCC அலமாரிகளுக்கு இரும்புக் கதவு மற்றும் பூட்டு சாவியுடன்கூடிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

பழங்குடியின மக்கள் அவர்களின் திறமைக்கேற்ற வருமானம் ஈட்டக்கூடிய தொழில்புரிய ஏதுவாக, சுய உதவிக் குழுவின் நிதி உதவி, தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் என்னும் திட்டம், நில மேம்பாட்டுத் திட்டம், நிலம் வாங்கும் திட்டம் போன்ற பழங்குடியினருக்கான பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 10 கோடி ரூபாய் செலவில் தாட்கோமூலம் செயல்படுத்தப்பட்டன. பழங்குடியினர் சாதிச் சான்று மெய்த்தன்மை அறிதல் தொடர்பாக ஏற்கெனவே செயல்பட்டு வந்த மாநில கூர்நோக்குக் குழுவுடன், கூடுதலாக இரண்டு மாநில கூர்நோக்குக் குழுக்கள் புதிதாக தோற்றுவித்து செயல்படுத்தப்பட்டன.

நீலகிரி மாவட்டத்தில் வசித்துவரும் தோடா, கோத்தா, இருளர், காட்டுநாயக்கர், குறும்பன் மற்றும் பனியன் ஆகிய பழங்குடியினரின் பழுதடைந்த 500 குடியிருப்புகளை 5 கோடி ரூபாய் செலவில் பழுதுபார்க்க ஒப்புதல் வழங்கப்பட்டது. தமிழ்நாட்டில் கூடுதலாக 2 ஏகலைவா மாதிரி உண்டு உறைவிடப் பள்ளிகள் காஞ்சிபுரம் மாவட்டம், பட்டிபுலம் மற்றும் சேலம் மாவட்டத்திலுள்ள ஏற்காட்டில் துவங்கப்பட்டன. 158 ஆதி திராவிடர் நலக் கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு வாரந்தோறும் ஆளுமைத் திறன் மற்றும் தகவல் தொடர்புத் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் 1.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்க ஒப்புதல் தரப்பட்டது.

அரசு பழங்குடியினர் உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளின் சுகாதாரத்தினை மேம்படுத்திட 2019–2020 ஆம் நிதியாண்டில் 20 பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளில் ஒரு பள்ளிக்கு 10 இலட்சம் ரூபாய் மதிப்பில் 2 கோடி ரூபாய் செலவில் கழிவறைக் கூடங்கள் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டது. 107 கோடி ரூபாய் மதிப்பில் 223 ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டது.

ஆதி திராவிடர் குடியிருப்புகளில் இணைப்புச் சாலைகள், குடிநீர் மற்றும் தெரு விளக்குகள் ஆகிய அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட ஆண்டுதோறும் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வந்தன. அனைத்து பழங்குடியினர் குடியிருப்புகளிலும் இணைப்புச் சாலைகள், குடிநீர் மற்றும் தெரு விளக்குகள், சூரிய ஒளி விளக்கு வசதி, வீட்டு வசதி போன்ற அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்திட 395 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் 2020–2021 ஆம் ஆண்டில், சுமார் 8,800 வீடுகளை பழங்குடியின குடும்பங்களுக்கு சுமார் 265 கோடி ரூபாய் மதிப்பில் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பிற்பகல் 1–50

ஆதி திராவிடர் குடும்பங்களில் ஏற்படும் உயிரிழப்பிற்கு ஈமச் சடங்கிற்காக வழங்கப்பட்டு வரும் நிதியுதவியை ரூ.2,500/–லிருந்து ரூ.5,000/– ஆக உயர்த்தி வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டது.

ஆதி திராவிட மக்கள் தங்கள் வீட்டு சுப நிகழ்ச்சிகளைக் கொண்டாடும் வகையில், அனைத்து வசதிகளுடன்கூடிய 24 சமுதாயக் கூடங்களை ரூ.15 கோடி மதிப்பில் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் மற்றும் உண்டு உறைவிடப் பள்ளிகளில் ரூ.3,000/– தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வரும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த 651 பகுதிநேர துப்புரவுப் பணியாளர்கள் ரூ.6,300/– சராசரி ஊதியம் பெறும் வகையில் சிறப்பு காலமுறை ஊதியத்தில் கொண்டு வர ஒப்புதல் வழங்கப்பட்டது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின எழுத்தாளர்களுக்கு அளிக்கப்படும் நிதியுதவி ரூ.40,000/–லிருந்து ரூ.50,000/– ஆக உயர்த்தி வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டது. அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் ஆங்கில மொழிப் புலமையை அதிகரிக்க அவர்களுக்கு சுமார் 4.5 கோடி ரூபாய் மதிப்பில் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்த ஒப்புதல் வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள அனைத்துத் தொகுதிகளிலும் மாண்புமிகு புரட்சித் தலைவர்

அவர்களின் ஆட்சிக் காலத்திலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கென கட்டப்பட்ட தார்ஸ் வீடுகள் மற்றும் ஓட்டு வீடுகள் பழுதடைந்துள்ள நிலையில், அவற்றைப் பழுதுபார்க்க மாண்புமிகு முன்னாள் முதல்வர் திரு. எடப்பாடியார் அவர்கள் ஒரு வீட்டிற்கு சுமார் 50,000 ரூபாய் தந்தார்கள். தற்போது பழுதடைந்த தார்ஸ் வீடுகளையும், ஓட்டு வீடுகளையும் மாற்றி புதிய வீடுகள் கட்டித் தர ஆவன செய்யுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எனக்கு வணக்கம் சொல்வதற்கு 10 நிமிடங்கள் ஆகிவிட்டனவா!*

திரு. T.M. தமிழ்செல்வம்: *இரண்டே நிமிடங்களில் எனது உரையை முடித்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

திரு. T.M. தமிழ்செல்வம்: *எனது ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேவைகள் சிலவற்றை இம்மாமன்றத்தில் பதிவிடுகிறேன்.*

மத்தூர் மருத்துவமனையை 100 படுக்கைகள்கொண்ட மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தர வேண்டும். ஊத்தங்கரையிலுள்ள அரசு மருத்துவமனையைத் தரமுயர்த்தித் தர வேண்டும்.

மத்தூர் ஒன்றியத்தில், கருங்காலிப்பட்டி ஆற்றுப் பள்ளத்தில் புதிய தரைப்பாலம் அமைக்கும் பணியை மேற்கொள்ள வேண்டும். மத்தூரில் வட்டார கல்வி அலுவலகம் கட்டித் தர வேண்டும். மத்தூரை அடுத்த பெணுகொண்டாபுரம் ஏரியின் அருகில் சிறுவர் பூங்கா அமைத்துத் தர வேண்டும்.

ஊத்தங்கரையில் அரசு கலைக் கல்லூரி அமைத்துத் தர வேண்டும். ஊத்தங்கரையில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கட்டித் தர வேண்டும். திண்டிவனம் முதல் பெங்களூரு செல்லும் வழியில் உள்ள பாம்பாறு அணையில் சுற்றுலாத்தலம் அமைக்க வேண்டும்.

மத்தூர் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த வேண்டும். மத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். மத்தூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு மகளிர் விடுதி அமைத்துத் தர வேண்டும்.

விசுவாசம்பட்டி முதல் குருபரவலசை சாலையில் கல்லாற்றின் குறுக்கே பாலம் கட்டித் தர வேண்டும். ஜொல்லன்கொட்டாய் முதல் புதூர் செல்லும் பாதையில் கல்லாற்றின் குறுக்கே உள்ள பாலத்தினைப் புனரமைக்க வேண்டும். மகனூர்பட்டி முதல் கீழ்மத்தூர் சாலையில் தோட்டாக்காரன்கொட்டாய் கிராமத்தில் உள்ள சிறு பாலத்தினைப் புனரமைக்க வேண்டும்.

மகனூர்பட்டி கிராமம், ஆரம்ப சுகாதார நிலைய செவிலியர் குடியிருப்பிற்குச் சுற்றுச் சுவர் கட்டித் தர வேண்டும். மாரம்பட்டி கிராமத்திலுள்ள ஆதி திராவிடர்களுக்கு குடியிருப்புக் கட்டடங்கள் ஏற்படுத்தித் தர வேண்டும்.

கோவிந்தாபுரம் ஊராட்சியில் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் 108 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒதுக்கீடு செய்து பட்டா வழங்கப்பட்ட இடத்தினை அளந்து அவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நொச்சிப்பட்டி ஊராட்சியில் 1982 ஆம் ஆண்டு கட்டப்பட்ட ஆதி திராவிட குடியிருப்புகள் தற்போது மிகவும் பழுதடைந்துள்ளன. அதே இடத்தில் புதிய வீடுகள் கட்டித் தர வேண்டும்.

கீழ்மத்தூர் ஊராட்சி, பாம்பாறு அணையின் குறுக்கே ஏற்கெனவே கட்டப்பட்ட பழுதாகியுள்ள தடுப்பணையில் பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும். காரப்பட்டு உப்பாரப்பட்டியில் துணை மின் பகிர்மான நிலையம் அமைத்திட ஏற்கெனவே அரசாணை வெளியிடப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தொகுதி சார்ந்த கோரிக்கைகளைத் தந்துவிடுங்கள். அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளலாம்.

திரு. T.M. தமிழ்செல்வம்: இன்னும் நான்கு கோரிக்கைகள்தான் உள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி. சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. T.M. தமிழ்செல்வம்: அதனை விரைந்து செயல்படுத்திட ஆணை பிறப்பிக்க வேண்டும். பெரியதள்ளப்பாடி ஊராட்சியிலுள்ள ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும். அங்கு சுமார் 1.5 ஏக்கர் புறம்போக்கு நிலம் உள்ளது.

சிங்காரப்பேட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினைத் தரமுயர்த்த வேண்டும். ஜவ்வாதுமலையில் உருவாகி வரும் கடப்பாறை ஆற்றில் சிங்காரப்பேட்டை, புளியானூர் அருகில் வனப் பகுதியில் ஒரு புதிய சிற்றணை கட்ட உரிய முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு விரைந்து அரசாணை வெளியிட வேண்டும். எனக்கு இம்மாமன்றத்தில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி, பதிலுரை, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அள்ளப் பழுத்த அழகு, முகத்தில் வெள்ளைத் தாடி விரிந்து கிடக்க, கருப்புடை தரித்த சிவப்பு ஞாயிறே, செருப்பாய் கிடந்த செந்தமிழ் இனத்தை அரியணை ஏறி துரைத்தனம் நடத்த செய்திட்ட ஒருவனே, இலையுதிர் காலத்து எழுந்த வசந்தமே, தத்துவத்தின் மூலதனமே, தமிழர்க்கு மொத்தமாய் கிடைத்த முகவரியே என் தந்தையே, தலைவர் பெரியாரே உம்மை முதலில் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியா முழுவதும் தூங்கிக் கொண்டிருந்தபோது, ஒருவர் மட்டும் விழித்துக் கொண்டிருந்தார். கேட்டபோது சொன்னார். "அவர்கள் இன மக்கள் விழித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அந்தத் தலைவர்கள் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். தூங்கிக் கொண்டிருக்கிற எம் இன மக்களை விழிக்க வைக்க நான் தூங்காமல் இருக்கிறேன்" என்று பிரகடனப்படுத்திய ஊமைகளின் தலைவனாய் இருந்து, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தலைவனாக பரிணாமம் பெற்ற உலக சட்ட மாமேதை பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பைந்தமிழ் தேர்ப்பாகன், காஞ்சி தந்த காவியத் தலைவன், தமிழ்நாட்டு தெருக்களில் தமிழ்மொழி புழக்கம் இல்லாத காலத்தில்

தாய்மொழியை கையைப் பிடித்து இழுத்து வந்து, கடைசி தமிழன் வீடு வரை கொண்டு வந்து சேர்த்த தமிழ்த் தாயின் தலைமகன் பேரறிஞர் அண்ணா! அறிவு மன்னனாய், பொதிகை மலை தென்றலாய், போதாகி மலர்கின்ற தமிழ் உணர்வின் புது மணமாய், பதிகத்துப் பொருளாய், பழந்தமிழர் புறப்பாடாய் வந்து உதித்தார் அண்ணா என்பார் தலைவர் கலைஞர். அந்தப் பெரியாரின் தலைமகன் பேரறிஞர் அண்ணாவை வணங்குகிறேன்.

விதவைக்கு கைம்பெண் என பொட்டிட்டவர், எம்மொழிக்கு செம்மொழி எனப் பெயரிட்டவர், சமூக நீதிக்காய் சமத்துவபுரம் தந்திட்டவர், என்றைக்கும் ஓய்வறியா உழைத்திட்டவர், தம் உயிரையே தமிழ் குடிக்கு தந்திட்டவர், அஞ்சுகத் தாய் புதல்வன், தமிழ்த் தாயின் இளைய மகன் தானைத் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இரவல் வெளிச்சத்தில், இரவில் ஒளிர்கின்ற சந்திரனாய் இல்லாமல், சூரியனாய் சூரியனால் வளர்க்கப்பட்டவர். கலைஞரின் முழக்கமாய், அறிவாலய வீரனாய் திராவிட மாடல் ஆட்சியமைத்து, ஒட்டுமொத்த இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்திருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அன்பகத்தின் இன்றைய ஆளுமை, அறிவாலயத்தின் நாளைய தலைமை, இன்முகத்துடன் இருக்கும் எளிமை, எட்டு கோடி தமிழர்களின் வலிமை, இளைஞர்களின் இயந்திரத் துப்பாக்கி, எங்களின் நம்பிக்கை நட்சத்திரம், இயக்கத்தின் இளைஞரணிச் செயலாளர், சகோதரர் திரு. உதயநிதி அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திருப்பூர் மாவட்டத்தில் என்னை அரவணைத்து வழிநடத்திச் செல்லும் திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர், தமிழக அரசின் செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் சகோதரர் மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களையும், தாராபுரம் தொகுதியில் என்னை வெற்றி பெறச் செய்ய இரவு, பகல் பாராமல் உழைத்த தொகுதியின் கழகப் பொறுப்பாளர்கள், தோழமைக் கட்சித் தோழர்கள், உடன் பிறப்புகள் மற்றும் தொகுதி மக்கள் அனைவரையும் அன்போடு வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் எத்தனையோ அரசியல் ஆளுமைகள், அரும்பெரும் மேதைகள் அமர்ந்து, எண்ணிலடங்கா சாதனைகளை ஏராளமாகப் புரிந்துள்ளார்கள். அத்தகைய மன்றத்தில் சாமானியனான நான், உங்கள் மத்தியில் பேசுவதைப் பெரும் பேறாகக் கருதி, மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், மாண்புமிகு முதல்வர், மாண்புமிகு அவை முன்னவர், அரசு தலைமைக் கொறடா, மூத்த அமைச்சர் பெருமக்கள், சக அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரையும் வணங்கி என் உரையை துவங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வில் அரணாக இருந்து, அவர்களின் சமூக, பொருளாதார நிலை மேம்பட, எப்பொழுதெல்லாம் நமது ஆட்சி அமையப்பெறுகிறதோ அப்போதெல்லாம் அரிய பல திட்டங்களுக்குச் செயல் வடிவம் கொடுத்தவர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் என்பதில் இத்துறை பெருமை கொள்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இந்தியாவிலேயே முதன்முதலில் ஆதி திராவிடர்களுக்கு தாட்கோமூலம் இலவச கான்கிரீட் வீடு கட்டித் தந்தது, சமத்துவம் நிலைநாட்ட தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம், தீண்டாமையை அகற்றிட அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்பு திருமண உதவித் திட்டம், பழங்குடியினருக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் ஒரு சதவிகிதம் இட ஒதுக்கீடு;

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: அருந்ததியர்களுக்கு 3 சதவிகித உள் இட ஒதுக்கீடு, இந்தியாவிலேயே முதன்முறையாக டாக்டர் அம்பேத்கர் பெயரில் சட்டக் கல்லூரி, தூய்மைப் பணியாளர்களின் நலன் காத்திட தூய்மைப் பணியாளர் நல வாரியம், பழங்குடியினரின் முன்னேற்றத்திற்காக பழங்குடியினர் நல வாரியம், புதிரை வண்ணார் சமூக மக்களுக்காகப் புதிரை வண்ணார் நல வாரியம் போன்ற ஏராளமான திட்டங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர். பிட்டி. தியாகராயர், டி.எம். நாயர், டாக்டர் நடேசனார், சிங்காரவேலனார், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நீட்சியான, சமூகநீதி மற்றும் சமத்துவத்திற்காக திராவிட மாடல் ஆட்சி நடத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், ஏற்றத்தாழ்வுகளற்ற சமூகம் உருவாக வேண்டுமென்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயிர்நாடிக் கொள்கையை நிலைநாட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்டு, கடந்த பத்தாண்டுகளாக அ.தி.மு.க. அரசால் கிடப்பில் போடப்பட்ட தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம் உயிர் பெற்றது.

அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்தி, சமுதாயப் புரட்சிக்கு வித்திட்டு, புதிய பூபாளம் படைத்திட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களின் முன்னேற்றத்திற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தற்போது மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதித் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. பெண்கள் கல்வி கற்க விதிக்கப்படும் தடைகளைத் தகர்த்தெறிந்து, தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு பெண்ணும் பட்டதாரியாக மாற வேண்டுமென்ற முதல்வரின் இலட்சியம், வெல்வது நிச்சயம்! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவெள்ளி, வடக்கில் உதித்த சமத்துவ சூரியன், டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை 'சமத்துவ நாளாகக்' கொண்டாடவும், அன்றையதினம் தமிழ்நாடு முழுவதும் 'சமத்துவ உறுதிமொழியை' எடுத்துக்கொள்ளவும் (மேசையைத் தட்டும் ஒலி) விதி 110–ன்கீழ் அறிவிப்பு செய்து, அதன்படி ஏப்ரல் 14 அன்று அம்பேத்கர் மணிமண்டபத்தில் உறுதிமொழி எடுத்துக்கொண்டதோடு மட்டுமல்லாமல், அண்ணலின் முழு உருவ வெண்கலைச் சிலை அமைக்க உத்தரவிட்டமைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி என்ற ஒரு சொல் மட்டும் போதாது. (மேசையைத் தட்டும் ஒலி)

2022 மே 6] [திருமதி என். கயல்விழி செல்வராஜ்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசின், வெளிநாடுகளில் முதுகலை பட்டம் மற்றும் ஆராய்ச்சிப் படிப்பினை பயில்வோருக்கான கல்வி உதவித்தொகை திட்டம் மற்றும் முழுநேர முனைவர் ஆராய்ச்சிக்கான ஊக்கத்தொகை திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களில் உதவித் தொகைகளைப் பெறுவதற்கான ஆண்டு வருமான உச்சவரம்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றபின், ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.8 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், முழுநேர முனைவர் ஆராய்ச்சிப் படிப்புக்கான ஊக்கத்தொகை ரூ.50 ஆயிரத்திலிருந்து ரூ.1 இலட்சமாக உயர்த்தப்பட்டு, நடப்பு நிதியாண்டில் ரூ.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புலம்பெயர் தமிழர் நல வாரியம் அமைத்து, தமிழர்கள் எங்கே வாழ்ந்தாலும், அது இலங்கை என்றாலும் சரி, உக்ரைன் என்றாலும் சரி, அவர்களுக்கு தமிழ்நாடுதான் தாய்வீடு என்பதை அனைவரும் உணர்ந்திடும் வகையில், அவர்கள்மீது அன்பு செலுத்தி, அரவணைத்துப் பாதுகாத்திடும் முதல் நபராக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டு வருகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இருளர் சமுதாயத்தின் இருள் அகற்ற வந்த உதய சூரியனாய், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பில், செங்கல்பட்டு மாவட்டத்தில் 443 வீடுகளை ரூ.19.38 கோடி செலவில் கட்டித் தருவதோடு அல்லாமல், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இருளர் உள்ளிட்ட பிற பழங்குடியினர்களுக்கு ஆயிரம் வீடுகள் கட்டித் தர ஆணையிட்டுள்ளார்கள்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின தொழில்முனைவோரால் தொடங்கப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு உதவிடும் வகையில், ரூ.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்தமைக்கும், சென்னை சைதாப்பேட்டையில் உள்ள எம்.சி. ராஜா கல்லூரி மாணவர் விடுதிக்கு அருகில் ரூ.40 கோடி மதிப்பீட்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில், புதிய விடுதி கட்ட அனுமதி அளித்தமைக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–05

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் தொகுதிக்குட்பட்ட குண்டடம் வட்டாரத்திலுள்ள கயிறு தொழில் நிறுவனங்களில்

பணிபுரியும் சுமார் 3,000 தொழிலாளர்கள் பயனடையும் வகையில், மதிப்பு கூட்டப்பட்ட ஏற்றுமதிசார் பொருட்களின் உற்பத்தியை ஊக்குவிக்க, ரூ.16 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒரு கயிறு குழுமம் பொது வசதி மையம் அறிவித்தமைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பம்பரமாய் சுற்றிச் சுழன்று, தேர்தல் களத்தில் மக்களைச் சந்தித்து, அவர்களின் மாபெரும் நம்பிக்கையைப் பெற்று, வாக்களித்தவர்கள் மகிழும் வண்ணமும், வாக்களிக்காதவர்கள் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிக்கு வாக்களிக்கவில்லையே என வருந்தும் வண்ணமும் அனைவருக்குமான திராவிட மாடல் ஆட்சி நடத்திவரும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்று இன்றுடன் ஓராண்டு நிறைவடையும் இத்தருணத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு அறிவித்துள்ள திட்டங்கள் ஏராளம். அதில் சிலவற்றை இப்பொழுது கூறி, என் உரையைத் தொடர்கிறேன்.

பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், சிறு தொழில் தொடங்க ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த 10,959 பயனாளிகளுக்கு ரூ.106.39 கோடி மானியத்துடன் ரூ.328.5 கோடி அளவிற்கு வங்கிக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 3,695 பயனாளிகளுக்கு ரூ.55 கோடி மானியத்துடன்கூடிய கடன் பட்டுவாடா வழங்கப்பட்டுள்ளது. வங்கியிடமிருந்து கடன் ஒப்புதல் ஆணை பெறப்பட்ட 11,575 ஆதி திராவிடர் தனிநபர் மற்றும் மகளிர் குழு உறுப்பினர்களுக்கு ரூ.70 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக 2021–2022 ஆம் நிதியாண்டில் ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கிவரும் 190 பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, ரூ.100 கோடி மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள் மற்றும் ஆய்வகக் கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 1,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு துரித மின்னிணைப்புத் திட்டத்தின்கீழ், (Tatkal scheme) ரூ.23.28 கோடி செலவில் 90 சதவிகித மானியம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 39 அரசு பழங்குடியினர் உண்டி,

உறைவிடப் பள்ளிகளில் 100 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கூடங்கள் மற்றும் சுற்றுச்சுவர் ஆகியவை ரூ.21.13 கோடி மதிப்பீட்டில் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வேலூர் ஆதி திராவிடர் முதுகலை கல்லூரி மாணவியர் விடுதி, திண்டிவனம் மரவனேரி ஆதி திராவிடர் கல்லூரி மாணவர் விடுதிகளுக்கு புதிய கட்டடங்கள் ரூ.10.79 கோடி மதிப்பீட்டில் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் விடுதி மாணாக்கருக்கு விழா நாட்களில் வழங்கப்பட்டு வரும் சிறப்பு உணவுக் கட்டணம் இரண்டு மடங்காக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

2,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.3 கோடி செலவில் நீர்ப்பாசனத்திற்கான PVC குழாய்கள் வாங்குவதற்காக தலா ரூ.15,000/–மும், ரூ.2 கோடி செலவில் புதிய மின் மோட்டார் வாங்க தலா ரூ.10,000/–மும் மானியம் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 5,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு தோட்டக்கலை, வேளாண் காடுகள்–Agro forestry, நர்சரி செடிகள் மற்றும் வேளாண் இயந்திரங்கள் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் போன்ற பயிற்சிகள் ரூ.1.70 கோடி செலவில் வழங்க அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது.

5,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த தொழில்முனைவோருக்கு தொழில் மேலாண்மைப் பயிற்சிகள் ரூ.2 கோடி செலவில் வழங்கப்பட்டு வருகின்றன. அழிவின் விளிம்பு நிலையிலுள்ள 6 வகை பண்டைய பழங்குடியினரான தோடர், கோத்தர், குரும்பர், இருளர், பனியன் மற்றும் காட்டுநாயக்கன் இனமக்களின் மேம்பாட்டிற்காக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சூழலியல் சுற்றுலா அதாவது, Eco–Tourism நடவடிக்கைகளுக்காக ரூ.2.33 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலேயே முதல் முறையாக நீலகிரி மாவட்டம், நஞ்சநாடு கிராமத்தில் மு.பாலாடா என்ற இடத்தில் 0.5 ஏக்கர் பரப்பளவில் பழங்குடியின பெண்கள் மட்டுமே நடத்தும் சில்லறை எரிபொருள் நிலையம்–Petrol Bunk இயங்கி வருகிறது.

கள்ளக்குறிச்சி மாவட்டம், வெள்ளிமலை ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளியில் விளையாட்டு சிறப்பு மையம்– Centre of Sports Excellence அமைத்திட ரூ.5 கோடி ஒதுக்கீடு

செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் தொடர்ச்சியாக நடைபெறாமல் இருந்த மாநில அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம், இவ்வரசு பொறுப்பேற்ற மூன்றே மாதங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 19–8–2021 அன்று நடைபெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–10

அதன்பலனாக, மாண்புமிகு முதல்வர் அவர்களால் 8–9–2021 அன்று பேரவை விதி 110–ன்கீழ் மாநில ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு இப்பேரவையில் அறிவிக்கப்பட்டு, அதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, மேற்படி ஆணையம் இயங்கி வருகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையிலான மாநில அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் 12–4–2022 அன்று இரண்டாவது முறையாக கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் இத்துறைக்கு ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், வன்கொடுமை தடுப்புச் சட்ட வழக்குகளை விரைந்து முடித்திட ஏதுவாக 22 தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள் (Special Courts) செயல்படுவதுடன் புதியதாக சேலம், கிருஷ்ணகிரி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 4 தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள் தொடங்கப்படவுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கையில் ஒளியேற்றிடும்வகையில் 2021–2022 ஆம் நிதியாண்டில் ரூபாய் 3.68 கோடி செலவில் 709 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கு மயானப் பாதை மற்றும் மயான வசதி ஏற்படுத்திக் கொடுக்க நடப்பு நிதியாண்டில் ரூ.75.84 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களைப் போன்றவர்களுக்குத் தெரியும். கவிஞர் மருதகாசி எழுதிய, ‘சமரசம் உலாவும் இடமே’ என்று தொடங்கும் பாடலில்,

"எல்லோரும் முடிவில் சேர்ந்திடும் காடு
தொல்லையின்றியே தூங்கிடும் வீடு
ஆண்டி எங்கே அரசனும் எங்கே
அறிஞன் எங்கே அசடனும் எங்கே
ஆவி போன பின் கூடுவார் இங்கே
ஆகையினால் இதுதான்
நம் வாழ்வில் காணா
சமரசம் உலாவும் இடமே"

என்றார்.

இந்தப் பாடல் பிறந்து சுமார் 60 ஆண்டுகளுக்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இந்தத் திராவிட மாடல் ஆட்சியில்தான் சமூக ஒற்றுமையை ஊக்குவிக்கும் முயற்சியாக, சாதி வேறுபாடுகளற்ற மயானங்கள் பயன்பாட்டில் உள்ள முன்மாதிரி கிராமங்களுக்கு, வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள ஊக்கத் தொகையாக ரூபாய் பத்து இலட்சம் வழங்கும் புதிய திட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன்கீழ் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள்.

கவிஞர் மருதகாசி உயிரோடு இருந்திருந்தால் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி புகழ் மாலை சூட்டியிருப்பார். மேலும், இத்திட்டத்தின்கீழ் 2021–2022 ஆம் ஆண்டில் சாதி வேறுபாடுகளற்ற சமத்துவ மயான முறையைப் பின்பற்றி வந்த 60 கிராமங்களுக்கு ரூபாய் ஆறு கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும், நடப்பு நிதியாண்டில் ரூபாய் 8.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வரசு வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இனத்தவருக்கு, இந்தியாவிலேயே முதல் மாநிலமாக, வழக்கின் தன்மைக்கேற்ப வழங்கப்பட்டு வந்த குறைந்தபட்ச தீருதவித் தொகையை ரூபாய் 85,000/–த்திலிருந்து ரூபாய் 1 இலட்சமாகவும், அதிகபட்ச தீருதவித் தொகையை ரூபாய் 8.25 இலட்சத்திலிருந்து ரூபாய் 12 இலட்சமாகவும் உயர்த்தி வழங்கியுள்ளது.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவுக்கிணங்க, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டு, அரசுப் பணிகளில் குறைவுப்

பணியிடங்களாக (Shortfall Vacancies) மொத்தம் 10,402 கணக்கிடப்பட்டு, ஆதி திராவிடர்களுக்கான 8,173 இடங்களுக்கும், பழங்குடியினர்களுக்கான 2,229 இடங்களுக்கும் சம்பந்தப்பட்ட துறைகளின் தெரிவு முகமைகள் (Recruitment Agencies) மூலம் நிரப்பப்பட அரசாணை வெளியிடப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, கல்வியே சமூக மாற்றத்திற்கான வேர், சமுதாய முன்னேற்றத்திற்கான நீர் என்பதால் நடப்பு நிதியாண்டில் மொத்த நிதி ஒதுக்கீடான ரூபாய் 4,281.76 கோடியில், கல்வி மற்றும் கல்வி சார்ந்த திட்டங்களுக்காக மட்டும் ரூபாய் 3,571.39 கோடி, அதாவது மொத்த ஒதுக்கீட்டில் 83.41 விழுக்காடு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 2–15

இத்துறையின்மூலம், ஒன்றிய அரசின் Post Matric/Pre Matric கல்வி உதவித்தொகை திட்டம் மற்றும் மாநில அரசின் சிறப்பு Post Matric மற்றும் உயர்கல்வி சிறப்பு உதவித்தொகை திட்டங்களுக்காக ரூபாய் 1,177.66 கோடி செலவிடப்பட்டுள்ளது. கற்பிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களிலிருந்து விலக்கு அளிப்பதற்காக ரூபாய் 11.97 கோடி செலவிடப்பட்டுள்ளது. பெண் கல்வி சிறப்பு ஊக்குவிப்புத் தொகைத் திட்டத்திற்காக ரூபாய் 37.14 கோடி செலவிடப்பட்டுள்ளது. மேலும், இத்துறையின்கீழ் இயங்கிவரும் 150 ஆதி திராவிடர் நலப் பள்ளிகளுக்கு 480 புதிய வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் 15 அறிவியல் ஆய்வகங்கள் ஆகிய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ரூபாய் நூறு கோடி செலவில் ஏற்படுத்தித்தர ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பள்ளிகளில் பன்னிரெண்டாம் வகுப்பு படித்த மாணவர்களில், 2018–2019 ஆம் கல்வியாண்டில் ஒரு மாணவரும், 2019–2020 ஆம் கல்வியாண்டில் இரண்டு

மாணவர்களும், NEET தேர்வில் தேர்ச்சி பெற்று வெற்றி பெற்றிருந்த நிலையில், 2021–2022 ஆம் கல்வியாண்டில் ஏழு மாணாக்கர்கள் NEET தேர்வில் வெற்றி பெற்றுள்ளார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் தலைமையிலான இவ்வரசு, மருத்துவ சேர்க்கைக்கு NEET தேர்விலிருந்து விலக்கு பெறுவதே தமிழக மாணவர்களுக்கு நிரந்தரத் தீர்வு என்ற கொள்கையில் உறுதிப்பாட்டுடன் இருக்கும் அதேவேளையில், அதிகப்படியான மாணவர்கள் வரும் கல்வியாண்டில் மருத்துவ நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்று, மருத்துவப் படிப்பில் சேர, பள்ளிக் கல்வித் துறையுடன் இணைந்து உரிய பயிற்சியினை வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் காப்பாளர் சங்கங்களுடனான குறைகேட்புக் கூட்டம் 7–12–2021 அன்று நடத்தப்பட்டதுடன், அக்கூட்டத்தில் எழுப்பப்பட்ட கோரிக்கைகள் மீது படிப்படியாகத் தீர்வு காணப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து, ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கும் பள்ளிகளில் உள்ள உபரி ஆசிரியர்களைக் கணக்கிட்டு, பணி நிரவல் மூலம் ஆசிரியர்கள் இல்லாத பள்ளிகள் மற்றும் விடுதிகளுக்கு பணியிட மாறுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், ஆசிரியர்கள் மற்றும் காப்பாளர்களுக்கான கலந்தாய்வு நடத்தப்பட்டு, மொத்தம் 1,020 ஆசிரியர்கள் மற்றும் காப்பாளர்களுக்கு அவர்களின் விருப்பப்படி பணியிட மாறுதல்கள் வெளிப்படைத் தன்மையுடன் வழங்கப்பட்டன. பள்ளி மற்றும் விடுதிகளில் உள்ள காலிப் பணியிடங்கள் கணக்கிடப்பட்டு, பதவி உயர்வுகளின்மூலம் நிரப்பப்பட்டும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையில் காலியாக இருக்கும் 452 ஆசிரியர் பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக நிரப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்ற பின், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின நலத் துறையின்கீழ் இயங்கும் பள்ளிகள் மற்றும் விடுதிகளை நாங்கள் தொடர் ஆய்வு செய்ததன் அடிப்படையில், விடுதிகளில் மாணாக்கர்களின் வருகை விகிதம், விடுதிக் கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் உணவு வழங்கலில் குறைபாடு

உள்ளதை அறிய முடிகிறது. இதனைக் களைவதற்கு மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்கள், தனி வட்டாட்சியர்களுக்கு உரிய வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்ட நிலையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்திலுள்ள ஆதி திராவிடர் நல மாணவர் விடுதிக்கு நேரடியாகச் சென்று மாணவர்களுடன் அமர்ந்து உணவு அருந்தி, ஆய்வு செய்ததை பெருமையுடன் நினைவு கூர்கிறேன்.

நடப்பு ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதுபோல, மாநில அரசால் அமைக்கப்பட உள்ள உயர்மட்டக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில், மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆலோசனையைப் பெற்று, விடுதிகளை மேம்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், கட்டுமானப் பணிகளுடன், பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளையும் வழங்கி வருகிறது. தற்போது, TAHDCO கட்டுமானப் பிரிவின் மூலம் பல்வேறு திட்டங்களின்கீழ் ரூபாய் 337.91 கோடி மதிப்பிலான 357 கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், TAHDCO கட்டுமானப் பிரிவின்மூலம் இந்த நிதியாண்டில் ரூபாய் 39.55 கோடி மதிப்பிலான கட்டுமானப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர் அடர்த்தியாக வாழும் பகுதிகளில் அவர்களுக்கென பிரத்யேகமாக நடத்தப்படும் ஆறு தொழிற்பயிற்சி நிலையங்களில் 1,260 மாணாக்கர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை சமூக, பொருளாதார மற்றும் கல்வியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை எய்திடச் செய்யும்பொருட்டு, மாநிலத்தின் மொத்த திட்ட நிதியிலிருந்து, இந்த மக்களின் மக்கள்தொகை விகிதத்திற்கேற்ப நிதி ஒதுக்கீடு செய்து, பல்வேறு துறைகளின்மூலம் ஆதி திராவிடர் துணைத் திட்டம் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பிற்பகல் 2–20

மேலும், நடப்பு நிதியாண்டில் ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கென ரூபாய் 16,442.08 கோடியும், அதாவது, 21.95 சதவிகிதம்; பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கென ரூபாய் 1,589.27 கோடியும், அதாவது, 2.1 சதவிகிதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது மாநிலத்தில் உள்ள ஆதி திராவிடர் (20.01 சதவிகிதம்) மற்றும் பழங்குடியினர் (1.1 சதவிகிதம்) மக்கள்தொகை விழுக்காட்டைவிட அதிகமானதாகும்.

பழங்குடியினர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக 2021–2022 ஆம் நிதியாண்டில் ரூ.129 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவுக்கூறு 275(1)–ல் வலியுறுத்தப்பட்டுள்ளவாறு, பழங்குடியின மக்களின் மனிதவள மற்றும் வாழ்க்கைத்தர மேம்பாடு, வறுமை ஒழிப்பு மற்றும் சுரண்டலுக்கு எதிரான பாதுகாப்பு ஆகிய அம்சங்களின்கீழ் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்காக நடப்பு நிதியாண்டில் ரூ.17 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனங்களில் குடியிருக்கும் பழங்குடியின மக்களுக்காக 'சிறு வன விளைபொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைத் திட்டம்' செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் சிறு வனப் பொருட்களை மதிப்புக் கூட்டுவதன் மூலமாக பழங்குடியினருக்குக் கூடுதல் வருவாய் கிடைக்க ஏதுவாக, தமிழகத்தில் ஏழு வன வள மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கென ரூ.3.05 கோடி சுழல் நிதியாக உருவாக்கப்பட்டுள்ளது.

பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம், 2006–ன்கீழ் இதுவரை 9,267 தனிநபர் உரிமைகளும், 472 சமூக உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன.

பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை அறிய, மாநில அளவிலான மூன்று கூர்நோக்குக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பழங்குடியினருக்கான சாதிச் சான்று பெறுவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க, வருவாய்த் துறையால் இணையவழி மூலமாக (online) சாதிச் சான்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நீலகிரி மாவட்டம், மு.பாலாடா என்ற இடத்தில் செயல்பட்டு வரும் பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தில், பழங்குடியினரின் பாரம்பரிய கலைகளைப் பாதுகாப்பதற்காக 2–9–2021 அன்று பயிற்சிகள் வழங்கப்பட்டன. இந்தப் பயிற்சி முகாமில் பயிற்சி பெற்ற, தோடர் பழங்குடி இனத்தைச் சேர்ந்த இரு பெண்கள் மாண்புமிகு இந்தியக் குடியரசு தலைவர் அவர்களின் திருக்கரங்களால் பரிசு பெற்றார்கள் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு முதல்வர் அவர்களால் விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்ட 5 அறிவிப்புகளுக்கும் அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதேபோல், இத்துறையின் 23 அறிவிப்புகளில், 20 அறிவிப்புகளுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மீதமுள்ள 3 அறிவிப்புகளுக்கு அரசாணைகள் வெளியிடும் பொருட்டு, தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய விவாதத்தில் 8 சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றார்கள். அறிவிப்புகளை வெளியிடுவதற்கு முன், அவர்களின் சில கேள்விகளுக்கு சிறு விளக்கத்தினை அளிக்கிறேன். பழுதடைந்த வீடுகளைச் சரி செய்ய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.50,000 செலவு மேற்கொள்ளலாம்; ரூ.30 இலட்சம் வரை அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களே செலவு செய்யலாம். எனவே, அதனை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களே செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சமி நிலம். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டதற்கு, பழுதிருந்தால் அதனைச் சரி செய்யலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்துகொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) இன்னும் தருவார்கள்; அறிவிப்புகள் வர இருக்கின்றன. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சமி நிலத்தைப் பற்றிய புதிய சட்டத்தை இயற்ற, தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் 21–7–2021 அன்று கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் புதிய

சட்டம் இயற்றுவது குறித்து, புதிய வரைவு சட்டமுன்வடிவுக்கான கருத்துகள் கோரப்பட்டு, சட்டம் இயற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அது தற்போது ஆய்வில் உள்ளது.

அதேபோன்று, இலவச வீட்டுமனைப் பட்டா. நில எடுப்புச் சட்டம் மற்றும் தனியார் பேச்சுவார்த்தைமூலம் என வீட்டுமனைப் பட்டாக்கள் இரண்டு முறைகளில் வழங்கப்பட்டு வருகின்றன. நில எடுப்புச் சட்டம் குறித்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு இருந்ததால், அது சென்ற நிதியாண்டுகளில் சரியாகச் செயல்படுத்தப்படவில்லை. நில எடுப்புச் சட்டம் செல்லும் என்று தற்போது உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. ஆகவே, இனிவருங்காலங்களில் அந்தத் தொகை முழுவதுமாக நில எடுப்புச் சட்டத்திற்காகவே செலவிடப்படும்.

பிற்பகல் 2–25

அதுபோல, மருத்துவ மாணவர் சேர்க்கை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். முந்தைய காலகட்டத்தில் பெற்றோரின் ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.3 இலட்சமாக இருந்தது. அதனால், அந்த வருமான உச்சவரம்பிலிருக்கும் பெற்றோர், அவர்களுடைய குழந்தைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி, படிக்க வைக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, தற்போது பெற்றோரின் ஆண்டு வருமான உச்ச வரம்பை ரூ.3 இலட்சத்திலிருந்து, ரூ.8 இலட்சமாக உயர்த்தியிருக்கிறார்கள். எனவே, இனிவருங்காலங்களில் கூடுதலாக மாணவர்களைச் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

சென்ற நிதிநிலை அறிக்கையில், 20 சமுதாய நலக் கூடங்கள் ரூ.25 கோடி நிதியொதுக்கீட்டில் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கான அரசாணை இன்னும் வெளியிடப்படவில்லை. அரசாணை வெளியிடப்பட்டவுடன் அந்தப் பணிகள் நடைபெறும்.

முன்னாள் முதல்வர் அவர்கள் 24 சமுதாய நலக் கூடங்கள் அமைக்கப்படும் என விதி 110–ன்கீழ் அறிவித்திருந்தார்கள். அதற்காக நிர்வாக அனுமதி மட்டும் வழங்கப்பட்டது, நிதி ஒப்பளிப்பு வழங்கப்படவில்லை. மேலும், 19 சமுதாய நலக் கூடங்களுக்கு மட்டும்தான் இதுவரையில் இடங்கள் கண்டறியப்பட்டிருக்கின்றன. ரூ.14.49 கோடி மதிப்பீட்டினை அவர்கள் கோரியிருந்தார்கள்.

தற்போது 12 சமுதாய நலக் கூடங்களுக்கு ரூ.6.81 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

ஈங்கூர் தொழிற்பேட்டையில் 200 தொழிற்கூடங்கள் 1997 ஆம் ஆண்டு கட்டப்பட்டு, 2003 ஆம் ஆண்டில் அது தொடர்பான வழக்கு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த வழக்கின் தீர்ப்பு, 12–3–2017 அன்றுதான் வழங்கப்பட்டது. அந்தக் கட்டடங்கள் பயன்படுத்தப்படாத நிலையில் இருக்கின்றன. எனவே, stability certificate பெறப்பட்ட பிறகு, பயனாளிகளுக்கு அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறை சார்ந்த அறிவிப்புகளை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

அறிவிப்புகள்

1. 1,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு துரித மின் இணைப்புத் திட்டத்தின்கீழ் (Tatkal Scheme) மின் இணைப்பு பெற 90 சதவீதம் மானியம் ரூ.23.37 கோடி செலவில் வழங்கப்படும்

விவசாயத்திற்கான இலவச மின் இணைப்புத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின்மூலம் வழங்கப்படும் துரித மின் இணைப்புத் திட்டத்தில் (Tatkal Scheme) செலுத்தப்பட வேண்டிய வைப்புத் தொகை குதிரைத் திறனுக்கேற்ப ரூ.2.50 இலட்சம் முதல் ரூ.4.00 இலட்சம் வரை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்நிதியாண்டில் 1,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு துரித மின் இணைப்புத் திட்டத்தின்கீழ் (Tatkal Scheme) மின் இணைப்பு பெற 90 சதவீதம் மானியம் (ரூ.2.25 இலட்சம் முதல் ரூ.3.60 இலட்சம் வரை) வழங்கப்படும். இதனால் அரசிற்கு ஏற்படும் செலவு ரூ.23.37 கோடி ஆகும்.

2. வீடற்ற 500 தூய்மைப் பணியாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு ரூ.55.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் வீடுகள் வாங்கிட மானியம் வழங்கப்படும்

தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள வீடற்ற 500 தூய்மைப் பணியாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு, தகுதியின் அடிப்படையில் தலா ரூ.11.00

இலட்சம் வீதம் மொத்தம் ரூ.55.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்மூலம் கட்டப்படும் பயனாளிகள் பங்களிப்புடன்கூடிய வீடுகள் வாங்க ரூ.42.50 கோடி மானியமாக வழங்கப்படும்.

3. 10,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளநிலை மற்றும் முதுநிலை பட்ட மாணாக்கருக்கு வேலைவாய்ப்பு/போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளத் தேவையான பயிற்சிகள் ரூ.10.00 கோடி செலவில் வழங்கப்படும்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு பயின்று வரும் 7,600 ஆதி திராவிட மாணாக்கர் மற்றும் 2,400 பழங்குடியின மாணாக்கர் என மொத்தம் 10,000 மாணாக்கருக்கு வேலைவாய்ப்புத் தேர்வுகளை எதிர்கொள்ளத் தேவையான மொழித்திறன் (Communication Skills), திறனறித் தேர்வுகள் (Verbal & Logical reasoning and Aptitude tests) மற்றும் குழு விவாதம் (Group discussion) ஆகிய இனங்களில் Aspiring Minds Computer Adaptability Test (AMCAT) பயிற்சிகள் தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்மூலம் ரூ.10.00 கோடி செலவில் வழங்கப்படும்.

4. 2,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.2.50 கோடி செலவில் மதிப்புக் கூட்டப்பட்ட தொழில் திட்டங்கள் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படும்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களின் பொருளாதார நிலையை உயர்த்திடும் பொருட்டு 2,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்திட பயிற்சிகள் வழங்கப்படும். சேவை சார்ந்த தொழில்கள் அமைக்கத் தேவையான பயிற்சிகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU), மத்திய பிளாஸ்டிக் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கழகம் (CIPET), தேசிய நவீன ஆடை வடிவமைப்பு நிறுவனம் (NIFT), மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் (CLRI), மத்திய உணவு தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம் (CFTRI), நெட்டூர் தொழில்நுட்பப் பயிற்சி மையம் (NTTF), இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் பேக்கேஜிங் (IIP) போன்ற அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள்மூலம் ரூ.2.50 கோடி செலவில் வழங்கப்படும்.

5. 200 நிலமற்ற ஆதி திராவிட மற்றும் பழங்குடியின விவசாய தொழிலாளர்கள் நிலம் வாங்க ரூ.10.00 கோடி செலவில் மானியம் வழங்கப்படும்

நிலமற்ற ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்கள் சமூக, பொருளாதார நிலையில் மேம்பாடு அடையும் பொருட்டு, அவர்கள் விவசாய நிலம் வாங்க நிலத்தின் விலையில் 50% அல்லது அதிகபட்சமாக ரூ.5.00 இலட்சம் வரை மானியம் வழங்கப்படும். ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் 200 நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் இத்திட்டத்தின்மூலம் பயன் பெறுவார்கள்.

6. பழுதடைந்துள்ள 10 ஆதி திராவிடர் பள்ளி மாணாக்கர் விடுதிகளுக்கு ரூ.45.45 கோடி மதிப்பீட்டில் புதிய விடுதிக் கட்டடங்கள் கட்டப்படும்

ஆதி திராவிட மாணாக்கர் தமது பள்ளிக் கல்வியை இடைநிற்றலின்றி தொடர்ந்திடும் வகையில் மிகவும் பழுதடைந்துள்ள சேத்தியாதோப்பு, குளித்தலை, மீன்சுருட்டி, திருவண்ணாமலை மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய இடங்களில் இயங்கி வரும் 5 பள்ளி மாணவர் விடுதிகள், நிலக்கோட்டை, செய்யூர், வந்தவாசி, செஞ்சி மற்றும் திருப்பனந்தாள் ஆகிய இடங்களில் இயங்கி வரும் 5 பள்ளி மாணவியர் விடுதிகள் என மொத்தம் 10 விடுதிகளுக்கு அனைத்து வசதிகளுடன்கூடிய புதிய விடுதிக் கட்டடங்கள் ரூ.45.45 கோடி செலவில் கட்டப்படும்.

7. வாடகைக் கட்டடங்கள்/பழுதடைந்த கட்டடங்களில் இயங்கி வரும் 5 ஆதி திராவிட மாணாக்கர் கல்லூரி விடுதிகளுக்கு ரூ.28.35 கோடி செலவில் புதிய விடுதிக் கட்டடங்கள் கட்டப்படும்

ஆதி திராவிட மாணாக்கரின் உயர் கல்விக்கு உதவிடும் பொருட்டு அவர்கள் பாதுகாப்பாகத் தங்கி கல்வி பயிலும் வகையில், இதுவரை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி மாணவியர் விடுதி மற்றும் பழுதடைந்த கட்டடங்களில் இயங்கி வரும் கடலூர் மாணவியர் விடுதி, கோயம்புத்தூர் (வடக்கு) மாணவர் விடுதி, திண்டுக்கல் மாவட்டம், பழனி மாணவர் விடுதி மற்றும் திருப்பூர் மாணவர் விடுதி ஆகிய 5 கல்லூரி மாணாக்கர் விடுதிகளுக்கு ரூ.28.35 கோடி செலவில் புதிய விடுதிக் கட்டடங்கள் கட்டப்படும்.

8. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் 6 மேல்நிலைப் பள்ளிகள் ரூ.16.26 கோடி செலவில் மாதிரிப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும்

வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப தேவையான உட்கட்டமைப்பு வசதிகள், மேம்படுத்தப்பட்ட கற்பிக்கும் திறன் ஆகிய வசதிகளுடன் காஞ்சிபுரம் மாவட்டம்–ஈஞ்சம்பாக்கம், திருச்சி மாவட்டம்–காட்டூர், திருவாரூர் மாவட்டம்–திருவாரூர் ஆகிய இடங்களில் இயங்கும் மூன்று ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம்–பேச்சிப்பாறை, நீலகிரி மாவட்டம்–குஞ்சப்பனை, சேலம் மாவட்டம்–வெள்ளிகவுண்டனூர் ஆகிய இடங்களில் இயங்கும் மூன்று பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளிகள் என மொத்தம், 6 பள்ளிகள், ஆங்கில மொழிப் பயிற்சி, உயர் தொழில்நுட்ப ஆய்வகம், அறிவுத்திறன் வகுப்பறைகள், போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி ஆகிய சிறப்பம்சங்களுடன்கூடிய மாதிரிப் பள்ளிகளாக ஒரு பள்ளிக்கு தலா ரூ.2.71 கோடி வீதம், மொத்தம் ரூ.16.26 கோடி செலவில் தரம் உயர்த்தப்படும்.

9. 11 மாவட்டங்களில் உள்ள பழங்குடியினர் குடியிருப்புகளில் ரூ.17.00 கோடி மதிப்பீட்டில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்

திருவண்ணாமலை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், ஈரோடு, நாமக்கல், கோயம்புத்தூர், நீலகிரி, சேலம் மற்றும் தருமபுரி ஆகிய 11 மாவட்டங்களில் வாழும் பழங்குடியின மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள், சாலை வசதி, குடிநீர் வசதி, தடுப்பணை கட்டுதல் மற்றும் பள்ளிகள் பராமரிப்பு/பழுதுபார்த்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற உட்கட்டமைப்பு பணிகள் ரூ.17.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

10. 83 ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு ரூ.10.58 கோடி மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்டப்படும்

ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கும் விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவியரின் பாதுகாப்பை உறுதி செய்திடும் பொருட்டு, 9 கல்லூரி மாணவியர் விடுதிகள் மற்றும் 74 பள்ளி மாணவியர் விடுதிகள் ஆக மொத்தம், 83 ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு ரூ.10.58 கோடி செலவில் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

11. 500 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு தாட்கோ பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் கறவை மாடுகள் வாங்க ரூ.2.25 கோடி மானியம் வழங்கப்படும்

பெருமளவில் விவசாயத் தொழில்புரியும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களைப் பொருளாதாரத்தில் தற்சார்பு உடையவர்களாக மாற்றிடும் வகையில், கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள 500 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் கறவைமாடுகள் வாங்க தாட்கோ பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.2.25 கோடி மானியம் வழங்கப்படும்.

12. 100 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோருக்கு தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தின் விற்பனை முகவராக ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் சிமெண்ட் விற்பனை நிலையம் அமைக்க ரூ.90.00 இலட்சம் மானியம் வழங்கப்படும்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக 100 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின தொழில்முனைவோருக்கு தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தின் விற்பனை முகவராக நியமனம் பெற்று, ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் சிமெண்ட் விற்பனை நிலையம் தொடங்கிட, தாட்கோ பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்மூலம் ரூ.90.00 இலட்சம் மானியம் வழங்கப்படும்.

13. 50 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோருக்கு ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் ஆவின் பாலகம் அமைக்க ரூ.45.00 இலட்சம் மானியம் வழங்கப்படும்

50 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோரின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்திடும் வகையில், உறைவிப்பான் (Freezer), *குளிர்விப்பான்* (Chiller) *போன்ற உபகரணங்களை கொள்முதல் செய்து ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் ஆவின் பாலகம் அமைத்து வருவாய் ஈட்டிட, ரூ.45.00 இலட்சம் மானியம் வழங்கப்படும்.*

14. 40 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்

2,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் பயன்பெறும் வகையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின

மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க வாய்ப்புள்ள மாவட்டங்களில், தலா 50 உறுப்பினர்களைக் கொண்ட 40 புதிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படும். அச்சங்கங்களுக்குத் தேவைப்படும் பால் குவளைகள் (Milk Canes), பரிசோதனை உபகரணங்கள் மற்றும் பதிவேடுகள் வாங்க தலா ரூ.1.00 இலட்சம் வீதம் மொத்தம், ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் உதவித்தொகை வழங்கப்படும்.

15. 1,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு தீவனப்புல் வளர்க்க விதைத் தொகுப்பு மற்றும் புல்கரணைகள் ரூ.1.00 கோடி செலவில் வழங்கப்படும்

1,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளின் கால்நடைகளுக்குத் தேவைப்படும் தீவனப்புல் வளர்க்க ஒரு பயனாளிக்கு ஏக்கருக்கு ரூ.10,000/- மதிப்பீட்டில் விதைத் தொகுப்பு மற்றும் புல்கரணைகள் கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம்/ ஆவின் நிறுவனம்மூலம் ரூ.1.00 கோடி செலவில் வழங்கப்படும்.

16. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தில் ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.3.00 இலட்சமாக உயர்த்தப்படும்

தாட்கோமூலம் செயல்படுத்தப்படும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்திற்கு தற்போது குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதிக எண்ணிக்கையிலான நபர்கள் பயனடையும் வகையில் தற்போது நடைமுறையிலுள்ள குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.3.00 இலட்சமாக உயர்த்தி நிர்ணயிக்கப்படும்.

17. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோருக்காக தொழில்நுட்ப–பொருளாதார ஆய்வுமூலம் ரூ.1.00 கோடி செலவில் திட்ட அறிக்கை வங்கி ஏற்படுத்தப்படும்

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தொழில் துவங்க சாதகமாக உள்ள தொழில் திட்டங்களைக் கண்டறிந்து, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்கள் புதிய வகை தொழில்களில் ஈடுபட உதவிடும் பொருட்டு மாவட்ட வாரியாக தொழில்நுட்ப-பொருளாதார ஆய்வு (Techno–Economic Survey) நடத்தப்படும். அதன்மூலம், திட்ட அறிக்கை வங்கி (Project Bank) ஒன்று ரூ.1.00 கோடி செலவில் உருவாக்கப்படும்.

பிற்பகல் 2—30

18. 7 மாவட்டங்களில் உள்ள 88 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு ரூ.9.24 கோடி மதிப்பீட்டில் வைப்பறையுடன்கூடிய புதிய சமையலறைகள் கட்டப்படும்

பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கர் பயன்பெற்றிடும் வகையில், கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், திருவண்ணாமலை, நாமக்கல், சேலம், தருமபுரி மற்றும் திருச்சி ஆகிய 7 மாவட்டங்களில் உள்ள 88 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பழுதடைந்த நிலையில் உள்ள சமையலறைகளுக்கு மாற்றாக வைப்பறையுடன் கூடிய புதிய சமையலறைகள் தலா ரூ.10.50 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.9.24 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

19. 305 ஆதி திராவிடர் நலப் பள்ளிகளுக்கு தேவையான அறைகலன்கள் மற்றும் தளவாடப் பொருட்கள் ரூ.7.46 கோடி செலவில் வழங்கப்படும்

ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கும் பள்ளிகள் தேவையின் அடிப்படையில் தரம் உயர்த்தப்பட்டு வருவதால், மாணாக்கர் வசதியாகக் கல்வி பயிலும் வகையில், 99 நடுநிலைப் பள்ளிகள், 108 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 98 மேல்நிலைப் பள்ளிகளுக்குத் தேவையான 8,060 நீள் இருக்கைகள் மற்றும் 305 பள்ளிகளுக்குத் தேவையான இரும்பு அலமாரி ஆகிய அறைகலன்கள் மற்றும் தளவாடப் பொருட்கள் ரூ.7.46 கோடி செலவில் வழங்கப்படும்.

20. ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளுக்கு ரூ.5.70 கோடி செலவில் கழிவறைகள் மற்றும் குளியலறைகள் கட்டப்படும்

ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கும் 19 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 21 மேல்நிலைப் பள்ளிகளில் கல்வி பயிலும் 10,796 மாணாக்கருக்கு சுகாதாரமான கழிவறை வசதிகளை ஏற்படுத்தித் தரும் வகையில் 40 கழிவறைகள் மற்றும் இத்துறையின்கீழ் இயங்கும் 43 விடுதிகளுக்கு 147 கழிவறைகள் மற்றும் 124 குளியலறைகள் ஆகிய சுகாதார கட்டமைப்பு வசதிகள் ரூ.5.70 கோடி செலவில் ஏற்படுத்தித் தரப்படும்.

2022 மே 6] *[திருமதி என். கயல்விழி செல்வராஜ்]*

21. 126 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள அறிவியல் ஆய்வகங்களுக்கு ரூ.3.15 கோடி மதிப்பீட்டில் ஆய்வு உபகரணங்கள் வழங்கப்படும்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கி வரும் 126 மேல்நிலைப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணாக்கருக்கு செயல்முறைக் கல்வியின் அவசியம் கருதி, அப்பள்ளிகளில் உள்ள இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் ஆய்வகங்களுக்குத் தேவையான அறிவியல் உபகரணங்கள், வேதிப்பொருட்கள் மற்றும் உயிரியல் உருவ மாதிரிகள் ஆகியவை ரூ.3.15 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

22. ஏழு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்லூரி மாணாக்கர் விடுதிகள் ரூ.3.35 கோடி மதிப்பீட்டில் புதிதாகத் துவங்கப்படும்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கான உயர்கல்வி வகுப்புகளை பெருக்கிடவும், அவர்கள் தொலைதூரம் சென்று கல்வி பயில்வதில் எழும் இடர்பாடுகளை அகற்றி, அவர்கள் பாதுகாப்பாகத் தங்கி கல்வி பயிலும் வகையிலும், திருப்பூர் மாவட்டம்–உடுமலைப்பேட்டை, திருவாரூர், தேனி மாவட்டம்–கோட்டூர் ஆகிய மூன்று இடங்களில் 3 ஆதி திராவிடர் கல்லூரி மாணவர் விடுதிகள் மற்றும் திருச்சி, தருமபுரி, செங்கல்பட்டு, நாமக்கல் ஆகிய 4 மாவட்டங்களில் 4 பழங்குடியினர் நல கல்லூரி மாணவியர் விடுதிகள் என மொத்தம், 7 கல்லூரி மாணாக்கர் விடுதிகள் ரூ.3.35 கோடி செலவில் புதிதாகத் துவங்கப்படும்.

23. ஐந்து ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளில் கலைப் பாடப் பிரிவுகள் ரூ.1.68 கோடி மதிப்பீட்டில் புதிதாகத் துவங்கப்படும்

ஆதி திராவிட மாணாக்கர் அறிவியல் பாடங்கள் தவிர கலைப் பாடங்களைப் (Arts Group) பயில உதவிடும் வகையில் இதுவரை கலைப் பாடப் பிரிவுகள் இல்லாத காஞ்சிபுரம் மாவட்டம்–மௌலிவாக்கம், திருவள்ளூர் மாவட்டம்–தேர்வாய், மதுரை மாவட்டம்–அச்சம்பட்டி, திருச்சி மாவட்டம்–மிளகுபாறை மற்றும் திருநெல்வேலி மாவட்டம்–கடம்பன்குளம் ஆகிய 5 இடங்களில் இயங்கி வரும் ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளில் வணிகவியல், கணக்குப் பதிவியல், பொருளியல் மற்றும் வரலாறு ஆகிய பாடங்களைக் கொண்ட கலைப் பாடப் பிரிவுகள் ரூ.1.68 கோடி மதிப்பீட்டில் புதிதாகத் துவங்கப்படும்.

24. 104 ஆதி திராவிடர் நல விடுதிகள் மற்றும் 128 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு ரூ.1.15 கோடி செலவில் எரிவாயு இணைப்பு வழங்கப்படும்

ஆதி திராவிடர் நல விடுதிகள் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கிக் கல்வி பயிலும் மாணாக்கருக்கு விரைவாக சமையல் செய்து உணவு வழங்கிடும் பொருட்டு, இதுவரை எரிவாயு இணைப்பு இல்லாத 104 ஆதி திராவிடர் நல விடுதிகள் மற்றும் 128 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு எரிவாயு இணைப்பு ரூ.1.15 கோடி செலவில் வழங்கப்படும்.

25. 13 மகாத்மா காந்தி தொழிலாளர்கள் ஒப்பந்தம் மற்றும் திறன் மேம்பாட்டு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரூ.1.96 கோடி மதிப்பீட்டில் சுகாதார அங்காடிகள் அமைக்கப்படுவதற்கு ரூ.98.00 இலட்சம் மானியம் வழங்கப்படும்

தூய்மைப் பணியாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ள 13 மகாத்மா காந்தி தொழிலாளர்கள் ஒப்பந்தம் மற்றும் திறன் மேம்பாட்டு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சுகாதார அங்காடிகள் (Sanitary Marts) *தலா ரூ.15.00 இலட்சம் வீதம் ரூ.1.96 கோடி மதிப்பீட்டில் அமைக்க ரூ.98.00 இலட்சம் மானியம் வழங்கப்படும்.*

26. பழங்குடியினர் வருவாய் ஈட்டும்பொருட்டு உன்னிக்குச்சி மூலம் தளவாடப் பொருட்கள் தயாரிக்க ரூ.1.80 கோடி செலவிடப்படும்

*நீலகிரி மாவட்டம், முதுமலை வனப் பகுதி மற்றும் ஈரோடு மாவட்டத்தில் மலைப் பகுதிகளில் உள்ள உன்னிக்குச்சி செடிகளின் (*Lantana camara*) பிரம்பினைப் பயன்படுத்தி செய்யப்படும் மேசை, நாற்காலி, சோபா உள்ளிட்ட பல்வேறு தளவாடங்களுக்கு மக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது. இத்தகைய பொருட்களைச் செய்வதற்குத் தகுந்த பயிற்சிகள் அளித்தல், உபகரணங்கள் மற்றும் மூலப்பொருட்கள் வாங்குதல், சந்தைப்படுத்துதல் ஆகிய பணிகளை உள்ளடக்கிய பணிகளுக்கு ரூ.1.80 கோடி செலவிடப்படும்.*

27. தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம் மற்றும் பழங்குடியினர் நல வாரியம் ஆகிய வாரியங்களின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நலத் திட்ட உதவிகள் இதர நல வாரியங்களில் வழங்கப்படும் உதவித் தொகைக்கு இணையாக உயர்த்தி வழங்கப்படும்

தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம் மற்றும் பழங்குடியினர் நல வாரியம் ஆகிய வாரியங்களின்கீழ் பதிவு

செய்துள்ள உறுப்பினர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் இதுவரை வழங்கப்பட்டு வந்த இயற்கை மரண உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, முதியோர் ஓய்வூதியம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை ஆகிய நலத் திட்ட உதவிகள், இதர நல வாரியங்களால் வழங்கப்பட்டு வரும் உதவித் தொகைக்கு இணையாக உயர்த்தி வழங்கப்படும். இதனால் சுமார் 3,826 பயனாளிகள் பயன் பெறுவர்.

28. 50 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலக் கல்லூரி மாணாக்கர் விடுதிகளில் நூலகங்கள் மற்றும் இணைய வழி நூலகங்கள் ரூ.70.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படும்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலக் கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் தங்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவும், பல்வேறு போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும்பொருட்டும், 25 விடுதிகளில் நூலகங்கள் மற்றும் இணையவழியில் படிப்பதற்கு ஏதுவாக 25 விடுதிகளில் இணையவழி நூலகங்கள் (e–Library) என மொத்தம், 50 விடுதிகளில் ரூ.70.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக நூலகங்கள் அமைக்கப்படும்.

29. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்லூரி மாணாக்கர் மற்றும் இளைஞர்களுக்கு நிதி சார்ந்த தொழில்களில் பயிற்சி ரூ.50.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்

தற்போதைய வேலைவாய்ப்பு சந்தையில் வங்கி மற்றும் காப்பீட்டுத் துறைகளில் கிடைக்கும் வாய்ப்புகளை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கர் பயன்படுத்திக்கொள்ளும் வகையில், ஆதி திராவிடர் நலக் கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் 500 மாணாக்கர் மற்றும் தாட்கோ மூலம் தேர்வு செய்யப்படும் 100 ஆதி திராவிட இளைஞர்களுக்கு நிதி மேலாண்மை (Financial Management), காப்பீடு (Insurance) மற்றும் வங்கிச் சேவை (Banking) போன்ற நிதி சார்ந்த தொழில்களில் பயிற்சி ரூ.50.00 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

30. 90 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிகளில் ரூ.50.00 இலட்சம் செலவில் கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தப்படும்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் கல்லூரி விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவியரின்

பாதுகாப்பினை உறுதிசெய்திடும் பொருட்டு, 78 இளங்கலை, 6 முதுகலை, 2 பாலிடெக்னிக் மற்றும் 2 ஐ.டி.ஐ. மாணவியர் விடுதிகள் என மொத்தம், 88 ஆதி திராவிடர் நல மாணவர் விடுதிகள் மற்றும் 2 பழங்குடியினர் நல கல்லூரி மாணவியர் விடுதிகள் என மொத்தம் 90 விடுதிகளில் கண்காணிப்புக் கேமராக்கள் மற்றும் இதர சாதனங்கள் ரூ.50 இலட்சம் செலவில் பொருத்தப்படும்.

31. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலக் கல்லூரி மாணாக்கர் விடுதிகளில் ஆண்டிற்கு 3 முறை மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்படும்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலக் கல்லூரி மாணாக்கர் விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணாக்கரின் உடல்நலனைப் பேணிப் பாதுகாத்திடும் பொருட்டு 183 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலக் கல்லூரி மாணாக்கர் விடுதிகளில் ஆண்டிற்கு 3 முறை ரூ.17.00 இலட்சம் செலவில் மருத்துவப் பரிசோதனை முகாம்கள் ஆண்டுதோறும் நடத்தப்படும்.

32. 20 ஆதி திராவிடர் நலக் கல்லூரி விடுதிகள் மற்றும் 2 பழங்குடியினர் நலக் கல்லூரி விடுதிகளுக்கு ரூ.15.00 இலட்சம் செலவில் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படும்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணாக்கர் அன்றாட நிகழ்வுகளை அறிந்து கொள்ளவும் மற்றும் பொது அறிவினை வளர்த்துக்கொள்ளவும், 20 ஆதி திராவிடர் நலக் கல்லூரி விடுதிகள் மற்றும் 2 பழங்குடியினர் நலக் கல்லூரி விடுதிகளுக்கு 55 அங்குலம் தொலைக்காட்சிப் பெட்டிகள் ரூ.15.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

33. அழிவின் விளிம்பில் உள்ள 6 பண்டைய பழங்குடியினரின் இனவரவியல் மற்றும் கலாச்சாரங்கள் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒலி/ஒளி ஆவணமாகப் பதிவு செய்யப்படும்

அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினரின் கலாச்சாரங்களை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு எடுத்துச் சென்று விழிப்புணர்வு ஊட்டவும், பிற மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டின் பண்டைய பழங்குடியினர் குறித்த ஆய்வுகளுக்கு உதவிடும் வகையிலும், தோடர், கோத்தர், குறும்பர், இருளர், பனியர் மற்றும் காட்டுநாயக்கன் ஆகிய 6 பண்டைய

பழங்குடியினரின் இனவரவியல் (ethnographic research) மேலும் அவர்களது கலாச்சாரங்களை அழியாவண்ணம் பாதுகாக்க ஒலி/ஒளி ஆவணமாக (Audio and video documentation) ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் பதிவு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மானியக் கோரிக்கையினைத் தயாரிப்பதற்கு உறுதுணையாக இருந்த, தலைமைச் செயலாளர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிச் செயலாளர் அவர்களுக்கும், நிதித் துறையின் கூடுதல் செயலாளர் அவர்களுக்கும், துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களுக்கும், பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களுக்கும், ஆதி திராவிடர் நலத் துறை ஆணையர் அவர்களுக்கும், தாட்கோ மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கும், தாட்கோ தலைவர் அவர்களுக்கும் மற்றும் அல்லும்பகலும் என்னுடன் அயராது பணிபுரிந்துவந்த துறை அலுவலர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் 94 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். அந்த வெட்டுத் தீர்மானங்களை நான் படித்துப் பார்த்தேன். இந்த மானியக் கோரிக்கை தொடர்பாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கிய கருத்துகளுக்கு வேண்டிய விளக்கங்களை அளித்துள்ளேன் என்று நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் வெட்டுத் தீர்மானங்களில் சுட்டிக்காட்டிய ஆலோசனைகள், திட்டங்கள் குறித்து நன்கு பரிசீலனை செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையைப் பெற்று, உரியவகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, வெட்டுத் தீர்மானங்களை அளித்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இம்மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடிவாக தலைவர் அவர்களை 'முதல்வர்களின் முதல்வர்' என்று அழைத்தபோது, அதனை மறுத்துவிட்டு, 'தமிழ்நாடு என்றைக்கு

மாநிலங்களுக்கிடையில் முதல் மாநிலமாக எல்லாத் துறைகளிலும் முதன்மை பெறுகிறதோ அன்றைக்குத்தான் நான் முழுமையான மகிழ்ச்சியடைவேன்' என்று சொன்னார், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். தந்தை பெரியார், 1954–ல், பச்சைத் தமிழன் திரு. காமராஜர் அவர்களை முதலமைச்சராக்கி, சமூக நீதியைக் காப்பாற்றினார்; 1967–ல், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், இந்த மாமன்றத்தை திராவிட இயக்கத்தின் தத்துவமுள்ளவர் தந்தை பெரியார் அவர்களுக்குக் காணிக்கையாக்கினார்; 1974–ல் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், தமது ஆட்சியை நாலாந்தர சூத்திர ஆட்சி என்று பிரகடனப்படுத்தினார்; தற்போது, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஆகிய மூவரின் கூட்டுக் கலவையான நமது தலைவர், மாண்புமிகு முதல்வர் அவர்கள், திராவிட மாடல் ஆட்சியை இந்தியா முழுவதும் அறிமுகம் செய்து, இன எதிரிகளுக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கி வருகிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

அதன் தொடர்ச்சியாக, எளிய கழகக் குடும்பத்தில் இருந்து வந்த எனக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் பொறுப்பை அளித்து, அழகு பார்த்துள்ளார்கள். தலைவர் அவர்களின் உழைப்பும், தியாகமும் எனக்கு என்றைக்கும் உந்துசக்தியாக இருந்து வருகிறது. தலைவர் எனக்கு வழங்கிய பணியினை, தலைவரின் எண்ணம் முழுமையாக ஈடேறும்வகையில் கடுமையாக உழைப்பேன் என்று உறுதியளித்து, என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.3,846,91,72,000/–, மூலதனக் கணக்கில் ரூ.414,43,96,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.40,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

6. அரசினர் தீர்மானங்கள்

(அ) பேரவைக் குழுக்களின் பதவிக் காலத்தை ஓராண்டுக்கு நீட்டித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2021–2022 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்ற மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, பேரவை விதிகள் குழு ஆகிய குழுக்களின் பதவிக் காலத்தை நீட்டித்தல் குறித்த தீர்மானத்தை முன்மொழிதல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021–2022 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்ற மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, பேரவை விதிகள் குழு ஆகிய குழுக்கள் எடுத்துக் கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை. ஆதலால், ஒவ்வொரு நடப்பு ஆண்டின் இறுதியில் மேற்படி குழுக்களின் பதவிக் காலம் முடிவடைய வரையறுக்கும் பேரவை விதிகள் முறையே 195(2), 203(3), 211(3) மற்றும் 256(2) ஆகியவற்றைத் தளர்த்தி, அக்குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற உறுப்பினர்களே தொடர்ந்து 2023 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் முடிய பணியாற்ற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[2022 மே 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, பேரவை விதிகள் குழு ஆகிய குழுக்களின் பதவிக் காலம் 31–3–2023 வரை நீட்டிக்கப்படுகிறது.

பிற்பகல் 2–40

அடுத்து, 2021–2022 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்ற சட்ட விதிகள் ஆய்வுக் குழு, அரசு உறுதிமொழிக் குழு, அவைக் குழு, மனுக்கள் குழு, பேரவை நூலகக் குழு, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு, அவை உரிமைக் குழு, அலுவல் ஆய்வுக் குழு ஆகிய குழுக்களின் பதவிக் காலத்தை நீட்டித்தல் குறித்த தீர்மானத்தை முன்மொழிதல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021–2022 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்ற சட்ட விதிகள் ஆய்வுக் குழு, அரசு உறுதிமொழிக் குழு, அவைக் குழு, மனுக்கள் குழு, பேரவை நூலகக் குழு, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு ஆகிய குழுக்கள் எடுத்துக்கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை. ஆதலால், ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியில் மேற்படி குழுக்களின் பதவிக்காலம் முடிவடைய வரையறுக்கும் பேரவை விதிகள் முறையே 239(2), 248(2), 253(2), 261(3), 264(2) மற்றும் 268(iv) ஆகியவற்றை தளர்த்தி, அக்குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற உறுப்பினர்களே தொடர்ந்து 2023 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரை அக்குழுக்களில் பணியாற்ற வேண்டும். மேலும், பேரவை விதி 227(2)-ஐ தளர்த்தி அவை உரிமைக் குழுவில் தற்போது பணியாற்றி வரும்

2022 மே 6] [திரு. துரைமுருகன்]

உறுப்பினர்களே அடுத்த குழு தேர்ந்தெடுக்கப்படும் வரையிலும் மற்றும் பேரவை விதி 231(2)–ஐ தளர்த்தி அலுவல் ஆய்வுக் குழுவில் தற்போது பணியாற்றிவரும் உறுப்பினர்களே அடுத்த குழு நியமனம் செய்யப்படும் வரையில் பணியாற்ற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்ட விதிகள் ஆய்வுக் குழு, அரசு உறுதிமொழிக் குழு, அவைக் குழு, மனுக்கள் குழு, பேரவை நூலகக் குழு, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு ஆகிய குழுக்களின் பதவிக் காலம் 31–3–2023 வரை நீட்டிக்கப்படுகிறது.

அவை உரிமைக் குழு மற்றும் அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் தொடர்ந்து பணியாற்றுவார்கள்.

(ஆ) பேரவை விதி 32–ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை (7–5–2022) சனிக்கிழமை அன்று வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ நாளை (7–5–2022) சனிக்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (7–5–2022) சனிக்கிழமை அன்று வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் நாளை (7–5–2022) சனிக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–42 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

86. தமிழ்நாடு 2022 ஆம் ஆண்டு பூச்சிக்கொல்லிகள் (மேல்முறையீடு) விதிகளை இயற்றியது குறித்து வேளாண்மை மற்றும் உழவர் நல(வே.உ.5)த் துறையின் 15–2–2022 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 29–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1968 ஆம் ஆண்டு பூச்சிக்கொல்லிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 46/1968) 37(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

87. 2018–2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் இருபத்து நான்காவது ஆண்டறிக்கை. [1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 8(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

88. 2020–2021 ஆம் ஆண்டிற்கான மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் (சென்னை) நாற்பத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

2022 மே 6]

89. 2020–2021 ஆம் ஆண்டிற்கான அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் நாற்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [*2013* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *18/2013*) *395*(*1*)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

90. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம்) நாற்பத்து ஆறாவது ஆண்டறிக்கை. [*2013* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *18/2013*) *395*(*1*)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

91. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை) ஐம்பதாவது ஆண்டறிக்கை. [*2013* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *18/2013*) *395*(*1*)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

92. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர்) ஐம்பதாவது ஆண்டறிக்கை. [*2013* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *18/2013*) *395*(*1*)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

93. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம்) ஐம்பதாவது ஆண்டறிக்கை. [*2013* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *18/2013*) *395*(*1*)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

94. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (சேலம்) நாற்பத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [*2013* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *18/2013*) *395*(*1*)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

95. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (திருநெல்வேலி) பதினொன்றாவது ஆண்டறிக்கை. [*2013* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *18/2013*) *395*(*1*)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

[*2022* மே *6*

96. 2020–2021 ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழுவின் முப்பத்து ஏழாவது ஆண்டறிக்கை. [*2013* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *18/2013*) *395*(*1*)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

97. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் நாற்பத்து ஆறாவது ஆண்டறிக்கை. [*2013* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *18/2013*) *395*(*1*)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

98. 2018–2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தணிக்கை அறிக்கை. [*1970* ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *4/1971*) *47*(*2*)(a) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

99. 2019–2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தணிக்கை அறிக்கை. [*1970* ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *4/1971*) *47*(*2*)(a) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

100. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் ஆண்டறிக்கை மற்றும் அவ்வறிக்கையில் இடம்பெற்றுள்ள பரிந்துரைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய அறிக்கை. [*1993* ஆம் ஆண்டு மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *10/1994*) *28*(*2*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

101. 2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆண்டறிக்கை. [*2005* ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *22/2005*) *25*(*4*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

102. 2018–2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தணிக்கை அறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள். [*1968* ஆம் ஆண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய (கணக்குகள் & தணிக்கை) விதிகளின் விதி *6(6)*–ன்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

2022 மே 6]

103. 2019–2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் முப்பத்து எட்டாவது ஆண்டறிக்கை. [*2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)*(b) *பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] *(தமிழ்–ஆங்கிலம்)*

104. 2017–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் ஆண்டுக் கணக்கு மீதான தணிக்கை அறிக்கை. [*1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] *(தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

173. 2019–2020 ஆம் ஆண்டிற்கான சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் ஆண்டறிக்கை. (தமிழ்–ஆங்கிலம்)

174. மானியக் கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2022–2023. (*தமிழ் மற்றும் ஆங்கிலம்*)

175. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய வரவு செலவு செயலாக்கத் திட்டம், 2022–2023. (*தமிழ் மற்றும் ஆங்கிலம்*)

176. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2022–2023. (*தமிழ் மற்றும் ஆங்கிலம்*)

177. சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் 'தமிழ்நாடு சுற்றுலாத் துறை 2021–2022' என்கிற சிறுநூல். (*தமிழ்*)

178. இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (*உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை*) *மற்றும் போக்குவரத்துத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2022–2023.* (*தமிழ்*)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

[2022 மே 6

179. சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் ஆகியோர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2022–2023. (தமிழ்)

180. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்து மூன்றாவது அறிக்கை. (2021–2022)

181. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்து நான்காவது அறிக்கை. (2021–2022)

182. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்து ஐந்தாவது அறிக்கை. (2021–2022)

183. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்து ஆறாவது அறிக்கை. (2021–2022)

184. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்து ஏழாவது அறிக்கை. (2021–2022)

185. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்து எட்டாவது அறிக்கை. (2021–2022)

186. பொது நிறுவனங்கள் குழுவின் பதினான்காவது அறிக்கை. (2021–2022)

187. பொது நிறுவனங்கள் குழுவின் பதினைந்தாவது அறிக்கை. (2021–2022)

188. பொது நிறுவனங்கள் குழுவின் பதினாறாவது அறிக்கை. (2021–2022)

189. பொது நிறுவனங்கள் குழுவின் பதினேழாவது அறிக்கை. (2021–2022)

190. பொது நிறுவனங்கள் குழுவின் பதினெட்டாவது அறிக்கை. (2021–2022)

191. பொது நிறுவனங்கள் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை. (2021–2022)

2022 மே 6]

192. அரசு உறுதிமொழிக் குழுவின் மூன்றாவது அறிக்கை. (*2021–2022*)

193. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் மூன்றாவது அறிக்கை. (*2021–2022*)

194. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். [இரண்டாவது பட்டியல் (*2022*)] (வரிசை எண்கள் *1* முதல் *250* வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை)

195. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். [மூன்றாவது பட்டியல் (*2022*)] (வரிசை எண்கள் *1* முதல் *250* வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை)

196. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். [நான்காவது பட்டியல் (*2022*)] (வரிசை எண்கள் *1* முதல் *250* வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை)

197. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். [ஐந்தாவது பட்டியல் (*2022*)] (வரிசை எண்கள் *1* முதல் *300* வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை)

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I

(57 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

(பட்டியல்கள் 2 முதல் 5 வரை)@

பட்டியல் 2

1—

புறக்காவல் நிலையம் அமைத்தல்

வினா எண் 1311—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சின்னசேலம் ஒன்றியம், அம்மகளத்தூர் ஊராட்சியில் புறக்காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

கள்ளக்குறிச்சி உட்கோட்டம், கீழ்க்குப்பம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அம்மகளத்தூர் கிராமமானது கீழ்க்குப்பம் காவல் நிலையத்திலிருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ளது. மேற்படி கிராமத்திலிருந்து பொதுமக்கள் காவல் நிலையம் வந்து செல்வதற்கு போதுமான போக்குவரத்து வசதிகள் உள்ளதால், அம்மகளத்தூர் ஊராட்சியில் புறக்காவல் நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

2—

புறக்காவல் நிலையம் அமைத்தல்

வினா எண் 1312—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

கள்ளக்குறிச்சி ஒன்றியம், புக்கிரவாரி ஊராட்சியில் புறக்காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

கள்ளக்குறிச்சி உட்கோட்டத்தில் கீழ்க்குப்பம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட புக்கிரவாரி கிராமமானது காவல் நிலையத்திலிருந்து 12 கி.மீ. தூர அளவில் உள்ளது என்பதால், புக்கிரவாரி கிராமத்திற்குப் புறக்காவல் நிலையம் அமைக்க அவசியம் எழவில்லை.

3—

தடுப்பணைகள் கட்டுதல்

வினா எண் 154—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பாபநாசம் வட்டம், கருப்பூர்—புத்தூரிலிருந்து—அரியலூர் மாவட்டம், குருவாடிக்கு இடையிலும் மற்றும் சத்தியமங்கலம் (கபிஸ்தலம்) வாழ்க்கையிலிருந்து—அரியலூர் மாவட்டம், தூத்தூர் வரையிலும் கொள்ளிடம் ஆற்றில் புதிய தடுப்பணைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

*அரியலூர் மாவட்டம், தூத்தூர் கிராமம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம், வாழ்க்கை கிராமம் ஆகியவற்றிற்கிடையே மேலணையின் கீழ்ப்புறம் 79.50-வது கிலோ மீட்டரில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ரூ.600 கோடி மதிப்பீட்டில் ஒரு கதவணை (*Barrage*) அமைப்பதற்கான ஆய்வுப் பணிகள் முடிவுற்று, மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. மேற்காணும் கதவணை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதால், கருப்பூர்—புத்தூர் மற்றும் குருவாடிக்கு இடையே மற்றொரு கதவணை கட்ட அவசியம் எழவில்லை. மேலும், இக்கதவணை கட்டுவது தொழில்நுட்ப ரீதியாகவும் சாத்தியமில்லை.*

2022 மே 6]

4—

பாசன வாய்க்காலைத் தூர்வாருதல்

வினா எண் 155—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பாபநாசம் அன்னுகுடி பாசன வாய்க்காலைத் தூர்வாரி மீண்டும் பாசனப் பயன்பாட்டுக்கு கொண்டுவர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

பாபநாசம் வாய்க்கால் 2021-2022 ஆம் ஆண்டு ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. அன்னுக்குடி பழைய வாய்க்கால் 2016—2017 ஆம் ஆண்டில் ரூ.3.75 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

5—

அணைக்கட்டை தூர்வாரி மதகுகளைச் சீரமைத்தல்

வினா எண் 208—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, அக்கினி ஆறு பிரிவு, ஆச்சாம்பட்டி அய்யனார் அணைக்கட்டை தூர்வாரி, மதகுகளைச் சீரமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குடிமராமத்து திட்டத்தின்கீழ் 2020-2021 இல் ரூ.54.50 இலட்சத்தில் 6 எண்கள் அடைப்பு பலகைகள் மற்றும் 1 மணற்போக்கி புனரமைத்தல், உபரி நீர்போக்கி கண்காணிப்பு கோபுரம் அமைத்தல், கரைகளைப் பலப்படுத்துதல் (771 மீ.) மற்றும் வடிகால் வாரியின் முகப்பு பகுதி மட்டும் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2022 மே 6

6—

ஏரியைத் தூர்வாருதல்

வினா எண் 210—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, வெண்ணாறு பிரிவு, அள்ளூர்—அரசகுடி பாசன ஏரியைத் தூர்வாரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, வெண்ணாறு பிரிவு, அள்ளூர்—அரசகுடி பாசன ஏரியைத் தூர்வாரும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசால் பெறப்படவில்லை.

7—

கிளை வாய்க்கால் வெட்டுதல்

வினா எண் 211—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, பாளையப்பட்டி தெற்கு, பாளையப்பட்டி வடக்கு, செங்கிப்பட்டி, ஆச்சாம்பட்டி ஆகிய ஊராட்சிகளில் விவசாய நிலங்களுக்கு புதிய கட்டளை மேட்டு வாய்க்காலிலிருந்து புதிய கிளை வாய்க்கால் வெட்ட அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின்படி காவிரியில் பதிவு பெற்ற பாசன நிலங்களைத் தவிர்த்து

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2022 மே 6]

பிற நிலங்களுக்கு தண்ணீர் வழங்க இயலாத நிலை உள்ளதால், திருவையாறு தொகுதி, பாளையப்பட்டி தெற்கு, பாளையப்பட்டி வடக்கு, செங்கிப்பட்டி, ஆச்சாம்பட்டி ஆகிய ஊராட்சிகளில் உள்ள விவசாய நிலங்களுக்கு புதிய கட்டளை மேட்டு வாய்க்காலிலிருந்து புதிய வாய்க்கால் வெட்டி பாசன வசதி அளிக்க இயலாத நிலை உள்ளது.

8—

ஏரியைத் தூர்வாருதல்

வினா எண் 212—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, வெண்ணாறு பிரிவு, கள்ளப்பெரம்பூர் பாசன ஏரியைத் தூர்வாரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, வெண்ணாறு பிரிவு, கள்ளப்பெரம்பூர் பாசன ஏரியைத் தூர்வாரும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசால் பெறப்படவில்லை.

9—

ஏரிகளைப் பாசனப் பட்டியலில் சேர்த்தல்

வினா எண் 213—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, கடையக்குடி குருக்கள் ஏரி, அய்யனார் ஏரி, பொன்விளைந்தான்பட்டி அய்யனார் ஏரி, வெண்டையம்பட்டி ஊமத்தி ஏரி மற்றும் வடுகன்புதுப்பட்டி தோண்டி சோழன் ஏரி ஆகிய ஏரிகளை உய்யக்கொண்டான் வாய்க்கால் பாசனப் பட்டியலில் சேர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, கடையக்குடி குருக்கள் ஏரி, அய்யனார் ஏரி, பொன்விளைந்தான்பட்டி அய்யனார் ஏரி, வெண்டையம்பட்டி ஊமத்தி ஏரி மற்றும் வடுகன்புதுப்பட்டி தோண்டி சோழன் ஏரி ஆகிய ஏரிகளை உய்யக்கொண்டான் வாய்க்கால் பாசன ஆயக்கட்டில் சேர்க்க சாத்தியக்கூறுகள் இல்லை.

10—

ஏரிகளைப் பாசனப் பட்டியலில் சேர்த்தல்

வினா எண் 218—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, வீரமரசன்பேட்டை மாதுரான் ஏரி, புதுக்குடி-காமாட்சிபுரம் பட்டமாவடி ஏரி மற்றும் புதுக்குடி காமாட்சிபுரம் கட்டவெட்டி ஏரி ஆகிய ஏரிகளை புதிய கட்டளைமேட்டு வாய்க்கால் பாசனப் பட்டியலில் சேர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

11—

தடுப்புச் சுவர் அமைத்தல்

வினா எண் 310—திரு. ம. சிந்தனை செல்வன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) கடலூர் மாவட்டம், வீராணம் ஏரிக் கரையில் (நீர்ப்பிடிப்புக்கு எதிர்புறமுள்ள கிழக்குப்பகுதி) மண் சரியா வண்ணம் தடுப்புச் சுவர் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், வீராணம் ஏரிக் கரையில் (நீர்ப்பிடிப்புக்கு எதிர்புறமுள்ள கிழக்குப் பகுதி) மண் சரிவு ஏதுமில்லை என்பதால், தடுப்புச் சுவர் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

12—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 469—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சலாற்றை தூர்வாரி தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சலாற்றை தூர்வாரி தடுப்பணை கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசால் பெறப்படவில்லை.

13—

பாசனக் கால்வாயினைப் புனரமைத்தல்

வினா எண் 471—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், தேவனூர் கிராமத்திற்கு சாத்தனூர் அணை நீர்ப்பாசனக் கால்வாயினைப் புனரமைப்பு செய்து தர அரசு முன்வருமா?

[2022 மே 6

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், தேவனூர் கிராமம் வரை வரும் சாத்தனூர் இடதுபுற கால்வாயின் துணை பகிர்மான கால்வாய் 11RB-2L-ஐ தூர்வாரி புனரமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

14—

கால்வாய் அமைத்தல்

வினா எண் 473—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், கொளக்கரவாடி பெரிய ஏரிக்கு அருகில் உள்ள மஷார் ஏரி வரை வரும் குப்பநத்தம் அணைக்கட்டு தண்ணீரை கொளக்கரவாடி ஏரிக்கு கொண்டு செல்ல கால்வாய் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

குப்பநத்தம் அணை தண்ணீரை கொளக்கரவாடி ஏரிக்கு கொண்டு செல்ல கால்வாய் அமைக்க அரசின் நிதிநிலைமைக்கேற்பவும், சாத்தியக்கூறு இருப்பினும் நடவடிக்கை எடுக்கப்படும்.

15—

ஏரியைத் தூர்வாருதல்

வினா எண் 550—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், நல்லிக்கோட்டை காமனார் ஏரியைத் தூர்வாரி சீரமைக்க அரசு முன்வருமா?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், நல்லிக்கோட்டை காமனார் ஏரியைத் தூர்வாரி சீரமைக்கும் கருத்துரு ஏதும் அரசால் பெறப்படவில்லை.

16—

பாசன வாய்க்கால் வெட்டுதல்

வினா எண் 553—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, பாளையப்பட்டி தெற்கு, பாளையப்பட்டி வடக்கு, செங்கிப்பட்டி, ஆச்சாம்பட்டி ஊராட்சி விவசாய நிலங்களுக்கு புதிய கட்டளை மேட்டு வாய்க்காலிலிருந்து புதிய பாசன வாய்க்கால் வெட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை. காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின்படி, புதிய பாசனப் பகுதிகளை உருவாக்க சாத்தியமில்லை.

17—

புதிய குமிழி அமைத்தல்

வினா எண் 564—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, நாச்சியார்பட்டி அருகே கல்லணைக் கால்வாய் தென்கரை 6/67 கி.மீ-ல் புதிய குமிழி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 மே 6

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

18—

புதிய குமிழி அமைத்தல்

வினா எண் 565—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, காமதேவமங்கலம் அருகே கல்லணைக் கால்வாய் தென்கரை 4/50 கி.மீ.—ல் புதிய குமிழி *அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

19—

படுகையணை அமைத்தல்

வினா எண் 629—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, வெண்ணாறு மகாதேவபுரம் புது வாய்க்கால் தலைப்பு அருகே படுகையணை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

2022 மே 6]

20—

தடுப்பணை/படுகையணை அமைத்தல்

வினா எண் 630—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, கல்லணை கால்வாய் ஆற்றில் சக்கரா வாய்க்கால் தலைப்பு அருகே தடுப்பணை அல்லது படுகையணை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

21—

தடுப்பணை அமைத்தல்

வினா எண் 631—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, கல்விராயன்பேட்டை கிராமம் அருகே கோணாவாரியில் தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம், திருவையாறு தொகுதி, கல்விராயன்பேட்டை கிராமத்தில் கோணாவாரி குறுக்கே தடுப்பணை கட்டும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2022 மே 6

22—

தடுப்பணை அமைத்தல்

வினா எண் 632—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, செங்கிப்பட்டி கிராமம் அருகே பேய்வாரியில் தடுப்பணை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.

23—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 634—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, இராமநாதபுரம் கிராமம் அருகே கல்லணைக் கால்வாய் ஆற்றில் தடுப்பணை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.

24—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 635—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) திருவையாறு தொகுதி, அணைக்குடி கிராமம் அருகே கொள்ளிடம் ஆற்றில் தடுப்பணை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

25—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 636—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, சக்கரசாமந்தம் கிராமம் அருகே வடவாற்றில் தடுப்பணை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.

26—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 637—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, விஷ்ணம்பேட்டை கிராமம் அருகே கொள்ளிடம் ஆற்றில் தடுப்பணை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 மே 6

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, விஷ்ணம்பேட்டை கிராமம் அருகே கொள்ளிடம் ஆற்றில் தடுப்பணை கட்ட தொழில்நுட்ப சாத்தியக்கூறு இல்லை.

27—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 638—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, திருவேதகுடி கிராமம் அருகே வெட்டாற்றில் தடுப்பணை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை.

28—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 639—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, நாகத்தி-காட்டுக்கோட்டை கிராமம் அருகே வெட்டாற்றில் தடுப்பணை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, நாகத்தி-காட்டுக்கோட்டை கிராமம் அருகே வெட்டாற்றின் குறுக்கே புதியதாக

2022 மே 6]

தடுப்பணை கட்டும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

29—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 640—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, வடகால்—வெண்ணலோடை கிராமத்தில் வெண்ணாற்றில் தடுப்பணை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, வடகால் —வெண்ணலோடை கிராமத்தில் வெண்ணாற்றில் தடுப்பணை கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

30—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 641—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, ஒரத்தூர் கிராமம் அருகே வெண்ணாற்றில் தடுப்பணை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, ஒரத்தூர் கிராமம் அருகே வெண்ணாற்றில் தடுப்பணை கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

[2022 மே 6

31—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 642—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, மாத்தூர் கிராமம் அருகே குடமுருட்டி ஆற்றில் தடுப்பணை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

32—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 645—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, பவனமங்கலம் கிராமம் அருகே காவிரி ஆற்றில் தடுப்பணை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

33—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 646—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) திருவையாறு தொகுதி, சாத்தனூர் கிராமம் அருகே காவிரி ஆற்றில் தடுப்பணை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.

34—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 647—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, அகரப்பேட்டை கிராமம் அருகே காவிரி ஆற்றில் தடுப்பணை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.

35—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 1258—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதி, மணிமுக்தா ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி தொகுதியில் மணிமுக்தா ஆற்றின் குறுக்கே ஏற்கெனவே 4 அணைக்கட்டுகள் உள்ளன. கொங்கராயபாளையம்,

கண்டாச்சிமங்கலம் கிராமங்களின் அருகில் 2020—2021 ஆம் ஆண்டு ரூ.876.13 இலட்சம் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது.

36—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 1259—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதி, கோமுகி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி தொகுதி, கோமுகி ஆற்றின் குறுக்கே ஏற்கெனவே 11 அணைக்கட்டுகள் கட்டப்பட்டுள்ளன.

37—

அணைகளைத் தூர்வாருதல்

வினா எண் 1265—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதி, கோமுகி அணை மற்றும் மணிமுக்தா அணையைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

ஆம். வண்டல் மண் அகற்றும் பணி நடைபெற்று வருகிறது.

38—

வாய்க்கால் தூர்வாருதல்

வினா எண் 1266—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

கள்ளக்குறிச்சி நகராட்சியில் உள்ள சித்தேரியிலிருந்து வயல்களுக்கு செல்லும் மதகுகள் வாய்க்காலை சரி செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி நகராட்சியில் உள்ள சித்தேரியின் மதகிலிருந்து செல்லும் வாய்க்காலினை பாசனதாரர்கள்தான் தூர்வார வேண்டும். தற்போது, கள்ளக்குறிச்சி பெரிய ஏரியிலிருந்து சித்தேரிக்கு செல்லும் வாய்க்காலானது தூர்வாரப்பட்டு வருகிறது.

39—

வாய்க்கால் அமைத்தல்

வினா எண் 1268—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சின்னசேலம் ஒன்றியம், உலகங்காத்தான் ஏரிக்கு நீர்வரத்து வாய்க்கால் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

சின்னசேலம் ஒன்றியம், உலகங்காத்தான் ஏரிக்கு வாய்க்கால் அமைப்பதற்கான சாத்தியகூறுகள் இல்லை.

40—

அணைக்கட்டுகள் புனரமைத்தல்

வினா எண் 1270—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதி, கோமுகி நதியில் உள்ள அணைக்கட்டுகளைப் பராமரிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி தொகுதி, கோமுகி ஆற்றில் 11 அணைக்கட்டுகள் உள்ளன. குடிமராமத்து திட்டத்தின்கீழ் 2019-2020 மற்றும் 2020-2021 ஆம் ஆண்டுகளில் 5 அணைக்கட்டுகள் புனரமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மீதமுள்ள 6 அணைக்கட்டுகள் அரசால் நிதி ஒதுக்கப்படும்பட்சத்தில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

41—

அணைக்கட்டுகள் பராமரித்தல்

வினா எண் 1272—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சின்னசேலம் ஒன்றியத்தில் மயூரா ஆற்றில் உள்ள அணைக்கட்டுகளைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

சின்னசேலம் ஒன்றியத்தில் மயூரா ஆற்றில் உள்ள 16 அணைக்கட்டுகளும் தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டம் 2009-2010 ஆம் ஆண்டில் புனரமைக்கப்பட்டுவிட்டன.

42—

செயற்பொறியாளர் அலுவலகம் அமைத்தல்

வினா எண் 1308—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு பொதுப் பணித் துறையின் (நீ.வ.ஆ.) புதிய செயற்பொறியாளர் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு நீர்வள ஆதாரத் துறையின் புதிய செயற்பொறியாளர் அலுவலகம் அமைக்க செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது அரசிடமில்லை.

43—

ஏரிகளைத் தூர்வாரி, படகு குழாம் அமைத்தல்

வினா எண் 1320—திரு. சு. ரவி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரிலுள்ள சித்தேரி மற்றும் பெரிய ஏரிகளைத் தூர்வாரி, படகு குழாம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரிலுள்ள சித்தேரி மற்றும் பெரிய ஏரி ஆகியவற்றைத் தூர்வாரி, படகு குழாம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

44—

ஏரியைத் தூர்வாரி, சிமெண்ட் கால்வாய் அமைத்தல்

வினா எண் 1321—திரு. சு. ரவி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரில் சுவால்பேட்டை வழியாக பெரிய ஏரிக்கு செல்லும் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான கால்வாயைத் தூர்வாரி, சிமெண்ட் கால்வாய் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரிலுள்ள அரக்கோணம் பெரிய ஏரியின் கால்வாயைத் தூர்வாரி, சிமென்ட் கால்வாய் அமைக்க செயற்குறிப்பு ஏதும் அரசால் பெறப்படவில்லை.

45—

கிளை நதிகள் மற்றும் நீர்வழிப் பாதைகளைத் தூர்வாருதல்

வினா எண் 1878—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

காவிரியாற்றின் கிளை நதிகள் மற்றும் நீர்வழிப் பாதைகள் அனைத்தையும் தூர்வார அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

ஆம்.

46—

கோட்ட அலுவலகங்கள் அமைத்தல்

வினா எண் 2222—திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாகப்பட்டினம் மாவட்டத்திற்கென வெண்ணாறு வடிநிலம் மற்றும் காவிரி கோட்ட அலுவலகங்கள் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

இல்லை. நாகப்பட்டினம் மாவட்டம், வெண்ணாறு உபவடிநிலத்தில் 97,219 ஏக்கர் பாசனப் பகுதிக்கு திருவாரூரில் ஒரு கோட்டம் இயங்கி வருவதாலும், அது நாகப்பட்டினத்திற்கு மிக

2022 மே 6]

அருகாமையில் உள்ளதாலும் மற்றொரு கோட்டம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

47—

ஆறுகளைத் தூர்வாருதல்

வினா எண் 2374—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதியில், திருமலைராஜன் மற்றும் முடிகொண்டான் ஆறுகளைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருமலைராஜன் ஆற்றில் 2019-2020 மற்றும் 2020-2021 ஆம் ஆண்டுகளில் மொத்தம் 66.50 கி.மீ. நீளத்திற்குத் தூர்வாரப்பட்டுள்ளது.

முடிகொண்டான் ஆற்றில் 2019-2020 மற்றும் 2020-2021 ஆம் ஆண்டுகளில் மொத்தம் 50.20 கி.மீ. நீளத்திற்குத் தூர்வாரப்பட்டுள்ளது.

48—

வாய்க்கால் அமைத்தல்

வினா எண் 2467—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, ஆற்று பாதுகாப்பு கோட்டம், திருச்சி பாசனப் பட்டியலில் உள்ள காமத்து ஏரிக்கு பாசன நீர் கொண்டு செல்ல வாய்க்கால் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, காமத்து ஏரி உய்யக்கொண்டான் நீட்டிப்பு வாய்க்கால்மூலம் பாசனம் பெறும் ஏரியாகும். இந்த ஏரிக்கு ஒவ்வொரு வருடமும் பாசனத்திற்கு உரிய தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. தனியாக வாய்க்கால் அமைக்காமலேயே காமத்து ஏரியின் வரத்து வாய்க்காலைத் தூர்வாரி இந்த வருடமும் விவசாயிகளிடம் சமரசம் ஏற்படுத்தப்பட்டு தண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது. தற்போது, காமத்து ஏரியில் சுமார் 60 சதவிகித தண்ணீர் நிரம்பியுள்ளது. ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து தண்ணீர் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தற்போது, புதிய வாய்க்கால் அமைக்க அவசியம் எழவில்லை.

49—

தடுப்பணைகள் அமைத்தல்

வினா எண் 2492—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர் ஒன்றியம், செம்மண்கூடல் ஊராட்சி, சரபங்கா நதியின் குறுக்கே 5 இடங்களில் தடுப்பணைகள் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், செம்மண்கூடல் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் ஓடும் சரபங்கா நதியின் நீளம் சுமார் 1.25 கி.மீ. மட்டுமே ஆகும். ஏற்கெனவே, இந்நதியில் ஆங்காங்கே தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன. ஆகையால், மிகவும் சாத்தியமுள்ள இடமான “சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், முத்துநாயக்கன்பட்டி கிராமத்தில் எல்லாயூர் (செம்மண்கூடல் ஊராட்சி) அருகே சரபங்கா ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை” அமைப்பதற்கான திட்டம் 2021-2022 ஆம் ஆண்டின் திட்ட இலக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், செம்மண்கூடல் ஊராட்சியின்

2022 மே 6]

அருகில் சரபங்கா நதியின் குறுக்கே வேறு இடங்களில் தடுப்பணை அமைக்க சாத்தியமில்லை.

50—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 2618—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, விசூர் ஊராட்சி வெள்ளவாடி ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, விசூர் ஊராட்சி, வெள்ளவாடி ஓடையானது பருவ மழையின்போது மிக வேகமாக வெள்ள நீரையும், மிகுந்த மணலையும் கொண்டு வந்து பாதிப்புகளை ஏற்படுத்தும் பகுதியாகும். எனவே, இங்கு தடுப்பணை கட்ட சாத்தியக்கூறு இல்லை.

51—

தூர் வாருதல்

வினா எண் 3374—திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை பழங்காவிரி பகுதியைத் தூர்வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை பழங்காவிரி வாய்க்கால் மற்றும் அதன் பிரிவு வாய்க்கால் 2020-2021 ஆம் ஆண்டு 8,200 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூபாய் 10.00 இலட்சம் மதிப்பில் தூர்வாரப்பட்டுள்ளது.

[2022 மே 6

52—

செயற்பொறியாளர் அலுவலகம் புதிதாக அமைத்தல்

வினா எண் 3563—திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு தனியே நீர் மேலாண்மையின் செயற்பொறியாளர் அலுவலகம் புதியதாக அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள வெண்ணாறு பாசனப் பரப்புகளில் நீர் பங்கீடு மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள நாகப்பட்டினத்தில் ஓர் உபகோட்டமும் அதன் பிரிவு அலுவலகங்களான நாகப்பட்டினம் பிரிவு எண் 1, 2 கீழ்வேளூர் மற்றும் திருவாரூர் உபகோட்டத்திற்குட்பட்ட பிரிவு அலுவலகங்களான திருநெல்லிக்காவல் 1 மற்றும் 2, திருத்துறைப்பூண்டி உபகோட்டத்திற்குட்பட்ட பிரிவு அலுவலகங்களான தலைஞாயிறு, திருத்துறைப்பூண்டி பிரிவு எண் 1 மற்றும் 2 ஆகியவை இயங்கி வருகின்றன. எனவே, நாகப்பட்டினம் மாவட்டத்திற்கென தனியாக நீர் மேலாண்மையின் செயற்பொறியாளர் அலுவலகம் அமைக்கும் தேவை எழவில்லை.

53—

கரையை மேம்படுத்துதல்

வினா எண் 3582—திரு. கோ. தளபதி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரை செல்லூர் கண்மாயை தூர் வாரி கரையினை மேம்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2019—2020 ஆம் ஆண்டு குடிமராமத்து திட்டத்தின்கீழ் ரூ.48.00 இலட்சம் மதிப்பீட்டில் செல்லூர் கண்மாயில் மண் எடுத்து கரைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன மற்றும் கண்மாயின் கழுங்கு புனரமைக்கப்பட்டுள்ளது.

54—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 3632—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதியில் உள்ள கடைமடை பகுதிகளில் மழைக் காலங்களில் மழைநீர் வீணாகக் கடலில் கலக்கிறது. இதனைத் தடுத்து தண்ணீரைச் சேமிக்க தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்திலுள்ள காட்டூர் மற்றும் தத்தமஞ்சி இரட்டை ஏரிகளின் கொள்ளளவை மேம்படுத்தி ஒரு நீர்த்தேக்கம் அமைக்கும் பணிக்கு ரூ.6,236.45 இலட்சத்திற்கு அரசு ஆணை (நிலை) எண் 63/பொதுப் பணித் (R1) துறை, நாள் 26-2-2020-ல் ஒப்புதல் பெறப்பட்டு, அதன் தொடர்பாக உடன்படிக்கை மேற்கொண்டு பணி தொடங்கப்பட்டது. அப்பணியில் ஒரு பகுதியாக, ஆரணியாற்றின் குறுக்கே கடைமடையில் உபரி நீர் கடலில் கலப்பதைத் தடுக்கும்பொருட்டு ஆண்டார்மடம் அருகில் தடுப்பணை கட்டப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2022 மே 6

55—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 3641—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, வலங்கைமான் வட்டம், அரித்துவாரமங்கலம் கிராமம் பயன்பெறும் வகையில் வெண்ணாற்றில் தடுப்பணை கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நன்னிலம் தொகுதி, வலங்கைமான் வட்டம், அரித்துவாரமங்கலம் கிராமம் அருகே வெண்ணாற்றில் படுகை அணை கட்டும் பணிக்கு ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவி திட்டம் பகுதி—II—ன்கீழ், மேற்கொள்ள அரசின் நிதிநிலைக்கேற்ப சாத்தியக்கூறு இருப்பின் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

56—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 3643—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, குடவாசல் வட்டம், அரசூர், மூலங்குடி கிராமங்கள் பயன்பெறும் வகையில் சோழசூடாமணி ஆற்றில் தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், ஓகை கிராமத்தில் சோழசூடாமணி ஆற்றின் குறுக்கே மைல்

2022 மே 6]

65/6-370-ல் அரசூர், மூலங்குடி வாய்க்கால்களுக்கு நீர் வழங்க தளமட்ட சுவர் கட்டும் பணிக்கான ஆய்வு செய்து அரசின் நிதிநிலைக்கேற்ப சாத்தியக்கூறு இருப்பின் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

57—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 3646—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, நன்னிலம் வட்டம், பாவட்டக்குடி, தலையூர் மற்றும் சுற்றியுள்ள கிராமங்கள் பயன்பெறும் வகையில் நாட்டாற்றில் தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், பண்டாரவடை கிராமம் நாட்டார் ஆற்றின் குறுக்கே மைல் 81/5—ல் அகரபாவட்டக்குடி வாய்க்கால், கதிராமங்கலம் வாய்க்கால், பண்டாரவடை வாய்க்கால் மற்றும் குருஸ்தலம் வாய்க்கால்களுக்கு நீர் வழங்க தளமட்ட சுவர் அமைக்க அரசின் நிதிநிலைக்கேற்ப சாத்தியக்கூறு இருப்பின் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

58—

தூர் வாரி செப்பனிடுதல்

வினா எண் 3874—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதியில், பாம்பூரி வாய்க்கால் ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர் வாரி செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பாம்பூரி வாய்க்காலின் பரப்பளவினை அளந்து எல்லையினை நிர்ணயம் செய்து ஆக்கிரமிப்புகளை கண்டறியுமாறு வருவாய்த் துறையிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. வருவாய்த் துறையின் அறிக்கையினைப் பெற்று ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், பாம்பூரி வாய்க்காலில் தண்ணீர் எவ்வித தடையும் இன்றி செல்வதால் தூர் வாரப்பட வேண்டிய அவசியம் இல்லை.

59—

தூர் வாரி தூய்மைப்படுத்துதல்

வினா எண் 3875—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, வள்ளியாற்று ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர் வாரி தூய்மைப்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வள்ளியாறு பரப்பளவினை அளந்து எல்லையினை நிர்ணயம் செய்து ஆக்கிரமிப்புகளை கண்டறியுமாறு வருவாய்த் துறையிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. வருவாய்த் துறையின் அறிக்கையினை பெற்று ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், வள்ளியாற்றில் தண்ணீர் எவ்வித தடையும் இன்றி செல்வதால் தூர் வாரப்பட வேண்டிய அவசியம் இல்லை.

2022 மே 6]

60—

மேடு பள்ளங்களைச் சமப்படுத்துதல்

வினா எண் 4174—திரு. G.V. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தின் பல ஆறுகளில் மேடு பள்ளங்களைச் சமப்படுத்தி சீராக தண்ணீர் செல்வதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

தமிழகத்தின் ஆறுகளில் மேடு பள்ளங்கள் காரணமாக பாசன வாய்க்கால்களுக்கு நீர் வழங்குதல் தடைபடாத முறையில் சம்பந்தப்பட்ட நீர்வளத் துறை செயற்பொறியாளர்களால் கண்காணிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

*மேலும், பருவமழை காலங்களில் உபரி நீரைத் தேக்கவும், நிலத்தடி நீரை செறிவூட்டவும் எல்லா மாவட்டங்களிலும் உள்ள ஆறுகள்/ஓடைகள் ஆகியவற்றின் குறுக்கில் தடுப்பணைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. நீரினைத் தேக்கி அனைத்துத் துறைகளின் (*Multiple Sectors*) தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் அரசு 1,000 தடுப்பணைகள் பல்வேறு கட்டங்களில் நிறைவேற்றிட திட்டமிட்டு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. இந்தத் தடுப்பணைகள் நீரைத் தேக்குவதோடு, மண் அரிமானத்தைக் கட்டுப்படுத்தி ஆற்று தள மட்டங்களில் உள்ள பள்ளங்களில் மண்/மணல் நிரவுதல் ஏற்பட்டு தளமட்டம் சீரடையவும் பயனளிக்கவல்லது.*

61—

குளங்களை ஆழப்படுத்துதல்

வினா எண் 4175—திரு. G.V. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விளாத்திகுளம் தொகுதியில் உள்ள பொதுப் பணித் துறை குளங்களான விளாத்திகுளம், மேல்மாந்தை, பேராயக்குடி,

புதுப்பட்டி, தத்தநேரி, அயன்கரிசல்குளம், இளம்புவனம் போன்ற குளங்களை ஆழப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், நீர்வளத் துறைக் குளங்களான விளாத்திகுளம், மேல்மாந்தை, பேராயக்குடி, புதுப்பட்டி, தத்தநேரி, அயன்கரிசல்குளம், இளம்புவனம் கண்மாய்கள் பரந்த நீர்பிடிப்பு பகுதிகளை கொண்டவை. அக்கண்மாய்களின் மடை பகுதியில் நீர் திறந்துவிடும் மட்டத்திற்கு மேலாக மண்திட்டுப் பகுதிகள் எதுவும் இல்லை. இதனால், அக்கண்மாய்களை ஆழப்படுத்தும் சூழல் தற்போது எழவில்லை.

62—

குளத்தை அணைக்கட்டாக மாற்றிக் கொடுத்தல்

வினா எண் 4235—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, விஜயநாராயணம் குளத்தை அணைக்கட்டாக மாற்றிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, திசையன்விளை வட்டம், வடக்கு விஜயநாராயணம் கிராமத்தில் அமைந்துள்ள விஜயநாராயணம் பெரியகுளத்தை நீர்த்தேக்கமாக மாற்ற தொழில்நுட்ப ரீதியாக சாத்தியமில்லை.

63—

ஆறுகளில் முட்புதர்களை அகற்றுதல்

வினா எண் 4239— திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) நாங்குநேரி தொகுதி, வடக்கு பச்சையாறு, நம்பியாறு, கொடுமுடியாறு ஆகிய ஆறுகளிலுள்ள முட்புதர்களை அகற்றி, ஆற்றுநீர் கடைமடை வரை செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, வடக்கு பச்சையாறு, நம்பியாறு, கொடுமுடியாறு ஆகிய ஆறுகளில் கடைமடை வரை உள்ள குளங்களுக்கு தற்சமயம் தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது. மேலும், நீர்ப்போக்கிற்கு இடையூறாக இருக்கும் கருவேல மரங்கள் மற்றும் புதர்களை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

64—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 4246— திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, தாமிரபரணி ஆற்றில், சீவலப்பேரியில் தடுப்பணை கட்டி திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை ஆகிய மாவட்டங்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, தாமிரபரணி ஆற்றில், சீவலப்பேரியில், ஆற்றுப் பாலத்தின் கீழ்ப்பகுதியில் 150 மீட்டர் தூரத்தில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் ஏற்கெனவே தடுப்பணை கட்டப்பட்டுள்ளது. எனவே, மேற்படி இடத்தில் தடுப்பணை கட்டத் தேவையில்லை.

[2022 மே 6

65—

திட்டப் பணிகளை விரைந்து செயல்படுத்துதல்

வினா எண் 4248—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, தாமிரபரணி-கருமேனியாறு-நம்பியாறு இணைப்புத் திட்டப் பணிகளை விரைந்து செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாமிரபரணி ஆற்றின் வெள்ள உபரி நீரை தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் வறண்ட பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்காக தாமிரபரணி-கருமேனியாறு-நம்பியாறு நதிகளை இணைத்து கன்னடியன் அணைக்கட்டிலிருந்து வெள்ளநீர் கால்வாய் தோண்டும் பணி 4 நிலைகளாகப் பிரிக்கப்பட்டு, பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. மேலும், மார்ச் 2022-க்குள் அனைத்துப் பணிகளையும் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

66—

தடுப்புச் சுவர் அமைத்தல்

வினா எண் 4386—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, முளகுமூடு பேரூராட்சியில் உள்ள ஆக்காட்டி குளத்தின் கரையோரம் தடுப்புச் சுவர் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதி, முளகுமூடு பேரூராட்சிக்கு உட்பட்ட ஆக்காட்டி குளத்தின் கரையின் தடுப்புச் சுவர் எவ்வித சேதமும் இன்றி பயன்படும் நிலையில் இருப்பதால், மேற்படி குளத்தில் தடுப்புச் சுவர் அமைக்க வேண்டிய தேவை எழவில்லை.

67—

ஆகாயத் தாமரைகளை அகற்றுதல்

வினா எண் 4652—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

காவேரி நீர் தங்கு தடையின்றி செல்ல கரூர் மாயனூர் தடுப்பணையில் குவிந்துள்ள ஆகாயத் தாமரைகளை அகற்ற அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கரூர் மாவட்டம், மாயனூர் தடுப்பணையில் குவிந்திருந்த ஆகாயத் தாமரைகள் அக்டோபர் 2021 ஆம் ஆண்டு அகற்றப்பட்டது. தற்போது காவேரி ஆற்றில் தண்ணீர் தடையின்றி செல்கிறது.

68—

ஒட்டுக் கால்வாய் புனரமைத்தல்

வினா எண் 5249—திரு. வே. சம்பத்குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வீரப்பநாயக்கன்பட்டி ஊராட்சிக்குட்பட்ட கூடலூர் வரட்டாற்றிலிருந்து பொய்யப்பட்டி விவசாய நிலங்களுக்கு பாசனத்திற்குச் செல்லும் ஒட்டுக் கால்வாயை புனரமைக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

வீரப்பநாயக்கன்பட்டி ஊராட்சிக்குட்பட்ட கூடலூர், வரட்டாற்றிலிருந்து பொய்யப்பட்டி விவசாய நிலங்களுக்கு பாசனத்திற்குச் செல்லும் ஒட்டுக் கால்வாயை ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் 2021—2022 ஆம் ஆண்டு பராமரிப்பு தலைப்பின்கீழ் தூர் வாரி புனரமைக்கும் பணி முடிக்கப்பட்டது.

69—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 5492—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், கடங்கனேரி கிராமத்தில் சிற்றாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், கடங்கனேரி கிராமத்தில் சிற்றாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்க தொழில்நுட்ப ரீதியாக சாத்தியமில்லை.

70—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 5593—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, மாளிகம்பட்டு ஊராட்சி, கெடிலம் ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கெடிலம் ஆற்றின் குறுக்கே மாளிகம்பட்டு—பணிக்கன்குப்பம் கிராமங்களில் 2015-2016-ல் ரூபாய் 8.00 கோடியில் தடுப்பணை கட்டப்பட்டுள்ளது. மேலும், இதன் மேற்பகுதியில் எலந்தம்பட்டு கிராமத்தில் கெடிலம் ஆற்றின் குறுக்கே 2019-2020-ல் ரூபாய் 15.00 கோடியில் தடுப்பணை கட்டப்பட்டுள்ளது.

71—

நீர்நிலைகளின் செயற்கைக்கோள் படங்களைப் பதிவேற்றம் செய்தல்

வினா எண் 6856—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நீர்நிலைகள் ஆக்கிரமிப்பைக் கண்காணித்து தடுப்பதற்காக அனைத்து நீர்நிலைகளின் செயற்கைக்கோள் படங்களை மாவட்ட இணையதளங்களில் பதிவேற்ற அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

நீர்நிலைகளில் ஆக்கிரமிப்பைக் கண்காணித்து தடுப்பதற்காக, நவீன தொழில்நுட்பங்களான ஆளில்லா விமானங்களின்மூலம் ஆய்வு, துல்லியமான புவியிடங்காட்டி மற்றும் புவியியல் தகவல் அமைப்பு (GIS) போன்றவற்றின் உதவியுடன் நீர்நிலைகளின் எல்லைகள் வரையறுக்கப்பட்டு, அனைத்து நீர்நிலைகள் குறித்த விவரங்கள் மற்றும் வரைபடங்களை தமிழ்நாடு நீர்வள தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பில் (TNWRIS) பதிவேற்றி, தொடர்புடைய துறைகள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

72—

தூர் வாரி செப்பனிடுதல்

வினா எண் 7042—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2022 மே 6

நெய்வேலி தொகுதி, மலட்டாறு முகத்துவாரம் அரசூர் அருகில் தூர்வாரி செப்பனிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், நடு மலட்டாறு மற்றும் தெற்கு மலட்டாறு 2020—2021 ஆம் ஆண்டில் ரூ.15.04 கோடி மதிப்பீட்டில் தூர்வாரி செப்பனிடப்பட்டுள்ளது. தற்போது நல்ல நிலையில் உள்ளது.

73—

புதிய அணை கட்டுதல்

வினா எண் 7174—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு வட்டம், கொல்லாலகுப்பம் ஊராட்சியில் ஆற்றின் குறுக்கே புதிய அணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், கொல்லாலகுப்பம் கிராமத்தில் குப்பிரெட்டி குளத்தின் அருகே தடுப்பணை அமைக்க உத்தேசிக்கப்பட்டு திட்டம் குறித்த தள விவரங்களை சேகரிக்கும்போது, இத்திட்டம் அமைய இருக்கும் இடம் வனத் துறைக்குச் சொந்தமாக இருப்பதனாலும், வனத் துறையிடமிருந்து நில ஆர்ஜிதம் செய்ய வேண்டிய நிலை உள்ளதனாலும், இத்திட்டமானது ஆரம்ப நிலையிலேயே கைவிடப்பட்டது.

74—

கல்வெர்ட்டுகள் அமைத்தல்

வினா எண் 7335—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சி, அமுதம் நகர் அருகே முடிச்சூர் சர்வீஸ் ரோட்டிலிருந்து ஆற்றுக் கால்வாய் செல்லும் மேம்பாலம் வரை மேலும் சில கல்வெர்ட்டுகள் (culverts) அமைத்து, வெள்ள நீர் வெளியே செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சி, அமுதம் நகர் அருகே முடிச்சூர் சர்வீஸ் ரோட்டிலிருந்து ஆற்றுக் கால்வாய் செல்லும் மேம்பாலம் வரை ஒவ்வொரு வருடமும் பருவகால முன்னெச்சரிக்கைப் பணிகளில் கால்வாய்கள் தூர் வாரப்பட்டு ஆழப்படுத்தப்பட்டு வெள்ள நீர் சீராகச் செல்ல வழிவகை செய்யப்பட்டு வருகின்றது.

75—

அணைத் திட்டத்தை நிறைவேற்றுதல்

வினா எண் 7378—திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, அஞ்செட்டி பகுதியில் தொட்டல்லா அணைத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், அஞ்செட்டி வட்டம், தொட்டல்லா ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதற்கான திட்ட மதிப்பீடானது ரூ.2,458.00 இலட்சங்களுக்கு (1999—2000) தயாரிக்கப்பட்டது. தொட்டல்லா, காவேரியின் உப நதியாகும். இத்திட்டம் காவேரிப் படுகையில் அமைந்துள்ளதாலும், 165 ஏக்கர் பாதுகாக்கப்பட்ட வன நிலம் தேவைப்படுவதாலும், இத்திட்டத்திற்கான பயன் செலவு விகிதம் 0.71:1 என மிகக் குறைவாக இருந்ததாலும், இத்திட்டமானது 2004 ஆம் ஆண்டு கைவிடப்பட்டது.

[2022 மே 6

76—

குடிநீர்த் தொட்டி அமைத்தல்

வினா எண் 99—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, பெருங்களத்தூர் பேரூராட்சி, புத்தர் நகர், 6-வது தெருவில் குடிநீர்த் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருங்களத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண் 7, புத்தர் நகர் பகுதி, 32 குடியிருப்புகளில் 110 மக்கள்தொகை கொண்ட பகுதியாகும். இப்பகுதியானது பொதுப் பணித் துறையின் நீர் பிடிப்புப் பகுதியாக உள்ளதால் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள இயலாது. எனினும், இப்பகுதிக்கு சின்டெக்ஸ்மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, இப்பகுதியில் பேரூராட்சியால் குடிநீர்த் தொட்டி அமைக்க இயலாத நிலை உள்ளது.

77—

வரி தள்ளுபடி செய்தல்

வினா எண் 191—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கொரோனா பெருந்தொற்றால் நிலைகுலைந்துள்ள சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளின் சொத்து வரி, தண்ணீர் வரி மற்றும் தொழில் வரி போன்றவற்றை இரண்டு ஆண்டுகளுக்கு தள்ளுபடி செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சொத்து வரி, தொழில் வரி, குடிநீர் கட்டணம் போன்றவை நகர்ப்புர உள்ளாட்சிகளின் முக்கிய நிதி ஆதாரங்கள் ஆகும். சிறு,

2022 மே 6]

குறு மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளின் சொத்து வரி, தண்ணீர் வரி மற்றும் தொழில் வரி போன்றவற்றை இரண்டு ஆண்டுகளுக்கு தள்ளுபடி செய்தால் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரம் பாதிக்கப்படும். மேலும், இந்நிதி ஆதாரமில்லாமல் மக்களுக்கான திட்டப் பணிகளைச் செயல்படுத்த இயலாது. எனவே, மேற்படி வரிகளை இரண்டு ஆண்டுகளுக்கு தள்ளுபடி செய்ய வழி இல்லை.

78—

வாடகை நிர்ணயம் செய்தல்

வினா எண் 264—திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராயபுரம் தொகுதி, எம்.சி. ரோடு பகுதியில் சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள 133 கடைகளுக்கு உயர்த்தப்பட்டுள்ள வாடகையினை மாற்றி பழைய வாடகையை மீண்டும் நிர்ணயம் செய்திடவும், தரமான மேற்கூரை அமைத்துத் தந்திடவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி, எம்.சி. ரோடு சாலை வியாபார சங்க நிருவாகிகளுடன் ஏற்பட்ட பேச்சுவார்த்தையில், ஒரு கடைக்கு மாத வாடகை ரூ.250/-லிருந்து ரூ.700/- ஆக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அதற்கு சிறு கடை வியாபாரிகளின் சங்கம் இசைவு தெரிவித்து, 5-7-2019 அன்று ஏற்பு கடிதம் வழங்கியுள்ளார்கள்.

79—

சமுதாயக் கூடம் அமைத்தல்

வினா எண் 334—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2022 மே 6

(அ) பண்ருட்டி தொகுதி, நெல்லிக்குப்பம் நகரம், 29—வது வார்டில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான வார்டு எண் 29—ல் நகராட்சிக்குச் சொந்தமான இடம் ஏதும் இல்லை. எனவே, அந்த இடத்தில் சமுதாயக் கூடம் அமைக்க இயலாது.

80—

சமுதாயக் கூடம் அமைத்தல்

வினா எண் 354—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, நெல்லிக்குப்பம் நகரம், 12-வது வார்டில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான வார்டு எண் 12—ல் நகராட்சிக்குச் சொந்தமான இடம் ஏதும் இல்லை. எனவே, அந்த இடத்தில் சமுதாயக் கூடம் அமைக்க இயலாது.

81—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 355—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரம், 32—வது வார்டு, சீராங்குப்பம் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 32, சீராங்குப்பம் பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பகுதியில் சுமார் 784 எண்ணிக்கையில் உள்ள பொதுமக்களுக்கு நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு, 90 லிட்டர் வீதம் நாள்தோறும் காலை மற்றும் மாலை என இரு வேளைகளில் மேற்கண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் சீரான மற்றும் சுகாதாரமான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆகையால், தற்சமயம் புதிதாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க தேவை எழவில்லை.

82—

கால்வாய் தூர்வாருதல்

வினா எண் 386—திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவொற்றியூர் தொகுதி, 1-வது வார்டில் உள்ள கால்வாயை தூர் வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-1, பகுதி-1, 1-வது வார்டில் உள்ள கால்வாய்களில் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2022 மே 6

83—

பாதாளச் சாக்கடை அமைத்தல்

வினா எண் 387—திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவொற்றியூர் தொகுதி, 1-வது வட்டம், சத்தியவாணி முத்து நகரில் பாதாளச் சாக்கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் தொகுதியில் உள்ள 1-வது வட்டம், சத்தியவாணி முத்து நகர் 2-வது தெரு, விடுபட்ட தெருக்களின் பட்டியலில் உள்ளது. இத்தெருவில் பாதாளச் சாக்கடை அமைக்க கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

84—

பொது கழிப்பிடங்கள் சீரமைத்தல்

வினா எண் 388—திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவொற்றியூர் தொகுதி, 1-வது வார்டில் உள்ள மாநகராட்சி பொது கழிப்பிடங்களைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-1, வார்டு 1-ல் உள்ள மாநகராட்சி பொது கழிப்பிடங்களைச் சீரமைக்க ஒப்பந்தம் கோரப்பட்டு, பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

மீதம் உள்ள பணிகளுக்கு ஒப்பந்தம் கோரப்பட்டு, ஆகஸ்ட் மாத இறுதிக்குள் பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

85—

திருமண மண்டபம் கட்டுதல்

வினா எண் 390—திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவொற்றியூர் தொகுதி, 2—வது வார்டில் உள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் திருமண மண்டபம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்—1, 2—வது வார்டில் மாநகராட்சிக்குச் சொந்தமான இடம் நவீன மீன் அங்காடி கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்ட இடமாகும். அத்திட்டத்தை செயலாக்குவதற்கு பெருநகர சென்னை மாநகராட்சிமூலம் மத்திய மீன்வளத் துறையின் மானியம் கோரி செயற்குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது. எனவே, இவ்விடத்தில் திருமண மண்டபம் கட்ட இயலாது.

86—

சமுதாய நலக் கூடம் கட்டுதல்

வினா எண் 391—திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவொற்றியூர் தொகுதி, 2—வது வார்டு, ராமமூர்த்தி நகர், திலகர் நகர் ஆகிய பகுதிகளில் சமுதாயக்கூடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சியால் ஏற்கெனவே காமராஜர் நகரில் சமுதாய நலக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. ராமமூர்த்தி நகர், திலகர் நகர் அதற்கு அருகாமையில் உள்ளதால், அப்பகுதி மக்கள் காமராஜர் நகர் சமுதாயக் கூடத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

87—

கால்வாய்களைத் தூர்வாருதல்

வினா எண் 393—திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவொற்றியூர் தொகுதி, 2—வது வார்டு, நேரு நகர், அண்ணா நகர், வள்ளுவர் நகர் ஆகிய பகுதிகளில் உள்ள கால்வாய்களைத் தூர்வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1, பகுதி 2, கோட்டம் 2-ல் உள்ள நேரு நகர், அண்ணா நகர், வள்ளுவர் நகர் ஆகிய பகுதிகளில் உள்ள கால்வாய்களில் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

88—

பாதாளச் சாக்கடை இணைப்புக் கட்டணத்தைக் குறைத்தல்

வினா எண் 395—திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) திருவொற்றியூர் தொகுதி, 2—வது வார்டில் உள்ள பாதாளச் சாக்கடை இணைப்பிற்கான கட்டணத்தைக் குறைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பாதாளச் சாக்கடை இணைப்பிற்கான கட்டணமானது கட்டட அளவு மற்றும் பயன்பாட்டிற்குத் தகுந்தாற்போல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

89—

மயானத்தைப் புதுப்பித்தல்

வினா எண் 396—திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவொற்றியூர் தொகுதி, 2-வது வார்டில் உள்ள சின்னகுப்பம் எரியூட்டு மயானத்தைப் புதுப்பித்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 1, பகுதி 2, கோட்டம் 2-ல் உள்ள சின்னகுப்பத்தில் மயான பூமி எதுவும் இல்லை. மேலும், அருகிலுள்ள பெரியகுப்பத்தில் உள்ள மயான பூமியில் பழுது மற்றும் பராமரிப்புப் பணி நடைபெறுகிறது. விரைவில் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

90—

பொது கழிவறையைப் புதுப்பித்தல்

வினா எண் 397—திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவொற்றியூர் தொகுதி, 2-வது வட்டம் R.S. *ரோடு, பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நகர் ஆகிய பகுதிகளில் உள்ள பொது கழிவறையைப் புதுப்பித்துத் தர அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்—1, பகுதி—2, கோட்டம் 2—ல், எம்.ஜி.ஆர். நகர் மாநகராட்சி பொது கழிப்பறைக்கு பழுது மற்றும் மேம்பாட்டுப் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், பணிகள் முடிந்தவுடன் விரைவில் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

91—

குடிநீர்த் தொட்டியைப் புதுப்பித்தல்

வினா எண் 399—திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவொற்றியூர் தொகுதி, 3-வது வார்டு, எர்ணாவூர் குப்பத்தில் அமைந்துள்ள குடிநீர்த் தொட்டியைப் புதுப்பித்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் தொகுதி, 3-வது வார்டு, எர்ணாவூர் குப்பத்தில் அமைந்துள்ள குடிநீர்த் தொட்டிக்கான பராமரிப்புப் பணிகள் குறிப்பிட்ட இடைவெளியில் முறையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும், இந்த குடிநீர்த் தொட்டி தற்போது நல்ல நிலையில் உள்ளது.

2022 மே 6]

92—

பாதாளச் சாக்கடை அமைத்தல்

வினா எண் 401—திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவொற்றியூர் தொகுதி, 5-வது வட்டம், பலகைத் தொட்டிக் குப்பத்தில் பாதாளச் சாக்கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் தொகுதியில் உள்ள 5-வது வட்டம், பலகைத் தொட்டிக் குப்பம், விடுபட்ட தெருக்களின் பட்டியலில் உள்ளது. இத்தெருவில் பாதாளச் சாக்கடை அமைக்க கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

93—

மழைநீர் வடிகால்வாய் அமைத்தல்

வினா எண் 402—திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவொற்றியூர் தொகுதி, 6-வது வார்டு, ஜோதி நகரில் மழைநீர் வடிகால்வாய் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1, வார்டு 6-ல் உள்ள ஜோதி நகரில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் (*Asian

[2022 மே 6

Development Bank) கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் திட்டத்தின்கீழ் தொகுப்பு 38-ல் நடைபெற்று வருகிறது. இப்பணி வரும் 20-10-2021-க்குள் முடிக்கப்படும்.

94—

பூங்கா அமைத்தல்

வினா எண் 404—திரு. கே.பி. சங்கர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதி, 7-வது வார்டு, கார்கில் நகர், ராஜாஜி நகர் ஆகிய பகுதிகளில் மாநகராட்சி பூங்கா அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1, பகுதி 2, கோட்டம் 7-ல் கூறியுள்ள இடமானது மழைநீர் தேங்கும் நீர்நிலைப் பகுதியாகும். எனவே, அந்த இடத்தில் பூங்கா அமைக்க இயலாது.

95—

மின் மயானத்தை புதுப்பித்தல்

வினா எண் 405—திரு. கே.பி. சங்கர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதி, 9—வது வார்டில் உள்ள திருவொற்றியூர் எரியூட்டு மின் மயானத்தை புதுப்பித்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்—1, பகுதி—2, கோட்டம்—9, எண்ணூர் எக்ஸ்பிரஸ் சாலை அருகில் அமைந்துள்ள மயான பூமியில் நடப்பு நிதியாண்டில் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மயான பூமியில் காலியிடத்தில் மரக் கன்றுகள், செடிகள் நடுவது மற்றும் நுழைவாயில் பெயர் பலகை அமைக்கும் பணிகள் விரைவில் முடிவடையும்.

LPG *நவீன (எரியூட்டு) மின் மயானம் கூடுதலாக அமைக்க பெருநகர சென்னை மாநகராட்சிமூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

96—

மழைநீர் வடிகால் அமைத்தல்

வினா எண் 406—திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவொற்றியூர் தொகுதி, 18-வது வார்டு, CPCL *நகர் மஞ்சம்பாக்கத்தில் மழைநீர் வடிகால் அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி, திருவொற்றியூர் தொகுதி, 18-வது வார்டு, CPCL *நகர் மஞ்சம்பாக்கத்தில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் (*Asian Development Bank*) கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் திட்டத்தின்கீழ் தொடங்கப்படவுள்ளது. இப்பணிகளை வரும் 30-12-2021—க்குள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

97—

பாலங்கள், கழிவுநீர் சுத்திகரிப்பு மையங்கள், பூங்காக்கள் ஏற்படுத்துதல்

வினா எண் 442—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் தெற்கு தொகுதி, வஞ்சிபாளையம் முதல் காசிபாளையம் வரை 12 கி.மீ. நீளம் கொண்ட நொய்யல் ஆற்றின் மேல் உயர்மட்ட பாலமும், ஆங்காங்கே இணைப்புப் பாலங்களும், பாலத்தின்கீழ் கழிவுநீர் சுத்திகரிப்பு மையங்களும், சிறு சிறு இடங்களில் பூங்காக்களும் ஏற்படுத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உரிய சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, மாநகராட்சியின் நிதிநிலையின் அடிப்படையில் இத்திட்டத்தினை செயல்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

98—

பேருந்து நிலையம் அமைத்தல்

வினா எண் 873—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் பேரூராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் பேரூராட்சி, திருவண்ணாமலையிலிருந்து

2022 மே 6]

20 கி.மீ. தொலைவில் சென்னை செல்லும் தேசிய நெடுஞ்சாலையையொட்டி அமைந்துள்ளது. கீழ்பெண்ணாத்தூர் பேரூராட்சி, திண்டிவனம் சாலையின் வழியாக செஞ்சி, திண்டிவனம், சென்னை செல்லும் பேருந்துகள் செல்கின்றன. கீழ்பெண்ணாத்தூர் பேரூராட்சியில் திண்டிவனம் சாலையில் சிறிய அளவிலான பேருந்து நிலையம் 2010 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு, அதற்கு முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களின் பெயர் சூட்டப்பட்டு தற்போது நல்ல நிலையில் உள்ளது.

தற்போது பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த போதுமான இட வசதி இல்லை.

99—

உயர்த்தப்பட்ட கட்டணத்தை மறுபரிசீலனை செய்தல்

வினா எண் 901—திரு. ப. அப்துல் சமது: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நகராட்சிக்குச் சொந்தமான கடைகளுக்கு உயர்த்தப்பட்ட கட்டணத்தை மறுபரிசீலனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 3-7-2007-ன்படி நகராட்சிக்குச் சொந்தமான கடைகள் மற்றும் கட்டடங்களுக்கு வாடகை நிர்ணயம் செய்திட நகர்மன்ற ஒப்புதல் பெற்று வாடகை வசூலிக்கப்பட்டு வருகிறது. நகராட்சியின் நிதிநிலைமையினை உயர்த்துவதற்கு மேற்கண்ட அரசாணையில் தெரிவித்துள்ள நிபந்தனைகளின்படி வாடகை வசூலிக்கப்படுவதால், நகராட்சிகளின் வருவாய்மூலம்

மக்களுக்கு ஆற்றப்படும் சேவைகளைக் கருதி, மேற்படி வாடகையினை குறைத்திட வழிவகை இல்லை.

100—

கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்துதல்

வினா எண் 906—திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, சுரண்டையில் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், சுரண்டை தேர்வுநிலை பேரூராட்சியில் தற்போது செயல்படுத்தப்பட்டுவரும் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் சராசரியாக நாள் ஒன்றுக்கு 14 இலட்சம் லிட்டர் குடிநீரும், உள்ளூர் பாதுகாக்கப்பட்ட திட்டம்மூலம் 17 இலட்சம் லிட்டர் குடிநீரும் வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம், நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 79 லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. இந்நிலையில் சுரண்டை தேர்வுநிலை பேரூராட்சியில் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்த, தேவை மற்றும் நிதிநிலைக்கேற்ப ஆய்வு மேற்கொள்ளப்படும்.

101—

மறுசுழற்சி முறை

வினா எண் 913—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் முறையாக அமைக்கப்பட்டு பொதுமக்களுக்கு இடையூறு இல்லாத வகையில் மறுசுழற்சி முறையை அமல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் 2016 மற்றும் பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை மற்றும் கையாளுதல் விதி 2016-ன்படி முழுமையாகச் செயல்படுத்தி பொதுமக்களுக்கு இடையூறு இல்லாத வகையில் மறுசுழற்சி முறை அமல்படுத்தப்பட்டு வருகிறது.

2. அரசு உத்தரவுப்படி 1-1-2019 ஆம் தேதி முதல் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவோர், விற்பனை செய்வோர் மற்றும் தயாரிப்பு செய்பவர்மீது பிளாஸ்டிக் மேலாண்மை விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாடு முற்றிலும் தடை செய்யப்பட்டு வருகிறது.

102—

சீர்மிகு நகரத் திட்டம்

வினா எண் 914—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூரில் சீர்மிகு நகர திட்டத்தில் (*Smart City*) நடைபெற்ற ஊழல் குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாநகராட்சியில் சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ் ஊழல் நடைபெற்றதற்கான குறிப்பான விவரங்கள் ஏதுமில்லை. அவ்வாறு விவரங்கள் ஏதேனும் தெரியவந்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

103—

சீர்மிகு நகரமாக உருவாக்குதல்

வினா எண் 915—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூரை சீர்மிகு நகரமாக (Smart City) தொலைநோக்கு பார்வையுடன் உயர் தரத்தில் உருவாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாநகராட்சி சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ் தொலைநோக்குப் பார்வையுடன் பணிகள் தேர்வு செய்யப்பட்டு, இறுதி செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

104—

சொத்து வரியை முறைப்படுத்துதல்

வினா எண் 917—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாநகராட்சியில் சொத்து வரியை முறைப்படுத்தி, குப்பை வரி மற்றும் அபராதத் தொகையை அகற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குப்பை வரிக்கான பயனர் கட்டணத்தை மறுநிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2022 மே 6]

105—

திறந்தவெளிக் கிணறு அமைத்தல்

வினா எண் 1422—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் பேரூராட்சியில் பெரியமாம்பட்டில் புதிய திறந்தவெளிக் கிணறு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தியாகதுருகம் பேரூராட்சி, பெரியமாம்பட்டு வார்டு எண் 12 மற்றும் 13 உள்ளடக்கிய பகுதியாகும். இங்கு மொத்தம் 363 குடியிருப்புகள் உள்ளன. ஏற்கெனவே, இப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஊத்துக்குட்டை திறந்தவெளிக் கிணற்றிலிருந்து 20 குதிரை திறன் (HP) பம்ப் மூலமாகவும், மெயின் ரோட்டில் அமைந்துள்ள ஆழ்துளைக் கிணற்றிலிருந்து 7.5 குதிரை திறன் (HP) பம்ப் மூலமாகவும் நாள் ஒன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் குடிநீர் பெரியமாம்பட்டில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் வழங்கப்பட்டு வருகிறது. இப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 100 லிட்டருக்கும் அதிகமான அளவில் குடிநீர் விநியோகம் சீரான முறையில் செய்யப்பட்டு வருகிறது. எனவே, இப்பகுதியில் கூடுதலாக திறந்தவெளிக் கிணறு அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

106—

வணிக வளாகத்துடன் பேருந்து நிலையம் அமைத்தல்

வினா எண் 1455—டாக்டர் சி. சரஸ்வதி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி நால்ரோடு பகுதியில் பழுதடைந்த அரசு ஆரம்பப் பள்ளியை அருகிலுள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு மாற்றவும், அவ்விடத்தில் புதிய வணிக வளாகத்துடன்கூடிய பேருந்து நிலையம் அமைக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சியானது முதல் நிலை பேரூராட்சியாகும். இப்பேரூராட்சியின் மக்கள்தொகை 2011 கணக்கெடுப்பின்படி 9,907 ஆகும். தற்போதைய நிலையில் 10,052 ஆகும்.

மொடக்குறிச்சி நால்ரோடு பகுதியிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளியானது ஊரக வளர்ச்சித் துறையின்கீழ் செயல்பட்டு வருகிறது. பேரூராட்சிகள் துறையின்கீழ் செயல்படவில்லை. எனவே, வணிக வளாகத்துடன்கூடிய பேருந்து நிலையம் அமைக்க பேரூராட்சியில் வழிவகை இல்லை.

107—

குப்பைகள் கொட்டுவதற்கு இடம் வழங்குதல்

வினா எண் 1469—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, சிட்லபாக்கம் பேரூராட்சி பகுதியில் குப்பைகளைக் கொட்டுவதற்கு உரிய இடத்தை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிட்லபாக்கம் பேரூராட்சி பகுதிகளிலிருந்து தினந்தோறும் 11 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரம் செய்யப்படுகின்றது. இவ்வாறு சேகரம் செய்யப்படும் குப்பைகள்

2022 மே 6]

தற்போது சிட்லபாக்கம் 3-வது பிரதான சாலைப் பகுதியில் அமைந்துள்ள வளம் மீட்புப் பூங்காவில் கொட்டி உரமாக தயார் செய்யப்பட்டு வருகிறது. மேலும், மறுசுழற்சி கழிவுகள் முறையாகக் கையாளப்பட்டு வருகின்றன. ஆனால், தற்போது வளம் மீட்புப் பூங்கா செயல்பட்டுவரும் இடம் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான சிட்லபாக்கம் ஏரி இடம் என்பதால், மேற்படி பகுதியினை பொதுப் பணித் துறைக்கு ஒப்படைக்க வேண்டியுள்ளது.

எனவே, மாற்று இடம் அகரம் தென் கிராமம் புல எண் 79/3-ல் உள்ள 1.50 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டு, பேரூராட்சிக்கு முன்நுழைவு அனுமதி வழங்குதல் தொடர்பாக நடவடிக்கையில் உள்ளது.

108—

மூடியுடன்கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல்

வினா எண் 1559—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, பெருங்களத்தூர் பேரூராட்சி, தங்கராஜ் நகர் விரிவு பிரதான சாலையில் மழைநீர் வடிகால் மூடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருங்களத்தூர் பேரூராட்சி, வார்டு எண் 1-ல் அடங்கியது தங்கராஜ் நகர். அப்பகுதியில் 1 முதல் 4 தெருக்கள் உள்ளன. இத்தெருக்களில் 108 குடியிருப்புகளும், சுமார் 367 எண்ணிக்கை மக்கள்தொகையும் வசித்து வருகின்றனர். மேற்படி பிரதான சாலையில் மூடியுடன்கூடிய வடிகால் அமைப்பதற்கு நிதிநிலைக்கேற்ப ஆய்வு மேற்கொள்ளப்படும்.

109—

அங்கீகாரமற்ற கடைகளை அகற்றுதல்

வினா எண் 2037—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மேற்கு தொகுதி, சேலம் புதிய பேருந்து நிலையங்களிலுள்ள அரசு அங்கீகாரமற்ற கடைகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலகம், கோட்டம் எண் 24-க்குட்பட்ட புதிய பேருந்து நிலைய வளாகத்தில் மாநகராட்சி உரிமம் பெற்றுள்ள குத்தகைதாரர்கள், பயணிகள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் மட்டுமே கடைகள் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். அங்கீகாரமற்ற கடைகளை அகற்ற குத்தகைதாரர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டன.

110—

சாலை, கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

வினா எண் 2040—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மேற்கு தொகுதி, சேலம் மாநகராட்சி, 25-வது கோட்டம், பள்ளப்பட்டி ஜவஹர் மில் பின்புறம் பெரியார் நகரில் கால்வாயின் இருபுறங்களிலும் கழிவுநீர் தேங்கி, நோய்த்தொற்று பரவுவதால் புதிய சாலை வசதியும், கழிவுநீர்க் கால்வாயும் அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலகம், கோட்டம் எண் 25-க்குட்பட்ட பள்ளப்பட்டி ஜவஹர் மில்

*பின்புறம், அபிராமி கார்டன் பகுதியில் வழிவகை முன்பணங்கள் (*Ways and Means*) (2017-2018) நிதியின்கீழ் தார்ச்சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கழிவுநீர் வடிகால் சுமார் 500 மீ. நீளத்திற்கு உத்தேச மதிப்பீடு ரூ.30 இலட்சம் செலவில் வரும் நிதியாண்டில் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.*

111—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 2044—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மேற்கு தொகுதி, சேலம் மாநகராட்சி, 24-வது கோட்டம், கந்தம்பட்டி பகுதியில் தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலகம், கோட்டம் எண் 24-க்குட்பட்ட கந்தம்பட்டி பகுதியில் சேதமடைந்து விடுபட்டுள்ள மாநகராட்சி சாலைகள் பணி சுமார் 600 மீ. நீளத்திற்கு உத்தேச மதிப்பீடு ரூ.43.00 இலட்சம் செலவில் நிதிநிலைமைக்கேற்ப வரும் நிதியாண்டில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

112—

கழிவுநீர்க் கால்வாய், தார்ச்சாலை அமைத்தல்

வினா எண் 2046—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மேற்கு தொகுதி, சேலம் மாநகராட்சி, 18—வது கோட்டம், காசக்காரனூர் பகுதியில் கழிவுநீர்க் கால்வாய், தார்ச் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மேற்கு தொகுதி, சேலம் மாநகராட்சி, 18-வது கோட்டம், காசக்காரனூர் பகுதியில் பிரதான தெருக்களுக்கு ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (2018-2019) மூலமாக ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தெருக்களில் நிதிநிலைமைக்கேற்ப வரும் நிதியாண்டில் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

113—

கழிவுநீர்க் கால்வாய் செப்பனிடுதல்

வினா எண் 2065—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகராட்சி, 1-வது டிவிஷன், ரெட்டிப்பட்டியில் மாரியம்மன் கோயில் முதல் நெடுஞ்சாலை வரை பழுதடைந்த கழிவுநீர்க் கால்வாயை செப்பனிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, 1-வது டிவிஷன், ரெட்டிப்பட்டியில் மாரியம்மன் கோயில் முதல் நெடுஞ்சாலை வரையுள்ள பகுதியில் நிதிநிலைமைக்கேற்ப வரும் நிதியாண்டில் இப்பணி மேற்கொள்ள ஆவன செய்யப்படும்.

114—

கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

வினா எண் 2068—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

சேலம் மாநகராட்சி, கோட்டம் எண் 25, தெற்கு பள்ளப்பட்டி பகுதியில் கழிவுநீர்க் கால்வாய் அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலகம், கோட்டம் எண் 25-க்குட்பட்ட தெற்கு பள்ளப்பட்டி பகுதியில் கழிவுநீர்க் கால்வாய் அமைக்கும் பணியினை எதிர்வரும் நிதியாண்டில் மேற்கொள்ள ஆவன செய்யப்படும்.

115—

கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

வினா எண் 2072—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகராட்சி, கோட்டம் எண் 25, பள்ளப்பட்டி கிழக்கு தெருவில் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலகம், கோட்டம் எண் 25-க்குட்பட்ட பள்ளப்பட்டி கிழக்கு தெருவில் கழிவுநீர்க் கால்வாய் அமைக்கும் பணியை வரும் நிதியாண்டில் மேற்கொள்ள ஆவன செய்யப்படும்.

116—

மயான சுற்றுச் சுவர், தகன மேடை அமைத்தல்

வினா எண் 2073—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2022 மே 6

சேலம் மாநகராட்சி, அழகாபுரம் பெரியபுதூர், 5-வது கோட்ட கோம்பைபட்டி பகுதியில் மயான சுற்றுச் சுவர் மற்றும் தகன மேடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, அழகாபுரம் பெரியபுதூர், 5-வது கோட்ட கோம்பைபட்டி பகுதியிலுள்ள மயானம் அமைந்துள்ள இடம் ஓடைப்பகுதி என நில அளவைப் பதிவேடு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாண்புமிகு உயர் நீதிமன்ற உத்தரவில், நீர்நிலைப் பகுதிகளில் கட்டுமானப் பணிகள் ஏதும் மேற்கொள்ளக் கூடாது என உத்தரவிடப்பட்டுள்ளதால், இப்பகுதியின் அருகிலுள்ள சின்னகொல்லப்பட்டி மயானத்தில் தகன மேடை அமைக்க நிதிநிலைமைக்கேற்ப வரும் நிதியாண்டில் பணி மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

117—

கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

வினா எண் 2100—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகராட்சி, கோட்டம் எண் 26, கலர்காடு பகுதி, சூரமங்கலம் மெயின் ரோடு, சிவதாபுரம் வரை தார்ச்சாலை நடுவே மோரீ பாலம் அமைத்து சாலையின் இருபுறமும் கழிவுநீர்க் கால்வாய் வசதி செய்து தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலகம், கோட்டம் எண் 24, 26-க்குட்பட்ட பகுதிகளில் சீர்மிகு நகரத் திட்டத்தில் அல்ராஜ் தெரு, அண்ணா தெரு, ஆதிசக்திபுரம், கண்ணகி தெரு உள்ளிட்ட தெருக்களில் சிறுபாலங்கள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட இடத்தில்

2022 மே 6]

சிறுபாலங்கள் மற்றும் சாலையின் இருபுறமும் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க வரும் நிதியாண்டில் நிதிநிலைமைக்கேற்ப பணி மேற்கொள்ள ஆவன செய்யப்படும்.

118—

கழிவுநீர்க் கால்வாய் தூர்வாருதல்

வினா எண் 2101—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகராட்சி, கோட்டம் எண் 23 பகுதியில் குடிநீர் வசதி, கான்கிரீட் சாலை அமைத்தல், மெயின் கழிவுநீர்க் கால்வாய் தூர்வாருதல் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

இப்பகுதியிலுள்ள பிரதான கழிவுநீர்க் கால்வாய்கள் மாநகராட்சி சுகாதார துறைமூலம் தூர் வாரப்பட்டுள்ளன. மேலும், பிரதான தார்ச்சாலை பணிகள் IUDM *(2018-2019) திட்டத்தின்கீழ் ரூ.63.66 இலட்சத்திற்கு நடப்பாண்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகளை நிதிநிலைமைக்கேற்ப மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.*

119—

சாலை அமைத்தல்

வினா எண் 2103—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகராட்சி, கோட்டம் எண் 18, காசக்காரனூர் மாரியம்மன் கோயில் தெரு, பணங்காடு சாலை, திருநகர், ஆலமரக்காடு சாலை ஆகிய பகுதிகளில் சாலை வசதி செய்ய அரசு முன்வருமா?

[*2022 மே 6*

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

பணங்காடு மற்றும் ஆலமரக்காடு சாலைக்கு 14-வது மத்திய நிதிக் குழு (CFC) (2019-2020) திட்டத்தின்கீழ் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு, பணி துவங்கும் தருவாயில் உள்ளது. மீதமுள்ள பகுதிகளில் சுமார் 350 மீ. நீளத்திற்கு உத்தேச மதிப்பீடு ரூ.26 இலட்சம் அளவில் நிதிநிலைமைக்கேற்ப பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

120—

குடிநீர் வசதி

வினா எண் 2114—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம், ரெட்டியூர், கோட்டம் எண் 3, மோலக்கரடு பகுதியில் குடிநீர் வசதி ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலகம், கோட்டம் எண் 3-க்குட்பட்ட மோலக்கரடு பகுதிக்கு பெருமாள் மலையில் உள்ள 10.00 இலட்சம் லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலமாக தனிக் குடிநீர்த் திட்டத்தில் 2016 ஆம் ஆண்டு முதல் சீரான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. புதிதாக இணைந்த பகுதிகளுக்கு பகிர்மானக் குழாய் அமைத்து குடிநீர் வழங்க நிதிநிலைமைக்கேற்ப பணிகள் மேற்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

121—

கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

வினா எண் 2115—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம், ரெட்டியூர், கோட்டம் எண் 3 பகுதியில் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம், ரெட்டியூர், கோட்டம் எண் 3 பகுதியில் சுமார் 600 மீ. நீளத்திற்கு உத்தேச மதிப்பீடு ரூ.36.00 இலட்சம் செலவில் நிதிநிலைமைக்கேற்ப வரும் நிதியாண்டில் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

122—

கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

வினா எண் 2120—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகராட்சி, ரெட்டியூர் கோட்ட எண் 3, மேச்சேரியான் வட்டம் பகுதியில் கழிவுநீர்க் கால்வாய் வசதி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, ரெட்டியூர் கோட்ட எண் 3, மேச்சேரியான் வட்டம் பகுதியில் கழிவுநீர்க் கால்வாய் வசதி ஏற்படுத்தும் பணிகள் வரும் நிதியாண்டில் நிதிநிலைமைக்கேற்ப செய்து தரப்படும்..

123—

கழிவுநீர்க் கால்வாய், சாலை அமைத்தல்

வினா எண் 2132—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2022 மே 6

சேலம் மாநகராட்சி, கோட்டம் எண் 25, இராவனேசுவரர் பகுதியில் கழிவுநீர்க் கால்வாய், சாலை வசதி அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலகம், கோட்டம் எண் 25-க்குட்பட்ட இராவனேசுவரர் நகர்ப் பகுதியில் 435 மீ. நீளமுள்ள கழிவுநீர்க் கால்வாய் பணியானது (TURIP) (2018-2019) திட்ட நிதியின்கீழ் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதிகளில் நிதிநிலைமைக்கேற்ப பணி மேற்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

124—

பாலம் அமைத்தல்

வினா எண் 2136—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகராட்சி, கோட்டம் எண் 24 பகுதியில் சின்னேரிவயல்காடு மற்றும் பள்ளப்பட்டி இடையே பாலம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலகம், கோட்டம் எண் 24-க்குட்பட்ட சின்னேரிவயல்காடு மற்றும் பள்ளப்பட்டியினை இணைக்கும் பாலப் பணியானது, சீர்மிகு நகரத் திட்டத்தில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் டி.வி.எஸ். ஓடை மேம்படுத்தும் பணியில் ஒரு பகுதியாக நடைபெற்று வருகிறது. மேலும், பணியானது முடிவுறும் தருவாயில் உள்ளது.

2022 மே 6]

125—

கான்கிரீட் சாலை, கழிவுநீர்க் கால்வாய் பணி தொடங்குதல்

வினா எண் 2143—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகராட்சி, 25-வது கோட்டம், பள்ளப்பட்டி கிழக்கு தெருக்களில் கான்கிரீட் சாலை, கழிவுநீர்க் கால்வாய் அமைக்கும் பணியை விரைந்து தொடங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி , சூரமங்கலம் வார்டு அலுவலகம், கோட்டம் எண் 25-க்குட்பட்ட பள்ளப்பட்டி கிழக்கு தெருக்களில் கான்கிரீட் சாலைகள் 150 மீ. நீளத்திற்கு சுமார் ரூ.14.00 இலட்சம் மற்றும் கழிவுநீர்க் கால்வாய்கள் 900 மீ. நீளத்தில் ரூ.54.00 இலட்சம் செலவில் நிதிநிலைமைக்கேற்ப வரும் நிதியாண்டில் பணிகள் மேற்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

126—

காவிரி குடிநீர் வழங்குதல்

வினா எண் 2147—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகராட்சி, 22—வது கோட்டம், சிவதாபுரம் பகுதியில் காவிரி குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலகம், கோட்டம் எண் 22-க்குட்பட்ட சிவதாபுரம் பகுதிக்கு சித்தர் கோயில் மெயின் ரோட்டில் உள்ள 10 இலட்சம் லிட்டர் மேல்நிலை

நீர்த்தேக்கத் தொட்டி மூலமாக தனிக் குடிநீர்த் திட்டத்தில் 2016 ஆம் ஆண்டு முதல் சீரான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. புதிதாக இணைந்த பகுதிகளுக்கு பகிர்மானக் குழாய் அமைத்து, குடிநீர் வழங்க வரும் நிதியாண்டில் பணிகள் மேற்கொள்ள ஆவன செய்யப்படும்.

127—

பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்துதல்

வினா எண் 2258—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, சோழபுரம் பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சோழபுரம் பேரூராட்சியின் மக்கள்தொகை 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, 6,803 ஆகும். பேரூராட்சியின் பரப்பளவு 7.07 சதுர கிலோ மீட்டர் மற்றும் 15 வார்டுகள் உள்ளன. தற்போதைய மக்கள்தொகை உத்தேசமாக 7,627 ஆகும். இப்பேரூராட்சியில் 16.24 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மற்றும் 1.17 கிலோ மீட்டர் நீளமுள்ள வடிகால்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், பேரூராட்சியின் எல்லைக்குள் 1,835 குடியிருப்புகள் அமைந்துள்ளன.

இப்பேரூராட்சியானது கும்பகோணம் நகராட்சியிலிருந்து சுமார் 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. எனவே, கும்பகோணம் நகராட்சியில் ஏற்கெனவே செயல்பாட்டில் உள்ள பாதாள சாக்கடைத் திட்டக் கழிவுநீர், சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டுசென்று கும்பகோணம் நகராட்சியுடன் ஒருங்கிணைந்து தொகுப்பு முறையில் செயல்படுத்திட சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, மேல் நடவடிக்கைகள் தொடரப்படும்.

2022 மே 6]

128—

அம்மா உணவகம் அமைத்தல்

வினா எண் 2286—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் பழைய பேருந்து நிலையத்திற்குள் புதிதாக அம்மா உணவகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி பழைய பேருந்து நிலையம் மிக அருகில் அம்மா உணவகம் அமைந்துள்ளதால் புதியதாக அம்மா உணவகம் அமைக்க வேண்டியதில்லை.

129—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 2290—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம், சூரமங்கலம், 19—வது டிவிஷன், காதர்கான் தெருவில் புதிய தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலகம், 19-வது கோட்டம், காதர்கான் தெரு பகுதியில்

[2022 மே 6

சாலைப் பணி நிதிநிலைமைக்கேற்ப வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

130—

தரமுயர்த்துதல்

வினா எண் 2301—திரு. ஆ.மு. முனிரத்தினம்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோளிங்கர் தொகுதி, சோளிங்கர் பேரூராட்சியினை நகராட்சியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மானியக் கோரிக்கை 24-8-2021 அன்று நடைபெற்றபோது சோளிங்கர் பேரூராட்சி நகராட்சியாகத் தரமுயர்த்தி அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

131—

உயர் கோபுர மின் விளக்கு அமைத்தல்

வினா எண் 2314—முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் பேரூராட்சி, திருப்பனந்தாள் வளையல்காரத் தெரு, வடக்கு வீதி மற்றும் கீழ வீதிகளில் உயர் கோபுர மின் விளக்கு அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் பேரூராட்சி, வளையல்காரத் தெரு, வடக்கு வீதி மற்றும் கீழ வீதி

2022 மே 6]

இணையும் இடத்தில் ரூ.6.70 இலட்சம் மதிப்பீட்டில் 2020-2021 ஆம் ஆண்டு பொது நிதியில் உயர் மின் கோபுர மின் விளக்கு அமைக்கப்பட்டுள்ளது.

132—

சாலை செப்பனிடுதல்

வினா எண் 2324—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், ஆடுதுறை பேரூராட்சியில் உள்ள இரயில்வே ஸ்டேஷன் செல்லும் சாலையை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, ஆடுதுறை பேரூராட்சியில் உள்ள இரயில்வே ஸ்டேஷன் செல்லும் சாலையானது இரயில்வே துறைக்குச் சொந்தமானதாகும். எனவே, இக்கோரிக்கை குறித்த மனு இரயில்வே துறையின் உரிய நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படும்.

133—

பொது சுகாதார வளாகம் அமைத்தல்

வினா எண் 2328—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், ஆடுதுறை பேரூராட்சி, ஆடுதுறை இரயில்வே கீழத் தெருவில் பொது சுகாதார வளாகம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 மே 6

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, ஆடுதுறை தேர்வுநிலை பேரூராட்சியில் இரயில்வே கீழத் தெருவில் சமுதாயக் கூடத்திற்கு பின்புறம் பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவாக 2018-2019 ஆம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் ரூ.4.90 இலட்சம் மதிப்பீட்டில் பொது சுகாதார வளாகம் 5 இருக்கைகள் (2+3) என்ற அளவில் அமைக்கப்பட்டு வருகிறது. தற்போது, சுகாதார வளாகத்தில் Roof *(மேற்கூரை) அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.*

134—

குப்பைக் கிடங்கு அமைத்தல்

வினா எண் 2596—திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம், மானாமதுரை பேரூராட்சிகளில் குப்பைக் கிடங்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்புவனம் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண் 18, மதுரை மண்டபம் மெயின் ரோடு, புல எண் 8/4-ல் 90 சென்ட் பரப்பளவில் தற்போது திடக்கழிவு வள மீட்புப் பூங்கா செயல்பட்டு வருகிறது. இப்பேரூராட்சியில் தினசரி சராசரியாக 7.4 மெட்ரிக் டன் திடக்கழிவு உற்பத்தியாகிறது. அதில் 3.5 மெட்ரிக் டன் மட்கும் குப்பை, 3.2 மெட்ரிக் டன் மட்காத குப்பை மற்றும் 0.7 மெட்ரிக் டன் வடிகால் மண் ஆகும்.

2022 மே 6]

வள மீட்புப் பூங்காவில் இட பற்றாக்குறை உள்ளதால் திருப்புவனம் பேரூராட்சி அருகாமையில் உள்ள தேளி வருவாய்க் கிராமத்தில் இடம் தேர்வு செய்யப்பட்டு, வருவாய்த் துறையினரிடம் முன்னுழைவு அனுமதி பெற நடவடிக்கையில் உள்ளது.

மானாமதுரை தேர்வுநிலை பேரூராட்சியில் திடக்கழிவு வள மீட்புப் பூங்கா மாங்குளம் கிராமம் சர்வே எண் 83/2 மற்றும் 139/3-ல் 4.5 ஏக்கரில் செயல்பட்டு வருகிறது. இப்பேரூராட்சியில் தினசரி சராசரியாக 7.65 மெட்ரிக் டன் குப்பை உற்பத்தியாகிறது. அதில் 3.4 மெட்ரிக் டன் மட்கும் குப்பை, 3.5 மெட்ரிக் டன் மட்காத குப்பை மற்றும் 0.75 மெட்ரிக் டன் குப்பை வடிகால் மண் ஆகும். திடக்கழிவு வள மீட்புப் பூங்காவில் ஏற்கெனவே அனைத்து அடிப்படை வசதிகளுடன் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

135—

நீச்சல் பயிற்சி அறை அமைத்தல்

வினா எண் 2598—திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் நீச்சல் பயிற்சி அறை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் நீச்சல் பயிற்சி அறையுடன்கூடிய நீச்சல் குளம் அமைப்பதற்கு பாதுகாப்பான போதிய இடவசதி ஏதுமில்லை. எனவே, மானாமதுரை பேரூராட்சியில் தற்போது நீச்சல் பயிற்சி அறை அமைப்பதற்கு வழிவகை இல்லை.

[2022 மே 6

136—

கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்

வினா எண் 2601—திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்திலுள்ள மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருப்புவனம் பேரூராட்சியின் மக்கள்தொகை 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 24,554 ஆகும். பேரூராட்சியின் பரப்பளவு 18.00 சதுர கிலோ மீட்டர் மற்றும் 18 வார்டுகள் உள்ளன. தற்போதைய மக்கள்தொகை உத்தேசமாக 28,178 ஆகும். இப்பேரூராட்சியில் 36.26 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மற்றும் 24.00 கிலோ மீட்டர் நீளமுள்ள வடிகால்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், பேரூராட்சி எல்லைக்குள் 8,751 குடியிருப்புகள் அமைந்துள்ளன.

இப்பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் அல்லது கசடு கழிவுநீர் மேலாண்மைத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து,பேரூராட்சியின் நிதிநிலைமைக்கேற்ப உரிய திட்டத்தைச் செயல்படுத்த ஆய்வு மேற்கொள்ளப்படும்.

137—

கழிவுநீர் சுத்திகரிப்பு மையம் அமைத்தல்

வினா எண் 2602—திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி பேரூராட்சியில் கழிவுநீர் சுத்திகரிப்பு மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்திலுள்ள மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இளையான்குடி பேரூராட்சியின் மக்கள்தொகை 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 24,676 ஆகும். பேரூராட்சியின் பரப்பளவு 16.86 சதுர கிலோ மீட்டர் மற்றும் 18 வார்டுகள் உள்ளன. தற்போதைய மக்கள்தொகை உத்தேசமாக 28,157 ஆகும். இப்பேரூராட்சியில் 32.72 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மற்றும் 28.50 கிலோ மீட்டர் நீளமுள்ள வடிகால்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், பேரூராட்சியின் எல்லைக்குள் 7,460 எண்ணிக்கையிலான குடியிருப்புகள் அமைந்துள்ளன.

பாதாள சாக்கடைத் திட்டம் அல்லது கசடு கழிவுநீர் மேலாண்மைத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, இப்பேரூராட்சியின் நிதிநிலைமைக்கேற்ப உரிய திட்டம் செயல்படுத்த ஆய்வு மேற்கொள்ளப்படும்.

138—

புதிய குழாய்கள் அமைத்தல்

வினா எண் 2746—திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேதாரண்யம் தொகுதி முழுவதும், கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் அணைக்கரை கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம், குடிநீர் வழங்கும் பைப்லைன்கள் சேதமடைந்ததால் புதிய குழாய்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தொகுதியில் நெடுஞ்சாலை மற்றும் ஊரக வளர்ச்சித் துறையால்

மேற்கொள்ளப்படும் சாலைப் பணிகள் மற்றும் பால கட்டுமானப் பணிகளால் குடிநீர் விநியோகத் திட்டத்திற்காக போடப்பட்ட குழாய்கள் அடிக்கடி சேதமடைகின்றன. சேதமடைந்த குழாய்கள் பின்னர் சரி செய்யப்பட்டு, குடிநீர் வழங்கும் பணிகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

139—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல் மற்றும் மீன் மார்க்கெட் பயன்பாட்டுக்குக் கொண்டுவருதல்

வினா எண் 2772—திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆர்.கே. நகர் தொகுதியிலுள்ள பாரதி நகர் வார்டு 47 பகுதியில் சின்டெக்ஸ் குடிநீர்த் தொட்டிகளை அகற்றி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியாகக் கட்டவும், பாரதி நகர் கெனால் சாலையிலுள்ள மீன் மார்க்கெட்டை மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆர்.கே. நகர் தொகுதியிலுள்ள பாரதிநகர், வார்டு 47 பகுதிகளுக்கு பட்டேல் நகர் நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர்க் குழாய்கள்மூலம் தினசரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பட்டேல் நகர் நீரேற்று நிலையத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட உள்ளது. மேலும், இந்தப் பகுதிக்கு 3,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 240 எண்ணிக்கையிலான சின்டெக்ஸ் குடிநீர்த் தொட்டிகள் அமைத்து ஒருநாள் விட்டு ஒருநாள் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், 2 லாரி நடைகள் மூலமாக தெருக்களில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, பாரதிநகர் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியமில்லை எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4, பகுதி-11, கோட்டம்-47-ல் கெனால் சாலையில் மீன் மார்க்கெட்

2022 மே 6]

அமைக்கும் கட்டுமானப் பணிகள் முடிந்து தயார் நிலையில் உள்ளது. இது விரைவில் மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

140—

T.H. சாலையில் மேல்புற பணிகளை முடித்தல்

வினா எண் 2773—திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா——*

(அ) ஆர்.கே. நகர் தொகுதியில் உள்ள பாரதி நகரில் (வாக்கு 47) பசுமைப் பூங்கா பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி, பகுதி 11, வார்டு 47-ல் உள்ள பாரதி நகரில் சுமார் 2.66 ஹெக்டேர் பரப்பளவில் புதியதாக சுற்றுச்சூழல் பூங்கா அமைக்க ஒப்பந்தம் கோரப்பட்டு, மார்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன்மூலம் ரூ.8.50 கோடிக்கு பணி ஆணை வழங்கப்பட்டு, 75% பணிகள் செய்யப்பட்டு முழுமையடையாமல் உள்ளன. பணிகளை விரைவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

141—

குடிநீர் இணைப்பு, நீர் சேமிப்புத் தொட்டி அமைத்தல்

வினா எண் 2775—திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆர்.கே. நகர் தொகுதி, காசிமேடு இஸ்லாமிய கபர்ஸ்தானில் குடிநீர் இணைப்புக் குழாய், நீர் சேமிப்புத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, வார்டு எண் 43, காசிமேடு இஸ்லாமிய கபர்ஸ்தானில் ஏற்கெனவே குடிநீர் இணைப்பு மற்றும் நீர் சேமிப்புத் தொட்டி உள்ளது. தற்போது, இந்த வளாகத்திற்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

142—

குடிநீர் இணைப்பு வழங்குதல்

வினா எண் 2776—திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆர்.கே. நகர் தொகுதி, 40-வது வார்டு, திருவள்ளுவர் நகர், கிழக்கு பகுதியிலுள்ள 50 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 40-வது வார்டு, திருவள்ளுவர் நகர், கிழக்கு பகுதியிலுள்ள 50 வீடுகளுக்கு ஏற்கெனவே குடிநீர் இணைப்பு உள்ளது. மேலும், மேற்குறிப்பிட்ட 50 வீடுகளுக்கு போதுமான அளவு குழாய்களில் குடிநீர் வருகிறது.

143—

நீத்தார் நினைவு சடங்கு செய்யும் மண்டபமாக மாற்றுதல்

வினா எண் 2778—திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) ஆர்.கே. நகர் தொகுதி, இளைய முதலி தெரு, நாகாத்தம்மன் கோயில் எதிரில் உள்ள மாநகராட்சி பூங்கா அருகில் உபயோகமற்று இருக்கும் சுகாதார வளாக கட்டடத்தை இடித்து நீத்தார் நினைவு சடங்கு செய்யும் மண்டபமாக மாற்றி அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி, இளைய முதலி தெரு பார்க்கில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக நான்கு மொபைல் கழிவறை (Mobile Toilet) பொருத்தப்பட்டு மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். எனவே, நீத்தார் நினைவு சடங்கு செய்யும் மண்டபமாக மாற்ற இயலாது.

144—

சுற்றுச் சுவர், பூங்கா அமைத்தல்

வினா எண் 2779—திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆர்.கே. நகர் தொகுதியில் S.N. செட்டி தெருவில் உள்ள முஸ்லிம் கபர்ஸ்தான் பகுதியில் வெளிப்புற சுற்றச் சுவர் மற்றும் பூங்கா அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி, ஆர்.கே. நகர் தொகுதி, S.N. செட்டி தெருவில் உள்ள முஸ்லிம் கபர்ஸ்தான் பகுதியில் வெளிப்புற சுற்றுச் சுவர் அமைக்கப்பட்டுள்ளது. இச்சுற்றுச் சுவர் நல்ல நிலையில் உள்ளது மற்றும் மேற்குறிப்பிட்ட இடத்தில் இறந்த உடல்களை அடக்கம் செய்ய மட்டும் போதுமான இடம் உள்ளது. பூங்கா அமைக்க போதுமான இடவசதி இல்லை.

[*2022 மே 6*

145—

நவீன நூலகம் அமைத்தல்

வினா எண் 2780—திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆர்.கே. நகர் தொகுதி, வார்டு 47, காமராஜர் நகர், 7-வது தெருவிலுள்ள பொது சுகாதார வளாகத்தை இடித்து நவீன நூலகம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு 47-க்குட்பட்ட காமராஜர் நகர், 7-வது தெருவில் பொது சுகாதார வளாகம் ஏதுமில்லை. அவ்விடத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி பொது கழிப்பிடம் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது. எனவே, அதனை இடித்து நவீன நூலகம் அமைத்துத் தர இயலாது.

146—

கழிவுநீர் கலப்பதை சரிசெய்து குடிநீர் வழங்குதல்

வினா எண் 2781—திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆர்.கே. நகர் தொகுதி, செரியன் நகர் 1, 2, 3, 4 தெருக்களில் குடிநீரில் கழிவுநீர் கலப்பதை சரிசெய்து சீராக குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, செரியன் நகர் 1, 2, 3, 4 ஆகிய தெருக்களில் உள்ள குடிநீர்க் குழாய்கள் அடிக்கடி சுத்தம் செய்யப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. தற்போது, இங்கு குடிநீரில் கழிவுநீர் கலப்பு ஏதுமில்லை. இப்பகுதியிலுள்ள பழுதடைந்த குடிநீர்க் குழாய்களை மாற்றியமைக்க திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட தெருக்களில் 3,000 லிட்டர் கொள்ளளவுள்ள 12 குடிநீர்த் தொட்டிகள் மூலமும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

147—

குடிநீரில் கழிவுநீர் கலப்பதை சரிசெய்தல்

வினா எண் 2783—திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆர்.கே. நகர் தொகுதி, அனைத்து வட்டங்களிலும் குடிநீருடன் கழிவுநீர் கலந்து வருவதைச் சரிசெய்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் குடிநீர்க் குழாய்கள் அடிக்கடி சுத்தம் செய்யப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. தற்போது, இங்கு குடிநீரில் கழிவுநீர் கலப்பு ஏதுமில்லை. பழுதடைந்த குடிநீர்க் குழாய் கண்டறியப்பட்டு, புதிய குழாய் மாற்றியமைக்க திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. மேலும், இந்தப் பகுதிக்கு 3,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 745 எண்ணிக்கையிலான சின்டெக்ஸ் குடிநீர்த் தொட்டி அமைத்து தினமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், 85 லாரி நடைகள் மூலமாக தெருக்களில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2022 மே 6

148—

T.H. ரோடில் மேல்புற பணிகளை முடித்தல்

வினா எண் 2785—திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆர்.கே. நகர் தொகுதியில் நடைபெற்ற மெட்ரோ இரயில் திட்டத்தில் அகஸ்தியர் தியேட்டர் முதல் அப்போலோ மருத்துவமனை வரை T.H. ரோடில் மேல்புற பணிகளை விரைவில் முடித்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி, திருவொற்றியூர் நெடுஞ்சாலை (அகஸ்தியர் குடியிருப்பு முதல் அப்போலோ மருத்துவமனை வரை) சென்னை மெட்ரோ இரயில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இச்சாலையில் கழிவுநீர்க் குழாய் சீரமைப்பு, கழிவுநீர் (ம) குடிநீர் சேவை இணைப்பு, சாலை சீரமைப்பு, மழைநீர் வடிகால் மற்றும் நடைபாதை அமைப்பதற்கும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின்மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 3-8-2021 அன்று ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. பணிகள் விரைவில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின்மூலம் தொடங்கப்படும்.

149—

குடிநீர் திட்டப் பணிகள் நிறைவேற்றுதல்

வினா எண் 2790—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாதவரம் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர்த் திட்டப் பணிகளை முழுமையாக நிறைவேற்றிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாதவரம் குடிநீர்த் திட்டப் பணிகள் ஆரம்பக் காலத்தில் M/s. SSV *கன்சார்டியம், ஐதராபாத்-34 என்ற ஒப்பந்ததாரரிடம் 17-5-2012 அன்று ரூ.55 கோடி மதிப்பீட்டில்,* JICA *நிதியின்கீழ் 24 மாத ஒப்பந்தக் காலத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டு, 28-4-2013 அன்று பணி துவங்கப்பட்டது. பணி காலதாமதமாக நடைபெற்ற காரணத்தினால், 12-11-2018 அன்று இந்த ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டது.*

தற்போது, மீதமுள்ள பணிகள் மொத்த பணி மதிப்பான ரூ.120.27 கோடி திட்ட மதிப்பீட்டில் CMCDM *2020-2021 நிதியின்கீழ் 6 தொகுப்புகளாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஐந்து தொகுப்புகளுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதமுள்ள ஒரு தொகுப்பிற்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்படாததால் மற்ற தொகுப்புப் பணிகளில் இந்தத் தொகுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். அனைத்து பணிகளையும் மார்ச் 2022க்குள் அன்று முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.*

150—

பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்

வினா எண் 2791—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாதவரம் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாதவரம் தொகுதிக்குட்பட்ட மாதவரம் பகுதியிலுள்ள சூரப்பட்டு, புத்தகரம், கதிர்வேடு மற்றும்

மாதவரத்தில் சில பகுதிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டம் முடிவடைந்து செயல்பாட்டில் உள்ளது. சின்ன சேக்காடு, மணலி பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் நவம்பர் 2022-ல் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், புழல், மாத்தூர் மற்றும் மாதவரம் பகுதியில் விடுபட்ட தெருக்களுக்கு பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கும் பணிக்கான விரிவான திட்ட அறிக்கை திருத்தியமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி முடிந்ததும், நிதியுதவி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பின்னர் பணி மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

151—

கூடுதல் தண்ணீர் வழங்குதல்

வினா எண் 2799—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்கான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் போதிய தண்ணீர் கிடைக்கப் பெறாததால், தற்போதைய தேவையைக் கருதி கூடுதலான தண்ணீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒகேனக்கல் குடிநீர் வழங்கல் மற்றும் புளோரைடு பாதிப்பு குறைப்பு திட்டம்மூலம் தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வடிவமைக்கப்பட்ட அளவான நாளொன்றுக்கு 127.60 மில்லியன் லிட்டருடன், தற்போது 17.40 மில்லியன் லிட்டர் நாளொன்றுக்கு கூடுதலாக வழங்கப்பட்டு வருகிறது.

2022 மே 6]

152—

கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் முடித்தல்

வினா எண் 2837—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இரணியல் காட்டாத்துறை கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் குழித்துறையார் ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட இரணியல் பேரூராட்சி மற்றும் 319 கிராமக் குடியிருப்புகள் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் பத்மநாபபுரம் நகராட்சி, 3 பேரூராட்சிகள் மற்றும் 55 ஊராட்சிக் குடியிருப்புகளை உள்ளடக்கிய பத்மநாபபுரம் மற்றும் காட்டாத்துறை கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தின் மொத்தப் பணிகளில், இதுவரை 87 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டு, இதர பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டம், டிசம்பர் 2021-ல் முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர இலக்கிடப்பட்டுள்ளது.

153—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 2850—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஒன்றியம், அல்லிகுளம் ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் TWADமூலம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 மே 6

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி ஒன்றியம், அல்லிகுளம் ஊராட்சியில் உள்ள 4 குடியிருப்புகளிலுள்ள மக்களுக்கு உள்ளூர் நீராதாரம்மூலம் 0.17 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் செயலாக்கத்தில் உள்ள தூத்துக்குடி, திருவைகுண்டம் மற்றும் கருங்குளம் ஒன்றியத்தில் உள்ள 90 குடியிருப்புகளுக்கான குடிநீர்த் திட்டத்தில் மேற்காணும் குடியிருப்புகளுக்கு நாளொன்றுக்கு 0.63 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டு, சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது. இத்திட்டம் முடிவுறும்போது, அனைத்துக் குடியிருப்புகளுக்கும் நாளொன்றிற்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

154—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 71—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் நகராட்சி 33 மற்றும் 37-வது வார்டுகளை ஒருங்கிணைத்து புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் சட்டமன்றத் தொகுதியில் காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையால் 83 முழு நேர நியாய விலைக் கடைகள் மற்றும் 1 பகுதி நேர நியாய விலைக் கடை, இந்திய விமானப் படைப் பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தால் 1 முழு நேர நியாய விலைக் கடை என மொத்தம் 85 நியாய விலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகின்றன. தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தாம்பரம் நகராட்சியில் 33 மற்றும் 37-வது

2022 மே 6]

வார்டு பகுதி குடும்ப அட்டைதாரர்கள், காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையால் நடத்தப்படும் தாம்பரம்-2 (02PD007SK) நியாய விலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். இக்கடையில் 1,733 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. அரசு வழிகாட்டு நெறிகளின்படி, புதிய நியாய விலைக் கடை அமைப்பதற்கு நகர்ப்புறங்களில் குறைந்தபட்சம் 800 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். அதிகபட்சம் 1,000 குடும்ப அட்டைகளுக்கு மேல் இருக்கக் கூடாது.

தாம்பரம் நகராட்சி, 33-வது வார்டில் கைலாசபுரம், எத்திராஜ்புரம், சதாசிவம் தெரு, காந்தி ரோடு ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய சுமார் 300 குடும்ப அட்டைதாரர்களும், 37-வது வார்டில், தங்கவேல் தெரு, பஜனை கோவில் தெரு, அம்பேத்கர் தெரு, கோவிந்தராவ் தெரு, திருவள்ளுவர் தெரு ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய சுமார் 600 குடும்ப அட்டைதாரர்களும் தாம்பரம்-2 (02PD007SK) நியாய விலைக் கடையில் பொருட்கள் பெற்று வருகின்றனர். 33-வது வார்டில் உள்ள சுமார் 300 குடும்ப அட்டைகள் மற்றும் 37-வது வார்டில் இணைக்கப்பட்ட சுமார் 600 குடும்ப அட்டைகள் என மொத்தம் 900 குடும்ப அட்டைகளைப் பிரித்து, புதிய நியாய விலைக் கடை திறக்க வழிவகை உள்ளது. மேலும், இப்பொருள் தொடர்பாக புதிய நியாய விலைக் கடை அமைக்க இடம் ஒதுக்கக் கோரி, காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை நிர்வாகத்தால் தாம்பரம் நகராட்சிக்குக் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டவாறு, தாம்பரம் நகராட்சியால் நியாய விலைக் கடைக்கென இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்படும்பட்சத்தில், தாம்பரம்-2 (02PD007SK) முழு நேர நியாய விலைக் கடையிலிருந்து தாம்பரம் தொகுதி, 33-வது வார்டு மற்றும் 37-வது வார்டுகளில் உள்ள குடும்ப அட்டைகளைப் பிரித்து, புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறு உள்ளது.

155—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 221—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2022 மே 6

(அ) திருவையாறு தொகுதி, தென்னங்குடியில் உள்ள நியாய விலைக் கடையிலிருந்து பிள்ளையார்நத்தம் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்னங்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில், 2 முழு நேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. தென்னங்குடி (19AP031PN) முழு நேர நியாய விலைக் கடையில் 553 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பிள்ளையார்நத்தம் பகுதியைச் சேர்ந்த 115 குடும்ப அட்டைகளும் அடங்கும்.

புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பிள்ளையார்நத்தம் பகுதிக்கும், தென்னங்குடி முழு நேர நியாய விலைக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 1 கி.மீ. மட்டுமே உள்ளது. மேலும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பிள்ளையார்நத்தம் பகுதியில் 115 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. மேலும், குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின், தாய்க் கடையில் 438 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். எனவே, கிராமப் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும், பிரிக்கப்பட்டபின், தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் அங்காடிக்கும், பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதிக்கும் குறைந்தது 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும் எனும் அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், பிள்ளையார்நத்தம் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

எனினும், அப்பகுதியில் அம்மா நகரும் நியாய விலைக் கடையினை செயல்படுத்திட மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி வழங்கப்பட்டு, பிரதி மாதம் இரண்டாவது புதன்கிழமைதோறும் செயல்பட்டு வருகிறது.

2022 மே 6]

156—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 222—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, இராமபுரம் நியாய விலைக் கடையிலிருந்து மணல்மேடு கிராமத்துக்கு பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ட்டி.1202 இராமபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில், 2 முழு நேர நியாய விலைக் கடைகளும், 1 பகுதி நேர நியாய விலைக் கடையும், 1 அம்மா நகரும் அங்காடியும் செயல்பட்டு வருகின்றன. இராமபுரம் (19AP025PN) முழு நேர நியாய விலைக் கடையில் 443 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் மணல்மேடு பகுதியைச் சேர்ந்த 34 குடும்ப அட்டைகளும் அடங்கும்.

புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் மணல்மேடு கிராமத்திற்கும், இராமபுரம் முழு நேர நியாய விலைக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 1.5 கி.மீ. இருந்தபோதிலும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் மணல்மேடு கிராமத்தில் 34 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. மேலும், குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின், தாய்க் கடையில் 409 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். எனவே, கிராமப் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் எனும் அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், மணல்மேடு கிராமத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[2022 மே 6

157—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 223—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, மாத்தூர் மேற்கு நியாய விலைக் கடையிலிருந்து தொட்டி கிராமத்திற்கு பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், டீ.1674 மாத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில், 3 முழு நேர நியாய விலைக் கடைகளும், 1 அம்மா நகரும் அங்காடியும் செயல்பட்டு வருகின்றன. மாத்தூர் மேற்கு (19AP017PN) முழு நேர நியாய விலைக் கடையில் 792 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் தொட்டி கிராமத்தைச் சேர்ந்த 60 குடும்ப அட்டைகளும் அடங்கும்.

புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் தொட்டி கிராமத்திற்கும், மாத்தூர் மேற்கு முழு நேர நியாய விலைக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 1.5 கி.மீ. மற்றும் குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய்க் கடையில் 732 குடும்ப அட்டைகள் இருந்தபோதிலும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் தொட்டி கிராமத்தில் 60 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. மேலும், தொட்டி பகுதியில் அரசுக் கட்டடம் எதுவுமில்லை. எனவே, கிராமப் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் எனும் அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில் தொட்டி கிராமத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2022 மே 6]

158—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 226— திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, குருவாடிப்பட்டி நியாய விலைக் கடையிலிருந்து முன்னையம்பட்டி கிராமத்துக்கு பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கல்விராயன்பேட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில், 2 முழு நேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. குருவாடிப்பட்டி (19AP049PN) முழு நேர நியாய விலைக் கடையில் 681 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் முன்னையம்பட்டி பகுதியைச் சேர்ந்த 202 குடும்ப அட்டைகளும் அடங்கும்.

புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் முன்னையம்பட்டி பகுதிக்கும், குருவாடிப்பட்டி முழு நேர நியாய விலைக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 2 கி.மீ. உள்ள போதிலும், புதிய நியாய விலைக் கடை கோரும் முன்னையம்பட்டி பகுதியில் 202 குடும்ப அட்டைகள் இருந்தபோதிலும், பிரிக்கப்பட்டபின் தாய்க் கடையில் 479 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். எனவே, கிராமப் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை பிரிக்கப்பட்டபின், தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் எனும் அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், முன்னையம்பட்டி பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

எனினும், அப்பகுதியில் அம்மா நகரும் நியாய விலைக் கடையினை செயல்படுத்திட மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி வழங்கப்பட்டு, பிரதி மாதம் 1-வது மற்றும் 2-வது செவ்வாய்க்கிழமைதோறும் செயல்பட்டு வருகிறது.

[2022 மே 6

159—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 227—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, திருவையாறு கடை-1 நியாய விலைக் கடையிலிருந்து பருத்திக்குடி கிராமம், குண்டங்குடி கிராமம், கஸ்தூரிபாய் நகர் ஆகிய பகுதிகளில் பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில், 9 முழு நேர நியாய விலைக் கடைகளும், 2 பகுதி நேர அங்காடிகளும் செயல்பட்டு வருகின்றன. திருவையாறு 1 முழு நேர நியாய விலைக் கடையில் 979 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பருத்திக்குடி கிராமம், குண்டங்குடி கிராமம், கஸ்தூரிபாய் நகர் ஆகிய பகுதிகளின் 409 குடும்ப அட்டைகளும் அடங்கும்.

பருத்திக்குடி கிராமம், குண்டங்குடி கிராமம், கஸ்தூரிபாய் நகர் ஆகிய பகுதிகளில் 409 குடும்ப அட்டைகள் மற்றும் குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்ட பின் தாய்க் கடையில் 570 குடும்ப அட்டைகள் இருந்தபோதிலும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பருத்திக்குடி கிராமம், குண்டங்குடி கிராமம், கஸ்தூரிபாய் நகர் ஆகிய பகுதிகளுக்கும், திருவையாறு-1 முழு நேர நியாய விலைக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 1 கி.மீ. மட்டுமே உள்ளது. மேலும், பருத்திக்குடி கிராமம், குண்டங்குடி கிராமம், கஸ்தூரிபாய் நகர் ஆகிய பகுதிகளில் அரசுக் கட்டடங்கள் எதுவும் இல்லை. எனவே, கிராமப் பகுதியில் தாய் அங்காடிக்கும், பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதிக்கும் குறைந்தது 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும் எனும் அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், பருத்திக்குடி கிராமம், குண்டங்குடி கிராமம், கஸ்தூரிபாய் நகர் ஆகிய பகுதிகளில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2022 மே 6]

எனினும், அப்பகுதிகளில் அம்மா நகரும் நியாய விலைக் கடைகளை செயல்படுத்திட மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி வழங்கப்பட்டு, குண்டங்குடி கிராமத்தில் பிரதி மாதம் 2-வது செவ்வாய்க்கிழமை, பருத்திக்குடி கிராமத்தில் பிரதி மாதம் 2-வது புதன்கிழமை மற்றும் கஸ்தூரிபாய் நகரில் பிரதி மாதம் 2-வது வியாழக்கிழமைதோறும் செயல்பட்டு வருகின்றன.

160—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 237—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, களிமேடு பகுதியிலுள்ள நியாய விலைக் கடையிலிருந்து பரிசுத்தம் நகர் கிராமத்துக்கு பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், களிமேடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில், களிமேடு (19AP013PN) முழு நேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. களிமேடு (19AP013PN) முழு நேர நியாய விலைக் கடையில் 642 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பரிசுத்தம் நகர் பகுதியைச் சேர்ந்த 150 குடும்ப அட்டைகளும் அடங்கும்.

புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பரிசுத்தம் நகர் பகுதியில் 150 குடும்ப அட்டைகள் இருந்தபோதிலும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பரிசுத்தம் நகர் பகுதிக்கும், களிமேடு முழு நேர நியாய விலைக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 0.5 கி.மீ. மட்டுமே உள்ளது. மேலும், குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய்க் கடையில் 492 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். எனவே, கிராமப் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை பிரிக்கப்பட்டபின், தாய் அங்காடியில் 500

[2022 மே 6

குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் அங்காடிக்கும், பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதிக்கும் குறைந்தது 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும் எனும் அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் பரிசுத்தம் நகர் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

161—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 238—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, ஆலக்குடி பகுதியிலுள்ள நியாய விலைக் கடையிலிருந்து ஆதி திராவிடர் தெருவில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலக்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில், ஆலக்குடி (19AP001PN) முழு நேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. ஆலக்குடி (19AP001PN) முழு நேர நியாய விலைக் கடையில் 1,157 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் ஆதி திராவிடர் தெரு பகுதியைச் சேர்ந்த 250 குடும்ப அட்டைகளும் அடங்கும்.

புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் ஆதி திராவிடர் தெரு பகுதியில் 250 குடும்ப அட்டைகள் இருந்தபோதிலும், பிரிக்கப்பட்டபின் தாய்க் கடையில் 907 குடும்ப அட்டைகள் உள்ள போதிலும், ஆதி திராவிடர் தெரு பகுதிக்கும், ஆலக்குடி முழு நேர நியாய விலைக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 0.5 கி.மீ. மட்டுமே உள்ளது. மேலும், ஆதி திராவிடர் தெரு பகுதியில் அரசுக் கட்டடம் எதுவும் இல்லை. எனவே, தாய் அங்காடிக்கும், பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதிக்கும் குறைந்தது 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும் எனும் அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத

2022 மே 6]

நிலையில், ஆதி திராவிடர் நகர் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

162—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 241—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, தோகூர் நியாய விலைக் கடையிலிருந்து புதூர் கிராமத்துக்கு பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், தோகூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில், 2 முழு நேர நியாய விலைக் கடைகளும், 2 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன. தோகூர் முழு நேர நியாய விலைக் கடையில் 656 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் புதூர் பகுதியைச் சேர்ந்த 90 குடும்ப அட்டைகளும் அடங்கும்.

புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் புதூர் பகுதிக்கும், தோகூர் முழு நேர நியாய விலைக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 2 கி.மீ. மற்றும் குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய்க் கடையில் 566 குடும்ப அட்டைகள் என இருந்தபோதிலும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் புதூர் பகுதியில் 90 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. மேலும், புதூர் பகுதியில் அரசுக் கட்டடம் எதுவும் இல்லை. எனவே, கிராமப் பகுதியில், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் எனும் அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், புதூர் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[2022 மே 6

எனினும், அப்பகுதியில் அம்மா நகரும் நியாய விலைக் கடையை செயல்படுத்திட மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி வழங்கப்பட்டு, பிரதி மாதம் 2-வது சனிக்கிழமைதோறும் செயல்பட்டு வருகிறது.

163—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 242—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, விஷ்ணம்பேட்டை நியாய விலைக் கடையிலிருந்து மணல்மேடு கிராமத்துக்கு பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், விஷ்ணம்பேட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில், 3 முழு நேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. விஷ்ணம்பேட்டை முழு நேர நியாய விலைக் கடையில் 786 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் மணல்மேடு பகுதியைச் சேர்ந்த 210 குடும்ப அட்டைகளும் அடங்கும்.

புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் மணல்மேடு பகுதியில் 210 குடும்ப அட்டைகளும், குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய்க் கடையில் 576 குடும்ப அட்டைகளும் உள்ளன. புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் மணல்மேடு பகுதிக்கும், விஷ்ணம்பேட்டை முழு நேர நியாய விலைக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 2 கி.மீ. ஆகும். மேலும், விஷ்ணம்பேட்டை பகுதியில் அரசுக் கட்டடம் எதுவும் இல்லை. எனவே, புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் அரசுக் கட்டடம் இருக்க வேண்டும் எனும் அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில் மணல்மேடு பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2022 மே 6]

எனினும், அப்பகுதியில் அம்மா நகரும் நியாய விலைக் கடையை செயல்படுத்திட மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி வழங்கப்பட்டு, பிரதி மாதம் 1—வது மற்றும் 2—வது செவ்வாய்க்கிழமைதோறும் செயல்பட்டு வருகிறது.

164—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 243—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, விண்ணணூர்பட்டி நியாய விலைக் கடையிலிருந்து சின்னகாங்கேயம்பட்டி கிராமத்துக்கு பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில், 10 முழு நேர நியாய விலைக் கடைகளும், 2 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன. விண்ணணூர்பட்டி பகுதி நேர நியாய விலைக் கடையில் 405 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் சின்னகாங்கேயம்பட்டி பகுதியைச் சேர்ந்த 90 குடும்ப அட்டைகளும் அடங்கும்.

புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் சின்னகாங்கேயம்பட்டி பகுதிக்கும், விண்ணணூர்பட்டி பகுதி நேர நியாய விலைக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 3 கி.மீ. இருந்தபோதிலும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் சின்னகாங்கேயம்பட்டி பகுதியில் 90 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய்க் கடையில் 315 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். மேலும், சின்னகாங்கேயம்பட்டி பகுதியில் அரசுக் கட்டடம் எதுவும் இல்லை. எனவே, கிராமப் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப

அட்டைகள் இருக்க வேண்டும் எனும் அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், சின்னகாங்கேயம்பட்டி பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

எனினும், அப்பகுதியில் ஒரு நகரும் நியாய விலைக் கடையினை செயல்படுத்திட மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி வழங்கப்பட்டு, பிரதி மாதம் 1-வது சனிக்கிழமைதோறும் செயல்பட்டு வருகின்றன.

165—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 244— திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, நெடுங்குளம் நியாய விலைக் கடையிலிருந்து கடையக்குடி கிராமத்துக்கு பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், மாரமனேரி கடம்பங்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில், 4 முழு நேர நியாய விலைக் கடைகளும், 2 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன. நெடுங்குளம் பகுதி நேர நியாய விலைக் கடையில் 281 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் கடையக்குடி பகுதியைச் சேர்ந்த 138 குடும்ப அட்டைகளும் அடங்கும்.

புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் கடையக்குடி பகுதிக்கும், நெடுங்குளம் பகுதி நேர நியாய விலைக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 1 கி.மீ. மட்டுமே உள்ளது. புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் கடையக்குடி பகுதியில் 138 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. மேலும், குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய்க் கடையில் 143 குடும்ப அட்டைகள்

2022 மே 6]

மட்டுமே இருக்கும். எனவே, கிராமப் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பிரிக்கப்பட்ட பின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் அங்காடிக்கும், பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதிக்கும் இடையே குறைந்தபட்சம் 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும் எனும் அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், கடையக்குடி பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

எனினும், அப்பகுதியில் நகரும் நியாய விலைக் கடையினை செயல்படுத்திட மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி வழங்கப்பட்டு, பிரதி மாதம் 3-வது புதன்கிழமைதோறும் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

166—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 246— திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, கள்ளப்பெரம்பூர் 1 சேத்தி நியாய விலைக் கடையிலிருந்து காந்திபுரம் கிராமத்திலும், கள்ளப்பெரம்பூர் 2 சேத்தி நியாய விலைக் கடையிலிருந்து எல்லைக்கால் தெரு கிராமத்திலும் பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கள்ளப்பெரம்பூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில், 2 முழு நேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. கள்ளப்பெரம்பூர் 1 முழு நேர நியாய விலைக் கடையில் 709 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் காந்திபுரம் பகுதியைச் சேர்ந்த 27 குடும்ப

அட்டைகளும் அடங்கும். மேலும், கள்ளப்பெரம்பூர் 2 முழு நேர நியாய விலைக் கடையில் 535 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் எல்லைக்கால் தெரு பகுதியைச் சேர்ந்த 109 குடும்ப அட்டைகளும் அடங்கும்.

கள்ளப்பெரம்பூர் 1 முழு நேர நியாய விலைக் கடைக்கும், காந்திபுரம் கிராமத்திற்கும் இடையே 2 கி.மீ. தூரம் மற்றும் பிரிக்கப்பட்டபின் தாய்க் கடையில் 682 குடும்ப அட்டைகள் என இருந்தபோதிலும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் காந்திபுரம் கிராமத்தில் 27 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. மேலும், காந்திபுரம் பகுதியில் அரசுக் கட்டடம் எதுவுமில்லை. மேலும், கள்ளப்பெரம்பூர் 2 முழு நேர நியாய விலைக் கடைக்கும், எல்லைக்கால் தெரு கிராமத்திற்கும் இடையே 3 கி.மீ. தூரம் இருந்தபோதிலும், பிரிக்கப்பட்டபின் தாய்க் கடையில் 426 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். மேலும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் எல்லைக்கால் தெரு கிராமத்தில் 109 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். எனவே, கிராமப் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும், பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் எனும் அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், காந்திபுரம் கிராமம் மற்றும் எல்லைக்கால் தெரு கிராமத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

எனினும், அப்பகுதிகளில் நகரும் நியாய விலைக் கடைகளை செயல்படுத்திட மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி வழங்கப்பட்டு, காந்திபுரம் கிராமத்தில் பிரதி மாதம் 2-வது சனிக்கிழமையும், எல்லைக்கால் தெரு கிராமத்தில் பிரதி மாதம் 2-வது வியாழக்கிழமைதோறும் செயல்பட்டு வருகின்றன.

167—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 248—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, வெண்டையம்பட்டி நியாய விலைக் கடையிலிருந்து வேலுப்பட்டி கிராமத்துக்கு பகுதி நேர

2022 மே 6]

நியாய விலைக் கடை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், இராயமுண்டான்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில், 4 முழு நேர நியாய விலைக் கடைகளும், நாவலூரில் பகுதி நேர நியாய விலைக் கடையும் செயல்பட்டு வருகின்றன. வெண்டையம்பட்டி முழு நேர நியாய விலைக் கடையில் 416 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் வேலுப்பட்டி பகுதியைச் சேர்ந்த 33 குடும்ப அட்டைகளும் அடங்கும்.

புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் வேலுப்பட்டி பகுதிக்கும், வெண்டையம்பட்டி முழு நேர நியாய விலைக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 2.5 கி.மீ. இருந்தபோதிலும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் வேலுப்பட்டி பகுதியில் 33 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. மேலும், குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய்க் கடையில் 383 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். மேலும், வேலுப்பட்டி பகுதியில் அரசுக் கட்டடம் எதுவும் இல்லை. எனவே, புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும், பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் எனும் அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், வேலுப்பட்டி கிராமத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

எனினும், அப்பகுதியில் ஒரு நகரும் நியாய விலைக் கடையினை செயல்படுத்திட மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி வழங்கப்பட்டு, பிரதி மாதம் 1-வது செவ்வாய்க்கிழமைதோறும் செயல்பட்டு வருகின்றது.

[2022 மே 6

168—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 252—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, பூதலூர் எண் 3 நியாய விலைக் கடையிலிருந்து நாச்சியார்பட்டி கிராமத்திலும் மற்றும் பெரியகாங்கேயம்பட்டி நியாய விலைக் கடையிலிருந்து புங்கனூர் கிராமத்திலும் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1. திருவையாறு தொகுதி, பூதலூர் எண் 3 நியாய விலைக் கடையிலிருந்து நாச்சியார்பட்டி கிராமத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோருதல்.

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில், 10 முழு நேர நியாய விலைக் கடைகளும், புதுப்பட்டி மற்றும் விண்ணனூர்பட்டி ஆகிய 2 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன. பூதலூர் 3 முழு நேர நியாய விலைக் கடையில் 710 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் நாச்சியார்பட்டி கிராமப் பகுதியைச் சேர்ந்த 200 குடும்ப அட்டைகளும் அடங்கும். மேலும், தாய் நியாய விலைக் கடைக்கும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் நாச்சியார்பட்டி கிராமத்திற்கும் இடையே 2 கி.மீ. தூரம் உள்ளது.

நாச்சியார்பட்டி கிராமப் பகுதியைச் சேர்ந்த 200 குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய்க் கடையில் 510 குடும்ப அட்டைகள் மற்றும் தாய் நியாய விலைக் கடைக்கும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் நாச்சியார்பட்டி கிராமப் பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 2 கி.மீ. இருந்தபோதிலும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் நாச்சியார்பட்டி கிராமப் பகுதியில் அரசுக் கட்டடம் எதுவுமில்லை. எனவே, அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், நாச்சியார்பட்டி கிராமப்

2022 மே 6]

பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

எனினும், அப்பகுதியில் அம்மா நகரும் நியாய விலைக் கடைகளைச் செயல்படுத்திட மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி வழங்கப்பட்டு, நாச்சியார்பட்டி கிராமத்தில் பிரதி மாதம் 1-வது மற்றும் 2-வது புதன்கிழமைதோறும் அத்தியாவசியப் பொருட்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

2. திருவையாறு தொகுதி, பெரியகாங்கேயம்பட்டி நியாய விலைக் கடையிலிருந்து புங்கனூர் கிராமத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோருதல்.

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில், 10 முழு நேர நியாய விலைக் கடைகளும், 2 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன. பெரியகாங்கேயன்பட்டி முழு நேர நியாய விலைக் கடையில் 704 குடும்ப அட்டைகளும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் புங்கனூர் கிராமப் பகுதியைச் சேர்ந்த 200 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். மேலும், தாய் நியாய விலைக் கடைக்கும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் புங்கனூர் கிராமத்திற்கும் இடையே 2 கி.மீ. தூரம் உள்ளது.

புங்கனூர் கிராமப் பகுதியைச் சேர்ந்த 200 குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய்க் கடையில் 504 குடும்ப அட்டைகள் மற்றும் தாய் நியாய விலைக் கடைக்கும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் புங்கனூர் கிராமப் பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 2 கி.மீ. இருந்தபோதிலும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் புங்கனூர் கிராமப் பகுதியில் அரசுக் கட்டடம் எதுவுமில்லை. எனவே, அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், புங்கனூர் கிராமப் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

எனினும், அப்பகுதியில் அம்மா நகரும் நியாய விலைக் கடைகளைச் செயல்படுத்திட மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி வழங்கப்பட்டு, புங்கனூர் கிராமத்தில் பிரதி மாதம் 1-வது மற்றும் 2-வது செவ்வாய்க்கிழமைதோறும் அத்தியாவசியப் பொருட்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

[2022 மே 6

169—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 256—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, பெரமூர் எண் 2 நியாய விலைக் கடையிலிருந்து மடம் கிராமத்திலும் மற்றும் கழுமங்கலம் நியாய விலைக் கடையிலிருந்து அம்மன்குடி கிராமத்திலும் பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1. மடம் கிராமத்திற்கு பகுதி நேர நியாய விலைக் கடை

தஞ்சாவூர் மாவட்டம், பெரமூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில், 3 முழு நேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. பெரமூர் 2 முழு நேர நியாய விலைக் கடையில் 852 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் மடம் பகுதியைச் சேர்ந்த 150 குடும்ப அட்டைகளும் அடங்கும்.

புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் மடம் பகுதியில் 150 குடும்ப அட்டைகள் மற்றும் குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய்க் கடையில் 702 குடும்ப அட்டைகள் இருந்தபோதிலும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் மடம் பகுதிக்கும், பெரமூர் 2 முழு நேர நியாய விலைக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 1 கி.மீ. மட்டுமே உள்ளது. மேலும், மடம் பகுதியில் அரசுக் கட்டடம் எதுவுமில்லை. எனவே, கிராமப் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதிக்கும், தாய் அங்காடிக்கும் குறைந்தது 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும் எனும் அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், மடம் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2022 மே 6]

எனினும், அப்பகுதியில் அம்மா நகரும் நியாய விலைக் கடைகளைச் செயல்படுத்திட மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி வழங்கப்பட்டு, பிரதி மாதம் 2-வது சனிக்கிழமைதோறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

2. அம்மன்குடி கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை

தஞ்சாவூர் மாவட்டம், அள்ளூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில், 2 முழு நேர நியாய விலைக் கடைகளும், 1 பகுதி நேர நியாய விலைக் கடையும் செயல்பட்டு வருகின்றன. கழுமங்கலம் முழு நேர நியாய விலைக் கடையில் 337 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் அம்மன்குடி பகுதியைச் சேர்ந்த 80 குடும்ப அட்டைகளும் அடங்கும்.

புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் அம்மன்குடி பகுதியில் 80 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. மேலும், குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய்க் கடையில் 257 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் அம்மன்குடி பகுதிக்கும், கழுமங்கலம் முழு நேர நியாய விலைக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 1 கி.மீ. மட்டுமே உள்ளது. மேலும், அம்மன்குடி பகுதியில் அரசுக் கட்டடம் எதுவுமில்லை. எனவே, கிராமப் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும், பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் அங்காடிக்கும், பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதிக்கும் குறைந்தது 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும் எனும் அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், அம்மன்குடி பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

எனினும், அப்பகுதியில் அம்மா நகரும் நியாய விலைக் கடைகளைச் செயல்படுத்திட மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி வழங்கப்பட்டு, பிரதி மாதம் 1-வது சனிக்கிழமைதோறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

[2022 மே 6

170—

நிழற்குடை அமைத்தல்

வினா எண் 613—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் நகராட்சி, வார்டு எண் 38—ல் அமைந்துள்ள நியாய விலைக் கடை KDM-*15-ல் நிழற்குடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் சட்டமன்றத் தொகுதியில் காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின்கீழ் 83 முழு நேர நியாய விலைக் கடைகளும், 1 பகுதி நேர நியாய விலைக் கடையும் மற்றும் இந்திய விமானப் படை பணியாளர்கள் கூட்டுறவு சங்கத்தால் 1 முழு நேர நியாய விலைக் கடையும், ஆக மொத்தம் 85 நியாய விலைக் கடைகள் கூட்டுறவுத் துறையால் நடத்தப்படுகின்றன.

தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆர்.கே. தெரு-1 (02PD015SK, *பழைய எண்* KDM-15) *முழு நேர நியாய விலைக் கடை காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையால் நடத்தப்பட்டு வருகிறது. இக்கடை, தாம்பரம் தொகுதி, தாம்பரம் நகராட்சி, வார்டு எண் 38-ல் அமைந்துள்ள அரசு இலவசக் கட்டடத்தில் 1,300 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகின்றது.*

மேற்படி நியாய விலைக் கடையில் குடும்ப அட்டைதாரர்கள் அத்தியாவசியப் பொருட்களை சிரமமின்றி பெற்றுச் செல்ல ஏதுவாக, நியாய விலைக் கடை கட்டடத்தின் முன்பகுதியில் நிழற்குடை அமைக்க காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை நிர்வாகத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2022 மே 6]

171—

நியாய விலைக் கடை சீரமைத்தல்

வினா எண் 613—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, செம்பாக்கம் நகராட்சி, 12-வது வார்டில் உள்ள K029 நியாய விலைக் கடையைச் சீரமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட செம்பாக்கம் நகராட்சி, 12-வது வார்டில் அமைந்துள்ள மகாலட்சுமி நகர் (02PD029SK, *பழைய குறியீடு* KD029) *முழு நேர நியாய விலைக் கடை காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை கட்டுப்பாட்டின்கீழ், 1971 குடும்ப அட்டைகளுடன் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.*

மேற்படி மகாலட்சுமி நகர் முழு நேர நியாய விலைக் கடை கட்டடம் ஏற்கெனவே சீரமைக்கப்பட்டு, தற்போது அக்கட்டடம் நல்ல நிலையில் உள்ளதால், மகாலட்சுமி நகர் முழு நேர நியாய விலைக் கடை கட்டடத்தை சீரமைக்க வேண்டிய நிலை எழவில்லை.

172—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 1869—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, மணப்பாக்கம் ஊராட்சி, கட்டியம்பாளையம் பகுதியில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2022 மே 6*

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், வீரப்பெருமாநல்லூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில், 8 முழு நேர நியாய விலைக் கடைகளும், 2 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன.

மணப்பாக்கம் ஊராட்சி, கட்டியம்பாளையம் பகுதி நேர நியாய விலைக் கடையானது, 261 குடும்ப அட்டைகளுடன் கட்டியம்பாளையம் பகுதியிலேயே செயல்பட்டு வருவதால், கட்டியம்பாளையம் பகுதிக்கு புதிய நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய நேர்வு எழவில்லை.

173—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 1870—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, சிறுகிராமம் ஊராட்சியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், வீரப்பெருமாநல்லூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில், 8 முழு நேர நியாய விலைக் கடைகளும், 2 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன.

சிறுகிராமம் முழு நேர நியாய விலைக் கடையானது, 783 குடும்ப அட்டைகளுடன் சிறுகிராமம் பகுதியிலேயே செயல்பட்டு வருவதால், சிறுகிராமத்திற்கு புதிய நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய நேர்வு எழவில்லை.

2022 மே 6]

174—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 2177—திரு. இரா. அருள்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மேற்குத் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், செம்மண்கூடல் ஊராட்சி, எல்லாயூரில் புதியதாக நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சேலம் மேற்குத் தொகுதி, எஸ். 511, கருக்கல்வாடி தேவியம்மன் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கக் கட்டுப்பாட்டில் எல்லாயூர் (07FO002PY) முழு நேர நியாய விலைக் கடையானது 1991 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருவதால், அப்பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய நேர்வு எழவில்லை.

175—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 2990—திரு. சு. ரவி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், வேடல் ஊராட்சி, வேடல் காந்திநகர் பகுதியில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராணிப்பேட்டை மாவட்டம், வேடல் கிராமம், காந்திநகர் பகுதியில் சி2025 மேல்களத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில்,

[2022 மே 6

11 முழு நேர நியாய விலைக் கடைகளும், 5 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன.

வேடல் கிராமம், காந்திநகர் பகுதியில், காந்திநகர் (04CP095P1) பகுதி நேர நியாய விலைக் கடையானது, ஏற்கெனவே 358 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருவதால், காந்திநகர் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய நேர்வு எழவில்லை.

176—

மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்குதல்

வினா எண் 1641—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் மற்றும் மீஞ்சூர் ஒன்றியங்களில் அல்லது இணைப்புப் பகுதிகளில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி அமைந்துள்ள திருவள்ளூர் மாவட்டத்தில் தற்பொழுது 2 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 1 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், 33 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, சோழவரம் மற்றும் மீஞ்சூர் ஒன்றியங்களில் அல்லது இணைப்புப் பகுதிகளில் புதியதாக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

2022 மே 6]

177—

கௌரவ விரிவுரையாளர்களுக்கு மூன்று மாத ஊதியம் வழங்குதல்

வினா எண் 1657—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரசுக் கல்லூரிகளில் பணிபுரியும் கௌரவ விரிவுரையாளர்களுக்கு வழங்கப்படாமல் உள்ள மூன்று மாத ஊதியத்தை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

அரசு கல்லூரிகளில் தொகுப்பூதியத்தில் பணிபுரியும் கௌரவ விரிவுரையாளர்களுக்கு 2021-2022 ஆம் கல்வியாண்டில் மூன்று மாத (ஏப்ரல் 2021, ஜூன் 2021 மற்றும் ஜூலை 2021) தொகுப்பூதியம் வழங்குவது தொடர்பாக கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

178—

கலைக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 3275—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, பரப்பாடியில் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி அமைந்துள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் தற்பொழுது ஓர் அரசு கலை

மற்றும் அறிவியல் கல்லூரியும், 11 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் 10 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், இதைத் தவிர 16 பொறியியல் கல்லூரிகளும் மற்றும் 14 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால் நாங்குநேரி தொகுதி, பரப்பாடியில் கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

179—

அரசு கலைக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 4101—திரு. ஈ. ராஜா: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவில் நகரில் கோமதி அம்பாள் அரசு கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரன்கோவில் தொகுதி அமைந்துள்ள தென்காசி மாவட்டத்தில் தற்பொழுது மூன்று அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 10 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், இதைத் தவிர ஐந்து பொறியியல் கல்லூரிகளும் மற்றும் 12 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவில் நகரில் கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

180—

சாலையை மேம்படுத்துதல்

வினா எண் 572—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 மே 6]

(அ) திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளி-வளப்பகுடி-திருவையாறு முன்சீப் கோர்ட் சாலையை மேம்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருக்காட்டுப்பள்ளி-வளப்பகுடி-திருவையாறு முன்சீப் கோர்ட் சாலை கி.மீ.0/0-14/6-ல் 5.60 கி.மீ. நீளம் 2018-2019 ஆம் ஆண்டும், 4.80 கி.மீ. நீளம் 2019-2020 ஆம் ஆண்டும் மேம்பாடு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள சாலைப் பகுதிகளில் இனிவரும் காலங்களில் நிதிநிலைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் மேம்பாடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

181—

புதிய பாலம் கட்டுதல்

வினா எண் 586—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளி-செங்கிப்பட்டி சாலை அடஞ்சூர் அருகே உள்ள பழைய குறுகலான பாலத்திற்கு மாற்றாக புதிய பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளி-செங்கிப்பட்டி சாலை அடஞ்சூர் அருகே உள்ள பழைய குறுகலான பாலத்திற்கு மாற்றாக புதிய பாலம் கட்டும் பணி விரைவில் முடிக்கப்படும்.

[2022 மே 6

182—

நெடுஞ்சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 1306—திரு. மா. செந்தில்குமார்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சின்ன சேலம்-பெத்தானூர்-அம்மகளத்தூர் செல்லும் மாவட்ட நெடுஞ்சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

சின்ன சேலம்-பெத்தானூர்-அம்மகளத்தூர் செல்லும் சாலையானது மாவட்ட இதர சாலையான பெத்தானூர்-அம்மகளத்தூர் சாலையில் மொத்தமுள்ள 9 கி.மீ. நீளமுடைய சாலையாகும். இச்சாலையில் போக்குவரத்துச் செறிவு மிகவும் குறைவாக உள்ளதால் அகலப்படுத்த வேண்டிய தேவை ஏற்படவில்லை. மேலும், இச்சாலை கி.மீ.7/0-9/0 வரை ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்புத் திட்டம் 2019-2020-ல் மேம்பாடு செய்யப்பட்டு போக்குவரத்திற்கு ஏற்றவாறு நல்ல நிலையில் உள்ளது.

183—

விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குதல்

வினா எண் 2191—திரு. இரா. அருள்: மாண்புமிகு வேளாண்மை—உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊரடங்கு காலத்தில் கடும் பாதிப்பிற்குள்ளான மாம்பழம் மற்றும் மலர் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

கொரோனா ஊரடங்கு காலத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறைமூலம் விவசாயிகளுக்கு மாநிலத்திற்குள்ளும், வெளி மாநிலத்திற்கும் போக்குவரத்து ஏற்படுத்தியும்,

2022 மே 6]

விவசாயிகளுக்கு வாகன அனுமதி சீட்டு வழங்கியும் பழங்கள், காய்கறிகள் மற்றும் மலர்கள் ஆகியவற்றை சந்தைப்படுத்த வழிவகை செய்யப்பட்டது. மேலும், 24-5-2021 முதல் 28-6-2021 வரை 69,539 மெ.டன் மாம்பழங்கள் பழ பதனிடும் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பட்டன.

தமிழகத்தில் விளைவிக்கப்படும் உதிரி பூக்கள் வீணாவதைத் தவிர்க்க வாசனை திரவியப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு அனுப்பி வழிவகை செய்யப்பட்டது. இதன்மூலம் 24-5-2021 முதல் 28-6-2021 வரை 731 மெ.டன் மல்லிகை மலர்கள் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. மேற்கண்ட நடவடிக்கையினால் மாம்பழங்கள் மற்றும் மலர்கள் அதிக அளவில் வீணாவது தடுக்கப்பட்டுள்ளது.

184—

விவசாயிகளுக்கு மானியம் வழங்குதல்

வினா எண் 2198—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வேளாண்மை—உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர் ஒன்றியம், முத்துநாயக்கன்பட்டி ஊராட்சி, சொட்டுநீர் பாசனத் திட்டத்தில் அனைத்து சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் நுண்ணீர் பாசனத் திட்டத்தின்கீழ் அனைத்து சிறு/குறு விவசாயிகளுக்கும் 100 சதவிகித மானியத்தில்தான் சொட்டுநீர் பாசனம் அமைத்துத் தரப்படுகிறது.

185—

ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைத்தல்

வினா எண் 3029—திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மானாமதுரை தொகுதி, திருப்புவனம், இளையான்குடி ஒன்றியங்களில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

மானாமதுரை தொகுதியிலுள்ள திருப்புவனத்திலும், இளையான்குடியிலும் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன.

186—

முழு மானியம் வழங்குதல்

வினா எண் 3364—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, காவிரி டெல்டா மாவட்டத்தில் சொட்டுநீர் பாசனம்மூலம் கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு முழு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் சொட்டுநீர் பாசனம் அமைக்க விரும்பும் குறு, சிறு விவசாயிகளுக்கு 100% மானியமும் இதர விவசாயிகளுக்கு 75% மானியமும் அளிக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் குறு, சிறு விவசாயிகள் 2 ஹெக்டேர் வரையிலும் இதர விவசாயிகள் 5 ஹெக்டேர் வரையிலும் பயன்பெற முடியும். சொட்டுநீர் பாசனத்திற்கென 2021-2022 ஆம் ஆண்டில் வேளாண்மை-உழவர் நலத் துறைக்கு மட்டும் ரூ.383 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை ரூ.22.87 கோடி செலவிடப்பட்டுள்ளது. கரும்பு பயிருக்கு சொட்டுநீர் பாசனம் அமைக்க மானியமாக ஒரு ஹெக்டேருக்கு 12% GST-யுடன் குறு, சிறு விவசாயிகளுக்கு 100% மானியத்தில் ரூ.1,13,133/-ம் இதர விவசாயிகளுக்கு 75% மானியத்தில் ரூ.87,880/-ம் வழங்கப்படுகிறது.

2022 மே 6]

கும்பகோணம் தொகுதி காவிரி டெல்டா மாவட்டமான தஞ்சாவூருக்கு சொட்டுநீர் பாசனம் அமைத்திட இந்த 2021-2022 ஆம் ஆண்டில் 3,000 ஹெக்டேர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, ரூ.13.962 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 404 ஹெக்டேரில் ரூ.3.68 கோடி நிதி செலவினத்தில் சொட்டுநீர் பாசனம் நிறுவப்பட்டுள்ளது. இதில் கரும்பு பயிரில் மட்டும் 29.68 ஹெக்டேர் பரப்பில் ரூ.36.88 இலட்சம் நிதி செலவினத்தில் சொட்டுநீர் பாசனம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், 104.47 ஹெக்டேருக்கு கரும்பில் சொட்டுநீர் பாசனம் அமைக்க விவசாயிகள் பதிவு செய்துள்ளனர்.

இதுவரையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் கரும்பு பயிருக்கு சொட்டுநீர் பாசனம் 682.76 ஹெக்டேர் வரை அமைக்கப்பட்டு ரூ.675.48 இலட்சம் நிதி செலவிடப்பட்டுள்ளது.

187—

சிமெண்ட் உலர் நெற்களம் அமைத்தல்

வினா எண் 3365—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், அகரத்தூர் ஊராட்சியில் சிமெண்ட் உலர் நெற்களம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், அகரத்தூர் ஊராட்சியில் சிமெண்ட் உலர் நெற்களம் அமைப்பது தொடர்பாக தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[*2022 மே 6*

188—

வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 84—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சியைச் சேர்ந்த டாக்டர் அம்பேத்கர் நகரில் வாழும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 1135, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 17-3-1962-ன்படி சென்னை மாநகர், காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் உள்ள 32 கி.மீ.க்கு உட்பட்ட சென்னை மாநகர் சூழ் பகுதிகளுக்கு வீட்டுமனை நில ஒப்படை செய்ய தடையாணை விதிக்கப்பட்டுள்ள நிலையில், சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ள பகுதி தடையாணைக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ளதால் நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி இலவச பட்டா வழங்க வழிவகை இல்லை.

189—

வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 86—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சி, திருவள்ளுவர் நகரில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 1135, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 17-3-1962-ன்படி சென்னை மாநகர், காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் உள்ள 32 கி.மீ.க்கு உட்பட்ட சென்னை மாநகர் சூழ் பகுதிகளுக்கு வீட்டுமனை நில ஒப்படை செய்ய தடையாணை விதிக்கப்பட்டுள்ள நிலையில், சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ள பகுதி தடையாணைக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ளதால் நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி இலவச பட்டா வழங்க வழிவகை இல்லை.

190—

வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 408—திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவொற்றியூர் தொகுதி, 7-வது வார்டு, கார்கில் நகர் பகுதியில் வசிக்கும் மக்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் வட்டம் மற்றும் நகரம், கார்கில் நகர் பகுதியானது புல எண் 618/G3 ஆனது கிராம கணக்குகளில் வகைபாடு கழுவெளி புறம்போக்கு என தாக்கலாகியுள்ளது. மேற்படி புல எண்ணில் அரசாணை எண் 381, வருவாய் [நி.மு.5(2)] துறை, நாள் 29-6-2005-ன்படி தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு நில மாற்றம் செய்யப்பட்டதை எதிர்த்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை எண் 32710/2018-ன்படி வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது. மேற்படி வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் பட்டா கோரும் கோரிக்கை தொடர்பாக மேல் நடவடிக்கை தொடர இயலும்.

[*2022 மே 6*

191—

ஊக்கத் தொகை வழங்குதல்

வினா எண் 893—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விவசாய தொழிலாளர்கள் ஆண், பெண் 60 வயதைக் கடந்தவர்களுக்கு மாத ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்திற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 265, வருவாய் நி.சீ.1(1) துறை, நாள் 10-9-2011-ன்படி செயல்படுத்தப்படும் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பதிவு பெற்ற மூல உறுப்பினர்களில் 60 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு மாத ஓய்வூதியம் ரூ.1,000/- வழங்கப்படுகிறது. இத்தொகை 1-4-2014 முதல் வருவாய் நிருவாகத் துறைமூலம் வழங்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

192—

மக்கள் குறைகேட்கும் முகாம்கள் நடத்துதல்

வினா எண் 903—திரு. ப. அப்துல் சமது: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் மக்கள் குறைகேட்கும் முகாம்கள் நடத்தப்பட்டு மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அனைத்து மாவட்டங்களிலும், ஒவ்வொரு வட்டத்திலும் மாதத்தின் இரண்டாவது புதன்கிழமை அன்று மாவட்ட ஆட்சியர் தலைமையில் மக்கள் தொடர்பு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இம்முகாம்களில் அந்தந்த பகுதிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு மக்கள் குறைகளைக் கேட்டறிந்து வருகின்றனர். மேலும், மார்ச் 2020 முதல் கொரோனா பரவலைத் தடுக்கும்பொருட்டு, தமிழக அரசினால் அறிவிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவின் காரணமாக, அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும், மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் மக்கள் குறைதீர்க்கும் முகாம் நடத்தப்படவில்லை.

193—

பட்டா வழங்குதல்

வினா எண் 921—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் தெற்கு பகுதிக்குட்பட்ட சத்யா நகர், பெரிய தோட்டம், சுகுமார் நகர் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு பட்டா கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், திருப்பூர் தெற்கு வட்டம், திருப்பூர் டவுன், வார்டு ஜி, பிளாக் 3 என்ற பகுதியில் 32 நபர்கள் வசித்து வரும் இடமானது கிராம கணக்குகளில் மயானம் என தாக்கலாகியுள்ள நிலையில், அப்பகுதி மக்களுக்கு விதிகளுக்குட்பட்டு, பட்டா வழங்கிட அரசு கனிவுடன் நடவடிக்கை மேற்கொள்ளும்.

[2022 மே 6

194—

சாதிச் சான்றிதழ்கள் வழங்குதல்

வினா எண் 923—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சாதிச் சான்றிதழ்களை உள்ளாட்சி நிருவாகங்கள்மூலம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வருவாய்த் துறையினரால் வழங்கப்படும் சாதிச் சான்றிதழ்கள் உட்பட அனைத்து சான்றிதழ்களையும் பொது மக்கள் காலதாமதமின்றி பெறும் வகையில் இணையதளம்மூலம் விண்ணப்பிக்கும் செயல்முறை எளிமைப்படுத்தப்பட்டு, பொது மக்கள் பயன்பெற்று வருகின்றனர். மேற்படி எளிமைப்படுத்தப்பட்ட செயல்முறையை மாற்றும்பொழுது, பொது மக்களுக்கு அதிகமான இடர்கள் எழ வாய்ப்புகள் உள்ளன. எனவே, சாதிச் சான்றிதழ்களை உள்ளாட்சி நிருவாகங்கள்மூலம் வழங்க இயலாது.

195—

சாதிச் சான்றிதழ் வழங்குதல்

வினா எண் 1125—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், எட-கீழையூர் ஊராட்சி, வடக்கு உடையார் தெருவில் வசித்துவரும் 20 இருளர் குடும்பங்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டம், எட-கீழையூர் கிராமத்தில் வசித்து வருகின்ற வினாவில் குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த சிலர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்த இந்து-அம்பலக்காரர் சாதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவித்து சாதிச் சான்றிதழ் பெற்றுள்ளனர். இவர்களில் எவரும் இருளர் இன மக்களின் சமூக பழக்கவழக்கங்களை கடைபிடிக்கவில்லை. மேலும், இவர்கள் அனைவரும் இந்து-அம்பலக்காரர் சாதியைச் சார்ந்த மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்தவர்கள் என விசாரணை அடிப்படையில் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, மேற்காணும் குடும்பத்தினர்களுக்கு இருளர் சாதியினைச் சார்ந்தவர்கள் எனச் சாதிச் சான்று வழங்கிட இயலாது.

196—

பட்டா வழங்குதல்

வினா எண் 1434—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி நகராட்சியில் உள்ள வீடுகள் அற்ற ஏழை பொது மக்கள், கூலித் தொழிலாளர்களுக்கு அருகிலுள்ள அரசு புறம்போக்கு இடத்தில் பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி நகராட்சியில் வசிக்கும் தகுதியுடைய ஏழை எளிய மக்கள் வீட்டுமனை கோரி விண்ணப்பம் செய்யும்பட்சத்தில் விதிகளுக்குட்பட்டு அரசு புறம்போக்கு நிலத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டித்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

[2022 மே 6

197—

இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 1443—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி நகராட்சியில் உள்ள கல்லாடியார் இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி நகராட்சியில் சுமார் 119 கல்லாடியார் இன மக்களுக்கு ஆதி திராவிடர் நலத் துறைமூலம் நீலமங்கலம் கிராமத்தில் ஏற்கெனவே மாற்று இடத்தில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இந்நேர்வில் விடுபட்டோர் எவரேனும் இருப்பின் தகுதியின் அடிப்படையில் விதிமுறைகளுக்குட்பட்டு மாற்று இடத்தில் அவர்களுக்கு பட்டா வழங்கிட அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

198—

கிராம நிருவாக அலுவலகத்தை வேறிடத்தில் கட்டுதல்

வினா எண் 2104—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாநகராட்சி, 25-வது கோட்டம், அன்னதானப்பட்டியில் உள்ள கிராம நிருவாக அலுவலகத்தை பள்ளப்பட்டி பகுதியில் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சேலம் தெற்கு வட்டம், 25-வது கோட்டம், அன்னதானப்பட்டியில் உள்ள கிராம நிருவாக அலுவலகத்தை பள்ளப்பட்டியில் கட்டுவது தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை.

199—

புதிய கிராம நிருவாக அலுவலகம் கட்டுதல்

வினா எண் 2133—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாநகராட்சி, கோட்டம் எண் 25, பள்ளப்பட்டி பகுதியில் கிராம நிருவாக அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சேலம் மேற்கு வட்டத்திற்குட்பட்ட சேலம் கோட்டம் 25-ல் உள்ள பள்ளப்பட்டி டவுன் கிராம நிருவாக அலுவலகம் நல்ல நிலையில் உள்ளது. எனவே, புதிய கட்டடம் கட்ட வேண்டிய தேவை எழவில்லை.

200—

கிராம நிருவாக அலுவலர் நியமித்தல்

வினா எண் 2633—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, பெருமத்தூர் ஊராட்சிக்கு தனியாக கிராம நிருவாக அலுவலர் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதிக்குட்பட்ட பெருமாத்தூர் ஊராட்சியில் உள்ள மாற்று குடியிருப்பு நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் இந்தியா லிமிடெட் நிறுவனத்திற்கு சொந்தமான இடமாகும். மேற்படி இடங்கள் 1972 முதல் 1978 வரை நடைபெற்ற ரீ-சர்வேயின்போது கிராம கணக்குகளில் இருந்து நீக்கப்பட்டன. எனவே, மேற்படி இடங்களுக்கு தற்போது கிராம கணக்குகளோ சர்வே எண்களோ கிடையாது. பெருமாத்தூர் மற்றும் இந்திரா நகருக்குட்பட்ட பி1, பி2 பிளாக் மற்றும் எம்.ஆர்.கே. சாலை ஆகிய பகுதிகளுக்கான வருவாய்த் துறை பணிகள் வடக்கு மேலூர் கிராம நிருவாக அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகின்றன. பெருமாத்தூர் கிராமத்தில் 1,200 குடும்பங்கள் உள்ளன. அவற்றில் சுமார் 3,434 நபர்கள் வசித்து வருகின்றனர். இந்த கிராமத்தில் 79 ஏக்கர் குடியிருப்பு நிலப்பரப்பு உள்ளது. பெருமாத்தூர் ஊராட்சியில் நஞ்சை மற்றும் புஞ்சை விவசாய நிலங்கள் இல்லை. பெருமாத்தூர் ஊராட்சிக்கென புதிய கிராம நிருவாக அலுவலர் பணியிடம் தோற்றுவிக்க வேண்டிய அவசியம் எழவில்லை. மேலும், கூடுதலாக கிராம நிருவாக அலுவலர் பணியிடம் ஏற்படுத்தத் தேவையான அளவுகோல்களும் பூர்த்தியாகவில்லை. எனவே, புதிய கிராம நிருவாக அலுவலர் பணியிடம் தோற்றுவிக்கும் அவசியம் ஏற்படவில்லை.

201—

அலுவலகக் கட்டடம்

வினா எண் 2704—திரு. சு. ரவி: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், ஆத்தூர் ஊராட்சி, பொய்பாக்கம் கிராமத்தில் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம், இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் வட்டம் மற்றும் நகரம் கிராம நிருவாக அலுவலர் அலுவலகம் கட்டுவது தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை.

202—

அலுவலக தளவாட பொருட்கள் வழங்குதல்

வினா எண் 2819—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிள்ளியூர் தொகுதி, கிள்ளியூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு கணினி மற்றும் தளவாட பொருட்களை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை நிலை எண் 59, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (வ.நி.1(1)) துறை, நாள் 18-2-2019-ன்படி விளவங்கோடு வட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு கிள்ளியூர் வட்டம் 1-3-2019 முதல் புதியதாக தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட அரசாணையின்படி கிள்ளியூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு கணினி மற்றும் தளவாட பொருட்கள் கொள்முதல் செய்ய ரூ.5,80,000/- நிதி ஒதுக்கீடு அரசிடமிருந்து பெறப்பட்டு, தளவாட பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு; உபயோகப்படுத்தப்பட்டு வருவதால் புதியதாக கணினி மற்றும் தளவாட பொருட்கள் வாங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

[2022 மே 6

203—

அலுவலகக் கட்டடம்

வினா எண் 2823—திரு. இரா. மாணிக்கம்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளித்தலை தொகுதி, பஞ்சப்பட்டியில் உள்ள பழுதடைந்த கிராம நிருவாக அலுவலர் கட்டடத்தை இடித்துப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், குளித்தலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பஞ்சப்பட்டி கிராமத்தில் உள்ள கிராம நிருவாக அலுவலர் அலுவலகம் கட்டப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகிறது. எனவே, புதிய கிராம நிருவாக அலுவலர் அலுவலகம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை.

204—

அலுவலகக் கட்டடம்

வினா எண் 2900—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, குடவாசல் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நன்னிலம் சட்டமன்ற தொகுதியில் குடவாசல் வட்டாட்சியர் அலுவலகம் நல்ல நிலையில் உள்ளதால் புதிய கட்டடம் கட்டப்பட வேண்டிய நிலை எழவில்லை.

2022 மே 6]

205—

அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல்

வினா எண் 4506—திரு. ஈ. ராஜா: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன் கோவிலில் பழுதடைந்துள்ள கிராம நிருவாக அலுவலர் அலுவலகக் கட்டடத்தை செப்பனிட்டு புதுப்பித்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரன்கோவில் வட்டம், சங்கரன்கோவில் கிராமத்தில் ஏற்கெனவே பழுதடைந்துள்ள கிராம நிருவாக அலுவலகக் கட்டடத்திற்கு பதிலாக புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேற்படி கட்டடத்தைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, பழைய கட்டடத்தை செப்பனிட்டுப் புதுப்பித்துத் தர வேண்டிய நிலை எழவில்லை.

206—

அலுவலகக் கட்டடம்

வினா எண் 4507—திரு. ஈ. ராஜா: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரன்கோவில் தொகுதி, திருவேங்கடம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு.K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவேங்கடம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசால் ரூ.176 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடம் கட்டும் பணி நிறைவடையும் தருவாயில் உள்ளது.

207—

சாதிச் சான்றிதழ் வழங்குதல்

வினா எண் 8144—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மலைவேடன் என்கிற பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவர்களுக்கு சாதிச் சான்றிதழ் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மலைவேடன் பழங்குடியினர் சாதிச் சான்று கோரி விண்ணப்பிக்கும் மனுதாரர்களுக்கு பள்ளிச் சான்றிதழ், பழைய ஆவணங்கள், பெற்றோரின் சான்றிதழ்கள், உடன் பிறந்தோரின் சான்றிதழ்கள், உறவினர்களின் சான்றிதழ்கள் மானுடவியல் வல்லுநரின் குறிப்பான பரிந்துரை அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் வருவாய் கோட்டாட்சியர்/சார்—ஆட்சியரால் கள விசாரணை மேற்கொள்ளப்பட்டு சாதிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், உயர் நீதிமன்ற ஆணைகள் மற்றும் வழிகாட்டுதல்களை அடிப்படையாகக் கொண்டும், விசாரணையின் அடிப்படையில் மலைவேடன் என்கிற

2022 மே 6]

பழங்குடியினர் என உறுதி செய்யப்பட்டு சாதிச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. மேற்கண்ட விவரங்கள் மற்றும் ஆவணங்கள் ஆதாரமாக சமர்ப்பிக்கப்படாத இனங்களில் மலைவேடன் பழங்குடியினர் என உறுதி செய்ய இயலாததால் பழங்குடியினர் சாதிச் சான்று வழங்க இயலாத நிலை ஏற்படுகிறது. மேலும், கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரால் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுடன் ஆய்வு நடத்தி நிலுவையில் உள்ள பழங்குடியினர் சான்றுகள் கோரும் மனுக்கள் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளன.

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 3 வருவாய்க் கோட்டங்களில் உடுமலைப்பேட்டை வருவாய்க் கோட்டத்தில் மட்டுமே எரவாளர், மலசர், முதுவர் மற்றும் புலையர் ஆகிய இனத்தைச் சார்ந்த பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர் எனவும், திருப்பூர் மாவட்டத்தினை பூர்வீகமாகக் கொண்ட மலைவேடன் இனத்தைச் சேர்ந்த பழங்குடியின மக்கள் எவரும் திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட பகுதியில் வசிக்கவில்லை. மேற்படி பழங்குடியின மக்கள் சாதிச் சான்று கோரும் நேர்வுகளில் வருவாய்க் கோட்டாட்சியரால் அவ்வப்போது விசாரணையின் அடிப்படையில் தாமதமின்றி சாதிச் சான்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

208—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

சான்றிதழ் வழங்குதல்

வினா எண் 9049—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் இ-சேவைமூலம் விண்ணப்பிக்கப்படும் வருவாய்த் துறைமூலம் வழங்கப்பட வேண்டிய சான்றிதழகள் உடனுக்குடன் வழங்கப்படுகிறதா என கண்காணிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் வருவாய்த் துறை தொடர்பான சான்றிதழ்கள் இ-சேவை இணையதளம் வாயிலாக வழங்கப்படுகின்றன. இ-சேவை இணையதளத்தில் வருவாய்த் துறை சேவைகள் வாரியாக மற்றும் மாவட்டங்கள் வாரியாக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் நிலுவை விவரங்கள் உள்ளன. மேற்படி நிலுவைகள் குறித்து தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களால் கண்காணிக்கப்பட்டு, தாமதமின்றி உடனுக்குடன் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

209—

கலை, பண்பாடு

வினா எண் 595—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, திருவையாறு தமிழிசை மன்றத்திற்கு தமிழ்நாடு கலை பண்பாட்டுத் துறையின் மூலமாக வழங்கும் நிதியை ரூ.5 இலட்சமாக ஆண்டுதோறும் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 243, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள் 15-10-2013-ல் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளின்படி, தமிழகத்தின் பாரம்பரியத்தை விளக்கும் வகையில் தனியார் அமைப்புகளால் நடத்தப்படும் கலை நிகழ்ச்சிகளுக்கு அதிகபட்சமாக ரூ.3 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும். மேலும், ஒரு நிறுவனத்திற்கு, ஓர் ஆண்டில், ஒரு திட்டத்திற்கு மட்டுமே நிதியுதவி வழங்கப்படும். பல்வேறு தனியார் நிறுவனங்கள், ஆண்டுதோறும் நிதியுதவி கோரும் நிலையில், சுழற்சி முறையில், பத்து தனியார் அமைப்புகளுக்கு,

2022 மே 6]

ரூ.15 இலட்சம், அதாவது ஒரு நிறுவனத்திற்கு அதிகபட்சம் ரூ.3 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும்.

எனவே, மேற்காண் அரசாணையின்படி, தமிழகத்திலுள்ள தனியார் கலை நிறுவனங்கள் பயன்பெறும் பொருட்டு, கலை நிகழ்ச்சிகள்/கலை விழாக்களுக்கான நிதியுதவி, சுழற்சி முறையில் வழங்கப்படுவதால், திருவையாறு தொகுதி, திருவையாறு தமிழிசை மன்றத்திற்கு அதிகபட்சமாக ரூ.3 இலட்சத்திற்கு மேல் நிதியுதவி உயர்த்தி வழங்க இயலாது.

210—

விடுதிகள் அமைத்தல்

வினா எண் 908—திரு. க. செல்வராஜ்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரில் பணியாற்றும் ஆண்,பெண் தொழிலாளர்களுக்கு தனியாக தங்கும் விடுதிகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், நெருப்பெரிச்சல் கிராமத்தில் 8.584 கோடி ரூபாய் செலவில் 600 வேலைக்குச் செல்லும் பெண் தொழிலாளர்களுக்கென தங்குமிடம் ஒன்றைக் கட்டி அதனை பராமரிக்கும் பணியை திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்திடம் ஒப்படைத்துள்ளது. மேலும் 10 கோடி ரூபாய் செலவில் பொருளாதாரத்தில் பின்தங்கிய 400 தொழிலாளர்கள் தங்குமிடம் ஒன்று நெருப்பெரிச்சல் கிராமத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

211—

குடியிருப்பு வழங்குதல்

வினா எண் 1784—திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2022 மே 6

நெய்வேலி தொகுதி, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் (NLC) பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு (AMC) வீடுகள் ஒதுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

ஆம். என்.எல்.சி. இந்தியா நிறுவனம் இன்கோசர்வ் மற்றும் கௌசிகாஸ் சொஸைட்டியால் பணியமர்த்தப்பட்ட 1,756 ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு என்.எல்.சி. இந்தியா நிறுவனம், இன்கோசர்வ் மற்றும் கௌசிகாஸ் சொஸைட்டிகளின் மேலாண்மை இயக்குநர் மூலமாக குடியிருப்பு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன என என்.எல்.சி. நிறுவனத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

212—

விவசாயிகளுக்கு நிலம் வழங்குதல்

வினா எண் 1788—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தால் கையகப்படுத்தி உபயோகமில்லாமல் இருக்கும் நிலத்தை விவசாயிகளுக்கு பிரித்து வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

ஆம். என்.எல்.சி. இந்தியா நிறுவனத்திற்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் அனைத்தும் சுரங்கம், அனல் மின் நிலையம், நகர நிர்வாகம், சூரிய மின் சக்தி உற்பத்தி, பசுமை காடுகள் வளர்ப்புத் திட்டம் மற்றும் இப்பணிகள் சார்ந்த உபயோகங்களுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே, என்.எல்.சி. இந்தியா நிறுவனத்திற்கு கையகப்படுத்தப்பட்ட அனைத்து நிலங்களும் உபயோகத்திலுள்ளன என்று என்.எல்.சி. இந்தியா நிறுவனம் தெரிவித்துள்ளது.

2022 மே 6]

213—

தொழிற்சாலை மீண்டும் செயல்படுத்துதல்

வினா எண் 1907—திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை சிப்காட் வளாகத்தில் செயல்படாமல் உள்ள வீடியோகான் தொழிற்சாலையை மீண்டும் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

*சிப்காட் நிறுவனத்தின் மூலமாக மானாமதுரை சிப்காட் வளாகத்தில், தி/ள். யுனிட்டி அப்ளையன்சஸ் நிறுவனத்திற்கு 28-10-2009 மற்றும் 3-12-2010 முறையே 71.27 ஏக்கர் மற்றும் 22.68 ஏக்கராக 93.95 ஏக்கர் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்நிறுவனம் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு தனது உற்பத்தியை துவங்கியது. இந்நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்களின் சந்தை தேவை குறைந்த காரணத்தினால் தொழில் நலிவடைந்து மேற்கண்ட நிறுவனம் செயல்படாத நிலையில் உள்ளது. இந்நிறுவனத்தினால் பாங்க் ஆப் மகாராஷ்ட்ரா, மும்பை வங்கிமூலம் வாங்கப்பட்டுள்ள கால முறைக் கடனை திரும்ப செலுத்த முடியாத காரணத்தினால், நிதிச் சொத்துகளைப் பத்திரப்படுத்துதல் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டம் அமலாக்கம், 2002 (*SARFAESI ACT*)-ன்கீழ் மேற்கண்ட வங்கியால் இந்நிறுனம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.*

*மேலும் 6-5-2021 நாளிட்ட, தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயத்தின் (*NCLT*) மும்பை அமர்வின் ஆணைப்படி இந்நிறுவனத்தின்மீது "பெரு நிறுவன நொடிப்பு நிலை தீர்க்கும்" (*Corporate insolvency resolution process*) செயல்முறை தொடங்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக மேற்கண்ட *SARFAESI*-ன் நடைமுறைகள் தடைபடுத்தப்பட்டுள்ளன. எனவே, இந்த செயல்முறையின் முடிவின் தன்மைபொருட்டு, அந்நிலம் மீளப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு, பயனுள்ள வகையில் உபயோகப்படுத்த சிப்காட் நிறுவனத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

[2022 மே 6

214—

செயல்படாத நிறுவனங்களுக்கு மாற்று நிறுவனங்கள் அமைத்தல்

வினா எண் 1908—திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை சிப்காட்டில் செயல்படாமல் உள்ள நிறுவனங்களுக்கு மாற்றாக புதிய நிறுவனங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

சிப்காட் நிறுவனம் தமிழ்நாட்டில் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்கள் தொடங்க ஏதுவாக தொழில் வாய்ப்புள்ள பகுதிகளில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய தொழிற்பூங்காக்களை ஏற்படுத்திப் பராமரித்துவருகிறது. இந்நிறுவனம், இதுவரை, சிவகங்கை மாவட்டம் உட்பட 15 மாவட்டங்களில், ஆறு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உட்பட 24 தொழிற்பூங்காக்களை சுமார் 34,900 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்திப் பராமரித்து வருகின்றது. சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் சிப்காட் தொழிற்பூங்கா ஒன்று 492.07 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. இங்கு, ஒதுக்கப்பட்டிருக்கூடிய நிலப்பரப்பில், 358.10 ஏக்கர் நிலம் 75 தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது, சிப்காட் நிறுவனம் நலிவடைந்த நிறுவனங்களை மீண்டும் தொழில் தொடங்க ஊக்குவிக்கும் பொருட்டு கொள்கை அளவிலான முடிவுகள் எடுத்துள்ளது. அதனடிப்படையில், நலிந்த நிறுவனங்கள் மீண்டும் தொழில் துவங்க முடியாத சூழ்நிலையில், அந்நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தினை மீண்டும் சிப்காட் நிறுவனத்திற்கு ஒப்படைக்க வாய்ப்பளித்து, குத்தகைத் தொகையில் ஒரு சதவிகிதம் பிடித்தம் செய்து மீதமுள்ள நில

2022 மே 6]

குத்தகைத் தொகையை திருப்பியளிக்க வழிவகை செய்துள்ளது. அவ்வாறு சிப்காட் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்ட நிலங்கள், தகுதியான நிறுவனங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் சிப்காட் நிறுவனத்தினால் ஒதுக்கீடு செய்துதரப்படும்.

நலிவடைந்த நிறுவனங்கள் தங்கள் நிறுவனங்களை மீண்டும் துவங்க கீழ்க்கண்ட வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன:

- *நிறுவனங்கள், நலிவடைந்த காலம் 3 ஆண்டுகளிலிருந்து 7 ஆண்டுக்குள்ளாக இருக்கும்பட்சத்தில், தற்போது நடைமுறையில் நில ஒதுக்கீட்டுத் தொகையில் 5 சதவிகிதம் செலுத்திவிட்டு, மேற்கண்ட நிறுவனமே தனது உற்பத்தி நடவடிக்கையை தொடங்க வாய்ப்பளிக்கப்படுகிறது.*
- *நிறுவனங்கள், நலிவடைந்த காலம் 7 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கும்பட்சத்தில் 20 சதவிகிதம் நில வித்தியாசத் தொகையை (Differential Plot Cost) செலுத்திவிட்டு, மேற்கண்ட நிறுவனமே தனது உற்பத்தி நடவடிக்கையைத் தொடங்க வாய்ப்பளிக்கப்படுகிறது.*

மேலும், நலிவடைந்த நிறுவனங்கள், வேறு நிறுவனங்களுக்குக் குத்தகை ஒப்பந்தத்தை பரிமாற்றம் செய்ய 20 சதவிகிதம் நில வித்தியாசத் தொகையை (Differential Plot Cost) செலுத்திவிட்டு, குத்தகை ஒப்பந்தத்தை பரிமாற்றம் செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மானாமதுரை தொழில் பூங்காவில் தற்போது அடையாளப்படுத்தப்பட்டுள்ள சுமார் 20 நலிவடைந்த நிறுவனங்களுக்கு மேற்கண்ட வாய்ப்புகள் மூலமாக மீண்டும் செயல்பட சிப்காட் நிறுவனத்தினால் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

215—

இசைப் பள்ளி துவங்குதல்

வினா எண் 4204—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இசைப் பள்ளி இல்லாத மாவட்டங்களில் இசைப் பள்ளி துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

தற்போதைய சூழ்நிலையில் இசைப் பள்ளிகள் துவங்கிட சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

216—

செம்மொழி தமிழாராய்ச்சி நிறுவனம்

வினா எண் 10040—திரு. இரா. அருள்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செம்மொழி தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு புத்துயிர் ஊட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

ஆம். செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் ஆட்சிக் குழுத் தலைவர் எனும் அடிப்படையில், அந்நிறுவனத்திற்கு புத்துயிர் அளிக்கும் பொருட்டும் பல்வேறு திட்டப் பணிகளுக்கு உரிய நிதி வழங்க வேண்டியும் மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 17—9—2021 அன்று நேர்முகக் கடிதம் எழுதியுள்ளார்கள்.

217—

கழிவுப் பொருட்களால் காகிதம் தயாரித்தல்

வினா எண் 12127—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்பகோணத்தில் விவசாயத் தொழிலின் கழிவுப் பொருட்களான கரும்புச் சக்கை மற்றும் வைக்கோலைக் கொண்டு காகிதம் தயாரிக்க அரசு முன்வருமா?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

கும்பகோணத்தில் விவசாயத் தொழிலின் கழிவுப் பொருட்களான கரும்புச் சக்கை மற்றும் வைக்கோலைக் கொண்டு காகிதம் தயாரிக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

218—

பாலம் கட்டுதல்

வினா எண் 44—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, சின்னகாங்கேயம்பட்டி—காமதேவமங்கலம் கிராமங்களை இணைக்கக் கல்லணைக் கால்வாய் ஆற்றின் குறுக்கே புதிய உயர்மட்டப் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சின்ன காங்கேயம்பட்டி—காமதேவமங்கலம் கிராமங்களை இணைக்கக் கல்லணை கால்வாய் ஆற்றின் குறுக்கே புதிய உயர்மட்டப் பாலம் கட்டும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

219—

குடியிருப்பு புதுப்பித்தல்

வினா எண் 188—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2022 மே 6

பாபநாசம் தொகுதி, பாபநாசம் கோபுராஜபுரம் சாலையில் வட்டார வளர்ச்சி அலுவலக ஊழியர் குடியிருப்புக் கட்டடங்களைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

பாபநாசம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கோபுராஜபுரம் ஊராட்சிக்குச் செல்லும் சாலையிலுள்ள பாபநாசம் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான 6 எண்ணிக்கையிலான ஊராட்சி ஒன்றிய பணியாளர்கள் குடியிருப்புக் கட்டடங்கள் 1970 ஆம் ஆண்டு கட்டப்பட்டன. இக்குடியிருப்புக் கட்டடங்கள் கட்டப்பட்டு 50 ஆண்டுகளுக்கு மேலாகின்றன. தற்போது அனைத்துக் குடியிருப்புக் கட்டடங்களும் முழுவதும் பழுதடைந்து புதுப்பிக்க இயலாத நிலையில் உள்ளன.

220—

இணைப்புச் சாலை அமைத்தல்

வினா எண் 271—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம் தணிகைபோளூர் முதல் மூதூர் வரை புதிய இணைப்புச் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், தணிகைபோளூர் முதல் மூதூர் வரை புதிய இணைப்புச் சாலை அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

2022 மே 6]

221—

குளத்தைத் தூர்வாருதல்

வினா எண் 273—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், செம்பேடு ஊராட்சி, குருவராஜப்பேட்டை வளையல்கார குளத்தைத் தூர்வாரி, சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், செம்பேடு ஊராட்சி, குருவராஜப்பேட்டை வளையல்கார குளத்தைத் தூர்வார வரும் நிதியாண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி (MGNREGS) திட்டத்தின்மூலம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

222—

சமுதாயக் கூடம் அமைத்தல்

வினா எண் 330—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, கொங்கராயனூர் ஊராட்சியில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, கொங்கராயனூர் ஊராட்சிக்கு அருகிலுள்ள பட்டாம்பாக்கம் பேரூராட்சியில் அமைந்துள்ள தனியார் திருமண மண்டபத்தை தற்போது

[2022 மே 6

பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையில் கொங்கராயனூர் ஊராட்சியில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாயக் கூடம் அமைத்திட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அதற்கான முன்மொழிவுகள் அண்ணாகிராமம் வட்டார வளர்ச்சி அலுவலரிடமிருந்து கடலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

223—

சமுதாயக் கூடம் அமைத்தல்

வினா எண் 331—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, சின்னப்பேட்டை ஊராட்சியில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, சின்னப்பேட்டை ஊராட்சியில் வசிக்கும் மக்கள் சுப நிகழ்ச்சிகளுக்கு அருகிலுள்ள புதுப்பேட்டை பேரூராட்சிப் பகுதியில் அமைந்துள்ள திருமண மண்டபங்களைப் பயன்படுத்தி வருகின்றனர். சின்னப்பேட்டை கிராமத்தில் அரசுக்குச் சொந்தமான இடம் ஏதுமில்லை. கோயில் நிலம் மட்டுமே உள்ளது. இந்நிலையில் சின்னப்பேட்டை ஊராட்சியில் சமுதாயக் கூடம் அமைக்க வழிவகை இல்லை.

224—

சமுதாயக் கூடம் அமைத்தல்

வினா எண் 332—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, பனப்பாக்கம் ஊராட்சியில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பனப்பாக்கம் ஊராட்சிக்கு அருகிலுள்ள புதுப்பேட்டை பேரூராட்சியில் அமைந்துள்ள தனியார் திருமண மண்டபத்தைத் தற்போது பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையில் பனப்பாக்கம் ஊராட்சியில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாயக் கூடம் அமைத்திட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அதற்கான முன்மொழிவுகள் அண்ணாகிராமம் வட்டார வளர்ச்சி அலுவலரிடமிருந்து கடலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

225—

சமுதாயக் கூடம் அமைத்தல்

வினா எண் 333—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, அங்குசெட்டிப்பாளையம் ஊராட்சி, கொக்குப்பாளையம் பகுதியில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கொக்குப்பாளையம் கிராமத்திலிருந்து 500 மீ. தொலைவில் உள்ள தனியார் திருமண மண்டபங்களை பயன்படுத்தி வருகின்றனர். கொக்குப்பாளையம் குக்கிராமத்தில் அரசுக்குச் சொந்தமான இடம் ஏதுமில்லை. கோயில் நிலம் மட்டுமே உள்ளது. இந்நிலையில் கொக்குப்பாளையம் ஊராட்சியில் சமுதாய நலக்கூடம் அமைக்க வழிவகை இல்லை.

[2022 மே 6

226—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 335—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, எழுமேடு ஊராட்சி, அண்ணா நகரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த எழுமேடு ஊராட்சியில் உள்ள அண்ணாநகர் பகுதி முத்துகிருஷ்ணாபுரம் கிராமத்திற்குட்பட்ட பகுதியாகும். இக்கிராமத்தில் 720 குடும்பங்களில் மக்கள்தொகை 1715 ஆகும். இக்கிராமத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 3 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 1 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் அப்பகுதி மக்களுக்கு 55 LPCD குறையாமல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அண்ணாநகர் பகுதியில் 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு சின்டெக்ஸ் தொட்டி மற்றும் சிறு மின்விசைப் பம்பு பயன்பாட்டில் உள்ளது. எனவே, எழுமேடு ஊராட்சியில் உள்ள அண்ணாநகர் பகுதியில் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க தேவை எழவில்லை.

227—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 336—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, சாத்திப்பட்டு ஊராட்சி, தெற்கு சாத்திப்பட்டு பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சாத்திப்பட்டு ஊராட்சியில் உள்ள தெற்கு சாத்திப்பட்டு கிராமத்தில் 220 குடும்பங்களில் மக்கள் தொகை 1,007 ஆகும். இக்கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் தினசரி இரண்டு முறை வீதமும், 1,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு சின்டெக்ஸ் தொட்டியிலிருந்து சிறு மின்விசைப் பம்பு மூலமும் அப்பகுதி மக்களுக்கு 55 LPCD *குறையாமல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தெற்கு சாத்திப்பட்டு கிராமத்தில் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் தேவை எழவில்லை.*

228—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 337—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, சூரக்குப்பம் ஊராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, சூரக்குப்பம் காலனியில் 10,000 லிட்டர் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இருந்தன. அவற்றில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்ததன் காரணமாக இடித்து அப்புறப்படுத்தப்பட்டுவிட்டது. தற்போது,

[2022 மே 6

அப்பகுதி மக்களுக்கு 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்தும், பழுதடைந்து இடிக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் ஆழ்குழாய் கிணறு மூலமும் ஒரு நபருக்கு 65 LPCD வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நேரடியாக குடிநீர் வழங்கப்படும் இடத்தில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட வேண்டும். மேலும், இது குறித்து ஊராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சூரக்குப்பம் காலனிக்கு 14-வது மாநில நிதிக் குழு மானிய திட்டத்தின்கீழ் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ரூ.13.75 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்திட நிருவாக அனுமதி பெறப்பட்டவுடன், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்கப்படும்.

229—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 338—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, அங்குசெட்டிபாளையம் ஊராட்சி, கொக்குப்பாளையம் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, அங்குசெட்டிபாளையம் ஊராட்சியில் 5 குக்கிராமங்கள் உள்ளன. அங்குசெட்டிபாளையம் குக்கிராமத்தில் 963 குடும்பங்களில் 2,345 மக்களும், அங்குசெட்டிபாளையம் காலனியில் 730 குடும்பங்களில் 2,450 மக்களும், திடீர்குப்பத்தில் 470 குடும்பங்களில் 1,250 மக்களும், வையாபுரிபட்டினத்தில் 89 குடும்பங்களில் 860 மக்களும் கொக்குப்பாளையம் கிராமத்தில் 624 குடும்பங்களில் 1,602 மக்களும் ஆக மொத்தம் 2,876 குடும்பங்களில் 8,513 மக்கள்

2022 மே 6]

வசித்து வருகின்றனர். கொக்குப்பாளையம் கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளன. இந்த இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலிருந்தும் அப்பகுதி மக்களுக்கு காலை, மாலை இரு வேளையும் ஒரு நபருக்கு 65 LPCD *வீதம் குடிநீர் தட்டுப்பாடின்றி வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் தேவை எழவில்லை.*

230—

உயர் கோபுர மின் விளக்கு அமைத்தல்

வினா எண் 339—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, மேல்கவரப்பட்டு ஊராட்சியில் உயர் கோபுர மின் விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, மேல்கவரப்பட்டு ஊராட்சியில் உயர் கோபுர மின் விளக்கு அமைக்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

231—

உயர் கோபுர மின் விளக்கு அமைத்தல்

வினா எண் 341—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, கீழ்கவரப்பட்டு ஊராட்சி, ஆண்டிப்பாளையம் காலனியில் உயர் கோபுர மின் விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, கீழ்கவரப்பட்டு ஊராட்சி, ஆண்டிப்பாளையம் காலனியில் உயர் கோபுர மின் விளக்கு அமைக்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

232—

உயர் கோபுர மின் விளக்கு அமைத்தல்

வினா எண் 342—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சேமக்கோட்டை ஊராட்சியில் உயர் கோபுர மின் விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, சேமக்கோட்டை ஊராட்சியில், உயர் கோபுர மின் விளக்கு அமைக்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

233—

குளத்தைத் தூர்வாருதல்

வினா எண் 344—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சாத்திப்பட்டு ஊராட்சி, தெற்கு சாத்திப்பட்டில் குளத்தைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம், சாத்திப்பட்டு ஊராட்சியில் 10 குக்கிராமங்கள் உள்ளன. கொட்டிகோனாங்குப்பத்தில் 69 குடும்பங்களில் 294 மக்களும், மேட்டுக்குப்பத்தில் 71 குடும்பங்களில் 401 மக்களும், நடுசாத்திப்பட்டில் 362 குடும்பங்களில் 2,110 மக்களும், நல்லாண்டிக்குப்பத்தில் 56 குடும்பங்களில் 207 மக்களும், நெல்லித்தோப்பில் 150 குடும்பங்களில் 770 மக்களும், பலாப்பட்டில் 310 குடும்பங்களில் 1,272 மக்களும், சிறுநங்கைவாடியில் 50 குடும்பங்களில் 140 மக்களும், துண்டுக்காட்டில் 130 குடும்பங்களில் 669 மக்களும், வடக்கு சாத்திப்பட்டில் 310 குடும்பங்களில் 1,241 மக்களும், சாத்திப்பட்டில் 90 குடும்பங்களில் 369 மக்களும், தெற்கு சாத்திப்பட்டில் 220 குடும்பங்களில் 1,007 மக்களும் ஆக மொத்தம் 1,818 குடும்பங்களில் 8,480 மக்களும் வசித்துவருகின்றனர். இதில் தெற்கு சாத்திப்பட்டு கிராமத்தில் உள்ள மேட்டுக்குப்பம் குளம் கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர்/பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் அ9/4248/19, நாள் 12-2-2020-ன்படி, 2019-2020 ஆம் ஆண்டு குடிமராமத்துத் திட்டத்தின்கீழ் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

234—

பயணியர் நிழற்குடை அமைத்தல்

வினா எண் 346—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, சாத்திப்பட்டு ஊராட்சி, தெற்கு சாத்திப்பட்டு பகுதியில் பயணியர் நிழற்குடை அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 மே 6

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, சாத்திப்பட்டு ஊராட்சி, தெற்கு சாத்திப்பட்டு பகுதியில் பயணியர் நிழற்குடை அமைப்பதற்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீடு ஆகும். இதற்கென தனித் திட்டம் ஏதும் இல்லை. சட்டமன்ற உறுப்பினர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் அல்லது தன்னிறைவுத் திட்டத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பரிந்துரை செய்யப்படுமேயானால், இப்பணியினை மேற்கொள்ள இயலும்.

235—

விளையாட்டு மைதானம் அமைத்தல்

வினா எண் 347—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, சேமக்கோட்டை ஊராட்சியில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, சேமக்கோட்டை ஊராட்சியில் ரூ.26,000/- மதிப்பீட்டில் கைப்பந்து பொது விளையாட்டு மையம், ரூ.22,500/- மதிப்பீட்டில் கபடி பொது விளையாட்டு மையம், ரூ.12,000/- மதிப்பீட்டில் கிரிக்கெட் பொது விளையாட்டு மையங்களும் 2019-2020 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் (MGNREGS) பணிகள் முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளன.

2022 மே 6]

236—

சுற்றுச் சுவர் அமைத்தல்

வினா எண் 348—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, பனப்பாக்கம் ஊராட்சியில் விளையாட்டு மைதானத்திற்கு சுற்றுச் சுவர் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம், பனப்பாக்கம் ஊராட்சியில் விளையாட்டு மைதானத்திற்கு சுற்றுச் சுவர் அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் நிலுவையில் ஏதும் இல்லை.

237—

விளையாட்டு மைதானம் அமைத்தல்

வினா எண் 349—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, மேல்குமாரமங்கலம் ஊராட்சியில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம், மேல்குமாரமங்கலம் ஊராட்சியில் 2019-2020 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் ரூ.26,000/- மதிப்பீட்டில், கைப்பந்து பொது விளையாட்டு மையம், ரூ.12,000/- மதிப்பீட்டில் கிரிக்கெட் பொது

[2022 மே 6

விளையாட்டு மையம் மற்றும் ரூ.22,500/— மதிப்பீட்டில் கபடி விளையாட்டு மையம் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

238—

விளையாட்டு மைதானம் அமைத்தல்

வினா எண் 351—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, கொங்கராயனூர் ஊராட்சியில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியத்தில், கொங்கராயனூர் ஊராட்சியிலுள்ள கொசப்பாளையம் குக்கிராமத்தில் 2019-2020 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் ரூ.26,000/- மதிப்பீட்டில், கைப்பந்து பொது விளையாட்டு மையம், ரூ.22,500/- மதிப்பீட்டில் கபடி பொது விளையாட்டு மையம் மற்றும் கொங்கராயனூர் காலனியில் ரூ.12,000/— மதிப்பீட்டில் பொது விளையாட்டு மையம் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

239—

நூலகம் அமைத்தல்

வினா எண் 352—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, எழுமேடு ஊராட்சியில் நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம், எழுமேடு ஊராட்சியில் 6 குக்கிராமங்கள் உள்ளன. அவை எழுமேடு-280 குடும்பங்களில் 842 மக்களும், பனங்காட்டு காலனி-150 குடும்பங்களில் 420 மக்களும், திடீர்குப்பம்-80 குடும்பங்களில் 223 மக்களும், முத்துநாராயணபுரம்-300 குடும்பங்களில் 886 மக்களும், முத்துகிருஷ்ணாபுரம்-275 குடும்பங்களில் 670 மக்களும், முத்துகிருஷ்ணாபுரம் காலனி-455 குடும்பங்களில் 1,075 மக்களும், ஆக மொத்தம் 1,540 குடும்பங்களில் 4,116 மக்கள் வசித்துவருகின்றனர். மேலும், அனைத்துக் குக்கிராமங்களுக்கும் மையப்பகுதியான முத்துகிருஷ்ணாபுரம் காலனியில் ஏற்கெனவே ஊராட்சி நிதியில் 1999-2000 ஆம் ஆண்டு கட்டப்பட்ட கட்டடத்தில் அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகம் நல்ல நிலையில் இயங்கி வருகின்றது. எனவே, பண்ருட்டி தொகுதி, எழுமேடு ஊராட்சியில் புதிதாக நூலகம் அமைக்க வேண்டிய தேவை எழவில்லை.

240—

பள்ளிக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 356—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, அக்கடவல்லி ஊராட்சியில் செயல்படும் ஊராட்சி ஒன்றிய பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம், அக்கடவல்லி ஊராட்சியில் அக்கடவல்லி, அக்கடவல்லி காலனி, செங்காட்டு காலனி மற்றும் வேலங்காடு ஆகிய 4 குக்கிராமங்கள் அமைந்துள்ளன.

[2022 மே 6

இதில் வேலங்காடு குக்கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி அமைந்துள்ளது. அதில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 24 ஆகும். இம்மாணவர்களுக்கு 2 வகுப்பறைகள் கொண்ட பள்ளிக் கட்டடம் அமைந்துள்ளது. எனவே, கூடுதல் கட்டடம் கட்டத் தேவை எழவில்லை.

241—

பள்ளியில் கழிவறை அமைத்தல்

வினா எண் 357—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, சூரக்குப்பம் ஊராட்சியில் இயங்கும் ஊராட்சி ஒன்றிய பள்ளியில் கழிவறை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, சூரக்குப்பம் ஊராட்சியில் இயங்கும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 196 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் புதிய கழிவறை ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் RCSIDS *திட்டத்தின்கீழ் வரும் நிதியாண்டில் பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.*

242—

தெருக்களைச் சீரமைத்தல்

வினா எண் 738—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, அன்னை சத்யா நகர் பகுதியில் உள்ள கிருஷ்ணர் தெரு, நேத்தாஜி தெரு, அண்ணா தெரு மற்றும் விவேகானந்தர் தெருக்களைச் சீரமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சியில் அன்னை சத்யா நகர் பகுதியிலுள்ள கிருஷ்ணர் தெரு, நேத்தாஜி தெரு, ராஜாராம் தெரு, மணிமாறன் தெரு, அண்ணா தெரு, அம்பேத்கர் தெரு, கண்ணகி தெரு, முத்துமாரியம்மன் தெரு, பட்டம்மாள் தெரு, பட்டம்மாள் குறுக்கு தெரு, கன்னியம்மாள் தெரு மற்றும் ஜெயபால் தெரு ஆகிய தெருக்கள் (1500 மீ. நீளம்) ஏற்கெனவே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் 2020—2021—ன்கீழ் ரூ.32,20,500/— மதிப்பீட்டில் ஓரடுக்கு கப்பி சாலையாக போடப்பட்டுள்ளன. தற்போது தார்ச் சாலையாக தரம் உயர்த்த ரூ.63.00 இலட்சம் மதிப்பீடு ஆகிறது. மேலும், சத்யா நகரில் விடுபட்டுள்ள விவேகானந்தர் தெரு 111 மீ. நீளம் சீரமைக்க ரூ.5.55 இலட்சம் மதிப்பீடு ஆகிறது. இச்சாலையை சீரமைக்க நிதி ஆதாரத்தை கண்டறிந்து பணிகளைத் துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

243—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 748—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, வெங்கம்பாக்கம் வசந்தம் அவென்யூ பிரதான சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சி, வெங்கம்பாக்கம் வசந்தம் அவென்யூ பிரதான சாலையைச் சீரமைக்க 370 மீட்டர் நீளத்திற்கு ரூ.18.50 இலட்சம் மதிப்பீடு ஆகிறது. தகுந்த நிதி ஆதாரம் கண்டறிந்து சாலையினை சீரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

244—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 752—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, வெங்கம்பாக்கம் காலனி பகுதியில் திறந்தவெளி கிணற்றுடன் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, வெங்கம்பாக்கம் காலனி பகுதியில் திறந்தவெளி கிணற்றுடன் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

245—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 755—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, கஸ்பாபுரம் ஜெ.ஜெ. தெரு சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சி, கஸ்பாபுரம் ஜெ.ஜெ. தெரு சாலையைச் சீரமைக்க 110 மீட்டர் நீளத்திற்கு ரூ.5.50 இலட்சம் மதிப்பீடு ஆகிறது. தகுந்த நிதி ஆதாரம் கண்டறிந்து சாலையினைச் சீரமைக்க உத்தேசிக்கப்படுகிறது.

246—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 757—திரு. S.R. இராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, கஸ்பாபுரம் ரேஷ்மா கார்டன் பகுதி 1 முதல் 4 வரை உள்ள சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சியின் கஸ்பாபுரம் ரேஷ்மா கார்டன் பகுதி 1 முதல் 4 வரை உள்ள சாலையைச் சீரமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

[2022 மே 6

247—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 758—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, கஸ்பாபுரம் செல்லம்மாள் அவென்யூ சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சி, கஸ்பாபுரம் செல்லம்மாள் அவென்யூ சாலையைச் சீரமைக்க 230 மீட்டர் நீளத்திற்கு ரூ.11.50 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு தகுந்த நிதி ஆதாரம் கண்டறிந்தவுடன் பணி துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

248—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 761—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, கோகுல் நகர் 1 முதல் 6 வரை குறுக்குத் தெருக்களைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை

2022 மே 6]

ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சி, கோகுல் நகர் 1 முதல் 6 வரை உள்ள குறுக்குத் தெருக்களைச் சீரமைக்க 1,500 மீட்டர் நீளத்திற்கு ரூ.75.00 இலட்சம் மதிப்பீடு ஆகிறது. தகுந்த நிதி ஆதாரம் கண்டறிந்து இச்சாலைகளைச் சீரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

249—

மழைநீர் வடிகால் அமைத்தல்

வினா எண் 763—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, அன்னை சத்யா நகரில் அனைத்துத் தெருக்களிலும் மழைநீர் வடிகால் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சி, அன்னை சத்யா நகரில் உள்ள 12 தெருக்களிலும் 1,850 மீட்டர் நீளம் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ.1.05 கோடி மதிப்பீடு ஆகிறது. எதிர்வரும் காலங்களில் இப்பணியினை தகுந்த நிதி ஆதாரம் கண்டறிந்து மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

250—

மழைநீர் வடிகால் அமைத்தல்

வினா எண் 776—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சி, பீமேஸ்வரன் நகரில் விடுபட்ட இரண்டு தெருக்களுக்கு மழைநீர் வடிகால் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம், முடிச்சூர் ஊராட்சி, பீமேஸ்வரன் நகரில் விடுபட்ட இரண்டு தெருக்களுக்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ.16.00 இலட்சம் மதிப்பீடு ஆகிறது. தகுந்த நிதி ஆதாரம் கண்டறிந்து எதிர்வரும் ஆண்டுகளில் இப்பணியினை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பட்டியல் 3

1—

சாலையைச் சீர்செய்தல்

வினா எண் 783—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சியைச் சேர்ந்த டி.வி. லட்சுமிபதி 1 முதல் 4 வரை உள்ள குறுக்கு தெருக்களைச் சரி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம் அகரம்தென் ஊராட்சியைச் சேர்ந்த டி.வி. லட்சுமிபதி 1 முதல் 4 வரை உள்ள குறுக்கு தெருக்களைச் சரி செய்ய 300 மீட்டர் நீளத்திற்கு சாலை சரி செய்ய ரூ.15.00 இலட்சம் மதிப்பீடு ஆகிறது. தகுந்த நிதியாதாரம் கண்டறிந்த உடன் பணி துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2022 மே 6]

2—

சிமென்ட் சாலை அமைத்தல்

வினா எண் 785—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சியைச் சேர்ந்த ஔவையார் குறுக்கு தெரு சாலையை சிமென்ட் சாலையாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சியைச் சார்ந்த ஔவையார் குறுக்கு தெரு 90 மீட்டர் நீளத்தில் சிமென்ட் சாலை அமைக்க ரூ.4.50 இலட்சம் மதிப்பீடு ஆகிறது. தகுந்த நிதியாதாரம் கண்டறிந்து இச்சாலையினை சீரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3—

நடைபாதை அமைத்தல்

வினா எண் 787—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சியைச் சேர்ந்த நல்ல தண்ணீர் குளத்தை சுற்றி நடைபாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 மே 6

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சியைச் சார்ந்த நல்ல தண்ணீர் குளத்தைச் சுற்றி நடைபாதை அமைக்கும் திட்டம் தற்பொழுது அரசிடம் இல்லை.

4—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 788—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சியில் திறந்தவெளி கிணறு மற்றும் 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சியில் திறந்தவெளி கிணறு அமைக்க ரூ.23.00 இலட்சம் மற்றும் 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க ரூ.35.00 இலட்சம் மதிப்பீடு ஆகிறது. எதிர்வரும் ஆண்டுகளில் தகுந்த நிதியாதாரம் கண்டறிந்து இப்பணி மேற்கொள்ளப்படும்.

5—

தெருக்களைச் சீரமைத்தல்

வினா எண் 789—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சியைச் சேர்ந்த ஜெயமங்கலம் நகரில் உள்ள அனைத்து தெருக்களையும் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சியைச் சார்ந்த ஜெயமங்கலம் நகரில் 220 மீட்டர் நீளத்தில் சிமெண்ட் சாலை அமைக்க ரூ.13.20 இலட்சம் மதிப்பீடு ஆகிறது. தகுந்த நிதியாதாரம் கண்டறிந்து உடன் பணி துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6—

சாலைகளைச் சீரமைத்தல்

வினா எண் 790—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சியைச் சேர்ந்த குறிஞ்சி நகர் 1 முதல் 3 வரை உள்ள பிரதான சாலைகளைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சியைச் சார்ந்த குறிஞ்சி நகர் 1 முதல் 3 வரை உள்ள பிரதான சாலைகளை 380 மீட்டர் நீளத்தில் சீரமைக்க ரூ.22.80 இலட்சம் மதிப்பீடு ஆகிறது. எதிர்வரும்

[2022 மே 6

ஆண்டுகளில் தகுந்த நிதியாதாரம் கண்டறிந்து இச்சாலைகளைச் சீரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

7—

சாலைகளைச் சீரமைத்தல்

வினா எண் 791—திரு. S.R. இராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சியைச் சேர்ந்த குறிஞ்சி நகர் 4 முதல் 16 வரை உள்ள பிரதான சாலைகளைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சியைச் சார்ந்த குறிஞ்சி நகர் 4 முதல் 16 வரை உள்ள பிரதான சாலைகளை 697 மீட்டர் நீளத்தில் சிமென்ட் சாலையாக அமைக்க ரூ.34.85 இலட்சம் மதிப்பீடு ஆகிறது. தகுந்த நிதியாதாரம் கண்டறிந்து எதிர்வரும் ஆண்டுகளில் இச்சாலையினைச் சீரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

8—

தெருக்களைச் சீரமைத்தல்

வினா எண் 792—திரு. S.R. இராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சியைச் சேர்ந்த மதுரா நகர் 1 முதல் 4 வரை உள்ள குறுக்குத் தெருக்களைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சியைச் சார்ந்த மதுரா நகர் 1 முதல் 4 வரை உள்ள குறுக்குத் தெருக்களில் 191 மீட்டர் நீளத்தில் சிமெண்ட் சாலை அமைக்க ரூ.09.55 இலட்சம் மதிப்பீடு ஆகிறது. தகுந்த நிதியாதாரம் கண்டறிந்தவுடன் பணி துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

9—

சிமெண்ட் சாலை அமைத்தல்

வினா எண் 795—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, சாய் பாலாஜி நகரில் உள்ள சாலைகளை சிமெண்ட் சாலைகளாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சியைச் சார்ந்த சாய் பாலாஜி நகரில் உள்ள சாலைகளை சிமெண்ட் சாலைகளாக மாற்ற 408 மீட்டர் நீளத்தில் சிமெண்ட் சாலை அமைக்க ரூ.20.40 இலட்சம் மதிப்பீடு ஆகிறது. எதிர்வரும் ஆண்டுகளில் தகுந்த நிதியாதாரம் கண்டறிந்து இச்சாலைகளை சிமெண்ட் சாலைகளாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2022 மே 6

10—

ஏரியைப் பாதுகாத்தல்

வினா எண் 797—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சியில் உள்ள மதனபுரம் எதிரில் உள்ள சீக்கனாள் ஏரியில், கழிவுநீர் இறைச்சி கழிவுகளைக் கொட்டுவதை தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம், முடிச்சூர் ஊராட்சி, மதனபுரம் எதிரில் உள்ள சீக்கனாள் ஏரியில் கழிவுநீர், இறைச்சி கழிவுகளை கொட்டுவதை தடுக்க காவல் துறை உதவியுடன் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், அப்பகுதியில் பொது மக்களுக்கு தெரியும் வண்ணம் எச்சரிக்கை அறிவிப்பு பலகையும் வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

11—

சாலையைச் செப்பனிடுதல்

வினா எண் 800—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், திருமங்கைச்சேரி ஊராட்சி, சாயினாபுரம் கீழத் தெரு சாலையை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், திருமங்கைச்சேரி ஊராட்சி, சாயினாபுரம் கீழத் தெரு சாலையைச் செப்பனிட்டு சீரமைக்கும் திட்டம் தற்பொழுது அரசிடம் இல்லை.

12—

சாலையைச் செப்பனிடுதல்

வினா எண் 801—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, ஆரலூர் ஊராட்சி, செறுகடம்பூர் கிராமம் அம்பேத்கர் தெருவிலிருந்து மயானம் செல்லும் சாலையைச் செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், ஆரலூர் ஊராட்சி, செறுகடம்பூர் கிராமம் அம்பேத்கர் தெருவிலிருந்து மயானம் செல்லும் சாலை 400 மீட்டர் நீளம் உள்ளது. ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் 15-வது நிதிக் குழு திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் நிதியாண்டில் சரி செய்து தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

13—

சாலையைச் சரி செய்தல்

வினா எண் 802—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2022 மே 6

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், ஆரலூர் ஊராட்சி, கீழமணக்குடி, கோ.சி. நகரில் சாலை வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், ஆரலூர் ஊராட்சி, செறுகடம்பூர் தெரு சாலை 120 மீட்டர் நீளம் உள்ளது. ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் 15—வது நிதிக் குழு திட்டத்தின்கீழ் 2021—2022 ஆம் நிதியாண்டில் செய்து தர உத்தேசிக்கப்படுகிறது.

14—

சாலையைச் செப்பனிடுதல்

வினா எண் 803—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், ஆரலூர் ஊராட்சி, செறுகடம்பூர் தெரு சாலையைச் செப்பனிட்டு தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, ஆரலூர் ஊராட்சி, செறுகடம்பூர் தெரு சாலை 120 மீட்டர் நீளம் உள்ளது ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் 15-வது நிதிக் குழு திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் நிதியாண்டில் செய்து தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2022 மே 6]

15—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 805—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், ஆரலூர் ஊராட்சி, செறுகடம்பூர் கிராமத்தில் சிறிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், ஆரலூர் ஊராட்சி, செறுகடம்பூர் கிராமம், அம்பேத்கர் நகரில் 10,000 லிட்டர் சிறிய மேல்நிலை குடிநீர்த் தேக்கத் தொட்டி ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் "Jal Jeevan" *திட்டத்தின்கீழ் 2021—2022 ஆம் நிதியாண்டில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.*

16—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 806—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், நரிக்குடி ஊராட்சி, நரிக்குடி கிராமத்தில் மண் சாலையை தார்ச் சாலையாக அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, நரிக்குடி ஊராட்சியில் மண் சாலை பொதுப் பணித் துறைக்கு சொந்தமான வாய்க்கால் கரையில் பயன்பாட்டில் இருக்கிறது. ஆகவே, பொதுப் பணித் துறை (நீர் பாசனம்) தடையின்மை சான்று பெற்று தார்ச் சாலை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

17—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 807—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், திருமங்கைசேரி ஊராட்சி, சாயினாபுரம் மேட்டுத் தெரு மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை போக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், திருமங்கைசேரி ஊராட்சி, சாயினாபுரம் மேட்டுத் தெருவில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் ஜல் ஜீவன் மிஷன் (JJM) திட்டத்தின்கீழ் 2021—2022 ஆம் நிதியாண்டில் குடிநீர்த் திட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

18—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 808—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், திருமங்கைசேரி ஊராட்சி, சாயினாபுரம் மேட்டுத் தெருவில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், திருமங்கைசேரி ஊராட்சி, சாயினாபுரம் மேட்டுத் தெருவில் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் 2021—2022 ஆம் நிதியாண்டில் ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படும்.

19—

ஈமச்சடங்கு கொட்டகை அமைத்தல்

வினா எண் 809—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், திருமங்கைசேரி ஊராட்சி, சாயினாபுரம் நடுத் தெரு மக்கள் பயன்பாட்டிற்காக ரைஸ்மில் அருகில் உள்ள அரசுக்கு சொந்தமான காலி இடத்தில் ஈமச்சடங்கு கொட்டகை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், திருமங்கைசேரி ஊராட்சி, சாயினாபுரம் நடுத் தெரு மக்கள் பயன்பாட்டிற்காக ரூ.5.05 இலட்சம் மதிப்பீட்டில்

[2022 மே 6

2021—2022 ஆம் நிதியாண்டில் ஏதேனும் ஒரு திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் ஈமச்சடங்கு கொட்டகை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

20—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 811—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், மரத்துறை ஊராட்சி, பில்லுமாங்குடியில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், மரத்துறை ஊராட்சி, பில்லுமாங்குடியில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் நிதியாண்டில் கட்டப்பட்டு வருகிறது.

21—

சாலைகளைச் செப்பனிடுதல்

வினா எண் 813—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், மரத்துறை ஊராட்சி, மரத்துறை பிரதான சாலை, தெற்குத் தெரு சாலை ஆகிய சாலைகளை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், மரத்துறை ஊராட்சி, பிரதான சாலை நபார்டு திட்டத்தின்கீழ் 2019-2020 ஆம் ஆண்டில் செப்பனிடப்பட்டுள்ளது. மேலும், மரத்துறை ஊராட்சி, தெற்கு தெருவில் 2021-2022 ஆம் ஆண்டில் SCPAR *திட்டத்தில் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் செய்து கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.*

22—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 814—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், மரத்துறை ஊராட்சி, மேல மரத்துறையில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், மரத்துறை ஊராட்சியில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின்கீழ் 2020—2021 ஆம் ஆண்டில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி நிறைவு செய்யப்பட்டுள்ளது.

23—

சாலை மற்றும் மின் விளக்கு வசதி

வினா எண் 815—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2022 மே 6

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், மரத்துறை ஊராட்சி, தெற்கு தெரு மக்கள் மயானம் செல்ல மயான சாலையும், மயானத்தில் மின் விளக்கு வசதியும் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், மரத்துறை ஊராட்சி, தெற்கு தெரு மயான சாலை பணிகள் ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. மின் விளக்கு வசதி அமைக்கப்பட்டுள்ளது.

24—

தொகுப்பு வீடுகளைச் செப்பனிடுதல்

வினா எண் 816—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், இடுமுலை ஊராட்சியில் பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளைச் செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், இடுமுலை ஊராட்சியில் 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு, மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள தொகுப்பு வீடுகளை பழுது நீக்கம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

2022 மே 6]

25—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 817—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், நரிக்குடி ஊராட்சியில் உள்ள மண் சாலையை தார்ச் சாலையாக செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, நரிக்குடி ஊராட்சியில் மண் சாலை பொதுப் பணித் துறைக்கு சொந்தமான வாய்க்கால் கரையில் பயன்பாட்டில் இருக்கிறது. ஆகவே, பொதுப் பணித் துறை (நீர் பாசனம்) தடையின்மை சான்று பெற்று தார்ச் சாலை அமைத்து தர இயலும்.

26—

பயணியர் நிழற்குடை அமைத்தல்

வினா எண் 820—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், துகிலி ஊராட்சியில் பள்ளிக்கூடம் அருகே பேருந்து நிறுத்தத்தில் பயணியர் நிழற்குடை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, துகிலி ஊராட்சியில் பள்ளிக்கூடம் அருகே பேருந்து நிறுத்தத்தில் 2018—2019 ஆம் ஆண்டில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டு நிதியில் புதிய பேருந்து பயணியர் நிழற்குடை கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

27—

சமுதாயக் கூடம் அமைத்தல்

வினா எண் 821—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், துகிலி ஊராட்சியில் சமுதாயக் கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட துகிலி ஊராட்சியில் பெரியார் நகரில் சமுதாயக் கூடம் அமைக்கும் அளவிற்கு ஊராட்சிக்குச் சொந்தமான இடம் ஏதும் இல்லை. எனவே, துகிலி ஊராட்சியில் சமுதாயக் கூடம் கட்ட இயலாது.

28—

ஈமக்கிரியை மண்டபம் அமைத்தல்

வினா எண் 823—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், துகிலி ஊராட்சியில் ஈமக்கிரியை மண்டபம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட துகிலி ஊராட்சியில் ஈமக்கிரியை மண்டபம் கட்ட போதிய இடவசதி இல்லை.

29—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 824 முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், துகிலி ஊராட்சியில் கூடுதலாக சிறிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட துகிலி ஊராட்சியில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தில் 2021—2022 ஆம் நிதியாண்டில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் சிறிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி (10,000 லிட்டர்) கட்டப்படும்.

[2022 மே 6

30—

பயணியர் நிழற்குடை அமைத்தல்

வினா எண் 825—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், துகிலி ஊராட்சியில் புதிய பயணியர் நிழற்குடை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, துகிலி ஊராட்சி, பெரியார் நகரில் பயணியர் நிழற்குடை தற்சமயம் பயன்பாட்டில் இருந்து வருவதால் புதிய பயணியர் நிழற்குடை கட்ட தேவை எழவில்லை.

31—

சாலை வசதி

வினா எண் 828—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், சாத்தனூர் ஊராட்சி, மேலபிள்ளையார் கோயில் தெருவில் சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியத்திற்குட்பட்ட சாத்தனூர்

2022 மே 6]

ஊராட்சியில் மேலபிள்ளையார் கோவில் தெருவில் 14-வது நிதிக் குழு மானியத்திலிருந்து ரூ.8.60 இலட்சம் மதிப்பீட்டில் 438 மீட்டர் சாலை பணி மேற்கொள்ளப்படும்.

32—

சாலைகளைச் செப்பனிடுதல்

வினா எண் 829—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், சாத்தனூர் ஊராட்சி, சாத்தனூர் கிராம தெரு சாலைகளை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சாத்தனூர் ஊராட்சியில் கிராம தெரு சாலைகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பட்டம் தெரு 92 மீட்டர் ரூ.1.80 இலட்சம், சுனாமி தெரு சாலை 192 மீட்டர் ரூ.3.72 இலட்சம் மற்றும் மல்லார்பேட்டை திரௌபதி அம்மன்கோயில் தெரு 100 மீட்டர் ரூ.1.96 இலட்சம் ஆக கூடுதல் தொகை ரூ.7.52 இலட்சம் மதிப்பீட்டில் சாத்தனூர் ஊராட்சியின் 15—வது நிதிக் குழு மானியத்திலிருந்து சாலை பணிகள் மேற்கொள்ளப்படும்.

33—

குளம் தூர்வாருதல்

வினா எண் 833—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், வேலூர் ஊராட்சி, புதுப்பிடாகை குடியானத் தெருவில் உள்ள குளத்தினை தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், வேலூர் ஊராட்சி, புதுப்பிடாகை குடியானத் தெருவில் உள்ள குளத்தினை ரூ.1,00,000/— மதிப்பீட்டில் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் தூர்வார உத்தேசிக்கப்பட்டுள்ளது.

34—

மயானக் கொட்டகை அமைத்தல்

வினா எண் 835—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், வேலூர் ஊராட்சி, ஆதி திராவிடர் தெருவில் மயான கூட வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வேலூர் ஊராட்சி, வேலூர் ஆதி திராவிடர் தெருவில் மயானக் கொட்டகை ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் 2021—2022 ஆம் நிதியாண்டில் ஏதேனும் ஒரு திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தப்படும்.

35—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 836—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், வேலூர் ஊராட்சி, அழகேசபுரம் பிரதான சாலையில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வேலூர் ஊராட்சி, 2021—2022 ஆம் ஆண்டு 14—வது நிதிக் குழு மானிய நிதியிலிருந்து அழகேசபுரம் பிரதான சாலையிலுள்ள 62 குடியிருப்புகளுக்கு குடிநீர் குழாய் விஸ்தரிப்பு பணி ரூ.1.52 இலட்சம் மதிப்பீட்டில் செய்யப்பட்டுள்ளது மற்றும் ஜல் ஜீவன் மிஷன் குவிதல் நிதி ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் அனைத்துத் தனி நபர் வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கான தேவை எழவில்லை.

36—

பொது சுகாதார வளாகம் அமைத்தல்

வினா எண் 837—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், குறிச்சி ஊராட்சி, அண்ணா நகரில் பொது சுகாதார வளாகம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குறிச்சி

[2022 மே 6

ஊராட்சி, அண்ணா நகரில் 290 குடியிருப்புகளுக்கு தனி நபர் இல்ல கழிவறை உள்ளது. எனவே, பொது சுகாதார வளாகம் அமைத்துத்தர தேவை எழவில்லை.

37—

சாலை அமைத்தல்

வினா எண் 838—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், குறிச்சி ஊராட்சி, அண்ணா நகரில் புதிய சாலை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குறிச்சி ஊராட்சி, அண்ணா நகரில் 131 குடும்பங்கள் பயனடையும் வகையில் 750 மீட்டருக்கு ஓரடுக்கு தார்ச் சாலை ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் 15-வது நிதிக் குழு மானிய நிதித் திட்டம் 2021-2022 ஆம் நிதியாண்டில் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

38—

சாலை அமைத்தல்

வினா எண் 840—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், கீழமாத்தூர் ஊராட்சி, பள்ளிவாசல் தெருவில் புதிய சாலை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கீழமாத்தூர் ஊராட்சி, பள்ளிவாசல் தெருவில் 150 குடும்பங்கள் பயனடையும் வகையில் 150 மீட்டருக்கு ஓரடுக்கு தார்ச்சாலை ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் 15—வது நிதிக் குழு மானிய நிதி திட்டம் (நிபந்தனை இல்லா நிதி) 2021—2022 ஆம் நிதியாண்டில் செய்து தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

39—

பயணியர் நிழற்குடை செப்பனிடுதல்

வினா எண் 841—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், குறிச்சி ஊராட்சியில் உள்ள பயணியர் நிழற்குடையை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், குறிச்சி ஊராட்சியில் உள்ள பயணியர் நிழற்குடை ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் 15-வது நிதிக் குழு மானிய நிதி திட்டம் 2021—2022 ஆம் நிதியாண்டில் செய்து தர உத்தேசிக்கப்படும்.

40—

சாலையைச் செப்பனிடுதல்

வினா எண் 843—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், திருமாந்துறை ஊராட்சி, வடக்குத் தெரு சாலையை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திருமாந்துறை ஊராட்சியில் வடக்குத் தெரு என்ற பெயரில் எந்தவொரு சாலையும் இல்லை.

41—

தொகுப்பு வீடுகளைச் செப்பனிடுதல்

வினா எண் 844 முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், திருமாந்துறை ஊராட்சியில் தொகுப்பு வீடுகளைச் செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், திருமாந்துறை ஊராட்சியில் 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள தொகுப்பு வீடுகளை பழுது நீக்கம் செய்யும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

2022 மே 6]

42—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 845—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், மகாராஜபுரம் ஊராட்சி, மகாராஜபுரம் பிரதான சாலையிலிருந்து மயான கூடம் செல்லும் சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், மகாராஜபுரம் ஊராட்சியில், மகாராஜபுரம் பிரதான சாலையிலிருந்து மயான கூடம் செல்லும் சாலையானது 2010—2011 ஆம் நிதியாண்டில் சாலையின் நீளம் 180 மீட்டர், அகலம் 3 மீட்டர் ரூ.5.4 இலட்சம் மதிப்பீட்டில் சிமென்ட் சாலையாக அமைக்கப்பட்டு, தற்சமயம் நல்ல நிலையில் உள்ளதால் சாலையை சீரமைக்க தேவை எழவில்லை.

43—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 846—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், கஞ்சனூர் ஊராட்சி, பெருமாள் கோயில் தெருவில் சிறிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2022 மே 6*

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, கஞ்சனூர் பெருமாள் கோவில் தெருவில், தற்போது சிறிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றும், 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பெரிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றும் நல்ல நிலையில் இயங்கி வருகிறது. எனவே, தற்போது சிறிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கத் தேவை எழவில்லை.

44—

பயணியர் நிழற்குடை அமைத்தல்

வினா எண் 850—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, கோட்டூர் ஊராட்சி, காளியம்மன் கோவில் தெருவில் பயணியர் நிழற்குடை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, கோட்டூர் ஊராட்சி, காளியம்மன் கோவில் தெரு வழியாக பேருந்து வழித்தடம் இல்லை. எனவே, காளியம்மன் கோவில் தெருவில் பயணியர் நிழற்குடை அமைக்கத் தேவை எழவில்லை.

45—

சாலையைச் செப்பனிடுதல்

வினா எண் 851—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) திருவிடைமருதூர் தொகுதி, கோட்டூர் ஊராட்சி, காளியம்மன் கோயில் தெரு சாலையை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், கோட்டூர் ஊராட்சியில் உள்ள காளியம்மன் கோயில் தெரு சாலையின் நீளம் 500 மீட்டர். இத்தெருவில் 60 குடும்பங்கள் உள்ளன. இத்தெரு சாலையில் 2020-2021 ஆம் ஆண்டு 15-வது நிதிக் குழு மானியத் திட்டத்தில் ரூ.9,23,000 மதிப்பீட்டில் தார்ச் சாலை அமைக்கும் பணிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. 10-9-2021-க்குள் பணி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

46—

சாலை அமைத்தல்

வினா எண் 852—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், ஆரலூர் ஊராட்சி, செறுகடம்பூரில் அறுவடை இயந்திரம் கொண்டு செல்ல மண் சாலை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், ஆரலூர் ஊராட்சி,

செறுகடம்பூரில் அறுவடை இயந்திரம் கொண்டு செல்ல மண் சாலை அமைத்துத் தரக் கோரிய பகுதியானது தனியாருக்கு சொந்தமானது. எனவே, தனியாருக்கு சொந்தமான இடத்தில் மண் சாலை அமைத்திட வழிவகை இல்லை.

47—

படித்துறையைச் செப்பனிடுதல்

வினா எண் 853—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், மேலையூர் ஊராட்சியில் படித்துறைகளைச் செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம், மேலையூர் ஊராட்சியில் அருள்மிகு செல்லியம்மன் கோயில் குளம் மற்றும் அருள்மிகு மாரியம்மன் கோயில் குளம் ஆகிய இரண்டு குளங்களில் உள்ள படித்துறைகள் பழுதடைந்துள்ளன. மேற்குறித்த இரண்டு படித்துறைகளும் வரும் நிதியாண்டில் ஊராட்சி பொது நிதியின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் சீரமைக்கப்படும்.

48—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 854—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், கோட்டூர் ஊராட்சி, வடக்குத் தெருவில் சிறிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், கோட்டூர் ஊராட்சியில் உள்ள வடக்கு தெருவில் மொத்தம் 48 குடும்பங்கள் உள்ளன. இத்தெருவிற்கு ஒரு 10,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்கத்தில் உள்ளது. ஒரு நாளைக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட வேண்டிய அவசியம் எழவில்லை.

49—

சமுதாயக் கூடம், நூலகம், மகளிர் சுகாதார வளாகம் கட்டுதல்

வினா எண் 855—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்துார் தொகுதி, துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், வேடநத்தம் ஊராட்சியில் சமுதாயக் கூடம், நூலகம், மகளிர் சுகாதார வளாகம் ஆகியவற்றை கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்துார் தொகுதி, துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், வேடநத்தம் ஊராட்சியில் தற்போது உள்ள நூலகம் நல்ல நிலையில் இயங்கி வருகிறது. மகளிர் சுகாதார வளாகம் ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் பழுது நீக்கம் செய்யப்படும். இவ்வூராட்சிக்கு அருகில் உள்ள பேரூராட்சியில் உள்ள அரசு சமுதாயக் கூடத்தினை பொது மக்கள் பயன்படுத்தி வருவதால் தற்போது புதிய சமுதாயக் கூடம் கட்ட வழிவகை இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2022 மே 6

50—

ஊராட்சி ஒன்றிய அலுவலகம் கட்டுதல்

வினா எண் 856—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டத்தின்கீழ் ரூ.3.10 கோடி மதிப்பீட்டில் 2021-2022 ஆம் ஆண்டில் கட்டடம் கட்டித் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

51—

ஆரம்பப் பள்ளியைச் சீரமைத்தல்

வினா எண் 868—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், கீக்களூர் ஊராட்சி, கீக்களூர் புரவடையில் உள்ள ஆரம்பப் பள்ளியைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், கீக்களூர் ஊராட்சி, கீக்களூர் புரவடையில் உள்ள ஆரம்பப் பள்ளி 2019-2020 ஆம் ஆண்டு மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு

2022 மே 6]

*மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (*RCSIDS*) ரூ.48,000/- மதிப்பீட்டில் ஏற்கெனவே சீரமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.*

52—

நடுநிலைப் பள்ளிக்கு கட்டடம் கட்டுதல்

வினா எண் 869—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், கத்தாழம்பட்டு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், கத்தாழம்பட்டு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 89 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். தற்போது உள்ள கட்டடம் நல்ல நிலையில் உள்ளது. இது தற்போது படிக்கும் மாணவர்களுக்கு போதுமானதாக உள்ளது என்பதால் புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

53—

ஆரம்பப் பள்ளிக்குக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 870—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஆங்குணம் ஊராட்சியில் உள்ள ஆரம்பப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஆங்குணம் ஊராட்சியில் உள்ள ஆரம்பப் பள்ளியில் 34 மாணவர்கள் பயின்று வருகின்றனர். தற்போது உள்ள கட்டடம் நல்ல நிலையில் உள்ளது. மேற்படி கட்டடம் தற்போது படிக்கும் மாணவர்களுக்கு போதுமானதாக உள்ளது என்பதால் புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

54—

கான்கிரீட் தளமாக அமைத்தல்

வினா எண் 877—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஒன்றியம், ஆருத்திராப்பட்டு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் கூரையை மாற்றி கான்கிரீட் தளமாக அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஒன்றியம், ஆருத்திராப்பட்டு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி 50 ஆண்டுகளுக்கு முந்தைய கட்டடமாக இருப்பதால், கூரையை மாற்றி தொடர்ந்து பயன்படுத்த தகுதியற்ற கட்டடமாக கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து புதிய வகுப்பறை கட்டடம் 2021—2022 ஆம் ஆண்டிற்கான மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின்கீழ் (RCSIDS) முன்னுரிமை அடிப்படையில் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

2022 மே 6]

55—

குளங்களுக்கு சுற்றுச் சுவர் அமைத்தல்

வினா எண் 879—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஒன்றியம், ஆணானந்தல் ஊராட்சி, தென்னங்குளம், அரியபள்ளம் அய்யனார் கோவில் குளம், களப்பளங்குளம், கவர்க்குளம் ஆகிய குளங்களுக்கு சுற்றுச் சுவர் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், ஆணானந்தல் ஊராட்சி, தென்னங்குளம், அரியபள்ளம் அய்யனார் கோவில் குளம், களப்பளங்குளம் கவர்குளம் ஆகிய குளங்களுக்கு சுற்றுச் சுவர் பணிகள் மாநில நிதிக் குழு மானிய திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

56—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 882—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், சு.நல்லூர் ஊராட்சி இரயில்வே குடியிருப்புப் பகுதியில் புதியதாக ஆழ்துளைக் கிணறு அமைத்து, அதன்மூலம் 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், சு.நல்லூர் ஊராட்சி இரயில்வே குடியிருப்புப் பகுதியில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியே போதுமானது. எனவே, 2021-2022 ஆம் ஆண்டு 15-வது நிதிக் குழு மானிய திட்டத்தில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தரப்படும்.

57—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 883—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம் சாலையனூர் ஊராட்சிக்கு 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கீழ்பெண்ணாத்தூர் தொகுதிக்குட்பட்ட துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியத்தை உள்ளடக்கிய சாலையனூர் ஊராட்சியில் ஏற்கெனவே ஐந்து 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் நல்ல நிலையில் மக்கள் பயன்பாட்டில் உள்ளதால் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அவசியம் ஏதுமில்லை.

58—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 884—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், நார்த்தாம்பூண்டி ஊராட்சியில் புதியதாக திருமண மண்டபம் (சமுதாயக் கூடம்) கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், நார்த்தாம்பூண்டி ஊராட்சியில் அரசுக்கு சொந்தமான இடம் இல்லை என்பதால், சமுதாயக் கூடம் கட்டுவதற்கான வழிவகையில்லை.

59—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 885—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், நாயுடுமங்கலம் ஊராட்சியில் புதியதாக திருமண மண்டபம் (சமுதாயக் கூடம்) கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஊராட்சியில் அரசுக்கு சொந்தமான இடம் இல்லை என்பதால், சமுதாயக் கூடம் கட்டுவதற்கான வழிவகையில்லை.

60—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 886—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா——*

[2022 மே 6

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், மாதலம்பாடி கிராமத்திலிருந்து கணேசபுரம் செல்லும் 2 கி.மீ. நீளம் உள்ள சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், மாதலம்பாடி கிராமத்திலிருந்து கணேசபுரம் செல்லும் 2 கி.மீ. நீளம் உள்ள சாலையானது ரூ.60.14 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டு, 3—7—2020 முதல் மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

61—

சமுதாயக் கூடம் அமைத்தல்

வினா எண் 887—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், இராயம்பேட்டை ஊராட்சியில் புதியதாக பெரிய சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், இராயம்பேட்டை ஊராட்சியில் அரசுக்கு சொந்தமான இடம் இல்லை என்பதால் சமுதாயக் கூடம் கட்டுவதற்கான வழிவகையில்லை.

62—

கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 888—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், இராயம்பேட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு கூடுதலாக 2 வகுப்பறை கட்டடம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், இராயம்பேட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியின் கிழக்குப் பகுதியில் 75.5 சதுர மீட்டர் அளவுள்ள கட்டடம், தெற்குப் பகுதியில் 60 சதுர மீட்டர் அளவுள்ள கட்டடம் மற்றும் மேற்குப் பகுதியில் 130.48 சதுர மீட்டர் அளவுள்ள கட்டடம் ஆக மொத்தம் 269.08 சதுர மீட்டர் அளவில் 3 கட்டடங்கள் தனித்தனியாக நல்ல நிலையில் உள்ளன. மேற்படி பள்ளியில் மொத்தம் 114 மாணவர்கள் மட்டுமே 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை தற்போது படித்து வருவதால், போதுமான அளவில் வகுப்பறை கட்டடங்கள் உள்ளன. எனவே, கூடுதலாக பள்ளி வகுப்பறைக் கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை.

63—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 889—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், செவரப்பூண்டி ஊராட்சியில் உள்ள மேட்டுப் பகுதியில் வசிக்கும் பொது மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை போக்குவதற்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், செவரப்பூண்டி ஊராட்சியில் சுமார் 350 குடும்பங்கள்

(1,201 நபர்கள்) வசித்து வருகின்றனர். இவர்களுக்கு 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேநீர்தேக்க தொட்டியே போதுமானது என்பதால் 2020-2021 ஆம் நிதியாண்டில் 15-வது நிதிக் குழு மானிய (ஊராட்சி ஒன்றியம்) திட்டத்தின்கீழ் கட்டித் தரப்படும்.

64—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 890—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், செவரப்பூண்டி ஊராட்சியில் புதியதாக சமுதாயக் கூடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், செவரப்பூண்டி ஊராட்சியில் அரசுக்கு சொந்தமான இடம் இல்லை என்பதால் சமுதாயக் கூடம் கட்டுவதற்கான வழிவகையில்லை.

65—

பள்ளிக் கட்டடத்தின் மேற்கூரையை பழுதுபார்த்தல்

வினா எண் 891—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், செல்லங்குப்பம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியின் பழைய கட்டடத்தின் மேற்கூரையை பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், செல்லங்குப்பம்

2022 மே 6]

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியின் பழைய கட்டடத்தின் பழுதடைந்த மேற்கூரையை 2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.2.90 இலட்சம் மதிப்பீட்டில் பழுது பார்க்கவும், இச்செலவினத்தை ஒன்றியப் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

66—

கட்டணம் இரத்து செய்தல்

வினா எண் 902—திரு. ப. அப்துல் சமது: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா——*

(அ) கிராமப்புறத்தில் வார சந்தை, திருவிழா, தெருவோரங்களில், நடமாடும் கடைகள் அமைக்கும் சிறு வணிகர்களிடம் உள்ளாட்சி அமைப்புகளால் வசூலிக்கப்படும் கட்டணத்தை இரத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிராமப்புறத்தில் வார சந்தை, திருவிழா, தெருவோரங்களில், நடமாடும் கடைகள் அமைக்கும் சிறு வணிகர்களிடம் உள்ளாட்சி அமைப்புகளால் வசூலிக்கப்படும் கட்டணத்தை இரத்து செய்ய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஊரகப் பகுதிகளில் வாரச்சந்தை நடத்துவது குறித்து உரிய அறிவிப்புகள் ஊராட்சி ஒன்றிய அளவில் வெளியிடப்பட்டு அதன்மூலம் உரிய விதிமுறைகளின் அடிப்படையில் ஏலத்தொகை நிர்ணயிக்கப்படும். அதன்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஏலதாரரால், தொடர்புடைய வணிக அமைப்புகளிடமிருந்து சந்தை கட்டணத் தொகை வசூல் செய்யப்படுகிறது. எனவே, இது தொடர்பாக ஏலதாரர் குத்தகை எடுத்து சந்தையை நடத்தி வருகின்றபட்சத்தில் கட்டணத் தொகையை செலுத்துவதிலிருந்து விலக்கு அளிப்பது என்பதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாக உள்ளது.

மேலும், சந்தைகள்மூலம் பெறப்படும் வருவாயானது ஊராட்சி ஒன்றியங்களுக்கு மிக முக்கியமான வருவாய் இனமாக உள்ளதாலும்,

[2022 மே 6

ஊராட்சி ஒன்றிய சந்தைகளை ஏற்படுத்தி பராமரிப்பது ஊராட்சி ஒன்றியங்களின் முக்கிய பணியாக இருப்பதாலும், சந்தைகளை ஏற்படுத்தி பராமரிப்பதற்கு ஊராட்சி ஒன்றியங்கள் பெருமளவு செலவினம் மேற்கொண்டுள்ளதாலும் சந்தைக் கட்டணத்தை செலுத்துவதிலிருந்து விலக்களிப்பதால் ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்படும் நிதி தாக்கம் குறித்தும் ஆய்ந்த பிறகே முடிவெடுத்திட இயலும். எனவே, ஊரக சந்தைகளை பொறுத்தவரையில், விலக்கு அளிப்பது தற்போதைய நிலையில் சாத்தியமற்றது என்கிற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

67—

மின் மயானம் அமைத்தல்

வினா எண் 911—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் தெற்கு தொகுதி, திருப்பூர் ஒன்றியம், பெருமாநல்லூரில் மின் மயானம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வட்டாரம், பெருமாநல்லூர் ஊராட்சிக்கு 11 கி.மீ. தொலைவில் அவினாசியில் ஒரு மின் மயானம் மற்றும் 8 கி.மீ. தொலைவில் ஆத்துப்பாளையம் பகுதியில் ஒரு மின் மயானம் அமைந்துள்ளது. இருப்பினும் பெருமாநல்லூர் ஊராட்சியில் மின் மயானம் அமைக்க 90 சென்ட் மயான பூமி இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஊராட்சியின்மூலம் தீர்மானம் எண் 93/24-6-2021 நிறைவேற்றப்பட்டுள்ளது. உரிய தொழில்நுட்ப அனுமதி பெற்று தகுந்த நிதியாதாரம் கண்டறிந்து இப்பணி மேற்கொள்ளப்படும்.

68—

மயான சாலையில் தெரு விளக்கு வசதி

வினா எண் 931—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், பைங்காநாடு ஊராட்சி, மயான சாலையில் தெருவிளக்கு வசதி செய்துதர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஒன்றியம், பைங்காநாடு ஊராட்சியில் போதிய மின் கம்பங்கள் இருந்த போதிலும், தெரு விளக்குகள் பொருத்திட புதிதாக மின்கம்பி அமைத்திட வேண்டியுள்ளது. இப்பணியினை 15-வது நிதிக் குழு மானிய திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் ஆண்டு செயல் திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் நடப்பாண்டிலேயே செயல்படுத்த உத்தேசிக்கப்படுகிறது.

69—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 934—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், பைங்காநாடு ஊராட்சி, சீப்பான் சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், பைங்காநாடு ஊராட்சி, சீப்பான் சாலை மண் சாலையாக உள்ளது. சாலை நீளம் 1 கி.மீ. ஆகும். இச்சாலையைச் செப்பனிட ரூ.21.45 இலட்சம் நிதி தேவைப்படுகிறது. இச்சாலைக்கு முன்னுரிமை அளித்து செப்பனிட நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2022 மே 6

70—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 938—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், உள்ளிக்கோட்டை வாணிப மண்டபம் பாலம்—காங்குளம் பாலம் வரையுள்ள சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

*மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், உள்ளிக்கோட்டை வாணிப மண்டபம் பாலம்—காங்குளம் பாலம் வரையுள்ள சாலை 4 கி.மீ. கருங்கல் சாலையாக உள்ளது. இச்சாலையை 2021-2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (*TNRRIS*) சுமார் ரூ.94.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்திட முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.*

71—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 941—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், கண்டிதம்பேட்டை மேலத்திருப்பாலக்குடி—ஆலங்கோட்டை சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், கண்டிதம்பேட்டை மேலத்திருப்பாலக்குடி—ஆலங்கோட்டை கிராம சாலை 2.00 கி.மீ. ஆகும். இச்சாலை

2022 மே 6]

தற்போது கருங்கல் சாலையாக உள்ளது. இந்தச் சாலைப் பணியினை மேற்கொள்ள ரூ.6.78 இலட்சம் தேவைப்படுகிறது. தற்போது தமிழ்நாடு ஊரக சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் முன்னுரிமை அளித்து சாலை அமைத்துத் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது..

72—

பாலம் கட்டுதல்

வினா எண் 942—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஒன்றியம், துளசேந்திரபுரம்— இடையர்நத்தம் இடையே மாலையிட்டான் வாரியின் குறுக்கே பாலம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், துளசேந்திரபுரம்—இடையர்நத்தம் இடையே மாலையிட்டான்வாரியின் குறுக்கே பாலம் அமைக்க நபார்டு திட்டத்தின்மூலம் செய்வதற்கு வரும் நிதியாண்டில் முன்னுரிமை அளித்து செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது..

73—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 947—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், மூவாநல்லூர்—இடையர்எம்பேத்தி சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

[2022 மே 6

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், மூவாநல்லூர்—இடையர்எம்பேத்தி சாலை 2019-2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊரக சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.48.80 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலையாக அமைக்கப்பட்டுள்ளது.

74—

தடுப்புச்சுவர் மற்றும் படித்துறை கட்டுதல்

வினா எண் 948—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், மரவக்காடு ஊராட்சி, சமத்துவபுரத்தில் உள்ள ஓமக்குளத்தில் தடுப்புச்சுவர் மற்றும் படித்துறை கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி வட்டாரம், மரவக்காடு ஊராட்சி சமத்துவபுரத்தில் ஓமக்குளத்தில் படித்துறை பழுதான நிலையில் உள்ளது. 2021-2022 ஆம் நிதியாண்டில் ஒன்றிய பொது நிதியில் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக படித்துறை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

75—

குளத்திற்கு தடுப்புச்சுவர் கட்டுதல்

வினா எண் 949—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், மூன்றாம்சேத்தி ஊராட்சியில் உள்ள இரட்டைக் குளத்தில் தடுப்புச்சுவர் கட்ட அரசு முன்வருமா?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி வட்டாரம், மூன்றாம்சேத்தி ஊராட்சி, இரட்டைக் குளத்தைச் சுற்றி 2020-2021 ஆம் நிதியாண்டில் ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் ரூ.1.65 இலட்சம் மதிப்பீட்டில் இரும்பு வேலி அமைக்கப்பட்டுள்ளது.

76—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 950—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், மூவாநல்லூர்—மேலவாசல் சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியத்தில் மூவாநல்லூர்—மேலவாசல் சாலை 2019-2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் ரூ.37.96 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலையாக அமைக்கப்பட்டுள்ளது.

77—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 953—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், மேலத்திருப்பாலக்குடி—உள்ளிக்கோட்டை ஆற்றங்கரை இணைப்புச் சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியத்தில் மேலத்திருப்பாலக்குடி— உள்ளிக்கோட்டை ஆற்றங்கரை இணைப்பு சாலையாக 2009-2010 ஆம் ஆண்டில் ஒன்றிய பொது நிதியிலும், 2013-2014 ஆம் ஆண்டில் மாநில நிதிக் குழு மானியம் மூலமும் தார்ச் சாலையாக அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இச்சாலையின்மூலம் சுமார் 3,000 நபர்கள் பயன்பெறுவார்கள். தற்போது இச்சாலை கருங்கல் கப்பி சாலையாக உள்ளது. ஆற்றங்கரை சாலையின் நீளம் 6 கி.மீ., அகலம் சுமார் 3 மீட்டர் மட்டுமே உள்ளது. இச்சாலை அமைத்திட ரூபாய் 1 கோடியே 34 இலட்சம் தேவைப்படுகிறது. நிதி பெறப்பட்டவுடன் சாலை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

78—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 954—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், கர்ணாவூர் ஊராட்சி, பாமணி ஒடபட்டக்கார தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், கர்ணாவூர் ஊராட்சி, பாமணி ஒடபட்டக்கார தெருவில் 10,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி நல்ல நிலையில் உள்ளது. அனைத்து வீடுகளுக்கும் 2021-2022 ஆம் ஆண்டு ஜல் ஜீவன் மிஷன் (JJM) திட்டத்தில் குடிநீர் இணைப்பு வழங்கப்படவுள்ளது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அவசியமில்லை.

2022 மே 6]

79—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 955—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், மேலத்திருப்பாலக்குடி எம்.ஜி.ஆர். காலனி குறுக்கு சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மேலதிருப்பாலக்குடி எம்.ஜி.ஆர். காலனி குறுக்கு சாலை CGF *20% 2019-2020 ஆம் ஆண்டு திட்டத்தின்கீழ் 450 மீ. நீளத்திற்கு ரூ. 9.15 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலையாக அமைக்கப்பட்டுள்ளது.*

80—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 958—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், ஏத்தக்குடி ஊராட்சி, மேலகுடியிருப்புப் பகுதியில் இடிந்துவிழும் நிலையில் உள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை அகற்றி புதிய குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் உள்ள அரசால் கட்டப்பட்டுள்ள தொகுப்பு வீடுகளில் பழுதடைந்த தொகுப்பு வீடுகளைக் கணக்கெடுப்பு செய்து, அதன் ஒரு பகுதியாக

[2022 மே 6

2018-2019 ஆம் ஆண்டில் 144 வீடுகள் பழுது நீக்கம் செய்யப்பட்டன. நிலுவையில் உள்ள வீடுகளை மீளவும், கணக்கெடுப்பு செய்து இரண்டாவது முறையாக நிர்வாக அனுமதி பெற்று, பழுது நீக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

158—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 1459—திரு. S.R. இராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, பலராமன் நகர், இரண்டாவது தெரு சாலையைச் சீரமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புனித தோமையர் மலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சியைச் சார்ந்த பலராமன் நகர், இரண்டாவது தெரு, 125 மீட்டர் நீள சாலையைச் சீரமைக்க ரூ.6.00 இலட்சம் மதிப்பீடு ஆகிறது. முன்னுரிமை அடிப்படையில் வரும் நிதியாண்டில் பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது..

159—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 1460—திரு. S.R. இராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, மும்மூர்த்தி காமராஜர் தெரு, காமராஜர் குறுக்குத் தெரு சாலையைச் சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புனித தோமையர் மலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சியை சார்ந்த மும்மூர்த்தி காமராஜர் தெரு, காமராஜர் குறுக்குத் தெரு 120 மீட்டர் நீளமுள்ள சாலையைச் சீரமைக்க ரூ.5.76 இலட்சம் மதிப்பீடு ஆகிறது. முன்னுரிமை அடிப்படையில் வரும் நிதியாண்டில் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

160—

முறையான ஊதியம் வழங்குதல்

வினா எண் 1461—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சியில் நூறு நாள் வேலை திட்டத்தில் சரியாக முறையான ஊதியம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையர் மலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அகரம்தென் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் நடைபெறும் வேலைகளுக்கு முறையாக தினசரி வேலை செய்யும் நபர்களின் எண்ணிக்கை கணக்கீடு செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வார இறுதியில் வேலை செய்யும் நபர்களின் வேலையின் அளவுகளை கணக்கீடு செய்து, வேலைக்கேற்ப ஊதியம் அவர்களது வங்கிக் கணக்கில் ஈடு செய்யப்பட்டு வருகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2022 மே 6

161—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 1462—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சியில் பாலமுருகன் அவென்யூ (கிருஷ்ணா நகர்) சாலையைச் சீரமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புனித தோமையர் மலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சியைச் சார்ந்த பாலமுருகன் அவென்யூ (கிருஷ்ணா நகர்) 135 மீ. நீளமுடைய சாலையைச் சீரமைக்க ரூ.6.48 இலட்சம் மதிப்பீடு ஆகிறது. முன்னுரிமை அடிப்படையில் வரும் நிதியாண்டில் பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

162—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 1463—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சியில் கிருஷ்ணா நகரில் திறந்தவெளி கிணற்றுடன் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புனித தோமையர் மலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சியை சார்ந்த கிருஷ்ணா நகரில் திறந்தவெளி கிணறு அமைக்க போதுமான இட வசதி இல்லாத காரணத்தினால் அருகில் உள்ள கஸ்பாபுரம் பகுதியில் கிணறு அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேற்படி ஊராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க ரூ.25.00 இலட்சம் மதிப்பீடு ஆகிறது. முன்னுரிமை அடிப்படையில் வரும் நிதியாண்டில் பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

163—

தெருக்களை சீரமைத்தல்

வினா எண் 1465—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, சக்தி நகர், 4 முதல் 8—வது வரை உள்ள தெருக்களை சீரமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புனித தோமையர் மலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சியை சார்ந்த சக்தி நகர் 4 முதல் 8-வது வரை 710 மீ. நீளமுள்ள தெருக்களை சீரமைக்க ரூ.34.00 இலட்சம் மதிப்பீடு ஆகிறது. ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் வரும் நிதியாண்டில் பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2022 மே 6

164—

சாலைகளைச் சீரமைத்தல்

வினா எண் 1466—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, பாரதிதாசன் நகர் 4-வது முதல் 8-வது வரை உள்ள சாலைகளைச் சீரமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புனித தோமையர் மலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சி, பாரதிதாசன் நகர் 4 முதல் 8-வது வரை உள்ள 666 மீ. நீளமுள்ள தெருக்களை சீரமைக்க ரூ.32.00 இலட்சம் மதிப்பீடு ஆகிறது. ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் வரும் நிதியாண்டில் பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

165—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 1467—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சி, சாரஸ் அவென்யூ 4-வது குறுக்குத் தெரு சாலையைச் சீரமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முடிச்சூர் ஊராட்சி, சாரஸ் அவென்யூ 4-வது குறுக்குத் தெரு 200 மீ. நீளமுள்ள சாலையைச் சீரமைக்க ரூ.14.00 இலட்சம் மதிப்பீடு ஆகிறது. ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் வரும் நிதியாண்டில் பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்படுகிறது.

166—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 1472—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், ஆத்தூர் ஊராட்சி, பொய்பாக்கம் கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், ஆத்தூர் ஊராட்சி, பொய்பாக்கம் கிராமத்தில் 677 மக்கள் மட்டுமே வசித்து வருகின்றனர். அவர்களுக்கு ஏற்கெனவே 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின்மூலம் குடிநீர் தினமும் 75 லிட்டர் LPCD *குறைவில்லாமல் தொய்வின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, புதியதாக 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.*

167—

புதிய கட்டடம்

வினா எண் 1473—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், ஆத்தூர் ஊராட்சி, பொய்பாக்கம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், ஆத்தூர் ஊராட்சி, பொய்பாக்கம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 54 மாணவ, மாணவிகள் கல்வி பயில்கிறார்கள். ஏற்கெனவே இப்பள்ளியில் உள்ள இரண்டு கட்டடங்கள் நல்ல நிலையில் உள்ளன. எனவே, புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.*

168—

ஆழ்துளை குழாய் கிணறு அமைத்தல்

வினா எண் 1475—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், சித்தாம்பாடி ஊராட்சி, சித்தாம்பாடி காலனி மயானத்திற்கு சுற்றுச்சுவர், எரிமேடை, ஆழ்துளை குழாய் கிணறு அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், சித்தாம்பாடி ஊராட்சி, சித்தாம்பாடி காலனி மயானத்திற்கு சுற்றுச்சுவர், எரிமேடை, ஆழ்துளை குழாய் கிணறு அமைக்க மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் 2021-2022 ஆம் ஆண்டு திட்டத்தின்மூலம் இப்பணியினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

169—

நூலகக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 1477—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், கைனூர் ஊராட்சி, கைனூர் கிராமத்திற்கு நூலகக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், கைனூர் ஊராட்சி, கைனூர் கிராமத்தில் நூலகக் கட்டடம் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்மூலம் ஏற்கெனவே கட்டப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளதால் புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

170—

சிமெண்ட் சாலை அமைத்தல்

வினா எண் 1478—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2022 மே 6*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், கைனூர் ஊராட்சி, சின்ன கைனூர் ராமசாமி நகர் இரண்டு தெருக்களுக்கு சிமென்ட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், கைனூர் ஊராட்சி, சின்ன கைனூர் ராமசாமி நகர் இரண்டு தெருக்களுக்கு சிமென்ட் சாலை அமைக்க வரும் 2021-2022 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்மூலம் இப்பணியினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

171—

சிமென்ட் சாலை அமைத்தல்

வினா எண் 1481—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், செம்பேடு ஊராட்சி, குருவராஜப்பேட்டை குடோன் தெருவில் சிமென்ட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை. ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், செம்பேடு ஊராட்சி, குருவராஜப்பேட்டை குடோன் தெருவில் ஏற்கெனவே சிமென்ட் சாலை நல்ல நிலையில் உள்ளதால் தற்பொழுது புதிய சாலை அமைக்க அவசியம் ஏற்படவில்லை.

2022 மே 6]

172—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 1482—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், செம்மேடு ஊராட்சி, சோகனூர் கிராமம் முதல் இருளர் காலனி வரை மண் சாலையை தார்ச் சாலையாக அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், செம்மேடு ஊராட்சி, சோகனூர் ஊராட்சி, சோகனூர் கிராமம் முதல் இருளர் காலனி வரை மண் சாலையை ஓர் அடுக்கு ஜல்லி சாலை 2021—2022 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்மூலம் நிர்வாக அனுமதி வரப்பெற்று பணி துவங்கும் நிலையில் உள்ளது.

173—

சிறு பாலம் அமைத்தல்

வினா எண் 1483—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், செம்பேடு ஊராட்சி, விஸ்வநாதபுரம் பகுதி ஆல மரத் தெருவில் சாலை மற்றும் சிறு பாலம் (கல்வெர்ட்) அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், செம்பேடு ஊராட்சி, விஸ்வநாதபுரம் பகுதி ஆல மரத் தெருவில் சாலை மற்றும் சிறு பாலம் (கல்வெர்ட்) ஏற்கெனவே ஊராட்சி பொது நிதி திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. சாலை பணி வரும் 2021-2022 ஆம் ஆண்டில் ஊராட்சி பொது நிதி திட்டத்தின்மூலம் இப்பணியினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

174—

புதிய கட்டடம்

வினா எண் 1486—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், வேடல் ஊராட்சி, வேடல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், வேடல் ஊராட்சி, வேடல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 145 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் ஏற்கெனவே மூன்று கட்டடங்கள் நல்ல நிலையில் உள்ளதால் தற்சமயம் புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

175—

சிமெண்ட் சாலை அமைத்தல்

வினா எண் 1487—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், வேடல் ஒத்தவாடைத் தெருவில் சிமென்ட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், வேடல் ஊராட்சி, வேடல் ஒத்தவாடைத் தெருவில் ஏற்கெனவே சிமென்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளது. எனவே, புதிய சாலை அமைக்க வழிவகை இல்லை.

176—

சிமென்ட் சாலை அமைத்தல்

வினா எண் 1488—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், மேல்பாக்கம் ஊராட்சி கும்பினிப்பேட்டை ராமச்சந்திரா தெருவில் சிமென்ட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், மேல்பாக்கம் ஊராட்சி கும்பினிப்பேட்டை ராமச்சந்திரா தெருவில் ஏற்கெனவே ஒரு பகுதியில் சிமென்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மற்றொரு பகுதியில் சுமார் 200 மீட்டர் சிமென்ட் சாலை 2021-2022 ஆம் ஆண்டில் ஊராட்சி பொது நிதியின்மூலம் இப்பணியினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

[*2022 மே 6*

177—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 1490—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அசமந்தூர் ஊராட்சி, அசமந்தூர் கிராமத்தில் சமுதாயக் கூடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அசமந்தூர் ஊராட்சிக்கு அருகாமையில் உள்ள கீழ்மின்னல் ஊராட்சியில் ஊராட்சியைச் சேர்ந்த சாலைப் பகுதியில் சமுதாயக் கூடம் ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் ஏற்கெனவே கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. அசமந்தூர் கிராமத்தில் சமுதாயக் கூடம் கட்ட அரசுக்குச் சொந்தமான நிலம் இல்லாததால் சமுதாயக் கூடம் கட்ட வழிவகை இல்லை.

178—

சிமெண்ட் சாலை அமைத்தல்

வினா எண் 1491—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அசமந்தூர் ஊராட்சி, அசமந்தூர் பெரிய காலனிக்கு சிமெண்ட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அசமந்தூர் ஊராட்சி, அசமந்தூர் பெரிய காலனியில் ஏற்கெனவே சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்குறிப்பிட்ட பெரிய காலனிக்கு புதியதாக சிமெண்ட் சாலை அமைக்க வழிவகை இல்லை.

179—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 1492—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், பெருமாள்ராஜப்பேட்டை ஊராட்சி, மங்களாபுரம் காலனிக்கு சமுதாயக் கூடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், பெருமாள்ராஜப்பேட்டை ஊராட்சி, மங்களாபுரம் காலனியில் 2,725 மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவ்வூராட்சிக்கு அருகாமையில் 2 கிலோ மீட்டர் தொலைவில் மின்னல் ஊராட்சியை சேர்ந்த சாலை பகுதியில் சமுதாயக் கூடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. எனவே, மங்களாபுரம் காலனிக்கு புதியதாக சமுதாயக் கூடம் கட்டித் தர வழிவகை இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2022 மே 6

180—

பொது வழி அமைத்தல்

வினா எண் 1493—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், நகரிகுப்பம் ஊராட்சி, நகரிகுப்பம் ஆதி திராவிடர் காலனிக்குச் செல்ல பொது வழி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், நகரிகுப்பம் ஊராட்சி, நகரிகுப்பம் ஆதி திராவிடர் காலனிக்குச் செல்ல பொது வழி, தனி நபர்களுக்கு சொந்தமாக பட்டா நிலங்களில் செல்வதால், பொது வழி அமைக்க வழிவகை இல்லை.

181—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 1495—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அசமந்தூர் ஊராட்சி, அசமந்தூர் முதல் வேடல் வரை புதிய தார்ச் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அசமந்தூர் ஊராட்சி, அசமந்தூர் முதல் வேடல் வரை ஏற்கெனவே தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்குறிப்பிட்ட தார்ச் சாலை பழுதடைந்துள்ளதை பழுது நீக்கம் செய்ய 2021—2022 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய பொது திட்டத்தின்மூலம் இப்பணியினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

182—

கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

வினா எண் 1503—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், தண்டலம் ஊராட்சி, மேட்டு நகர் பகுதிக்கு கழிவுநீர்க் கால்வாய் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், தண்டலம் ஊராட்சி, தண்டலம் மேட்டு நகர் பகுதிக்கு கழிவுநீர்க் கால்வாய் அமைக்க வழிவகை இல்லை. இதற்கு மாற்றாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 2021—2022 ஆம் நிதியாண்டில் தனி நபர் உறிஞ்சுகுழி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

183—

சிமெண்ட் சாலை அமைத்தல்

வினா எண் 1505—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

[2022 மே 6

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், தண்டலம் ஊராட்சி, தண்டலம் பாலாஜி நகர் பகுதியில் சிமென்ட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், தண்டலம் ஊராட்சி, பாலாஜி நகர் பகுதியில் சிமென்ட் சாலை அமைக்க வரும் 2022—2023 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்மூலம் பணியினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

184—

ஆழ்துளைக் கிணறு அமைத்தல்

வினா எண் 1507—திரு. சு. ரவி: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், தண்டலம் ஊராட்சி, தண்டலம் கிராமத்தில் உள்ள மகளிர் சுகாதார வளாகத்திற்கு புதிய ஆழ்துளைக் கிணறு மற்றும் மின் மோட்டார் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், தண்டலம் ஊராட்சி, தண்டலம் கிராமத்தில் உள்ள மகளிர் சுகாதார வளாகத்திற்கு ஏற்கெனவே ஆழ்துளைக் கிணறு உள்ளது. ஆழ்துளைக்

2022 மே 6]

கிணற்றிலிருந்து நீரை வெளியேற்றும் நீர்மூழ்கி மின் மோட்டார் பழுதாகி உள்ளதை சரி செய்து பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

185—

சிமெண்ட் சாலை அமைத்தல்

வினா எண் 1508—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, அம்மனூர் சிவன் கோயில் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, அம்மனூர் சிவன் கோயில் தெருவில் சிமெண்ட் சாலை அமைக்க 2021—2022 ஆம் ஆண்டு MGNREGS *திட்டத்தின்மூலம் இப்பணியினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.*

186—

அங்கன்வாடிக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 1519—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், இச்சிபுத்தூர் ஊராட்சி, அய்யந்தாங்கல் கண்டிகையில் அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 மே 6

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், இச்சிபுத்தூர் ஊராட்சி, அய்யந்தாங்கல் கண்டிகை பகுதியில் அங்கன்வாடி மையக் கட்டடம் அமைக்க வரும் 2021-2022 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் பணியினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

187—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 1525—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, மணப்பாக்கம் ஊராட்சி, ஆதி திராவிடர் காலனி பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், மணப்பாக்கம் ஆதி திராவிடர் காலனியில் 194 குடும்பங்களில் சுமார் 912 மக்கள் வசித்து வருகின்றனர். இங்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் முன்மொழிவு தயார் செய்யப்பட்டுள்ளது. தகுந்த நிதி ஆதாரம் கண்டறியப்பட்டு 2021-2022 ஆம் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2022 மே 6]

188—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 1526—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, மணப்பாக்கம் ஊராட்சி, கட்டியம்பாளையம் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், மணப்பாக்கம் ஊராட்சி, கட்டியம்பாளையம் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க கோரப்பட்டுள்ளது. 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திட ரூ.14.00 இலட்சம் மதிப்பில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. தகுந்த நிதியாதாரம் கண்டறியப்பட்டு 2021-2022 ஆம் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

189—

உயர் மின்கோபுர விளக்கு அமைத்தல்

வினா எண் 1529—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, மணப்பாக்கம் ஊராட்சி, கட்டியம்பாளையம் பகுதியில் உயர் மின்கோபுர விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், மணப்பாக்கம் ஊராட்சி, கட்டியம்பாளையம் பகுதியில் 25 எல்.இ.டி. விளக்குகளும், 19 சி.எப். எல். விளக்குகளும் பயன்பாட்டில் உள்ளன. மேற்குறிப்பிட்ட பகுதி பேருந்து நிறுத்தமோ அல்லது மக்கள் அதிகளவு கூடும் பகுதியோ அல்ல என்பதாலும், போதுமான மின் விளக்கு வசதியை இப்பகுதி பெற்றுள்ளதாலும், உயர் மின்கோபுர விளக்கு அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

190—

சமுதாயக் கூடம் அமைத்தல்

வினா எண் 1530—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, மணப்பாக்கம் ஊராட்சியில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின்கீழ் மனு வர பெற்று கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, கட்டியம்பாளையம் பகுதியில் சமுதாயக் கூடம் அமைத்திட ரூ.30.00 இலட்சம் மதிப்பில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மணப்பாக்கம் ஊராட்சி, கட்டியம்பாளையம் குக்கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைத்திட முன்மொழிவு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதால் 2 கி.மீ. தூரமுள்ள அதே ஊராட்சியை சார்ந்த மணப்பாக்கத்தில் சமுதாய நலக் கூடம் அமைக்க வேண்டிய தேவை எழவில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

2022 மே 6]

191—

புதிய ஊராட்சி மன்றக் கட்டடம் அமைத்தல்

வினா எண் 1534—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, சிறுகிராமம் ஊராட்சியில் புதிய ஊராட்சி மன்றக் கட்டடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, சிறுகிராமம் ஊராட்சியில் ஊராட்சி மன்றக் கட்டடம் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டு தற்போது நல்ல நிலையிலுள்ளது. புதியதாக ஊராட்சி மன்றக் கட்டடம் கட்டுவதற்கு தேவை எழவில்லை.

192—

கரும காரிய கூடம் அமைத்தல்

வினா எண் 1535—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, சிறுகிராமம் ஊராட்சியில் காரியக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், சிறுகிராமம் ஊராட்சியில் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் கரும காரியக் கூடம் ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் அமைக்கப்படவுள்ளது. நிர்வாக அனுமதி பெற்று 2021-2022 ஆம் நிதியாண்டில் பணி மேற்கொள்ளப்படும்.

[2022 மே 6

193—

புதிய ஆழ்துளைக் கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 1536—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, சிறுகிராமம் ஊராட்சி, மேற்கு தெருவில் புதிய ஆழ்துளைக் கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், சிறுகிராமம் ஊராட்சி மேற்கு தெருவில் ஆழ்துளைக் கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க கோரப்பட்டுள்ளது. சிறுகிராமம் ஊராட்சி, மேற்கு தெருவில் 457 குடும்பத்தைச் சேர்ந்த 1956 மக்கள் வசித்து வருகின்றனர். சிறுகிராமம் ஊராட்சி பகுதியில் நிலத்தடியில் போதிய நீர் இல்லாமையால் தற்போது அருகிலுள்ள நரிமேட்டுவேளி இடத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு சிறுகிராமம் மேற்குத் தெரு பகுதிக்கு தினசரி காலை மாலை இரு வேளையும் 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின்மூலம் 55 LPCD*—க்கு குறையாமல் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது தட்டுப்பாடின்றி போதுமான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதால் தற்போதைக்கு ஆழ்குழாய்க் கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய தேவை எழவில்லை.*

194—

அங்கன்வாடி மையம் அமைத்தல்

வினா எண் 1539—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) பண்ருட்டி தொகுதி, அங்குசெட்டிப்பாளையம் ஊராட்சி, பழைய ஆதி திராவிடர் காலனியில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், அங்குசெட்டிப்பாளையம் ஊராட்சி, பழைய ஆதி திராவிடர் காலனி பகுதியில் அங்கன்வாடி கட்டடம் பழுதடைந்த நிலையிலுள்ளது. புதியதாக அங்கன்வாடி மையக் கட்டடம் ரூ.9.50 இலட்சம் மதிப்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

195—

காரியக் கூடம் அமைத்தல்

வினா எண் 1542—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, அங்குசெட்டிப்பாளையம் ஊராட்சியில் காரியக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், அங்குசெட்டிப்பாளையம் ஊராட்சியில் காரியக் கூடம் அமைக்கும் பணி ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் மாநில அரசு அல்லது மத்திய அரசின் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்.

[2022 மே 6

196—

தடுப்பணை அமைத்தல்

வினா எண் 1543—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, அங்குசெட்டிப்பாளையம் ஓடை தெருவில் தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், அங்குசெட்டிப்பாளையம் ஓடை தெருவில் தடுப்பணை கட்ட கோரப்பட்டுள்ளது. மேற்படி ஓடைத் தெருவில் 460 குடும்பங்களில், 1,880 மக்கள் வசித்து வருகின்றனர். ஓடைத் தெரு அருகில் தடுப்பணை அமைக்கும்பட்சத்தில் குடியிருப்புக்குள் வெள்ள நீர் புக வாய்ப்புள்ளதால் தடுப்பணை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

197—

குளத்தை தூர்வாருதல்

வினா எண் 1551—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நெய்வேலி தொகுதி, வேகாக்கொல்லை ஊராட்சியில் உள்ள பழமை வாய்ந்த களப்பாற்றிய ஈஸ்வரன் கோயில் குளத்தை தூர்வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், வேகாக்கொல்லை ஊராட்சியில்

2022 மே 6]

உள்ள பழமை வாய்ந்த களப்பாற்றிய ஈஸ்வரன் கோயில் குளத்திற்கு தூர் வாரிட தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வேகாக்கொல்லை ஊராட்சியில் உள்ள களப்பாற்றிய ஈஸ்வரன் கோயில் குளம் 2019-2020 ஆம் நிதியாண்டில் NLC CSR *திட்டத்தில் தூர்வாரப்பட்டுள்ளது.*

198—

சாலை வசதி செய்தல்

வினா எண் 1564—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(*அ*) *தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சி, மதனபுரத்தில் உள்ள அம்மன் கோயிலுக்கு சாலை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?*

(*ஆ*) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(*அ*) *மற்றும்* (*ஆ*) *தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புனித தோமையர் மலை ஊராட்சி ஒன்றியம், முடிச்சூர் ஊராட்சி, மதனபுரத்தில் உள்ள அம்மன் கோயில் சாலை நீர்நிலைப் பகுதியில் உள்ளதால் சாலை வசதி மேற்கொள்ள வழிவகை இல்லை.*

199—

சாலையை சீரமைத்தல்

வினா எண் 1565—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, கஸ்பாபுரம் சாய் தெரு, மூர்த்தி அவென்யூ சாலைகளை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(*ஆ*) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புனித தோமையர் மலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சியில் 320 மீட்டர் நீளமுள்ள கஸ்பாபுரம் சாய் தெரு, மூர்த்தி அவென்யூ சாலையை சீரமைக்க ரூ.19.00 இலட்சம் மதிப்பீடு ஆகிறது. ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் வரும் நிதியாண்டில் பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்படுகிறது.

200—

புதிய நூலகம் அமைத்தல்

வினா எண் 1570—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், சேலம் ஒன்றியம், அய்யம்பெருமாம்பட்டி ஊராட்சிக்கு புதிய நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் ஒன்றியம், அய்யம்பெருமாம்பட்டி ஊராட்சியில் ஏற்கெனவே நூலகம் செயல்பாட்டில் உள்ளது. எனவே, புதிய நூலகம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

201—

குடிநீர்த் தொட்டியைச் சீரமைத்தல்

வினா எண் 1574—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா——*

2022 மே 6]

சேலம் (மேற்கு) தொகுதி, சேலம் ஒன்றியம், மல்லமூப்பம்பட்டி, கக்கன் காலனி காட்டுவளவு பகுதியில் உள்ள பழுதடைந்த குடிநீர்த் தொட்டியைச் சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் (மேற்கு) தொகுதி, சேலம் ஒன்றியம், மல்லமூப்பம்பட்டி, கக்கன் காலனி காட்டு வளவு பகுதியில் உள்ள பழுதடைந்த குடிநீர்த் தொட்டியை இடித்து அப்புறப்படுத்திவிட்டு, புதிய 30,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பணியை ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளலாம். அதற்குப் போதுமான இடவசதியும் உள்ளது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஒன்றிய பொது நிதி ஆகியவற்றிலிருந்து இப்பணிகளை மேற்கொள்ள பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

202—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 1578—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா——*

சேலம் (மேற்கு) தொகுதி, சேலம் ஒன்றியம், தளவாய்பட்டி ஊராட்சி, களர்காடு, மீன்வாயன் தெரு, கோல்காரன் வட்டம் பகுதிகளில் மேட்டூர் குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் (மேற்கு) சட்டமன்ற தொகுதி, தளவாய்பட்டி ஊராட்சி, களர்காடு, மீன்வாயன் தெரு, கோல்காரன் வட்டம் பகுதிகளில் ஏற்கெனவே பொதுக் குடிநீர்

[2022 மே 6

குழாய்மூலம் தேவையான அளவு மேட்டூர் குடிநீர் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

203—

தார்ச் சாலை வசதி ஏற்படுத்துதல்

வினா எண் 1579—திரு. இரா. அருள்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சேலம் ஒன்றியம், தளவாய்பட்டி ஊராட்சி, பெத்தானூர் பகுதியில் தார்ச் சாலை வசதி ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் (மேற்கு) தொகுதி, தளவாய்பட்டி ஊராட்சி, பெத்தானூர் பகுதியில் தார்ச் சாலை ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க இயலும். அதற்கு போதுமான வசதியும் உள்ளது. முன்னுரிமை அடிப்படையில் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் இப்பணியினை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

204—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 1583—திரு. இரா. அருள்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் (மேற்கு) தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், கருக்கல்வாடி ஊராட்சி, எடப்பாடியான் வரை பெரியாண்டிச்சி கோவில் முதல் செட்டி வீடு வரை தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் (மேற்கு) தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், கருக்கல்வாடி ஊராட்சி, எடப்பாடியான் வரை பெரியாண்டிச்சி கோவில் முதல் செட்டி வீடு வரை தார்ச் சாலையாக அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

2022 மே 6]

205—

ஆழ்துளைக் கிணறு அமைத்தல்

வினா எண் 1585—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் (மேற்கு) தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், கருக்கல்வாடி ஊராட்சி, பாலக்குட்டை பகுதியில் புதிய ஆழ்துளைக் கிணறு அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் (மேற்கு) சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், கருக்கல்வாடி ஊராட்சி, பாலக்குட்டை பகுதியில் புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்து 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு தண்ணீர் ஏற்றம் செய்ய மதிப்பீடு சுமார் ரூ.4.00 இலட்சம் ஆகும். இதனால் 1,000 பொதுமக்கள் பயன்பெறுவர். இப்பணியானது 2018—2019 ஆம் ஆண்டு 14-வது நிதிக் குழு மானியத்தில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

206—

சம்ப் மற்றும் பைப்லைன் அமைத்தல்

வினா எண் 1586—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் (மேற்கு) தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், கருக்கல்வாடி ஊராட்சி, சேவகனூர் பகுதியில் சம்ப் மற்றும் பைப்லைன் அமைக்க அரசு முன்வருமா?

[*2022 மே 6*

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கருக்கல்வாடி ஊராட்சி, சேவகனூர் பகுதியில் சம்ப் மற்றும் பைப்லைன் அமைக்க மதிப்பீடு ரூ.9.00 இலட்சம் ஆகும். இதனால் 6 குக்கிராமங்களில் 3,000 பொதுமக்கள் பயன்பெறுவர். இப்பணியானது 2019-2020 ஆம் ஆண்டு 14-வது நிதிக்குழு மானியத்தில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

207—

ஆழ்துளைக் கிணறு அமைத்தல்

வினா எண் 1590—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் (மேற்கு) தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், கருக்கல்வாடி ஊராட்சி, கிருஷ்ணம்புதூர் பகுதியில் புதிய ஆழ்துளைக் கிணறு அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், கருக்கல்வாடி ஊராட்சி, கிருஷ்ணம்புதூர் பகுதியில் மக்கள் தொகை 250 ஆகும். இங்கு ஏற்கெனவே உள்ள ஆழ்துளைக் கிணற்றின்மூலம் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீர் ஏற்றப்பட்டு குடிநீர் விநியோகம் செய்வதே போதுமானதாக உள்ளது. எனவே, இப்பகுதிக்கு புதிய ஆழ்துளைக் கிணறு அமைக்கும் தேவை எழவில்லை.

208—

சுகாதார வளாகத்தினைச் சீரமைத்தல்

வினா எண் 1981—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

சேலம் (மேற்கு) தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், செம்மண்கூடல் ஊராட்சி, எல்லாயூர் பெண்கள் சுகாதார வளாகத்தினைச் சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் (மேற்கு) தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், செம்மண்கூடல் ஊராட்சி, எல்லாயூர் பெண்கள் சுகாதார வளாகத்தினைச் சீரமைக்க சுமார் ரூ.4.00 இலட்சம் தேவை. இப்பணியினை 15-வது நிதிக்குழு மானிய திட்டத்தில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

209—

கம்பி வேலி அமைத்தல்

வினா எண் 1982—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் (மேற்கு) தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், செம்மண்கூடல் ஊராட்சி சுடுகாட்டைச் சுற்றி கம்பி வேலி அமைத்துத்தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், செம்மண்கூடல் ஊராட்சி, ரங்கநாதபுரம் பகுதியில் சுடுகாட்டைச் சுற்றிலும் கம்பி வேலி அமைக்க சாத்தியக்கூறு உள்ளது. சுடுகாட்டைச் சுற்றி 400 மீட்டர் கம்பி வேலி அமைக்க ரூ.7 இலட்சம் மதிப்பீடு ஆகும். இப்பணியினை ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2022 மே 6

210—

ஏரியினை ஆழப்படுத்துதல்

வினா எண் 1983—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் (மேற்கு) தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், செம்மண்கூடல் ஊராட்சி, சின்ன ஏரியினை ஆழப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், செம்மண்கூடல் ஊராட்சியில் சின்ன ஏரியினை 2019—2020 ஆம் ஆண்டு குடிமராமத்து திட்டத்தின்கீழ் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரி கரையினை பலப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது.

211—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 1984—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா——*

சேலம் (மேற்கு) தொகுதி, ஓமலூர் ஒன்றியம், செம்மண்கூடல் ஊராட்சி, அண்ணா நகரில் புதியதாக 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், செம்மண்கூடல் ஊராட்சியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட

2022 மே 6]

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் 2022-2023 ஆம் ஆண்டு ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ் கட்டித் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

212—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 1985—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் (மேற்கு) தொகுதி, ஓமலூர் ஒன்றியம், செம்மண்கூடல் ஊராட்சி, எல்லாயூரில் புதியதாக 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், செம்மண்கூடல் ஊராட்சியில் எல்லாயூர் பெருமாள் கோயில் பகுதியில் சுமார் 60 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்களுக்கு தற்போது காவேரி குடிநீர் சம்பிலிருந்து நேரடியாக குழாய்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இப்பகுதிக்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க சாத்தியக்கூறு உள்ளது. இதற்கு ரூ.9.00 இலட்சம் மதிப்பீடு ஆகும். 2022-2023 ஆண்டு ஜல் ஜீவன் திட்டத்தின்மூலம் இப்பணியினை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

213—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 1995—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2022 மே 6

சேலம் (மேற்கு) தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், கருக்கல்வாடி ஊராட்சி சீரான்காட்டில் புதிய ஆழ்துளைக் கிணறு மற்றும் பைப்லைன் ஏற்படுத்தி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் (மேற்கு) தொகுதி, கருக்கல்வாடி ஊராட்சி சீரான்காட்டில் புதிய ஆழ்துளைக் கிணறு மற்றும் பைப்லைன் ஏற்படுத்தி, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க மதிப்பீடு ரூ.7.00 இலட்சம் செலவாகும். இதனால், 100 குடும்பங்கள் பயன்பெறும். இப்பணியானது 2021-2022 ஆம் ஆண்டு 15-வது நிதிக்குழு மானியத்தில் மேற்கொள்ள பரிசீலிக்கப்படும்.

214—

குடிநீர்க் குழாய் அமைத்தல்

வினா எண் 1998—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் (மேற்கு) தொகுதி, ஓமலூர் ஒன்றியம், உடைந்த பாலம் முதல் சீனிவாச நகர் வரை குடிநீர்க் குழாய் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் (மேற்கு) தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், உடைந்த பாலம் முதல் டால்மியா சீனிவாச நகர் வரை 2020-2021 ஆம் ஆண்டு ஜல் ஜீவன் திட்டத்தின்மூலம் குடிநீர்க் குழாய் அமைக்கும் பணி மேற்கொள்ள பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

2022 மே 6]

215—

மின் விளக்கு அமைத்தல்

வினா எண் 1999—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் (மேற்கு) தொகுதி, ஓமலூர் ஒன்றியம், உடைந்தபாலம் டால்மியா சீனிவாச நகர் பகுதியில் மின் விளக்கு அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் (மேற்கு) சட்டமன்ற தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், வெள்ளக்கல்பட்டி ஊராட்சி, உடைந்த பாலம் பகுதியில் 35 மின் விளக்குகள், டால்மியா சீனிவாச நகர் பகுதியில் 46 மின் விளக்குகள் பொதுமக்களின் கோரிக்கையின்படி பொருத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. பொதுமக்களின் கோரிக்கையின்படி மேலும் புதிதாக 30 தெரு விளக்குகள் அமைக்க சாத்தியக்கூறு உள்ளது. ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் புதிய தெரு விளக்குகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

216—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 2005—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் (மேற்கு) தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், கருக்கல்வாடி ஊராட்சி, கோட்டமேடு பள்ளி அருகில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், கருக்கல்வாடி ஊராட்சி, கோட்டமேடு பள்ளி அருகில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினை சுமார் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் ஆண்டு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் 1,252 பேர் பயனடைவர்.

217—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் பைப்லைன் அமைத்தல்

வினா எண் 2006—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் (மேற்கு) தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், கருக்கல்வாடி ஊராட்சி, வேட்டைக்காரன்புதூர் அருகில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் பைப்லைன் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், கருக்கல்வாடி ஊராட்சி வேட்டைக்காரன்புதூர் பகுதியில் ஏற்கெனவே உள்ள 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மிகவும் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இதனை அப்புறப்படுத்தி, 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, பைப்லைன் அமைக்க மதிப்பீடு ரூ.10.00 இலட்சம் ஆகும். இதனால் 300 பேர் பயன்பெறுவர். இப்பணியினை ஜல் ஜீவன் திட்டத்தின்மூலம் 2022—2023 ஆம் ஆண்டு முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2022 மே 6]

218—

ஆழ்துளைக் கிணறு மற்றும் பைப்லைன் அமைத்தல்

வினா எண் 2008—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் (மேற்கு) தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், கருக்கல்வாடி ஊராட்சி, சேவகனூரில் புதிய ஆழ்துளைக் கிணறு மற்றும் பைப்லைன் அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், கருக்கல்வாடி ஊராட்சி, சேவகனூரில் புதிய ஆழ்துளைக் கிணறு மற்றும் பைப்லைன் அமைக்க மதிப்பீடு ரூ.4.00 இலட்சம் ஆகும். இப்பணியினால் 800 பொதுமக்கள் பயன்பெறுவர். இப்பணியானது 2021-2022 ஆம் ஆண்டு 15-வது நிதிக்குழு மானியத்தில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

219—

ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல்

வினா எண் 2014—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் (மேற்கு) தொகுதி, ஓமலூர் ஒன்றியம், செம்மண்கூடல் ஊராட்சியில் உள்ள 9 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு புதியதாக ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், செம்மண்கூடல் ஊராட்சியில் 1. எல்லாயூர், 2. தென்பழனி

[2022 மே 6

தோப்பு, 3. செம்மண்கூடல் ஆதி திராவிடர் காலனி, 4. எல்லாயூர் அருந்ததியர் காலனி, 5. கந்தம்பிச்சனூர் அருந்ததியர் காலனி, 6. ஆத்துக்காடு, 7. கந்தம்பிச்சனூர், 8. ரங்கநாதபுரம், 9. குயவனூர் ஆகிய 9 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு காவேரி குடிநீர் மட்டுமே வழங்குவதால் ஊராட்சிமூலம் வழங்க புதியதாக ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க சாத்தியக்கூறு உள்ளது. ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க ரூ.45 இலட்சம் மதிப்பீடு ஆகும். 15-வது நிதிக்குழு மானியம் அல்லது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம்மூலம் இப்பணியினை மேற்கொள்ள பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

220—

உயர் மின் விளக்கு கோபுரம் அமைத்தல்

வினா எண் 2015—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் (மேற்கு) தொகுதி, ஓமலூர் ஒன்றியம், செம்மண்கூடல் ஊராட்சியில் ஐந்து இடங்களில் உயர் மின் விளக்கு கோபுரம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் (மேற்கு) சட்டமன்றத் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், செம்மண்கூடல் ஊராட்சியில் 1. எல்லாயூர், 2. கச்சிவள்ளியானூர், 3. செம்மண்கூடல் ஆதி திராவிடர் காலனி, 4. எல்லாயூர் அருந்ததியர் காலனி, 5. கந்தம்பிச்சனூர் அருந்ததியர் காலனி ஆகிய ஐந்து இடங்களில் உயர் மின் விளக்கு கோபுரம் அமைக்க சாத்தியக்கூறு உள்ளது. உயர் மின் விளக்கு கோபுரம் அமைக்க ரூ.35 இலட்சம் மதிப்பீடு ஆகும். இப்பணியினை எதிர்வரும் ஆண்டுகளில் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2022 மே 6]

221—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் பைப்லைன் அமைத்தல்

வினா எண் 2021—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் (மேற்கு) தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், கருக்கல்வாடி ஊராட்சி, கரடூரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் பைப்லைன் அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், கருக்கல்வாடி ஊராட்சியில் மொத்த மக்கள் தொகை 900. தற்போதுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியே இப்பகுதிக்கு போதுமானது. புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் பைப்லைன் அமைக்கும் தேவை எழவில்லை.

222—

புதியதாக பைப்லைன் அமைத்தல்

வினா எண் 2022—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் (மேற்கு) தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், கருக்கல்வாடி ஊராட்சி, மந்திவளவு காளியம்மன் கோயில் அருகில் புதியதாக பைப்லைன் அமைத்து தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் (மேற்கு) சட்டமன்ற தொகுதி, கருக்கல்வாடி ஊராட்சி, மந்திவளவு காளியம்மன் கோயில் அருகில்

[2022 மே 6

புதியதாக பைப்லைன் அமைக்கும் பணியானது ஒன்றிய பொது நிதியில் 2021-2022 ஆம் ஆண்டு ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

223—

அங்கன்வாடி மையம் ஏற்படுத்துதல்

வினா எண் 2024—திரு. இரா. அருள்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் (மேற்கு) தொகுதி, ஓமலூர் ஒன்றியம், வெள்ளக்கல்பட்டி ஊராட்சி, தாழம்பூ பகுதியில் அங்கன்வாடி மையம் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் (மேற்கு) சட்டமன்ற தொகுதி, வெள்ளக்கல்பட்டி ஊராட்சி, தாழம்பூ நகரில் சுமார் 1 கி.மீ. தொலைவில் உள்ள சீனிவாசா நகரில் ஏற்கெனவே அங்கன்வாடி மையம் செயல்பட்டு வருகிறது. இருப்பினும், தாழம்பூ நகரில் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் அங்கன்வாடி மையம் கட்டித்தர முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

224—

தார்ச் சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 2025—திரு. இரா. அருள்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் (மேற்கு) தொகுதி, ஓமலூர் ஒன்றியம், வெள்ளக்கல்பட்டி ஊராட்சி, தாழம்பூ நகரில் தார்ச் சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் (மேற்கு) சட்டமன்ற தொகுதி, வெள்ளக்கல்பட்டி ஊராட்சி, கிழாக்காடு முதல் தாழம்பூ நகர் வரை தார்ச் சாலை 900 மீட்டர் உள்ளது. தற்போது சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. மேற்படி தார்ச் சாலை பணியினை ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில், ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

225—

புதிய நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 2029—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் (மேற்கு) தொகுதி, ஓமலூர் ஒன்றியம், வெள்ளக்கல்பட்டி ஊராட்சி தாழம்பூ நகரில் புதிய நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் (மேற்கு) தொகுதி, ஓமலூர் ஒன்றியம், வெள்ளக்கல்பட்டி ஊராட்சி தாழம்பூ நகரில் ஏற்கெனவே 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது. இது தற்போது பழுதடைந்துள்ளது. எனவே, தாழம்பூ நகரில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டவேண்டிய தேவை உள்ளது. புதிதாக கட்டுவதற்கு ரூ.13.00 இலட்சம் தேவை. இதன்மூலம் 430 பொதுமக்கள் பயன்பெறுவார்கள். இப்பணியினை 15-வது நிதிக்குழு மானியத் திட்டத்தில் மேற்கொள்ள பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

[2022 மே 6

226—

கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

வினா எண் 2031—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் (மேற்கு) தொகுதி, ஓமலூர் ஒன்றியம், டால்மியா சீனிவாசா நகர் உடைந்த பாலம் பகுதியில் கழிவுநீர்க் கால்வாய் அமைத்துத்தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

டால்மியா சீனிவாசா நகர் பகுதியில் 2020-2021-ம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் ரூ.24.00 இலட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர்க் கால்வாய் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதன்மூலம் சுமார் 400 பொதுமக்கள் பயன்பெறுவார்கள்.

227—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 2122—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் (மேற்கு) தொகுதி, அயோத்தியாபட்டணம் ஒன்றியம், எம்.பாலப்பட்டி ஊராட்சி, பிள்ளையார் கோவில் தபால்காரர் காடு, காளியம்மன் கோவில், கள்ளக்குறிச்சியார் தோட்டம், வேம்பரசு தோட்டம் பகுதிகளில் தார்ச் சாலை அமைத்துத்தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் (மேற்கு) தொகுதி, அயோத்தியாபட்டணம் ஒன்றியம், எம்.பாலப்பட்டி ஊராட்சி, பிள்ளையார் கோவில் தபால்காரர் காடு, காளியம்மன் கோவில், கள்ளக்குறிச்சியார் வட்டம் வரை உள்ள சாலை (R-26) 1100 மீ பழுதடைந்துள்ளது. இச்சாலையினை

2022 மே 6]

புதுப்பிக்க ரூ.35.00 இலட்சம் ஒதுக்கீடு தேவைப்படுகிறது. எனவே இச்சாலையினை ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

228—

சுய உதவிக்குழுக்களுக்கு வட்டி சலுகை

வினா எண் 2127—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2021-2022 ஆம் நிதியாண்டிலிருந்து சுய உதவிக் குழுக்களுக்கு அனைத்து வங்கிகள் (தேசியமயமாக்கப்பட்ட வங்கி மற்றும் கூட்டுறவு வங்கிகள்) மூலம் வழங்கப்படும் வங்கிக்கடனை 4 சதவீத ஆண்டு வட்டியில் வழங்கிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் 2013-14 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியுள்ள, வட்டி மானியத் திட்டத்தின்கீழ், தமிழகத்தில் தருமபுரி, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி மற்றும் திண்டுக்கல் ஆகிய 9 மாவட்டங்களில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் ரூ.3 இலட்சம் வரை பெற்ற கடன் ஆண்டுக்கு வெறும் 7 சதவீத வட்டி வீதத்தில் வழங்கப்படுகிறது. வங்கிகளின் பொதுவான வட்டி வீதமான 12 முதல் 12.5 சதவீதத்தைவிட இது குறைவாகும். மேலும், தவணையை தவறாமல் உரிய காலக்கெடுவுக்குள் செலுத்தும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மேற்படி 7 சதவீத வட்டியிலிருந்து மேலும் 3 சதவீத வட்டி மானியம் வழங்கப்படுகிறது. இதனடிப்படையில் 4 சதவீத நிகர் வட்டியாக மட்டுமே இக்குழுக்கள் வங்கிகளுக்கு செலுத்தவேண்டும்.

இதர 28 மாவட்டங்களில், வங்கிகளின் பொதுவான வட்டி விகிதமான 12.5 சதவீதத்திலிருந்து 5.5 சதவீத வட்டி மானியம் வழங்கப்பட்டு, 7 சதவீத வட்டித் தொகை மட்டுமே செலுத்தவேண்டும். மேற்குறிப்பிட்டவாறு மகளிர் சுய உதவிக் குழுக்கள் வட்டி மானியத் திட்டம் ஏற்கெனவே சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

229—

கான்கிரீட் வடிகால் பாதை அமைத்தல்

வினா எண் 2233—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *திருவையாறு தொகுதி, ஆலக்குடி ஊராட்சி, ஆலக்குடி ரயில்வே கேட் முதல் மூன்று கண்மாய் வரை கான்கிரீட் வடிகால் பாதை அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், ஆலக்குடி ஊராட்சியில் ரயில்வே கேட் முதல் மூன்று கண்மாய் வரை உள்ள மொத்த நீளம் 750 மீட்டர் ஆகும். இந்த வடிகால் வசதியானது ரயில்வே துறை கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் செயல்படுத்தப்பட வேண்டியுள்ளது. எனவே, ரயில்வே துறையின் தடையின்மை சான்று கிடைக்கப் பெற்ற பின் ரூ.52.50 இலட்சம் மதிப்பில் இப்பணியினை செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

230—

தடுப்புச் சுவர் கட்டுதல்

வினா எண் 2234—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *திருவையாறு தொகுதி, கடுவெளி ஊராட்சி, மேலபுனவாசல், கல்லறைமேடு தடுப்புச் சுவர் கட்ட அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, கடுவெளி ஊராட்சி, மேலபுனவாசல், கொள்ளிட கரை சாலை சுமார் 2 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்து ஆதி திராவிடருக்கு சுடுகாடும், கிறிஸ்துவ ஆதி திராவிடருக்கு இடுகாடும் தனித்தனியே உள்ளது. இம்மயானத்திற்கு தண்ணீர் வசதி, சாலை வசதி, செய்துதரப்பட்டுள்ளன. அருகில் குடியிருப்பு ஏதும் இல்லை. எனவே, தடுப்புச்சுவர் கட்ட அவசியம் ஏழவில்லை.

231—

சுகாதார வளாகம் கட்டுதல்

வினா எண் 2235—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, கடுவெளி ஊராட்சி, மேலபுனவாசல் கிராமத்தில் சுகாதார வளாகம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, கடுவெளி ஊராட்சி, மேலபுனவாசல் கிராமத்தில் ராஜபுரத்தில் ஏற்கெனவே உள்ள மகளிர் சுகாதார வளாகம் பழுதடைந்த நிலையில் உள்ளது. இதனை ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் வரும் நிதியாண்டில் சீர்செய்யும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

232—

புதிய குடிநீர் மேல்நிலைத் தொட்டி அமைத்தல்

வினா எண் 2236—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2022 மே 6

(அ) திருவையாறு தொகுதி, கடுவெளி ஊராட்சி, மேலபுனவாசலில் புதிய குடிநீர் மேல்நிலைத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு ஊராட்சி ஒன்றியம், கடுவெளி ஊராட்சியில் ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ் 2021—2022 ஆம் ஆண்டில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

233—

ஆக்கிரமிப்பை அகற்றுதல்

வினா எண் 2238—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, கடுவெளி ஊராட்சி, ஜெபமாலைபுரம் சாலை ஆக்கிரமிப்பை அகற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, கடுவெளி ஊராட்சி, ஜெபமாலைபுரம் சாலையினை வருவாய்த் துறைமூலம் அளவீடு செய்து ஆக்கிரமிப்பினை அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2022 மே 6]

234—

தார்ச் சாலையாக மாற்றுதல்

வினா எண் 2241—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, பூதலூர்—கெங்கை சமுத்திரம் சாலையை தார்ச் சாலையாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, பூதலூர் ஊராட்சி ஒன்றியம், கோவில்பத்து ஊராட்சி நிலையில் உள்ள பூதலூர்—கெங்கை சமுத்திரம் இணைப்பு தார்ச் சாலை பழுதடைந்துள்ளது. இதன் மொத்த நீளம் 1020 மீட்டர். இச்சாலையை புனரமைக்க மதிப்பீடு ரூ.25,00,000/— ஆகும். இச்சாலையை புனரமைப்பதால் 1800 மக்கள் பயனடைவார்கள். எதிர்வரும் நிதியாண்டில் சாலைகளை பராமரிக்கும் திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் இச்சாலையை சரிசெய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

235—

இணைப்புச் சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 2242—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, வேப்பங்குடி பாலம் முதல் தொண்டராயன்பாடி இணைப்புச் சாலை பழுதடைந்துள்ளதை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, பூதலூர் ஊராட்சி ஒன்றியம், கடம்பங்குடி ஊராட்சி வேப்பங்குடி பாலம் முதல் தொண்டராயன்பாடி இணைப்பு தார்ச் சாலை பழுதடைந்துள்ளது. இதன் மொத்த நீளம் 1020 மீட்டர். இச்சாலையை புனரமைக்க மதிப்பீடு ரூ.27,50,000/— ஆகும். இச்சாலையை புனரமைப்பதால் 448 மக்கள் பயனடைவார்கள். எதிர்வரும் நிதியாண்டில் சாலைகளை பராமரிக்கும் திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் இச்சாலை சரிசெய்து தரப்படும்.

236—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 2245—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, காதாட்டிபட்டி—துருசுப்பட்டி சாலை பழுதடைந்துள்ளதை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, பூதலூர் ஊராட்சி ஒன்றியம், பாளையப்பட்டி வடக்கு ஊராட்சி, காதாட்டிபட்டி—துருசுப்பட்டி இணைப்பு தார்ச் சாலை பழுதடைந்துள்ளது. இதன் மொத்த நீளம் 1940 மீட்டர். இச்சாலையை புனரமைக்க மதிப்பீடு ரூ.38,00,000/— ஆகும். இச்சாலையை புனரமைப்பதால் 1255 மக்கள் பயனடைவார்கள். எதிர்வரும் நிதியாண்டில் சாலைகளைப் பராமரிக்கும் திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் இச்சாலை சரி செய்து தரப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2022 மே 6]

237—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 2271—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், தேவனாஞ்சேரி ஊராட்சியில் கலைஞர் நகரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், தேவனாஞ்சேரி ஊராட்சியில் சுமார் 2991 பேர் வசித்து வருகின்றனர். இவ்வூராட்சியில் 2020—21 ஆம் நிதியாண்டில் ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு வருகிறது. இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டவுடன் அருகில் உள்ள கலைஞர் நகருக்கு குடிநீர்த் தேவை சீர் செய்யப்படும் என்பதால் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் அவசியம் ஏற்படவில்லை.*

238—

நடைபாலத்திற்கு அணுகு சாலை அமைத்தல்

வினா எண் 2274—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *கும்பகோணம் தொகுதி, மஞ்சமாவடி அரசதுறை இணைக்கும் பழவாற்றின் குறுக்கே நடைபாலத்திற்கு அணுகு சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், கொரநாட்டுகருப்பூர் ஊராட்சியில் சுமார் 8696 பேர் வசித்து வருகின்றனர். இவ்வூராட்சியில் மஞ்சமாவடி அரசதுறை பழவாற்றின் குறுக்கே நடைபாலத்திற்கு தமிழ்நாடு ஊரக சாலை மேம்பாட்டு திட்டம் 2015-16 ஆண்டில் ரூ.31.82 இலட்சம் மதிப்பீட்டில் அணுகுசாலை அமைக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.

239—

அங்கன்வாடி மையங்களை புதுப்பித்தல்

வினா எண் 2280—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதியில் உள்ள ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள், துவக்கப் பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களை புதுப்பித்துத் தந்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதியில் உள்ள ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் மற்றும் துவக்கப் பள்ளிகளில் பழுதடைந்த பள்ளிக் கட்டடங்களை மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (RCSIDS) மூலமாகவும், அங்கன்வாடி மையங்களை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் (MGNREGS) மூலமாகவும், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மூலம் ஆய்வு மேற்கொண்டு, வரும் நிதியாண்டில் புதுப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

2022 மே 6]

240—

தொகுதி மேம்பாட்டு நிதி உயர்த்துதல்

வினா எண் 2289—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை ரூ.10 கோடியாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *தற்போது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.3 கோடி அளவில் உள்ளது. ரூ.10 கோடியாக உயர்த்துவது குறித்து தற்போதைய 2021—2022 ஆம் ஆண்டு வழிகாட்டு நெறிமுறைகளில் வழிவகை இல்லை.*

241—

ஏரி தூர்வாருதல்

வினா எண் 2295—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *சேலம், ஓமலூர் ஒன்றியம், செம்மண்கூடல் ஊராட்சி, சின்ன ஏரியினை தூர்வாரி ஆழப்படுத்த அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், செம்மண்கூடல் ஊராட்சி, சின்ன ஏரி 2019-2020 ஆம் ஆண்டு குடிமராமத்து திட்டத்தின்கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் போதிய அளவில் தூர்வாரி ஆழப்படுத்தப்பட்டுள்ளது.*

[2022 மே 6

242—

தெரு விளக்கு வசதி செய்தல்

வினா எண் 2304—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், சிதம்பரநாதபுரம் ஊராட்சி, புதுத் தெருவில் தெரு விளக்கு வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், சிதம்பரநாதபுரம் ஊராட்சியில், புதுத்தெருவில் 70 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இத்தெருவிலுள்ள 10 தெரு விளக்குகளும் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன.

243—

குடிநீர் வசதி செய்தல்

வினா எண் 2305— முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், சிதம்பரநாதபுரம் ஊராட்சியில் கருப்பட்டிச்சேரி பிரதான சாலையில் வசிப்பவர்களுக்கு சீராக குடிநீர் வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், சிதம்பரநாதபுரம் ஊராட்சியில், கருப்பட்டிச்சேரி பிரதான சாலையில் 126 குடும்பங்கள் உள்ளன.

2022 மே 6]

ஜல் ஜீவன் மிஷன் 2020-21 ஆம் ஆண்டு திட்ட நிதியில் ரூ.26.96 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் இணைப்பு வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் டிசம்பர் 2021-க்குள் முடிக்கப்பட்டு சீரான குடிநீர் வழங்கப்படும்.

244—

சாலையைச் செப்பனிடுதல்

வினா எண் 2306—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், சிதம்பரநாதபுரம் ஊராட்சியில் சுத்தலாஞ்சேரி காயிதே மில்லத் தெரு சாலையைச் செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், சிதம்பரநாதபுரம் ஊராட்சியில், சுத்தலாஞ்சேரி காயிதே மில்லத் தெரு சாலையைச் செப்பனிடும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

245—

நாய், பன்றிகளை அப்புறப்படுத்துதல்

வினா எண் 2307—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், சிதம்பரநாதபுரம் ஊராட்சியில் தத்துவாஞ்சேரி கிராமத்தில் அதிக அளவு உள்ள நாய் மற்றும் பன்றிகளை அப்புறப்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 மே 6

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர், திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், சிதம்பரநாதபுரம் ஊராட்சியில் பொது இடங்களில் திரியும் நாய்களை இனவிருத்தி கட்டுப்பாடு செய்து உரிய பாதுகாப்பு நிலையங்களில் ஒப்படைத்திட ஊராட்சியின்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

246—

குடிநீர் வசதி செய்து தருதல்

வினா எண் 2311—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், குலசேகர நல்லூர் ஊராட்சியில், காமாட்சிபுரம் பள்ளிக்கூடம் தெரு, அக்ரஹாரத்தில் குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், குலசேகர நல்லூர் ஊராட்சி, காமாட்சிபுரம், பள்ளிக்கூடத் தெரு, அக்ரஹாரத்தில் 88 குடும்பங்கள் வசித்து வருகின்றன. காமாட்சிபுரம் பள்ளிக்கூடத்தெரு அக்ரஹாரத்தில் உள்ள 88 வீடுகள் உட்பட குலசேகரநல்லூர் ஊராட்சியில் உள்ள அனைத்து 595 குடும்பங்களுக்கும் ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.18.38 இலட்சத்தில் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு சீராக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

2022 மே 6]

247—

சாலையைச் செப்பனிடுதல்

வினா எண் 2312—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், குலசேகர நல்லூர் ஊராட்சியில் கோணுழாம்பள்ளம் கிராம கீழத் தெரு சாலையைச் செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், குலசேகர நல்லூர் ஊராட்சியில் கோணுழாம்பள்ளத்தில் 20 குடும்பங்கள் வசித்து வருகின்றன. அவர்கள் பயனடையும் வகையில் 150 மீட்டர் நீளம் உள்ள மேற்படி சாலையை ரூ.3.75 இலட்சம் மதிப்பீட்டில் ஈரடுக்கு கப்பிசாலையாக நடப்பாண்டில் (2021-22) 15-வது நிதிக்குழு மானிய நிதித் திட்டத்தில் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.*

248—

புதிய சாலை அமைத்தல்

வினா எண் 2313—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், குலசேகர நல்லூர் ஊராட்சியில் தட்சினப்பள்ளம் கிராம தெருச் சாலையை புதிய சாலையாக அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், குலசேகரநல்லூர் ஊராட்சியில், தட்சினப்பள்ளம் குடியிருப்பில் உள்ள தெருவில் 235 மீட்டர் நீளமுள்ள ஓரடுக்கு தார்ச் சாலையினை மேம்படுத்திட 15-வது நிதிக் குழு மானிய திட்டத்தின்கீழ் ரூ.4.51 இலட்சம் மதிப்பீட்டில் 2019-2020 ஆம் நிதியாண்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மேலும், இப்பணியானது, அக்டோபர் 2021-க்குள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

249—

புதிய சிமென்ட் சாலை அமைத்தல்

வினா எண் 2315—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், திருமாந்துறை ஊராட்சி வடக்குத் தெருவில் புதிய சிமென்ட் சாலை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், குலசேகர நல்லூர் ஊராட்சியில், கோணுழாம்பள்ளம் ஊராட்சியில் 20 குடும்பங்கள் வசித்து வருகின்றன. அவர்கள் பயனடையும் வகையில் 150 மீட்டர் நீளம் உள்ள மேற்படி சாலையை ரூ.3.75 இலட்சம் மதிப்பீட்டில் ஈரடுக்கு கப்பிச் சாலையாக நடப்பாண்டில் (2021-2022) 15-வது நிதிக்குழு மானிய நிதி திட்டத்தில் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2022 மே 6]

250—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 2317—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், கதிராமங்கலம் ஊராட்சி, நடுவெளி தெரு சாலையை தார்ச் சாலையாக அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், கதிராமங்கலம் ஊராட்சி, நடுவெளி தெருவில் 270 குடும்பங்கள் வசிக்கின்றன. இத்தெருவின் மொத்த நீளம் 250 மீட்டர் ஆகும். ஊரக சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எதிர்வரும் நிதியாண்டில் ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் முன்னுரிமை அடிப்படையில் தார்ச் சாலை அமைக்கப்படும்.

[*2022 மே 6*

பட்டியல் 4

1—

மேல்நிலை குடிநீர்த் தொட்டி

வினா எண் 2319—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், அத்திப்பாக்கம் ஊராட்சி, வடக்கு புதுத் தெருவில் சிறிய மேல்நிலை குடிநீர்த் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், அத்திப்பாக்கம் ஊராட்சியில் தற்போதைய மக்கள்தொகை 3,110 ஆகும். இவ்வூராட்சியில் மொத்தம் 6 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இயங்குகின்றன. ஒரு நாளைக்கு ஒரு முறை இயக்கத்தில் 1,80,000 லிட்டர் குடிநீர் கொடுக்கப்படுகிறது. ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 58 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. தற்பொழுது அத்திப்பாக்கம் வடக்கு புதுத் தெருவில் உள்ள 60 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் சிறிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ரூ.3.25 இலட்சம் மதிப்பீட்டில் “ஜல் ஜீவன்” திட்டத்தின்கீழ் அமைத்துத்தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 2320—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், நெய்குப்பை ஊராட்சி, பாலூர் கிராமத்தில் தார்ச் சாலை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், நெய்குப்பை ஊராட்சி, பாலூர் கிராமத்தில் 110 குடும்பங்கள் வசிக்கின்றன. 450 மீட்டர் நீளமுள்ள இந்த தார்ச் சாலை பழுதடைந்த நிலையில் உள்ளது. நடப்பாண்டில் (2021—2022) இந்தச் சாலையை ஊரக சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் முன்னுரிமை அடிப்படையில் எடுத்து மறு சீரமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3—

தெரு விளக்கு வசதி

வினா எண் 2321—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், திருவள்ளியங்குடி ஊராட்சி, சாத்தனூர் மேலத் தெருவில், தெரு விளக்கு வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், திருவள்ளியங்குடி ஊராட்சி, சாத்தனூர் மேலத் தெருவில் உள்ள 5 தெரு விளக்குகள் அனைத்தும் நல்ல நிலையில் பயன்பாட்டில் உள்ளன. ஆகையால், திருவள்ளியங்குடி ஊராட்சி சாத்தனூர் மேலத் தெருவில் புதிதாக தெரு விளக்கு வசதி ஏற்படுத்திட அவசியம் எழவில்லை.

4—

மேல்நிலை குடிநீர்த் தொட்டி

வினா எண் 2330—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், ச.புதூர் ஊராட்சியில் தெற்கு மாதா கோயில் தெருவில் சிறிய மேல்நிலை குடிநீர்த் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், ச.புதூர் ஊராட்சியில், தெற்கு மாதா கோயில் தெரு மற்றும் வடக்கு மாதா கோயில் தெருவிற்கு பொதுவாக 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைந்துள்ளது. இந்த ஊராட்சியில் 2020-2021 ஆம் ஆண்டு 'ஜல் ஜீவன் மிஷன்' திட்டத்தின்கீழ் ரூ.46.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு புதியதாக 1,116 குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகள் முடிவுற்றபின் மாதா கோயில் தெருவில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு மூலம் தட்டுப்பாடின்றி குடிநீர் வழங்கப்படும். எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட வேண்டிய அவசியம் தற்போது ஏற்படவில்லை.

5—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 2332—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், மஞ்சமல்லி ஊராட்சியில் மாதா கோயில் தெரு சாலையை புதிய தார்ச் சாலையாக அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், மஞ்சமல்லி ஊராட்சியில் உள்ள மாதா கோயில் தெருவில் 190 மீட்டர் நீளமுள்ள சிமெண்ட் சாலை பழுதடைந்த நிலையில் உள்ளது. இத்தெருவில் 170 மக்கள் வசிக்கின்றனர். இந்நிதியாண்டில் 2021—2022, ஊராட்சி ஒன்றிய பொது நிதியின்கீழ் ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்படி சிமெண்ட் சாலையை முன்னுரிமை அடிப்படையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6—

மேல்நிலை குடிநீர்த் தொட்டி

வினா எண் 2333—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், மஞ்சமல்லி ஊராட்சி, மாரியம்மன் கோயில் தெருவில் சிறிய மேல்நிலை குடிநீர்த் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், மஞ்சமல்லி ஊராட்சியில் மாரியம்மன் கோயில் தெருவிற்கு அருகில் ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைந்துள்ளது. 2020—2021 ஆம் ஆண்டு 'ஜல் ஜீவன் மிஷன்' திட்டத்தின்கீழ் ரூ.34.96 இலட்சம் மதிப்பீட்டில் இவ்வூராட்சியில் மாரியம்மன் கோயில் தெருவில் உள்ள 30 குடும்பங்களையும் சேர்த்து மொத்தம் 580 குடும்பங்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாத இறுதிக்குள் அனைத்துப்

[2022 மே 6

பணிகளும் முடிக்கப்பட்டு, மாரியம்மன் கோயில் தெருவில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்புமூலம் சீராக குடிநீர் வழங்கப்படும். எனவே, திருவிடைமருதூர் ஒன்றியம், மஞ்சமல்லி ஊராட்சியில், மாரியம்மன் கோயில் தெருவில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட வேண்டிய அவசியம் தற்போது ஏற்படவில்லை.

7—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 2334—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், மஞ்சமல்லி ஊராட்சியில் கிள்ளுகுடி தெற்கு தெரு சாலையை, தார்ச் சாலையாக அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், மஞ்சமல்லி ஊராட்சியில் உள்ள கிள்ளுகுடி தெற்கு தெரு சாலையின் மொத்த நீளம் 1,250 மீ. இந்தத் தெருவில் 184 எண்ணிக்கையிலான மக்கள் வசிக்கின்றனர். இந்தச் சாலையில் குடியிருப்பு அமைந்துள்ள பகுதி வரை 780 மீட்டர் நீளத்திற்கு ரூ.19.04 இலட்சம் மதிப்பில் 2019—2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊரக சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தார்ச் சாலை அமைக்கப்பட்டு நல்ல நிலையில் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. மீதமுள்ள 470 மீட்டர் சாலை மயானத்திற்கு செல்லும் பாதையாக உள்ளது. இச்சாலையை வரும் நிதியாண்டில் தமிழ்நாடு ஊரக சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுத்து செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2022 மே 6]

8—

குளம் தூர்வாருதல்

வினா எண் 2335—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், தேப்பெருமாநல்லூர் ஊராட்சி, பாரதி நகர் பகுதியில் உள்ள குளத்தினை தூர்வாரி, செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், தேப்பெருமாநல்லூர் ஊராட்சி, பாரதி நகர் பகுதியில் அரசுக்கு சொந்தமான குளம் ஏதும் இல்லை. ஆகையால், மேற்காண் ஊராட்சியில் பாரதி நகர் பகுதியில் தூர்வாரும் பணி பற்றிய கேள்வி எழவில்லை.

9—

குளம் தூர்வாருதல்

வினா எண் 2338—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், தேப்பெருமாநல்லூர் ஊராட்சியில், சாமிராஜ் நகர் பகுதியில் உள்ள குளத்தினை தூர்வாரி செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், தேப்பெருமாநல்லூர் ஊராட்சி, சாமிராஜ் நகர்

பகுதியில் உள்ள 5 குளங்களில், 4 குளங்கள் 2019-2020 ஆம் ஆண்டு குடிமராமத்து பணிகள் திட்டத்தின்கீழ் தூர்வாரப்பட்டன. மீதம் உள்ள காமராஜ் நகர் எல்லைகுளத்தில் நடப்பாண்டில் (2021-2022) ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்படும்.

10—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 2340—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், தேப்பெருமாநல்லூர் ஊராட்சி, சாமிராஜ் நகர் தெரு சாலையை தார்ச் சாலையாக அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், தேப்பெருமாநல்லூர் ஊராட்சி, சாமிராஜ் நகர் தெரு சாலையை தார்ச் சாலையாக மாற்றிட 2019-2020 ஆம் ஆண்டில் 505 மீட்டர் நீளத்திற்கு ரூ.8.57 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்திட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியானது 15-9-2021-க்குள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

11—

மேல்நிலை குடிநீர்த் தொட்டி

வினா எண் 2343—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், கருப்பூர் ஊராட்சியில் ஆதி திராவிடர் தெருவில் சிறிய மேல்நிலை குடிநீர்த் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், கருப்பூர் ஊராட்சியில் ஆதி திராவிடர் தெருவில் உள்ள 123 வீடுகள் உட்பட 562 வீடுகளுக்கும் 2020-2021 ஆம் நிதியாண்டில் ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ் ரூ.27.39 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் தெருவில் உள்ள 123 வீடுகளுக்கும் இணைப்பு வழங்கப்பட்டு சீராக அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திடும் அவசியம் தற்போது எழவில்லை.

12—

ஆழ்துளைக் கிணறு மற்றும் பைப்லைன் அமைத்தல்

வினா எண் 2528—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, திருநிலை ஊராட்சி, கொடிப்பள்ளம் கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு மற்றும் பைப்லைன் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி சட்டமன்றத் தொகுதியைச் சார்ந்த சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திருநிலை ஊராட்சி, கொடிப்பள்ளம் குக்கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து

2020-2021 ஆம் ஆண்டு ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் ஆழ்துளைக் கிணறு மற்றும் பைப்லைன் அமைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. எனவே, புதிய ஆழ்துளைக் கிணறு மற்றும் பைப்லைன் அமைக்க தேவை எழவில்லை.

13—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 2570—திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் தொகுதி, கந்திலி கிராமம், குரும்பேரி பாணக்காரன் வட்டம் முதல் பெரிய ஏரிக்கரை வரை சாலையினை அகலப்படுத்தி, தடுப்புச் சுவர் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தொகுதி கந்திலி ஊராட்சி ஒன்றியம், குரும்பேரி பாணக்காரன் வட்டம் முதல் பெரிய ஏரிக்கரை வரை உள்ள சாலை, பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. பொதுப் பணித் துறை அனுமதி பெறப்படும்பட்சத்தில் சாலையினை அகலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

14—

உயர் கோபுர சோலார் விளக்கு அமைத்தல்

வினா எண் 2611—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, கீழிருப்பு ஊராட்சி, ஆதி திராவிடர் காலனியில் உயர் கோபுர சோலார் விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், கீழிருப்பு ஊராட்சி, ஆதி திராவிடர் காலனியில் உயர் கோபுர சோலார் விளக்கு கோரப்பட்டுள்ளது. கீழிருப்பு ஊராட்சி, ஆதி திராவிடர் காலனி பகுதியில் எல்.இ.டி. விளக்கு—19, சி.எப்.எல்-6 ஆகியவை பயன்பாட்டில் உள்ளன.

மேற்குறிப்பிட்ட பகுதி, பேருந்து நிறுத்தமோ அல்லது மக்கள் அதிகளவு கூடும் பகுதியோ அல்ல என்பதாலும், போதுமான மின் விளக்கு வசதியை இப்பகுதி பெற்றுள்ளதாலும் உயர் கோபுர சோலார் மின் விளக்கு அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

15—

ஆழ்துளைக் கிணறு அமைத்தல்

வினா எண் 2620—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, விசூர் ஊராட்சி, உப்பு தண்ணீர் வரும் ஆழ்துளைக் கிணற்றுக்கு பதில் புதிய ஆழ்துளைக் கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், விசூர் ஊராட்சி, மேட்டுத் தெருவில் ஆழ்குழாய் கிணற்றிலிருந்து வரும் தண்ணீர் உப்பாக உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது, விசூர் ஊராட்சியில், 14—வது நிதிக் குழு மானியத் திட்டத்தின்கீழ் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டு வருகிறது. தற்போது புதியதாக அமைக்கப்பட்டு வரும் ஆழ்குழாய் கிணற்றிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்படும்.

SATYAMEVA JAYATE / TRUTH ALONE TRIUMPHS

[2022 மே 6

16—

உயர் கோபுர சோலார் மின் விளக்கு அமைத்தல்

வினா எண் 2624—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, சிலம்பிநாதன் பேட்டை ஊராட்சி, காலனி பகுதியில் உயர் கோபுர சோலார் மின் விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், சிலம்பிநாதன்பேட்டை ஊராட்சி காலனி பகுதியில் 32 மின் விளக்குகள் பயன்பாட்டில் உள்ளன. மேற்குறிப்பிட்ட பகுதி, பேருந்து நிறுத்தமோ அல்லது மக்கள் அதிகளவு கூடும் பகுதியோ அல்ல என்பதாலும், போதுமான மின் விளக்கு வசதியை இப்பகுதி பெற்றுள்ளதாலும் உயர் கோபுர சோலார் மின் விளக்கு அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

17—

நூலகத்திற்குக் கட்டடம்

வினா எண் 2628—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, புலியூர் ஊராட்சி, வசனைங்குப்பம் நூலகத்திற்கு புதிய கட்டடம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புலியூர் ஊராட்சியில் ஏற்கெனவே அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் நூலகக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. அந்த நூலகக் கட்டடம் பழுதடைந்துள்ளதால், ரூ.95,000/- மதிப்பீட்டில் சீரமைக்க

2022 மே 6]

உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி நூலகக் கட்டடம் சீரமைக்கப்பட்டபின் வசனைங்குப்பம் பகுதியைச் சார்ந்த மக்கள் இந்த நூலகத்தினை பயன்படுத்திக் கொள்ளலாம். எனவே, புதிய நூலகக் கட்டடம் அமைக்க வேண்டிய தேவை எழவில்லை.

18—

ஓடை தூர்வாருதல்

வினா எண் 2634—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, சிறுதொண்டமாதேவி தண்ணீர் பந்தல் குட்டை ஓடை தூர்வார அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், அரசடிக்குப்பம் ஊராட்சி, சிறுதொண்டமாதேவி தண்ணீர் பந்தல் குட்டை ஓடை சுமார் 2.00 கி.மீ. நீளமுடையது. இவ்வோடையில், ஆக்கிரமிப்புகளை அகற்றி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

19—

குளம் தூர்வாருதல்

வினா எண் 2635—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, வேகாக்கொல்லை ஊராட்சியில் உள்ள கொண்டாங்குளம் ஆக்கிரமிப்பினை அகற்றி, தூர்வாரி சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், வேகாக்கொல்லை ஊராட்சியில் உள்ள கொண்டாங்குளம்

TRUTH ALONE TRIUMPHS

[2022 மே 6

ஆக்கிரமிப்பினை அகற்றி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் ரூ. 15.00 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வார உத்தேசிக்கப்பட்டுள்ளது.

20—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 2636—திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, சிறுதொண்டமாதேவி கிராமம், குள்ளஞ்சாவடி சாலை-கிழக்கொல்லை களப்பற்றிய ஈஸ்வரன் கோயில் செல்லும் இணைப்புச் சாலையை தார்ச் சாலையாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், சிறுதொண்டமாதேவி கிராமம், குள்ளஞ்சாவடி சாலை—கிழக்கொல்லை களப்பற்றிய ஈஸ்வரன் கோயில் செல்லும் இணைப்புச் சாலையில் சிறுதொண்டமாதேவி சிவன் கோயிலிலிருந்து காட்டுக்கூடலூர், குள்ளஞ்சாவடி சாலைக்கு செல்லும் இணைப்புச் சாலை 300 மீட்டர் தார்ச் சாலையாக அமைக்கப்பட்டுள்ளது. மேலும், 200 மீட்டர் தனிநபருக்குச் சொந்தமான பட்டா நிலத்தில் மண் சாலையாக உள்ளது. மேற்கண்ட சாலையை தரம் உயர்த்த, பட்டா நிலத்தினைக் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு இப்பணியினை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

21—

தடுப்புச் சுவர்

வினா எண் 2639—திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2022 மே 6]

நெய்வேலி தொகுதி, சிலம்பிநாதன்பேட்டை, வீரன் கோவில் குட்டையில் தடுப்புச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், சிலம்பிநாதன்பேட்டை, வீரன் கோவில் குட்டையில் தடுப்புச் சுவர் கோரப்பட்டுள்ளது. 14-வது நிதிக் குழு மானியத்தில் ரூ.5,00,000/- மதிப்பீட்டில் மேற்படி பகுதியில் தடுப்புச் சுவர் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

22—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 2642—திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, வடக்குத்து ஊராட்சி, NJV நகர் தெருக்களை, தார்ச் சாலையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வடக்குத்து ஊராட்சி, NJV நகர் தெருக்களை, தார்ச் சாலைகளாக்க ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் மாநில, மத்திய அரசுகளின் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

23—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 2644—திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2022 மே 6

நெய்வேலி தொகுதி, வடக்குத்து ஊராட்சி, ஸ்ரீராம் கோவிந்த நகர், காமராஜ் நகர் தெருக்களை தார்ச் சாலையாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், வடக்குத்து ஊராட்சி ஸ்ரீராம் கோவிந்த நகர், காமராஜ் நகர் ஆகிய தெருக்களில் உள்ள சாலைகளை மேம்பாடு செய்வதற்காக ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் ரூ. 15.00 இலட்சம் மதிப்பீட்டில் முன்னுரிமை அடிப்படையில் தார்ச் சாலைகளாக அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

24—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 2647—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, வடக்குத்து ஊராட்சி, மாருதி நகர் தெருக்களை, தார்ச் சாலையாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், நெய்வேலி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வடக்குத்து ஊராட்சி, மாருதி நகரில் 2019-2020 ஆம் நிதியாண்டில் SCPAR *திட்டத்தில் ரூ.22.50 இலட்சம் மதிப்பீட்டில், 950 மீட்டர் பிரதான தார்ச் சாலையாக அமைக்கப்பட்டு, 15-4-2021 முதல் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. இப்பகுதியில் உள்ள இதர சாலைகளை ஏதேனும் ஒரு திட்டத்தில், ரூ. 20.00 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலையாக அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. உரிய நிதி ஒதுக்கீடு வரப்பெற்றவுடன் வரும் நிதியாண்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.*

TRUTH ALONE TRIUMPHS

2022 மே 6]

25—

குடிநீர் விநியோக பைப்லைன் அமைத்தல்

வினா எண் 2651—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, வடக்குத்து ஊராட்சி, தில்லை நகர் பகுதியில் பழைய குடிநீர் விநியோக பைப்லைனை அகற்றி புதிய பைப்லைன் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வடக்குத்து ஊராட்சி, தில்லை நகர் பகுதியில் 2021-2022 ஆம் ஆண்டு 15-வது நிதிக் குழு மானியத் திட்டத்தில் 1,200 மீட்டர் நீளத்திற்கு ரூ.7,00,000/- மதிப்பில் புதிய பைப்லைன் அமைக்க முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

26—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 2652—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, வடக்குத்து ஊராட்சி, கீழ் வடக்குத்து மாரியம்மன் கோயில் அருகில் பழுதடைந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு பதில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வடக்குத்து ஊராட்சி, மாரியம்மன் கோயில் அருகில் பழுதடைந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, ஊராட்சி பொது நிதியில் ரூ.2,00,000/— மதிப்பீட்டில் தற்காலிகமாக பழுது நீக்கம் செய்யப்பட்டு நல்ல நிலையில் பொதுமக்களுக்கு குடிநீர்

வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதிய நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

27—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 2653—திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, வடக்குத்து ஊராட்சி, தில்லை நகர், பெரியார் நகர் தெருக்களை தார்ச் சாலையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், நெய்வேலி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வடக்குத்து ஊராட்சி, தில்லை நகர், பெரியார் நகரில் உள்ள தெருக்கள் 2015-2016 ஆம் ஆண்டு தார்ச் சாலைகளாக அமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள சாலைகளை, மாநில அரசின் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் தார்ச் சாலையாகத் தரம் உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பணி, நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டவுடன் வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

28—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 2654—திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, வடக்குத்து ஊராட்சி, அசோக் நகர் I, II மற்றும் சக்தி நகர் தெருக்களை, தார்ச் சாலையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர்

2022 மே 6]

தொகுதிக்குட்பட்ட வடக்குத்து ஊராட்சி, அசோக் நகர் I, II-ல் உள்ள சாலைகள் 2019-2020 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து 400 மீட்டருக்கு அமைக்கப்பட்டுள்ளன. சக்தி நகரில் உள்ள இதர சாலைகளை ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலைகளாக அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

29—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 2655—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, வடக்குத்து ஊராட்சி, ஸ்ரீசக்தி நகர், KSK நகர், விவேகானந்தா நகர் தெருக்களை, தார்ச் சாலைகளாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, வடக்குத்து ஊராட்சி, ஸ்ரீசக்தி நகர், KSK நகர், விவேகானந்தா நகர் தெருக்கள், தார்ச் சாலைகளாகத் தரம் உயர்த்தும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

30—

சிறுவர் பூங்கா அமைத்தல்

வினா எண் 2656—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, வடக்குத்து ஊராட்சி, மாருதி நகரில் ஒதுக்கப்பட்ட பூங்கா இடத்தில் நடைபயிற்சி பாதை, சிறுவர் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், நெய்வேலி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வடக்குத்து ஊராட்சி, மாருதி நகரில் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் சிறுவர் விளையாட்டுப் பூங்கா மற்றும் நடைபயிற்சி பாதை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

31—

உயர் கோபுர மின் விளக்கு

வினா எண் 2658—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, மருங்கூர் ஊராட்சி, கீழக்கொல்லை காமன் கோயில், மாரியம்மன் கோயில்களுக்கு உயர் மின் கோபுர விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், மருங்கூர் ஊராட்சி, கீழக்கொல்லை காமன் கோயில் மற்றும் மாரியம்மன் கோயில் பகுதியில் உயர் கோபுர மின் விளக்கு கோரப்பட்டுள்ளது. கீழக்கொல்லை கிராமத்தில் எல்.இ.டி. விளக்கு—48, சி.எப்.எல்—157, இதர விளக்குகள் ஆகியவை பயன்பாட்டில் உள்ளன. மேலும், கோயில் வளாகம் அருகில் தேவையான அளவு எல்.இ.டி. விளக்குகள் பொருத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. எனவே, உயர் மின் கோபுர சோலார் மின் விளக்கு அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

2022 மே 6]

32—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 2659—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, மருங்கூர் ஊராட்சி, தோப்புக்கொல்லை சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், மருங்கூர் ஊராட்சி, தோப்புக்கொல்லை சாலையைச் சீரமைக்க மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் பேவர் பிளாக் சாலை ரூ.8.00 இலட்சம் மதிப்பில் அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்படும்.

33—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 2660—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, வடக்குத்து ஊராட்சி நகரப் பகுதியில் 2,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், வடக்குத்து ஊராட்சி நகரப் பகுதியில் 2021-2022 ஆம் ஆண்டு 15-வது நிதிக் குழு மானியத் திட்டத்தின் முன்னுரிமை அடிப்படையின்கீழ் ரூ.32,00,000/- மதிப்பீட்டில், 1,00,000 லிட்டர் வரை கொள்ளளவு

கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பணி, முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

34—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 2662—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, மருங்கூர் ஊராட்சி, மருங்கூர் தச்சப்பாளையம்—கொஞ்சிக்குப்பம் இணைப்பு தார்ச் சாலையை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், மருங்கூர் காலனியிலிருந்து கொஞ்சிக்குப்பம் வரை இணைப்புச் சாலை அமைத்திட ரூ.48.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

35—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 2670—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் (மேற்கு) தொகுதி, சாமிநாயக்கன்பட்டி பனங்காடு லிங்கனவாடி கோயில் வட்டத்திற்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், சாமிநாயக்கன்பட்டி ஊராட்சி, பனங்காடு லிங்கனவாடி கோயில் வட்டம் பகுதியில் சுமார் 150 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இப்பகுதியில் ஏற்கெனவே 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது. இப்பகுதியில் சுமார் 550 நபர்கள் வசிக்கின்றனர். குடிநீர் பற்றாக்குறையாக உள்ளது. எனவே, இப்பகுதிக்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க சாத்தியக்கூறு உள்ளது. இதற்கு ரூ.9.00 இலட்சம் மதிப்பீடு ஆகும். 2021-2022 ஆம் ஆண்டு ஜல் ஜீவன் திட்டத்தின்மூலம் இப்பணியினை மேற்கொள்ள பரிசீலிக்கப்பட்டுள்ளது.

36—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 2691—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் (மேற்கு) தொகுதி, சாமிநாயக்கன்பட்டி ஊராட்சி, பழைய காலனி மேல் வட்டம் பகுதிக்கு கூடுதலாக 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், சாமிநாயக்கன்பட்டி ஊராட்சி, பழைய காலனி மேல் வட்டம் பகுதியில் சுமார் 335 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இப்பகுதியில் ஏற்கெனவே 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது. இப்பகுதியில் சுமார் 1,340 நபர்கள் வசிக்கின்றனர். குடிநீர் பற்றாக்குறையாக உள்ளது.

எனவே, இப்பகுதிக்கு 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க சாத்தியக்கூறு உள்ளது. இதற்கு ரூ.13.00 இலட்சம் மதிப்பீடு ஆகும். 2021-2022 ஆம் ஆண்டு ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின்மூலம் இப்பணியினை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

37—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 2718—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, அவ்வை நகர் பகுதியில் சமுதாயக் கூடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, அவ்வை நகர் பகுதியில் ஏற்கெனவே சமுதாயக் கூடம் கட்டப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளதால், புதியதாக அப்பகுதிக்கு சமுதாயக் கூடம் கட்ட வழிவகை இல்லை.

38—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 2719—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, அம்மனூர் கிராமத்தில் கூடுதலாக 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, அம்மனூர் கிராமத்தில் 1,200 மக்கள் தொகை உள்ளது. ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 55 லிட்டருக்கு மேல் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் தேவைப்படும் கொள்ளளவு 60,000 லிட்டர். ஆனால், 30,000 மற்றும் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் பயன்பாட்டில் உள்ளன. ஆக மொத்தம் 90,000 லிட்டர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, கூடுதலாக 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு தற்போது தேவை எழவில்லை.

39—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 2722 திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, அம்மனூர் அருந்ததியர் காலனி பகுதியில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, அம்மனூர் அருந்ததியர் காலனி பகுதியில் 15 குடும்பங்கள் மட்டுமே வசிப்பதால் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை

நீர்த்தேக்கத் தொட்டிக்கு தற்போது அவசியம் ஏற்படவில்லை. மாற்றாக, அருகில் மேட்டு நகர் பகுதியில் அமைய இருக்கும் 30,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து 600 மீட்டர் இடைவெளியில் உள்ள அருந்ததியர் காலனிக்கு குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

40—

சிமென்ட் சாலை அமைத்தல்

வினா எண் 2723—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, அம்மனூர் எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் சிமென்ட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, அம்மனூர் எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் சிமென்ட் சாலை அமைக்க, வரும் 2021-2022 ஆம் ஆண்டில் 15-வது நிதிக் குழு மானியத் திட்டத்தின் மூலமாக பணியினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

41—

சிமென்ட் சாலை அமைத்தல்

வினா எண் 2724—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, ஆண்டர்சன்பேட்டை பகுதியில் சிமென்ட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, ஆண்டர்சன்பேட்டை பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்க, வரும் 2021-2022 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்மூலம் பணியினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

42—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 2725—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, மாவேரிபேட்டை அருந்ததியர் பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, மாவேரிபேட்டை அருந்ததியர் பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க, வரும் 2021-2022 ஆம் ஆண்டு 15-வது நிதிக் குழு மானியத் திட்டத்தின்மூலம் பணியினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

43—

சிமென்ட் சாலை அமைத்தல்

வினா எண் 2726—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, அவ்வை நகர் பகுதியில் சிமென்ட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, அவ்வை நகர் பகுதியில் சிமென்ட் சாலை அமைக்க, வரும் 2022—2023 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்மூலம் பணியினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

44—

காரிய மேடை அமைத்தல்

வினா எண் 2728—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், செம்பேடு ஊராட்சி, செம்பேடு கிராமத்தில் காரிய மேடை கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், செம்பேடு ஊராட்சி, செம்பேடு கிராமத்தில் காரிய மேடை அமைக்க, 2021-2022 ஆம் ஆண்டில் ஊராட்சி பொது நிதி திட்டத்தின்மூலம் பணியினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

45—

பேருந்து நிழற்குடை அமைத்தல்

வினா எண் 2729—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், செம்பேடு ஊராட்சி, குருவராஜப்பேட்டை கிராமத்தில் பேருந்து நிழற்குடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், செம்பேடு ஊராட்சி, குருவராஜப்பேட்டை கிராமம் முழுவதும் நெடுஞ்சாலை துறை சாலை செல்வதாலும், பேருந்து நிழற்குடை அமைக்க போதுமான இட வசதி இல்லாத காரணத்தினாலும் மேற்படி பணியினை செய்ய வழிவகை இல்லை.

46—

சிமென்ட் சாலை அமைத்தல்

வினா எண் 2730—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, அம்மனூர் SVR நகர் பகுதியில் சிமென்ட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, அம்மனூர் SVR நகர் பகுதியில் சிமென்ட் சாலைக்கு பதில் 2021—2022 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்மூலம் ஓரடுக்கு கப்பி சாலை அமைக்க நிர்வாக அனுமதி வரப்பெற்று பணி துவங்கும் நிலையில் உள்ளது.

47—

சிமென்ட் சாலை அமைத்தல்

வினா எண் 2731—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், செம்பேடு ஊராட்சி, விஸ்வநாதபுரம் ஆல மரத் தெருவில் சிமென்ட் சாலை மற்றும் கல்வெர்ட் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், செம்பேடு ஊராட்சி, விஸ்வநாதபுரம் பகுதி, ஆல மரத் தெருவில் சாலை மற்றும் சிறு பாலம் (கல்வெர்ட்) ஏற்கெனவே ஊராட்சி பொது

நிதி திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட சாலைப் பணியை, வரும் 2021-2022 ஆம் ஆண்டில் ஊராட்சி பொது நிதி திட்டத்தின்மூலம் இப்பணியினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

48—

சிமென்ட் சாலை அமைத்தல்

வினா எண் 2732—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், வேடல் ஊராட்சி, வேடல் கிராமம் மயானத்திற்கு செல்லும் மண் சாலையை சிமென்ட் சாலையாக அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், வேடல் ஊராட்சி, வேடல் கிராமம் மயானத்திற்கு செல்லும் மண் சாலையை சிமென்ட் சாலையாக அமைக்க வரும் நிதியாண்டில் MGNREGS திட்டத்தின்மூலம் பணியினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

49—

சிறு பாலம் அமைத்தல்

வினா எண் 2734—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், இச்சிபுத்தூர் ஊராட்சி, ஈசலாபுரம் காலனி புதுமனை பகுதிக்குச் செல்லும் சாலையின் குறுக்கே சிறு பாலம் (கல்வெர்ட்) அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 மே 6

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், இச்சிபுத்தூர் ஊராட்சி, ஈசலாபுரம் காலனி புதுமனை பகுதிக்கு செல்லும் சாலையின் குறுக்கே சிறு பாலம் (கல்வெர்ட்) அமைக்க, வரும் 2022-2023 ஆம் ஆண்டில் ஊராட்சி பொது நிதி திட்டத்தின்மூலம் பணியினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

50—

நூலகத்திற்குக் கட்டடம்

வினா எண் 2736—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், இச்சிபுத்தூர் ஊராட்சி, இச்சிபுத்தூர் காலனி நூலகத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், இச்சிபுத்தூர் ஊராட்சியில், இச்சிபுத்தூர் காலனி அருகில் ஏற்கெனவே பொதுப் பணித் துறைக்கு சொந்தமான கட்டடத்தில் ஊர்ப்புற நூலகக் கட்டடம் உள்ளதால் புதிய கட்டடம் கட்டித் தர தற்போது அவசியம் எழவில்லை.

2022 மே 6]

51—

சிறு பாலம் (கல்வெர்ட்) அமைத்தல்

வினா எண் 2738—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், இச்சிபுத்தூர் ஊராட்சி, ஈசலாபுரம் கிராமத்தில் தாங்கல்குட்டைக்குச் செல்லும் சாலையின் குறுக்கே சிறு பாலம் (கல்வெர்ட்) அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், இச்சிபுத்தூர் ஊராட்சி, ஈசலாபுரம் கிராமத்தில் தாங்கல்குட்டைக்குச் செல்லும் சாலையின் குறுக்கே சிறு பாலம் (கல்வெர்ட்) அமைக்க வரும் 2022-2023 ஆம் ஆண்டு ஊராட்சி பொது நிதிமூலம் பணியினைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

52—

கடன் தள்ளுபடி செய்தல்

வினா எண் 2797—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கொரோனா பெருந்தொற்றினால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், மகளிர் சுய உதவிக் குழுக் கடன் தள்ளுபடி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சுய உதவிக் குழுக்களின் கடன் சுமையைக் குறைப்பதற்கும், கொரோனா தொற்று காலத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு உரிய சலுகைகள் வழங்குவதற்கும் 19-5-2021 அன்று பாரதப் பிரதமர், மத்திய நிதி அமைச்சர் மற்றும் ரிசர்வ் வங்கி ஆளுநர் ஆகியோரை வலியுறுத்தியுள்ளார்கள்.

மேலும், தமிழகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் கொரோனா தொற்றினால் இழந்த வாழ்வாதாரத்தை ஈடு செய்ய ஏதுவாக, மகளிர் சுய உதவிக் குழுக்கள், கூட்டுறவுக் கடன் சங்கம்மூலம் பெற்ற 2,756 கோடி ரூபாய் கடன் தொகை தள்ளுபடி செய்யப்படும் என 13-8-2021 அன்று நடைபெற்ற தமிழக சட்டமன்ற நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

53—

அலுவலகக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 2800—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி மாவட்டம், ஏரியூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஏரியூர் ஊராட்சி ஒன்றியத்திற்கான புதிய அலுவலகக் கட்டடம் கட்ட ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதி (*Scheme Component of Pooled Assigned Revenue*) 2020—2021 திட்டத்தின்கீழ் ரூ.321.00 இலட்சம் மதிப்பீட்டில் பணியானது துவக்கப்பட்டு, தற்போது நடைபெற்று வருகிறது.*

2022 மே 6]

54—

சமுதாயக் கூடங்கள் அமைத்தல்

வினா எண் 2811—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதியில் பிரதான சாலைகளிலிருந்து நீண்ட தூரத்தில் உள்ள கிராமங்களில் சமுதாயக் கூடங்கள் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதியில், பிரதான சாலைகளிலிருந்து நீண்ட தூரத்தில் உள்ள சமுதாயக் கூடங்கள் அமைப்பது குறித்து கிராமங்களை ஆய்வு செய்து ஏற்கெனவே சமுதாயக் கூடங்கள் உள்ள பகுதிகள் நீங்கலாக இதர பகுதிகளில் ஏதேனும் ஒரு திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

55—

சமுதாயக் கூடம் அமைத்தல்

வினா எண் 2888—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், கொல்லங்கிணறு கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், கொல்லங்கிணறு கிராமத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் சமுதாயக் கூடம் கட்டித் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

56—

சமுதாயக் கூடம் அமைத்தல்

வினா எண் 2889—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஊராட்சியில், முப்பிலிவெட்டி கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஊராட்சி முப்பிலிவெட்டி கிராமத்தில் ஏற்கெனவே சமுதாயக் கூடம் ஒன்று உள்ளது. மக்கள் அதனைப் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, முப்பிலிவெட்டி கிராமத்தில் புதிய சமுதாயக் கூடம் கட்டத் தேவை எழவில்லை.

57—

சமுதாயக் கூடம் அமைத்தல்

வினா எண் 2892—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், குலசேகரநல்லூர் ஊராட்சியில் சமுதாயக் கூடம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், குலசேகரநல்லூர் ஊராட்சிக்கு ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் ஓசனுத்தில் சமுதாயக் கூடம் உள்ளது. குலசேகரநல்லூர் மக்கள் இச்சமுதாயக் கூடத்தினைப் பயன்படுத்தி வருவதால், தற்போது குலசேகரநல்லூரில் சமுதாயக் கூடம் கட்ட தேவை எழவில்லை.

58—

சமுதாயக் கூடம் அமைத்தல்

வினா எண் 2893—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், பரிவல்லிக்கோட்டை கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், பரிவல்லிக்கோட்டை கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் பரிவல்லிக்கோட்டையில் சுய உதவிக் குழுக் கூட்டமைப்புக் கட்டடம் கட்டும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தற்போது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, பரிவல்லிக்கோட்டை கிராமத்திற்கு சமுதாயக் கூடம் அமைப்பதற்குப் போதிய நிதி ஆதாரம் இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[*2022 மே 6*

59—

சமுதாயக் கூடம் அமைத்தல்

வினா எண் 2897—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், தெய்வச்செயல்புரம் கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், தெய்வச்செயல்புரம் கிராமத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் சமுதாயக் கூடம் கட்டித் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

60—

சாலையை மேம்படுத்துதல்

வினா எண் 2906—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, குடவாசல் வட்டம், வயலூர் பூங்குடி முதல் கட்டளை வரை உள்ள சாலையை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், வயலூர் பூங்குடி முதல் கட்டளை வரை நாளது தேதி வரை

2022 மே 6]

பழுதடைந்த நிலையிலுள்ள 1,350 மீ. சாலையினை மேம்படுத்த ரூ.53.35 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு ஊரக சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வரும் நிதியாண்டில் முன்னுரிமையின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

61—

சாலையை மேம்படுத்துதல்

வினா எண் 2907—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, குடவாசல் வட்டம், கடகக்குடி, களஞ்சியூர், கோணாச்சேரி மேலத் தெரு சாலையை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், கடகக்குடி, களஞ்சியூர், கோணாச்சேரி மேலத் தெருவில் பழுதடைந்த நிலையிலுள்ள 1,630 மீ. சாலையினை மேம்படுத்த ரூ.54.56 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு ஊரக சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வரும் நிதியாண்டில் முன்னுரிமையின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

62—

சாலையை மேம்படுத்துதல்

வினா எண் 2908—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, குடவாசல் வட்டம், வில்லியநல்லூர்—புலவனூர் சாலையை மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டாரம், வில்லியநல்லூர்-புலவனூர் வரை நாளது தேதி வரை பழுதடைந்த நிலையிலுள்ள 1,040 மீ. சாலையினை மேம்படுத்த ரூ.54.78 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு ஊரக சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வரும் நிதியாண்டில் முன்னுரிமையின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

63—

சாலையை மேம்படுத்துதல்

வினா எண் 2910—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, குடவாசல் வட்டம், நெடுஞ்சேரி-செருவண்டூர் சாலையை மேம்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், நெடுஞ்சேரி—செருவண்டூர் வரை பழுதடைந்த நிலையிலுள்ள 1,000 மீ. சாலை ரூ.31.00 இலட்சம் மதிப்பீட்டில் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் ஊக்க நிதி 2020-2021 ஆம் ஆண்டு திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது.

64—

சாலையை மேம்படுத்துதல்

வினா எண் 2911—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) நன்னிலம் தொகுதி, குடவாசல் வட்டம், பெரும்பண்ணையூர்-பழைய செல்வம் தெரு சாலையை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், பெரும்பண்ணையூர் ஊராட்சி, பழைய செல்வம் தெருவில் பழுதடைந்த நிலையிலுள்ள 850 மீ. சாலை ரூ.19.74 இலட்சம் மதிப்பீட்டில் 2021-2022 ஆம் ஆண்டு மாநில நிதிக் குழு மாவட்ட ஊராட்சித் திட்ட நிதியின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது.

65—

சாலையை மேம்படுத்துதல்

வினா எண் 2912—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, நன்னிலம் வட்டம், துக்காரி—ஆடிப்புலியூர் சாலையை மேம்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், துக்காரி முதல் ஆடிப்புலியூர் வரை பழுதடைந்த நிலையிலுள்ள 1,630 மீ. சாலையினை மேம்படுத்த ரூ.50.77 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு ஊரக சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வரும் நிதியாண்டில் முன்னுரிமையின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2022 மே 6

66—

சாலையை மேம்படுத்துதல்

வினா எண் 2913—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, குடவாசல் வட்டம், காங்கேயநகரம் நல்லம்பூர் சாலையை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், காங்கேயநகரம் முதல் நல்லம்பூர் வரை நாளது தேதி வரை பழுதடைந்த நிலையிலுள்ள 1,170 மீ. சாலையினை மேம்படுத்த ரூ.23.10 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு ஊரக சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வரும் நிதியாண்டில் முன்னுரிமையின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

67—

சாலையை மேம்படுத்துதல்

வினா எண் 2914—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, குடவாசல் வட்டம், விஷ்ணபுரம்—வெள்ளையம்பார் சாலையை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், விஷ்ணபுரம் முதல் வெள்ளையம்பார் வரை பழுதடைந்த

2022 மே 6]

நிலையிலுள்ள 960 மீ. சாலையினை மேம்படுத்த ரூ.53.52 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு கிராமப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வரும் நிதியாண்டில் முன்னுரிமையின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

68—

சாலையை மேம்படுத்துதல்

வினா எண் 2916—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, நன்னிலம் வட்டம், ஆர்.எஸ். தெரு, கூத்தனூர் சாலையை மேம்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டாரம், அன்னதானபுரம் ஊராட்சி, ஆர்.எஸ். தெரு, கூத்தனூர் சாலையின் நீளம் 0.731 கி.மீ. ஆகும். அச்சாலையினை மேம்பாடு செய்திட வரும் உத்தேச மதிப்பீடு ரூ.30.80 இலட்சம் ஆகும். இப்பணி, ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தப்படும்.

69—

சாலையை மேம்படுத்துதல்

வினா எண் 2917—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, நன்னிலம் வட்டம், கூத்தனூர் தெற்குத் தெரு சாலையை மேம்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், அன்னதானபுரம் ஊராட்சி, கூத்தனூர் தெற்குத் தெரு சாலையின் நீளம் 0.956 கி.மீ. ஆகும். அச்சாலையினை மேம்பாடு செய்திட உத்தேச மதிப்பீடு ரூ.38.28 இலட்சம் ஆகும். இப்பணியினை ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முன்னுரிமையின் அடிப்படையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

70—

சாலையை மேம்படுத்துதல்

வினா எண் 2918—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, நன்னிலம் வட்டம், வேலங்குடி, கமுகக்குடி கீழத் தெரு சாலையை மேம்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், வேலங்குடி ஊராட்சி, கமுகக்குடி கீழத் தெரு சாலையின் நீளம் 0.604 கி.மீ. ஆகும். இச்சாலையினை மேம்பாடு செய்திட உத்தேச மதிப்பீடு ரூ.39.60 இலட்சம் ஆகும். இப்பணியினை ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முன்னுரிமையின் அடிப்படையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

71—

சாலையை மேம்படுத்துதல்

வினா எண் 2919—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) நன்னிலம் தொகுதி, நன்னிலம் வட்டம், சிகார்பாளையம் கிராமச் சாலையை மேம்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், அச்சுதமங்கலம் ஊராட்சி, சிகார்பாளையம் கிராமச் சாலையின் நீளம் 0.850 கி.மீ. ஆகும். இச்சாலையினை மேம்பாடு செய்திட உத்தேச மதிப்பீடு ரூ.36.30 இலட்சம் ஆகும். இப்பணியினை ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முன்னுரிமையின் அடிப்படையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

72—

சாலையை மேம்படுத்துதல்

வினா எண் 2920—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, நன்னிலம் வட்டம், நரிக்குடி குடியானச் சாலையை மேம்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், சொரக்குடி ஊராட்சி, நரிக்குடி குடியானச் சாலையின் நீளம் 1.370 கி.மீ. ஆகும். இச்சாலையினை மேம்பாடு செய்திட உத்தேச மதிப்பீடு ரூ.50.60 இலட்சம் ஆகும். இப்பணியினை ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முன்னுரிமையின் அடிப்படையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

[2022 மே 6

73—

சாலையை மேம்படுத்துதல்

வினா எண் 2921—திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, நன்னிலம் வட்டம், சேங்கனூர் சாலையை மேம்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டாரம், சேங்கனூர் சாலையின் நீளம் 1.215 கி.மீ. ஆகும். அச்சாலையினை மேம்பாடு செய்திட உத்தேச மதிப்பீடு ரூ.34.04 இலட்சம் ஆகும். இப்பணியினை ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முன்னுரிமையின் அடிப்படையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

74—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 2925—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், செக்காரக்குடி ஊராட்சியில் ஆழ்துளைக் கிணறு, மின் மோட்டார், 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் செக்காரக்குடி ஊராட்சியின் மொத்த மக்கள்தொகை 3,290. இப்பகுதியில் ஏற்கெனவே, 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட

2022 மே 6]

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் மற்றும் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் உள்ளது. இருப்பினும், 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்த நிலையில் உள்ளது. புதியதாக 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி தேவை உள்ளது. எனவே, புதிய 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ரூ.21.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் கட்டித் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

75—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 2927—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், வல்லநாடு கஸ்பா ஊராட்சியில் 2,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் தொகுதி, வல்லநாடு கஸ்பா ஊராட்சியின் மொத்த மக்கள்தொகை 2,080. தற்போது ஒரு 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மட்டுமே உள்ளது. புதிய 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கான தேவை உள்ளது. எனவே, புதிய 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ரூ.19.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் கட்டித் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2022 மே 6

76—

உறைகிணறு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 2928—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், ஆழிகுடி ஊராட்சியில் தாமிரபரணி ஆற்றில் உறைகிணறு மற்றும் 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், கருங்குளம் ஒன்றியம், ஆழிகுடி ஊராட்சியின் மொத்த மக்கள்தொகை 836. இவ்வூராட்சியில் உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்துள்ளது. எனவே, புதிய 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ரூ.19.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் கட்டித் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

77—

படித்துறை அமைத்தல்

வினா எண் 2929—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், மணக்கரை ஊராட்சி, வடக்கு அனந்தநம்பிக்குறிச்சி கிராமத்தில் கீழக்கால் தாமிரபரணி ஆற்றில் இரண்டு படித்துறைகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், மணக்கரை ஊராட்சி, மருதூர் கீழக்கால் வாய்க்காலில் அனந்தநம்பிக்குறிச்சி வடக்கூர் ஆதி திராவிடர் பகுதி மக்களுக்கு படித்துறை கட்டுதல் மற்றும் மருதூர் கீழக்கால் வாய்க்காலில் அனந்தநம்பிக்குறிச்சி பொதுமக்கள் பயன்படுத்திட வாய்க்கால் பாலம் அருகில் படித்துறை கட்டுதல் ஆகிய இரு பணிகளுக்கான உத்தேச மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட பணிகளை ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

78—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 2930—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், ஒட்டப்பிடாரம் கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு, மின் மோட்டார், ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் ஊராட்சியின் மக்கள்தொகை 952. இங்கு தற்போது இரண்டு 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளன. இரண்டில் ஒரு 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்துள்ளது. எனவே, புதிய 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை

நீர்த்தேக்கத் தொட்டி ரூ.16.50 இலட்சம் மதிப்பீட்டில் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் கட்டித் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

79—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 2932—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, சேர்வைக்காரன்மடம் ஊராட்சி, செந்தியம்பலம் கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு, மின் மோட்டார், ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் தொகுதி, சேர்வைக்காரன்மடம் ஊராட்சி, செந்தியம்பலம் கிராமத்தில் இரண்டு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளன. இதில், ஒரு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்துள்ளது. எனவே, புதிய 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ரூ.12.50 இலட்சம் மதிப்பீட்டில் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் கட்டித் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

80—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 2933—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 மே 6]

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், ஓணமாக்குளம் ஊராட்சியில் ஆழ்துளைக் கிணறுமூலம் மின் மோட்டார் பொருத்தி, ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், ஓணமாக்குளம் ஊராட்சியில் ஏற்கெனவே இரண்டு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளன. இதில், ஒரு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்துள்ளது. எனவே, புதிய 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ரூ.12.50 இலட்சம் மதிப்பீட்டில் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் கட்டித் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

81—

சாலையை மேம்படுத்துதல்

வினா எண் 2936—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, நன்னிலம் ஒன்றியம், மூங்கில்குடி மேலக்கரை சாலையை மேம்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டாரம், மூங்கில்குடி ஊராட்சி, மேலக்கரை தெரு சாலையின் நீளம்

1.360 கி.மீ. ஆகும். அச்சாலையினை மேம்பாடு செய்திட உத்தேச மதிப்பீடு ரூ.52.80 இலட்சம் ஆகும். இப்பணியினை வரும் நிதியாண்டுகளில் முன்னுரிமையின் அடிப்படையில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

82—

சாலையை மேம்படுத்துதல்

வினா எண் 2938—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, வலங்கைமான் வட்டம், இனாம்கிளியூர் தெற்குத் தெரு சாலையை மேம்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், இனாம்கிளியூர் தெற்குத் தெரு தார்ச் சாலையானது மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே, 1,295 மீட்டர் நீளமுள்ள இச்சாலையினை ரூ.46.83 இலட்சம் மதிப்பீட்டில் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

83—

சாலையை மேம்படுத்துதல்

வினா எண் 2940—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, வலங்கைமான் வட்டம், கல்விக்குடி—வெள்ளக்குடி சாலையை மேம்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், கல்விக்குடி—வெள்ளக்குடி சாலை, தார்ச் சாலையாக உள்ளது. 1,100 மீட்டர் நீளமுள்ள இச்சாலையினை ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

84—

சாலையை மேம்படுத்துதல்

வினா எண் 2941—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, வலங்கைமான் வட்டம், ஆவூர் வெள்ளாள தெரு சாலையை மேம்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், ஆவூர் வெள்ளாள தெரு சாலையானது தார்ச் சாலையாக உள்ளது. இச்சாலைப் பகுதியானது சேதமடைந்துள்ளது. 980 மீட்டர் நீளமுள்ள இச்சாலையினை ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

85—

சாலையை மேம்படுத்துதல்

வினா எண் 2945—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, வலங்கைமான் வட்டம், வேப்பந்தாங்குடி ஆதி திராவிடர் காலனி சாலையை மேம்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், வேப்பந்தாங்குடி ஆதி திராவிடர் காலனியில் 942 மீ. நீளமுள்ள சாலையினை தமிழ்நாடு ஊரகச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.34 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்த உத்தேசிக்கப்படுகிறது.

86—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 3414— திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி வட்டம், ஏகப்பெருமகளூர் பஞ்சாயத்து, ஏகப்பெருமகளூர் மேற்கு ஆற்றங்கரை சாலை, நெமிலிகாடு முதல் தெற்கு குடியிருப்பு வரை செல்லும் சாலையை தார்ச் சாலையாக அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், ஏகப்பெருமகளூர் ஊராட்சி, ஏகப்பெருமகளூர் மேற்கு ஆற்றங்கரை சாலை கி.மீ. 0/0-1/800-ஐ செப்பனிட மதிப்பீடு ரூ.49.50 இலட்சம் ஆகும். மேற்காணும் பணி வரும்

2022 மே 6]

2022-2023 ஆம் நிதியாண்டில் SCPAR திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் எடுத்துச் செய்யப்படும்.

மேலும், நெம்மேலிக்காடு முதல் தெற்கு குடியிருப்பு வரை செல்லும் சாலைப் பணியானது, தமிழ்நாடு ஊரக சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2018-2019 ஆம் ஆண்டு முடிவுற்றுள்ளது.

87—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 3418—திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி வட்டம், குளத்தூர் பஞ்சாயத்தில் காரைக்குடியிலிருந்து குளத்தூர் அம்மன் கோயில் வரை செல்லும் சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், குளத்தூர் ஊராட்சியில், காரைக்குடியிலிருந்து குளத்தூர் அம்மன் கோயில் வரை செல்லும் சாலை கி.மீ.0/0-0/600-க்கு மதிப்பீடு ரூ.14.40 இலட்சம் ஆகும். இச்சாலையை 2022-2023 ஆம் நிதியாண்டில் SCPAR திட்டத்தின்கீழ் சீரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

88—

சாலையை சீரமைத்தல்

வினா எண் 3419—திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி வட்டம், ஆமாஞ்சி பஞ்சாயத்து, இடையாங்காடு—முஸ்லிம் குடியிருப்பு சாலை, துரையரசபுரம் புதிய மற்றும் பழைய காலனி செல்லும் சாலை,

[2022 மே 6

துரையரசபுரம் பள்ளி அருகில் செல்லும் சாலைகளை சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், ஆமாஞ்சி ஊராட்சி, இடையங்காடு-முஸ்லிம் குடியிருப்பு சாலை கி.மீ. 0/0-1/230-க்கு மதிப்பீடு ரூ.9.78 இலட்சம் ஆகும். பேவர் பிளாக் சாலையாகவும், துரையரசபுரம் புதிய மற்றும் பழைய காலனி செல்லும் சாலை கி.மீ. 0/0-0/850-க்கு மதிப்பீடு ரூ.20.40 இலட்சம் மற்றும் துரையரசபுரம் பள்ளி அருகில் செல்லும் சாலை கி.மீ. 0/0-0/820-க்கு மதிப்பீடு ரூ.19.58 இலட்சம், கி.மீ. 0/0-0/250-க்கு மதிப்பீடு ரூ.6.00 இலட்சம் ஆகும். எனவே, மேற்காணும் இப்பணிகளை 2022-2023 ஆம் நிதியாண்டில் 15th Finance Commission Grant மற்றும் SCPAR திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

89—

தார்ச் சாலையாக மேம்படுத்துதல்

வினா எண் 3421—திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி வட்டம், கோங்குடி பஞ்சாயத்து, கோங்குடியிலிருந்து அத்தாணி வரை செல்லும் சாலையை தார்ச் சாலையாக மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், கோங்குடி ஊராட்சி, கோங்குடியிலிருந்து அத்தாணி வரை செல்லும் சாலையை தார்ச் சாலையாகச்

2022 மே 6]

சீரமைக்கும் பணி 2019-2020 ஆம் ஆண்டு PMGSY Periodic Renewal *2019-2020 திட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.*

90—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 3422—திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி வட்டம், பெருங்காடு பஞ்சாயத்து, மேலபெருங்காடு-கட்டுமாவடி சாலையிலிருந்து குடியிருப்பிற்குச் செல்லும் சாலையைச் சீரமைக்கவும், வீரராகவபுரம் சாலையிலிருந்து கோவில் வயல் செல்லும் சாலை அமைக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், பெருங்காடு ஊராட்சி, மேலப்பெருங்காடு—கட்டுமாவடி சாலையிலிருந்து குடியிருப்பிற்குச் செல்லும் சாலை கி.மீ. 0/0-1/000 சீரமைத்திட மதிப்பீடு ரூ.24.00 இலட்சமும், வீரராகவபுரம் சாலையிலிருந்து துவாரகாம்பாள்புரம் சாலை கி.மீ. 0/0-2/000-க்கு மதிப்பீடு ரூ.62.00 இலட்சமும் தேவைப்படும். இப்பணிகளை 2022-2023 ஆம் நிதியாண்டில் 15-வது நிதிக் குழு மானியம் மற்றும் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

91—

சாலை மேம்பாடு மற்றும் மயான சாலை அமைத்தல்

வினா எண் 3423—திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி வட்டம், பஞ்சாத்தி பஞ்சாயத்து, கீழ அங்காள பரமேஸ்வரி கோயில் செல்லும்

சாலையை மேம்படுத்தவும், மேலபஞ்சாத்தி மயான சாலை அமைக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், பஞ்சாத்தி ஊராட்சி, கீழ அங்காள பரமேஸ்வரி கோயில் சாலை கி.மீ. 0/0—1/000 சாலைப் பணியானது 2016-2017 ஆம் ஆண்டு நபார்டு திட்டத்தில் எடுத்துச் செல்லப்பட்டு 5 ஆண்டுகள் நிறைவடையவில்லை. மேலபஞ்சாத்தி மயான சாலை கி.மீ. 0/0-2/000 ஆனது ரூ.55.00 இலட்சம் மதிப்பீட்டில் 2022-2023 ஆம் நிதியாண்டில் PMGSY *திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் எடுத்துச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.*

92—

தார்ச் சாலையாக மேம்படுத்துதல்

வினா எண் 3425—திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி வட்டம், நாகுடி பஞ்சாயத்து, சீனமங்கலம் மேல குடியிருப்பு மெட்டல் சாலையை தார்ச் சாலையாக மேம்படுத்தவும், மாணவநல்லூர் அம்மன் கோயில் குடியிருப்பில் சாலை அமைக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், நாகுடி ஊராட்சி, சீனமங்கலம் மேலகுடியிருப்பு மெட்டல் சாலை கி.மீ. 0/0-2/000-யை தார்ச் சாலையாக மாற்றி அமைத்திட ரூ.48.00 இலட்சம் மதிப்பீடும்,

2022 மே 6]

மாணவநல்லூர் அம்மன் கோயில் குடியிருப்பில் சாலை அமைத்திட கி.மீ. 0/0-1/000-க்கு ரூ.24.00 இலட்சம் மதிப்பீடும் ஆகும். இப்பணிகளை 2022-2023 ஆம் நிதியாண்டில் SCPAR *திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் எடுத்துச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.*

93—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 3426—திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி வட்டம், சுப்பிரமணியபுரம், பூவானூர், பனங்காடு, கூகலூர் தெரு குடியிருப்பு வரை செல்லும் சாலை மற்றும் வினாயகர் கோயில் செல்லும் சாலையை தார்ச் சாலையாக அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், சுப்பிரமணியபுரம் ஊராட்சி, சுப்பிரமணியபுரம், பூவானூர், பனங்காடு, கூகனூர் தெரு குடியிருப்பு சாலை கி.மீ. 0/0-0/675 ரூ.16.20 இலட்சம் மதிப்பீடும் மற்றும் வினாயகர் கோயில் செல்லும் சாலை கி.மீ. 0/0-0/165 ரூ.3.96 இலட்சம் மதிப்பீடும் ஆகும். இப்பணிகளை 2022-2023 ஆம் நிதியாண்டில் SCPAR *மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.*

94—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 3427—திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி வட்டம், கீழ்குடி அம்மன் ஜாக்கி பஞ்சாயத்து, கீழ்குடி குடியிருப்பு கோயில் வரை செல்லும் சாலையை தார்ச் சாலையாக அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், கீழ்குடி அம்மன் ஜாக்கி ஊராட்சி, கீழ்குடி குடியிருப்பு கோயில் வரை செல்லும் சாலையை தார்ச் சாலையாக கி.மீ. 0/0-1/000 ரூ.24.00 இலட்சம் மதிப்பீட்டில் 2022—2023 ஆம் நிதியாண்டில் SCPAR *திட்டத்தின்கீழ் சீரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.*

95—

சாலை மற்றும் சுற்றுச் சுவர் அமைத்தல்

வினா எண் 3432—திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி வட்டம், பண்ணியான் குடியிருப்பிற்குண்டான சுடுகாட்டிற்குச் சாலை மற்றும் சுற்றுச் சுவர் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மணமேல்குடி ஊராட்சி ஒன்றியம், இடையாத்திமங்களம் ஊராட்சிக்குட்பட்ட பண்ணியான் குடியிருப்பில் சுடுகாட்டிற்குச் சாலை அமைத்திட சுடுகாடு அமைந்திருக்கும் இடத்திற்கும் முக்கியச் சாலைக்கும் இடைப்பட்ட தூரம் உள்ள இடங்கள் அனைத்தும் தனியாருக்குச் சொந்தமான நிலமாகும். சம்பந்தப்பட்ட பட்டாதாரர்கள் சாலை அமைப்பதற்குப் போதுமான இடம் தானமாக வழங்கும்பட்சத்தில், இச்சாலை மற்றும் சுற்றுச் சுவர் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2022 மே 6]

96—

குடிநீர் வசதி ஏற்படுத்துதல்

வினா எண் 3435—திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, கோலேந்திரம் கிராமத்திற்குக் குடிநீர் வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி ஊராட்சி ஒன்றியம், கோலேந்திரம் கிராமத்தில் 924 மக்கள்தொகை உள்ளது. மொத்த ஊராட்சியில் 10,000 லிட்டரில் இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மட்டுமே உள்ளன. கூடுதலாக குடிநீர் வசதி ஏற்படுத்த 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திட மதிப்பீடு ரூ.7.75 இலட்சம் ஆகும். இப்பணி, 2022-2023 ஆம் நிதியாண்டில் ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படும்.

97—

தண்ணீர், சாலை வசதி செய்தல்

வினா எண் 3504—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், பாடியநல்லூர் ஊராட்சி, 4-வது வார்டு, மணீஷ் நகர், ஜெய் துர்கா நகர் பகுதிகளில் தண்ணீர், சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சோழவரம் ஒன்றியம், பாடியநல்லூர் ஊராட்சி, 4-வது வார்டு, மணீஷ் நகர், ஜெய் துர்கா நகர் பகுதிகளில் வசிக்கும் பொது மக்களுக்குப் போதுமான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது, ஊராட்சி நிதியில் 2021-2022-ல் ரூ.5,20,000 மதிப்பீட்டில் ஆழ்துளைக் கிணறு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சாலைப் பணிகள் முன்னுரிமைப்படி ஏதேனும் ஒரு திட்டத்தில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

98—

மின் கம்பங்கள், விளக்குகளை மாற்றியமைத்தல்

வினா எண் 3513—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், பாடியநல்லூர் ஊராட்சி, 7-வது வார்டில் பழுதடைந்துள்ள மின் கம்பங்கள், மின் விளக்குகளை மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், பாடியநல்லூர் ஊராட்சி, 7-வது வார்டில் பழுதடைந்துள்ள மின் கம்பங்களை மாற்றம் செய்ய மின் வாரியத்திற்கு ஊராட்சிமூலம் தெரிவிக்கப்பட்டு, பழுதடைந்த மின் விளக்குகள் அனைத்தும் மாற்றப்பட்டு, பொது மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

99—

சாலை, தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 3515—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், பாடியநல்லூர் ஊராட்சி, ஸ்ரீநகர் பகுதியில் உள்ள தெருக்களில் தரமான சாலைகளும், தெரு விளக்குகளும் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சோழவரம் ஒன்றியம், பாடியநல்லூர் ஊராட்சி, ஸ்ரீநகர் பகுதியில் உள்ள 8 தெருக்களில், வரும் நிதியாண்டில் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படும். தெரு விளக்குகள் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து 2021-2022-ல் அமைக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டில் உள்ளன.

100—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 3543—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, விளாங்குடி ஊராட்சியில் சமுதாயக் கூடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, விளாங்குடி ஊராட்சியில் புதிய சமுதாயக் கூடம் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி அரசினால் செயல்படுத்தப்படும் ஏதேனும் ஒரு திட்டத்தில் பணியினை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2022 மே 6

101—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 3544—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, கூடலூர் ஊராட்சியில் சமுதாயக் கூடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, கூடலூர் ஊராட்சியில் சமுதாயக் கூடம், ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

102—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 3545—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, வரகூர் ஊராட்சியில் சமுதாயக் கூடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, திருவையாறு ஊராட்சி ஒன்றியம், வரகூர் ஊராட்சி ஆதி திராவிடர் தெருவில் உள்ள சிதிலமடைந்த பயன்பாடற்ற சமுதாயக்

2022 மே 6]

கூடத்தினை இடித்து அப்புறப்படுத்திவிட்டு, அவ்விடத்தில் புதிய சமுதாயக் கூடம் அமைத்திடலாம். இதனைத்தவிர, சமுதாயக் கூடம் அமைத்திடும் அளவிற்கு வேறு அரசு புறம்போக்கு நிலம் ஏதும் இல்லை. இப்பணியினை ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

103—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 3546—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, மணக்கரம்பை ஊராட்சி, M.G.R. நகரில் சமுதாயக் கூடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, மணக்கரம்பை ஊராட்சி, மடத்தரசி அம்மன் கோயில் அருகில் சமுதாயக் கூடம் ரூ.49.00 இலட்சம் மதிப்பீட்டில் மாவட்ட ஊராட்சி நிதி 15-வது நிதிக் குழு மானிய நிதியிலிருந்து கட்டடப்பட்டு வருவதால், எம்.ஜி.ஆர். நகரில் புதிதாக கட்டடப்பட வேண்டிய தேவை எழவில்லை.

104—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 3547—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி தொகுதி, பெரியார் நகரில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதி, பெரியார் நகரில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க காலி நிலம் ஏதுமில்லை.

169—

வீடுகள் வழங்குதல்

வினா எண் 8024—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், மல்லியங்குப்பம் ஊராட்சி, மல்லியங்குப்பம் பெருமாள் கோயில் தெரு மக்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் வீடு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

[2022 மே 6

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், மல்லியங்குப்பம் ஊராட்சியில் மல்லியங்குப்பம் பெருமாள் கோயில் தெரு மக்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்மூலம் வீடு வழங்குவது குறித்து திட்டம் எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

170—

அங்கன்வாடி மையம் அமைத்தல்

வினா எண் 323—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு சமூக நலன்ம-களிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, எனதிரிமங்கலம் ஊராட்சி, எனதிரிமங்கலம் ஆதி திராவிடர் குடியிருப்பில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, எனதிரிமங்கலம் ஊராட்சி, எனதிரிமங்கலத்தில் ஓர் அங்கன்வாடி மையம் (மைய எண் 506) 1982 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இம்மையம், 2017 ஆம் ஆண்டு முதல் ஒன்றிய அரசு நிதியில் கட்டப்பட்ட கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் 6 மாதம் முதல் 6 வயதுடைய 69 குழந்தைகளும், 12 கர்ப்பிணிப் பெண்களும், 5 பாலூட்டும் தாய்மார்களும் பயன்பெற்று வருகின்றனர். எனதிரிமங்கலம் ஆதி திராவிடர் குடியிருப்பில் ஓர் அங்கன்வாடி மையம் (மைய எண் 507) 2004 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் 6 மாதம் முதல் 6 வயதுடைய 50 குழந்தைகளும், 7 கர்ப்பிணிப் பெண்களும், 3 பாலூட்டும் தாய்மார்களும் பயன்பெற்று வருகின்றனர்.

2022 மே 6]

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, எனதிரிமங்கலம் ஊராட்சி, எனதிரிமங்கலம் மற்றும் எனதிரிமங்கலம் ஆதி திராவிடர் குடியிருப்பின் மக்கள்தொகை முறையே 1,474 மற்றும் 868 என்பதால் ஊரகப் பகுதி/நகர்ப் பகுதியில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க 400—800 மக்கள்தொகை இருக்க வேண்டும் என்று மத்திய அரசு வகுத்துள்ள நெறிமுறைகளின் அடிப்படையில், எனதிரிமங்கலம் ஊராட்சி, எனதிரிமங்கலத்தில் ஏற்கெனவே இரு அங்கன்வாடி மையங்கள் தொடங்கப்பட்டு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் பயனாளிகளுடன் செயல்பட்டு வருகின்றன.

171—

அங்கன்வாடி மையம் அமைத்தல்

வினா எண் 324— திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரம், 11-வது வார்டு, பக்கிரிப்பாளையம் பகுதியில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி சட்டமன்றத் தொகுதி, பண்ருட்டி வட்டாரம், பண்ருட்டி நகரம், 11-வது வார்டில் உள்ள பகுதி, ஏரிக்கரை குடியிருப்பு ஆகும். இக்குடியிருப்பில் 1982 ஆம் ஆண்டு அங்கன்வாடி மையம் (ஏரிக்கரை காலனி மையம்) தொடங்கப்பட்டுள்ளது. இம்மையம், 1992 ஆம் ஆண்டு முதல் சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் 6 மாதம் முதல் 6 வயதுடைய 52 குழந்தைகளும், 17 கர்ப்பிணிப் பெண்களும், 13 பாலூட்டும் தாய்மார்களும் பயன்பெற்று வருகின்றனர்.

[2022 மே 6

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, அண்ணா கிராமம் வட்டாரம், பக்கிரிப்பாளையம் ஊராட்சி, பக்கிரிப்பாளையத்தில் 1982 ஆம் ஆண்டு அங்கன்வாடி மையம் தொடங்கப்பட்டுள்ளது. இம்மையத்திற்கு ஒன்றிய அரசின் நிதியில் 2017 ஆம் ஆண்டு புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இம்மையத்தில் 6 மாதம் முதல் 6 வயதுடைய 41 குழந்தைகளும், 7 கர்ப்பிணிப் பெண்களும், 7 பாலூட்டும் தாய்மார்களும் பயனடைந்து வருகின்றனர்.

பண்ருட்டி சட்டமன்றத் தொகுதி, பண்ருட்டி வட்டாரம், பண்ருட்டி நகரம், 11-வது வார்டு, (ஏரிக்கரை குடியிருப்பு) மற்றும் அண்ணா கிராமம் வட்டாரம், பக்கிரிப்பாளையத்தின் மொத்த மக்கள் தொகை முறையே 9,56,876 என்பதால் ஊரகப் பகுதி/நகர்ப்புறத்தில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க 400-800 மக்கள்தொகை இருக்க வேண்டும் என்று மத்திய அரசு வகுத்துள்ள நெறிமுறைகளின் அடிப்படையில், மேற்கண்டுள்ள இரு பகுதிகளிலும் ஏற்கெனவே அங்கன்வாடி மையங்கள் தொடங்கப்பட்டு, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் பயனாளிகளுடன் செயல்பட்டு வருவதால், மீண்டும் அங்கன்வாடி மையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

172—

அங்கன்வாடி மையம் கட்டுதல்

வினா எண் 1622—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவையாறு தொகுதி, அம்பதுமேல் நகரத்தில் பழுதடைந்துள்ள அங்கன்வாடி மையத்திற்கு மாற்றாக புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, அம்பதுமேல் நகரத்தில் உள்ள அங்கன்வாடி மையம் 1985 ஆம் ஆண்டு முதல் அரசு சொந்தக் கட்டடத்தில் நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது. இம்மையக் கட்டடத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,

2022 மே 6]

தஞ்சாவூர் மூலமாக அவ்வப்பொழுது பழுதுநீக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அங்கன்வாடி மையங்களை தரம் உயர்த்துதல் என்ற திட்டத்தின்கீழ் ரூ.2.00 இலட்சம் செலவில் இம்மையத்தில் பழுதுநீக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது மையக் கட்டடம் நல்ல நிலையில் உள்ளது என்பதால், இம்மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

173—

அங்கன்வாடி மையம் கட்டுதல்

வினா எண் 1623—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவையாறு தொகுதி, அடஞ்சூரில் பழுதடைந்துள்ள அங்கன்வாடி மையத்திற்கு மாற்றாக புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, அடஞ்சூரில் 1993 ஆம் ஆண்டு முதல் அங்கன்வாடி மையம் அரசு சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வந்தது. இம்மையக் கட்டடம் பழுதடைந்த காரணத்தினால், குழந்தைகள் நலன் கருதி, தற்போது ஊராட்சி மன்ற சுய உதவிக் குழு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு 2021-2022 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்/சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிய கட்டடம் கட்டுவதற்கு தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

174—

அங்கன்வாடி மையம் கட்டுதல்

வினா எண் 1624—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, கடுவெளி ஊராட்சி, மேலபுனவாசல் கிராமத்தில் அங்கன்வாடி மையக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, கடுவெளி ஊராட்சி, மேல்புனவாசல் கிராமத்தில் 1995 ஆம் ஆண்டு முதல் அங்கன்வாடி மையம் அரசு சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வந்தது. இம்மையக் கட்டடம் பழுதடைந்த காரணத்தினால், குழந்தைகள் நலன் கருதி தற்போது வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு 2021-2022 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்/சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிய கட்டடம் கட்டுவதற்கு தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

175—

அங்கன்வாடி மையம் கட்டுதல்

வினா எண் 1626—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவையாறு தொகுதி, கண்டியூர் ஆதி திராவிட குடியிருப்புப் பகுதியில் பழுதடைந்துள்ள அங்கன்வாடி மையத்திற்கு மாற்றாக புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, கண்டியூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் 1982 ஆம் ஆண்டு முதல் அங்கன்வாடி மையம் அரசு சொந்தக் கட்டடத்தில் நல்ல

2022 மே 6]

நிலையில் செயல்பட்டு வருகிறது. இம்மையக் கட்டடத்தில் அவ்வப்பொழுது பழுதுநீக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது மையக் கட்டடம் நல்ல நிலையில் உள்ளதால், புதிய கட்டடம் கட்டுவதற்கான தேவை ஏதும் எழவில்லை.

176—

அங்கன்வாடி மையம் கட்டுதல்

வினா எண் 1629—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவையாறு தொகுதி, மகாராஜபுரத்தில், பூதராயநல்லூரில் பழுதடைந்துள்ள அங்கன்வாடி மையத்திற்கு மாற்றாக புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, மகாராஜபுரத்தில் 1985 ஆம் ஆண்டு முதல் அரசு சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வந்த அங்கன்வாடி மையத்தின் கட்டடம் பழுதடைந்த காரணத்தினால், குழந்தைகள் நலன் கருதி, அங்கன்வாடி மையம் தற்போது ஊராட்சி ஒன்றிய பள்ளியில் செயல்பட்டு வருகிறது.

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, பூதராயநல்லூரில் 1986 ஆம் ஆண்டு முதல் அரசு சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வந்த அங்கன்வாடி மையத்தின் கட்டடம் பழுதடைந்த காரணத்தினால், குழந்தைகள் நலன் கருதி, அங்கன்வாடி மையம் தற்போது ஊராட்சி மன்ற சுய உதவிக் குழு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

மேற்காணும் தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதியிலுள்ள மகாராஜபுரம் மற்றும் பூதராயநல்லூர் அங்கன்வாடி மையங்களுக்கு 2021-2022 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்/சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிய கட்டடம் கட்டுவதற்கு தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[*2022 மே 6*

177—

அங்கன்வாடி மையம் அமைத்தல்

வினா எண் 1708—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், பழவந்தான் கட்டளை ஊராட்சி, வள்ளலார் நகரில் புதியதாக அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் நிதிப் பங்களிப்பில் செயல்படுத்தப்படுகிறது. கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி, பழவந்தான் கட்டளை பகுதியில் 2004 ஆம் ஆண்டு முதல் குழந்தைகள் மையம் அரசு சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. பழவந்தான் கட்டளை குழந்தைகள் மையத்திற்கும், வள்ளலார் நகருக்கும் இடைப்பட்ட தூரம் 100 மீட்டர் ஆகும். ஊரகப் பகுதி/நகர்ப் பகுதியில் புதிய குழந்தைகள் மையம் அமைக்க 400-800 மக்கள்தொகை இருத்தல் வேண்டும் என்று ஒன்றிய அரசு நெறிமுறை வகுத்துள்ளது. வள்ளலார் நகரில் புதிய குழந்தைகள் மையம் அமைக்க போதிய மக்கள்தொகை இல்லை (மக்கள்தொகை-48). மேலும், வள்ளலார் நகர் பயனாளிகள் பழவந்தான் கட்டளை குழந்தைகள் மையத்தில் பயனடைந்து வருகின்றனர். எனவே, வள்ளலார் நகரில் புதியதாக குழந்தைகள் மையம் அமைக்க வேண்டிய தேவை ஏதுமில்லை.

178—

அங்கன்வாடி மையம் அமைத்தல்

வினா எண் 1709—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி, செம்போடை புதுக்குடியிருப்பில் புதியதாக அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் நகராட்சி, செம்போடையில் அங்கன்வாடி மையம் 1982 முதல் செயல்பட்டு வருகிறது. புதுக்குடியிருப்புப் பகுதி மக்கள் செம்போடை அங்கன்வாடி மையம்மூலம் பயன்பெறுகின்றனர். செம்போடை அங்கன்வாடி மையத்திற்கும், புதுக்குடியிருப்புக்கும் இடைப்பட்ட தூரம் 100 மீட்டர் ஆகும்.

ஊரகப் பகுதி/நகர்ப் பகுதியில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க 400-800 மக்கள்தொகை இருக்க வேண்டும் என்று மத்திய அரசு நெறிமுறை வகுத்துள்ளது. புதுக்குடியிருப்புப் பகுதியின் மக்கள்தொகை 41 மற்றும் அப்பகுதியிலுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை 4 ஆகும். புதுக்குடியிருப்புப் பகுதியில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க போதிய மக்கள்தொகை இல்லையென்பதால், அப்பகுதி மக்கள் செம்போடை மையத்திலேயே பயன்பெற்று வருகின்றனர். எனவே, புதுக்குடியிருப்புப் பகுதியில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

179—

அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம்

வினா எண் 1710—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், தேவனாஞ்சேரி ஊராட்சியில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, தேவனாஞ்சேரி அங்கன்வாடி மையம் 1982 ஆம் ஆண்டு முதல் அரசு சொந்தக் கட்டடத்தில் நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது. இம்மையக் கட்டடத்தில் அவ்வப்பொழுது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தஞ்சாவூர் மூலமாக பழுதுநீக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது மையக் கட்டடம் நல்ல நிலையில் உள்ளது. எனவே, இம்மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட வேண்டிய தேவை ஏதுமில்லை.

180—

உதவித் தொகை வழங்குதல்

வினா எண் 1712—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் வட்டத்தில் மாற்றுத் திறனாளிகள் உதவித் தொகை கேட்டு விண்ணப்பித்து, வழங்கப்படாமல் உள்ளவர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் பராமரிப்பு உதவித் தொகை கோரி விண்ணப்பித்து, காத்திருப்போர் பட்டியலிலுள்ள அனைத்து தகுதிவாய்ந்த மாற்றுத் திறனாளிகளுக்கும் மேற்படி உதவித் தொகை வழங்கப்படும்.

181—

சத்துணவு சமையல் கூடம் அமைத்தல்

வினா எண் 1722—திரு. V.P. கந்தசாமி: *மாண்புமிகு சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், சவுடேஸ்வரி நகரில் உள்ள தொடக்கப் பள்ளிக்கு சத்துணவு சமையல் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியம், வதம்பேச்சேரி ஊராட்சி, சவுடேஸ்வரி நகரில் உள்ள தொடக்கப் பள்ளிக்கு 2019—2020 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ், ரூ.4.30 இலட்சம் மதிப்பீட்டில் சத்துணவு சமையல் கூடம் கட்ட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, 9—11—2020 அன்று கட்டடப் பணி முடிவுற்று, சத்துணவு சமையல் கூடம் பயன்பாட்டில் உள்ளது.

182—

தடுப்புச் சுவர், தூண்டில் வளைவுகள் அமைத்தல்

வினா எண் 165—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்போரூர் தொகுதி, கிழக்கு கடற்கரை சாலையில் காணத்தூர் முதல் சட்ராஸ் வரை உள்ள கடற்கரை பகுதிகளில் கடல் அரிப்பு தடுப்புச் சுவர் மற்றும் தூண்டில் வளைவுகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். செங்கல்பட்டு மாவட்டம், கோவளம் கிராமத்தில் கடலரிப்பினைத் தடுக்க ரூ.18.30 கோடி செலவில் 2018 ஆம் ஆண்டு பணி மேற்கொள்ளப்பட்டு, கடற்கரை பாதுகாக்கப்பட்டுள்ளது மற்றும் சூளேரிக்காட்டுக்குப்பம் கிராமத்தில் கடலரிப்பினைத் தடுக்க ரூ.4.95 கோடி செலவில்

[2022 மே 6

பணிகள் 2019 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டு, கடற்கரை வலுவான நிலையில் உருவாகியுள்ளது.

183—

கால்நடைக் கிளை நிலையம் துவக்குதல்

வினா எண் 285—திரு. சு. ரவி: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், மோசூர் ஊராட்சி, மோசூர் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், மோசூர் ஊராட்சி, மோசூர் கிராமத்தில் புதியதாக கால்நடைக் கிளை நிலையம் துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

184—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 372—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், வெளுங்கனந்தல் ஊராட்சியில் புதியதாக கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், வெளுங்கனந்தல் ஊராட்சியில் தற்போது நடைமுறையில் உள்ள வரையறைகளின்படி கால்நடை மருத்துவமனையை நேரடியாக துவக்க இயலாது. கால்நடை அலகுகளின் அடிப்படையில் கால்நடைக் கிளை நிலையம் முதற்கட்டமாக துவக்கப்படும். கால்நடைக் கிளை நிலையம் அமைக்க 3,000 அலகுகள் இருக்க வேண்டும். 5,000 கால்நடை அலகுகள் உள்ள இடங்களில் கால்நடைக் கிளை நிலையம், கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்தப்படும். கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், வெளுங்கனந்தல் ஊராட்சியில் 3,002 கால்நடை அலகுகள் உள்ளதால் அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க தற்சமயம் சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே, அரசின் செயற்குறிப்பில் திட்டம் இடம்பெறும்போது அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு இக்கிராமம் பரிசீலிக்கப்படும்.

185—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 373—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், மாதலம்பாடி ஊராட்சிக்கு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், மாதலம்பாடி ஊராட்சியில் தற்போது நடைமுறையில் உள்ள வரையறைகளின்படி கால்நடை மருத்துவமனை நேரடியாக துவக்க இயலாது. கால்நடை அலகுகளின் அடிப்படையில்

காலநடைக் கிளை நிலையம் முதற்கட்டமாக துவக்கப்படும். கால்நடைக் கிளை நிலையம் அமைக்க 3,000 அலகுகள் இருக்க வேண்டும். 5,000 கால்நடை அலகுகள் உள்ள இடங்களில் கால்நடைக் கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், மாதலம்பாடி ஊராட்சியில் 3,054 கால்நடை அலகுகள் உள்ளதால், அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க தற்சமயம் சாத்தியக்கூறுகள் உள்ளன. அரசின் செயற்குறிப்பில் திட்டம் இடம்பெறும்போது அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு இக்கிராமம் பரிசீலிக்கப்படும்.

186—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 374—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், வேடநத்தம் ஊராட்சியில் புதியதாக கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், வேடநத்தம் ஊராட்சியில் அரசு வரையறைகளின்படி கால்நடை மருத்துவமனையை நேரடியாக துவக்க இயலாது. கால்நடை அலகுகளின் அடிப்படையில் 3,000 கால்நடைகளுக்கு மேல் இருந்தால் கால்நடைக் கிளை நிலையம் முதற்கட்டமாக துவக்கப்படும். 5,000 கால்நடை அலகுகள் உள்ள இடங்களில் கால்நடைக் கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். வேடநத்தம் கிராமத்தில் 3,029 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளதால் அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே, அரசின் செயற்குறிப்பில் திட்டம் இடம்பெறும்போது அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க இக்கிராமம் பரிசீலிக்கப்படும்.

2022 மே 6]

187—

கால்நடை மருந்தகம் அமைத்தல்

வினா எண் 375—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், சு.பொலக்குணம் ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், சு.பொலக்குணம் ஊராட்சியில் அரசு வரையறைகளின்படி கால்நடை மருத்துவமனையை நேரடியாக துவக்க இயலாது. கால்நடை அலகுகளின் அடிப்படையில் 3,000 கால்நடைகள் உள்ள இடங்களில் கால்நடைக் கிளை நிலையம் முதற்கட்டமாக துவக்கப்படும். 5,000 கால்நடை அலகுகள் உள்ள இடங்களில் கால்நடைக் கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். சு.பொலக்குணம் ஊராட்சியில் 3,080 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளதால் அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே, அரசின் செயற்குறிப்பில் திட்டம் இடம்பெறும்போது புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க இக்கிராமம் பரிசீலிக்கப்படும்.

188—

கால்நடை மருந்தகம் அமைத்தல்

வினா எண் 376—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், காட்டுமலையனூர் ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2022 மே 6

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், காட்டுமலையனூர் ஊராட்சியில் தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி கால்நடை மருத்துவமனையை நேரடியாக துவக்க இயலாது. கால்நடை அலகுகளின் அடிப்படையில் கால்நடைக் கிளை நிலையம் முதற்கட்டமாக துவக்கப்படும். கால்நடைக் கிளை நிலையம் அமைக்க 3,000 அலகுகள் இருக்க வேண்டும். 5,000 கால்நடை அலகுகள் உள்ள இடங்களில் கால்நடைக் கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், காட்டுமலையனூர் ஊராட்சியில் 3,075 கால்நடை அலகுகள் உள்ளதால் அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க தற்சமயம் சாத்தியக்கூறுகள் உள்ளன. அரசின் செயற்குறிப்பில் திட்டம் இடம்பெறும்போது அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு இக்கிராமம் பரிசீலிக்கப்படும்.

189—

கால்நடை மருந்தகத்தை மீண்டும் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல்

வினா எண் 420—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருப்பூர், நெருப்பெரிச்சல் ஊராட்சி, வாவிப்பாளையத்தில் செயல்படாமல் உள்ள கால்நடை மருந்தகத்தை மீண்டும் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கால்நடைக் கிளை நிலையம் திறக்க போதுமான 3,000 கால்நடைகள் எண்ணிக்கை இல்லாத காரணத்தால், திருப்பூர், நெருப்பெரிச்சல் ஊராட்சி, வாவிப்பாளையத்தில் செயல்படாமல்

2022 மே 6]

உள்ள கால்நடை மருந்தகத்தை மீண்டும் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர சாத்தியக்கூறுகள் இல்லை.

190—

மீன் வலை பின்னும் களம் அமைத்தல்

வினா எண் 433—திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவொற்றியூர் தொகுதி, மாநகராட்சி வட்டம் 14, திருச்சினாங்குப்பம் பகுதியில் மீன் வலை பின்னும் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் தொகுதி, திருச்சினாங்குப்பத்தில் மீன் வலை பின்னும் தளம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

191—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 501—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், கர்ணாவூர் ஊராட்சி, பாமணியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 மே 6

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், கர்ணாவூர் ஊராட்சி, பாமணியில் தற்போதுள்ள அரசு வரையறைகளின்படி நேரடியாக கால்நடை மருத்துவமனையை துவக்க இயலாது. கால்நடை அலகுகளின் அடிப்படையில் கால்நடைக் கிளை நிலையம் முதற்கட்டமாக துவக்கப்படும். கால்நடைக் கிளை நிலையம் அமைக்க 3,000 அலகுகள் இருக்க வேண்டும். 5,000 கால்நடை அலகுகள் உள்ள இடங்களில் கால்நடைக் கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். பாமணியில் 372 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளதால் அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, பாமணி கிராமத்தில் உள்ள கால்நடை விவசாயிகள் அருகில் உள்ள கால்நடை நிலையங்களின்மூலம் வழங்கப்படும் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

192—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 502—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், முக்குளம் சாத்தனூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், முக்குளம் சாத்தனூரில் தற்போது நடைமுறையில் உள்ள வரையறைகளின்படி கால்நடை மருத்துவமனையை நேரடியாக துவக்க இயலாது.

2022 மே 6]

காலநடை அலகுகளின் அடிப்படையில் கால்நடைக் கிளை நிலையம் முதற்கட்டமாக துவக்கப்படும். கால்நடைக் கிளை நிலையம் அமைக்க 3,000 அலகுகள் இருக்க வேண்டும். 5,000 கால்நடை அலகுகள் உள்ள இடங்களில் கால்நடைக் கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். மன்னார்குடி தொகுதி, முக்குளம் சாத்தனூரில் 1,250 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளதால் அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, அங்குள்ள மக்கள் கால்நடைகளின் சிகிச்சைக்கு அருகில் உள்ள நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

193—

கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம்

வினா எண் 503—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், கட்டக்குடி கால்நடை மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், கட்டக்குடியில் கால்நடைக் கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. கால்நடைக் கிளை நிலையங்களுக்கு புதிய கட்டடம் கட்ட தற்போது அரசிடம் திட்டம் ஏதும் இல்லை. எனவே, உள்ளாட்சி/தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெறும்பட்சத்தில் திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, கட்டக்குடியில் கால்நடைக் கிளை நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட பரிசீலிக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2022 மே 6

194—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 504—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஒன்றியம், நெடுவாக்கோட்டையில் கால்நடை மருத்துவமனை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஒன்றியம், நெடுவாக்கோட்டையில் தற்போதைய வரையறைகளின்படி கால்நடை மருத்துவமனையை நேரடியாக துவக்க இயலாது. கால்நடை அலகுகளின் அடிப்படையில் கால்நடைக் கிளை நிலையம் முதற்கட்டமாக துவக்கப்படும். கால்நடைக் கிளை நிலையம் அமைக்க 3,000 அலகுகள் இருக்க வேண்டும். 5,000 கால்நடை அலகுகள் உள்ள இடங்களில் இருக்கும் கால்நடைக் கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். மன்னார்குடி ஒன்றியம், நெடுவாக்கோட்டையில் 1,113 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளதால், அங்கு கால்நடைக் கிளை நிலையம் தற்சமயம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, அங்குள்ள மக்கள் தங்கள் கால்நடைகளின் சிகிச்சைக்கு அருகில் உள்ள நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

195—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 505—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், ராயபுரத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், ராயபுரத்தில் தற்போது நடைமுறையில் உள்ள வரையறைகளின்படி கால்நடை மருத்துவமனையை நேரடியாக துவக்க இயலாது. கால்நடை அலகுகளின் அடிப்படையில் கால்நடைக் கிளை நிலையம் முதற்கட்டமாக துவக்கப்படும். கால்நடைக் கிளை நிலையம் அமைக்க 3,000 அலகுகள் இருக்க வேண்டும். 5,000 கால்நடை அலகுகள் உள்ள இடங்களில் கால்நடைக் கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், ராயபுரத்தில் 2,114 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளதால், அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க தற்சமயம் சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, அங்குள்ள கால்நடை விவசாயிகள் அருகில் உள்ள கால்நடை நிலையங்களின்மூலம் வழங்கப்படும் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

196—

கால்நடைக் கிளை நிலையம் அமைத்தல்

வினா எண் 680—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி ஒன்றியம், மலைகோட்டாலம் ஊராட்சியில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி ஒன்றியம், மலைகோட்டாலம் ஊராட்சியில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன.

197—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 681—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சின்னசேலம் ஒன்றியம், ஈசாந்தை ஊராட்சியில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சின்னசேலம் ஒன்றியம், ஈசாந்தை ஊராட்சியில் புதிய கால்நடைக் கிளை நிலையம் துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

198—

கால்நடைக் கிளை நிலையம் துவக்குதல்

வினா எண் 697—திரு. சு. ரவி: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, அவ்வை நகர் பகுதியில் புதியதாக கால்நடைக் கிளை நிலையம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, அவ்வை நகர் பகுதியில் புதியதாக கால்நடைக் கிளை நிலையம் துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

199—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 1199—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், சேலம் ஊராட்சி ஒன்றியம், தகவாய்பட்டி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் ஊராட்சி ஒன்றியம், தகவாய்பட்டி ஊராட்சியில் தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி கால்நடை மருத்துவமனையை நேரடியாக துவக்க இயலாது. கால்நடை அலகுகளின் அடிப்படையில் கால்நடைக் கிளை நிலையம் முதற்கட்டமாக துவக்கப்படும். கால்நடைக் கிளை நிலையம் அமைக்க 3,000 அலகுகள் இருக்க வேண்டும். 5,000 கால்நடை அலகுகள் உள்ள இடங்களில் கால்நடைக் கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். தளவாய்பட்டி ஊராட்சியில் 3,677 கால்நடை அலகுகள் உள்ளதால், அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க தற்சமயம் சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே, அரசின் செயற்குறிப்பில் திட்டம் இடம்பெறும்போது புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க இக்கிராமம் பரிசீலிக்கப்படும்.

[2022 மே 6

200—

கால்நடை மருந்தகத்திற்குக் கட்டடம்

வினா எண் 1771—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, வேகாகொல்லை ஊராட்சியில் உள்ள கால்நடை மருந்தகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தற்போது கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, வேகாகொல்லை எனுமிடத்தில் கால்நடைக் கிளை நிலையம் மட்டுமே செயல்பட்டு வருகிறது. கால்நடைக் கிளை நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு தற்போது அரசிடம் செயல்திட்டம் ஏதும் இல்லை. எனவே, உள்ளாட்சி/தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெறப்படும்பட்சத்தில், கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, வேகாகொல்லை கால்நடைக் கிளை நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும்.

201—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 1772—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, விசூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி, விசூர் ஊராட்சியில் தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி, கால்நடை மருத்துவமனையை நேரடியாக துவக்க இயலாது. கால்நடை அலகுகளின் அடிப்படையில் கால்நடை கிளை நிலையம் முதற்கட்டமாக துவக்கப்படும். கால்நடை கிளை நிலையம் அமைக்க 3,000 அலகுகள் இருக்க வேண்டும், 5,000 கால்நடை அலகுகள் உள்ள இடங்களில் கால்நடை கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். நெய்வேலி தொகுதி, விசூர் ஊராட்சியில் 3,100 கால்நடை அலகுகள் உள்ளதால், அங்கு கால்நடை கிளை நிலையம் அமைக்க தற்சமயம் சாத்தியக்கூறுகள் உள்ளன. அரசின் செயற்குறிப்பில் திட்டம் இடம்பெறும்போது அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு இக்கிராமம் பரிசீலிக்கப்படும்.

202—

படகு அணையும் தளம், மீன் வலை பின்னிடும் தளம் அமைத்தல்

வினா எண் 1799—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, பொன்னேரி வட்டம், அண்ணாமலைச்சேரி குப்பத்தில் படகு அணையும் தளமும், மீன் வலை பின்னிடும் தளமும் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, பொன்னேரி வட்டம், அண்ணாமலைச்சேரி குப்பம், மீனவக் கிராமத்தில் மீன் ஏலக்கூடம், படகு அணையும்

[2022 மே 6

தளம் மற்றும் மீன் வலை பின்னும் கூடம் ஆகியவை அரசால் அமைக்கப்பட்டுள்ளன.

203—

மருத்துவர் நியமித்தல்

வினா எண் 1949—திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை தொகுதியில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில் மருத்துவரை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை தொகுதியில் மயிலாடுதுறையை தலைமையிடமாகக் கொண்டு கால்நடை பெரு மருத்துவமனை இயங்கி வருகிறது. மேலும், இக்கால்நடை பெரு மருத்துவமனையில் பிரதம மருத்துவர் பதவி 11-4-2017 முதல் காலியிடமாக உள்ளது. மதிப்பெண் அடிப்படையில் முதுநிலை மறுநிர்ணயம் செய்து, அதனடிப்படையில் பதவி உயர்வு வழங்கக் கோரி வழக்கு மாண்பமை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால், தற்போது காலியிடமாக உள்ள உதவி இயக்குநர்/பிரதம மருத்துவர்/கால்நடை மருத்துவர் பதவிகளை நிரப்ப இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே, இப்பதவியை 11-4-2017 முதல் 1-6-2020 வரை மரு. ஆர். செல்லதுரை, கால்நடை மருத்துவர், கால்நடை மருத்துவமனை சீர்காழி முழு கூடுதல் பொறுப்பாகவும், 2-6-2020 முதல் நாளது தேதி வரை மரு. மு. முத்துகுமாரசாமி, உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்பு, மயிலாடுதுறை கவனித்து வருகிறார்கள். மாண்பமை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு வழங்கப்படும்பட்சத்தில் மேற்படி காலிப் பணியிடத்தினை நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2022 மே 6]

204—

காலிப் பணியிடங்கள் நிரப்புதல்

வினா எண் 1969—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சியில் உள்ள கால்நடை மருத்துவமனையில் காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தொகுதிக்குட்பட்ட கும்பகோணம் நகராட்சியில் கும்பகோணம் கால்நடை பெரு மருத்துவமனை இயங்கி வருகிறது. அதனில், முதுநிலை கால்நடை மேற்பார்வையாளர்-1, கால்நடை பராமரிப்பு உதவியாளர்-2 மற்றும் ஆய்வக உடனாள்-1 ஆகிய பதவிகள் நிரப்பப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். மேலும், இக்கால்நடை பெரு மருத்துவமனையில் காலியிடமாக உள்ள பிரதம மருத்துவர்-1, கால்நடை ஆய்வாளர் நிலை-2-1 மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர்-5 பதவிகளை நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

205—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 4278—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், நல்லூர் ஊராட்சி, ஆலடிப்பட்டி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2022 மே 6*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு வரையறைகளின்படி, 5,000 கால்நடை அலகுகள் உள்ள இடங்களில் இருக்கும் கால்நடைக் கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகத் தரமுயர்த்தப்படும். ஆலங்குளம் தொகுதி, ஆலடிப்பட்டி கிராமத்தில் கால்நடை அலகுகள் 3,000–க்கும் குறைவாக (அதாவது 963) உள்ளதால், அங்கு கால்நடை கிளை நிலையம் அமைக்க தற்சமயம் சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, வெங்கடேஸ்வரபுரம் கிராமத்தில் உள்ள கால்நடை விவசாயிகள் அருகில் உள்ள கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

206—

கால்நடைக் கிளை நிலையம் அமைத்தல்

வினா எண் 5345— திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, கெண்டயனள்ளி ஊராட்சி, பழையூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) பெண்ணாகரம் தொகுதி, கெண்டயனள்ளி ஊராட்சி ஒன்றியம், பழையூர் கிராமம் என்ற இடத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன.

(ஆ) அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

2022 மே 6]

207—

கால்நடைக் கிளை நிலையம் தரமுயர்த்துதல்

வினா எண் 6720—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்தணி தொகுதி, திருத்தணி வட்டம், கோரமங்கலம் ஊராட்சியில் உள்ள கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, திருத்தணி வட்டம், கோரமங்கலம் ஊராட்சியில் அரசு வரையறைகளின்படி நேரடியாக கால்நடை மருந்தகம் துவக்க இயலாது. கால்நடை அலகுகளின் அடிப்படையில், கால்நடைக் கிளை நிலையம் முதற்கட்டமாக துவக்கப்படும். கால்நடைக் கிளை நிலையம் அமைக்க 3,000 அலகுகள் இருக்க வேண்டும். 5,000 கால்நடை அலகுகள் உள்ள இடங்களில் கால்நடைக் கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகத் தரமுயர்த்தப்படும். கோரமங்கலம் ஊராட்சியில் கால்நடை அலகுகள் 5,000-க்கும் அதிகமாக (அதாவது 5,042) உள்ளதால், கால்நடை மருந்தகமாகத் தரமுயர்த்த சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே, அரசின் செயல்திட்டம் இடம்பெறும்பொழுது கால்நடைக் கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகத் தரமுயர்த்த பரிசீலிக்கப்படும்.

208—

கடல்சார் கல்லூரி துவக்குதல்

வினா எண் 7496—திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2022 மே 6

(அ) அறந்தாங்கி தொகுதியில் புதிய மீன்வளக் கல்லூரி மற்றும் கடல்சார் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது அறந்தாங்கி சட்டமன்றத் தொகுதியில் மீன்வளக் கல்லூரி தொடங்குவதற்கான எந்த செயல்திட்டமும் அரசிடம் இல்லை. கடல்சார் கல்லூரி தொடங்குவது தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் வரையறைக்குள் வரவில்லை.

209—

கால்நடைக் கிளை நிலையம் அமைத்தல்

வினா எண் 9713—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, மஞ்சநாயக்கனஅள்ளி ஊராட்சி, புதுப்பட்டி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) பெண்ணாகரம் தொகுதி, மஞ்சநாயக்கனஅள்ளி ஊராட்சி ஒன்றியம், புதுப்பட்டி கிராமம் என்ற இடத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

2022 மே 6]

210—

மரக்கன்றுகள் நடுதல்

வினா எண் 23—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் பெருநகராட்சி பகுதியில் தற்போது மின்கம்பிகள் பூமிக்கடியில் புதைவடங்களாகப் பதிக்கப்பட்டு வருவதால் மின்கம்பங்கள் இருந்த இடங்களில் மரக் கன்றுகள் நடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வனத் துறைமூலம் "பசுமை தமிழகம்" என்ற திட்டத்தின்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைக்கிணங்க மாபெரும் மரம் நடும் திட்டம் மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்பட உள்ளது. இத்திட்டம் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள தாம்பரம் உட்பட தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும். எனவே, தாம்பரம் பெருநகராட்சி பகுதியில் மின் கம்பிகள் பூமிக்கடியில் புதைவடங்களாக பதிக்கப்பட்டு வருவதால், மின் கம்பங்கள் இருந்த இடங்களிலும் மண்ணின் தன்மை, தரம் ஆகிய சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அதற்கேற்ப மரங்கள் நட்டு பராமரிக்கப்படும்.

211—

உயிரியல் பூங்கா அமைத்தல்

வினா எண் 415—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டத்தில் உயிரியல் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்:

(அ) திருப்பூர் மாவட்டத்தில் உயிரியல் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

212—

மரக் கன்றுகள் நடுதல்

வினா எண் 721—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதியில் வேளச்சேரி இரயில் நிலையம் முதல் தரமணி இரயில் நிலையம் வரை மரக் கன்றுகள் நடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வனத் துறைமூலம் "பசுமை தமிழகம்" என்ற திட்டத்தின்கீழ் மாபெரும் மரம் நடும் திட்டம் மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்பட உள்ளது. இத்திட்டம் சென்னையில் வேளச்சேரி தொகுதி உட்பட, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின்கீழ் வேளச்சேரி தொகுதியில் வேளச்சேரி இரயில் நிலையம் முதல் தரமணி இரயில் நிலையம் வரை உள்ள இடங்களில் மண்ணின் தன்மை, தரம் ஆகியவற்றிற்கேற்ப சாத்தியக்கூறுகளை ஆராய்ந்த பின் மரங்கள் நட்டு பராமரிக்கப்படும்.

213—

மரங்களைப் பாதுகாக்க தனிச் சட்டம் இயற்றுதல்

வினா எண் 1198—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

தமிழகத்தில் அனைத்து இடங்களிலுமுள்ள மரங்களைப் பாதுகாக்க தனிச் சட்டம் இயற்ற அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்:

சென்னை உயர் நீதிமன்ற நீதிப்பேராணை எண் 11094/2021, நாள் 30-4-2021–ல் வழங்கிய இடைக்கால தீர்ப்பின் அடிப்படையில், அரசாணை (நிலை) எண் 39, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம்–வனத் (வனம் 13) துறை, நாள் 2-7-2021–ன்படி, பொது இடங்கள் மற்றும் பொதுத் துறை அலுவலக வளாகங்களிலுள்ள மரங்களை வெட்டுதல் மற்றும் மரம் வளர்ப்பு மேற்கொள்ளுதல் தொடர்பான நடவடிக்கைகளை முறைப்படுத்த மாநில பசுமைக் குழு மற்றும் மாவட்ட பசுமைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

214—

குரங்குகளை வனப் பகுதிக்குள் விடுதல்

வினா எண் 1648—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், சிதம்பரநாதபுரம் ஊராட்சி, தத்துவாஞ்சேரியில் உள்ள குரங்குகளைப் பிடித்து வனப் பகுதிக்குள் விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலிருந்து இதுநாள் வரை சுமார் 70 குரங்குகள் பிடிக்கப்பட்டு கோடியக்கரை வனப் பகுதியில் விடப்பட்டுள்ளன. மேலும், குரங்குகளைப் பிடிக்கக் கோரும் விண்ணப்பங்கள்மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

TRUTH ALONE TRIUMPHS

[2022 மே 6

215—

கருவேல மரங்கள் அகற்றுதல்

வினா எண் 1684—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதியில் உள்ள கருவேல மரங்களை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் வனக் கோட்டத்திற்குட்பட்ட கும்பகோணம் தொகுதியில் கருவேல தோட்டங்கள் எதுவும் வனத் துறையால் எழுப்பப்படவில்லை.

216—

சுற்றுலாத் தலமாக்கல்

வினா எண் 3302—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, கூந்தன்குளம் பறவைகள் சரணாலயத்தை மேம்படுத்தி, கட்டமைப்பு வசதியைப் பெருக்கி, சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கூந்தன்குளம் பறவைகள் சரணாலயத்தில் பறவைகளை பார்ப்பதற்கான ஒரு கண்காணிப்பு கோபுரம், தாராளமான இருக்கை வசதிகள், பார்வையாளர்கள் ஓய்வு இடம், குழந்தைகள் பூங்கா மற்றும் தங்குமிடம் ஆகியவை அமைக்கப்பட்டு, சிறந்த சுற்றுலாத் தலமாக ஏற்கெனவே பராமரிக்கப்பட்டு வருகிறது. எனவே, மேற்கண்ட வினா எழவில்லை.

2022 மே 6]

217—

ட்ரோன் மூலம் விதைகள் தூவுதல்

வினா எண் 4430—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், கஞ்சமலை, சேலம் வட்டம், உடையாப்பட்டியில் உள்ள கந்தகிரிமலை, வீரபாண்டி தொகுதியில் உள்ள ஜருகுமலை ஆகிய பகுதிகளில் மழைக்காலங்களில் ட்ரோன் மூலம் விதைகளைத் தூவி வன வளத்தினை உருவாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வனத் துறை மூலம் “பசுமை தமிழகம்” என்ற திட்டத்தின்கீழ், மாநிலம் முழுவதிலும் மாபெரும் மரம் நடும் திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது. இத்திட்டம் சேலம் மாவட்டம் உட்பட தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ், உயரமான மரக்கன்றுகளை உற்பத்தி செய்யவும், உற்பத்தி செய்யப்பட்ட நாற்றுகளை நன்கு உயிர்வாழ போதுமான அளவு தயார் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த நிலையில் வான்வழி (ட்ரோன்)மூலம் விதைகளைத் தூவி விதைப்பது தேவையில்லை.

218—

விலையைக் கட்டுப்படுத்துதல்

வினா எண் 2181—திரு. இரா. அருள்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உணவுப்பொருட்களின் கடுமையான விலையேற்றத்தைக் கட்டுப்படுத்திட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

*அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தைக் கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும் அரசு உணவுத் துறை அமைச்சரை தலைவராகக் கொண்டு விலைக் கண்காணிப்புக் குழு (*Price Watch Committee*) ஒன்றை அமைத்து அதன்மூலம் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. முக்கியமாக அரிசி, பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் வகைகளின் விலைகளைக் கண்காணித்து அதன் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த தொடர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.*

*வெளிச்சந்தையில் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் காணப்படும்போது, இதனைக் கட்டுப்படுத்தும் முயற்சியில், அரசு விலைக் கட்டுப்பாட்டு நிதியிலிருந்து (*Price Stabilisation Fund*) விலை உயர்ந்துள்ள பொருட்களை உற்பத்தி மையங்களிலிருந்து கொள்முதல் செய்து இவற்றை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் சில்லறை விற்பனை நிலையங்கள் வாயிலாக பொது மக்களுக்கு மானிய விலையில் விற்பனை செய்து வருகிறது. இதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினை ரூ.50 கோடியிலிருந்து ரூ.100 கோடியாக அரசு உயர்த்தி, விலையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

விலைக் கண்காணிப்புக் குழு மூலம் அத்தியாவசியப் பொருட்களின் விலை விவரங்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன. மேலும், அத்தியாவசியப் பொருட்களின் விலையில் ஏற்றம் ஏற்படின் விலையைக் கட்டுப்படுத்த அரசு உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

219—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 174—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

பாபநாசம் தொகுதி, சாலியமங்கலம் பகுதியில் 110 கே.வி. திறன்கொண்ட துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

சாலியமங்கலம் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

220—

மின் புதைவடங்கள் அமைத்தல்

வினா எண் 179—திரு. ஐட்ரீம். இரா. மூர்த்தி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ராயபுரம் தொகுதி, ராயபுரம் பகுதியில் நிலத்தடியில் புதைக்கப்பட்டு பழுதடைந்துள்ள மின் புதைவடங்களுக்கு (*cable*) மாற்றாக புதிய மின் புதைவடங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராயபுரம் தொகுதி, ராயபுரம் பகுதியில் பழைய 110 கி.வோ. உயரழுத்த 3X120 சதுர மி.மீ. புதைவடங்கள் 12.12 கி.மீ. அளவிற்கு 11 கி.வோ. உயரழுத்த 3X300 சதுர மி.மீ. அதிக மின்பளு திறன்கொண்ட புதிய புதைவடங்களாக இதுவரை மாற்றப்பட்டுள்ளன.

*ராயபுரம் பகுதியில் உள்ள புதைவடத்தில் அதிகமாக பழுதடைந்த வட இணைப்புகள் (*Cable Joint*) இருந்தவை கண்டறியப்பட்டு, அவை அவ்வப்போது புதிய மின் புதைவடங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. இதுவரை 57.7 கி.மீ. பழைய தாழ்வழுத்த புதைவடங்களில் 57.4 கி.மீ. அளவிற்கு புதிய புதைவடங்களாக மாற்றப்பட்டுள்ளன.*

[*2022 மே 6*

221—

மின்னிணைப்பு வழங்குதல்

வினா எண் 427—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், இருமூலை ஊராட்சியில் மின் வசதி இல்லாத ஆதி திராவிடர் குடியிருப்புத் தெருவிற்கு மின்னிணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், கோணுளாம்பள்ளம் பிரிவிற்குட்பட்ட இருமூலை ஊராட்சியில் குடியிருப்புத் தெருவிற்கு மின் வசதி வேண்டி எந்தவித விண்ணப்பமும் நிலுவையில் இல்லை.

222—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 683—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதி, பெருமங்கலம் ஊராட்சியில் புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி தொகுதி, பெருமங்கலம் ஊராட்சியிலிருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ள உலகியநல்லூர் ஊராட்சியில் ஒரு புதிய 110

2022 மே 6]

கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. உலகியநல்லூர் ஊராட்சியில் அமையவிருக்கும் துணை மின் நிலையமே பெருமங்கலம் ஊராட்சியின் மின் தேவையைப் பூர்த்தி செய்ய போதுமானது. எனவே, பெருமங்கலம் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

223—

கன்வேயர் பெல்ட்டை சீரமைத்தல்

வினா எண் 1201—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேட்டூர் அனல் மின் நிலையம்–II–ல் பழுதடைந்துள்ள கன்வேயர் பெல்ட்டினை சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

மேட்டூர் அனல் மின் நிலையம்–II–ல் கன்வேயர் பெல்ட்டின் பழுதுகள் மிகுந்த கவனத்துடன் உடனுக்குடன் சீரமைக்கப்படுகின்றன.

224—

தீ விபத்துகளைத் தடுத்தல்

வினா எண் 1202—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேட்டூர் அனல் மின் நிலையம்–II–ல் ஏற்படும் தீ விபத்துகளைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

மேட்டூர் அனல் மின் நிலையம்–II–ல் தீ தடுப்பு அமைப்பு நிறுவப்பட்டு, தீ ஏற்படாமல் தடுக்கும்வண்ணமும், தீ ஏற்படின்,

மிக விரைவாக அணைக்கும்வண்ணமும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், தீ தடுப்புக் குழாய் மற்றும் நீர் தெளிப்பான் அமைப்பு பாதிக்கப்படக்கூடிய அனைத்து பகுதிகளிலும் நிறுவப்பட்டுள்ளன.

225—

ஊதியம் வழங்குதல்

வினா எண் 1203—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேட்டூர் அனல் மின் நிலையம்–II–ல் பணிபுரியும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு குறித்த நேரத்தில் ஊதியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

மேட்டூர் அனல் மின் நிலையம்–II–ல் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களால் அவர்களின்கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு குறித்த நேரத்தில் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

226—

புதைவடங்கள் அமைத்தல்

வினா எண் 1619—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சி பகுதியில் உள்ள மின் கம்பிகளை பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சி பகுதிகளில் தற்பொழுது மின் கம்பிகளை பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றிட எந்தத் திட்டமும் இல்லை.

227—

மின் கம்பம் அமைத்தல்

வினா எண் 1620—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, திருச்சோற்றுதுறை ஊராட்சி, புதுத்தெரு மயானப் பாதையில் மின் கம்பம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, திருச்சோற்றுதுறை ஊராட்சி, புதுத்தெரு மயானப் பாதையில் மின் கம்பம் அமைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

228—

கூடுதல் மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 1653—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், நெய்குப்பை ஊராட்சி, கீழத்தெரு மாரியம்மன் கோயில் அருகில் கூடுதல் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூர், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், நெய்குப்பை ஊராட்சி, கீழத்தெரு மாரியம்மன் கோயில் அருகில் ஒரு புதிய 100 கே.வி.ஏ. (சிவன் கோயில்) மின்மாற்றி நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

229—

நவீன மின்மாற்றிகள் அமைத்தல்

வினா எண் 1703—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி மற்றும் ஒன்றிய பகுதிகளில் உள்ள பழைய மின்மாற்றிகளுக்கு மாற்றாக நவீன மின்மாற்றிகளை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் நகராட்சி மற்றும் ஒன்றிய பகுதியில் தற்போது அமைந்துள்ள மின்மாற்றிகள் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. எனவே, மின்மாற்றிகளை மாற்ற வேண்டிய அவசியம் தற்போது இல்லை.

230—

மின்மாற்றிகள் அமைத்தல்

வினா எண் 1937—திரு. A.J. மணிக்கண்ணன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

உளுந்தூர்பேட்டை தொகுதியில் போதிய மின்மாற்றிகள் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதியில் தற்போது கீழ்க்கண்ட 1,592 எண்ணிக்கை மின்மாற்றிகள் வாயிலாக சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

16 கே.வி.ஏ.	—	*09*
25 கே.வி.ஏ.	—	*59*
63 கே.வி.ஏ.	—	*41*
75 கே.வி.ஏ.	—	*01*
100 கே.வி.ஏ.	—	*1,288*
200 கே.வி.ஏ.	—	*105*
250 கே.வி.ஏ.	—	*79*
500 கே.வி.ஏ.	—	*10*
மொத்த எண்ணிக்கை	—	*1,592*

இதுதவிர, அதிக மின்பளு கொண்ட மின்மாற்றிகள் மற்றும் குறைந்த மின்னழுத்தம் நிலவும் மின்மாற்றிகள் அவ்வப்போது கண்டறியப்பட்டு, அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

231—

புதிய மின்மாற்றிகள் அமைத்தல்

வினா எண் 3164—திரு. ஜே.ஜே. எபிநேசர் என்கிற ஜான் எபிநேசர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 38, 39, 40, 41, 42, 43 மற்றும் 47 ஆகிய வட்டங்களில் பழுதடைந்துள்ள மின்மாற்றிகளுக்கு மாற்றாக புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதி முழுவதும் கள ஆய்வு செய்யப்பட்டது. டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் உள்ள 38, 39, 40, 41, 42, 43 மற்றும் 47 ஆகிய வட்டங்களில் மொத்தம் 384 எண்ணிக்கை மின்மாற்றிகள் உள்ளன. இதில், 225 மின்மாற்றிகள் வளைய சுற்றுத்தர அமைப்பாக (RMU) ஏற்கெனவே மாற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள 159 மின்மாற்றிகள் யாவும் வளைய சுற்றுத்தர அமைப்பாக (RMU) படிப்படியாக மாற்றியமைக்கப்படும்.

232—

மின்மாற்றியின் தரத்தை உயர்த்துதல்

வினா எண் 3746—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, கடம்பங்குடி ஊராட்சி, தொண்டராம்பட்டியில் உள்ள மின்மாற்றியின் தரத்தை உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, கடம்பங்குடி ஊராட்சி, தொண்டராம்பட்டியில் உள்ள பகுதிக்கு இந்தலூர்–

2022 மே 6]

VIII *63 கே.வி.ஏ. மின்மாற்றிமூலம் 27 மின்னிணைப்புகளுக்கு (வீடு-23, விவசாயம்-1, தற்காலிக மின்னிணைப்பு-1 மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி-2) சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இம்மின்மாற்றியில் இணைக்கப்பட்டிருக்கும் மின்பளு 34 கே.வி.ஏ. மட்டுமே ஆகும். எனவே, அதனை தரமுயர்த்த வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.*

233—

புதைவடங்கள் அமைத்தல்

வினா எண் 9823—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி, கடலூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள மின் கம்பிகளை பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி, கடலூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள மின் கம்பிகளை பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றியமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

234—

பின்னலாடைத் தொழிலுக்கு தனி வாரியம்

வினா எண் 421—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நூல் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தி, திருப்பூர் பின்னலாடைத் தொழிலைப் பாதுகாக்க தனி வாரியம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 மே 6

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொழில் வளர்ச்சிக்காக பின்னலாடைத் தொழில் நடைபெற்றுவரும் திருப்பூரில் "பின்னலாடை வாரியம்" அமைத்திட திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தினர் ஒன்றிய அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளனர். இக்கோரிக்கை ஒன்றிய/மாநில அரசுகளின் கொள்கை முடிவுக்குட்பட்டது என்பதால், பின்னலாடை வாரியம் அமைப்பது தொடர்பான கோரிக்கைகள் பெறப்படும்போது அரசால் பரிசீலனை செய்யப்படும்.

235—

கதர் கிராம விற்பனை மையம்

வினா எண் 719—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேளச்சேரி தொகுதி, விஜயநகர் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கதர் கிராம விற்பனை மையம் (*Kadhi Craft Shop*) அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகரில் குறளகம் கட்டடத்தில் காதி கிராப்ட் எனும் பெயரில் கதர், பட்டு, சோப்பு, தேன் மற்றும் காலணிகள் எனத் தனித்தனிப் பிரிவுகளாக விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், கோயம்பேடு பேருந்து நிலைய வளாகத்தில் கதர் மற்றும் பனைப் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஓர் அங்காடி சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அத்துடன் இணையதளம்மூலம் (*www.tnkvib.org*) கதர் கிராமப் பொருட்களின் விற்பனை நடைபெற்று வருகிறது. இவ்வாறான நிலையில், வேளச்சேரி தொகுதி, விஜயநகர் பகுதியில் மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் காதி கிராமத் தொழில் மையம் அமைத்திட தற்சமயம் அவசியம் எழவில்லை.*

2022 மே 6]

236—

பருத்தி நூற்பாலை அமைத்தல்

வினா எண் 1815—திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியம், மாடப்பள்ளி கிராமத்தில் பருத்தி நூற்பாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியம், மாடப்பள்ளி கிராமத்திலிருந்து சுமார் 30 கிலோ மீட்டர் தொலைவில் ஊத்தங்கரையில் கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை இயங்கி வருகிறது. திருப்பத்தூர் மாவட்டத்தில் 2 தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே இயங்கி வருவதால், இவற்றிற்குத் தேவையான பருத்தி நூல் கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலையிலும் பெறப்பட்டு வருகிறது. மேலும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியம், மாடப்பள்ளி கிராமத்தில் பருத்தி நூற்பாலை அமைப்பது தொடர்பாக கருத்துரு எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

237—

கூட்டுறவுச் சங்க கட்டடம் கட்டுதல்

வினா எண் 1903—திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதியில் கைவினை கலைஞர்களுக்கான கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

[2022 மே 6

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை மட்பாண்ட தொழிற்கூட்டுறவுச் சங்கம், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. 2016–2017 ஆம் ஆண்டில் ரூ.25.33 இலட்சம் செலவில் புனரமைக்க அனுமதிக்கப்பட்டு, இச்சங்கத்தின் கட்டடம் புனரமைப்பு செய்யப்பட்டு இயங்கி வருகிறது. ஏற்கெனவே சொந்தக் கட்டடம் இருப்பதால், புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

238—

ஆயத்த ஆடை பூங்கா அமைத்தல்

வினா எண் 6959—திரு. இரா. அருள்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலத்தில் ஆயத்த ஆடை பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தில் ஆயத்த ஆடை பூங்கா அமைக்க தொழில்முனைவோர்கள் முன்வரும்பட்சத்தில் சேலம் மாவட்டத்தில் ஆயத்த ஆடை பூங்கா அமைப்பதற்கு தமிழக அரசால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

239—

துணை சுகாதார நிலையங்களுக்கு கட்டடம் கட்டுதல்

வினா எண் 204—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

பாபநாசம் தொகுதி, சுவாமிமலை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் கீழ்வரும் இன்னம்பூர், சுவாமிமலை மற்றும் பழவந்தான்கட்டளை ஆகிய துணை சுகாதார நிலையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தில் இன்னம்பூர், சுவாமிமலை மற்றும் பழவந்தான்கட்டளை ஆகிய துணை சுகாதார நிலையங்கள் சொந்தக் கட்டடம் இல்லாததால் தற்சமயம் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. சொந்தக் கட்டடம் கட்ட நிலம் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. நிலம் தேர்வு செய்யப்பட்ட பின்னர் மேற்படி துணை சுகாதார நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

240—

மரபுவழி மருத்துவ முறைகளுக்கு சிறப்புத் திட்டங்கள் உருவாக்குதல்

வினா எண் 206—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மரபுவழி மருத்துவ முறைகளான சித்த மருத்துவம், ஆயுர்வேதம், ஹோமியோபதி மற்றும் யுனானி உள்ளிட்ட மருத்துவ முறைகள் வளர்ச்சிக்கு சிறப்புத் திட்டங்களை உருவாக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

இந்திய மருத்துவ முறைகளான சித்தா, ஆயுர்வேதம், யுனானி, யோகா மற்றும் இயற்கை முறை மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவம் ஆகியவற்றின் வளர்ச்சிக்குத் தேவையான திட்டங்களைத் தொடர்ந்து அரசு உருவாக்கி செயல்படுத்தி வருகிறது. மேலும், இந்திய மருத்துவ முறைகளான சித்தா, ஆயுர்வேதம், யுனானி,

யோகா மற்றும் இயற்கை முறை மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவம் ஆகியவற்றின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டினை முன்னெடுத்துச் செல்லும் நோக்கோடு 1970 ஆம் ஆண்டு இதற்காக இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி என்று தனித் துறையினை ஏற்படுத்தி, இம்மருத்துவ முறைகளின் வளர்ச்சிக்கு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்துறை துவக்கப்பட்ட நாள் முதல் செயல்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்களின் பலனாக இன்று இத்துறையின் கட்டுப்பாட்டில் 7 அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரிகள் மற்றும் 1,535 மருத்துவமனைகள் மற்றும் மருத்துவப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இந்திய மருத்துவ முறைகளில் பிரதானமான சித்தா, ஆயுர்வேதம், யுனானி, யோகா மற்றும் இயற்கை முறை மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆகிய 5 முறைகளிலும் அரசு மருத்துவக் கல்லூரிகள் இருப்பது நமது மாநிலத்தில் மட்டுமே. சித்த மருத்துவத்திற்கு 2 கல்லூரிகளும், யோகா மற்றும் இயற்கை மருத்துவத்திற்கு 2 கல்லூரிகளும், இதர மூன்று மருத்துவ முறைகளுக்கு தலா ஒரு கல்லூரியும் செயல்பட்டு வருகின்றன.

241—

ஜெனரேட்டர் வசதி செய்தல்

வினா எண் 294—திரு. சு. ரவி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், மூதூர் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஜெனரேட்டர் வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை சுகாதார மாவட்டம், அரக்கோணம் தொகுதியில் உள்ள மூதூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஜெனரேட்டர் வழங்கப்பட்டு நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது.

2022 மே 6]

242—

மருத்துவர் மற்றும் செவிலியர் தங்கும் விடுதி கட்டுதல்

வினா எண் 295—திரு. சு. ரவி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், மூதூர் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர் மற்றும் செவிலியர் தங்கும் விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், மூதூர் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மூதூர் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ அலுவலர் குடியிருப்பு தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளது. பொதுப் பணித் துறையினரிடம் இவ்விடத்தின் பழுதுபார்ப்பு பணிகளுக்காக மதிப்பீடு பட்டியல் தற்போது கோரப்பட்டுள்ளது. மதிப்பீடு பட்டியல் பெறப்பட்டவுடன் முன்னுரிமை அடிப்படையில் மூதூர் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ அலுவலர் குடியிருப்பு பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், செவிலியர் குடியிருப்பு 2011-2012 ஆம் நிதியாண்டில் தேசிய ஊரக நலத் திட்ட உதவியின்கீழ் ரூ.7.60 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு நல்லமுறையில் பயன்பாட்டில் உள்ளது.

243—

மருத்துவர் நியமித்தல்

வினா எண் 296—திரு. சு. ரவி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், மூதூர் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு போதிய மருத்துவரை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, மூதூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் வசதி கொண்ட மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்பட்டு வருகிறது. அம்மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் 5 மருத்துவர்கள், 2 பள்ளி நல மருத்துவர்கள், 1 நடமாடும் மருத்துவக் குழு மருத்துவர் என அனைத்து மருத்துவப் பணியிடங்களும் ஒப்பளிக்கப்பட்டு, அனைத்தும் நிரப்பப்பட்டு மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

244—

சிமென்ட் சாலை அமைத்தல்

வினா எண் 301—திரு. சு. ரவி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், மூதூர் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கட்டடங்களுக்கு இடையே சுமார் 500 மீ. சிமென்ட் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், மூதூர் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப

சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மூதூர் பிரதான/ மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் கட்டடங்களுக்கு இடையே சாலை அமைக்க பொதுப் பணித் துறையிடமிருந்து மதிப்பீடு பட்டியல் கோரப்பட்டுள்ளது. மதிப்பீடு பட்டியல் பெறப்பட்டவுடன் முன்னுரிமை அடிப்படையில் மூதூர் பிரதான/ மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் கட்டடங்களுக்கு இடையே சாலை அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

245—

கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல்

வினா எண் 436—திரு. க. செல்வராஜ்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாநகராட்சியின் மக்கள் தொகைக்கேற்ப கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி, நகர்ப்புறத்தை பொறுத்தவரையில் 50,000 மக்கள் தொகைக்கு ஒரு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகிறது. திருப்பூர் மாநகராட்சியில் 17 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. எல்.ஆர்.ஜி.ஆர். நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் வசதி கொண்ட நகர்ப்புற சமுதாய நல நிலையமாக மேம்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றது. ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத் திட்டம் மூலம் 15.வேலம்பாளையம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையமானது மருத்துவமனை அளவிற்கு தரமுயர்த்தப்பட்டு வருகிறது. எனவே, திருப்பூர் மாநகராட்சியில் கூடுதலாக நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

[2022 மே 6

246—

துணை சுகாதார நிலையத்தை மீண்டும் செயல்படுத்துதல்

வினா எண் 437—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் ஒன்றியம், நெருப்பெரிச்சல் ஊராட்சி, வாவிபாளையத்தில் உள்ள துணை சுகாதார நிலையத்தை மீண்டும் செயல்படுத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாநகராட்சி விரிவுபடுத்தப்பட்டதன் காரணத்தினால், வாவிபாளையம் கிராம துணை சுகாதார நிலையம் தற்சமயம் நெருப்பெரிச்சல் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் வாவிபாளையம் நகர்ப்புற துணை சுகாதார நிலையமாக அரசு கட்டடத்தில் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. நகர சுகாதார செவிலியர் மூலமாக தாய்–சேய் நலப் பணிகள், தடுப்பூசி பணிகள், குடும்ப நலம் மற்றும் சிறு நோய்களுக்கு சிகிச்சை அளித்தல் ஆகிய மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

247—

ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 456—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், பேரையூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பேரையூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் நல்ல முறையில் உள்ளதால் புதிய கட்டடம் கட்ட தற்போது தேவை எழவில்லை.

248—

பல் மருத்துவக் கல்லூரி அமைத்தல்

வினா எண் 461—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்ப்பெண்ணாத்தூர் தொகுதியில் புதியதாக பல் மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் படிப்படியாக பல் மருத்துவக் கல்லூரியுடன்கூடிய மருத்துவக் கல்லூரி துவக்க வேண்டுமென்பது அரசின் கொள்கை முடிவாகும். கீழ்ப்பெண்ணாத்தூர் தொகுதி அமைந்துள்ள திருவண்ணாமலை மாவட்டத்தில் ஏற்கெனவே ஓர் அரசு மருத்துவக் கல்லூரி 2011-2012 ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. எனினும், அங்கு பல் மருத்துவக் கல்லூரி துவங்கப்படவில்லை. இந்நிலையில், இனிவருங்காலங்களில் தேவையின் அடிப்படையில், நிதி நிலைமைக்கேற்றவாறு மருத்துவக் கல்லூரி இல்லாத தொகுதிகளில் (பல் மருத்துவக் கல்லூரி உட்பட) மருத்துவக் கல்லூரி தொடங்க விதிகளின்படி ஆய்வு மேற்கொள்ளப்படும்.

249—

ஆரம்ப சுகாதார நிலையம் தரமுயர்த்துதல்

வினா எண் 464—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2022 மே 6

கீழ்ப்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், நார்த்தாம்பூண்டி ஊராட்சியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாக மாற்றிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் நார்த்தாம்பூண்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் இல்லா ஊராட்சி ஒன்றியத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினை தரமுயர்த்துதல் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அரசாணை (நிலை) எண் 43, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 3–2–2011–ன்படி, துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் மங்கலம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே தரமுயர்த்தப்பட்டு, 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, நார்த்தாம்பூண்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தினை தரமுயர்த்துவதற்கான தேவை எழவில்லை.

250—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 465—திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்ப்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், கீழ்கரிப்பூர் ஊராட்சியில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. கீழ்கரிப்பூர் கிராமம், இசுக்கழிகாட்டேரி துணை சுகாதார நிலையத்தையும், ஆனானந்தல் ஆரம்ப சுகாதார நிலையத்தையும் சார்ந்தது. திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தில் ஏழு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. கீழ்கரிப்பூர் கிராமத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் ஆவூர் ஆரம்ப சுகாதார நிலையமும், 8 கிலோ மீட்டர் தொலைவில் ஆனானந்தல் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கீழ்கரிப்பூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகை இல்லை.

பட்டியல் 5

1—

காசநோய் பிரிவிற்குக் கூடுதல் கட்டடம்

வினா எண் 530—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், இராயபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் காசநோய் பிரிவிற்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் இராயபுரம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு

[2022 மே 6

வருகிறது. இராயபுரம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தில் காசநோய் பிரிவிற்கு தனியாக அறை ஒதுக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது. எனவே, இராயபுரம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தில் காசநோய் பிரிவிற்குக் கூடுதல் கட்டடம் கட்ட தற்போது அவசியம் எழவில்லை.

2—

ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம்

வினா எண் 531—முனைவர் T.R.B. ராஜா: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், பரவாக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பரவாக்கோட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட தேசிய நல குழுமத்தின்கீழ் ரூ.60.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பரவாக்கோட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட பரவாக்கோட்டையில் நிலம் தெரிவு செய்யப்பட்டு, பொது சுகாதாரத் துறைக்கு நிலம் மாற்றம் செய்வதற்கான கருத்துரு மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்டுள்ளது. நிலம் மாற்றம் செய்த பின் பொதுப் பணித் துறையின்மூலம் பரவாக்கோட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

2022 மே 6]

3—

துணை சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 533—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், சவளக்காரன் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவாரூர் சுகாதாரப் பகுதி மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியத்தைச் சார்ந்த சாத்தனூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட சவளக்காரன் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று வாடகை இல்லா பஞ்சாயத்து நூலகக் கட்டடத்தில் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. மேலும், சவளக்காரன் கிராம மக்களுக்கு தாய்—சேய் நலப் பணிகள், தடுப்பூசி பணிகள், குடும்ப நலம் மற்றும் சிறு நோய்களுக்கு சிகிச்சை அளித்தல் ஆகிய மருத்துவ சேவைகள் கிராம சுகாதார செவிலியர் மூலமாக கிடைக்கப்பெற்று வருகின்றன. ஏற்கெனவே, சவளக்காரன் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் நல்ல முறையில் செயல்பட்டு வருவதால் சவளக்காரன் கிராமத்தில் புதிய துணை சுகாதார நிலையம் அமைக்க தேவை எழவில்லை.

4—

மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துதல்

வினா எண் 598—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

[2022 மே 6

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் தொகுதி, தாம்பரம் அரசு மருத்துவமனை (இ) குரோம்பேட்டை, 213 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. அங்கு நாளொன்றுக்கு சராசரியாக 1,533 வெளிநோயாளிகளும், 92 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். அம்மருத்துவமனையின் செயல்பாட்டினைக் கருத்தில்கொண்டு, 31 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. ஒப்பளிக்கப்பட்ட அனைத்து மருத்துவர் பணியிடங்களும் நிரப்பப்பட்டு, மருத்துவர்கள் அனைவரும் பணிபுரிந்து வருகின்றனர். எனவே, தாம்பரம் அரசு மருத்துவமனை (இ) குரோம்பேட்டையில் மருத்துவர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்த தற்போது அவசியம் எழவில்லை.

5—

ஆக்ஸிஜன் இணைப்பு வசதி ஏற்படுத்துதல்

வினா எண் 626—திரு துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா——*

(அ) திருவையாறு தொகுதி, திருவையாறு வட்ட மருத்துவமனையில் ஆக்ஸிஜன் இணைப்பு வசதி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, திருவையாறு அரசு மருத்துவமனை 44 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது.

2022 மே 6]

*இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள 44 படுக்கைகளில், 20 படுக்கைகளுக்கு கோவிட்-19 தொற்றுநோய் சிகிச்சை சிறப்பாக வழங்குவதற்காக ஆக்சிஜன் இணைப்பு (*Oxygen Pipeline*) வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இருபது (20) "டி" வகை ஆக்சிஜன் சிலிண்டர்கள் (*D Type Oxygen Cylinder*) மற்றும் பன்னிரெண்டு (12) ஆக்சிஜன் செறிவூட்டிகள் இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்டு மக்களுக்கு சிறப்பான சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.*

6—

சித்த மருத்துவமனை துவங்குதல்

வினா எண் 658—திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதியில் சித்த மருத்துவமனை துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டத்தில் நாளது தேதியில் 27 சித்தா புறநோயாளிகள் சிகிச்சைப் பிரிவுகளும், 15 படுக்கை வசதிகள் கொண்ட ஒரு சித்த மருத்துவமனையும் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. புதிதாக சித்த மருத்துவமனை ஏற்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

7—

மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்துதல்

வினா எண் 660—திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், வீராணம் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் வீராணம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாத ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தினை தரம் உயர்த்துதல் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அரசாணை (நிலை) எண் 153, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை நாள் 25-4-2018-ன்படி ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் நெட்டூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வீராணம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த வழிவகை இல்லை.

8—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 1275—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஒன்றியம், வாணவரெட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. வாணவரெட்டி கிராமம், கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,70,246 ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. மக்கள் தொகை அடிப்படையில் கள்ளக்குறிச்சி ஒன்றியத்தில் மேலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் துவக்குவதற்கு வழிவகை உள்ளது. எனவே, கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க இனிவருங்காலத்தில் முன்னுரிமை அடிப்படையில் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

9—

துணை சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 1276—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் பேரூராட்சியில் உள்ள மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை பொது மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகத்தில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. மேலும், தியாகதுருகம் பேரூராட்சியில் ஈயனூர், கூத்தக்குடி, முடியனூர் மற்றும் குடியநல்லூர் பகுதிகளில் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் இயங்கி வருகின்றன.

[2022 மே 6

மேலும், தியாகதுருகத்திலிருந்து 17 கி.மீ.-ல் கள்ளக்குறிச்சி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும், 25 கி.மீ.-ல் உளுந்தூர்பேட்டை அரசு வட்ட மருத்துவமனையும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. மேலும், உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனை 136 படுக்கை வசதிகளுடன், அரசு வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 1,384 வெளிநோயாளிகளும், 70 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். எனவே, கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் பேரூராட்சியில் உள்ள மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை பொது மருத்துவமனையாக தற்சமயம் தரம் உயர்த்த அவசியம் எழவில்லை.

10—

துணை சுகாதார நிலையம் தரம் உயர்த்துதல்

வினா எண் 1277—திரு. மா. செந்தில்குமார்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதியில் உள்ள ஈயனூர், குடியநல்லூர் மற்றும் மலைக்கோட்டாலம் ஆகிய பகுதிகளிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 320, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 29-9-2003-ன்படி தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியத்தில், தியாகதுருகம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஈயனூர் மற்றும் குடியநல்லூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த வழிவகை இல்லை.

2022 மே 6]

கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தில் மலைக்கோட்டாலம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அரசாணை (நிலை) எண் 142, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 30-4-2007-ன்படி கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தில் மேலூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மலைக்கோட்டாலம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த வழிவகை இல்லை.

11—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 1280—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஒன்றியம், நாகலூர் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. நாகலூர் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. நாகலூர் ஊராட்சி, தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. 1,29,820 மக்கள் தொகை கொண்ட இவ்வூராட்சி ஒன்றியத்தில் 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[2022 மே 6

மக்கள் தொகையின் அடிப்படையில் கள்ளக்குறிச்சி மாவட்டம், தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம், நாகலூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகை இல்லை.

12—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 1281—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சின்னசேலம் ஒன்றியம், காளசமுத்திரம் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. காளசமுத்திரம் ஊராட்சி, சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் 6 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, மக்கள் தொகை அடிப்படையில் கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம், காளசமுத்திரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகை இல்லை.

13—

டயாலிசிஸ் கருவிகள் வழங்குதல்

வினா எண் 1318—திரு. சு. ரவி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் அரசு பொது மருத்துவமனைக்கு கூடுதலாக நான்கு டயாலிசிஸ் கருவிகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் அரசு மருத்துவமனை 186 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 1,652 வெளிநோயாளிகளும், 139 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு, இம்மருத்துவமனைக்கு 4 டயாலிசிஸ் கருவிகள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. மாதமொன்றுக்கு சராசரியாக 20 நோயாளிகளுக்கு 160 இரத்தம் சுத்திகரிப்பு சுழற்சி மேற்கொள்ளப்படுகிறது. தற்சமயம் பயன்பாட்டாளர்களின் அடிப்படையில், அரக்கோணம் அரசு வட்ட மருத்துவமனையில் இயங்கிவரும் 4 டயாலிசிஸ் கருவிகளே போதுமானதாக உள்ளதால், கூடுதலாக நான்கு டயாலிசிஸ் கருவிகள் வழங்குவதற்கு அவசியம் தற்போது எழவில்லை.

14—

ஓமியோபதி, சித்தா, ஆயுர்வேத மருத்துவமனை–மருந்தகம் அமைத்தல்

வினா எண் 1346—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் ஓமியோபதி, சித்தா, ஆயுர்வேத மருத்துவமனை—மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை மாவட்டத்தில் சித்தா, ஆயுர்வேதம், யுனானி, யோகா & இயற்கை மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆகிய ஐந்து இந்திய மருத்துவ முறைகளிலும் சேர்த்து மொத்தமாக 26 பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. அதாவது, 9 சித்த மருந்தகங்களும், 10 யோகா & இயற்கை மருத்துவப் பிரிவுகளும், 5 ஓமியோபதி பிரிவுகளும், 2 ஆயுர்வேத பிரிவுகளும் ஆக மொத்தம் 26 பிரிவுகள் சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் இந்திய மருத்துவ முறை சிகிச்சைக்கு உள்ள தேவையைப் பூர்த்தி செய்ய போதுமானதாக உள்ளன. எனவே, தற்போது வேளச்சேரி தொகுதி, எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் ஓமியோபதி, சித்தா, ஆயுர்வேத மருத்துவமனை-மருந்தகம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

15—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 1828—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் 1-வது டிவிஷன், ஜாகீர் ரெட்டிப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி 50,000 மக்கள் தொகைக்கு ஒரு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் தோற்றுவிக்கப்படுகின்றது. ஜாகீர் ரெட்டிப்பட்டி பகுதி பழைய சூரமங்கலம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்தது. சேலம் மாநகராட்சியில் ஏற்கெனவே 16 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், ஜாகீர் ரெட்டிப்பட்டி பகுதியிலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் சுப்ரமணிய நகர் நகர்ப்புற ஆரம்ப சுகாதார

2022 மே 6]

நிலையம் செயல்பட்டு வருகிறது. எனவே, சேலம் 1-வது டிவிஷன், ஜாகீர் ரெட்டிப்பட்டியில் புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

16—

மருத்துவமனையை மருத்துவக் கல்லூரியாக தரம் உயர்த்துதல்

வினா எண் 1862—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, NLCIL *நிறுவன மருத்துவமனையை மருத்துவக் கல்லூரியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதியானது, கடலூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. கடலூர் மாவட்டத்தில் உள்ள இராஜா முத்தையா மருத்துவக் கல்லூரியானது, அரசாணை எண் 16, உயர் கல்வி (எச்1) துறை நாள் 27-1-2021-ன்படி அரசு மருத்துவக் கல்லூரியாக 150 எம்.பி.பி.எஸ். மாணவர் சேர்க்கையுடன் செயல்பட்டு வருவதாலும், நெய்வேலி தொகுதியானது கடலூரிலிருந்து 48 கி.மீ. தொலைவிலேயே இருப்பதாலும், நெய்வேலி தொகுதியில் உள்ள NLCIL *நிறுவன மருத்துவமனையை மருத்துவக் கல்லூரியாகத் தரம் உயர்த்த தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.*

17—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 2249—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *திருவையாறு தொகுதி, இளங்காடு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஒர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. இளங்காடு கிராமம், பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இளங்காடு கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், இளங்காடு கிராமத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் மாரனேரி ஆரம்ப சுகாதார நிலையமும், 3 கிலோ மீட்டர் தொலைவில் திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருகின்றன. எனவே, தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஊராட்சி ஒன்றியம், இளங்காடு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகை இல்லை.

18—

மருத்துவமனையை மீண்டும் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல்

வினா எண் 2365—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், அத்தியூர் ஊராட்சியில் குருகூர் மருத்துவமனையை மீண்டும் பயன்பாட்டிற்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் சுகாதாரப் பகுதி மாவட்டம், கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கொத்தங்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ், அத்தியூர் துணை சுகாதார நிலையம், குருகூர் கிராமத்தில் கிழக்கு தெரு என்ற இடத்தில் 1960 ஆம் ஆண்டு முதல் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வந்தது. மேற்படி, குருகூர் கிராமத்தில் இயங்கி வந்த அத்தியூர் துணை சுகாதார நிலையக் கட்டடம் பழுதடைந்து, பயன்படுத்த இயலாத நிலையில் இருந்ததால், பொது மக்கள் மற்றும் நோயாளிகளின் நலன் கருதி வாடகைக் கட்டடத்தில் "அத்தியூர் துணை சுகாதார நிலையம், காளியம்மன் கோயில் தெரு, மெயின் ரோடு, தேவனாஞ்சேரி" என்ற இடத்திற்கு மாற்றப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது. குருகூர் கிராமத்தில் உள்ள பழுதான கட்டடத்திற்கு பொதுப் பணித் துறைமூலம் முறையான ஒப்பந்தம் பெறப்பட்டு, உரிய நிதி ஒதுக்கீடு பெற்று புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அத்தியூர் ஊராட்சி மக்களுக்கு தாய்—சேய் நலப் பணிகள், தடுப்பூசி பணிகள், குடும்ப நலம் மற்றும் சிறு நோய்களுக்கு சிகிச்சை அளித்தல் ஆகிய மருத்துவ சேவைகள் கிராம சுகாதார செவிலியர் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது.

19—

இரவுப் பணியில் மருத்துவர்களை நியமித்தல்

வினா எண் 2398—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதியில் உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் இரவுப் பணியில் மருத்துவர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதியில் 150 படுக்கை வசதிகள் கொண்ட பொன்னேரி அரசு வட்ட மருத்துவமனை மற்றும் 32 படுக்கை வசதிகள் கொண்ட பழவேற்காடு அரசு வட்டம் சாரா மருத்துவமனை மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரக நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது.

பொன்னேரி அரசு வட்ட மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 681 வெளிநோயாளிகளும், 50 உள்நோயாளிகளும், பழவேற்காடு அரசு வட்டம் சாரா மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 382 வெளிநோயாளிகளும், 26 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

பொன்னேரி மற்றும் பழவேற்காடு அரசு மருத்துவமனைகளில் முறையே, 19 மற்றும் 4 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு, அனைத்து மருத்துவர்களும் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், கூடுதலாக ஒரு மருத்துவர் மாற்றுப் பணிமூலம் பழவேற்காடு அரசு மருத்துவமனைக்கு பணியமர்த்தப்பட்டு பணியில் உள்ளார். தற்போது பணியில் உள்ள மருத்துவர்கள், செவிலியர்கள் மருத்துவம் சாரா மற்றும் இதர பணியாளர்களைக் கொண்டு சுழற்சி முறையில் நோயாளிகளுக்கு 24X7 மணி நேரமும் சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

20—

ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்துதல்

வினா எண் 2400—திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதியில் உள்ள தேவம்பட்டு, பஞ்செட்டி ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்தில் தேவம்பட்டு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. 30 படுக்கை வசதிகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாத ஊராட்சி ஒன்றியத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினை தரம் உயர்த்துதல் என்பது அரசின் கொள்கை முடிவாகும்.

அரசாணை (நிலை) எண் 338, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 11-12-2012-ன்படி திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மீஞ்சூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. எனவே, இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தேவம்பட்டு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த வழிவகை இல்லை.

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஊராட்சி ஒன்றியத்தில் பஞ்செட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அரசாணை (நிலை) எண் 52, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 21-2-2014-ன்படி திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பூதூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. எனவே, இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பஞ்செட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த வழிவகை இல்லை.

21—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 2462—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2022 மே 6

(அ) திருவையாறு தொகுதி, பூதலூர் ஒன்றியம், ஆவாரம்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. ஆவாரம்பட்டி கிராமம், பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், ஆவாரம்பட்டி கிராமத்திலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் பாளையப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையமும், 8 கிலோ மீட்டர் தொலைவில் பூதலூர் அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருகின்றன. எனவே, தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஊராட்சி ஒன்றியம், ஆவாரம்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகை இல்லை.

22—

மருத்துவமனையாக தரம் உயர்த்துதல்

வினா எண் 2950—திரு. A. நல்லதம்பி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் மாவட்டம், ஆண்டியப்பனூர் மருத்துவ வட்டாரம், பிச்சனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தினை 30 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

2022 மே 6]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் பிச்சனூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாத ஊராட்சி ஒன்றியத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினை தரம் உயர்த்துதல் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அரசாணை (நிலை) எண் 142, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 30-4-2007-ன்படி திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆண்டியப்பனூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையமும், அரசாணை (நிலை) எண் 52, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 21-2-2014-ன்படி திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள புதூர்நாடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும் ஏற்கெனவே 30 படுக்கை வசதிகளுடன்கூடிய மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக தரம் உயர்த்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. எனவே, பிச்சனூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தினை தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறு இல்லை.

23—

கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 2956—திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகராட்சி பகுதியில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் நகராட்சி பகுதியில், திருப்பத்தூர் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் திருப்பத்தூர் நகராட்சி வளாகத்தில், சொந்தக் கட்டடத்தில் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. எனவே, திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகராட்சிப் பகுதியில் கூடுதல் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

24—

ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துதல்

வினா எண் 3012—திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, பெருமத்தூர் ஊராட்சி, A—Block-ல் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. பெருமாத்தூர் கிராமம், நெய்வேலி பொது சுகாதார மையக் கட்டுப்பாட்டில் உள்ளது. பெருமாத்தூர் பகுதியில் ஒரு மருத்துவர் கொண்ட நெய்வேலி பொது சுகாதார மையம் செயல்பட்டு வருகிறது. மேலும், பெருமாத்தூர் கிராமத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் மருங்கூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. எனவே, கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியத்தில்

2022 மே 6]

உள்ள பெருமாத்தூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகை இல்லை.

25—

ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்துதல்

வினா எண் 3031—திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *மானாமதுரை தொகுதி, மானாமதுரை முத்தனேந்தல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *அரசாணை (நிலை) எண் 293, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 12—10—2001—ன்படி சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள முத்தனேந்தல் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.*

26—

ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துதல்

வினா எண் 3032—திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *மானாமதுரை தொகுதி, சாலை கிராமம் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

[2022 மே 6

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 52, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 21-2-2014-ன்படி சிவகங்கை மாவட்டம், இளையான்குடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சாலைக் கிராமம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

27—

மருத்துவக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 3065—திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சோழிங்கநல்லூர் தொகுதி, சோழிங்கநல்லூரில் மருத்துவக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சோழிங்கநல்லூர் தொகுதியானது, காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்ததெனினும் சென்னை மண்டல எல்லைக்குள் அமைந்துள்ளது. சென்னை மாவட்டத்தில் கீழ்க்காணும் இருக்கைகளுடன் நான்கு அரசு மருத்துவக் கல்லூரிகள் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன.

சென்னை அரசு மருத்துவக் கல்லூரி - 250 எம்.பி.பி.எஸ்.

ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி - 250 எம்.பி.பி.எஸ்.

கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி - 150 எம்.பி.பி.எஸ்.

அரசு ஓமந்தூரார் மருத்துவக் கல்லூரி - 100 எம்.பி.பி.எஸ்.

2022 மே 6]

மேலும், சோழிங்கநல்லூருக்கு வெகு அருகில் உள்ள செங்கல்பட்டு மாவட்டத்திலும் அரசு மருத்துவக் கல்லூரி செயல்பட்டு வருகிறது.

மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவது என்பது மாநில அரசின் கொள்கை முடிவாகும். தமிழக அரசானது, மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

28—

மருத்துவக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 3574—திரு. கோ. ஐயப்பன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *கடலூர் தொகுதி, கடலூரில் புதிய மருத்துவக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவது என்பது மாநில அரசின் கொள்கை முடிவாகும். தமிழக அரசானது, மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மேலும், கடலூர் மாவட்டத்தில் முன்னதாக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின்கீழ் இருந்த இராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி, 27-1-2021-ம் நாளிட்ட உயர் கல்வி (எச்.1) துறை, அரசாணை (நிலை) எண் 16 மற்றும் 2021 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தமிழ்நாடு சட்ட எண் 23/2021, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை, இரண்டாம் திருத்தச் சட்டத்தின்படி கடலூர் அரசு மருத்துவக்

கல்லூரியாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின்கீழ் செயல்பட்டு வருகிறது.

29—

உள்நோயாளிகளுக்கு உணவுப் பொருட்கள் வழங்குதல்

வினா எண் 4178—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிள்ளியூர் தொகுதி, கருங்கல் அரசு மருத்துவமனையிலுள்ள உள்நோயாளிகளுக்கு உணவுப் பொருட்கள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதி, கருங்கல் அரசு மருத்துவமனை 18 படுக்கை வசதிகளுடன்கூடிய அரசு வட்ட மருத்துவமனையாக இயங்கி வருகிறது.

இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 285 வெளிநோயாளிகள், 9 உள்நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இம்மருத்துவமனையிலுள்ள உள்நோயாளிகளுக்கு உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

30—

மருத்துவக் கல்லூரி துவங்குதல்

வினா எண் 4210—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற அடிப்படையில், மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரி துவங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவது என்பது மாநில அரசின் கொள்கை முடிவாகும். தமிழக அரசானது, மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதனடிப்படையில், மத்திய அரசின் நிதியுதவித் திட்டத்தின்கீழ் புதியதாக 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் மத்திய, மாநில அரசின் பங்கீட்டின்படி இராமநாதபுரம், விருதுநகர், நீலகிரி, திண்டுக்கல், திருப்பூர், நாமக்கல், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, திருவள்ளூர், கள்ளக்குறிச்சி மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களில் 2021-2022 ஆம் கல்வியாண்டு முதல் மாணவர் சேர்க்கை தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், வரும் ஆண்டுகளில் மருத்துவக் கல்லூரி இல்லாத எஞ்சிய மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு படிப்படியாக விதிகளின்படி ஆய்வு மேற்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

31—

ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் பணியாளர் விடுதி அமைத்தல்

வினா எண் 5518—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியம், கோவிலூற்று கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் பணியாளர் விடுதி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் கோவிலூற்று கிராமத்தில் ஏற்கெனவே கூடுதல்

ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. கோவிலூற்று கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு மருத்துவர் குடியிருப்பு மற்றும் ஒரு செவிலியர் குடியிருப்பு நல்ல முறையில் உள்ளது.

32—

ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துதல்

வினா எண் 5520—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியத்திற்குட்பட்ட மருதம்புத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள நெட்டூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மருதம்புத்தூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

33—

ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துதல்

வினா எண் 5521—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) *ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியத்திற்குட்பட்ட நெட்டூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *அரசாணை (நிலை) எண் 153, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 25-4-2018-ன்படி தென்காசி மாவட்டம், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள நெட்டூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.*

34—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 6847—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியம், மேல ஆம்பூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி*

[2022 மே 6

எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. மேல ஆம்பூர் கிராமம், கடையம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், மேல ஆம்பூர் கிராமத்திலிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவில் வடக்கு பாப்பான்குளம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதியதாகத் தோற்றுவிப்பது தொடர்பான நியதியின்படி, கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் மேலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் துவக்குவதற்கு வழிவகை உள்ளது. எனவே, தென்காசி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம், மேல ஆம்பூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க இனிவருங்காலத்தில் முன்னுரிமை அடிப்படையில் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

35—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 7126—திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, கீழ்மாம்பட்டு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியிலும் (Norms) ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. கீழ்மாம்பட்டு ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. மேலும், கீழ்மாம்பட்டு ஊராட்சியிலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் காடாம்புலியூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. எனவே, கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியத்தில்

2022 மே 6]

உள்ள கீழ்மாம்பட்டு ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகை இல்லை.

36—

மலைக் கோயிலுக்கு கம்பிவட ஊர்தி அமைத்தல்

வினா எண் 145—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்போரூர் தொகுதி, திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் மலைக் கோயிலுக்கு கம்பிவட ஊர்தி (*Rope Car*) அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றத்தில் எழுந்தருளியுள்ள அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலில் சுவாமியை வழிபட 560 கருங்கல் படிக்கட்டுக்கள் உள்ளன. பக்தர்கள் சுலபமாக மலை ஏறுவதற்கும், இறங்குவதற்கும் தனித்தனி பாதைகள் கைப்பிடி சுவருடன் உள்ளன. எனவே, தற்போது உயரம் அதிகமுள்ள மலைக்கோயில்களுக்கு கம்பிவட ஊர்தி (ரோப் கார்) வசதி ஏற்படுத்தி முடித்த பின்னர், நிதி நிலையைக் கருத்தில்கொண்டு இத்திருக்கோயிலுக்கு கம்பிவட ஊர்தி (ரோப் கார்) அமைத்திட பரிசீலிக்கப்படும்.

37—

திருக்கோயில் குளத்தில் படித்துறை கட்டுதல்

வினா எண் 498—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, கர்ணாவூர் ஊராட்சி, அரவத்தூர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் குளத்தில் படித்துறை கட்ட அரசு ஆவன செய்யுமா?

[2022 மே 6

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

மன்னார்குடி தொகுதி, கர்ணாவூர் ஊராட்சி, அரவத்தூர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் நேரடி கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயிலாகும். எனவே, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் குளத்திற்கு இந்து சமய அறநிலையத் துறையால் படித்துறை கட்ட இயலாது.

38—

குடமுழுக்கு நடத்துதல்

வினா எண் 688—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதியில் உள்ள உலகியநல்லூர், வரஞ்சரம், கள்ளக்குறிச்சி ஆகிய பகுதிகளில் உள்ள சிவன் கோயில்களை புனரமைத்து, குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

1) அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், உலகியநல்லூர், கள்ளக்குறிச்சி வட்டம் மற்றும் மாவட்டம்

கள்ளக்குறிச்சி மாவட்டம் மற்றும் வட்டம், உலகியநல்லூர், அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில் தொன்மையான திருக்கோயில் என்பதால் திருப்பணி செய்வது குறித்து இந்து சமய அறநிலையத் துறையின் தற்போதைய நடைமுறையின்படி தொல்லியல் துறை வல்லுநர் கருத்துரு பெற்று, அதனடிப்படையில் மண்டல மற்றும் மாநில அளவிலான Heritage Screening Committee-ன் *பரிசீலனைக்கு வைக்கப்பட்டதில், மேற்படி குழுவால், திருக்கோயிலை நேரில் ஆய்வு செய்து கருத்துரு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி குழுவின் கருத்துரு அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு திருப்பணி மேற்கொள்ளப்படும்.*

2022 மே 6]

2) அருள்மிகு பசுபதீஸ்வரர் திருக்கோயில், வரஞ்சரம், கள்ளக்குறிச்சி வட்டம் மற்றும் மாவட்டம்

கள்ளக்குறிச்சி மாவட்டம் மற்றும் வட்டம், வரஞ்சரம் கிராமத்தில் உள்ள அருள்மிகு பசுபதீஸ்வரர் திருக்கோயில் திருப்பணி குறித்து இத்துறையின் தற்போதைய நடைமுறையின்படி தொல்லியல் துறை வல்லுநர் கருத்துரு பெற்று, மண்டல, மாநில அளவிலான Heritage Screening Committee *மற்றும் மாண்பமை உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுக்களின் பரிசீலனைக்கு வைத்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. எனவே, பெறப்பட்ட கருத்துருவின் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு திருப்பணி மேற்கொள்ளப்படும்.*

3) அருள்மிகு சிதம்பரேஸ்வரர் திருக்கோயில், கள்ளக்குறிச்சி நகர், வட்டம் மற்றும் மாவட்டம்

கள்ளக்குறிச்சி மாவட்டம், வட்டம் மற்றும் நகர் அருள்மிகு சிதம்பரேஸ்வரர் திருக்கோயில் மிகவும் தொன்மையான திருக்கோயில் என்பதால் திருப்பணி செய்வது குறித்து இத்துறையின் தற்போதைய நடைமுறையின்படி தொல்லியல் துறை வல்லுநர் கருத்துரு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து மண்டல, மாநில அளவிலான Heritage Screening Committee *மற்றும் மாண்பமை உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுக்களின் பரிசீலனைக்கு வைத்து, பெறப்படும் கருத்துருவின் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு திருப்பணி மேற்கொள்ளப்படும்.*

39—

திருத்தேர் செய்தல்

வினா எண் 727—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, அருள்மிகு தண்டீஸ்வரர் கோயிலுக்குப் புதியதாக திருத்தேர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, வேளச்சேரி, அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயிலில் நான்கு மாடவீதிகளும் குறுகலாக உள்ளதால் திருத்தேர் திருவீதி உலா வருவதற்கு வழிவகை இல்லை. எனவே, தற்போது இத்திருக்கோயிலுக்கு புதிய திருத்தேர் செய்ய அவசியம் எழவில்லை.

40—

குளத்தை சீரமைத்தல்

வினா எண் 729—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் குளத்தைத் தூர்வாரி சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவான்மியூர், அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் தெப்பக்குளம் திருக்கோயிலுக்கு வெளியே வடகிழக்குப் பகுதியில், 2.73 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இத்திருக்குளம் தூர்வாரப்பட்டு, களிமண் படுகை இடப்பட்டு, சுமார் 5 அடி ஆழத்தில் நீர் உள்ளது. இத்திருக்குளத்தின் நாற்புறங்களிலும் நான்கு இரும்புக் கதவுகள் பொருத்தப்பட்டு நல்ல நிலையில் பாதுகாப்புடன் உள்ளது. இத்திருக்குளத்திற்கு மழைக் காலங்களில் நீர்வரத்துக்காக நான்கு மாடவீதிகளிலும் மழைநீர் வடிகால்வாய் கட்டப்பட்டு, கால்வாய் வழியாக திருக்குளத்திற்குள் மழைநீர் வந்து சேரும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், திருக்குளத்தின் நாற்புறங்களிலும் தொட்டிகள் அமைக்கப்பட்டு, சாலைகளில் சேகரமாகும் மழைநீர் தொட்டிகளில் சேகரமாகி, குழாய்கள் வழியாக

2022 மே 6]

திருக்குளத்திற்குள் விழுகின்றது. திருக்குளத்தில் நீர் நிரம்பி நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

41—

தங்கும் அறைகள் அமைத்தல்

வினா எண் 731—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, திருவான்மியூரில் உள்ள பாம்பன் சுவாமிகள் உடனுறை அருள்மிகு மயூரநாத சுவாமி கோயில் வளாகத்தில் வெளியூரிலிருந்து வரும் பக்தர்கள் தங்குவதற்கு தங்கும் அறைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பாம்பன் சுவாமிகள் ஜீவசமாதி ஆன இடத்தில் அருள்மிகு பாம்பன் சுவாமி உடனுறை மயூரநாத சுவாமி திருக்கோயில் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் நிலம் உரிமை தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்திலும் மற்றும் புதுதில்லி உச்ச நீதிமன்றத்திலும் வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளது.

மேற்படி வழக்குகள் முடிந்தவுடன், சட்டமன்ற உறுப்பினர் வினாவிற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

42—

திருக்கோயிலை அறநிலையங்கள் துறையின்கீழ் இணைத்தல்

வினா எண் 1155—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2022 மே 6

நெய்வேலி தொகுதி, வானதிராயபுரம் ஊராட்சி, தெற்கு மேலூர் அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயிலை அறநிலையங்கள் துறையின்கீழ் இணைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், வானதிராயபுரம் (தெற்கு மேலூர்) அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில் சுமார் 200 ஆண்டுகள் பழமையான திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் திரு. துரைசாமி செட்டியார் என்பவரால் தற்போது நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலை இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

43—

தொன்மையான கோயில்களைப் பாதுகாத்தல்

வினா எண் 1205—திரு. இரா. அருள்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தின் மிகத் தொன்மையான கோயில்களைப் பாதுகாக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் 36,000-க்கும் மேற்பட்ட திருக்கோயில்கள் உள்ளன. இத்திருக்கோயில்களுக்கு ஆகம விதிப்படி குடமுழுக்கு செய்து, 12 ஆண்டுகள் முடிவுற்ற திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு செய்யப்பட வேண்டும். தற்போதைய நடைமுறையின்படி தொல்லியல் துறையின் கருத்துரு பெற்று மண்டல அளவிலான Heritage Screening Committee, மாநில அளவிலான Heritage Screening Committee மற்றும் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் அமைத்த வல்லுநர் குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டு, அக்குழுவின்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2022 மே 6]

தீர்மானத்தின்படி மதிப்பீடு தயார் செய்து, உரிய அலுவலர்களின் அனுமதி பெற்று திருப்பணி செய்யப்பட்டு வருகிறது. மேலும், இப்பணியினை விரைவுபடுத்தி இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் தொன்மை மாறாமல் திருப்பணி செய்து அவற்றினைப் பாதுகாக்க விரைவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

44—

புராதன கோயில்களை புனரமைத்தல்

வினா எண் 1206—திரு. இரா. அருள்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் சிதிலமடைந்துள்ள புராதன கோயில்களைப் புனரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களுக்கு தற்போதைய நடைமுறையின்படி தொல்லியல் துறையின் கருத்துரு பெற்று, மண்டல அளவிலான Heritage Screening Committee, *மாநில அளவிலான* Heritage Screening Committee *மற்றும் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் அமைத்த வல்லுநர் குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டு, அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அனுமதிகள் வழங்கப்பட்டு திருப்பணி செய்யப்பட்டு வருகிறது. மேலும், மாண்பமை உயர் நீதிமன்றத்தால் ஏற்படுத்தப்பட்ட வல்லுநர் குழு 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொன்மையான திருக்கோயில்களின் திருப்பணி குறித்த பொருண்மைகளை பரிசீலிக்கும்போது அத்திருக்கோயிலில் பயன்படுத்திய கட்டுமானப் பொருட்களைக் கொண்டு தொன்மை மாறாமல் புதுப்பிக்கவும், இக்கட்டுமானத்தை வலிமைப்படுத்தவும் மட்டுமே அனுமதி வழங்கப்படுகிறது. மேலும், இவ்வாறான சிதிலமடைந்த தொன்மை வாய்ந்த திருக்கோயில் திருப்பணி மேற்கொள்ளும்போது, தொல்லியல் துறை வல்லுநர்கள், கட்டுமானங்களைப் புனரமைப்பதில் தேர்ச்சி பெற்ற பணியாளர்கள்*

ஆகியோரைக் கொண்டு திருப்பணி மேற்கொள்ள வேண்டிய நிலை உள்ளதால், சிதிலமடைந்த தொன்மையான திருக்கோயில்களில் திருப்பணி மேற்கொள்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. இருப்பினும், சிதிலமடைந்த தொன்மையான திருக்கோயில்களின் திருப்பணியினை தொன்மை மாறாமல் திருப்பணி செய்ய விரைவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

45—

குளங்கள் மற்றும் நீர்நிலைகளைப் பாதுகாத்தல்

வினா எண் 1207—திரு. இரா. அருள்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருக்கோயில்களுக்குச் சொந்தமான குளங்கள் மற்றும் நீர்நிலைகளைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான 2,359 திருக்குளங்கள் உள்ளன. இவற்றில் சீரமைப்பு செய்ய வேண்டிய 1,068 திருக்குளங்கள் தேர்வு செய்யப்பட்டு, தற்போதுவரை 912 திருக்குளங்கள் தூர்வாரி, படித்துறை அமைத்து செப்பனிடப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தற்போது மீதமுள்ள நீர்நிலைகளையும் பாதுகாக்கும்பொருட்டு, சார்நிலை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு, திருக்குளத் திருப்பணிகளை மேற்கொள்ள துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

46—

திருக்கோயில் நிலங்களை மீட்டல்

வினா எண் 1214—திரு. இரா. அருள்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

தமிழக கோயில் நிலங்களை தனியார் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்க தனிக் குழு அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

அறநிறுவனங்களுக்குச் சொந்தமான நிலம்/கட்டடம்/மனை போன்றவற்றில் ஆக்கிரமிப்புகள், அனுமதியற்ற கட்டுமானங்கள் ஆகியவை கண்டறியப்பட்டு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம், 1959-ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, தமிழக திருக்கோயில் நிலங்களை தனியார் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்க தனிக் குழு அமைக்க வேண்டிய சூழல் எழவில்லை.

47—

சிலைகள் மற்றும் நகைகளைப் பாதுகாத்தல்

வினா எண் 1216— திரு. இரா. அருள்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோயில்களில் உள்ள சிலைகள் மற்றும் நகைகளைப் பாதுகாக்க உறுதியான பாதுகாப்பு அறைகளை (strong room) அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள பல திருக்கோயில்களில் தொன்மை வாய்ந்த உலோகத் திருமேனிகள் மற்றும் கற்சிலைகள் பாதுகாப்பதற்கென முதற்கட்டமாக ஏறத்தாழ 3,087 பாதுகாப்பறைகள் கட்ட வேண்டியுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. இத்திருக்கோயில்களில் பாதுகாப்பு அறை கட்டவும், அந்த அறையில் உலோகத் திருமேனிகள் மற்றும் கற்சிலைகள் வைத்து பாதுகாக்கவும், களவு எச்சரிக்கை மணி மற்றும் கண்காணிப்பு கேமரா பொருத்தவும் உத்தேசமாக ஒரு திருக்கோயிலுக்கு ரூ.10.00 இலட்சம் வீதம் கணக்கிடப்பட்டு,

[2022 மே 6

*ரூ.308.70 கோடி இந்து சமய அறக்கட்டளைகள் நிர்வாக நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், முதற்கட்டமாக 103 திருக்கோயில்களுக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அதற்கான திருத்திய வடிவமைப்பு (*Revised Design*) தயார் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி திருத்தப்பட்ட வடிவமைப்பு வரப்பெற்றவுடன் பாதுகாப்பறை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும். மேலும், பாதுகாப்பறை அமையவுள்ள அனைத்துத் திருக்கோயில்களுக்கும் உரிய மதிப்பீடு தயார் செய்து, விரைவில் பாதுகாப்பறை அமைப்பதற்கு இத்துறைமூலம் விரைவு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

48—

அறங்காவலர்கள் நியமித்தல்

வினா எண் 1217—திரு. இரா. அருள்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழக திருக்கோயில்களில் அறங்காவலர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

அறங்காவலர் நியமனம் அரசின் கொள்கை முடிவுக்கு உட்பட்டதாகும்.

49—

ஓதுவார் மற்றும் அர்ச்சகர் பணியிடங்களை நிரப்புதல்

வினா எண் 1219—திரு. இரா. அருள்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழக திருக்கோயில்களில் காலியாக உள்ள ஓதுவார் மற்றும் அர்ச்சகர் பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள அனைத்துத் திருக்கோயில்களிலும் காலியாகவுள்ள ஓதுவார் மற்றும் அர்ச்சகர் பணியிடங்களை சட்ட விதிகளின்படி பணி நியமனம் செய்வதற்கு நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

50—

புகைப்படங்களை இணையதளத்தில் பதிவேற்றுதல்

வினா எண் 1220—திரு. இரா. அருள்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அனைத்துத் திருக்கோயில்களில் உள்ள சிலைகள் மற்றும் நகைகளை புகைப்படம் எடுத்து இணையதளத்தில் பதிவேற்ற அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

திருக்கோயில்களில் சிலைகள் மற்றும் நகைகளை புகைப்படம் எடுத்து இணையதளத்தில் பதிவேற்றம் செய்வது திருக்கோயில் நலனுக்கு பாதுகாப்பற்றதாகும். எனவே, இணையதளத்தில் பதிவு செய்ய இயலாது.

51—

குடமுழுக்கு நடத்துதல்

வினா எண் 1591—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, கண்டியூர், அருள்மிகு அரசாபவிமோசனப் பெருமாள் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 மே 6

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, கண்டியூர், அருள்மிகு அரசாபவிமோசனப் பெருமாள் திருக்கோயில் மிகவும் தொன்மையான திருக்கோயில் என்பதால், திருப்பணி செய்வது குறித்து இந்து சமய அறநிலையத் துறையின் தற்போதைய நடைமுறையின்படி, தொல்லியல் துறை வல்லுநர் கருத்துரு பெற்று, அதன் அடிப்படையில் 3-5-2018 அன்று மண்டல அளவிலான குழுவிலும் மற்றும் 28-5-2019—ல் மாநில அளவிலான Heritage Screening Committee*—ன் பரிசீலனைக்கு வைக்கப்பட்டதில், மாண்பமை உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி குழுவின் கருத்துரு பெறப்பட்டு, அதனடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு திருப்பணி மேற்கொள்ளப்படும்.*

52—

திருப்பணி செய்தல்

வினா எண் 1592—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, அகரப்பேட்டை, அருள்மிகு வேணுகோபால சுவாமி ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, அகரப்பேட்டை,

2022 மே 6]

அருள்மிகு வேணுகோபால சுவாமி மற்றும் ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில் மிகவும் தொன்மையான திருக்கோயில் என்பதால், திருப்பணி செய்வது குறித்து இந்து சமய அறநிலையத் துறையின் தற்போதைய நடைமுறையின்படி, தொல்லியல் துறை வல்லுநர் கருத்துரு பெற்று, அதன் அடிப்படையில் மண்டல, மாநில அளவில் Heritage Screening Committee *மற்றும் 22-7-2021 அன்று நடைபெற்ற மாண்பமை உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டது. எனவே, மேற்படி குழுவில் வழங்கப்பட்ட கருத்துருவின் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு திருப்பணி மேற்கொள்ளப்படும்.*

53—

திருப்பணி செய்தல்

வினா எண் 1593—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, அடஞ்சூர், அருள்மிகு .திரு. அனந்தீஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, அடஞ்சூர், அருள்மிகு திருஅனந்தீஸ்வரர் திருக்கோயில் மிகவும் தொன்மையான திருக்கோயில் என்பதால், திருப்பணி செய்வது குறித்து இந்து சமய அறநிலையத் துறையின் தற்போதைய நடைமுறையின்படி, தொல்லியல் துறை வல்லுநர் கருத்துரு பெற்று அதன் அடிப்படையில் 20-11-2020 அன்று மண்டல அளவிலான Heritage Screening Committee *மற்றும்*

[2022 மே 6

3-8-2021 அன்று நடைபெற்ற மாநில அளவிலான Heritage Screening Committee-ல் பரிசீலனைக்கு வைக்கப்பட்டது. எனவே, மேற்படி குழுவில் வழங்கப்பட்ட கருத்துருவின் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு திருப்பணி மேற்கொள்ளப்படும்.

54—

திருப்பணி செய்தல்

வினா எண் 1594—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, இந்தளூர், அருள்மிகு அம்மையப்ப சுவாமி திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, இந்தளூர், அருள்மிகு அம்மையப்ப சுவாமி திருக்கோயில் மிகவும் தொன்மையான திருக்கோயில் என்பதால், திருப்பணி செய்வது குறித்து இந்து சமய அறநிலையத் துறையின் தற்போதைய நடைமுறையின்படி, தொல்லியல் துறை வல்லுநரின் கருத்துரு பெற விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. கருத்துரு பெற்று அதன் அடிப்படையில் மண்டல, மாநில அளவிலான Heritage Screening Committee மற்றும் மாண்பமை உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் பரிசீலனைக்கு உட்படுத்தி பெறப்படும் கருத்துருவின் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, திருப்பணி மேற்கொள்ளப்படும்.

55—

திருப்பணி செய்தல்

வினா எண் 1595—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 மே 6]

(அ) திருவையாறு தொகுதி, கண்டியூர், அருள்மிகு பிரம்மசிரக் கண்டீஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, கண்டியூர், அருள்மிகு பிரம்மசிரக் கண்டீஸ்வரர் திருக்கோயில் மிகவும் தொன்மையான திருக்கோயில் என்பதால், திருப்பணி செய்வது குறித்து இந்து சமய அறநிலையத் துறையின் தற்போதைய நடைமுறையின்படி, தொல்லியல் துறை வல்லுநர் கருத்துரு பெற்று அதன் அடிப்படையில் 3-5-2018 அன்று மண்டல அளவிலான குழுவிலும் மற்றும் 22-5-2019 மாநில அளவிலான Heritage Screening Committee-*ன் பரிசீலனைக்கு வைக்கப்பட்டதில் மாண்பமை உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.*

எனவே, மேற்படி குழுவின் கருத்துரு பெறப்பட்டு, அதனடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு திருப்பணி மேற்கொள்ளப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

56—

திருப்பணி செய்தல்

வினா எண் 1596—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, கண்டமங்கலம், அருள்மிகு வாத்தலைநாச்சியம்மன் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2022 மே 6*

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, கண்டமங்கலம், அருள்மிகு வாத்தலைநாச்சியம்மன் திருக்கோயில் மிகவும் தொன்மையான திருக்கோயில் என்பதால், திருப்பணி செய்வது குறித்து இத்துறையின் தற்போதைய நடைமுறையின்படி, தொல்லியல் துறை வல்லுநர் கருத்துரு பெறப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பெறப்பட்டுள்ள கருத்துருவின் அடிப்படையில் மண்டல, மாநில அளவிலான Heritage Screening Committee *மற்றும் மாண்பமை உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுக்களின் பரிசீலனைக்கு வைத்து பெறப்படும் கருத்துருவின் அடிப்படையில், மதிப்பீடு தயார் செய்யப்பட்டு திருப்பணி மேற்கொள்ளப்படும்.*

57—

திருப்பணி செய்தல்

வினா எண் 1597—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, கண்டமங்கலம், அருள்மிகு வேணுகோபால சுவாமி திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, கண்டமங்கலம், அருள்மிகு வேணுகோபால சுவாமி திருக்கோயிலுக்கு கடந்த 2008 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்றது. இத்திருக்கோயில் மிகவும் தொன்மையான திருக்கோயில் என்பதால், மண்டல அளவிலான குழுவிலும் மற்றும் மாநில அளவிலான Heritage Screening Committee—*ன் பரிசீலனைக்கு வைக்கப்பட்டு, உயர் நீதிமன்றத்தால்*

அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. குழுவின் பரிந்துரை பெறப்பட்ட பின்னர், அதனடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு திருப்பணி மேற்கொள்ளப்படும்.

58—

திருப்பணி செய்தல்

வினா எண் 1598—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, சாத்தனூர், அருள்மிகு லெட்சுமி நாராயணப் பெருமாள் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, சாத்தனூர் அருள்மிகு லெட்சுமி நாராயணப் பெருமாள் திருக்கோயில் மிகவும் தொன்மையான திருக்கோயில் என்பதால், திருப்பணி செய்வது குறித்து இந்து சமய அறநிலையத் துறையின் தற்போதைய நடைமுறையின்படி, தொல்லியல் துறை வல்லுநர் கருத்துரு பெற்று, அதன் அடிப்படையில் 21-2-2021 அன்று நடைபெற்ற மண்டல அளவிலான குழுவில் பரிசீலனைக்கு வைக்கப்பட்டதில் மாநில அளவிலான Heritage Screening Committee மற்றும் மாண்பமை உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி குழுவின் கருத்துரு பெறப்பட்டு, அதனடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு திருப்பணி மேற்கொள்ளப்படும்.

[2022 மே 6

59—

திருப்பணி செய்தல்

வினா எண் 1599—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, செந்தலை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, செந்தலை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் மிகவும் தொன்மையான திருக்கோயில் என்பதால், திருப்பணி செய்வது குறித்து இத்துறையின் தற்போதைய நடைமுறையின்படி, தொல்லியல் துறை வல்லுநர் கருத்துரு பெற்று, அதன் அடிப்படையில் மண்டல, மாநில அளவில் Heritage Screening Committee *மற்றும் மாண்பமை உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டது. எனவே, மேற்படி குழுவில் வழங்கப்பட்ட கருத்துருவின் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. விரைவில் உரிய அனுமதி பெற்று, திருப்பணி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

60—

திருப்பணி செய்தல்

வினா எண் 1602—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளி, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, திருக்காட்டுப்பள்ளி, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மிகவும் தொன்மையான திருக்கோயில் என்பதால், திருப்பணி செய்வது குறித்து இந்து சமய அறநிலையத் துறையின் தற்போதைய நடைமுறையின்படி, தொல்லியல் துறை வல்லுநர் கருத்துரு பெற்று, அதன் அடிப்படையில் மண்டல, மாநில அளவில் Heritage Screening Committee மற்றும் மாண்பமை உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் பரிசீலனைக்கு உட்படுத்தி பெறப்படும் கருத்துருவின் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு திருப்பணி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

61—

திருப்பணி செய்தல்

வினா எண் 1603—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளி, அருள்மிகு அக்னீஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, திருக்காட்டுப்பள்ளி, அருள்மிகு

அக்னீஸ்வரர் சுவாமி திருக்கோயில் மிகவும் தொன்மையான திருக்கோயில் என்பதால், திருப்பணி செய்வது குறித்து இந்து சமய அறநிலையத் துறையின் தற்போதைய நடைமுறையின்படி, தொல்லியல் துறை வல்லுநர் கருத்துரு பெற்று, அதன் அடிப்படையில் மண்டல, மாநில அளவில் Heritage Screening Committee *மற்றும் மாண்பமை உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டது. மேற்படி குழுவில் வழங்கப்பட்ட கருத்துருவின் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. விரைவில் உரிய அனுமதி பெற்று திருப்பணி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

62—

திருப்பணி செய்தல்

வினா எண் 1604—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளி, அருள்மிகு கோட்டை காளியம்மன் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளி, அருள்மிகு கோட்டை காளியம்மன் திருக்கோயில் மிகவும் தொன்மையான திருக்கோயில் என்பதால், திருப்பணி செய்வது குறித்து இந்து சமய அறநிலையத் துறையின் தற்போதைய நடைமுறையின்படி, தொல்லியல் துறை வல்லுநர் கருத்துரு பெற்று, அதன் அடிப்படையில் மண்டல, மாநில அளவில் Heritage Screening Committee *மற்றும் மாண்பமை உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டது. எனவே, மேற்படி குழுவில் வழங்கப்பட்ட கருத்துருவின் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. விரைவில் உரிய அனுமதி பெற்று திருப்பணி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

2022 மே 6]

63—

திருப்பணி செய்தல்

வினா எண் 1605—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, திருச்சோற்றுத்துறை, அருள்மிகு ஓதவனேஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, திருச்சோற்றுத்துறை, அருள்மிகு ஓதவனேஸ்வரர் சுவாமி திருக்கோயில் மிகவும் தொன்மையான திருக்கோயில் என்பதால், திருப்பணி செய்வது குறித்து இந்து சமய அறநிலையத் துறையின் தற்போதைய நடைமுறையின்படி, தொல்லியல் துறை வல்லுநர் கருத்துரு பெற்று, அதன் அடிப்படையில் மண்டல, மாநில அளவில் Heritage Screening Committee *மற்றும் மாண்பமை உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டது. மேற்படி குழுவில் வழங்கப்பட்ட கருத்துருவின் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. விரைவில் உரிய அனுமதி பெற்று திருப்பணி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

64—

திருப்பணி செய்தல்

வினா எண் 1606—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, திருப்பழனம், அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, திருப்பழனம், அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் சுவாமி திருக்கோயிலில் கடந்த 2005 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. இத்திருக்கோயில் தொன்மையான திருக்கோயில் என்பதால், திருப்பணி செய்வது தொடர்பாக இத்துறையின் தற்போதைய நடைமுறையின்படி, தொல்லியல் துறை வல்லுநர் கருத்துரு பெற்று அதன் அடிப்படையில் 8-11-2019 அன்று மண்டல அளவிலான குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டு, மாநில அளவிலான (Heritage Screening Committee) குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேற்படி குழுவின் கருத்துரு பெறப்பட்ட பின்னரே திருப்பணி மேற்கொள்ளப்படும்.

65—

திருப்பணி செய்தல்

வினா எண் 1607—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, தில்லைஸ்தானம், அருள்மிகு நெய்யாடியப்பர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், தில்லைஸ்தானம், அருள்மிகு நெய்யாடியப்பர்

2022 மே 6]

*திருக்கோயிலில் 2001 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. இத்திருக்கோயில் தொன்மையான திருக்கோயில் என்பதால், திருப்பணி செய்வது தொடர்பாக தற்போதைய நடைமுறையின்படி, தொல்லியல் துறை வல்லுநர் கருத்துரு பெற்று அதன் அடிப்படையில் 25-10-2018 அன்று மண்டல அளவிலான குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டு, மாநில அளவிலான (*Heritage Screening Committee*) மற்றும் மாண்பமை உயர் நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட வல்லுநர் குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேற்படி வல்லுநர் குழுவின் கருத்துரு பெறப்பட்ட பின்னரே திருப்பணி மேற்கொள்ளப்படும்.*

66—

திருப்பணி செய்தல்

வினா எண் 1608—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, தில்லைஸ்தானம், அருள்மிகு கிருதபுரீஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, தில்லைஸ்தானம், அருள்மிகு கிருதபுரீஸ்வரர் திருக்கோயில் மிகவும் தொன்மையான திருக்கோயில் என்பதால், திருப்பணி செய்வது குறித்து இத்துறையின் தற்போதைய நடைமுறையின்படி, தொல்லியல் துறை வல்லுநர் கருத்துரு பெற்று அதன் அடிப்படையில் 25-10-2018 அன்று நடைபெற்ற மண்டல அளவிலான குழுவில் பரிசீலனைக்கு வைக்கப்பட்டதில், மாநில அளவிலான Heritage Screening Committee *மற்றும் மாண்பமை உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.*

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

எனவே, மேற்படி குழுவின் கருத்துரு பெறப்பட்டு, அதனடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, திருப்பணி மேற்கொள்ளப்படும்.

67—

திருப்பணி செய்தல்

வினா எண் 1609—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, தோகூர், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, தோகூர், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் தொன்மையான திருக்கோயில் என்பதால், திருப்பணி செய்வது குறித்து இத்துறையின் தற்போதைய நடைமுறையின்படி, தொல்லியல் துறை வல்லுநரின் கருத்துரு பெற விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. கருத்துரு பெற்று, அதன் அடிப்படையில் மண்டல மற்றும் மாநில அளவிலான Heritage Screening Committee-களின் பரிசீலனைக்கு உட்படுத்தி பெறப்படும் கருத்துருவின் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, திருப்பணி மேற்கொள்ளப்படும்.

68—

திருப்பணி செய்தல்

வினா எண் 1610—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 மே 6]

(அ) திருவையாறு தொகுதி, நடுக்காவேரி, அருள்மிகு ஹரிபிரம்மேஸ்வரர் மற்றும் லெட்சுமி நாராயணப் பெருமாள் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, நடுக்காவேரி, அருள்மிகு ஹரிபிரம்மேஸ்வர சுவாமி மற்றும் லெட்சுமி நாராயணப் பெருமாள் திருக்கோயில் தொன்மையான திருக்கோயில் என்பதால், திருப்பணி செய்வது குறித்து தற்போதைய நடைமுறையின்படி, தொல்லியல் துறை வல்லுநரின் கருத்துரு பெற விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. கருத்துரு பெற்று, அதன் அடிப்படையில் மண்டல, மாநில அளவிலான Heritage Screening Committee *மற்றும் மாண்பமை உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுக்களின் பரிசீலனைக்கு உட்படுத்தி பெறப்படும் கருத்துருவின் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, திருப்பணி மேற்கொள்ளப்படும்.*

69—

திருப்பணி செய்தல்

வினா எண் 1611—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, மகாராஜபுரம், அருள்மிகு மூலநாதர் மற்றும் லெட்சுமி நாராயணப் பெருமாள் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 மே 6

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, மகாராஜபுரம், அருள்மிகு மூலநாதர் மற்றும் லெட்சுமி நாராயணப் பெருமாள் திருக்கோயில் தொன்மையான திருக்கோயில் என்பதால், திருப்பணி செய்வது குறித்து இந்து சமய அறநிலையத் துறையின் தற்போதைய நடைமுறையின்படி, தொல்லியல் துறை வல்லுநரின் கருத்துரு பெற விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. கருத்துரு பெற்று, அதன் அடிப்படையில் மண்டல மற்றும் மாநில அளவிலான Heritage Screening Committee-*களின் பரிசீலனைக்கு உட்படுத்தி, பெறப்படும் கருத்துருவின் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, திருப்பணி மேற்கொள்ளப்படும்.*

70—

திருப்பணி செய்தல்

வினா எண் 1612—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, பழமாநேரி, அருள்மிகு சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, பழமாநேரி, அருள்மிகு சுந்தரேஸ்வரர் சுவாமி திருக்கோயில் மிகவும் தொன்மையான திருக்கோயில் என்பதால், திருப்பணி செய்வது குறித்து இத்துறையின் தற்போதைய நடைமுறையின்படி, தொல்லியல் துறை

2022 மே 6]

வல்லுநர் கருத்துரு பெற்று, அதன் அடிப்படையில் 8-11-2019 அன்று நடைபெற்ற மண்டல அளவிலான குழுவில் பரிசீலனைக்கு வைக்கப்பட்டதில், மாநில அளவிலான Heritage Screening Committee *மற்றும் மாண்பமை உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி குழுவின் கருத்துரு பெறப்பட்டு, அதனடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு திருப்பணி மேற்கொள்ளப்படும்.*

71—

திருப்பணி செய்தல்

வினா எண் 1613—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, மாரநேரி, அருள்மிகு பசுபதீஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, மாரநேரி, அருள்மிகு பசுபதீஸ்வர சுவாமி திருக்கோயில் மிகவும் தொன்மையான திருக்கோயில் என்பதால், திருப்பணி செய்வது குறித்து இத்துறையின் தற்போதைய நடைமுறையின்படி, தொல்லியல் துறை வல்லுநர் கருத்துரு பெற்று, அதன் அடிப்படையில் மண்டல அளவிலான குழு மற்றும் மாநில அளவிலான Heritage Screening Committee *மற்றும் மாண்பமை உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுக்களின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டு, பெறப்பட்ட கருத்துருவின் அடிப்படையில் மதிப்பீடுகள் தயார் செய்து, உரிய அனுமதி பெற்று 80% திருப்பணி நிறைவடைந்துள்ளது.*

[2022 மே 6

72—

திருப்பணி செய்தல்

வினா எண் 1614—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, மேலத்திருப்பந்துருத்தி, அருள்மிகு புஷ்பவனேஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, மேலத்திருப்பந்துருத்தி, அருள்மிகு புஷ்பவனேஸ்வரர் திருக்கோயில் மிகவும் தொன்மையான திருக்கோயில் என்பதால், திருப்பணி செய்வது குறித்து இத்துறையின் தற்போதைய நடைமுறையின்படி, தொல்லியல் துறை வல்லுநர் கருத்துரு பெற்று, அதன் அடிப்படையில் 25-10-2018 அன்று நடைபெற்ற மண்டல அளவிலான குழுவில் பரிசீலனைக்கு வைக்கப்பட்டதில், மாநில அளவிலான Heritage Screening Committee *மற்றும் மாண்பமை உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி குழுவின் கருத்துரு பெறப்பட்டு, அதனடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு திருப்பணி மேற்கொள்ளப்படும்.*

73—

திருப்பணி செய்தல்

வினா எண் 1615—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, ரெங்கநாதபுரம், அருள்மிகு திருவானேஸ்வரர் மற்றும் லெட்சுமி நாராயணப் பெருமாள்

2022 மே 6]

திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, ரெங்கநாதபுரம், அருள்மிகு திருவானேஸ்வரர் மற்றும் லெட்சுமி நாராயணப் பெருமாள் திருக்கோயில் தொன்மையான திருக்கோயில் என்பதால், திருப்பணி செய்வது குறித்து இத்துறையின் தற்போதைய நடைமுறையின்படி, தொல்லியல் துறை வல்லுநரின் கருத்துரு பெற விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. கருத்துரு பெற்று, அதன் அடிப்படையில் மண்டல மற்றும் மாநில அளவிலான Heritage Screening Committee-*களின் பரிசீலனைக்கு உட்படுத்தி பெறப்படும் கருத்துருவின் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு திருப்பணி மேற்கொள்ளப்படும்.*

74—

திருப்பணி செய்தல்

வினா எண் 1616—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, வடுகக்குடி, சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, வடுகக்குடி, அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் தொன்மையான திருக்கோயில் என்பதால், திருப்பணி செய்வது குறித்து தற்போதைய நடைமுறையின்படி,

[2022 மே 6

தொல்லியல் துறை வல்லுநரின் கருத்துரு பெற விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. கருத்துரு பெற்று, அதன் அடிப்படையில் மண்டல மற்றும் மாநில அளவிலான Heritage Screening Committee-களின் பரிசீலனைக்கு உட்படுத்தி பெறப்படும் கருத்துருவின் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு திருப்பணி மேற்கொள்ளப்படும்.

75—

திருப்பணி செய்தல்

வினா எண் 1617—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, விஷ்ணம்பேட்டை, அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, விஷ்ணம்பேட்டை, அருள்மிகு கைலாசநாதர் சுவாமி திருக்கோயில் மிகவும் தொன்மையான திருக்கோயில் என்பதால், திருப்பணி செய்வது குறித்து இத்துறையின் தற்போதைய நடைமுறையின்படி, தொல்லியல் துறை வல்லுநர் கருத்துரு பெற்று, அதன் அடிப்படையில் மண்டல அளவிலான குழு மற்றும் மாநில அளவிலான Heritage Screening Committee மற்றும் மாண்பமை உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் பரிசீலனைக்கு வைத்து பெறப்பட்ட கருத்துருவின் அடிப்படையில், மதிப்பீடுகள் தயார் செய்து உரிய அனுமதி பெற்று 100% திருப்பணி நிறைவடைந்துள்ளது. விரைவில் குடமுழுக்கு நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2022 மே 6]

76—

திருப்பணி செய்தல்

வினா எண் 1618—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, வெண்டையம்பட்டி, அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, வெண்டையம்பட்டி, அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் திருக்கோயில் மிகவும் தொன்மையான திருக்கோயில் என்பதால், திருப்பணி செய்வது குறித்து இந்து சமய அறநிலையத் துறையின் தற்போதைய நடைமுறையின்படி, தொல்லியல் துறை வல்லுநர் கருத்துரு பெற்று, அதன் அடிப்படையில் 20-11-2020 அன்று நடைபெற்ற மண்டல அளவிலான குழுவில் பரிசீலனைக்கு வைக்கப்பட்டதில், மாநில அளவிலான Heritage Screening Committee *மற்றும் மாண்பமை உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி குழுவின் கருத்துரு பெறப்பட்டு, அதனடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு திருப்பணி மேற்கொள்ளப்படும்.*

77—

திருப்பணி செய்தல்

வினா எண் 1647—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், முள்ளங்குடி ஊராட்சி, முள்ளங்குடி கிராமம்,

தெற்கு தெருவில் உள்ள அருள்மிகு மாணிக்கநாச்சியார் அம்மன் மற்றும் அருள்மிகு செல்லமுத்து மாரியம்மன் திருக்கோயில்களின் திருப்பணிக்கு நிதி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அருள்மிகு ஸ்ரீமாணிக்கநாச்சியார் அம்மன் மற்றும் ஸ்ரீசெல்லமுத்து மாரியம்மன் திருக்கோயில்கள் இத்துறை கட்டுப்பாட்டில் இல்லாத ஆதி திராவிடர் வசிக்கும் பகுதியில் உள்ள திருக்கோயில்களாகும்.

மேற்படி திருக்கோயில்களில் ஸ்ரீசெல்லமுத்து மாரியம்மன் திருக்கோயிலுக்கு 2017-2018 ஆம் நிதியாண்டில் ஆதி திராவிடர் பகுதி திருப்பணி நிதியுதவி திட்டத்தின்கீழ் திருப்பணி செய்வதற்கு நிதியுதவி ரூ.1,00,000/- வழங்கப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலில் பணிகள் முடிவுற்று விரைவில் குடமுழுக்கு நடத்த தெருவாசிகளால் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அருள்மிகு மாணிக்கநாச்சியம்மன் திருக்கோயில் திருப்பணி தொடர்பாக எதிர்வரும் காலங்களில் ஆதி திராவிடர்/ பழங்குடியினர் திருப்பணி நிதியுதவி திட்டத்தின்கீழ் ரூ.1,00,000/- வழங்க பரிசீலிக்கப்படும்.

78—

குடமுழுக்கு நடத்துதல்

வினா எண் 1664—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, சோழபுரம் பேரூராட்சியில் உள்ள அருள்மிகு பைரவேஸ்வரர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் வட்டம், சோழபுரம், அருள்மிகு பைரவேஸ்வரர் திருக்கோயிலில் கடந்த 16-9-2011 அன்று குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் நிறைவடையவில்லை. இத்திருக்கோயிலுக்கு அடுத்த குடமுழுக்கு 12 ஆண்டுகள் முடிவுற்றவுடன் நடத்த பரிசீலிக்கப்படும்.

79—

தங்கும் விடுதி கட்டுதல்

வினா எண் 1665—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், திருநாகேஸ்வரம், அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயிலுக்கு தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் வட்டம், திருநாகேஸ்வரம், அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் வசதிக்காக குறைந்த வாடகையில் திருக்கோயில் அமைந்துள்ள சன்னதி தெருவில் ஒரு தங்கும் விடுதி உள்ளது. இதில் முதல் தளத்தில் 10 அறைகளும், தரை தளத்தில் (சுமார் 30 நபர்கள் தங்கும் வகையில்) ஒரு பொது அறையும் மற்றொரு புதிய தங்கும் விடுதியில் (cottage) தரை தளத்தில் 5 அறைகளும், அவற்றுள் இரண்டு ஏ.சி. அறைகளும்; முதல் தளத்தில் நான்கு அறைகளும், அவற்றுள் இரண்டு ஏ.சி. அறைகளும் உள்ளன.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2022 மே 6

80—

தங்கும் விடுதி கட்டுதல்

வினா எண் 1666—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், நாதன்கோவில், அருள்மிகு ஜெகந்நாத பெருமாள் கோயிலுக்கு தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், நாதன்கோவில், அருள்மிகு ஜெகந்நாத பெருமாள் திருக்கோயில், திருநெல்வேலி, நாங்குநேரி ஸ்ரீவானமாமலை ஜீயர் மடம் நிர்வாகத்திற்கு உட்பட்டது. தற்போது ஸ்ரீமடத்தில் நிதி இல்லாத காரணத்தால் மேற்படி திருக்கோயிலில் தங்கும் விடுதி கட்ட இயலாது.

81—

மின் உற்பத்தி செய்தல்

வினா எண் 1667—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்தில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து கோயில்களிலும் சூரிய ஒளிமூலம் மின் உற்பத்தி செய்யும் திட்டத்தை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்தில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள நிதி வசதியுள்ள திருக்கோயில்களில் ஏற்கெனவே 2013-2014 ஆம் ஆண்டு சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டவாறு நான்கு திருக்கோயில்களில் இத்திட்டம் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, பின்னர் நிறுத்தப்பட்டுள்ளது. தற்போதைய நிலையில், கும்பகோணம் தொகுதி திருக்கோயில்களில் சூரிய ஒளிமூலம் மின் உற்பத்தி செய்யும் திட்டம் ஏதுமில்லை.

82—

திருப்பணி செய்தல்

வினா எண் 1814—திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியம், மடவாளம் கிராமத்தில் உள்ள அருள்மிகு அங்கநாதீஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், மடவாளம், அருள்மிகு அங்கநாதீஸ்வரர் திருக்கோயில் மிகவும் பழமை வாய்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் சுவாமி சன்னதி, விமானம், அம்பாள் சன்னதி மற்றும் விமானம், முன்மண்டபம், ராஜகோபுரம், திருமதில்சுவர் ஆகிய பழுதடைந்தவற்றை புதுப்பித்து திருப்பணிகளை மேற்கொள்ள, தொல்லியல் துறையின் கருத்துருவின் அடிப்படையில், மண்டல, மாநில மற்றும் மாண்பமை உயர் நீதிமன்ற வல்லுநர் குழு குறிப்புரைகளின்படி

TRUTH ALONE TRIUMPHS

ரூ.37.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, நிர்வாக அனுமதி மற்றும் மதிப்பீடு அங்கீகாரம் வேண்டி பெறப்பட்ட முன்மொழிவு பரிசீலிக்கப்பட்டதில், மாண்பமை உயர் நீதிமன்ற வல்லுநர் குழு குறிப்புரைகளின்படி, தேவையான பணிகளை மட்டும் மேற்கொள்ள மதிப்பீட்டினை திருத்தம் செய்து, மீள சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டு, வேலூர் உதவிக் கோட்டப் பொறியாளரால் 16-7-2021 அன்று நேரடி ஸ்தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, பெறப்பட்டுள்ள திருத்திய முன்மொழிவு பரிசீலிக்கப்பட்டு, விரைவில் அனுமதி வழங்கப்படவுள்ளது.

83—

குடமுழுக்கு நடத்துதல்

வினா எண் 1943—திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை தொகுதியில் உள்ள அருள்மிகு பரிமள ரெங்கநாதர் கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை தொகுதியில் உள்ள அருள்மிகு பரிமள ரெங்கநாதர் திருக்கோயிலில் கடந்த 2009 ஆம் ஆண்டில் குடமுழுக்கு நடைபெற்றது. 12 ஆண்டுகள் முடிவடைந்த நிலையில் மீண்டும் குடமுழுக்கு நடத்திட தொல்லியல் துறையின் கருத்துரு பெறப்பட்டு, மண்டல கமிட்டியில் வைக்கப்பட்டது. தற்போது 24-8-2021 அன்று சென்னை ஆணையர் அலுவலகத்தில் நடைபெறும் மாநில அளவிலான ஹெரிடேஜ் கமிட்டியில் பரிசீலிக்கப்படவுள்ளது. மேற்கண்ட மாநில கமிட்டியில் அங்கீகாரம் பெறப்பட்டவுடன், சென்னை மாண்பமை உயர் நீதிமன்றத்தால் ஏற்படுத்தப்பட்ட வல்லுநர் குழுவில் அங்கீகாரம் பெறப்பட்டு, அதனடிப்படையில் திருப்பணி செய்ய திருக்கோயில் நிர்வாகத்தால் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

2022 மே 6]

84—

குடமுழுக்கு நடத்துதல்

வினா எண் 1957—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்தில் பழுதடைந்துள்ள கோயில்களைப் புனரமைத்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

கும்பகோணம் சட்டமன்றத் தொகுதியில், இந்து சமய அறநிலையத் துறை ஆளுகைக்குட்பட்ட பட்டியலை சேர்ந்த 105 திருக்கோயில்களும் மற்றும் பட்டியலைச் சேராத 262 திருக்கோயில்களும் உள்ளன. இவற்றில், பட்டியலில் சேர்ந்த 6 திருக்கோயில்களும் மற்றும் பட்டியலில் சேராத 8 திருக்கோயில்களும் சிதிலமடைந்துள்ளன. இத்திருக்கோயில்களில் திருப்பணி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

85—

தமிழில் அர்ச்சனை செய்தல்

வினா எண் 1959—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்தில் உள்ள அருள்மிகு ஆதி கும்பேஸ்வரர் கோயிலில் தமிழில் அர்ச்சனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 மே 6

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் நகர், அருள்மிகு ஆதி கும்பேஸ்வர சுவாமி திருக்கோயிலில் "அன்னைத் தமிழில் அர்ச்சனை" செய்யப்பட்டு வருகிறது.

மேலும், "அன்னைத் தமிழில் அர்ச்சனை" செய்யும் அர்ச்சகர்கள் பெயரும் மற்றும் தொலைபேசி எண்கள் குறித்த பதாகையும் திருக்கோயிலில் வைக்கப்பட்டுள்ளன.

86—

ஒருகால பூஜை நடத்துதல்

வினா எண் 1962—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதியில் உள்ள அனைத்துத் திருக்கோயில்களிலும் ஒருகால பூஜை திட்டத்தின்கீழ், ஒருகால பூஜை நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம், இந்து சமய அறநிலையத் துறை உதவி ஆணையர் கட்டுப்பாட்டில் உள்ள பட்டியலைச் சாராத திருக்கோயில்களில், கும்பகோணம் சட்டமன்றத் தொகுதியில் மொத்தம் 262 திருக்கோயில்கள் உள்ளன. இவற்றில், 173 திருக்கோயில்களில் தமிழக அரசின் ஒருகால பூஜை திட்டத்தின்கீழ், பூஜை நடைபெற்று வருகிறது. எஞ்சிய 89 திருக்கோயில்களில் கிராம மக்கள் மற்றும் உபயதாரர்கள்மூலம் தினசரி பூஜைகள் நடைபெற்று வருகின்றன. ஒருகால பூஜை திட்டத்தின்கீழ் இல்லாத 89 திருக்கோயில்களுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டுமெனில் தலா ஒரு திருக்கோயிலுக்கு ரூ.10,000/- வீதம் உபயதாரர்கள் நன்கொடையாக அளிக்க வேண்டும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2022 மே 6]

அவ்வாறு நன்கொடை வழங்க முன்வரும்பட்சத்தில் அரசின் பங்களிப்பாக ரூ.90,000/- வழங்கப்பட்டு, கூடுதல் தொகை ரூ.1,00,000/- திருக்கோயில் பெயரில் ஒருகால பூஜை திட்டத்தில் முதலீடு செய்யப்பட்டு, அதன்மூலம் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு ஒருகால பூஜை திட்டத்தினைச் செயல்படுத்த இயலும். இதன்மூலம் அத்திருக்கோயில்கள் பயன்பெறும்.

87—

திருப்பணி செய்தல்

வினா எண் 3737—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, மாத்தூர் மேற்கில் உள்ள அருள்மிகு ஔஷதபுரீஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, மாத்தூர், அருள்மிகு ஔஷதபுரீஸ்வரர் திருக்கோயில் மிகவும் தொன்மையான திருக்கோயில் என்பதால், திருப்பணி செய்வது குறித்து இந்து சமய அறநிலையத் துறையின் தற்போதைய நடைமுறையின்படி, தொல்லியல் துறை வல்லுநர் கருத்துரு பெற்று, அதன் அடிப்படையில் 6-9-2017 அன்று நடைபெற்ற மண்டல அளவிலும், 8-3-2019 அன்று நடைபெற்ற மாநில அளவிலான Heritage Screening Committee *மற்றும் 22-7-2021 அன்று நடைபெற்ற மாண்பமை உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுக்களின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டு, பெறப்பட்ட கருத்துருவின் அடிப்படையில், மதிப்பீடு தயார் செய்யப்பட்டு திருப்பணி செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

[2022 மே 6

88—

கருவூலக் கிளை அமைத்தல்

வினா எண் 722—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதியில் கருவூலக் கிளையை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை மாவட்டம், வேளச்சேரி வட்டத்தில் நாளது தேதியன்று சார்-கருவூலம் ஏதும் செயல்படவில்லை. சார்-கருவூலங்கள் இல்லாத வட்டத் தலைமையிடங்களில் புதிய சார்-கருவூலங்கள் அமைப்பது குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிக்க அரசாணை (நிலை) எண் 324, நிதித் (க.க.3) துறை, நாள் 27-9-2018-ன்படி குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதன்படி அமைக்கப்பட்ட சென்னை மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு, சென்னை மாவட்டம், வேளச்சேரி வட்டத்தில் புதிய சார்-கருவூலம் அமைக்க ஆய்வு செய்து, அரசின் வருவாய் மற்றும் செலவின பரிவர்த்தனைகளை சென்னையிலுள்ள சம்பளக் கணக்கு அலுவலகங்களில் மேற்கொள்வதாகவும் மற்றும் முத்திரைத்தாட்கள் விநியோகம் சென்னையிலுள்ள மயிலாப்பூர்தி-திருவல்லிக்கேணி, மாம்பலம்-கிண்டி, பெரம்பூர்—புரசைவாக்கம், எழும்பூர்-நுங்கம்பாக்கம், புனிதக்கோட்டை, தண்டையார்பேட்டை ஆகிய அலுவலகங்களின்மூலம் மேற்கொள்ளப்படுகிறது எனவும் தெரிவித்து, சென்னை மாவட்டம், வேளச்சேரி வட்டத்தில் புதிய சார்-கருவூலம் அமைக்க அவசியம் இல்லை என பரிந்துரை செய்துள்ளது. இதனால், வேளச்சேரி தொகுதியில் கருவூலக் கிளையை அமைப்பதற்கான அவசியம் எழவில்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

2022 மே 6]

89—

இணையவழிமூலம் பொருட்கள் வாங்குதல்

வினா எண் 3208—திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாநில அரசு மற்றும் அதன் சார்பு நிறுவனங்களில் அனைத்துப் பொருட்களும் இணையவழியின்மூலம் வாங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 207, நிதி (சம்பளங்கள்) துறை, நாள் 4-7-2017—ல் வெளியிடப்பட்ட ஆணையின்படி ஒன்றிய அரசின் இணையவழி அரசு மின்சந்தை (*GeM*) முறையை ஒன்றிய அரசால் அவ்வப்போது வெளியிடப்படும் நெறிமுறைகள், வரையறைகளுடன்* Directorate General of Supplies and Disposals *(*DGSD*)-ல் குறிப்பிடப்பட்டபடி தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்வதென முடிவு செய்தது. அதன்படி அரசுத் துறைகள், அரசின் பொதுத் துறை நிறுவனங்கள், அரசால் உருவாக்கப்பட்ட சட்டபூர்வ வாரியங்கள், உள்ளாட்சி அமைப்புகள், கூட்டுறவு மற்றும் மாநிலத்தில் உள்ள நிறுவனங்கள், அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் சங்கங்கள் ஆகிய நிறுவனங்கள் விருப்ப அடிப்படையில் கொள்முதல் செய்வதற்கு நடைமுறைப்படுத்தப்பட்டது.*

அரசாங்கத்தின் மனித பரிவர்த்தனை இடைமுகத்தை குறைப்பதே அரசு மின்சந்தையின் முக்கிய நோக்கமாகும். அதன்படி பொது கொள்முதலானது ஆன்லைன் சந்தை மற்றும் இ—டெண்டர் போன்ற தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் வகையில் மாற்றப்பட்டுள்ளது. அரசு மின்சந்தையின் எளிமை, செயல்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை அதிகரிக்கும்போது விலைகளை குறைப்பது போன்ற பிற நன்மைகளையும் வழங்குகிறது. மேலும், தேவையின் அடிப்படை,

நிகழ் நேர விலை கணிப்பு மற்றும் தானியங்கி பணம் செலுத்துதல் போன்ற வழிகளில் செயல்முறைகளை மேம்படுத்த இது உதவுகிறது.

மேலும், கொள்முதல் செய்யும் அனைத்துத் துறைகளிலும் மின்னணு கொள்முதல் முறை (e—procurement) கண்டிப்பாக பின்பற்றப்படும். அரசு கொள்முதல் முறைகளில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசிற்கென, தனி மின்னணு கொள்முதல் வலைதளம் ஒன்று உருவாக்கப்படும் என நிதிநிலை அறிக்கை 2021-2022-ல் மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இவ்வறிக்கையின்மீது அரசால் நடவடிக்கை தனியே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

90—

பழைய ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்துதல்

வினா எண் 3242—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமானது அரசாணை எண் 259, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள் 6-8-2003-ன்படி 1-4-2003 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதனடிப்படையில் 1-4-2003 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பணியமர்த்தப்பட்ட பணியாளர்கள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டனர். மேலும், அரசாணை எண் 304, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள் 27-5-2004-ன்படி தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள் 1978 இவர்களுக்குப் பொருந்தாது என்று உரிய திருத்தங்கள் வெளியிடப்பட்டன. எனவே, 1-4-2003 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ புதிதாக

2022 மே 6]

பணியமர்த்தப்பட்ட அனைத்துப் பணியாளர்களுக்கும் இத்திட்டம் கட்டாயமாகும். ஒவ்வொரு பணியாளரும் தனது மாதாந்திர சம்பளம் (அடிப்படை சம்பளம்+தர ஊதியம்) மற்றும் அகவிலைப்படியின் மொத்தத் தொகையிலிருந்து 10% அளவிலான தொகையை பங்களிப்பாக செலுத்த வேண்டும். பணியாளரின் பங்களிப்புத் தொகைக்கு இணையான அரசின் பங்களிப்புத் தொகையானது மாநில அரசால் வழங்கப்படும். மேலும், அரசு தகவல் தொகுப்பு விவர மையமானது உள்ளாட்சி அமைப்பு, அரசு உதவிபெறும் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் கல்வி மற்றும் கல்வி சாரா பணியாளர்களுக்கு குறியீட்டு எண் வழங்குதல், கணக்குகளைப் பராமரித்தல் மற்றும் கணக்கீட்டு தாள் வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொள்கிறது.

மேலும், பொது வருங்கால வைப்பு நிதி கணக்கிற்கு பொருந்தும் வட்டி வீதமே இதற்கும் வழங்கப்படுகிறது. தற்போது பொது வருங்கால வைப்பு நிதிக்கு 1-1-2021 முதல் 31-3-2021 வரையுள்ள கால அளவிற்கு 7.1 சதவீதம் வட்டி வழங்கப்படுகிறது.

மேலும், அரசுப் பணியாளர்கள்/சங்கங்கள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தினை இரத்து செய்து மீண்டும் பழைய ஓய்வூதியத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த கோரிவந்த நிலையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டத்தினை மீண்டும் செயல்படுத்துவது குறித்த சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து அரசுக்கு உரிய பரிந்துரை செய்திட வல்லுநர் குழு 2016 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இக்குழு, தனது அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்துள்ளது. வல்லுநர் குழுவின் பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

91—

பால் விற்பனை நிலையத்தை மீண்டும் இயக்குதல்

வினா எண் 527—திரு. S.R. இராஜா: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, அகரம் தென் ஊராட்சியில் பால் விற்பனை நிலையத்தை மீண்டும் கூட்டுறவுத் துறைமூலம் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆவின் பால் விற்பனை நிலையத்தை பால் கூட்டுறவுத் துறைமூலம் இயக்க பரிசீலனை செய்யப்படும்.

92—

ஆவின் பாலகம் அமைத்தல்

வினா எண் 712—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, பெருங்குடி இரயில் நிலைய வளாகத்தில் ஆவின் பாலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதி, பெருங்குடி இரயில் நிலைய வளாகத்தில் இடம் ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில், ஆவின் பாலகம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

93—

பால் கொள்முதல் செய்தல்

வினா எண் 1966—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பால் முழுவதையும் ஆவின் நிறுவனமே கொள்முதல் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பால் முழுவதையும் ஆவின் நிறுவனமே கொள்முதல் செய்து வருகிறது.

94—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 31—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, இந்தலூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை, திருவையாறு தொகுதி, இந்தலூர் அரசு உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாத நிலை உள்ளது.

95—

நூலகத்திற்குக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 129—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2022 மே 6

பாபநாசம் தொகுதி, பாபநாசம் நகரத்தில் உள்ள நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதி, பாபநாசம் நகரத்தில் உள்ள கிளை நூலகம் கல்வித் துறைக்கு சொந்தமான அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் 1,584 சதுரடி பரப்பளவு கொண்ட இலவச கட்டடத்தில் 1-2-2018 முதல் செயல்பட்டு வருகிறது. இந்நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட காலி மனை ஏதுமில்லை. எனவே, இந்நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு தற்போது அவசியம் எழவில்லை.

96—

உதவிக் கல்வி அலுவலர் அலுவலக கட்டடம்

வினா எண் 130—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, பாபநாசம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் இயங்கிவரும் உதவிக் கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதி, பாபநாசம் உதவிக் கல்வி அலுவலர் அலுவலகம், அரசாணை (நிலை) எண் 101, பள்ளிக் கல்வித் (பட்ஜெட்-1) துறை, நாள் 18-5-2018-ன்படி வட்டாரக் கல்வி அலுவலர் அலுவலகம் என மறு பெயரிட்டு அழைக்கப்படுகிறது. பாபநாசம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி வளாகத்திலுள்ள கட்டடத்தில் இவ்வலுவலகம் இயங்கி வருகிறது. தற்போதைய சூழலில், பாபநாசம் தொகுதி, பாபநாசம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் இயங்கிவரும்

2022 மே 6]

வட்டாரக் கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கான தேவை எழவில்லை.

97—

விளையாட்டு மைதானத்திற்கு சுற்றுச்சுவர் கட்டுதல்

வினா எண் 131—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பாபநாசம், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் விளையாட்டு மைதானத்திற்கு புதிய சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதி, பாபநாசம், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு மொத்தம் 1¾ ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்திற்கு சுற்றுச்சுவர் அமைக்கப் பெற்றுள்ளது. சென்ற வருடம் பெய்த மழையின் காரணமாக சுமார் 100 மீட்டர் அளவிற்கான சுற்றுச்சுவர் இடிந்துவிட்டது. மேலும், இம்மைதானத்திற்கு மேல்புறம் 50 மீட்டர் தூரத்திற்கு சுற்றுச்சுவர் இல்லாமல் உள்ளது. இப்பள்ளிக்கான நிலமானது முதன்மைக் கல்வி அலுவலரது பதவியின் பெயருக்கு நிலவகை மாற்றம் செய்யப்படவில்லை என்பதால் இப்பள்ளிக்கு எவ்வித அரசுத் திட்டத்திலும் சுற்றுச்சுவர் கட்டித் தர வழிவகையில்லை.

98—

உயர்நிலைப் பள்ளிகள் துவக்குதல்

வினா எண் 169— திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருப்போரூர் தொகுதியில் மீனவர் பகுதிகளில் புதிய உயர்நிலைப் பள்ளிகள் துவக்கவும், அப்பள்ளிகளின் விவரங்களைத் தெரிவிக்கவும் அரசு ஆவன செய்யுமா?

[2022 மே 6

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நடைமுறையில் உள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்கெனவே செயல்படும் நடுநிலைப் பள்ளிகளை மட்டுமே உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த இயலும். புதிதாக உயர்நிலைப் பள்ளி தொடங்குவதற்கு விதிகளில் இடமில்லை. எனினும், செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் தொகுதியில் உள்ள மீனவர் பகுதிகளில் ஏற்கெனவே உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. எனவே, இப்பகுதிகளில் புதிதாக உயர்நிலைப் பள்ளிகள் தொடங்க அவசியம் எழவில்லை.

99—

உளவியலாளர்களை நியமித்தல்

வினா எண் 177—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாணவர்களின் பொது உளவியல் நிலையை கண்காணிக்க பள்ளிகளில் உளவியலாளர்களை நியமிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு வளர் இளம் பருவத்தில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏதுவாக, நடமாடும் 17 உளவியல் ஆலோசனை மையங்கள் ஏற்படுத்தப்பட்டு உளவியல் ஆலோசகர்களைக் கொண்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2022 மே 6]

100—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 321—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, மேல்குமாரமங்கலம் ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை, பண்ருட்டி தொகுதி, மேல்குமாரமங்கலம் ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாத நிலை உள்ளது.

101—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 322—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரம், 32-வது வார்டு, சீரங்குப்பம் பகுதியில் உள்ள நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 மே 6

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய/நகராட்சி/மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரம், 32-வது வார்டு, சீரங்குப்பம் பகுதியில் உள்ள நகராட்சி நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வழிவகை இல்லை.

102—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 358—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், ஆணானந்தல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், ஆணானந்தல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வழிவகை இல்லை.

103—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 359—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், கீழ்கரிப்பூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், கீழ்கரிப்பூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வழிவகை இல்லை.

104—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 360—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், இசுக்கழிகாட்டேரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், இசுக்கழிகாட்டேரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வழிவகை இல்லை.

[2022 மே 6

105—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 361—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், வேளானந்தல் கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், வேளானந்தல் கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த இயலாத நிலை உள்ளது.

106—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 362—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், கொளத்தூர் ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள்

2022 மே 6]

வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், கொளத்தூர் ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த இயலாத நிலை உள்ளது.

107—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 363—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், நாறையூர் ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தவும், புதியதாக கட்டடம் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், நாறையூர் ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த இயலாத நிலை உள்ளது. மேலும், நாறையூரில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கென சொந்தமாக நிலம் இல்லை. எனவே, இப்பள்ளிக்கு புதிதாக கட்டடம் கட்ட வழிவகை இல்லை.

108—

மேல்நிலைப் பள்ளி துவக்குதல்

வினா எண் 364—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2022 மே 6

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், மங்கலம் கிராமத்தில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், மங்கலம் கிராமத்தில் ஏற்கெனவே இருபாலர் பயிலும் அரசு மேல்நிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது. மேலும், மங்கலம் கிராமத்திலிருந்து 4 கி.மீ. தொலைவில் வேடந்தவாடியில் ஓர் அரசு மேல்நிலைப் பள்ளி செயல்படுகிறது. தற்போதுள்ள நெறிமுறைகளின்படி ஏற்கெனவே செயல்பட்டுவரும் மகளிர் உயர்நிலைப் பள்ளியைத்தான் மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த இயலும். மாறாக, இருபாலர் பயிலும் மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து மகளிரை தனியாகப் பிரித்து நேரடியாக மகளிர் மேல்நிலைப் பள்ளி துவக்க வழிவகை இல்லை. இந்நிலையில், நேரடியாக கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், மங்கலம் கிராமத்தில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி துவக்க இயலாத நிலை உள்ளது.

109—

உயர்நிலைப் பள்ளி துவக்குதல்

வினா எண் 365—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா——*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், அண்டம்பள்ளம் ஊராட்சியில் புதியதாக பெண்கள் உயர்நிலைப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பின் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை,

2022 மே 6]

அரசு உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தவும், அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக பிரித்து செயல்படவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. புதிதாக பெண்கள் உயர்நிலைப் பள்ளி தொடங்குவதற்கு, விதிகளில் இடமில்லை.

110—

வகுப்பறைகள் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல்

வினா எண் 366—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், இராந்தம் ஊராட்சி, வி.நம்மியந்தல் கிராமத்தில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளிக்கு மூன்று வகுப்பறைகள் மற்றும் சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், இராந்தம் ஊராட்சி, வி.நம்மியந்தல் அரசு நடுநிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டடம் கட்டுவதற்கு உரிய கருத்துருக்கள் சம்பந்தப்பட்ட வட்டாரக் கல்வி அலுவலர் வாயிலாக, துரிஞ்சாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அனுப்பப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இப்பள்ளி முழுமைக்கும் ஏற்கெனவே சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ளதால், சுற்றுச்சுவர் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

111—

சுற்றுச்சுவர் கட்டுதல்

வினா எண் 367—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2022 மே 6

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், தண்டரை ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, தண்டரை, அரசு உயர்நிலைப் பள்ளியானது 2011-2012 ஆம் கல்வியாண்டு முதல் உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியின் மொத்த பரப்பளவு 2.64 ஏக்கர் ஆகும். அதில், 1.64 ஏக்கர் நிலப் பரப்பளவு விளையாட்டு மைதானமாக உள்ளது. இப்பள்ளியில் 141 மாணவ/ மாணவிகள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் 5 வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள், கழிவறைகள் மற்றும் குடிநீர் வசதியும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமானதாக உள்ளது.

இப்பள்ளியில் 8 ஆசிரியர்கள் மாணவ/மாணவிகளுக்கு கல்வி கற்பித்து வருகிறார்கள். இப்பள்ளியில் 350 மீட்டர் சுற்றுச்சுவர், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின்மூலம் 21.09 இலட்ச மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுவிட்டதால் பள்ளிக்கு முழு அளவில் சுற்றுச்சுவர் உள்ளது. ஆகவே, தண்டரை அரசு உயர்நிலைப் பள்ளிக்கு புதியதாகச் சுற்றுச்சுவர் அமைக்க அவசியம் எழவில்லை.

112—

உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 368—திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், சு. பொலக்குணம் கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கு புதியதாகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, சு.பொலக்குணம் அரசு உயர்நிலைப் பள்ளியானது தற்சமயம் சு.பொலக்குணம், ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி வளாகத்தில் இயங்கி வருகிறது.

இப்பள்ளிக்கு 90 சென்ட் நிலம் தானமாக பெற்று திருவண்ணாமலை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் பெயரில் நிலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

113—

உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 369—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஆவூர் ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கு கட்டடம் கட்டவும், கணினி மற்றும் ஸ்மார்ட் வகுப்பறை வசதிகள் செய்யவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஆவூர் கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கட்டடம் கட்ட போதிய இடவசதி இல்லை என்பதால் இப்பள்ளிக்கு கட்டடம் கட்டவும், கணினி மற்றும் ஸ்மார்ட் வகுப்பறை வசதிகள் ஏற்படுத்தித் தரவும் இயலாத நிலை உள்ளது. மேலும் இப்பள்ளியில் உயர்தொழில்நுட்ப ஆய்வகம் (HI—TECH LAB) வசதி ஏற்படுத்தப்பட்டு மாணவர்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

[2022 மே 6

114—

மேல்நிலைப் பளிக்க்குக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 370—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஆவூர் கிராமத்தில் உள்ள மேல்நிலைப் பள்ளிக்கு புதியதாகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, ஆவூர் கிராமத்தில் அரசு மேல்நிலைப் பள்ளி செயல்படவில்லை. மாறாக அரசு உயர்நிலைப் பள்ளி மட்டுமே செயல்படுகிறது.

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, ஆவூர், அரசு உயர்நிலைப் பள்ளியானது தற்சமயம் ஆவூர், ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி வளாகத்தில் இயங்கி வருகிறது. இப்பள்ளியில் 335 மாணவ/மாணவிகள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் 5 வகுப்பறைகள் மற்றும் மாணவ/மாணவிகளுக்கு தலா 1 கழிவறை தொடக்கப் பள்ளி வளாகத்தில் பயன்பாட்டில் உள்ளன. இப்பள்ளியில் 9 ஆசிரியர்கள் மாணவ/மாணவிகளுக்கு கல்வி கற்பித்து வருகிறார்கள்.

ஆவூர், அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சர்வே எண் 160/8-ல் 133.0 ஹெக்டேர் நிலம் பள்ளிக் கல்வித் துறையின் பெயருக்கு மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே பள்ளிக் கல்வித் துறைக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டவுடன், நபார்டு திட்டத்தின்கீழ் மற்றும் வேறு ஏதாவது திட்டத்தின்கீழ் ஆவூர், அரசு உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2022 மே 6]

115—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 412—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், நெருப்பெரிச்சல் ஊராட்சி, வாவிப்பாளையம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், நெருப்பெரிச்சல் ஊராட்சி, வாவிப் பாளையம் உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த இயலாத நிலை உள்ளது.

116—

சீருடை வழங்குதல்

வினா எண் 414—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் பயிலும் மாணவிகளுக்கு சுடிதாரை சீருடையாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை நிலை எண் 10, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை நாள் 20-1-2012-ன்படி அரசு/ அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் சத்துணவு பெறும் மாணவிகளுக்கு 2012-2013 கல்வியாண்டு முதல் நான்கு சல்வார் கமீஸ் (சுடிதார்) வழங்குவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அரசாணை நிலை எண் 262 பள்ளிக் கல்வி (ஆ.தே.வா.) துறை, நாள் 20-12-2018-ன்படி சத்துணவு பெறும் மாணவிகளுக்கு துப்பட்டாவிற்கு பதில் சந்தன நிற கட்டமிட்ட மேல்சட்டை வழங்கப்படுகிறது. தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரை சீருடை குறித்து அப்பள்ளி நிர்வாகம் முடிவெடுத்து வருகிறது.

117—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 508—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், வடபாதி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், வடபாதி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வழிவகை இல்லை.

118—

சுற்றுச் சுவர் கட்டுதல்

வினா எண் 509—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், பைங்காநாடு ஊராட்சியில் உள்ள தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், பைங்காநாடு ஊராட்சியில் உள்ள தொடக்கப் பள்ளியில் மூன்று பக்கங்களிலும் சுற்றுச் சுவர் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது. ஒரு பக்கத்திற்கு மட்டும் சுமார் 75 மீ. அளவில் சுற்றுச்சுவர் அமைப்பதற்கான கருத்துருக்கள் மன்னார்குடி வட்டாரக் கல்வி அலுவலரால் மன்னார்குடி வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அனுப்பப்பட்டு சுற்றுச்சுவர் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

119—

கழிப்பறை வசதி செய்தல்

வினா எண் 510—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், பைங்காநாடு ஊராட்சியில் உள்ள தொடக்கப் பள்ளிக்கு கழிப்பறை வசதி செய்ய அரசு முன்வருமா?

[2022 மே 6

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், பைங்காநாடு ஊராட்சியில் உள்ள தொடக்கப் பள்ளிக்கு முற்றிலும் பழுதடைந்த நிலையில் உள்ள கழிப்பறை கட்டடத்தை அப்புறப்படுத்திவிட்டு, புதிதாக இரண்டு கழிப்பறைகள் கட்ட உரிய கருத்துருக்கள், சார்ந்த வட்டாரக் கல்வி அலுவலர் வாயிலாக, ஊரக வளர்ச்சித் துறை வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

120—

கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்

வினா எண் 512—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், பைங்காநாடு ஊராட்சியில் உள்ள மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, பைங்காநாடு அரசு மேல்நிலைப் பள்ளியின் மொத்த நிலப்பரப்பு 4.5 ஏக்கர் ஆகும். அதில் 1 ஏக்கர் பரப்பளவு விளையாட்டு மைதானமாக உள்ளது. இப்பள்ளியில் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வகுப்பறைகள் போதுமானதாக உள்ளன. எனவே, புதியதாக கூடுதல் வகுப்பறைகள் கட்ட அவசியம் எழவில்லை.

121—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 675—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

சின்னசேலம் ஒன்றியம், ஈரியூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை கள்ளக்குறிச்சி தொகுதி, சின்னசேலம் ஒன்றியம், ஈரியூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வழிவகை இல்லை.

122—

கூடுதல் கட்டடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல்

வினா எண் 677—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சின்னசேலம் ஒன்றியம், தாகம் தீர்தாபுரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி தொகுதி, தாகம் தீர்தாபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியின் மொத்த நிலப்பரப்பில் 5 ஏக்கர் விளையாட்டு மைதானமாக உள்ளது. இப்பள்ளியின் நிலம் இந்நாள்வரை முதன்மைக் கல்வி அலுவலரின் பெயருக்கு மாற்றம் செய்யப்படாமல் உள்ளதென்பதால், இப்பள்ளிக்கு எவ்வித அரசுத் திட்டத்திலும் கூடுதல் கட்டடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டித்தர வழிவகையில்லை.

[2022 மே 6

123—

பாடநூல் கடிதத்திற்கு இணைப்புக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 706—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *வேளச்சேரி தொகுதியில் உள்ள தமிழ்நாடு பாடநூல் கழகத்திற்கு புதிய இணைப்பு (Annex) கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *வேளச்சேரி தொகுதியில் உள்ள தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்திற்கு 6 கிடங்குகள் கொண்ட சொந்தமான கட்டடம் உள்ளது. இக்கழகத்தின் பாடநூல்களைச் சேமிப்பதற்கும் மற்றும் விற்பனை செய்வதற்கும் தேவையான இடவசதி இக்கட்டடத்தில் உள்ளதால் இணைப்பு கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.*

124—

நூலகத்தைப் பராமரித்தல்

வினா எண் 709—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *வேளச்சேரி தொகுதி, திருவான்மியூர் கலாஷேத்திரா வளாகத்தில் உள்ள டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் நூலகத்தில் உள்ள நூல்கள், ஓலைச்சுவடிகள், பழமையான நூல்கள் ஆகியவற்றை பராமரிக்க நவீன வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, திருவான்மியூர் கலாஷேத்திரா வளாகத்தில் அமைந்துள்ள டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் நூலகமானது தனியார் அமைப்பினைச் சார்ந்த நூலகமாகும். அரசாணை (நிலை) எண் 239, பள்ளிக் கல்வித் துறை நாள் 15-11-2017-ன்படி அரிய வகை நூல்களைப் பேணிப் பாதுகாக்கும் வகையில் தனியார் அமைப்புகள் நடத்திவரும் நூலகங்களுக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு பராமரிப்பு நிதி மட்டும் வழங்கப்படுகிறது. இருப்பினும், இந்நூலகப் பணியாளர்களுக்கான ஊதிய செலவினம் எழுதுபொருட்கள் மற்றும் நூல்கள்/ ஓலைச்சுவடிகளைப் பாதுகாப்பதற்கு தேவையான இரசாயனச் செலவினங்களுக்கு ஆண்டுதோறும் அரசு மானியம் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. எனவே இந்நூலகத்திற்கு நவீன வசதிகள் அரசால் செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை.

125—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 1149—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, கோரணப்பட்டு ஊராட்சி, கோசத்திரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரமுயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை நெய்வேலி தொகுதி, கோரணப்பட்டு ஊராட்சி, கோசத்திரம் அரசு உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த இயலாத நிலை உள்ளது.

[2022 மே 6

126—

விளையாட்டு மைதானம் அமைத்தல்

வினா எண் 1151—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, இந்திரா நகர் ஊராட்சி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், இந்திரா நகர் ஊராட்சி அரசு உயர்நிலைப் பள்ளி 2010—2011 ஆம் கல்வியாண்டு முதல் மேல்நிலைப் பள்ளியாக தரமுயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியின் மொத்த நிலப் பரப்பு 10,000மீ^{2} ஆகும். அதில் 1 ஏக்கர் நிலப் பரப்பளவில் விளையாட்டு மைதானம் உள்ளது. எனவே, விளையாட்டு மைதானம் அமைத்துத்தர தற்போது அவசியம் எழவில்லை.

127—

நூலகம் அமைத்தல்

வினா எண் 1174—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகராட்சி, ரெட்டியூர் கோட்டம் எண் 3, ரெட்டியூரில் நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். பொது

2022 மே 6]

மக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பகுதிநேர நூலகமானது, ஊர்ப்புற நூலகம்/கிளை நூலகம்/முழுநேர நூலகமாக தரமுயர்த்தப்படும். எனவே, சேலம் மாநகராட்சி, சேலம் மேற்கு தொகுதிக்குட்பட்ட 3-வது கோட்டம் ரெட்டியூரில் பகுதி நேர நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் தற்போது நேரடியாக நூலகம் அமைக்க வழிவகையில்லை.

128—

தொடக்கப் பள்ளி துவக்குதல்

வினா எண் 1176—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகராட்சி, ரெட்டியூர் கோட்டம் எண் 3, ஔவை நகர், தெய்வானை நகர் பகுதிகளில் தொடக்கப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் மாநகராட்சி, ரெட்டியூர் கோட்டம் எண் 3, ஔவை நகர் மற்றும் தெய்வானை நகர் பகுதிகளில் 1 கி.மீ. சுற்றளவில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, ஜாகீர் அம்மாபாளையம் செயல்படுகிறது. எனவே, தமிழ்நாடு இலவச கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011-ன்படி, மேற்குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளானது உயர் தொடக்கக் கல்வி வசதியுள்ள குடியிருப்புகளாக உள்ளதால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் தொடக்கப் பள்ளி துவங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

129—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 1179—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2022 மே 6

சேலம் மாநகர், முணாங்காடு பகுதியில் உள்ள தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், முணாங்காடு பகுதியில் 3 கி.மீ. சுற்றளவிற்குள் தாதகாப்பட்டி நகராட்சி நடுநிலைப் பள்ளி செயல்படுகிறது. எனவே, தமிழ்நாடு இலவச கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011-ன்படி, மேற்குறிப்பிடப்பட்டுள்ள பகுதியானது உயர் தொடக்கக் கல்வி வசதியுள்ள குடியிருப்பாக உள்ளதால் இத்தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வாய்ப்பு இல்லை.

130—

பயிற்சி வகுப்புகள் நடத்துதல்

வினா எண் 1181—திரு. இரா. அருள்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீட் தேர்வில் கிராமப்புற மாணவர்களின் பங்களிப்பை மேம்படுத்திட பயிற்சி வகுப்புகள் நடத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நீட் போட்டித் தேர்விற்கு இணையதளத்தின்மூலம் பயிற்சி பெற விருப்பம் தெரிவித்து பதிவு செய்த மாணவர்களுக்கு இணையதளத்தின்மூலம் 9-11-2020 முதல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சியில் 2,254 மாணவர்கள் தொடர்ந்து பயிற்சி பெற்று வருகின்றனர்.

131—

ஆசிரியர் நியமனம்

வினா எண் 1182—திரு. இரா. அருள்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2022 மே 6]

தமிழகத்தில் உடற்கல்வி ஆசிரியர் நியமனத்திற்கான தேர்வு முறையை, தொடர்ந்து ஆசிரியர் தேர்வு வாரியம் (TRB) மூலம் நடத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

பள்ளிக் கல்வித் துறையில் காலியாக உள்ள 801 உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்கள் உள்ளிட்ட 1,568 சிறப்பாசிரியர் பணியிடங்களுக்கு நேரடி நியமனம்மூலம் தகுதியான பணிநாடுநர்களைத் தெரிவு செய்யும்பொருட்டு 26-2-2021 அன்று ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவிக்கை வெளியிட்டுள்ளது. அதன்படி ஆசிரியர் தேர்வு வாரியத்தின்மூலம் தெரிவுப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

132—

யோகாசனப் பயிற்சி

வினா எண் 1185—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா——*

அனைத்துப் பள்ளிகளிலும் யோகாசன பயிற்சியினை கட்டாய பாடமாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரசாணை (1D) No. 264, பள்ளிக் கல்வி (இ1) துறை, நாள் 6-7-2012—ன்படி அனைத்து அரசு, அரசு உதவி பெறும், தனியார் மற்றும் உள்ளாட்சி நிருவாக மேல்நிலை, உயர்நிலை, நடுநிலை மற்றும் தொடக்கப் பள்ளிகளில் தினமும் மதிய உணவு இடைவேளைக்கு 30 நிமிடங்களுக்கு முன்னதாக, எளிய யோகா பயிற்சிகளை 15 நிமிடங்கள் மாணவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று ஆணை வெளியிடப்பட்டதன் அடிப்படையில் மேற்காண் அனைத்துப் பள்ளிகளிலும் யோகாசனப் பயிற்சியானது ஆசிரியர்கள்மூலம் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது.

[*2022 மே 6*

133—

நூலகம் அமைத்தல்

வினா எண் 1634—திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூரில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூரில் கிளை நூலகம் 15-3-1958-ல் தொடங்கப்பட்டு, பின்னர் 16—8—2008 முதல் முழுநேர கிளை நூலகமாகத் தரமுயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

134—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 1642—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் பகுதியில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் தரமுயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள்

2022 மே 6]

வகுக்கப்பட்டுள்ளன. மீஞ்சூரில் ஏற்கெனவே செயல்பட்டு வந்த நடுநிலைப் பள்ளி 2011 ஆம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளியாக தரமுயர்த்தப்பட்டுள்ளது. அவ்வாறு தரமுயர்த்தப்பட்டு, மீஞ்சூரில் செயல்பட்டு வரும் உயர்நிலைப் பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வகுக்கப்பட்ட நெறிமுறைகளை நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த இயலாத நிலை உள்ளது. மேலும், உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த இங்கு நடுநிலைப் பள்ளி ஏதும் செயல்படவில்லை.

135—

ஊதிய நிலுவை வழங்குதல்

வினா எண் 1658—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு கடந்த ஓராண்டாக வழங்கப்படாமல் உள்ள ஊதிய நிலுவைத் தொகையை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

தமிழகத்தில் பள்ளிக் கல்வித் துறையின்கீழ் செயல்படும் ஊராட்சி ஒன்றிய/நகராட்சி/அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் தூய்மைப் பணியை மேற்கொள்வதற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையால் வெளிமுகமைமூலம் பகுதிநேர அடிப்படையில் தொகுப்பூதியத்தில் தூய்மைப் பணி செய்வதற்கு பணியாளர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். 2020-2021-ம் கல்வியாண்டில் பள்ளிகள் திறக்கப்படவில்லை. இந்நிலையில், தூய்மைப் பணியில் பணியாளர்கள் ஈடுபடுத்தப்படாத நிலையில், ஊதிய நிலுவைத் தொகை வழங்கும் நிலை எழவில்லை.

[2022 மே 6

136—

அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியை அரசு பள்ளியாக மாற்றுதல்

வினா எண் 1659—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், குன்றாண்டார் கோவில் ஒன்றியம், பெரியதம்பி உடையான்பட்டியில் TMSS *நிருவாகத்தின்கீழ் உள்ள அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியை அரசு பள்ளியாக மாற்றம் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் கல்வி மாவட்டம், குன்றாண்டார் கோவில் ஒன்றியம், பெரியதம்பி உடையான்பட்டி உதவி பெறும் தொடக்கப் பள்ளியை அரசு தொடக்கப் பள்ளியாக ஈர்த்துக் கொள்வது தொடர்பான கருத்துருக்கள் தொடக்கக் கல்வி இயக்குநரிடமிருந்து பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளன.

137—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 1673—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், பழவந்தான்கட்டளை ஊராட்சியில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள

2022 மே 6]

நிபந்தனைகளை கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், பழவந்தான்கட்டளை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வழிவகை இல்லை.

138—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 1715—திரு. V.P. கந்தசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சூலூர் தொகுதி, கருமத்தம்பட்டி பேரூராட்சி, எலச்சிபாளையம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம்உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை சூலூர் தொகுதி, கருமத்தம்பட்டி பேரூராட்சி, எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வழிவகை இல்லை.

139—

நூலகம் அமைத்தல்

வினா எண் 1762—திரு. மு. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் மாவட்ட நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, சீர்காழியில் கிளை நூலகம் ரூ.6,080/- மாத வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மாவட்ட தலைமையகங்களில் மட்டுமே மாவட்ட நூலகம் அமைக்க இயலும் என்பதனால், சீர்காழியில் புதிய மாவட்ட நூலகம் அமைக்க வழிவகையில்லை.

140—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 1773—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, விசூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நெய்வேலி தொகுதி, விசூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வழிவகை இல்லை.

141—

தொடக்கப் பள்ளியை மீண்டும் திறத்தல்

வினா எண் 1796—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், அரசூர் ஊராட்சி, கனகவல்லிபுரத்தில் மூடப்பட்ட தொடக்கப் பள்ளியை மீண்டும் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், அரசூர் ஊராட்சி, கனகவல்லிபுரத்தில் மூடப்பட்ட தொடக்கப் பள்ளியை மீண்டும் திறக்கக் கோரி பெறப்பட்ட கோரிக்கையின்மீது நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இப்பள்ளியானது 7 ஆண்டுகளுக்குமேல் மூடப்பட்ட நிலையில் இருந்ததால், பள்ளியின் கட்டடம் உட்பட அனைத்து அடிப்படை வசதிகளும் சேதமடைந்துள்ளன. எனவே, கனகவல்லிபுரத்தில் உள்ள 25 மாணவர்களை, அருகாமையில் (1 கி.மீ தூரத்தில்) உள்ள கூடுவாஞ்சேரி தொடக்கப் பள்ளியில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போதைய சூழ்நிலையில் இப்பள்ளியை மீண்டும் திறக்க அவசியம் எழவில்லை.

142—

தொடக்கப் பள்ளிக்கு கட்டடம் கட்டுதல்

வினா எண் 1797—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, ஆமூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியிலுள்ள தொடக்கப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, ஆமூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியிலுள்ள ஆமூர் ஊராட்சி ஒன்றிய

தொடக்கப் பள்ளியில் உள்ள பழைய கட்டடம் பழுதடைந்துள்ள நிலையில், தற்போது பள்ளி கட்டடம் இடிக்கப்பட்டு புதியதாக 2 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டுவதற்கான பணிகள் 12-7-2021 அன்று முதல் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

143—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 1817—திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி ஒன்றியம், செவ்வாத்தூர் புதூரில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி ஒன்றியம், செவ்வாத்தூர் புதூரில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வழிவகை இல்லை.

144—

கலையரங்கம் கட்டுதல்

வினா எண் 1818—திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி ஒன்றியம், கொரட்டி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு கலையரங்கம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

2022 மே 6]

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி ஒன்றியம், கொரட்டி அரசு உயர்நிலைப் பள்ளி 2000 ஆம் கல்வியாண்டு முதல் மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இப்பள்ளி 3 ஏக்கர் நிலப் பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது. முதன்மைக் கல்வி அலுவலரின் பெயரில் உள்ளது. அதில் 1.5 ஏக்கர் நிலப் பரப்பளவில் விளையாட்டு மைதானம் உள்ளது. இப்பள்ளியில் 747 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் 22 வகுப்பறைகள், 3 அறிவியல் ஆய்வகங்கள், 5 கழிவறைகள் (ஆண்கள்—2, பெண்கள்—3) மற்றும் குடிநீர் வசதியும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமானதாக உள்ளது. இப்பள்ளியில் 29 ஆசிரியர்கள் மாணவ/மாணவிகளுக்கு கல்வி கற்பித்து வருகிறார்கள். மேலும், இப்பள்ளியில் கலையரங்கம் கட்ட எந்த திட்டத்திலும் வழிவகை இல்லை.

145—

ஆங்கிலவழி கல்வி வகுப்புகள் துவக்குதல்

வினா எண் 1819—திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியம், ஜவ்வாது மலை பகுதியில் உள்ள மேலபட்டு, கீமூர், வழுதலம்பட்டு, தகரகுப்பம், பெரும்பள்ளி ஆகிய பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளில் கூடுதலாக LKG *முதல் 5 ஆம் வகுப்பு வரை ஆங்கில வழி கல்வி வகுப்புகளை துவக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியம், ஜவ்வாது மலை பகுதியில் உள்ள மேலபட்டு, கீமூர், வழுதலம்பட்டு, தகரகுப்பம், பெரும்பள்ளி ஆகிய

பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளில் கூடுதலாக எல்.கே.ஜி முதல் 5 ஆம் வகுப்பு வரை பெற்றோர் சம்மதத்துடன், 2021-2022 ஆம் கல்வியாண்டில் ஆங்கிலவழிப் பிரிவு தொடங்க சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

146—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 1820—திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சோழிங்கநல்லூர் தொகுதி, மண்டலம் 14, வார்டு எண் 191, ஜல்லடையன்பேட்டையில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை சோழிங்கநல்லூர் தொகுதி, மண்டலம் 14, வார்டு எண் 191 ஜல்லடையன்பேட்டையில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வழிவகை இல்லை.

147—

பெண்கள் மேல்நிலைப் பள்ளியாக மாற்றுதல்

வினா எண் 1904—திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், திருப்பாச்சேத்தியில் உள்ள மேல்நிலைப் பள்ளியைப் பிரித்து, பெண்கள் மேல்நிலைப் பள்ளியாக மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது உள்ள நெறிமுறைகளின்படி, ஏற்கெனவே உள்ள அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியைதான் தரமுயர்த்தி பெண்கள் மேல்நிலைப் பள்ளியாகத் துவக்க இயலும். அரசினர் இருபாலர் மேல்நிலைப் பள்ளியைத் தனியாக பிரித்து, நேரடியாக பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி என துவக்க இயலாது. எனவே, மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், திருப்பாச்சேத்தியில் உள்ள மேல்நிலைப் பள்ளியைப் பிரித்து பெண்கள் மேல்நிலைப் பள்ளியாக மாற்றி அமைக்க இயலாத நிலை உள்ளது.

148—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 1920—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஒன்றியம், மங்கலாக்கோவிலில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஒன்றியம், மங்கலாக்கோவில் பகுதியில் 3 கி.மீ. சுற்றளவிற்குள் இரண்டு அரசு உயர்நிலைப் பள்ளிகளும், ஓர் அரசு மேல்நிலைப் பள்ளியும் செயல்படுகின்றன. எனவே, தமிழ்நாடு இலவச கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011-ன்படி, மேற்குறிப்பிடப்பட்டுள்ள பகுதியானது ஏற்கெனவே உயர் தொடக்கக் கல்வி பயில்வதற்கு ஏற்ற வசதியுள்ள குடியிருப்பாக உள்ளதால் இத்தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வாய்ப்பு இல்லை.

[2022 மே 6

149—

பள்ளி துவக்குதல்

வினா எண் 1935—திரு. A.J. மணிக்கண்ணன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உளுந்தூர்பேட்டை தொகுதி, திருநாவலூர் கிராமத்தில் மகளிர் உயர்நிலைப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பின் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை அரசு உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தவும் மற்றும் மாணவியர் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து பெண்கள் உயர்நிலைப் பள்ளியாகப் பிரித்து செயல்பட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. புதிதாக பெண்கள் உயர்நிலைப் பள்ளி தொடங்குவதற்கு விதிகளில் இடமில்லை.

150—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 1936—திரு. A.J. மணிக்கண்ணன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்குறிச்சி ஆதி திராவிடர் பகுதியில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வரப்பெற்றுள்ள முன்மொழிவை நடப்பு ஆண்டிலேயே நடைமுறைப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை, உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை

2022 மே 6]

செங்குறிச்சி ஆதி திராவிடர் பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரமுயர்த்த வழிவகை இல்லை.

151—

மாவட்டக் கல்வி அலுவலகம் துவக்குதல்

வினா எண் 1945—திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறையில் புதிய மாவட்டக் கல்வி அலுவலகம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை ஒருங்கிணைந்த மாவட்டமாக செயல்பட்டு வரும்போதே, மயிலாடுதுறை மாவட்டக் கல்வி அலுவலகம் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. தற்போது புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட மயிலாடுதுறை வருவாய் மாவட்டத்துடன் மயிலாடுதுறை மாவட்டக் கல்வி அலுவலகம் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, மற்றுமொரு புதிய மாவட்டக் கல்வி அலுவலகம் துவங்கும் நிலை எழவில்லை.

152—

மாவட்ட மைய நூலகம் அமைத்தல்

வினா எண் 1946—திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறையில் மாவட்ட மைய நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறையில் ஒரு கிளை நூலகம் 28-12-1961-ல் தொடங்கப்பட்டு, 16-8-2008 முதல் முழுநேர நூலகமாக தரமுயர்த்தப்பட்டு, நாளிதழ் / பருவ இதழ் பிரிவு, நூல் வழங்கும் பிரிவு, குழந்தைகள் பிரிவு, மகளிர் பிரிவு, கணினி பிரிவு, குடிமையியல் பணி பிரிவு மற்றும் மாற்றுத் திறனாளிகள் பிரிவு ஆகிய பிரிவுகளுடன் செயல்பட்டு வருகிறது. மயிலாடுதுறையில் புதிதாக மாவட்ட நூலக ஆணைக் குழு அலுவலகம் அமைக்கப்படாத நிலையில், தற்போது மாவட்ட மைய நூலகம் அமைக்க அவசியம் எழவில்லை.

153—

நூலகம் அமைத்தல்

வினா எண் 2141—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகராட்சி, 25-வது கோட்டம், பள்ளப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் அருகில் உள்ள நூலக கட்டடத்தை பயன்பாட்டிற்குக் கொண்டுவர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, 25-வது கோட்டம், பள்ளப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் அருகில் பொது நூலகத் துறையின்கீழ் நூலகம் ஏதும் செயல்படவில்லை. மேலும், பள்ளப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் அருகில் மாநகராட்சியால் கட்டப்பட்ட நான்கு கட்டடங்கள் உள்ளன. இக்கட்டடங்கள் சேலம் மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ளன.

மேலும், நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க

2022 மே 6]

இயலும். பொது மக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பகுதிநேர நூலகமானது, ஊர்ப்புற நூலகம், கிளை நூலகம், முழுநேர நூலகமாகத் தரம் உயர்த்தப்படும். எனவே, சேலம் மாநகராட்சி, 25-வது கோட்டம், பள்ளப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் அருகில் பகுதிநேர நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் தற்போது நேரடியாக நூலகம் அமைக்க வழிவகையில்லை.

154—

பெண்கள் மேல்நிலைப் பள்ளி துவக்குதல்

வினா எண் 2742—திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஒன்றியம், மங்கலம் கிராமத்தில் உள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளியைப் பிரித்து, ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளாகத் துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

தற்போது உள்ள நெறிமுறைகளின்படி, ஏற்கெனவே உள்ள அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியைத்தான் தரம் உயர்த்தி, பெண்கள் மேல்நிலைப் பள்ளியாகத் துவக்க இயலும். அரசினர் இருபாலர் மேல்நிலைப் பள்ளியைத் தனியாகப் பிரித்து, நேரடியாக பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி என துவக்க இயலாது. எனவே, கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஒன்றியம், மங்கலம் கிராமத்தில் உள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளியைப் பிரித்து ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளியாகத் துவக்க இயலாத நிலை உள்ளது.

155—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 3077—திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2022 மே 6

(அ) நன்னிலம் தொகுதி, வலங்கைமான் வட்டம், நார்த்தங்குடி மற்றும் அரவூர் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை, உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நன்னிலம் தொகுதி, வலங்கைமான் வட்டம், நார்த்தங்குடி மற்றும் அரவூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் பூர்த்தி செய்யாததால் இப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த வழிவகை இல்லை.

156—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 3078—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, குடவாசல் வட்டம், வடுகக்குடி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை, உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நன்னிலம் தொகுதி, குடவாசல் வட்டம், வடுகக்குடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வழிவகை இல்லை.

2022 மே 6]

157—

விளையாட்டரங்கம் அமைத்தல்

வினா எண் 3079—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு விளையாட்டரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நன்னிலம், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியானது 5.41 ஏக்கர் பரப்பளவில் அமையப் பெற்றுள்ளது. மேலும், விளையாட்டு மைதானப் பரப்பளவானது 2.19 ஹெக்டேர் நிலப் பரப்பில் தனியாக அமையப் பெற்றுள்ளது. எனவே, விளையாட்டரங்கம் அமைக்க எவ்வித திட்டத்தின்கீழும் வழிவகை இல்லை.

158—

விளையாட்டரங்கம் அமைத்தல்

வினா எண் 3080—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, குடவாசல் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு விளையாட்டரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நன்னிலம் தொகுதி, குடவாசல் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியானது 1.75 ஏக்கர்

பரப்பளவில் அமையப் பெற்றுள்ளது. பள்ளியிலிருந்து 500 மீட்டர் தொலைவில் விளையாட்டு மைதானமானது 6.5 ஏக்கர் நிலப் பரப்பில் அமையப் பெற்றுள்ளது. எனவே, விளையாட்டரங்கம் அமைக்க எவ்வித திட்டத்தின் கீழும் வழிவகை இல்லை.

159—

வகுப்பறை கட்டடம் கட்டுதல்

வினா எண் 3109—திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேதாரண்யம் தொகுதி, தலைஞாயிறு மேல்நிலைப் பள்ளிக்கு ஆறு வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறு அரசு மேல்நிலைப் பள்ளியின் நிலமானது முதன்மைக் கல்வி அலுவலரது பதவியின் பெயருக்கு நிலவகை மாற்றம் செய்யப்படவில்லை என்பதால் இப்பள்ளிக்கு எவ்வித அரசுத் திட்டத்திலும் ஆறு வகுப்பறைகள் கட்டித்தர வழிவகையில்லை.

160—

மாதிரிப் பள்ளியாகத் தரமுயர்த்துதல்

வினா எண் 3110—திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேதாரண்யம் தொகுதி, தோப்புத்துறை மேல்நிலைப் பள்ளியை மாதிரிப் பள்ளியாகத் தரமுயர்த்தவும், கூடுதல் கட்டடம் கட்டவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேதாரண்யம் தொகுதி, தோப்புத்துறை அரசு மேல்நிலைப் பள்ளியானது 2018 ஆம் ஆண்டில் ஏற்கெனவே அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியாக மாற்றப்பட்டு செயல்படுகிறது. மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை மற்றும் இடவசதியைக் கருத்தில் கொண்டு, தேவையின் அடிப்படையில் கூடுதல் கட்டடங்களை நபார்டு திட்டத்தின்கீழ் ஏற்படுத்தித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

161—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 3134—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிள்ளியூர் தொகுதி, வேங்கோடு வடக்கு நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை, உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை கிள்ளியூர் தொகுதி, வேங்கோடு வடக்கு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வழிவகை இல்லை.

162—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 3160—திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2022 மே 6

(அ) டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, காசிபுரம் புதுமனைக்குப்பத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய/நகராட்சி/மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, காசிபுரம் புதுமனைக்குப்பத்தில் உள்ள மாநகராட்சி நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வழிவகை இல்லை.

163—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 3256—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாதவரம் தொகுதி, புழல் ஊராட்சி ஒன்றியம், தீர்த்தக் கிரியம்பட்டு ஊராட்சியில் உள்ள தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் தொகுதி, புழல் ஊராட்சி ஒன்றியம், தீர்த்தக்கிரியம்பட்டு கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி ஏதும் செயல்படவில்லை. எனவே, நடுநிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவதற்கான வினா எழவில்லை.

2022 மே 6]

164—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 3278—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஒன்றியம், நடுவக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை, உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், நடுவக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வழிவகை இல்லை.

165—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 3279—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, பட்டர்புரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள

[2022 மே 6

நிபந்தனைகளை நாங்குநேரி தொகுதி, பட்டர்புரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வழிவகை இல்லை.

166—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 3280—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, சீவலப்பேரி அரசு உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை, நாங்குநேரி தொகுதி, சீவலப்பேரி அரசு உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த இயலாத நிலை உள்ளது.

167—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 3281—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, வடக்கு விஜய நாராயணம் அரசு உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை, நாங்குநேரி தொகுதி, வடக்கு விஜய நாராயணம் அரசு உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த இயலாத நிலை உள்ளது.

168—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 3292—திரு. ப. கார்த்திகேயன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேலூர் தொகுதி, சலவன்பேட்டை பகுதியில் உள்ள மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை, வேலூர் தொகுதி, சலவன்பேட்டை பகுதியில் உள்ள மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த இயலாத நிலை உள்ளது.

169—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 3713—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2022 மே 6

(அ) திருவையாறு தொகுதி, வீரசிங்கம்பேட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை திருவையாறு தொகுதி, வீரசிங்கம்பேட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வழிவகை இல்லை.

170—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 3714—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, பாளையப்பட்டி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை, உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை திருவையாறு தொகுதி, பாளையப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால்,

2022 மே 6]

இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வழிவகை இல்லை.

171—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 3810—திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் வட்டம், வீரமங்கலத்தில் உள்ள தொடக்கப் பள்ளியை, நடுநிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் வட்டம், வீரமங்கலத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு அருகாமையில் 3 கி.மீ. சுற்றளவிற்குள் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பெருநாவலூர் மற்றும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பஞ்சாத்தி செயல்படுகின்றன. தமிழ்நாடு இலவச கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011-ன்படி, இக்குடியிருப்பு பகுதியானது உயர் தொடக்கக் கல்வி பயில்வதற்கு ஏற்ற வசதியுள்ள குடியிருப்பாக உள்ளதால், மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அவசியம் எழவில்லை.

172—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 3820—திரு. சு. ரவி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், தணிகைபோளூர் அரசு உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை, அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், தணிகைபோளூர் அரசு உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த இயலாத நிலை உள்ளது.

173—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 4061—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதியில் குந்துமாரனப்பள்ளி ஊராட்சி, குந்துமாரனப்பள்ளி அரசு உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை, தளி தொகுதியில் குந்துமாரனப்பள்ளி ஊராட்சி, குந்துமாரனப்பள்ளி அரசு உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த இயலாத நிலை உள்ளது.

2022 மே 6]

174—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 4062—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதியில் கும்ளாபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியை (கன்னடம்), மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை, தளி தொகுதியில் உள்ள கும்ளாபுரம் அரசு உயர்நிலைப் பள்ளி (கன்னடம்) நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த இயலாத நிலை உள்ளது.

175—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 4063—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, அந்தேவனப்பள்ளி ஊராட்சி, அந்தேவனப்பள்ளி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள்

வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை, தளி தொகுதி, அந்தேவனப்பள்ளி ஊராட்சி, அந்தேவனப்பள்ளி அரசு உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த இயலாத நிலை உள்ளது.

176—

பெண்கள் மேல்நிலைப் பள்ளி தொடங்குதல்

வினா எண் 4102—திரு. ஈ. ராஜா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரன்கோவில் தொகுதி, திருவேங்கடம் வட்டம், குருவிகுளம் ஒன்றியம், குருவிகுளத்தில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரன்கோவில் தொகுதி, திருவேங்கடம் வட்டம், குருவிகுளம் ஒன்றியம், குருவிகுளத்தில் ஏற்கெனவே இருபாலர் பயிலும் அரசு மேல்நிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது. மேலும், இப்பள்ளியிலிருந்து 4 கி.மீ. தொலைவில் திருவேங்கடத்தில் ஓர் அரசு மேல்நிலைப் பள்ளி செயல்படுகிறது. தற்போதுள்ள நெறிமுறைகளின்படி ஏற்கெனவே செயல்பட்டு வரும் மகளிர் உயர்நிலைப் பள்ளியைத்தான் மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த இயலும். மாறாக, இருபாலர் பயிலும் மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து மகளிரை தனியாகப் பிரித்து, நேரடியாக மகளிர் மேல்நிலைப் பள்ளி துவக்க வழிவகை இல்லை. இந்நிலையில், நேரடியாக சங்கரன்கோவில் தொகுதி, திருவேங்கடம் வட்டம், குருவிகுளம் ஒன்றியம், குருவிகுளத்தில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி துவக்க இயலாத நிலை உள்ளது.

177—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 4103—திரு. ஈ. ராஜா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) சங்கரன்கோவில் தொகுதி, குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம், மருதன் கிணறு கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் தொகுதி, குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம், மருதன் கிணறு கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு அருகாமையில் 3 கி.மீ. சுற்றளவிற்குள் ஆராய்ச்சிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி செயல்படுகிறது. தமிழ்நாடு இலவச கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011-ன்படி, இக்குடியிருப்பு பகுதியானது உயர் தொடக்கக் கல்வி பயில்வதற்கு ஏற்ற வசதியுள்ள குடியிருப்பாக உள்ளதால், மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அவசியம் எழவில்லை.

178—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 4104—திரு. ஈ. ராஜா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரன்கோவில் தொகுதி, குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம், செவல்குளம் அரசு உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள்

[2022 மே 6

வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை, சங்கரன்கோவில் தொகுதி, குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம், செவல்குளம் அரசு உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த இயலாத நிலை உள்ளது.

179—

தொடக்கப் பள்ளி துவங்குதல்

வினா எண் 4305—திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், கீழக்குத்த பாஞ்சான் கிராமத்தில் தொடக்கப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், கீழக்குத்த பாஞ்சான் கிராமத்திற்கு அருகில் குத்தப்பாச்சன் கிராமத்தில் அரசு உதவிபெறும் ஆர்.சி. நடுநிலைப் பள்ளி செயல்படுகிறது. எனவே, தமிழ்நாடு இலவச கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011—ன்படி, மேற்குறிப்பிடப்பட்டுள்ள பகுதியானது தொடக்கக் கல்வி பயில்வதற்கு ஏற்ற வசதியுள்ள குடியிருப்பாக உள்ளதால், மேற்குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் புதியதாக தொடக்கப் பள்ளி துவங்க தேவை எழவில்லை.

180—

தொடக்கப் பள்ளி துவங்குதல்

வினா எண் 4306—திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 மே 6]

(அ) ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், மருதப்புரம் கிராமத்தில் புதியதாக தொடக்கப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், மருதப்புரம் கிராமத்தில் அரசு உதவிபெறும் சி.பி.எம். மறவர் தொடக்கப் பள்ளி செயல்படுகிறது. எனவே, தமிழ்நாடு இலவச கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011-ன்படி, மேற்குறிப்பிடப்பட்டுள்ள பகுதியானது ஏற்கெனவே தொடக்கக் கல்வி பயில்வதற்கு ஏற்ற வசதியுள்ள குடியிருப்பாக உள்ளதால், புதியதாக தொடக்கப் பள்ளி துவங்க தேவை எழவில்லை.

181—

பொது நூலகம் அமைத்தல்

வினா எண் 4317—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் பேரூராட்சி, அடைக்கலப்பட்டணம் கிராமத்தில் பொது நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். பொது மக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின்

[2022 மே 6

எண்ணிக்கையின் அடிப்படையில் பகுதிநேர நூலகமானது, ஊர்ப்புற நூலகம், கிளை நூலகம், முழுநேர கிளை நூலகமாகத் தரம் உயர்த்தப்படும். எனவே, ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் பேரூராட்சி, அடைக்கலப்பட்டணம் கிராமத்தில் பகுதிநேர நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் தற்போது நேரடியாக நூலகம் அமைக்க வழிவகையில்லை.

182—

பொது நூலகம் அமைத்தல்

வினா எண் 4318—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குளம் தொகுதி, ஆழ்வார்குறிச்சி பேரூராட்சியில் பொது நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, ஆழ்வார்குறிச்சி பேரூராட்சியில் பொது நூலகத் துறையின்கீழ் கிளை நூலகம் அமைக்கப்பட்டு, 27-5-1957 அன்று முதல் செயல்பட்டு வருகிறது.

183—

பொது நூலகம் அமைத்தல்

வினா எண் 4319—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், மாயமான்குறிச்சி ஊராட்சியில் பொது நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். பொது மக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் பகுதிநேர நூலகமானது, ஊர்ப்புற நூலகம், கிளை நூலகம், முழுநேர கிளை நூலகமாகத் தரம் உயர்த்தப்படும். எனவே, ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், மாயமான்குறிச்சி ஊராட்சியில் பகுதிநேர நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் தற்போது நேரடியாக நூலகம் அமைக்க வழிவகையில்லை.

184—

பொது நூலகம் அமைத்தல்

வினா எண் 4320—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், துத்திக்குளம் கிராமத்தில் பொது நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். பொது மக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் பகுதிநேர நூலகமானது, ஊர்ப்புற நூலகம், கிளை நூலகம், முழுநேர கிளை நூலகமாகத் தரம் உயர்த்தப்படும். எனவே, ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், துத்திக்குளம் கிராமத்தில் பகுதிநேர நூலகம்

அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் தற்போது நேரடியாக நூலகம் அமைக்க வழிவகையில்லை.

185—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 4474—திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி தொகுதி, பூச்சி அத்திப்பேடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை கும்மிடிப்பூண்டி தொகுதி, பூச்சி அத்திப்பேடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வழிவகை இல்லை.

186—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 4475—திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி தொகுதி, திருக்கண்டலம் உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள்

2022 மே 6]

வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை, கும்மிடிப்பூண்டி தொகுதி, திருக்கண்டலம் உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த இயலாத நிலை உள்ளது.

187—

நூலகக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 4496—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சி, லட்சுமி நகர் பூங்கா பகுதியில் நூலகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சி, லட்சுமி நகர் பூங்கா பகுதியில் நூலகம் ஏதும் செயல்படாத நிலையில், அதற்கு கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை. மேலும், அப்பகுதியில் பகுதிநேர நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், தற்போது நேரடியாக நூலகம் அமைக்க வழிவகையில்லை.

188—

நூலகம் அமைத்தல்

வினா எண் 4497—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சி மன்றம் அருகிலுள்ள இடத்தில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2022 மே 6*

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். பொது மக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் பகுதிநேர நூலகமானது, ஊர்ப்புற நூலகம், கிளை நூலகம், முழுநேர கிளை நூலகமாகத் தரமுயர்த்தப்படும். எனவே, தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சியில் பகுதிநேர நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் தற்போது நேரடியாக நூலகம் அமைக்க வழிவகையில்லை.

189—

நூலகம் அமைத்தல்

வினா எண் 4498—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, சிட்லபாக்கம் பேரூராட்சி, 6-வது வார்டு, சிறுவர் பூங்காவில் படிக்கும் அறைக்கு பக்கத்தில் உள்ள இடத்தில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். பொது மக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் பகுதிநேர நூலகமானது, ஊர்ப்புற நூலகம், கிளை நூலகம், முழுநேர நூலகமாகத் தரமுயர்த்தப்படும். எனவே, தாம்பரம் தொகுதி, சிட்லபாக்கம் பேரூராட்சி, 6-வது

2022 மே 6]

வார்டு, சிறுவர் பூங்காவில் படிக்கும் அறைக்கு பக்கத்தில் உள்ள இடத்தில் பகுதிநேர நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் தற்போது நேரடியாக நூலகம் அமைக்க வழிவகையில்லை.

190—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 5302—திரு. மு. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதி, பெருந்தோட்டம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை, சீர்காழி தொகுதி, பெருந்தோட்டம் அரசு உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த இயலாத நிலை உள்ளது.

191—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 5328—திரு. அ.செ. வில்வநாதன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஊராட்சி ஒன்றியம், நாயக்கனேரி ஊராட்சி அரசு உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை, ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஊராட்சி ஒன்றியம், நாயக்கனேரி ஊராட்சி அரசு உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த இயலாத நிலை உள்ளது.

192—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 5329—திரு. அ.செ. வில்வநாதன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஊராட்சி ஒன்றியம், மேல் சாணாங்குப்பம் ஊராட்சியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை, ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஊராட்சி ஒன்றியம், மேல் சாணாங்குப்பம் ஊராட்சியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த இயலாத நிலை உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2022 மே 6]

193—

நூலகம் அமைத்தல்

வினா எண் 5380—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, திருவாமூர் சமத்துவபுரத்தில் புதிய நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, திருவாமூர் சமத்துவபுரத்தில் ஊராட்சி மன்றத்திற்குச் சொந்தமான புதிய இலவசக் கட்டடத்தில் பகுதிநேர நூலகம் ஏற்கெனவே திறக்கப்பட்டு, தற்போது செயல்பட்டு வருகிறது. எனவே, திருவாமூர் சமத்துவபுரத்தில் மேலும் ஒரு புதிய நூலகம் அமைக்க வழிவகையில்லை.

194—

தொடக்கப் பள்ளி துவங்குதல்

வினா எண் 5385—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, வடக்குத்து ஊராட்சி, நகரப் பகுதியில் தொடக்கப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, வடக்குத்து ஊராட்சி, நகரப் பகுதியில் 1 கி.மீ. சுற்றளவில் வடக்குத்து கிழக்கு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மற்றும் வடக்குத்து மேற்கு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி ஆகிய 2 பள்ளிகள் செயல்படுகின்றன. எனவே, தமிழ்நாடு இலவச கட்டாயக் கல்வி

உரிமை விதிகள், 2011-ன்படி, மேற்குறிப்பிடப்பட்டுள்ள பகுதியானது தொடக்கக் கல்வி பயில்வதற்கு ஏற்ற வசதியுள்ள குடியிருப்பாக உள்ளதால், மேற்குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் தொடக்கப் பள்ளி துவங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

195—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 5394—திரு. J.L. ஈஸ்வரப்பன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆற்காடு தொகுதி, மூஞ்சூர்பட்டு ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தவும், சுற்றுச்சுவர் அமைக்கவும் அரசு முன்வருமா?

விடை—

வினா எண் 7989—திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், ஜெகநாதபுரம் ஊராட்சியில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், ஜெகநாதபுரம் கிராம பஞ்சாயத்தில் வாலிபால், கபாடி,

2022 மே 6]

கிரிக்கெட் மற்றும் திறந்தவெளி உடற்பயிற்சி மையம் ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளன.

263—

விளையாட்டு மைதானங்கள் அமைத்தல்

வினா எண் 7990—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, பொன்னேரி வட்டம், பஞ்செட்டி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் விளையாட்டு மைதானங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, பொன்னேரி வட்டம், பஞ்செட்டி ஊராட்சியில் வாலிபால், கபாடி, கிரிக்கெட் மற்றும் திறந்தவெளி உடற்பயிற்சி மையம் ஆகிய விளையாட்டு வசதிகள் தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

264—

விளையாட்டு மைதானம் அமைத்தல்

வினா எண் 7991—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, பொன்னேரி வட்டம், அத்திப்பேடு கிராமத்தில் நவீன விளையாட்டு உபகரணங்களுடன்கூடிய விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, பொன்னேரி வட்டம், அத்திப்பேடு கிராமம், ஜெ.ஜெ.நகரில், வாலிபால், கபாடி, கிரிக்கெட் ஆகிய விளையாட்டுகளுக்கான மைதானங்களும் மற்றும் திறந்தவெளி உடற்பயிற்சி மையமும் தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டு, அதற்கான விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டில் உள்ளன.

265—

உள்விளையாட்டு அரங்கம் அமைத்தல்

வினா எண் 7947—திரு. க கணபதி: *மாண்புமிகு சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரவாயல் தொகுதி, வார்டு எண் 150, இராஜேஸ்வரி நகரில் உள்ள விளையாட்டுத் திடலில் பழுதடைந்துள்ள கட்டடங்களை அகற்றவும், இறகு பந்து உள்விளையாட்டு அரங்கம் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரவாயல் தொகுதி, வார்டு எண் 150, இராஜேஸ்வரி நகரில் உள்ள விளையாட்டுத் திடல் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கட்டுப்பாட்டில் இல்லை. எனவே, பழுதடைந்துள்ள கட்டடங்களை அகற்றுதல் மற்றும் இறகு பந்து உள்விளையாட்டு அரங்கம் அமைத்தல் தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2022 மே 6]

266—

விளையாட்டு மைதானம் அமைத்தல்

வினா எண் 9931—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, திருவாரூர் ஊராட்சி ஒன்றியம், புலிவலம் ஊராட்சியில் நவீன விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, திருவாரூர் ஊராட்சி ஒன்றியம், புலிவலம் ஊராட்சியில் நவீன விளையாட்டு மைதானம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

267—

விளையாட்டு மைதானம் அமைத்தல்

வினா எண் 9932—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், வடபாதிமங்கலம் ஊராட்சி, புனவாசல் எள்ளு கொல்லையில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், வடபாதிமங்கலம் ஊராட்சி, புனவாசல் எள்ளு கொல்லையில் விளையாட்டு மைதானம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

268—

உடற்பயிற்சிக் கூடம் அமைத்தல்

வினா எண் 12115—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், அத்திப்பேடு ஊராட்சி, அத்திப்பேடு கிராமத்தில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், அத்திப்பேடு ஊராட்சி, அத்திப்பேடு கிராமத்தில் வாலிபால், கபாடி, பூப்பந்து ஆகிய விளையாட்டுகளுக்கான மைதானங்கள் மற்றும் திறந்தவெளி உடற்பயிற்சி மையம் ஒன்றும் தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டு, அதற்கான விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டில் உள்ளன.

269—

விளையாட்டு மைதானம் அமைத்தல்

வினா எண் 12171—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், வெங்கலம் ஊராட்சி, ஊர் பகுதியில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

ரிஷிவந்தியம் தொகுதி, வெங்கலம் ஊராட்சி, ஊர் பகுதியில் வாலிபால், கபாடி, பூப்பந்து ஆகிய விளையாட்டுகளுக்கான மைதானங்கள் மற்றும் திறந்தவெளி உடற்பயிற்சி மையம் தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டு, அதற்கான விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளன.

270—

திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையம் அமைத்தல்

வினா எண் 1550—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நெய்வேலி தொகுதியில் தொழில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன் - திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2021-2022 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நெய்வேலி தொகுதியில் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்துடன் இணைந்து புதிய தொழிற்பயிற்சி நிலையமொன்று அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நெய்வேலியில், நெய்வேலி நிலக்கரி நிறுவனத்துடன் இணைந்து அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பது குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் அரசின் பரிசீலனையில் உள்ளது. தொழிற்பயிற்சி நிலையத்திற்கான கட்டடம் தயார்

[2022 மே 6

நிலையில் உள்ளது. நெய்வேலியில் தொழிற்பயிற்சி நிலையம் விரைவில் துவக்கி வைக்கப்படும்.

271—

தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தல்

வினா எண் 4655—திரு. இரா. அருள்: மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தின் தென் பகுதியில் உள்ள மாணவர்கள் பயன்பெற அரசு தொழிற்பயிற்சி நிலையம் தொடங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தில் தற்போது 4 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும், 18 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. சேலம் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 4 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 18 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட 4,742 இருக்கைகளில், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50% இடங்களை அரசு ஒதுக்கீட்டின்கீழ் மாவட்ட கலந்தாய்வுமூலம் நிரப்பி, பயிற்சிக் கட்டணத்தை அரசே ஏற்கும் என்ற திட்டத்தின்கீழ், சேலம் மாவட்டத்தில் செயல்படும் 6 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கான 214 இருக்கைகளில், 83 இருக்கைகள் நிரப்பப்பட்டு, காலியாக உள்ள 131 இருக்கைகள் உட்பட, மொத்தம் 1,860 இருக்கைகள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், சேலம் மாவட்டம், சேலம் தெற்கு பகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

2022 மே 6]

272—

தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 8140—திரு. க. செல்வராஜ்: மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரில் தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் 10-12-2019 அன்று திருப்பூரில் 100 படுக்கை வசதிகளுடன்கூடிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

புதுதில்லி தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம், மத்திய பொதுப் பணித் துறைமூலம் திருப்பூர் மாவட்டத்தில் 100 படுக்கை வசதிகள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை கட்டடம் மற்றும் 32 குடியிருப்புகள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மத்திய பொதுப் பணித் துறை ஒப்பந்த ஆவணத்தின்படி, கட்டுமானம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 540 நாட்களில் திட்டம் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் மத்திய பொதுப் பணித் துறை தொழில்நுட்ப ஏலத்தை முடித்து, 18-8-2021 அன்று நிதி ஏலத்தை துவக்கியுள்ளது. அனைத்து ஆரம்ப வேலைகளும் மத்திய பொதுப் பணித் துறையால் முடிக்கப்பட்டுள்ளன.

கட்டடம் கட்டி முடித்த பிறகு, திருப்பூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையை காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனுக்காக தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகம் மாநில அரசிடம் ஒப்படைக்கும்.

(ஆ) மாநில அரசு காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு மருத்துவ சேவையை மட்டுமே வழங்கி வருகிறது. கட்டடம் கட்டுதல், விரிவாக்கம், பராமரித்தல் மற்றும் அனைத்து முக்கிய கொள்கை முடிவுகளும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தைச் சார்ந்ததாகும்.

273—

ஊக்கத் தொகை வழங்குதல்

வினா எண் 11233—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாடு தேயிலைத் தோட்ட தொழிலாளர்களுக்கு 2021 ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகையின்போது ஊக்கத் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு தேயிலை தோட்ட தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு கடந்த 2020—2021 கணக்காண்டின் தணிக்கையின்படி, போனஸ் மற்றும் ஊக்கத் தொகை அரசு ஆணை எண் 235 (நிதி பிபிஇ) துறை, நாள் 23—10—2021 மற்றும் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம், வனத் (வனம் 8) துறை கடித எண் 12699/எப்.ஆர்.8/20211 நாள் 26—10—2021—ன்மூலம் கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டு, கடந்த 1—11—2021 அன்று வழங்கப்பட்டுள்ளது.

போனஸ்	—	8.33 சதவீதம்
ஊக்கத்தொகை	—	1.67 சதவீதம்
மொத்தம்	—	10.00 சதவீதம்

274—

சமுதாய நலக் கூடம் அமைத்தல்

வினா எண் 325—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) பண்ருட்டி தொகுதி, கீழ்கவரப்பட்டு ஊராட்சி, ஆண்டிப்பாளையம் ஆதி திராவிடர் குடியிருப்பில் சமுதாய நலக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மக்களின் எண்ணிக்கை, சமுதாயக்கூடம் கட்ட கிடைக்கும் இடம் மற்றும் தேவையான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு, சமுதாயக் கூடங்கள் படிப்படியாக ஆண்டுதோறும் கட்டப்பட்டு வருகின்றன. பண்ருட்டி தொகுதி, கீழ்கவரப்பட்டு ஊராட்சி, ஆண்டிப்பாளையம் ஆதி திராவிடர் குடியிருப்பில் புதிய சமுதாயக் கூடம் கட்டுவது குறித்து ஆதி திராவிட மக்கள் தொகை, அருகிலுள்ள சமுதாயக் கூடங்களின் எண்ணிக்கை, போதுமான இடம், நிதி ஒதுக்கீடு மற்றும் முன்னுரிமையின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும்.

275—

சமுதாய நலக் கூடம் அமைத்தல்

வினா எண் 326—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, உளுந்தம்பட்டு ஊராட்சி, உளுந்தம்பட்டு ஆதி திராவிடர் குடியிருப்பு பகுதியில் சமுதாய நலக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மக்களின் எண்ணிக்கை, சமுதாயக் கூடம் கட்ட கிடைக்கும் இடம் மற்றும் தேவையான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு, சமுதாயக் கூடங்கள் படிப்படியாக ஆண்டுதோறும் கட்டப்பட்டு வருகின்றன.

பண்ருட்டி தொகுதி, உளுந்தம்பட்டு ஊராட்சி, உளுந்தம்பட்டு ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் புதிய சமுதாயக் கூடம் கட்டுவது குறித்து ஆதி திராவிட மக்கள் தொகை, அருகிலுள்ள சமுதாயக் கூடங்களின் எண்ணிக்கை, போதுமான இடம், நிதி ஒதுக்கீடு மற்றும் முன்னுரிமையின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும்.

276—

மயானப் பாதை அமைத்தல்

வினா எண் 379—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், சீலப்பந்தல் ஊராட்சி, பிச்சனந்தலில் வசிக்கும் ஆதி திராவிடர்களின் மயானத்திற்குப் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

சீலப்பந்தல் கிராம சர்வே எண் 94, 1.18.0 ஹெக்டேர் ஓடை புறம்போக்கில் ஆதி திராவிடர் மக்கள் சுமார் 0.02.0 ஏர்ஸ் இடத்தில் மயானம் அமைத்து, இறந்தவர்களை அடக்கம் செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இம்மயானத்திற்கு மேற்படி கிராம சர்வே எண் 23, 0.11.0 ஹெக்டேரில் மெயின் ரோடு வழியாக சென்று, சர்வே எண் 94 ஓடை புறம்போக்கில் மேடு, பள்ளமாக உள்ள மண் பாதையைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

277—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 488—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஒன்றியம், பரவாக்கோட்டை ஆதி திராவிடர் தெருவில் சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

ஆதி திராவிடர் மக்களின் எண்ணிக்கை, சமுதாயக் கூடம் கட்ட கிடைக்கும் இடம் மற்றும் தேவையான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு, சமுதாயக் கூடங்கள் படிப்படியாக ஆண்டுதோறும் கட்டப்பட்டு வருகின்றன. பரவாக்கோட்டை-1 கிராமத்தில் ஆதி திராவிடர் எவரும் வசிக்கவில்லை. பரவாக்கோட்டை-2 கிராமத்தில் புதிய சமுதாயக் கூடம் கட்டுவது குறித்து ஆதி திராவிட மக்கள் தொகை, அருகிலுள்ள சமுதாயக்கூடங்களின் எண்ணிக்கை, போதுமான இடம் மற்றும் முன்னுரிமையின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும்.

278—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 490 முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், காளாச்சேரியில் உள்ள ஆதி திராவிடர் தெருவில் சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், காளாச்சேரி ஆதி திராவிடர் தெருவிலிருந்து 500 மீட்டர் தொலைவில் அனைத்து மக்களும் பயன்படுத்தக்கூடிய வகையில், நல்ல நிலையில் சமுதாயக் கூடம் உள்ளது. எனவே, அப்பகுதியில் புதியதாக சமுதாயக் கூடம் அமைக்கவேண்டிய அவசியம் எழவில்லை.

[2022 மே 6

279—

மயான சாலை அமைத்தல்

வினா எண் 700—திரு. சு. ரவி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, அம்மனூர் ஆதி திராவிடர் மயானத்திற்கு பிரதான சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் கிராமத்தில் வசிக்கும் ஆதி திராவிடர் இன மக்கள் பயன்படுத்தும் மயானத்திற்கு பிரதான சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைப்பது தொடர்பாக நேரில் ஆய்வு செய்யப்பட்டதில், இம்மயானம் அம்மனூர் கிராம புல எண் 61-ல் மாவேரி ஏரி புறம்போக்கில் ஒரு பகுதியில் பூர்வீகமாக பயன்பாட்டில் இருந்து வருகிறது. இம்மயானத்திற்கு சென்றுவர போதிய பாதை இருந்தும், தற்போது அது குண்டும் குழியுமாக இருப்பதால், மயானத்திற்கு சென்று வர பொது மக்களுக்கு சிரமமாக உள்ளது என்பதால், இச்சாலையை தார்ச் சாலையாக மாற்றிட நிதி நிலைக்கேற்ப பணிகள் மேற்கொள்வது குறித்து அரசு பரிசீலிக்கும்.

280—

மயானப் பாதை அமைத்தல்

வினா எண் 701—திரு. சு. ரவி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், செம்பேடு ஊராட்சி, செம்பேட்டில் வசிக்கும்

2022 மே 6]

ஆதி திராவிடர்களின் மயானத்திற்கு பாதை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் வட்டம், செம்பேடு கிராமம், அனாதீனம் புல எண் 576/1பி, 0.13.0—ஐ தற்போது ஆதி திராவிடர் இன மக்கள் மயானமாக பயன்படுத்தி வருகின்றனர். அருகிலுள்ள தனியார் பட்டா நிலம், வீட்டுமனைகளாக பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளதால், இதில் பாதை வசதிகள் ஏற்படுத்த வழிவகைகள் இல்லை. மேலும், அருகில் உள்ள மேய்க்கால் புறம்போக்கு சர்வே எண் 249/1—ன் வழியாக செல்ல வாய்ப்புள்ளது. ஆனால், இவ்விடம் பெரிய பாறையும், குண்டும் குழியுமாக இருப்பதால் பாதை வசதி ஏற்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

281—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 1649 முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், கருப்பூர் ஊராட்சி, மணவெளி ஆதி திராவிடர் தெரு சாலையை தார்ச் சாலையாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், கருப்பூர் ஊராட்சி, மணவெளி ஆதி திராவிடர்

தெரு சாலையை தார்ச் சாலையாக (350மீ.) மாற்றி அமைக்க நிதி நிலைக்கேற்ப, பணிகள் மேற்கொள்வது குறித்து அரசு பரிசீலிக்கும்.

282—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 1650—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், அத்திப்பாக்கம் ஊராட்சி, வடக்கு ஆதி திராவிடர் தெருக்களிலுள்ள மண் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், அத்திப்பாக்கம் ஊராட்சி, ஆதி திராவிடர் தெரு சாலையை தார்ச்சாலையாக (550மீ.) மாற்றி அமைக்க நிதி நிலைக்கேற்ப, பணிகள் மேற்கொள்வது குறித்து அரசு பரிசீலிக்கும்.

283—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 1651—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம், கோவிந்தபுரம் ஊராட்சி, வாணாபுரம் ஆதி திராவிடர் தெருவில் தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம், கோவிந்தபுரம் ஊராட்சி, வாணாபுரம் ஆதி திராவிடர் தெருவில் உள்ள மண் சாலை, ஊரக வளர்ச்சி துறையால் தார்ச் சாலையாக (200மீ.) போடப்பட்டுள்ளது.

284—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1742—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, வடகால் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, வடகால் ஆதி திராவிடர் நல தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

285—

கலையரங்கம் அமைத்தல்

வினா எண் 1789—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நெய்வேலி தொகுதி, சிலம்பிநாதன்பேட்டை ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் கலையரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மக்களின் எண்ணிக்கை, சமுதாயக் கூடம் கட்ட கிடைக்கும் இடம் மற்றும் தேவையான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு சமுதாயக் கூடங்கள்/ கலையரங்கம் படிப்படியாக ஆண்டுதோறும் கட்டப்பட்டு வருகின்றன. நெய்வேலி தொகுதி, சிலம்பிநாதன்பேட்டை ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் புதிய கலையரங்கம் கட்டுவது குறித்து ஆதி திராவிட மக்கள் தொகை, அருகிலுள்ள சமுதாயக் கூடங்களின் எண்ணிக்கை, போதுமான இடம், நிதி ஒதுக்கீடு மற்றும் முன்னுரிமையின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும்.

286—

தகன மேடை அமைத்தல்

வினா எண் 1790—திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, மருங்கூர் ஊராட்சி, மருங்கூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் வசிப்பவர்களுக்கு கரும காரியக் கூடம் மற்றும் தகன மேடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி வட்டம், மருங்கூர் ஆதி திராவிடர் குடியிருப்பிற்கு புல எண் 496/1-ல் காலியாக உள்ள (அரசு நத்தம்) இடத்தில் புதிய கரும காரிய மண்டபம் மற்றும் தகனமேடை அமைக்க நிதிநிலைக்கு ஏற்ப, பணிகள் மேற்கொள்வது பற்றி அரசு பரிசீலிக்கும்.

2022 மே 6]

287—

கரும காரியக் கூடம் அமைத்தல்

வினா எண் 1791—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, வடக்குத்து ஊராட்சி, மேல ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் வசிப்பவர்களுக்கு கரும காரியக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி, குறிஞ்சிப்பாடி வட்டம், மேல்வடக்குத்து கிராமத்தில் சுமார் 500 ஆதி திராவிடர் குடும்பங்கள் வசித்து வருகின்றன. இப்பகுதியில் புல எண் 279/6—ல் 3.68.0 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட ஓடை புறம்போக்கில் மயானம் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி இடம் ஓடை புறம்போக்காக இருப்பதால், கரும காரியக் கூடம் கட்டுவதற்கு வழிவகைகள் இல்லை.

288—

சிமெண்ட் சாலை அமைத்தல்

வினா எண் 1794—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, சிலம்பிநாதன்பேட்டை ஊராட்சி, அம்பேத்கர் நகரில் சிமெண்ட் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி வட்டம், சிலம்பிநாதன்பேட்டை ஆதி திராவிடர் குடியிருப்பில் உள்ள அம்பேத்கர் நகருக்கு

[2022 மே 6

சிமென்ட் சாலை அமைக்க ரூ.25.00 இலட்சம் செலவாகும் என தோராயமாக மதிப்பிடப்பட்டுள்ளது. நிதிநிலைக்கேற்ப இப்பணிகள் மேற்கொள்வது குறித்து அரசு பரிசீலிக்கும்.

289—

மயானத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்தல்

வினா எண் 1802—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், இச்சிப்புத்தூர் ஊராட்சி, ஈசலாபுரத்தில் வசிக்கும் ஆதி திராவிடர்களின் மயானத்திற்கு சுற்றுச்சுவர் கட்டவும், எரிமேடை அமைக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், இச்சிப்புத்தூர் கிராமத்தில் சர்வே எண் 136, மயானமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி சர்வே எண் 136 ஆனது, ஓடை என 'அ' பதிவேட்டில் தாக்கலாகி உள்ளது. விஸ்தீரணம் 1.17.0 ஏர்ஸ். ஈசலாபுரம் கிராமத்தில் 150 ஆதி திராவிடர் குடும்பங்கள் வசித்து வருகின்றன. இக்குடியிருப்புக்கு அருகாமையில் வேறு எந்த ஓர் அரசு நிலமும் சுடுகாடாக பயன்படுத்தும் நிலையில் இல்லை. ஓடை புறம்போக்கில் ஒரு பகுதியில் எரிமேடை மட்டும் அமைக்கலாம்; சுற்றுச்சுவர் கட்ட இயலாது.

290—

மயானத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்தல்

வினா எண் 1803—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 மே 6]

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், இச்சிப்புத்தூர் ஊராட்சி, அய்யந்தாங்கலில் வசிக்கும் ஆதி திராவிடர்களின் மயானத்திற்கு சுற்றுச்சுவர் கட்டவும், எரிமேடை அமைக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் வட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம், இச்சிப்புத்தூர் ஊராட்சி, அய்யந்தாங்கல் கிராமத்தில் சர்வே எண் 258, மயானமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி சர்வே எண் 258 ஆனது மேய்க்கால் கல்லாங்குத்து என 'அ' பதிவேட்டில் உள்ளது. இதன் விஸ்தீரணம் 1.91.0 ஏர்ஸ் ஆகும். இந்த இடத்தில் பகுதி அளவு மட்டுமே சுடுகாடாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி 1.91.0 ஏர்ஸ் நிலத்தில் மயானத்திற்கு தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பிட்ட அளவில் மட்டும் சுற்றுச்சுவர் எழுப்பி, எரிமேடை அமைக்கப்படும்.

291—

மயானப் பாதை அமைத்தல்

வினா எண் 1805—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், நகரிகுப்பம் ஊராட்சி, நகரிகுப்பம் ஆதி திராவிடர்களின் மயானத்திற்கு செல்ல பாதை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், நகரிகுப்பம் ஊராட்சி, நகரிகுப்பம்

ஆதி திராவிடர்களின் மயானத்திற்கு செல்லும் பாதை, குட்டை புறம்போக்கு என்பதால் மயானத்திற்கு பாதை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

292—

சமுதாய நலக் கூடம் அமைத்தல்

வினா எண் 1953—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், அண்ணல் அக்ரஹாரம் ஊராட்சி, ஆதி திராவிடர் தெருவில் சமுதாய நலக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், அண்ணல் அக்ரஹாரம் கிராமத்தில் ஆதி திராவிடர் மக்கள் வசிக்கும் பகுதிக்கு அருகில் சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவில் பெரியார் நகர் குடியிருப்பு பகுதியில் ஏற்கெனவே சமுதாயக்கூடம் உள்ளது. எனவே, புதியதாக சமுதாயக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

293—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 1954—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், உத்தமதானி ஊராட்சி, ஊருடையார் நத்தம் கிராமம், ஆதி திராவிடர் பகுதியில் தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

2022 மே 6]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த உத்தமதானி ஊராட்சியில் ஊருடையார் நத்தம் ஆதி திராவிடர் தெருவில் தார்ச் சாலை அமைக்கும் பணிக்கு 2020—2021 ஆம் ஆண்டு பிரதம மந்திரி கிராம முன்னோடி திட்டத்தின்கீழ் (*Pradhan Manthri Adarsh Gram Yojana—PMAGY*) ரூ.3,85,000/— (ரூபாய் மூன்று இலட்சத்து எண்பத்து ஐந்தாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் கருத்துரு மாவட்ட குழுவின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. உரிய அனுமதி பெற்றவுடன், இப்பணி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையால் மேற்கொள்ளப்படும்.*

294—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 1955—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, அத்தியூர் ஊராட்சி, குருகூர் ஆதி திராவிடர் தெருவிற்கு செல்லும் மண் சாலையை தார்ச் சாலையாக மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அத்தியூர் ஊராட்சியில் குருகூர் ஆதி திராவிடர் தெருவிற்கு தார்ச் சாலை அமைக்கும் பணிக்கு ரூ.9,85,000/— (ரூபாய் ஒன்பது இலட்சத்து எண்பத்து ஐந்தாயிரம் மட்டும்) தேவைப்படும்

என மதிப்பிடப்பட்டுள்ளது. நிதி நிலைக்கேற்ப இப்பணிகள் மேற்கொள்வது குறித்து அரசு பரிசீலிக்கும்.

295—

சமுதாயக் கூடம் அமைத்தல்

வினா எண் 3727—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, கல்யாணபுரம் 1—ம் சேத்தி ஊராட்சி, கல்யாணபுரம் காளியம்மன் கோயில் தெரு, ஆதி திராவிடர் தெரு அருகில் சமுதாயக்கூடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், கல்யாணபுரம் 1-ம் சேத்தி ஊராட்சி, காளியம்மன் கோயில் தெரு, ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் உள்ள சமுதாயக் கூடம் நல்ல நிலையில் உள்ளது. மக்கள் அச்சமுதாயக் கூடத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, அப்பகுதியில் புதியதாக சமுதாயக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

296—

சமுதாயக்கூடம் அமைத்தல்

வினா எண் 3730—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, நடுக்காவேரி ஊராட்சி, அரசமரத் தெரு, ஆதி திராவிடர் தெரு அருகில் சமுதாயக்கூடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், நடுக்காவேரி கிராமத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையைச் சார்ந்த சமுதாயக்கூடம் நல்ல நிலையில் உள்ளது. அதனை மக்கள் பயன்படுத்தி வருகின்றனர் என்பதால், அப்பகுதியில் புதியதாக சமுதாயக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

297—

சமுதாயக்கூடம் அமைத்தல்

வினா எண் 3731—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, பூதலூர் ஊராட்சி, அகிலாண்டேஸ்வரி நகர், ஆதி திராவிடர் குடியிருப்பிற்கு சமுதாயக்கூடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, பூதலூர் ஊராட்சிக்கு அருகில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையைச் சார்ந்த சமுதாயக்கூடம் நல்ல நிலையில் உள்ளது. மக்கள் அச்சமுதாயக்கூடத்தை பயன்படுத்தி வருகின்றனர். எனவே, அப்பகுதியில் புதியதாக சமுதாயக் கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

298—

சமுதாயக்கூடம் அமைத்தல்

வினா எண் 3732—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2022 மே 6

(அ) திருவையாறு தொகுதி, மேலத்திருப்பூந்துருத்தி பேரூராட்சி, ஆதி திராவிடர் தெரு அருகில் சமுதாயக்கூடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மக்களின் எண்ணிக்கை, சமுதாயக் கூடம் கட்ட கிடைக்கும் இடம் மற்றும் தேவையான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு சமுதாயக்கூடங்கள் படிப்படியாக ஆண்டுதோறும் கட்டப்பட்டு வருகின்றன. திருவையாறு தொகுதி, மேலத்திருப்பூந்துருத்தி பேரூராட்சியில் சமுதாயக்கூடம் அமைப்பதற்கு ஏதுவாக தகுதியான அரசு புறம்போக்கு நிலம் ஏதுமில்லை. எனவே, திருவையாறு தொகுதி, மேலத்திருப்பூந்துருத்தி பேரூராட்சி, ஆதி திராவிடர் தெருவில் புதிய சமுதாயக்கூடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

299—

தாட்கோ தலைமை அலுவலகம் அமைத்தல்

வினா எண் 4294—திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி மாவட்டத்தில் தாட்கோ தலைமை அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதியதாக தோற்றுவிக்கப்பட்ட தென்காசி மாவட்டத்தில் தாட்கோ மாவட்ட அலுவலகம் அமைப்பதற்கான

2022 மே 6]

கருத்துரு தாட்கோ மேலாண்மை இயக்குநரிடமிருந்து பெறப்பட்டு, தற்போது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

300—

இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 7395—திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, ஏகனாபுரம் ஊராட்சியில் வசிக்கும் ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், ஏகனாபுரம் கிராமம் புல எண் 22, கணக்கன் தாங்கல் ஏரி புறம்போக்கு என கிராம கணக்குகளில் தாக்கலாகியுள்ளது. அதில், 50 நபர்கள் வீடு கட்டி குடியிருந்து வருகின்றனர். நீர்நிலைப் புறம்போக்குகளில் அரசு உத்தரவின்படி, பட்டா வழங்க இயலாது என்பதாலும், மேற்படி புலம் பொதுப் பணித் துறையைச் சார்ந்தது என்பதாலும் பட்டா வழங்க வழிவகையில்லை.

— — —

இணைப்பு-II

(94 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 4-ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2022-2023

முன்னுரை:

கல்வி அறிவும், சுயமரியாதை எண்ணமும் பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.

— தந்தை பெரியார்.

பகுத்தறிவுப் பகலவன், தந்தை பெரியாரின் இவ்வரிகளை முழு மூச்சாகக் கொண்டு, சமூகத்தின் விளிம்பு நிலையில் இருக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை கல்வி, சமூக மற்றும் பொருளாதார நிலைகளில் உயர்வடையச் செய்வதன்மூலம், சமத்துவ சமுதாயத்தினை உருவாக்கிடும் நோக்குடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல் மிக்க தலைமையின்கீழ் தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது.

தொலைநோக்குத் திட்டம்

- *சமூகத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் திட்டமிட்ட சமூக பொருளாதார மேம்பாட்டின்மீது கவனம் செலுத்துவதன்மூலம் அம்மக்களின் நிலையினை உயர்த்தி அவர்களை சமூக நீரோட்டத்திற்குள் கொண்டு வருதல்.*

- *ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த மாணாக்கரின் கல்வி மேம்பாட்டில் தனிக் கவனம் செலுத்துவதன்மூலம் அவர்களின் கல்வி, தன்னம்பிக்கை, ஆளுமைத் திறன் போன்ற செயல்திறன்களை உயர்த்துதல்.*

- *2030 ஆம் ஆண்டிற்குள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் குறிப்பாக வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளோர், பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோரின்*

நலன் தொடர்பான ஒருங்கிணைந்த வளர்ச்சி இலக்கினை எட்டுதல்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கல்வியறிவு மற்றும் சமூக-பொருளாதார நிலையினை உயர்த்தி அவர்களது வாழ்க்கைத் தரத்தினை திட்டமிடப்பட்ட முறையில் மேம்படுத்தும் வகையில் சமூக நலத் துறை 1988 ஆம் ஆண்டில் மூன்றாகப் பிரிக்கப்பட்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை தனியாகத் தோற்றுவிக்கப்பட்டது. இம்மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்படும் ஆதி திராவிடர் துணைத் திட்டம் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் ஆகிய இரு திட்டங்களுக்கான ஒருங்கிணைப்பு முகமையாகவும் இத்துறை முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

இத்துறையின்கீழ், ஆதி திராவிட மக்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான நலத் திட்டங்களைச் செயல்படுத்தி அவர்கள் எதிர்கொள்ளும் சமூக பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஆதி திராவிடர் நல ஆணையரகம், பழங்குடியினர் நலன் குறித்த பல்வேறு திட்டங்களை செயல்படுத்திடும் பழங்குடியினர் நல இயக்குநரகம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தினை செயல்படுத்திடும் சமூக நீதி மற்றும் மனித உரிமைக் காவல் பிரிவு மற்றும் இம்மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உறுதுணையாக விளங்கிடும் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) ஆகிய துறைத் தலைமை அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. மேலும், தமிழ்நாட்டில் வசிக்கும் பழங்குடி இனங்களின் மொழி மற்றும் கலாச்சாரம் குறித்து ஆராய்ச்சி மேற்கொள்ள பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் நீலகிரி மாவட்டத்தில் இயங்கி வருகிறது.

ஆதி திராவிடர் நல ஆணையரகம் மூலமாக ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளை நடத்துதல், வீட்டுமனைப் பட்டா வழங்குதல், குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் கையாளப்பட்டு வருகின்றன.

பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் விடுதிகளை நடத்துதல், அவர்களது குடியிருப்புகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், வன உரிமைச் சட்டத்தினை செயல்படுத்துதல் மற்றும் அவர்களது பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகிய

[2022 மே 6

பணிகள் பழங்குடியினரின் முன்னேற்றத்திற்காக பழங்குடியினர் நல இயக்குநரகம் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் பொருளாதார மேம்பாட்டிற்காக மானியத்துடன்கூடிய கடனுதவி வழங்கும் திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் இவ்வின இளைஞர்களுக்கு சுயதொழில்/வேலைவாய்ப்பினை உருவாக்கிட பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்குதல் ஆகிய பணிகள் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தால் (தாட்கோ) கையாளப்பட்டு வருகின்றன.

சமூகத்தின் விளிம்பு நிலையில் இருக்கும் இம்மக்களின் உரிமைகளைப் பாதுகாத்திடவும், அவர்களுக்கெதிராக நடைபெறும் வன்கொடுமைகளை தடுத்திடும் பொருட்டும் இயற்றப்பட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டத்தின் செயலாக்கத்தினை காவல் துறையின் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு கண்காணித்து வருகிறது.

தமிழ்நாட்டில் வசிக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சட்டபூர்வமான உரிமைகளை பாதுகாக்கவும், அவர்களது முக்கியமான பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையம் தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் வகையில் உருவாக்கப்பட்டு இயங்கி வருகிறது.

1955 ஆம் ஆண்டு குடிமையியல் பாதுகாப்புச் சட்டம் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டத்தின் செயலாக்கத்தினை கண்காணித்திட மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், புதிரை வண்ணார் இன மக்களுக்கான நலத் திட்டங்களின் பயன் அச்சமுதாயத்தினருக்கு சென்றடைய தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம், பழங்குடியின மக்களின் நலனுக்கான பல்வேறு திட்டங்கள் அவர்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்த தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம் மற்றும் தூய்மைப் பணிபுரிவோருக்கான திட்டங்களின் செயலாக்கத்தை கண்காணித்திடும் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியம் ஆகிய நல வாரியங்கள் இத்துறையின்கீழ் இயங்கி வருகின்றன.

2022 மே 6]

மேலும், இம்மாநிலத்தில் வசிக்கும் பழங்குடியின மக்களுக்கான திட்டங்களை திட்டமிடவும், அவர்களது ஒருங்கிணைந்த முன்னேற்றத்திற்கான சிறப்பான ஆலோசனைகளை வழங்கிடவும், தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றம் எனும் அமைப்பும் செயல்பட்டு வருகிறது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சியினை உறுதி செய்திடும் வகையில், அவர்களது சட்டபூர்வமான உரிமைகளைப் பாதுகாத்திடும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தும் பொருட்டு 2022—2023 ஆம் ஆண்டிற்கான வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.4,281.76 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள்

நீடித்த வளர்ச்சி இலக்குகள் என்பவை உலகளாவிய 17 குறிக்கோள்கள் மற்றும் 169 இலக்குகளின் முக்கியமான அங்கமாக விளங்குகின்றன. ***"எவரும் விடுபடாமல் உள்ளடக்கிய வளர்ச்சி—2030"*** *என்ற செயல்திட்டத்தின் அடிப்படையில், நெறிப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறையுடன்கூடிய வளர்ச்சித் திட்டங்களின் மூலம் மகத்தான சாதனையை மனித குலம் எய்திட வழிவகுக்கப்பட்டுள்ளது. உலக பரிணாம வளர்ச்சி மாற்றத்தின் ஓர் அங்கமாக இந்த இலக்குகள் அமைந்துள்ளன.*

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் நீடித்த மற்றும் நிலையான வளர்ச்சி இலக்கு:-

ஐக்கிய நாடுகளின் சபை உச்சி மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட "நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் 2030"—ன் செயல்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள "எவரும் விடுபடாமல் உள்ளடக்கிய வளர்ச்சி" எனும் மையக்கருத்து இத்துறையுடன் நேரடி தொடர்புடையதாகும்.

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை அடையும் பொருட்டு அரசாணை (நிலை) எண் 14, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கமபா) துறை, நாள்: 31-1-2020-ன் வாயிலாக நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் அலகு இத்துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

[2022 மே 6

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளில் ஆதி திராவிடர் துணைத் திட்டம் (SCSP) மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் (TSP) ஆகியவற்றில் கவனம் செலுத்தக்கூடிய ஆதி திராவிடர் துணைத் திட்ட நிதி பயன்பாடு [குறிக்கோள் (10.4.1)] மற்றும் பழங்குடியினர் துணைத் திட்ட நிதி பயன்பாடு (குறிக்கோள் (10.4.2)) ஆகிய குறிக்காட்டிகள் அடங்கியுள்ளன. ஆதி திராவிடர் துணைத் திட்டம் [Scheduled Castes Sub Plan (SCSP)] மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் [Tribal Sub Plan (TSP)] ஆகியவற்றின்கீழ் அரசின் பல்வேறு திட்டங்களிலும் இம்மக்களின் பங்கேற்பை உறுதிசெய்திடும் பொருட்டு அனைத்து துறைகளில் உள்ள திட்டங்கள் "ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல்" என்ற இலக்கு 10-ன் குறிக்கோள் 10.4-ஐ நேரடியாக அடைய வழிவகுக்கப்பட்டுள்ளது.

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளின் செயற்பாட்டுக் குழு:-

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளின் குறிக்கோள்களையும், இலக்குகளையும், அடைவதற்கும் அதனைக் கண்காணிப்பதற்கும் ஒருங்கிணைப்புத் துறைகளின் செயலாளரை தலைவராக கொண்ட 8 செயல்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இலக்குகள் 1, 2 இலக்கு 4, இலக்கு 10 மற்றும் இலக்கு 16 ஆகியவற்றை அடையும் நோக்கில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, செயற்பாட்டுக் குழுக்கள் 1, 3, 4 மற்றும் 8-ல் உறுப்பினராக உள்ளது. இலக்குகள் மற்றும் அவற்றின் சாதனைகள் குறித்து ஆய்வு செய்வதற்காக இச்செயல்பாட்டுக் குழுக்களால் காலமுறைக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

தேசிய மற்றும் மாநில குறியீடுகளின் கட்டமைப்பு:-

ஆதி திராவிடர் துணைத் திட்டம் [Scheduled Castes Sub Plan (SCSP)] மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் [Tribal Sub Plan (TSP)] ஆகிய திட்டங்கள் தேசிய இலக்கின் குறியீடுகளாக அமைந்துள்ளன. இதற்கென ஒன்றிய அரசால் சிறப்பு நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த நிதியுதவியை 100 விழுக்காடு பயன்படுத்துவதே இக்குறியீட்டின் இலக்காக அமைந்துள்ளது. தேசிய அளவில் சராசரியாக ஆதி திராவிடர் மக்கள் தொகைக்கு 77.67 விழுக்காடும், பழங்குடியினர் மக்கள் தொகைக்கு

2022 மே 6]

82.98 விழுக்காடும், நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது. இலக்கு 10—ற்கான (ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல்) குறியீட்டு எண்.85-ஐ கொண்டு தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. (ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கான குறியீட்டு எண்.99 மற்றும் பழங்குடியினர் துறைத் திட்டத்திற்கான குறியீட்டு எண்.85).

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளின் குறிக்கோள்கள் மற்றும் குறிக்காட்டிகளை மையப்படுத்தி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூக, பொருளாதார அதிகாரமளித்தலை பரவலாக்க, இத்துறை பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது.

ஆதி திராவிடர் நலன்

சமூக நீதி என்பது அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கிய வளர்ச்சியாகும். அனைத்து சமூகங்களையும் சமமாக வாழச்செய்வதன்மூலம் தமிழ்நாடு சமத்துவ சமுதாயமாக திகழ வேண்டும் எனும் குறிக்கோளுடன் இத்துறை இயங்கி வருகிறது.

2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 7.21 கோடியில், 20.01 விழுக்காடு (1.44 கோடி) ஆதி திராவிட மக்கள் உள்ளனர். தமிழ்நாட்டில் சமூக மறுப்புகளுக்கு ஆளான ஒடுக்கப்பட்ட மக்களின் நிலையை நன்கு உணர்ந்துள்ள இத்துறை அவர்களின் முன்னேற்றத்துக்கான பல்வேறு கொள்கைகள், நலத் திட்டங்கள், வரவு செலவுத் திட்டங்கள் மற்றும் செயல்முறைத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது.

ஆதி திராவிட மக்களின் கல்வியறிவினை உயர்த்துவதே சமூக மாற்றத்திற்கு வித்தாக அமையும் என்பதால் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மேலும், அவர்களை சமூக நீரோட்டத்தில் ஒன்றிணைக்கும் வகையில் பொருளாதார மேம்பாட்டிற்காக, வணிக நிறுவனங்களை அமைக்கவும், விவசாய நிலங்களை வாங்கி மேம்படுத்தவும் மானியத்துடன்கூடிய கடன்கள் வழங்கப்படுகின்றன. மேலும் தற்போதைய வேலைவாய்ப்புச் சந்தையில் அவர்களை திறன் பெற்றவர்களாக உருவாக்கும் வகையில் பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

[2022 மே 6

கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள்

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து."

ஒரு பிறவியில் பெறும் கல்வி அறிவானது, ஏழு பிறவிகளுக்கும் பாதுகாப்பாக அமையும் எனும் வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, ஆதி திராவிட மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அடிப்படையான கல்வி மேம்பாட்டிற்கு இத்துறை உயர் முன்னுரிமையை அளிக்கிறது.

2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் ஆதி திராவிட மக்களின் கல்வியறிவு 73.26 விழுக்காடு ஆகும். இது ஏனைய பொதுப் பிரிவினரின் கல்வியறிவு விழுக்காடான 80.09 உடன் ஒப்பிடுகையில் குறைவாக உள்ளதை அறிந்து 2022–2023 ஆம் நிதியாண்டின் வரவு—செலவுத் திட்ட மொத்த நிதி ஒதுக்கீடான ரூ.4,281.76 கோடியில், கல்வி சார்ந்த திட்டங்களுக்காக மட்டும் ரூ.3,571.39 கோடி (83.41 விழுக்காடு) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.1 பள்ளிகள்

ஆதி திராவிட மாணாக்கரின் கல்வியறிவு வளர்ச்சி விகிதம் மற்றும் கல்வித்தரம் ஆகியவற்றை உயர்த்திடும் பொருட்டு இத்துறை ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளை சிறப்பாக நடத்துவதுடன், பல்வேறு கல்வி உதவித்தொகைத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் 27,85,568 ஆதி திராவிட மாணாக்கர் கல்வி பயின்று வருகின்றனர். (ஆதாரம்—ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் முறைமை) ஆதி திராவிட மக்களின் கல்வித் தேவையினை பூர்த்திசெய்யும் வகையில் அவர்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளில், இத்துறையால் 1,138 பள்ளிகள் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

ஆதி திராவிடர் நலப் பள்ளிகளின் விவரம் 2021-2022

விவரம்	பள்ளிகளின் எண்ணிக்கை	மாணவர்	மாணவியர்	மொத்தம்
தொடக்கப் பள்ளிகள்	833	20,437	19,772	40,209
நடுநிலைப் பள்ளிகள்	99	5,031	4,926	9,957
உயர்நிலைப் பள்ளிகள்	108	6,070	5,534	11,604
மேல்நிலைப் பள்ளிகள்	98	17,816	15,427	33,243
மொத்தம்	1,138	49,354	45,659	95,013

உயர்கல்விக்கான தேவையினை கருத்திற் கொண்டு மாணாக்கர் எண்ணிக்கை உள்ளிட்ட காரணிகளின் அடிப்படையில் இத்துறையின்கீழ் இயங்கும் பள்ளிகள் அடுத்த உயர் நிலைக்கு நிலை உயர்த்தப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளுக்கு தேவையான கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள், குடிநீர், கழிவறைகள் ஆகிய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளும் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

2021-2022 ஆம் நிதியாண்டில் இத்துறையின்கீழ் இயங்கும் 150 ஆதி திராவிடர் நலப் பள்ளிகளுக்கு 480 புதிய வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் 15 அறிவியல் ஆய்வகங்கள் ஆகிய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ரூ.100.00 கோடி செலவில் ஏற்படுத்தித் தர ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும், 51 ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள கணினி ஆய்வகங்களுக்கு ரூ.87.00 இலட்சம் மதிப்பீட்டில் எதிர்மின்மாற்றிகள் (Inverters) வழங்குவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இத்துறையால் நடத்தப்பெறும் பள்ளிகளில் பயிலும் மாணாக்கரின் கல்வித் தரத்தை உயர்த்திட ஏதுவாக இத்துறை பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகள், அறிவுத் திறன் வகுப்பு, கையாளும் பயிற்சி (Practical Training), கணினி பயிற்சி போன்றவை பள்ளிக் கல்வித்

துறையின் வழிகாட்டுதலின்படி நடத்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

1.2 கல்வி உதவித் தொகை திட்டங்கள்

கல்வி உதவித் தொகையின் முதன்மையான நோக்கம் கல்விக்கு உறுதுணையாய் இருப்பதாகும். தகுதிவாய்ந்த ஆதி திராவிடர் இன மாணவர்கள் உயர் கல்வியில் மேம்பாடு அடையும் வகையில் இத்துறை கீழ்க்காணும் பல்வேறு கல்வி உதவித் தொகைகளுடன் கட்டணச் சலுகைகளையும் வழங்கி வருகிறது.

ஒன்றிய அரசு கல்வி உதவித்தொகைத் திட்டங்கள்

(அ) ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டம்

உயர்கல்வியில் ஆதி திராவிடர் இன மாணாக்கர்களின் மொத்த சேர்க்கை விகிதத்தை உயர்த்திடும் நோக்குடன் பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்புகளை பயிலும் மாணாக்கர்கள் தமது கல்வியைப் பொருளாதாரத் தடையின்றித் தொடர, ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் இக்கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்புகளில் பயிலும் ஆதி திராவிட மாணாக்கருக்கு இத்திட்டத்தின்கீழ் கல்விக் கட்டணங்கள் மற்றும் கல்விப்படி (Academic allowances) ஆகியவை கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தினை செயல்படுத்த ஏற்படும் செலவினத் தொகை 60:40 என்ற விகிதத்தில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் பகிர்ந்துகொள்ளப்படுகிறது.

அடிப்படைத் தகுதிகள் :

(அ) ஆதி திராவிட மாணாக்கரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

(ஆ) மாணாக்கர் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளை பயில வேண்டும்.

2022 மே 6]

கல்விக் கட்டணங்கள்

(i) அரசு/அரசு உதவிபெறும் கல்வி நிலையங்கள்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் கல்வி பயிலும் ஆதி திராவிட மாணாக்கருக்கு, கல்வி நிறுவனத்திற்கு அவர்களால் செலுத்தப்பட வேண்டிய கட்டாய மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டணங்கள் உதவித் தொகையாக மாணாக்கரின் வங்கி சேமிப்புக் கணக்குகளில் அரசால் வரவு வைக்கப்படுகிறது.

(ii) சுயநிதிக் கல்வி நிலையங்கள்

சுயநிதிக் கல்வி நிலையங்களில் அரசு/நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களில் பயிலும் ஆதி திராவிடர் மாணாக்கருக்கு அரசால் நியமிக்கப்பட்ட சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டண நிர்ணயக் குழு நியமித்த கட்டணங்கள்/அரசு நிர்ணயிக்கும் கட்டணங்கள் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும்.

சுயநிதிக் கல்லூரிகளிலுள்ள நிருவாக ஒதுக்கீடு இடங்களுக்கு ஒன்றிய அரசு விதித்துள்ள கீழ்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் நேர்வுகளில் கல்வி உதவித் தொகை மாணாக்கரின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும்:—

1) உரிய அதிகாரம் பெற்ற அமைப்பால் ஏற்படுத்தப்பட்ட கட்டண நிர்ணய/கட்டணம் வரன்முறைப்படுத்தும் குழுவால் அத்தகைய பாடப் பிரிவுகளுக்கான கட்டணம் நிர்ணயிக்கப்பட்டிருக்க வேண்டும்.

2) விண்ணப்பங்களை வரவேற்க விளம்பரம் செய்தல், வரப்பெற்ற விண்ணப்பங்களின் தரப்பட்டியல் வெளியிடுதல், தகுதியின் அடிப்படையில் விண்ணப்பங்களைத் தேர்வு செய்தல் ஆகிய நடைமுறைகளை உள்ளடக்கியவாறு ஒளிவுமறைவற்ற முறையில் அத்தகைய இடங்களுக்கான சேர்க்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதர கல்விப் படி (Academic Allowance)

ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் மாணாக்கருக்கு கல்விக் கட்டணங்கள் வழங்கப்படுவதுடன், இதர கல்வி சார்ந்த செலவினங்களுக்காக கல்விப்படியும் வழங்கப்படுகிறது.

TRUTH ALONE TRIUMPHS

[2022 மே 6

இத்திட்டத்தின்கீழ் மாணாக்கருக்கு வழங்கப்பட்டு வரும் படிப்பு வாரியான கல்விப்படித் தொகை விவரங்கள் கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன:—

தொகுதி	படிப்புகள்	ஒரு வருடத்திற்கான கல்விப்படி (ரூ.)	
		விடுதி மாணாக்கர் (Hosteller)	வெளி மாணாக்கர் (Day Scholar)
I	பொறியியல், மருத்துவம், சட்டம், நவீன ஆடை வடிவமைப்பு தொழில்நுட்பம் (Fashion Technology), கால்நடை, வேளாண்மை மற்றும் அதைச்சார்ந்த தொழில் படிப்புகளில் பட்டம் மற்றும் முதுநிலை பட்டப் படிப்பு, மேலாண்மை மற்றும் மருத்துவம் சார்ந்த பல்வேறு படிப்புகளில் முதுநிலை பட்டயம்/ பட்டயக் கணக்கர் (CA/ICWA/CS/CFA etc.,) மற்றும் முதுநிலை ஆராய்ச்சி மற்றும் முனைவர் பட்டப்படிப்பு (M.Phil, Ph.D., & Post Doctoral programmes)	13,500/-	7,000/-
II	12 ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாக கொண்ட மருந்தாக்கியல், செவிலியர், விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் ஹோட்டல் மேலாண்மை போன்ற தொழிற் படிப்புகளில் பட்டம், பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகள் (B.Sc.,(Nursing), B.Pharm, B.O.T, B.P.T, M.Sc (Nursing), M.Pharm, M.P.T etc.,)	9,500/-	6,500/-

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2022 மே 6]

தொகுதி	படிப்புகள்	ஒரு வருடத்திற்கான கல்விப்படி (ரூ.)	
		விடுதி மாணாக்கர் (Hosteller)	வெளி மாணாக்கர் (Day Scholar)
III	தொகுதி I மற்றும் II—ல் இடம் பெறாத இதர இளங்கலை பட்டப் படிப்பு மற்றும் முதுகலை பட்டப் படிப்புகள் (B.A./B.Sc./B.Com./ M.A.,/ M.Sc./ M.Com., etc.,)	6,000/-	3,000/-
IV	10 ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாகக் கொண்ட தொழில்நுட்பப் பட்டயப் படிப்புகள், சான்றிதழ் படிப்புகள், மேல்நிலைக் கல்வி படிப்புகள் மற்றும் தொழிற்பயிற்சி படிப்புகள். (XI, XII, ITI, தொழிற் பயிற்சிக் கல்வி etc.,)	4,000/-	2,500/-

இத்திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் நிதியாண்டில், ரூ.1,110.23 கோடி மதிப்பிலான கல்வி உதவித் தொகை 6,93,634 மாணாக்கருக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கென 2022-2023 ஆம் நிதி ஆண்டில் ரூ.1,798.71 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) ஒன்றிய அரசின் ப்ரிமெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டம்-ஆதி திராவிடர் மற்றும் பிற மாணாக்கர்கள்:-

ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர் மாணாக்கருக்கான ப்ரிமெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டம் மற்றும் சுகாதாரத் தொழில் புரிவோரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகைத் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரே திட்டமாக செயல்படுத்தப்படும். 2022-2023 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் இரண்டு கூறுகளாக செயல்படுத்தப்படும்.

திட்டக்கூறு-1:

ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் பயிலும் மாணாக்கருக்கான ப்ரிமெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டம்

அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற அல்லது மத்திய/மாநில கல்வி வாரியங்களால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் பயிலும் ஆதி திராவிட மாணாக்கருக்கு இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

தகுதி:-

மாணாக்கரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

திட்டக்கூறு-2:

தூய்மைப் பணி மற்றும் சுகாதாரமற்ற பணிபுரிவோரின் குழந்தைகளுக்கான ப்ரிமெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டம்

1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் பயிலும், தூய்மைப் பணி, தோல் பதனிடுதல், தோல் உரித்தல் மற்றும் கழிவுப் பொருட்களிலிருந்து மறுசுழற்சிக்கு உகந்த பொருட்களை பிரித்து சேகரித்தல் ஆகிய சுகாதாரமற்ற பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு, சாதி, மத வேறுபாடு மற்றும் வருமான வரம்பின்றி இக்கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

ப்ரிமெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் உதவித்தொகை பின்வரும் வீதத்தில் மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது:—

	வெளி மாணாக்கர் (Day Scholar)	**விடுதி மாணாக்கர் (Hosteller)**
	(ஒரு ஆண்டுக்கு) (ரூபாய்)	
திட்டக்கூறு-1:	*3,500/- (வகுப்பு 9-10)*	*7,000/- (வகுப்பு 9-10)*
திட்டக்கூறு-2	*3,500/- (வகுப்பு 1-10)*	*8,000/- (வகுப்பு 3-10)*

2022 மே 6]

இத்திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் நிதியாண்டில் 3,14,602 மாணாக்கருக்கு ரூ.92.20 கோடி மதிப்பிலான கல்வி உதவித் தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.94.32 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாநில அரசின் கல்வி உதவித் தொகை திட்டங்கள்

(அ) மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம்

ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளால் பயன்பெற இயலாத ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணாக்கருக்கு உதவிடும் வகையில் மாநில அரசு சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகையினை வழங்கி வருகிறது. இதற்கான 100 விழுக்காடு நிதியை மாநில அரசு வழங்குகிறது.

இத்திட்டத்திலும் ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட கல்விக் கட்டணங்களும், கல்விப்படியும் உதவித் தொகையாக மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகின்றன.

தகுதிகள்:-

(அ) ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.

(ஆ) மாணாக்கரின் பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். அரசுப் பணியாளர்களுக்கு அவர்களது அகவிலைப்படி நீக்கி வருமானம் கணக்கிடப்பட வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் 2021-2022 ஆம் நிதியாண்டில், ரூ.76.06 கோடி செலவில் 28,259 மாணாக்கருக்கு உதவித் தொகைகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கென 2022-23 ஆம் நிதியாண்டில், ரூ.85.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2022 மே 6

(ஆ) மாநில அரசின் உயர் கல்வி சிறப்பு உதவித் தொகைத் திட்டம்

கட்டண விடுதிகளில் தங்கி, அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிலையங்களில் பட்ட மேற்படிப்பு பயிலும் ஆதி திராவிட மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் சிறப்பு உதவித் தொகை கீழ்க்கண்டவாறு வரவு வைக்கப்படுகிறது:—

வ. எண்	படிப்புகள்	உதவித் தொகை (ஒரு ஆண்டுக்கு)
1	இளங்கலை மற்றும் அறிவியல் பட்டப் படிப்புகள் மற்றும் பல்தொழில்நுட்ப பட்டயப் படிப்புகள்	ரூ.7,500/—
2	முதுகலை அறிவியல் பட்டப் படிப்புகள் மற்றும் இளங்கலை/ முதுகலை தொழிற்படிப்புகள்	ரூ.8,000/—

தகுதி:-

மாணாக்கரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் நிதியாண்டில், ரூ.6.43 கோடி செலவில் 8,181 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2022-23 ஆம் நிதியாண்டில், ரூ.12.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) வெளிநாடுகளில் முதுகலைப் பட்டம் மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளை பயில்வோருக்கான கல்வி உதவித்தொகைத் திட்டம்

வெளிநாடுகளில் உள்ள கல்வி நிறுவனங்களில் முதுகலைப் பட்டம் மற்றும் அதற்கு மேற்பட்ட முனைவர் ஆராய்ச்சிப் படிப்புகளை மேற்கொள்ள விரும்பும் ஆதி திராவிடர், கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கரை ஊக்குவிக்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆர்வமுள்ள பல மாணாக்கரை ஊக்கப்படுத்தும்பொருட்டு, தற்போது இத்திட்டம் இரண்டு திட்டப் பகுதிகளாக திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

2022 மே 6]

திட்டப் பகுதி -- I

வெளிநாடுகளில் உள்ள கல்வி நிறுவனங்களில் சேர்க்கையினை மேற்கொள்ளத் தேவையான TOEFL/IELTS/ GRE/GMAT *ஆகிய தகுதித் தேர்வுகளில் தேர்ச்சியுறும் பொருட்டு, மொத்தம் 500 மாணாக்கருக்கு பயிற்சி வழங்கப்படும்.*

திட்டப் பகுதி -- II

தகுதித் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கள் தாம் விரும்பும் கல்வி நிறுவனங்களில் உயர்கல்வி பயில ஏதுவாக, ஆண்டுதோறும் 10 மாணாக்கருக்கு தாங்கள் விரும்பும் நாட்டின் கல்வி நிறுவனத்தில் உயர்கல்வியினைத் தொடர கல்வி உதவித்தொகை வழங்கப்படும். மாணவர்கள் பயிலக்கூடிய நாடு மற்றும் பயிலும் படிப்பினை பொறுத்து மாணவருக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.

மேலும், இக்கல்வி உதவித்தொகையை பெறுவதற்கான ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.3.00 இலட்சத்திலிருந்து ரூ.8.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

நிபந்தனைகள்:

1. *இக்கல்வி உதவித் தொகை ஒரு குடும்பத்திற்கு ஒரு முறை மட்டும் வழங்கப்படும்.*
2. TOEFL/IELTS/GRE/GMAT *ஆகிய 4 தகுதித் தேர்வுகளில், ஏதாவது ஒரு தேர்வுக்கான பயிற்சியை பெறுவதற்கு மாணாக்கர் அனுமதிக்கப்படுவர்.*

இத்திட்டத்தை செயல்படுத்துவற்காக 2022-23 ஆம் நிதியாண்டில் ரூ.5.57 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) முழு நேர முனைவர் ஆராய்ச்சிப் படிப்பிற்கான ஊக்கத் தொகை

இந்த ஊக்கத் தொகை ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் முழுநேர முனைவர் ஆராய்ச்சி படிப்பை மேற்கொள்ளும் ஆதி திராவிடர், கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின ஆய்வு மாணாக்கருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மருத்துவம், பொறியியல், கலை, அறிவியல், சட்டம், இலக்கியம், அரசியல் அறிவியல் ஆகிய பிரிவுகளில் மேற்கொள்ளப்படும்

[2022 மே 6

ஆய்வுகளை அதிகரிக்கும் வகையிலும், இவ்வாய்வுகளில், ஈடுபடும் ஆய்வு மாணாக்கரை பொருளாதார ரீதியாக ஊக்குவிக்கும் வகையிலும் இக்கல்வி உதவித் தொகைத் திட்டம் 2021-2022 ஆம் நிதியாண்டிலிருந்து கீழ்க்கண்டவாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது:

1. இதுவரையில் வழங்கப்பட்டு வந்த ஊக்கத் தொகை ஆண்டிற்கு ரூ.50,000/-இல் இருந்து ரூ.1,00,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

2. இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் மாணாக்கர் எண்ணிக்கை 1,200-ல் இருந்து 1,600 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

3. மேலும், இக்கல்வி உதவித் தொகையை பெறுவதற்கான ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.2.50 இலட்சத்திலிருந்து ரூ.8.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது

இத்திட்டத்திற்காக 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.16.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.3 கல்விக் கட்டண சலுகைகள்

(அ) கற்பிப்புக் கட்டண சலுகை

அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கர் அனைவரும், வருமான உச்ச வரம்பின்றி, கற்பிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுமையாக விலக்கு அளிக்கப்பட்டுள்ளனர். இக்கட்டணங்கள் கல்வி நிலையங்களுக்கு அரசால் நேரடியாக ஈடு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் நிதியாண்டில், ரூ.6.29 கோடி மதிப்பில் 12,886 மாணாக்கருக்கான கற்பிப்புக் கட்டணம் அரசால் செலுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2022-23 ஆம் நிதியாண்டில், ரூ.7.51 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இளங்கலை பட்டப் படிப்பு பயிலும் மாணாக்கருக்கு சிறப்பு மற்றும் தேர்வுக் கட்டண சலுகை

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளங்கலை பட்டப் படிப்பு பயிலும் ஆதி

2022 மே 6]

திராவிடர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கர் அனைவரும், வருமான உச்ச வரம்பின்றி, சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் நிதியாண்டில், ரூ.12.56 இலட்சம் மதிப்பீட்டில், 582 மாணாக்கர் பயன்பெற்றுள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2022-23 ஆம் நிதியாண்டில், ரூ.13.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) முதுகலை பட்டப் படிப்பு பயிலும் மாணவியருக்கு சிறப்பு மற்றும் தேர்வுக் கட்டண சலுகை

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலை பட்டப் படிப்பு பயிலும் ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவியர், அவர்தம் பெற்றோர் அல்லது பாதுகாவலரது வருமான உச்ச வரம்பு எதுவும் இல்லாமல், சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் நிதியாண்டில், ரூ.3.00 இலட்சம் மதிப்பில் 50 மாணவியருக்கான சிறப்பு மற்றும் தேர்வுக் கட்டணங்கள் அரசால் செலுத்தப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2022-23 ஆம் நிதியாண்டில், ரூ. 6.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) பள்ளி மாணாக்கருக்கு சிறப்பு மற்றும் கற்பிப்புக் கட்டண சலுகை

ஆதி திராவிடர் நல மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் அனைத்து மாணாக்கரும் சிறப்புக் கட்டணம் மற்றும் கற்பிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர். இக்கட்டணங்கள் கல்வி நிலையங்களுக்கு அரசால் நேரடியாக விடுவிக்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் நிதியாண்டில், ரூ.25.47 இலட்சம் செலவில் 46,705 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

[2022 மே 6

இத்திட்டத்திற்கென 2022-23 ஆம் நிதியாண்டில், ரூ.45.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(உ) இதர கட்டணங்களிலிருந்து விலக்கு

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கர் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டு நேரடியாக அரசுத் தேர்வுகள் இயக்குநரகத்திற்கு வழங்கப்படுகிறது.

இதுமட்டுமன்றி, இளங்கலை, முதுகலை மற்றும் தொழிற்கல்வி படிப்புகளுக்கான விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டு, இக்கட்டணங்கள் கல்வி நிலையங்களுக்கு நேரடியாக வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் நிதியாண்டில், ரூ.2.34 கோடி செலவில் 1,73,543 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2022-23 ஆம் நிதியாண்டில், ரூ.2.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.4 பெண் கல்வி சிறப்பு ஊக்கத் தொகைத் திட்டம்

சமத்துவம் மற்றும் சமூக நீதியின் ஒரு முக்கியமான அங்கமாக பெண்கல்வி விளங்குவதை உணர்ந்துள்ளதன் காரணமாக, பெண்கல்வி சிறப்பு ஊக்கத் தொகைத் திட்டத்தினை இத்துறை செயல்படுத்தி வருகிறது. அதன்படி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆதி திராவிட மாணவியர் 100 விழுக்காடு பள்ளியில் சேர்வதை உறுதி செய்வதற்கும், அவர்களது இடைநிற்றலை (Drop out) குறைப்பதற்காகவும், ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதன் விவரம் பின்வருமாறு:—

வகுப்பு	தொகை (ஆண்டொன்றுக்கு) (ரூபாயில்)
3 முதல் 5 வரை	500/-
6	1,000/-
7 மற்றும் 8	1,500/-

2022 மே 6]

இத்திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் நிதியாண்டில், ரூ.37.14 கோடி செலவில் 3,98,275 மாணவியருக்கு ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2022-23 ஆம் நிதியாண்டில் ரூ.45.31 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.5 பரிசுத் தொகைத் திட்டம்

உயர் கல்வியில் அதிக மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சியுறும் மாணாக்கரை ஊக்குவிக்கும் விதமாக, இளங்கலை, முதுகலை மற்றும் தொழிற்கல்வி பட்டப் படிப்புத் தேர்வுகளில் 60 விழுக்காட்டுக்கு மேல் மதிப்பெண் பெறும் முதல் 1,000 ஆதி திராவிடர், கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு பரிசுத் தொகை பின்வருமாறு வழங்கப்படுகிறது:—

படிப்பு	**தொகை (ஒருவருக்கு) (ரூபாயில்)**	**பரிசு பெறும் மாணவர் எண்ணிக்கை**
இளங்கலை	3,000/-	500
முதுகலை	5,000/-	300
தொழிற் படிப்பு	6,000/-	200

இத்திட்டத்திற்கென 2022-23 ஆம் நிதியாண்டில், ரூ.42.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.6 பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல்

ஆதி திராவிடர், கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கரின் கல்வி நலன் மற்றும் அவர்தம் பெற்றோரின் நிதிச் சுமையினை கருத்தில் கொண்டு இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கருக்கு பாடப் புத்தகங்களும், 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கருக்கு குறிப்பேடுகளும் பள்ளிக் கல்வித் துறை மூலமாக வழங்கப்படுகின்றன.

[2022 மே 6

மேலும், 2021-2022 ஆம் நிதியாண்டில், ரூ.0.74 கோடி செலவில் 10 ஆம் வகுப்பில் பயிலும் 14,198 மாணாக்கருக்கும் மற்றும் 12 ஆம் வகுப்பில் பயிலும் 12,243 மாணாக்கர்களுக்கும் சிறப்பு வழிகாட்டி கையேடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2022-23 ஆம் நிதியாண்டில் ரூ.11.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.7 சீருடைகள் வழங்குதல்

ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் இத்துறையால் நடத்தப்படும் பள்ளி விடுதிகளில் தங்கி கல்விப் பயிலும் மாணாக்கருக்கு நான்கு இணை சீருடைகள் சமூக நலத் துறையின்கீழ் இயங்கும் மகளிர் தையல் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக தைத்து வழங்கப்படுகின்றன.

2021-2022 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின்கீழ் ரூ.12.99 கோடி செலவில் 29,462 மாணவர்களுக்கும் மற்றும் 20,610 மாணவியர்களுக்கும் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2022-23 ஆம் நிதியாண்டில் ரூ.13.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.8 பருவ இதழ்கள் மற்றும் புத்தகங்கள் வழங்குதல்

தற்போது நிலவும் கடும் போட்டி மிகுந்த சூழ்நிலையில் பள்ளி/கல்லூரிகளில் கற்பிக்கப்படும் பாடங்களுடன் கூடுதலாக மாணாக்கர் தமது பொது அறிவுத் திறனை வளர்த்துக் கொள்வது அவசியமாகும். இந்நோக்கில், பல்வேறு பிரிவுகளில் மாணவர்களது பொது அறிவுத் திறனை மேம்படுத்தவும், அவர்கள் குடிமைப் பணி தேர்வுகள் உள்ளிட்ட இதர போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ள தயாராகும் வகையிலும், இத்துறையால் நடத்தப்படும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் பின்வருமாறு வாங்கி வழங்கப்படுகின்றன:—

2022 மே 6]

வ. எண்	பள்ளிகள் / விடுதிகள்	நூலக புத்தகங்கள்	பருவ இதழ்கள்
		(ஆண்டு ஒன்றுக்கு) (ரூபாயில்)	
1.	உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகள்	1,000	450
2.	பள்ளி விடுதிகள்	——	450
3.	கல்லூரி விடுதிகள்	——	3,100

இத்திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் நிதியாண்டில், ரூ.12.68 இலட்சம் மதிப்பிலான புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2022-23 ஆம் நிதியாண்டில் ரூ.13.74 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.9 மிதிவண்டிகள் வழங்குதல்

தொலைதூர கிராமங்களில் இருந்து கல்விப் பயிலும் மாணவ/ மாணவியருக்கு போக்குவரத்து ஒரு தடையாக இருக்கக் கூடாது. இதன் நிமித்தம் அவர்களது கல்வியில் இடைநிற்றல் ஏற்படாத வகையில் அரசு, அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் அரசு நிதியுதவி பகுதியாக பெறும் மேல்நிலைப் பள்ளிகளில், 11 ஆம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணாக்கருக்கு மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2022-23 ஆம் நிதியாண்டில் ரூ.65.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.10 நற்பெயர் பெற்ற தனியார் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பில் மாணாக்கரை சேர்த்தல்

அரசு/அரசு உதவிபெறும் பள்ளிகளில் சிறந்த முறையில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்கித் தரும் நோக்கத்துடன் இத்திட்டம் 2008 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ், அரசு உதவி பெறும் பள்ளிகளில் 5 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெறும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணாக்கருக்கு, அனைவருக்கும் கல்வித் திட்ட அலுவலரின் (SSA) உதவியுடன் சிறப்புத் தேர்வு ஒன்றினை நடத்தி, அதில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணாக்கருள், வட்டாரத்திற்கு (Block) ஒருவர் வீதம் 385 வட்டாரங்களில் இருந்து 385 மாணாக்கரை தேர்வு செய்து, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரை பெற்று, சிறந்த தனியார் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பில் சேர்த்து, அவர்கள் தொடர்ந்து 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயில ஆகும் செலவினத்தை அரசே ஏற்றுக் கொள்கிறது.

2021-2022 ஆம் நிதியாண்டில், ரூ.8.70 கோடி செலவில் 1,836 மாணாக்கர் பயன்பெற்றுள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2022-23 ஆம் நிதியாண்டில் ரூ.13.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.11 நற்பெயர் பெற்ற பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் மாணாக்கரை சேர்க்கும் திட்டம்

அரசு/அரசு உதவிபெறும் உயர்நிலைப் பள்ளிகளில் சிறந்த முறையில் தேர்ச்சிபெறும் மாணவர்களை நற்பெயர் பெற்ற தனியார் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் சேர்க்கும் இத்திட்டம் 2007 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு, அரசு நிதியுதவிபெறும் பள்ளிகள்/ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளி, மாநகராட்சி, நகராட்சிப் பள்ளிகளில் கல்வி பயின்று 10 ஆம் வகுப்பில் சிறந்த மதிப்பெண் பெற்று, தேர்ச்சிபெறும் 10 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர், இத்திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்டு சிறந்த தனியார் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் சேர்க்கப்படுகின்றனர். 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டவுடன்

2022 மே 6]

மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள், இணையதளத்தின் வாயிலாக அல்லது முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த சிறந்த மதிப்பெண் பெற்ற 10 மாணாக்கரின் பெயர்ப் பட்டியலைப் பெற்று, அதே மாவட்டம் அல்லது அருகில் உள்ள மாவட்டங்களில் உள்ள சிறந்த தனியார் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் அவர்களைச் சேர்த்து, அவர்களுக்கான கல்விக் கட்டணம் அந்தக் கல்வி நிலையங்களுக்கு விடுவிக்கப்படுகின்றது. ஒரு மாணாக்கருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.28,000/- வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு ரூ.56,000/- அரசு செலவிடுகிறது.

தகுதி:

பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2021-2022 ஆம் நிதியாண்டில், ரூ.44.00 இலட்சம் செலவில் 11 ஆம் வகுப்பில் 56 மாணாக்கர்களும் மற்றும் 12 ஆம் வகுப்பில் 164 மாணாக்கர்களும் பயன்பெற்றுள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2022-2023 ஆம் நிதி ஆண்டில் ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.12 விடுதிகள்

ஊரகப் பகுதிகளிலும், தொலைதூர கிராமப்புறங்களிலும் வசிக்கும் மாணாக்கர் கல்வி பயில போக்குவரத்து ஒரு தடையாக இருக்கக் கூடாது என்னும் அடிப்படையில், அவர்கள் படிக்கும் கல்வி நிறுவனங்களுக்கு அருகில் இத்துறையால் ஆதி திராவிடர் நல விடுதிகள் நடத்தப்படுகின்றன. இவ்விடுதிகள் ஆதி திராவிடர், கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணாக்கரின் இடைநிற்றலைத் தவிர்த்து அவர்கள் தொடர்ந்து கல்விப் பயில வழிவகை செய்கின்றன.

இத்துறையின்கீழ் இயங்கிவரும் ஆதி திராவிடர் நல விடுதிகளும் அவற்றில் ஒப்பளிக்கப்பட்டுள்ள மாணாக்கரின் எண்ணிக்கையும் பின்வருமாறு:—

[2022 மே 6

ஆதி திராவிடர் நல விடுதிகளின் விவரம் (2021-2022)

விடுதியின் வகை	விடுதிகளின் எண்ணிக்கை			மாணாக்கரின் எண்ணிக்கை		
	மாணவர்	மாணவியர்	மொத்தம்	மாணவர்	மாணவியர்	மொத்தம்
பள்ளி விடுதிகள்	738	403	1,141	53,881	28,530	82,411
கல்லூரி விடுதிகள்	67	78	145	7,676	5,699	13,375
ஐ.டி.ஐ. விடுதிகள்	15	2	17	1,256	116	1,372
பாலிடெக்னிக் விடுதிகள்	3	2	5	178	110	288
முதுகலைப் பட்டதாரி கல்லூரி விடுதிகள்	9	6	15	693	315	1,008
சட்டக் கல்லூரி விடுதிகள்	1	0	1	55	0	55
மொத்தம்	833	491	1,324	63,739	34,770	98,509

- அரசாணை (நிலை) எண் 91, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந4) துறை, நாள் 22.11.2021—ன்படி, கடலூர் மாவட்டம்—விருத்தாச்சலம், கள்ளக்குறிச்சி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மூன்று இடங்களில் தலா ஒரு விடுதியில், 50 மாணவியர் தங்கி கல்வி பயிலும் வகையில் 3 கல்லூரி விடுதிகள் துவங்கிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு கேரள எல்லையோரப் பகுதிகளில் உள்ள காபி/ தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்ட தமிழர்களின் குழந்தைகள் தங்கிக் கல்வி பயில ஏதுவாக தேனி மாவட்டத்தில் உள்ள 16 விடுதிகளில் தலா 10 இடங்கள் (160 மொத்த இடங்கள்) கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2022 மே 6]

- ஒவ்வொரு விடுதியிலும் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகள் தங்கிக் கல்வி பயில ஏதுவாக 5 கூடுதல் இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அ. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகள்:—

(i) கல்லூரி விடுதிகளுக்கு இரண்டு அடுக்கு படுக்கை வசதி கொண்ட கட்டில்கள் மற்றும் ஜமுக்காளம்

(ii) நீராவி கொதிகலன்கள்

(iii) குடிநீர் சுத்திகரிப்பு கருவிகள், மாவு அரைக்கும் இயந்திரங்கள் மற்றும் மின்னணு எடை இயந்திரங்கள்

(iv) ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு சலவை இயந்திரங்கள் மற்றும் சுகாதாரக் குட்டை தகளிகள்

(v) மருந்துகள் அடங்கிய முதலுதவிப் பெட்டி

(vi) நூலக வசதி

(vii) சமையல் எரிவாயு இணைப்பு

(viii) செய்தித்தாள்கள்

(ix) பாய், போர்வை மற்றும் உறையுடன் கூடிய தலையணைகள்

(x) எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர்

(xi) கல்லூரி விடுதிகளுக்கு "இந்தியா இயர் புத்தகம்", மற்றும் "திட்டம்" மாத இதழ்

மேலும், 2021-2022 ஆம் நிதியாண்டில் 512 ஆதி திராவிடர் நல விடுதிகளுக்கு ரூ.46.00 இலட்சம் செலவில் மின் அரைப்பான்கள் வாங்கி வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

[2022 மே 6

ஆ. உணவு மற்றும் சில்லரைச் செலவினங்கள்

ஆதி திராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு ஒவ்வொரு மாதமும் உணவுக் கட்டணமும், மேலும், சோப்பு, எண்ணெய், சிகைக்காய் வாங்குதல் மற்றும் முடி வெட்டுதல் போன்ற சில்லரைச் செலவினங்களுக்கான கட்டணமும் ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்டு வருகிறது.

இச்செலவினம் ஏறக்குறைய பத்து ஆண்டுகளாக திருத்தியமைக்கப்படவில்லை. தற்போது நிலவிவரும் பொருளாதார சூழலைக் கருத்தில் கொண்டு, சில்லரைச் செலவினத்திற்கான கட்டணத்தை 2021-2022 ஆம் ஆண்டிலிருந்து பள்ளி மாணாக்கருக்கு ரூ.50/-லிருந்து ரூ.100/- ஆகவும், கல்லூரி மாணவர்களுக்கு ரூ.75/-லிருந்து ரூ.150/- ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

அது போன்று, ஆதி திராவிடர் நல விடுதி மாணாக்கருக்கு பொங்கல், குடியரசு தினம், தமிழ் வருடப் பிறப்பு, சுதந்திர தினம் மற்றும் தீபாவளி ஆகிய விழா நாட்களில் வழங்கப்பட்டு வரும் சிறப்பு உணவுக் கட்டணமும், 2021-2022 ஆம் நிதியாண்டிலிருந்து பள்ளி மாணாக்கருக்கு ரூ.20/-லிருந்து ரூ.40/-ஆகவும், கல்லூரி மாணாக்கருக்கு ரூ.40/-லிருந்து ரூ.80/-ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு வழங்கப்படும் திருத்தப்பட்ட கட்டணங்களின் விவரம் பின்வருமாறு:—

கட்டணங்களின் வகைகள்	பள்ளி விடுதி மாணாக்கர்	கல்லூரி விடுதி மாணாக்கர்
உணவுக் கட்டணம் (ஒரு மாதத்திற்கு)	ரூ.1,000/-	ரூ.1,100/-
சில்லரைச் செலவினம் (சோப்பு, எண்ணெய், சிகைக்காய் வாங்குதல் மற்றும் முடி வெட்டுதல்) (ஒரு மாதத்திற்கு)	ரூ.100/-	ரூ.150/-
சிறப்பு உணவுக் கட்டணம் (பொங்கல், குடியரசு தினம், தமிழ் வருடப் பிறப்பு, சுதந்திர தினம் மற்றும் தீபாவளி விழா நாட்களில்)	ரூ.40/-	ரூ.80/-

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

2022 மே 6]

பள்ளி விடுதி–வாராந்திர உணவுப் பட்டியல்

கிழமை	காலை சிற்றுண்டி	நண்பகல் உணவு	மாலை	இரவு உணவு
திங்கள்	ரவை கிச்சடி, சட்னி	சாதம், காய்கறி குருமா, கூட்டு, மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர்	சாதம், காரக்குழம்பு, இஞ்சி இரசம், பொரியல், முட்டை(1)
செவ்வாய்	பொங்கல், சட்னி	சாதம், சாம்பார், பொரியல், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர்	சாதம், சாம்பார், கூட்டு, முட்டை(1)
புதன்	எலுமிச்சை சாதம், துவையல்	சாதம், மட்டன் (80 கிராம்)/ சிக்கன் (100 கிராம்) குருமா, கூட்டு, மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர்	சாதம், காரக்குழம்பு, இரசம்
வியாழன்	ரவை கிச்சடி, சட்னி	சாதம், சாம்பார், பொரியல், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர்	சாதம், காரக்குழம்பு, பொரியல், இரசம், முட்டை (1)
வெள்ளி	பொங்கல், சட்னி	சாதம், மோர்க்குழம்பு, பொரியல், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர்	சாதம், காரக்குழம்பு, பொரியல், இரசம், முட்டை (1)
சனி	இட்லி, சட்னி	சாதம், சாம்பார், கூட்டு, மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், சாம்பார், கூட்டு, முட்டை(1)

[2022 மே 6

கிழமை	காலை சிற்றுண்டி	நண்பகல் உணவு	மாலை	இரவு உணவு
ஞாயிறு	இட்லி, சாம்பார்	சாதம், சாம்பார், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், தக்காளி சூப், பொரியல், இரசம்

கல்லூரி விடுதி–வாராந்திர உணவுப் பட்டியல்

கிழமை	காலை சிற்றுண்டி	நண்பகல் உணவு	மாலை	இரவு உணவு
திங்கள்	பொங்கல், சட்னி	சாதம், சாம்பார், பொரியல், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், காரக்குழம்பு, பொரியல், இரசம், முட்டை(1)
செவ்வாய்	இட்லி, சாம்பார்	சாதம், காய்கறி குருமா, கூட்டு, மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், சாம்பார், பொரியல், இரசம் முட்டை(1),
புதன்	ரவை கிச்சடி, சட்னி	சாதம், மட்டன் (80 கிராம்) / சிக்கன் (120 கிராம்) குருமா, பொரியல் மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், தக்காளி சூப், பொரியல், இரசம்
வியாழன்	எலுமிச்சை சாதம், துவையல்	சாதம், குழம்பு, கூட்டு, மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், காரக்குழம்பு, பொரியல், இரசம், முட்டை(1)

கிழமை	காலை சிற்றுண்டி	நண்பகல் உணவு	மாலை	இரவு உணவு
வெள்ளி	ரவை கிச்சடி, சட்னி	சாதம், சாம்பார், பொரியல், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், சாம்பார், இரசம், பொரியல், மோர், முட்டை (1)
சனி	இட்லி, சாம்பார்	சாதம், சாம்பார், கூட்டு, மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், சாம்பார், இரசம், மோர், முட்டை (1)
ஞாயிறு	பொங்கல், சட்னி	சாதம், காய்கறி குருமா, பொரியல், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	இட்லி, சாம்பார்.

இ. தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கு நிதியுதவி

(i) விடுதிகள்:-

அரசு மட்டுமல்லாது இம்மக்களுக்காக சேவை செய்து வரும் 15 தனியார் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 23 விடுதிகளில் தங்கிப்பயிலும் 4,659 ஆதி திராவிட மாணாக்கருக்கு இத்துறை விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு வழங்கப்படுவது போலவே, உணவுக் கட்டணம், பல்வகைச் செலவினம் மற்றும் இதர சலுகைகளும் இத்துறைமூலம் வழங்கப்படுகின்றன.

(ii) பள்ளியுடன் இணைந்த விடுதிகள்:

தூத்துக்குடி மாவட்டம், முத்துக்கருப்பன் நினைவு கல்வி அறக்கட்டளை ஆதி திராவிடர் மாணாக்கருக்காக பள்ளி ஒன்றை நடத்தி வருகிறது. இப்பள்ளியில் 4,320 மாணாக்கர் பயின்று வருகின்றனர். மேலும், 2 விடுதிகள் இந்த அறக்கட்டளையால் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த அறக்கட்டளையால் நடத்தப்படும் பள்ளி மற்றும் விடுதிகளில் பணிபுரியும் 160 ஆசிரியர் மற்றும்

ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கான ஊதியம் அரசால் மானியமாக 2006 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

2021-2022 ஆம் நிதியாண்டில், ரூ.9.93 கோடி செலவில் மொத்தம் 160 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2022-23 ஆம் நிதியாண்டில் ரூ.9.91 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.13 அரசு ஆதி திராவிடர் தொழிற்பயிற்சி நிலையங்கள்

ஆதி திராவிட மாணாக்கர் தொழிற்கல்வி பயிலும் வகையில் பின்வரும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஆதி திராவிட மாணவர்களுக்கென பிரத்யேகமாக செயல்பட்டு வருகின்றன.

வ. எண்	மாவட்டத்தின் பெயர்	தொழிற் பயிற்சி நிலையத்தின் பெயர்	மாணாக்கரின் எண்ணிக்கை
1.	கடலூர்	சிதம்பரம்	252
2.	திருவள்ளூர்	வடகரை	195
		மொத்தம்	447

2. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வீடற்ற ஆதி திராவிட மக்களின் சமூக நிலையினை உயர்த்தும் நோக்கில் அவர்கள் தமக்கென சொந்த வீட்டினை கட்டிக்கொள்ளும்பொருட்டு அவர்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் பட்டாக்கள் வழங்குவதற்கான நிலம் தனியார் பேச்சுவார்த்தைமூலம் அல்லது நில எடுப்புச் சட்டங்களின்மூலம் கையகப்படுத்தப்படுகிறது. தகுதியுள்ள பயனாளிகள் கண்டறியப்பட்டு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் கீழ்க்கண்டவாறு உள்ளாட்சிப் பகுதிகளில் வழங்கப்பட்டு

2022 மே 6]

வருகின்றன:—

பகுதி	வழங்கப்படும் இடத்தின் அளவு	பயனாளியின் ஆண்டு வருமான வரம்பு
கிராமப்புறம்	3 சென்ட்	ரூ.72,000/—
நகராட்சி	1 ½ சென்ட்	
மாநகராட்சி	1 சென்ட்	

2021-2022 ஆம் நிதியாண்டில், ரூ.3.68 கோடி செலவில் 709 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2022—2023 ஆம் நிதி ஆண்டில் மொத்தம் ரூ.6.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. மயானங்கள் மற்றும் மயானப் பாதை வசதி

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மயான வசதி மற்றும் மயானப் பாதைகள் அமைத்துக் கொடுத்திடும் திட்டத்தின்கீழ் இத்துறை ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது.

இத்திட்டத்திற்கென 2022-23 ஆம் நிதியாண்டில் ரூ.75.84 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. சாதி வேறுபாடுகளற்ற மயானங்களை பயன்பாட்டில் கொண்டிருக்கும் கிராமங்களுக்கு பரிசுத் தொகை வழங்குதல்

சமூக ஒற்றுமையை ஊக்குவிக்கும் முயற்சியாக, சாதி வேறுபாடுகளற்ற மயானங்கள் பயன்பாட்டில் உள்ள முன்மாதிரி சிற்றூர்களுக்கு அதன் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள ஊக்கத் தொகையாக ரூ.10.00 இலட்சம் பரிசு வழங்கும் புதிய திட்டத்தை இத்துறை 2021-2022 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தியுள்ளது.

2021-22 ஆம் நிதியாண்டில், 37 மாவட்டங்களுக்கு (சென்னை நீங்கலாக) சாதி வேறுபாடுகளற்ற, மயான நடைமுறைகளில் உள்ள, மாவட்டத்திற்கு 3 சிற்றூர்கள் வீதம் மொத்தம் 111 சிற்றூர்களுக்கு பரிசுத் தொகையாக ரூ.14.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் சிற்றூர்களுக்கு தலா ரூ.10.00 இலட்சம் வீதம் ரூ.6.00 கோடி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2022—2023 ஆம் நிதியாண்டில் ரூ.8.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்

ஆதி திராவிடர் குடியிருப்புகள் அனைத்தும் குடிநீர், சாலைகள், மின்சாரம் முதலிய அனைத்து அடிப்படை வசதிகளையும் கொண்ட தன்னிறைவு பெற்ற கிராமங்களாக விளங்குவதை உறுதிசெய்திடும் பொருட்டு ஆண்டுதோறும் ரூ.100.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

காவல் துறை கூடுதல் இயக்குநர் மூலமாக வன்கொடுமை நிகழும் கிராமங்கள் எவை என கண்டறியப்பட்ட கிராமங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திட இத்திட்டத்தின்கீழ் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.100.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6. ஈமச்சடங்கு உதவித் தொகை

சமூகத்தின் விளிம்பு நிலையில் வசிக்கும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இனத்தைச் சார்ந்தவர்களின் குடும்பங்களில் நிகழும் துக்க நிகழ்வுகளின் போது ஈமச்சடங்குகளை நிறைவேற்றுவதற்கும், அதற்கான எதிர்பாராச் செலவுகளை மேற்கொள்ளவும் ரூ.5,000/— நிதியுதவி வழங்கப்படுகிறது.

2021-2022 ஆம் நிதியாண்டில், ரூ.9.95 கோடி மதிப்பிலான இவ்வுதவித்தொகை 19,900 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2022-23 ஆம் நிதியாண்டிற்கு ரூ.9.95 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7. ஆதி திராவிடர் துணைத் திட்டம் (SCSP)

மாநிலத்தின் மொத்தத் திட்ட நிதியிலிருந்து தமிழ்நாட்டின் ஆதி திராவிடர் மக்கள் தொகை விகிதத்திற்கு (20.01 விழுக்காடு)

2022 மே 6]

இணையாக நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் வழியாக ஆதி திராவிட மக்களை சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலைகளில் இதர பிரிவினருக்கு இணையாக உயர்த்திட வழிவகுக்கும் ஆதி திராவிடர் துணைத் திட்டம் தமிழ்நாட்டில் 1980—1981 ஆம் நிதியாண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2022-2023 ஆம் நிதியாண்டின் மாநில திட்ட ஒதுக்கீடான (மாநில நலத் திட்ட செலவினம்—Welfare Expenditure of State) ரூ.74,892.56 கோடியில், ஆதி திராவிடர் துணைத் திட்டத்தின் (ஆதி திராவிடர் நலத்திட்ட செலவினம்—Expenditure on Scheduled Castes Welfare) கீழ் ரூ.16,442.08 கோடி (21.95விழுக்காடு) மாநில அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது மாநிலத்தில் உள்ள ஆதி திராவிடர் இன மக்கள் தொகை விழுக்காட்டை (20.01 விழுக்காடு) விட அதிகமானதாகும்.

ஆதி திராவிடர் துணைத்திட்டத்தில், பின்வரும் 14 பிரிவுகளின்கீழ் 48 துறைத் தலைமைகளை உள்ளடக்கிய 20 செயலாக்கத்துறைகள் வாயிலாக ஆதி திராவிடர் மக்களின் மேம்பாடு மற்றும் நலனுக்காக திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

2022-23 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் துணைத்திட்டத்தின்கீழ் பிரிவு (SECTORAL) வாரியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரம்

(ரூ.கோடியில்)

வ. எண்	**பிரிவு**	**நிதி ஒதுக்கீடு**
1	ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன்	3,730.40
2	வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி	3,077.80
3	ஊரக வளர்ச்சி	2,744.16

2022-23 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் துணைத்திட்டத்தின்கீழ் பிரிவு (SECTORAL) வாரியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரம்

(ரூ.கோடியில்)

வ. எண்	பிரிவு	நிதி ஒதுக்கீடு
4	சமூகநலன் மற்றும் சத்துணவு	2,272.26
5	குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு	1,220.00
6	வேளாண்மையும் தொடர்பான நடவடிக்கைகளும்	1,133.16
7	கல்வி, விளையாட்டு மற்றும் பண்பாடு	1,023.81
8	மக்கள் நல்வாழ்வு-குடும்ப நலன்	795.08
9	போக்குவரத்து	197.00
10	பொதுவான பொருளாதாரப் பணிகள்	149.50
11	தொழிலாளரும் தொழிலாளர் நலனும்	56.46
12	சிறப்பு பகுதித் திட்டங்கள்	30.75
13	தொழிலும் கனிமங்களும்	7.90
14	ஏனைய சமூகப் பணிகள்	3.80
மொத்தம்		16442.09

ஆதி திராவிடர் துணைத் திட்டத்தின்கீழ் அவர்களது நலனுக்காக தீட்டப்படும் பல்வேறு நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திட செயலாக்கத் துறைகளால் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்கள் இத்துறையுடன் இணைந்து செயலாற்றி வருகின்றனர்.

மாநில அளவில் இத்துணைத் திட்டத்தின்கீழ் திட்டங்களைத் தீட்டுவதற்கும் செயல்படுத்துவதற்கும் ஒருங்கிணைப்புத் துறையாக

2022 மே 6]

*(*Nodal Department*) இத்துறை விளங்குகிறது. இத்துறையின் அரசு முதன்மைச் செயலாளர் ஒருங்கிணைப்பு அலுவலராக (*Nodal Officer*) அங்கீகரிக்கப்பட்டுள்ளார். மேலும், மாவட்ட அளவில் இத்திட்டங்களைக் கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் ஆதி திராவிடர் நல ஆணையர் கண்காணிப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.*

8. பிரதம மந்திரியின் ஆதி திராவிட மக்கள் முன்னேற்றத் திட்டம் (Pradhan Mantri- Anusuchit Jaati Abhyuday Yojana-PMAJAY)

*2021—2022 ஆம் ஆண்டு முதல் ஏற்கெனவே இயங்கி வரும் பிரதம மந்திரியின் முன்னோடி கிராமத் திட்டம் (*Pradhan Mantri Adarsh Gram Yojana—PMAGY*), ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கான ஒன்றிய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டம் (*Special Central Assistance to Scheduled Castes Sub Plan — SCA to SCSP*), பாபு ஜெகஜீவன்ராம் விடுதி கட்டும் திட்டம் (*Babu Jagjivan Ram Chatrawaas Yojana—BJRCY*) ஆகிய மூன்று திட்டங்களை ஒருங்கிணைத்து பிரதம மந்திரியின் ஆதி திராவிட மக்கள் முன்னேற்றத் திட்டம் (*Pradhan Mantri—Anusuchit Jaati Abhyuday Yojana—PMAJAY*) எனும் புதிய திட்டமாக ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.*

பிரதம மந்திரி கிராம முன்னோடித் திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் நிதியாண்டில் 1,357 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. மேலும், இத்திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் நிதியாண்டில் ஒன்றிய அரசால் ரூ.146.38 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கான ஒன்றிய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் நிதியாண்டில் ஒன்றிய அரசால் ரூ.153.28 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

9. சாதிச் சான்றிதழ்கள்

(i) சாதிச் சான்று வழங்குதல்

கல்வி மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றில் மக்கள் தொகையின் அடிப்படையில் முறையான பங்கேற்பு அளிக்கப்பட வேண்டும் எனும் அடிப்படையில், ஆதி திராவிடர்களுக்கான சாதிச் சான்றிதழ்கள் வழங்கும் அதிகாரம் வட்டாட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது. வட்டாட்சியரால் ஆதி திராவிடர்களுக்கு சாதிச் சான்று வழங்க மறுக்கப்படும்பட்சத்தில் வருவாய் கோட்டாட்சியர் அல்லது சார் ஆட்சியரிடம் மேல்முறையீடு

செய்வதுடன், அதன்பிறகு குறைகள் நீடிப்பின் அவற்றினை நிவர்த்தி செய்ய மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகலாம்.

(ii) சாதிச் சான்றுகளின் மெய்த்தன்மையை சரிபார்த்தல்

சில நேர்வுகளில் போலியான சான்று அளித்து இதர இனத்தவர்கள் கல்வி நிறுவனங்களில் சேர்தல், பொதுப் பணிகளில் நியமனம் பெறுதல் மூலம் உண்மையான ஆதி திராவிட மக்கள் பாதிக்கப்படுகின்றனர். ஆதி திராவிட மக்களின் உரிமைகளை பாதுகாத்திடும் பொருட்டு ஆதி திராவிடர் சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை அறிய மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழுக்கள் கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளன:—

மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழு

1	மாவட்ட ஆட்சியர்	தலைவர்	ஆதி திராவிடர் என வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினைக் கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்கலாம். இந்த ஆணையினை ஏற்கவில்லையெனில் இந்திய அரசமைப்புச் சட்டக்கூறு 226—ன்படி உயர் நீதிமன்றத்திலும், சட்டக்கூறு 136—ன்படி உச்ச நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்யலாம்.
2	மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்	உறுப்பினர்—செயலர்	
3	மானுடவியல் வல்லுநர்	உறுப்பினர்	

10. 1955 ஆம் ஆண்டு குடிமையியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989 மற்றும் திருத்தச் சட்டம், 2015

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 17—வது பிரிவு தீண்டாமையை ஒழித்து, அதை எந்த வடிவத்திலும் செயல்படுத்துவதைத் தடை செய்துள்ளது. தீண்டாமையின் மூலம் எவ்வித ஊறு விளைவிப்பதும் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

2022 மே 6]

தீண்டாமையை ஒழிக்கவும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைகளைத் தடுக்கவும், இத்தகைய குற்றங்களை விசாரிக்க சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கவும், வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளிக்கவும், இந்திய அரசால் குடிமையியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1955, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம் 1989 மற்றும் திருத்தச் சட்டம், 2015, வன்கொடுமைகள் தடுப்பு விதிகள், 1995 மற்றும் திருத்த விதிகள், 2016 மற்றும் 2018 ஆகிய சட்டங்கள் இயற்றப்பட்டு, அவை தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கூடுதல் காவல் துறைத் தலைவர் தலைமையின்கீழ், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு ஒன்று சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. இந்த இரு சட்டங்களின்கீழ் வழக்குகள் பதிவு செய்தல், புலன் விசாரணை, வழக்குத் தொடுத்தல் ஆகியவற்றை மேற்பார்வை செய்வது மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு பாதுகாப்பு அரணாக விளங்குவதும் இப்பிரிவின் பணிகளாகும்.

(அ) தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள்

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவுக்கூறுகள் 17 மற்றும் 35(a)(ii)-ன்படி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக நடைபெறும் குற்றங்கள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தீருதவிகள் மற்றும் மறுவாழ்வு தொடர்பான வழக்குகளை விரைந்து முடிக்க ஏதுவாக திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, விழுப்புரம், சிவகங்கை, திண்டுக்கல், இராமநாதபுரம், விருதுநகர் (ஸ்ரீவில்லிபுத்தூர்), புதுக்கோட்டை, கடலூர், நாமக்கல், தேனி, திருவண்ணாமலை, பெரம்பலூர், வேலூர், தூத்துக்குடி, கன்னியாகுமரி (நாகர்கோவில்), காஞ்சிபுரம் (செங்கல்பட்டு), திருப்பூர். திருவாரூர், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் 22 தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்காணும் தனியுறு சிறப்பு நீதிமன்றங்களில் அதிக எண்ணிக்கையிலான வழக்குகள் நிலுவையில் இருப்பதைக் கருத்தில் கொண்டு சேலம், கிருஷ்ணகிரி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் நான்கு புதிய தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள் தொடங்கப்பட உள்ளன.

[2022 மே 6

இதர மாவட்டங்களில் இவ்வழக்குகளை விசாரணை செய்ய தற்போதுள்ள குற்றவியல் அமர்வு நீதிமன்றங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989 தமிழகத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் நடைமுறைப்படுத்தப்படுவதை மாநில அளவில் ஒரு கூடுதல் காவல் துறை இயக்குநர், காவல் துறை உதவித் தலைவர் மற்றும் மாவட்ட அளவில் 31 காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் 7 காவல் உதவி ஆணையர்கள் மேற்பார்வையில் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவுகள் கண்காணித்து வருகின்றன.

(i) இச்சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் 1995 ஆம் ஆண்டைய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) விதிகள் 1995, திருத்த விதி 2016 மற்றும் திருத்த விதி 2018–ல் விதி 16-ன்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு 20-7-2021 அன்று திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் முதல் கூட்டம் 19—8—2021 அன்று நடைபெற்றது. 2022 ஆம் ஆண்டிற்கான இக்குழுவின் கூட்டம் 12-4-2022 அன்று நடைபெற்றது.

(ii) மேலும் விதி எண் 17(1-ன்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் 5 அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்ட மாவட்ட அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுவை அரசு அமைத்துள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பிரச்சினைகளை நன்கு அறிந்தவர்களை உறுப்பினர்களாக நியமனம் செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான குழு குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி இச்சட்டவிதிகளை நடைமுறைப்படுத்துவது பற்றியும், பாதிக்கப் பட்டவர்களுக்குத் தீருதவி மற்றும் மறுவாழ்வு அளித்தது குறித்தும், இச்சட்டங்களின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் நிலை பற்றியும் மாவட்ட அளவில் ஆய்வு செய்யும்.

2022 மே 6]

(iii) *ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) விதிகள் 1995, விதி எண் 17(A)-ல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, மாவட்டங்களில் உள்ள அனைத்து உட்கோட்டங்களிலும் உட்கோட்ட அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு அமைப்பதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டு, அதன்படி அனைத்து மாவட்டங்களிலும் உட்கோட்ட அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.*

வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோரை சமுதாயக் கண்ணோட்டத்துடன் அணுகி, முறையான நிவாரணம், வளமான எதிர்காலத்திற்கான உத்தரவாதம் ஆகியவற்றை வழங்குவதற்குத் தேவையான விழிப்புணர்வு பயிற்சிகள் காவல் துறை, வருவாய்த் துறை அலுவலர்களுக்கு "சமத்துவம் காண்போம்" என்கிற தலைப்பில் நடத்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும், வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழக்கின் தன்மைக்கேற்றவாறு குறைந்தபட்சம் ரூ.85,000/- முதல் அதிகபட்சம் ரூ.8.25 இலட்சம் வரை தற்போது வழங்கப்பட்டுவரும் தீருதவித் தொகையினை குறைந்தபட்சம் ரூ.1.00 இலட்சம் முதல், அதிகபட்சம் ரூ.12.00 இலட்சம் வரை உயர்த்தப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் நிதியாண்டில், 3,241 பாதிக்கப்பட்ட நபர்களுக்கு ரூ.29.98 கோடி மதிப்பிலான தீருதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இச்சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.35.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ)தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம்

தீண்டாமைக்கெதிராக பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஆண்டுதோறும் ஜனவரி மாதம் 24 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதி வரை "மனிதநேய வார விழா" நடத்தப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் மனிதநேய வார விழா நடத்துவதற்காக மாவட்டங்களுக்கு தலா ரூ.50,000/- மற்றும் மாநில அளவில் ரூ.1,00,000/- நிதி வழங்கப்படுகிறது.

வில்லுப்பாட்டுக் கலைஞர்கள்மூலம் தீண்டாமைக் கொடுமைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

[2022 மே 6

இது தவிர, ஆண்டுதோறும் ஜனவரி 26, ஆகஸ்டு 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய நாட்களிலும், அந்தந்த மாவட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்த உள்ளூர் விடுமுறை நாட்களிலும் சமத்துவ விருந்து ஏற்பாடு செய்யப்படுகிறது. சமத்துவ விருந்து ஏற்பாடு செய்வதில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் ஈடுபடுத்தப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் நிதியாண்டில், ரூ.2.65 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2022-23 ஆம் நிதியாண்டில் ரூ.1.11 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) சமூக நல்லிணக்கத்துடன் திகழும் சிறந்த கிராமங்களைத் தேர்ந்தெடுத்தல்

தமிழ்நாட்டின், அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை தவிர்த்து) தீண்டாமை கடைபிடிக்கப்படாத, பொது மக்கள் நல்லிணக்கத்துடன் கூடி வாழும் ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்கிராமத்திற்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திடும் பொருட்டு ரூ.10.00 இலட்சம் நிதி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் நிதியாண்டில், ரூ3.40 கோடி செலவில் 34 மாவட்டங்களில் உள்ள 34 கிராமங்கள் பயனடைந்துள்ளன.

இத்திட்டத்திற்கென 2022-23 ஆம் நிதியாண்டில், ரூ.3.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11. தமிழ்நாடு ஆதி திராவிடர் கலை மற்றும் இலக்கிய மேம்பாட்டுச் சங்கம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குறித்த ஆய்வுகளுக்கு உதவிடவும், இச்சமூகங்கள் தொடர்பான கலை, பண்பாடு, இலக்கிய படைப்புகளை ஊக்குவிக்கவும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டுப் பணி அமைப்பினை தமிழ்நாடு அரசு 2003 ஆம் ஆண்டு உருவாக்கியது. 2015 ஆம் ஆண்டில் இவ்வமைப்பு சங்கமாக பதிவு செய்யப்பட்டு தமிழ்நாடு ஆதி திராவிடர் கலை மற்றும் இலக்கிய மேம்பாட்டுச் சங்கம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

2022 மே 6]

இப்பணிக்கான தனி பணிக் குழு நிதியாக (Corpus Fund) ரூ.50.00 இலட்சம் வழங்கப்பட்டு வைப்புத் தொகை கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. இந்த வைப்புத் தொகைக்காகப் பெறப்படும் வட்டித்தொகை, கதை, கட்டுரை, கவிதை, வரலாறு மற்றும் புதினம் ஆகிய பொருண்மைகளில் சிறந்த படைப்புகளை உருவாக்கும் சிறந்த எழுத்தாளர்களுக்கு பரிசுத் தொகை வழங்க பயன்படுத்தப்படுகிறது.

ஆண்டுதோறும் சிறந்த இலக்கியப் படைப்புகளுக்காக தேர்வு செய்யப்பட்ட தமிழ்நாட்டைச் சார்ந்த ஆதி திராவிடர், கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இனங்களைச் சார்ந்த 10 எழுத்தாளர்கள் மற்றும் இச்சமூகங்களின் பிரச்சினைகள் குறித்து எழுதும் இதர இனங்களைச் சேர்ந்த ஓர் எழுத்தாளர் என மொத்தம் 11 எழுத்தாளர்களின் நூல்களை வெளியிட தலா ரூ.50,000/- பரிசுத்தொகை வழங்கப்படுகிறது. இப்பரிசுத் தொகையில் 50 விழுக்காட்டுத் தொகை படைப்புகளைபுத்தகமாக வெளியிட முன்பணமாகவும், எஞ்சிய 50 விழுக்காட்டுத் தொகை பணியை முடித்த பின்பும் வழங்கப்படுகிறது.

12. டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் விருது

ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக அயராது உழைத்த, சமத்துவம் மற்றும் சமூக நீதியின் முன்னோடியான அண்ணல் அம்பேத்கர் அவர்களைப் போற்றும் வகையில் தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூக, கல்வி, பொருளாதார மேம்பாட்டிற்கும், அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் தொண்டாற்றிய ஒருவருக்கு "டாக்டர் அம்பேத்கர் விருது" 1995 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, ஆண்டுதோறும் திருவள்ளுவர் தினத்தன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் டாக்டர் அம்பேத்கர் விருது வழங்கப்படுகிறது. இவ்விருதுடன் பரிசுத் தொகையாக ரூ.1,00,000/-க்கான காசோலை, தகுதியுரை மற்றும் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டு வந்த நிலையில் 2022 ஆம் ஆண்டிலிருந்து பரிசுத் தொகை ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து ஐந்து இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

[2022 மே 6

2021 ஆம் ஆண்டிற்கான "டாக்டர் அம்பேத்கர் விருது" மேனாள் நீதியரசர் திரு கே. சந்துரு அவர்களுக்கு வழங்கப்பட்டது.

II. பழங்குடியினர் நலன்

2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் 36 வகையான உட்பிரிவுகளைச் சார்ந்த 7,94,697 பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர். இது மாநில மொத்த மக்கள் தொகையில் 1.10 விழுக்காடு ஆகும்.

சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளில் பின்தங்கிய நிலையில் உள்ள பழங்குடியின மக்கள் அடிப்படை வசதிக் குறைபாடு, வனவளங்கள் அழிக்கப்படுவதால் மக்கள் இடப்பெயர்வு, ஊட்டச்சத்துக் குறைபாடு, பொருளாதார வாய்ப்புகள் இல்லாமை மற்றும் குறைந்த கல்வியறிவு ஆகிய சிக்கல்களை சந்திக்கின்றனர். இச்சிக்கல்களுக்கான தீர்வுகளை அளிப்பதன்மூலம், அவர்களது சமூக, பொருளாதார மற்றும் கல்வி வளர்ச்சியினை உறுதி செய்து, அவர்களை சமூக நீரோட்டத்தில் ஒருங்கிணைப்பதே இத்துறையின் குறிக்கோளாகும்.

அரசால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள் பழங்குடியினரின் கலாச்சாரம் மற்றும் பண்பாடுகளின்மீது சரியான புரிதலுடன், அவர்கள் எதிர்கொள்ளும் சமூக, உளவியல் மற்றும் பொருளாதார சிக்கல்களுக்கான தீர்வுகளை தருவனவாக உருவாக்கப்பட வேண்டும் என்பதை நன்கு உணர்ந்து, அதிக கவனத்துடன் அவர்களுக்கான திட்டங்களை தீட்டவும், அத்திட்டங்களின் பயன், தகுதியான மக்களுக்கு சென்றடைவதை உறுதி செய்திடும் பொருட்டும் பழங்குடியினர் நல இயக்குநரகம் 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தோற்றுவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில், பழங்குடியினர் அதிகமாக வசித்து வரும் சேலம், திருவண்ணாமலை, திருப்பத்தூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், இராணிப்பேட்டை, தருமபுரி, நாமக்கல், திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, நீலகிரி, கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, ஈரோடு, திருச்சிராப்பள்ளி, கடலூர், மதுரை, அரியலூர், திருநெல்வேலி, தென்காசி மற்றும் சென்னை ஆகிய

2022 மே 6]

23 மாவட்டங்களில் வாழும் பழங்குடியின மக்களை கல்வி, சுகாதாரம், சுற்றுப்புறத் தூய்மை ஆகியவற்றில் அனைத்து மக்களுக்கு இணையாக உயர்த்தும் வகையில் பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் அவர்களை அனைத்து நிலைகளிலும் வளர்ச்சி அடையச் செய்திட அரசு சிறப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

1. கல்வி

பழங்குடியினரின் சமூக—பொருளாதார மேம்பாட்டில் கல்வி மிகவும் பயனுள்ள கருவியாக இருப்பதால், அவர்களது கல்வி நிலையை மேம்படுத்துவதற்கு அதிக முன்னுரிமை தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது.

2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் பழங்குடியினரின் கல்வியறிவு விகிதம் 54.34 விழுக்காடு ஆகும். இது ஏனைய பொதுப் பிரிவினரின் கல்வியறிவு விகிதமான 80.09 விழுக்காடு உடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவாக உள்ளதை அறிந்துள்ள இத்துறை அவர்களது கல்வி மேம்பாட்டிற்கு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள், வனத் துறையின்கீழ் இயங்கும் பள்ளிகள், இதர தனியார் பள்ளிகள் மற்றும் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகள் ஆகியவற்றில் மொத்தம் 1,80,696 பழங்குடியின மாணாக்கர் கல்வி பயின்று வருகின்றனர் (ஆதாரம் — ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் முறைமை).

1.1 பள்ளிகள்

பழங்குடியின மக்களை சமூக நிலையில் மேம்பாடு அடையச் செய்வது அவர்களது கல்வியறிவினை உயர்த்துவதன் மூலமே இயலும் என்பதையும், பழங்குடியின மாணவர்கள் தொலைதூரம் சென்று கல்வி பயில்வதில் எழும் இடைநிற்றலின் அபாயத்தையும் உணர்ந்துள்ள இத்துறை, அவர்களது குடியிருப்புகளுக்கு அருகில் விடுதியுடன் இணைந்த உண்டி உறைவிடப் பள்ளிகளை நடத்தி வருகிறது.

[2022 மே 6

அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் மாணாக்கர் எண்ணிக்கை விவரம் (2021–2022)

விவரம்	பள்ளிகள் எண்ணிக்கை	மாணவர்கள்	மாணவிகள்	மொத்த எண்ணிக்கை
தொடக்கப் பள்ளிகள்	212	5,585	5,000	10,585
நடுநிலைப் பள்ளிகள்	49	2,171	2,051	4,222
உயர்நிலைப் பள்ளிகள்	31	2,134	1,743	3,877
மேல்நிலைப் பள்ளிகள்	28	5,043	4,536	9,579
மொத்தம்	320	14,933	13,330	28,263

ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகள் (2021-2022)

தமிழ்நாட்டில் பழங்குடியின மாணாக்கரின் கல்வி நலனுக்காக ஒன்றிய அரசின் 100 விழுக்காடு நிதியுதவியுடன் 8 ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன:—

வ.எண்	மாவட்டம்	இடம்	ஆண்கள்	பெண்கள்	மொத்தம்
1	கள்ளக்குறிச்சி	வெள்ளிமலை	480	0	480
2	சேலம்	அபிநவம்	0	480	480
3	நீலகிரி	மு.பாலாடா	179	149	328
4	நாமக்கல்	செங்கரை	330	117	447
5	திருவண்ணா மலை	அத்திப்பட்டு	238	176	414

2022 மே 6]

வ.எண்	மாவட்டம்	இடம்	ஆண்கள்	பெண்கள்	மொத்தம்
6	திருப்பத்தூர்	புதூர்நாடு	218	143	361
7	செங்கல்பட்டு	பட்டிப்புலம்	117	82	199
8	சேலம்	ஏற்காடு (நாகலூர்)	120	61	181
	மொத்தம்		1,682	1,208	2,890

1.2 விடுதிகள்

பழங்குடியின மக்களின் பொருளாதார நிலை மற்றும் மாணாக்கரின் இடைநிற்றல் ஆகிய காரணிகளை கருத்தில் கொண்டு, அனைத்து அடிப்படை வசதிகளுடன், படிக்கும் சூழ்நிலையை வழங்கும் விடுதிகளை இத்துறை நடத்தி வருகிறது.

பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் மாணாக்கர் எண்ணிக்கை விவரம் (2021-2022)

விடுதிகளின் வகைப்பாடு	விடுதிகளின் எண்ணிக்கை	மாணவர்	மாணவியர்	மொத்தம்
பள்ளி விடுதிகள்	40	910	647	1,557
கல்லூரி விடுதிகள்	2	0	76	76
தொழிற் பயிற்சி நிலைய விடுதிகள்	6	339	0	339
மொத்தம்	48	1,249	723	1,972

தற்போது நிலவிவரும் பொருளாதார சூழலைக் கருத்தில்கொண்டு அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள்/விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கர்களுக்கு உணவுக் கட்டணமாக பள்ளி மாணாக்கருக்கு ரூ.900/-லிருந்து ரூ.1,000/-ஆகவும், கல்லூரி மாணாக்கருக்கு ரூ.1,000/-லிருந்து ரூ.1,100/-ஆகவும் ஜனவரி 2021 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், விழா நாட்களில் பள்ளி மாணாக்கருக்கு வழங்கப்படும் சிறப்பு உணவுக் கட்டணம் ரூ.20/-லிருந்து ரூ.40/-ஆகவும் மற்றும் கல்லூரி மாணாக்கருக்கு ரூ.40/-லிருந்து ரூ.80/— ஆகவும் இருமடங்காக 2021-2022 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

இதேபோன்று, விடுதிகளில் தங்கிப் பயிலும் பள்ளி மாணாக்கருக்கு சோப்பு, எண்ணெய், முடிவெட்டுதல் போன்ற ஏனைய சில்லறைச் செலவினங்களுக்கான தொகை ரூ.50/-லிருந்து ரூ.100/- ஆகவும், கல்லூரி மாணாக்கருக்கு ரூ.75/-லிருந்து ரூ.150/-ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும், ஆதி திராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு வழங்கப்படும் அனைத்து சலுகைகளும், பழங்குடியினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், இவ்விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு அவர்களது வாழ்விட சூழலைக் கருத்தில் கொண்டு இருள், குளிர் மற்றும் மழை ஆகிய இடர்பாடுகளை எதிர்கொள்ளும் வகையில் சூரிய ஒளி மின்விளக்கு (Solar Lamp), கம்பளி ஆடை (Sweater) மற்றும் மழை அங்கி (Raincoat) ஆகியவை கூடுதலாக வழங்கப்பட்டு வருகின்றன.

1.2. (அ) தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கு நிதியுதவி

(i) விடுதிகள்:

பழங்குடியின மாணாக்கருக்கு கல்வி வழங்கிடும் அரசின் முயற்சிகளுக்கு உறுதுணையாக சேலம் மாவட்டம் மான்ட்போர்டு, கள்ளக்குறிச்சி மாவட்டம்-முருகு, திருவண்ணாமலை மாவட்டம்-எஸ்.எப்.ஆர்.டி. கோயம்புத்தூர் மாவட்டம்- வித்யாவனம் மற்றும் விருதுநகர் மாவட்டம் ராம்கோ & குரூப் ஆகிய ஐந்து தனியார் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் ஐந்து விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் 1,244 பழங்குடியின மாணாக்கருக்கு உணவுக்

2022 மே 6]

கட்டணம் மானியமாக வழங்கப்படுகிறது. மேலும், அரசு விடுதி மாணாக்கருக்கு வழங்கப்படும் சில்லறைச் செலவினம் மற்ற இதர செலவினம் இவ்விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கும் வழங்கப்படுகிறது.

(ii) பள்ளியுடன் இணைந்த விடுதிகள்

திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் வசிக்கும் பழங்குடியின மாணாக்கரின் கல்வி வளர்ச்சிக்காக செயல்பட்டுவரும் Society For Rural Development *எனும் தொண்டு நிறுவனத்தால் நடத்தப்படும் மேல்நிலைப் பள்ளியில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை 1,876 மாணாக்கர் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளி மற்றும் இப்பள்ளியுடன் இணைந்த விடுதியில் பணிபுரியும் 36 ஆசிரியர் மற்றும் 7 ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கான ஊதியம் இத்துறையால் மானியமாக விடுவிக்கப்பட்டு வருகிறது. விடுதியில் தங்கிப் பயிலும் 550 பழங்குடியின மாணாக்கருக்கு உணவுக்கட்டணம், சில்லறைச் செலவினம் மற்றும் இதரச் சலுகைகளும் 2005 ஆம் ஆண்டு முதல் அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.*

2021-2022 ஆம் நிதியாண்டில் இப்பள்ளி மற்றும் விடுதிக்காக ரூ.3.18 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டு, 1,876 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2022-23 ஆம் நிதியாண்டில் ரூ.3.18 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.2 (ஆ) பழங்குடியினர் வாழும் உட்புறப் பகுதிகளில் பள்ளிகள் துவங்கிட முன்வரும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம்

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் உள்ள தொலைதூர பழங்குடியின கிராமங்களில் வசிக்கும் பழங்குடியின மாணாக்கர் எவரும் விடுபடாமல் தவறாது கல்வியறிவினைப்பெறும் வகையில் பள்ளிகள் நடத்த முன்வரும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[2022 மே 6

2021-2022 ஆம் நிதியாண்டில் சேலம் மாவட்டம், ஏற்காடு, கொம்புதூக்கி குறவன்காடு கிராமத்தில் இயங்கி வரும் மான்ட் ஃபோர்ட் பழங்குடியின சமுதாயப் பள்ளியில் பணியாற்றும் 50 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களுக்கான ஊதியம், உணவுக் கட்டணம் மற்றும் இதர செலவினங்களுக்காக ரூ.1.84 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 840 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2022-23 ஆம் நிதியாண்டில் ரூ.14.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.3 கல்வி உதவித்தொகை

(i) ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டம்

பழங்குடியின மாணாக்கர் தமது உயர்கல்வியினை தொடர்ந்திட பொருளாதார ரீதியாக உதவிடும் வகையில் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில், பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளை பயிலும் பழங்குடியின மாணாக்கரால் கல்வி நிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டாய மற்றும் திரும்ப பெற இயலாத கல்விக் கட்டணங்கள் மற்றும் பராமரிப்புப் படி ஆகியவை உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இக்கல்வி உதவித் தொகைக்கான செலவினம் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் 75:25 என்ற விகிதத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

சுயநிதிக் கல்லூரிகளில் கல்வி பயிலும் பழங்குடியின மாணாக்கரால் கல்வி நிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய, அரசு / அரசால் நியமிக்கப்பட்ட சுயநிதிக் கல்லூரிகளுக்கான கல்விக் கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட கல்விக் கட்டணம், கல்வி நிறுவனங்களின் கணக்குகளில் நேரடியாக

2022 மே 6]

அரசால் வரவு வைக்கப்படுகிறது. பராமரிப்புப் படி மாணாக்கரின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

சுயநிதிக் கல்லூரிகளிலுள்ள நிர்வாக ஒதுக்கீடு இடங்களுக்கு ஒன்றிய அரசு விதித்துள்ள கீழ்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் நேர்வுகளில் கல்வி உதவித்தொகை கல்வி நிறுவனங்களின் கணக்குகளில் நேரடியாக அரசால் வரவு வைக்கப்படுகிறது. பராமரிப்புப்படி மாணாக்கரின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது:

(அ) உரிய அதிகாரம் பெற்ற அமைப்பால் ஏற்படுத்தப்பட்ட கட்டண நிர்ணய/கட்டணம் வரைமுறைப்படுத்தும் குழுவால் அத்தகைய பாடப் பிரிவுகளுக்கான கட்டணம் நிர்ணயிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்களை வரவேற்க விளம்பரம் செய்தல், வரப்பெற்ற விண்ணப்பங்களின் தரப் பட்டியல் வெளியிடுதல், தகுதியின் அடிப்படையில் விண்ணப்பங்களை தேர்வு செய்தல் ஆகிய நடைமுறைகளை உள்ளடக்கியவாறு ஒளிவுமறைவற்ற முறையில் அத்தகைய இடங்களுக்கான சேர்க்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்

(ஆ) பராமரிப்புப் படி

ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ் மாணாக்கருக்கு கல்விக் கட்டணங்கள் வழங்கப்படுவதுடன், இதர கல்வி சார்ந்த செலவினங்களுக்காக பராமரிப்புப் படியும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் மாணாக்கருக்கு வழங்கப்பட்டு வரும் படிப்பு வாரியான பராமரிப்புப் படித் தொகை விவரங்கள் கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

TRUTH ALONE TRIUMPHS

[2022 மே 6

தொகுதி	படிப்புகள்	ஒரு மாதத்திற்கான பராமரிப்புப்படி (ரூ.)	
		விடுதி மாணாக்கர் (Hosteller)	வெளி மாணாக்கர் (Day Scholar)
I	பொறியியல், மருத்துவம், சட்டம், நவீன ஆடை வடிவமைப்பு தொழில்நுட்பம் (Fashion Technology), கால்நடை, வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த தொழில் படிப்புகளில் பட்டம் மற்றும் முதுநிலை பட்டப் படிப்பு மேலாண்மை மற்றும் மருத்துவம் சார்ந்த பல்வேறு படிப்புகளில் முதுநிலை பட்டயம் / பட்டயக் கணக்கர் (CA/CWA/CS/CFA etc.,) மற்றும் முதுநிலை ஆராய்ச்சி மற்றும் முனைவர் பட்டப் படிப்பு (M.Phil, Ph.D., & Post Doctoral programmes)	1,200/-	550/-
II	12 ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாக கொண்ட மருந்தாக்கியல், செவிலியர், விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் ஹோட்டல் மேலாண்மை போன்ற தொழிற்படிப்புகளில் பட்டம், பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகள் (B.Sc.,(Nursing), B.Pharm, B.O.T, B.P.T, M.Sc (Nursing), M.Pharm, M.P.T etc.,)	820/-	530/-

2022 மே 6]

தொகுதி	படிப்புகள்	ஒரு மாதத்திற்கான பராமரிப்புப்படி (ரூ.)	
		விடுதி மாணாக்கர் (Hosteller)	வெளி மாணாக்கர் (Day Scholar)
III	தொகுதி I மற்றும் II-ல் இடம் பெறாத இதர இளங்கலை பட்டப்படிப்பு மற்றும் முதுகலை பட்டப் படிப்புகள் (B.A./B.Sc./ B.Com./ M.A./M. Sc./M.Com. etc.,)	570/-	300/-
IV	10 ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாகக் கொண்ட தொழில்நுட்பப் பட்டயப் படிப்புகள், சான்றிதழ் படிப்புகள், மேல்நிலைக் கல்வி படிப்புகள் மற்றும் தொழிற்பயிற்சி படிப்புகள். (XI, XII, ITI, தொழிற்பயிற்சிக் கல்வி etc.,)	380/-	230/-

இத்திட்டத்தின்கீழ் 2021—2022 ஆம் நிதியாண்டில், ரூ.31.66 கோடி மதிப்பிலான கல்வி உதவித் தொகை 23,324 மாணாக்கருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2022—23 ஆம் நிதியாண்டில் ரூ.46.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தகுதி:-

பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

(ii) ஒன்றிய அரசின் ப்ரிமெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டம்

அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற அல்லது மத்திய/ மாநில கல்வி வாரியங்களால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் பயிலும் பழங்குடியின

மாணாக்கரின் கல்விக்கான செலவினத்தில் ஒரு பகுதியை ஏற்றிடும் வகையில், ப்ரிமெட்ரிக் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் பின்வருமாறு வரவு வைக்கப்படுகிறது:—

	விடுதி மாணாக்கர் (Hosteller)	**வெளி மாணாக்கர் (Day Scholar)**
	(ரூபாயில்)	
பராமரிப்புப் படி (ஒரு மாதத்திற்கு)	525	225
தனி மானியம் (ஒரு ஆண்டுக்கு)	1000	750

2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.4.10 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டு, 14,011 மாணாக்கர் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தினை செயல்படுத்த ஏற்படும் செலவினத் தொகை 75:25 என்ற விகிதத்தில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2022-23 ஆம் நிதியாண்டில் ரூ.4.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தகுதி:

பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

(iii) மாநில அரசு கல்வி உதவித் திட்டங்கள்

பழங்குடியின மாணாக்கர் தமது கல்வியை முழுமையாக எவ்வித தடையுமின்றி முடிக்க உதவிடும் வகையில், ஆதி திராவிட மாணாக்கருக்கு வழங்கப்படுவது போன்று, பழங்குடியின மாணாக்கருக்கும் கீழ்க்குறிப்பிட்டுள்ள மாநில அரசின் கல்வி உதவித் தொகை மற்றும் கல்விக் கட்டணச் சலுகைகள் வழங்கப்படுகின்றன.

TRUTH ALONE TRIUMPHS

2022 மே 6]

- *உயர் கல்விச் சிறப்பு படிப்புதவித் தொகை*
- *கற்பிப்புக் கட்டணச் சலுகை*
- *இளங்கலை மாணாக்கருக்கான கல்விக் கட்டணச் சலுகை*
- *முதுகலை மாணவியருக்கான கல்விக் கட்டணச் சலுகை*
- *பள்ளி மாணாக்கருக்கான சிறப்புக் கட்டணச் சலுகை*
- *இதர கட்டணச் சலுகைகள்*
- *பெண் கல்வி ஊக்கத்தொகை (3 முதல் 8 ஆம் வகுப்பு வரை)*

2. ஒன்றிய அரசின் நலத் திட்டங்கள்

2. (அ) பிரதம மந்திரியின் பழங்குடியினர் கிராம முன்மாதிரித் திட்டம் (Pradhan Mantri Aadi Adarsh Gram Yojana)

*பழங்குடியின மக்களை கல்வி, பொருளாதாரம் மற்றும் சமூக நிலைகளில் உயர்வடையச் செய்வதற்காக மாநில அரசால் மேற்கொள்ளும் திட்டங்களுக்கு உறுதுணையாக இருந்திடும்பொருட்டு ஒன்றிய அரசால் செயல்படுத்தப்பட்டு வந்த சிறப்பு ஒன்றிய உதவி பழங்குடியினர் துணைத் திட்டம், (*Special Central Assistance to Tribal Sub Scheme*) 2022—2023 ஆம் ஆண்டு முதல் பிரதான் மந்திரி ஆதி ஆதர்ஷ் கிராம் யோஜனா (*Pradhan Mantri Aadi Adarsh Gram Yojana*) என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.*

இத்திட்டத்தின்படி, ஒரு கிராமத்தின் மொத்த மக்கள்தொகையில் 50 விழுக்காட்டிற்கு மேல் அல்லது 500-க்கும் அதிகமான பழங்குடியின மக்கள் வசிக்கும் 167 கிராமங்கள் ஒன்றிய அரசால் கண்டறியப்பட்டுள்ளன. 2021-2022 முதல் 2025-2026 வரையிலான ஐந்து ஆண்டுகளில் ஒரு கிராமத்திற்கு ரூ.20.38 இலட்சம் வீதம், அக்கிராமங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டு நிதி வழங்கப்பட உள்ளது.

2021-2022 ஆம் நிதியாண்டில் தமிழ்நாட்டில் முதற்கட்டமாக 28 கிராமங்களில் அடிப்படை வசதிகளை மேற்கொள்ள ரூ.2.85 கோடி நிதி ஒன்றிய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் நிதி ஆண்டில் ரூ.6.51 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.(ஆ) இந்திய அரசமைப்புச் சட்டக்கூறு 275(1)

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவுக்கூறு 275(1)—ல் வலியுறுத்தப்பட்டுள்ளவாறு, பழங்குடியின மக்களின் மனிதவள மற்றும் வாழ்க்கைத் தர மேம்பாடு, வறுமை ஒழிப்பு மற்றும் சுரண்டலுக்கு எதிரான பாதுகாப்பு ஆகிய அம்சங்களின்கீழ் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கு ஒன்றிய அரசு 100 விழுக்காடு நிதியுதவியினை வழங்கி வருகிறது.

அவ்வகையில், இத்திட்டத்தின்கீழ் பெறப்படும் நிதி ஏழு மாவட்டங்களில் இயங்கிவரும் பழங்குடியினர் திட்ட அலுவலகங்களின் தொடர் செலவினத்திற்கு செலவிடப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கென 2022-2023 ஆம் நிதி ஆண்டில் ரூ.17.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.(இ) அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

இந்தியாவில் உள்ள பழங்குடியின இனங்களுள், மக்கள்தொகை தொடர்ந்து அதிகரிக்காமலோ அல்லது குறைந்துகொண்டோ வரும் நிலையில் உள்ள சில இனங்கள் "அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினர்" என ஒன்றிய அரசால் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள 36 வகையான பழங்குடியினரில், 6 வகை பழங்குடியினர், அதாவது, தோடா, கோட்டா, குரும்பர், இருளர், பனியன் மற்றும் காட்டுநாயகன் ஆகியோர் அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினராக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இம்மக்களின் வாழ்க்கை நிலை குறித்த தளநிலை கணக்கெடுப்பு (PVTGs Baseline Survey) மேற்கொள்ளப்பட்டு, அதனடிப்படையில், வீட்டு வசதி, கல்வி மேம்பாடு, சுகாதாரக் கட்டமைப்பு, நில மேம்பாடு, மேம்படுத்தப்பட்ட வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, சூரிய ஒளி மின்விளக்குகள், பாசன வசதி, திறன் மேம்பாடு மற்றும் அவர்களின் கலாச்சாரத்தைப் பாதுகாத்தல் போன்ற திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ஒன்றிய அரசால் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

2022 மே 6]

இத்திட்டத்தின்கீழ், 2021-2022 ஆம் நிதியாண்டில், ரூ.19.67 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, அதில் ரூ.13.54 கோடி மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் வாழ்ந்துவரும் இருளர் பழங்குடியின மக்களுக்கு 443 வீடுகள் கட்டுவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2022-23 ஆம் நிதியாண்டில் ரூ.40.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.(ஈ) சிறு வன விளைபொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைத் திட்டம்

வனங்களில் குடியிருக்கும் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரம் பொதுவாக அவ்வனங்களில் கிடைக்கும் தேன், சிறுதானியங்கள், புளி மற்றும் இதர சிறு வனப் பொருட்களைச் சார்ந்தே உள்ளது. அவை அவர்களின் உணவு, உறைவிடம், மருத்துவத் தேவைகளின் அடிப்படையாக அமைந்துள்ளன.

இப்பொருட்களின் விலை, தேவையின் அடிப்படையில் அமையாமல் கொள்முதல் செய்யும் வியாபாரிகளாலேயே நிர்ணயிக்கப்படுகிறது. எனவே, சிறு வன விளைபொருட்களை சேகரிப்போருக்கு நியாயமான விலை கிடைப்பதை உறுதிசெய்து, அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்திடும்பொருட்டு "சிறு வன விளைபொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைத் திட்டம்" என்ற திட்டம் ஒன்றிய அரசின் பழங்குடியினர் நல அமைச்சகத்தின்கீழ் உள்ள இந்தியப் பழங்குடியினர் கூட்டுறவுச் சந்தைப்படுத்தல் மேம்பாட்டுக் கூட்டமைப்புமூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சிறு வனப் பொருட்களை மதிப்புக் கூட்டுதல்மூலம் பழங்குடியினருக்கு கூடுதல் வருவாய் கிடைக்க ஏதுவாக, இத்திட்டத்தின்கீழ் வன வள மையம் (Van Dhan Vikas Kendras) ஒன்றிய அரசின் நிதியின்கீழ் உருவாக்கப்படுகிறது.

தலா 10 உறுப்பினர்களைக் கொண்ட, 30 சுய உதவிக் குழுக்களைக் கொண்டு வனவள மையம் உருவாக்கப்பட்டு, பழங்குடியினரிடமிருந்து சிறு வனப் பொருட்களை சேகரித்தல், மதிப்புக் கூட்டுதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சிறு வனப் பொருட்கள் மெருகூட்டப்படுகின்றன.

வன வள மையம் உருவாக்குவதற்குத் தேவையான உபகரணங்கள், பயிற்சிகள் ஏனைய செயல்பாடுகளுக்காக ஒன்றிய அரசால் ரூ.15.00 இலட்சம் மாவட்ட ஆட்சியரின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில், திருவண்ணாமலை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் உள்ள ஜவ்வாதுமலை மற்றும் சேலம் மாவட்டத்தில் உள்ள ஏற்காடு மலையில் ஏழு வன வள மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

பழங்குடியினர் நலத் துறை இத்திட்டத்திற்கான மாநில ஒருங்கிணைப்பு நிறுவனமாகவும் (State Nodal Agency), தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவரும் 22 பெரும் பன்னோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் (LAMPS) இத்திட்டத்தினை செயல்படுத்தும் நிறுவனமாகவும் நியமிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் பழங்குடியினரிடமிருந்து சிறு வனப் பொருட்களை கொள்முதல் செய்யும்பொருட்டு ஒன்றிய அரசின் 75 விழுக்காடு பங்களிப்பு மற்றும் மாநில அரசின் 25 விழுக்காடு பங்களிப்புடன் ரூ.305.30 இலட்சம் சுழல் நிதி உருவாக்கப்பட்டுள்ளது.

2. (உ) பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம் 2006-ஐ செயல்படுத்துதல்

வனங்களில் வசிக்கும் பழங்குடியின சமூகங்கள் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போரின் உரிமைகளை அங்கீகரிக்கும்பொருட்டு "பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம், 2006", ஒன்றிய அரசால் இயற்றப்பட்டு, 29-12-2006 முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தின்படி 13-12-2005 ஆம் நாளுக்கு முன்பிருந்து வனங்களில் வசித்துவரும் பழங்குடியினரும், இத்தேதிக்கு முன்பு மூன்று தலைமுறைகளாக (அதாவது 75 ஆண்டுகளாக) பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போரும், வன உரிமைகள் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இச்சட்டம் 18 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

2022 மே 6]

இச்சட்டத்தின் குறிக்கோள்கள்

1. *பழங்குடியினர் மற்றும் பிற மரபுவழியாக குடியிருப்போரின் பூர்வீக நிலத்திற்கான உரிமைகளை வழங்குதல்*

2. *பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக குடியிருப்போருக்கு வனங்களில் காணப்படும் சிறு வனப் பொருட்களைச் சேகரித்தல், பயன்படுத்துதல் மற்றும் விற்பனைக்காக வெளியே எடுத்துச் செல்லும் உரிமைகளை வழங்குதல்*

3. *பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக குடியிருப்போர் சமுதாய பயன்பாட்டிற்கு வன நிலங்களை பயன்படுத்துவதற்கான உரிமைகளை வழங்குதல்*

இச்சட்டத்தின்படி, பழங்குடியினர் குடியிருக்கும் வன நிலங்களுக்கு புவியியல் தரவுகளின் அடிப்படையில் தனி நபர் உரிமைகள் மற்றும் சமூக உரிமைகள் ஆகியவை மாவட்ட ஆட்சித் தலைவர்களால் வழங்கப்பட்டு வருகின்றன.

இச்சட்டத்தின்கீழ் பெறப்படும் மனுதாரர்களின் கோரிக்கைகளைக் கூர்ந்தாய்வு செய்ய மூன்று நிலையிலான குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

1. *கிராம சபா*

2. *வருவாய் கோட்ட அலுவலர் தலைமையிலான உட்கோட்ட அளவிலான குழு*

3. *மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான மாவட்ட அளவிலான குழு*

இச்சட்டத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்யவும், வன உரிமைகள் முறையாக வழங்குவதை உறுதி செய்து கண்காணிக்கவும் தலைமைச் செயலர் தலைமையில் மாநில அளவிலான கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு, செயல்பாடுகள் ஆய்வு செய்யப்படுகின்றன.

இச்சட்டத்தின்கீழ் இதுவரை 9,838 தனிநபர் உரிமைகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்களில், 9,267 உரிமைகளும், 545 சமூக உரிமைகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்களில், 472 உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன.

[2022 மே 6

2. (ஊ) பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்

தமிழ்நாட்டில் உள்ள பழங்குடியினரின் வாழ்க்கை முறை, கலாச்சாரம், மொழி, சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலை குறித்து ஆய்வு செய்வதற்காக பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின்கீழ் 1984-85 ஆம் ஆண்டு நீலகிரி மாவட்டத்தில், மு.பாலாடா என்ற இடத்தில் தொடங்கப்பட்டது. 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்ட இம்மையம் பழங்குடியினர் தொடர்பான ஆராய்ச்சிகளை செய்து வருகிறது.

இம்மைய வளாகத்தில் அழிவின் விளிம்பில் உள்ள பழங்குடியின மகளிரைக் கொண்டு நடத்தப்படும் சில்லறை எரிபொருள் விற்பனை நிலையம் அமைந்துள்ளது. இவ்விற்பனை நிலையத்தின்மூலம் நாள் ஒன்றுக்கு 2,000 லிட்டர் டீசல் மற்றும் 4,000 லிட்டர் பெட்ரோல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இம்மையத்தில், 1996 ஆம் ஆண்டு சூரியஒளி மின்சார வசதியுடன்கூடிய ஒரு திறந்தவெளி அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு, பழங்குடியினர் குறித்த கலைப்பொருட்கள் மற்றும் புகைப்படங்கள் அக்ரிலிக் உறையில் பாதுகாக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. 2021-2022 ஆம் ஆண்டில் இவ்வருங்காட்சியகம் மற்றும் விற்பனை நிலையம் ஆகியவை ரூ.45.00 இலட்சம் செலவில் புனரமைக்கப்பட்டுள்ளன.

பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தால் நடத்தப்பட்ட ஆய்வுகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளின் விவரம்

2021-2022 ஆம் ஆண்டில் பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தால் பின்வரும் ஆய்வுகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டுள்ளன:

- *வால்பாறையில் வசிக்கும் முதுவன் இனத்தவரின் தங்குமிடம், பழங்குடியினரின் தொழில் முனைவு, வளர்ச்சி, சாத்தியக்கூறுகள், பழங்குடியின மக்களின் இடப்பெயர்வு குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

- *ஓவியக் கலையில் சிறந்து விளங்கும் குரும்பர் இன மக்களின் ஓவியக் கலையை புதுப்பிக்கும் வண்ணம், இவ்வின*

இளைஞர்களுக்கு பாரம்பரிய மற்றும் புதிய ஓவியக் கலைநுட்பங்கள் தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டது.

- நீலகிரி மாவட்டத்திலுள்ள தோடர் பழங்குடியின இளைஞர் மற்றும் இளம் பெண்களுக்கு அவர்களது பாரம்பரிய பூ தையல் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- நீலகிரி மாவட்டத்திலுள்ள கோத்தர் பழங்குடியின இளைஞர் மற்றும் இளம் பெண்களுக்கு பாரம்பரிய மண் பானை செய்யும் பயிற்சி வழங்கப்பட்டது.

இம்மையத்தின் நிருவாகச் செலவினங்கள் மாநில அரசாலும், திட்ட நடவடிக்கைகள் குறித்த செலவினங்கள் ஒன்றிய அரசின் பழங்குடியினர் நல அமைச்சகத்தாலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

2022-2023 ஆம் நிதியாண்டில் இம்மையத்தின் நிருவாகச் செலவுகளுக்காக ரூ.64.37 இலட்சம் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. மாநில அரசின் திட்டங்கள்

3.(அ) விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

[Comprehensive Tribal Development Programme (CTDP)]

பழங்குடியினரின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்காக அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்குதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் வகையில் விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் 2012-13 ஆம் ஆண்டு முதல் மாநில அரசின் நிதியின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்மூலம் ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து நில மேம்பாட்டுப் பணிகள், கூரை வீடுகளைச் சீரமைத்தல், சாலைப் பணிகள், அரசு பழங்குடியினர்

உண்டி உறைவிடப் பள்ளிகளில் பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் குடிநீர் வசதி ஏற்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் ஆகியவை தாட்கோமூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

பழங்குடியினரின் பாரம்பரியத் திறனை ஊக்குவிக்கும்பொருட்டும், அவர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கிடும்பொருட்டும், அவர்கள் சுயதொழில் துவங்க தலா ரூ.50,000/- வீதம், 100 பயனாளிகளுக்கு ரூ.50.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.22.29 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக ரூ.95.00 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. (ஆ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் [Integrated Tribal Development Porgramme (ITDP)]

தமிழ்நாட்டில் உள்ள சேலம், நாமக்கல், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி, தருமபுரி மற்றும் திருப்பத்தூர் ஆகிய ஏழு மாவட்டங்களில், மொத்த மக்கள் தொகையில் பழங்குடியின மக்கள் 50 விழுக்காடு அல்லது அதற்கு மேல் அதிகம் வசிக்கும் 10 பகுதிகள் கண்டறியப்பட்டு, அப்பகுதிகள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில், பழங்குடியின மக்களுக்கான நலத் திட்டப் பணிகள் மேற்குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் இயங்கிவரும் ஏழு பழங்குடியினர் திட்ட அலுவலகங்கள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2022 மே 6]

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகள்

வ. எண்	மாவட்டம்	திட்டப் பகுதிகள்
1.	சேலம்	ஏற்காடு, பச்சமலை, அருநூத்து மலை மற்றும் கல்வராயன் மலை
2.	நாமக்கல்	கொல்லி மலை
3.	கள்ளக்குறிச்சி	கல்வராயன்மலை
4.	திருவண்ணாமலை	ஜவ்வாது மலை
5.	திருச்சிராப்பள்ளி	பச்சமலை
6.	தருமபுரி	சித்தேரி மலை
7.	திருப்பத்தூர்	ஜவ்வாது மற்றும் ஏலகிரி மலை

இத்திட்டத்திற்கென, 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.2.96 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. (இ) சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம்

(Special Vocational Guidance Centre)

பழங்குடியின இளைஞர்கள் தமது வேலையினைத் தேர்ந்தெடுக்கவும், பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகளை வழங்கிடும்பொருட்டும், பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம் நீலகிரி மாவட்டம், உதக மண்டலத்தில் 6-3-1980 முதல் இயங்கி வருகிறது.

இம்மையத்தின் செயல்பாட்டிற்காக 2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.25.52 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் நிதியாண்டில் இம்மையத்தின் செயல்பாட்டிற்காக ரூ.32.65 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2022 மே 6

3.(ஈ) தொழிற்பயிற்சி நிலையங்கள் (ITIs)

பழங்குடியின இளைஞர்களை பல்வேறு தொழிற் பிரிவுகளில் திறன்பெறச் செய்து, அவர்கள் உற்பத்தித் துறைகளில் வேலைவாய்ப்பை பெறுவதற்கு உதவிடும் பொருட்டு பழங்குடியினருக்கென தனியாக ஆறு தொழிற்பயிற்சி நிலையங்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநரகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன. 2021—2022 ஆம் கல்வியாண்டில் 1,260 மாணாக்கர் இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

வ. எண்.	மாவட்டம்	தொழிற் பயிற்சி நிலையத்தின் பெயர்	மாணாக்கர் எண்ணிக்கை
1.	கள்ளக்குறிச்சி	சங்கராபுரம்	252
2.	கோயம்புத்தூர்	ஆனைகட்டி	198
3.	சேலம்	கருமந்துறை	192
4.	திருவண்ணாமலை	ஜமுனாமரத்தூர்	196
5.	நாமக்கல்	கொல்லிமலை	208
6.	நீலகிரி	கூடலூர்	212
	மொத்தம்		1,258

மேற்காணும் ஆறு தொழிற் பயிற்சி நிலையங்களுக்கான விடுதிகள் பழங்குடியினர் நலத்துறையால் நடத்தப்பட்டு வருகின்றன.

2022-2023 ஆம் நிதியாண்டில் இந்த ஆறு தொழிற்பயிற்சி நிலையங்களின் செயல்பாட்டுக்கென ரூ.9.04 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.(உ) பழங்குடியினர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் திட்டம்

பெரும்பாலான பழங்குடியின குடியிருப்புகள் மலை மற்றும் மலைப்பாங்கான இடங்களில் இருப்பதால் அக்குடியிருப்புகளில்

2022 மே 6]

அனைத்து அடிப்படை வசதிகள் இருப்பதை உறுதி செய்திடும் வகையில் ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

2021-2022 ஆம் நிதியாண்டில் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

(i) ரூ.123.86 கோடி மதிப்பீட்டில் 830 தெரு விளக்குகள், 3,235 சூரிய ஒளி விளக்குகள் மற்றும் 1,196 பாதுகாப்பான குடிநீர் வசதிகள் போன்ற பணிகளை ஊரக வளர்ச்சி முகமை மற்றும் வனத் துறையின்மூலம் மேற்கொள்ளுதல்.

(ii) ரூ.5.11 கோடி மதிப்பீட்டில் வேலூர் மாவட்டம் ஒடுக்கத்தூர் பகுதியில் முத்துக்குமரன் மலை முதல் பீஞ்சமந்தை வரை இணைப்புச் சாலை வனத் துறையின்மூலம் ஏற்படுத்துதல்.

(iii) ரூ.4.86 கோடி மதிப்பீட்டில் 31 அரசு உண்டி உறைவிடப் பள்ளிகளில் 65 கழிவறைக்கூடம் கட்டுதல்.

(iv) ரூ.21.09 கோடி மதிப்பீட்டில் 39 அரசு உண்டி உறைவிடப் பள்ளிகளில் 65 கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் மற்றும் 34 அரசு உண்டி உறைவிடப் பள்ளிகளில் சுற்றுச் சுவர் கட்டுதல்.

இத்திட்டத்திற்கென 2022—2023 ஆம் நிதியாண்டில் ரூ.175.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை சரிபார்த்தல்

மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் உரிமையியல் மேல்முறையீட்டு எண் 5854/94 நாள் 2-9-1994-ல் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி, பழங்குடியினருக்கு வருவாய் கோட்டாட்சியர்/சார் ஆட்சியரால் வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை அறிய, மாநில அளவில் மூன்று கூர்நோக்குக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களின் அமைப்பு விவரம் பின்வருமாறு:

[2022 மே 6

மாநில அளவிலான கூர்நோக்குக் குழுக்கள்

அரசு முதன்மைச் செயலாளர்/ அரசு கூடுதல் செயலாளர்கள். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	தலைவர்	பழங்குடியினர் என வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்கும். இந்த ஆணையினை ஏற்கவில்லையெனில் இந்திய அரசமைப்புச் சட்டக் கூறு 226-இன்படி சென்னை உயர் நீதிமன்றத்திலும், சட்டக் கூறு 136-ன்படி உச்ச நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்யலாம்.
இயக்குநர், பழங்குடியினர் நலம்/ துணை வனப் பாதுகாவலர்கள்	உறுப்பினர் செயலர்	
இயக்குநர், பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்/ மானுடவியல் வல்லுநர்கள்	உறுப்பினர்	

கண்காணிப்புப் பிரிவுகள்

பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழின் உண்மைத் தன்மையை அறிந்திட, கள ஆய்வு செய்து, சரிபார்த்து, மாநில கூர்நோக்குக் குழுக்களுக்கு அறிக்கை அளிக்க ஏதுவாக சென்னை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய நான்கு மண்டலங்களில் கண்காணிப்புப் பிரிவுகள் கீழ்க்கண்ட காவல் துறை அலுவலர்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன.

பதவியின் பெயர்	எண்ணிக்கை
துணை காவல் கண்காணிப்பாளர்	1
காவல் ஆய்வாளர் அல்லது சார் காவல் ஆய்வாளர்	1
தலைமைக் காவலர்	1

2022 மே 6]

மேற்கண்ட நான்கு மண்டல கண்காணிப்புப் பிரிவுகளுடன், கூடுதல் காவல் துறைத் தலைவர் (சமூக நீதி மற்றும் மனித உரிமைகள்) அவர்களின் தலைமையின்கீழ் அனைத்து மாவட்டங்களிலும் இயங்கிவரும் 38 சமூக நீதி மற்றும் மனித உரிமைப் பிரிவுகளும் (மாவட்டங்களில் 31 பிரிவுகள் மற்றும் மாநகராட்சி பகுதிகளில் 7 பிரிவுகள்) அவர்களின் பணிகளுடன் கூடுதலாக பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை அறிதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டு, களஆய்வு மேற்கொண்டு மாநில கூர்நோக்குக் குழுக்களுக்கு பரிந்துரை செய்கின்றன. மேலும், மாவட்ட அளவில் நடைபெறும் கண்காணிப்புப் பணிக்கு உதவி புரியும் வகையில் 14 மானுடவியல் வல்லுநர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

5. பழங்குடியினர் துணைத் திட்டம்

பழங்குடியின மக்களின் கல்வி, சமூக மற்றும் பொருளாதார நிலைகளில் நிலவிவரும் பின்னடைவினை நீக்கி அவர்களை சமூக நீரோட்டத்தில் இணையச் செய்திட மாநில அரசின் உதவிகள் வழங்கப்படுவதன் அவசியத்தை உணர்ந்து பழங்குடியினர் துணைத் திட்டம் தமிழ்நாட்டில் 1976-77 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதற்கென மாநில ஆண்டுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில், மாநிலத்தில் உள்ள பழங்குடியின மக்கள் தொகை விகிதத்திற்கேற்ப நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

2022-2023 ஆம் நிதியாண்டில், மாநில ஆண்டுத்திட்ட ஒதுக்கீடான (மாநில நலத் திட்ட செலவினம்—Welfare Expenditure of State) ரூ.74,892.56 கோடியில், பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் (பழங்குடியினர் நலத் திட்ட செலவினம்—Expenditure on Scheduled Tribes Welfare) ரூ.1,589.27 கோடி (2.12 விழுக்காடு) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியானது, தமிழ்நாட்டிலிருக்கும் பழங்குடியின மக்கள் தொகை விழுக்காட்டை (1.10%) காட்டிலும் அதிகமாகும்.

செயலாக்கத் துறைகளால் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அதிகாரிகள் பழங்குடியினருக்கான திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்துவதற்காக பழங்குடியினர் நலத் துறையுடன் இணைந்து செயலாற்றி வருகின்றனர்.

பழங்குடியினர் துணைத் திட்டம், கீழ்க்கண்ட 48 துறைத் தலைமைகளை உள்ளடக்கிய 20 செயலாக்கத் துறைகள் மூலம் பழங்குடியினரின் மேம்பாடு மற்றும் நலனுக்காகச் செயல்படுத்தப்படுகிறது:—

2022-23 ஆம் ஆண்டில் பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் பிரிவு (SECTORAL) வாரியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரம் (ரூ. கோடியில்)		
வ.எண்	**பிரிவு**	**நிதி ஒதுக்கீடு**
1	ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன்	621.35
2	ஊரக வளர்ச்சி	273.29
3	குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு	260.60
4	கல்வி, விளையாட்டு மற்றும் பண்பாடு	113.83
5	சமூகநலன் மற்றும் சத்துணவு	109.34
6	வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி	105.31
7	மக்கள் நல்வாழ்வு- குடும்ப நலன்	43.60
8	வேளாண்மையும் தொடர்பான நடவடிக்கைகளும்	32.35
9	தொழிலாளரும் தொழிலாளர் நலனும்	11.60
10	பொதுவான பொருளாதாரப் பணிகள்	9.46
11	சிறப்பு பகுதித் திட்டங்கள்	7.50
12	தொழிலும் கனிமங்களும்	0.84
13	ஏனைய சமூகப் பணிகள்	0.21
	மொத்தம்	1,589.27

இத்திட்டத்தின்கீழ் மாநில அளவில் திட்டங்களை வகுக்கவும், செயல்படுத்தவும் அரசு முதன்மைச் செயலாளர் ஒருங்கிணைப்பு

2022 மே 6]

அலுவலராகவும், இத்துறை ஒருங்கிணைப்புத் துறையாகவும், மாவட்ட அளவில் இத்திட்டத்தின் செயல்பாட்டினைக் கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் பழங்குடியினர் நல இயக்குநர், கண்காணிப்பு அலுவலராகவும் நியமிக்கப் பட்டுள்ளனர். இத்திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து துறைத் தலைமை அலுவலர்களுடன் இணைந்து கண்காணிக்கப்படுகிறது.

III. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை வறுமைக் கோட்டிற்கு மேல் கொண்டுவர வேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO) 15.02.1974 அன்று தொடங்கப்பட்டது. துவக்கத்தில், வீடற்ற ஆதி திராவிடர்களுக்கு இலவச தீப்பிடிக்காத வீடுகளை இக்கழகத்தின் கட்டுமானப் பிரிவு கட்டிக் கொடுத்தது. பின்னர், தொழில் முனைவு மற்றும் திறன் மேம்பாட்டிற்கான பல்வேறு திட்டங்களுக்கான நிதியுதவியை மேம்படுத்துவதன் மூலம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பொருளாதார வளத்தினை மேம்படுத்துவதற்கான பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் இக்கழகத்தின் செயல்பாடுகள் விரிவடைந்துள்ளன.

1. பங்கு மூலதனம்

இக்கழகத்தின் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் முறையே ரூ.200 கோடி மற்றும் ரூ.147.11 கோடி ஆக உள்ளது. 1980 ஆம் ஆண்டிலிருந்து இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனத்தை மாநில அரசும், ஒன்றிய அரசும் 51:49 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்கின்றன.

2. தாட்கோவின் நடவடிக்கைகள்

1. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல்

2. திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல்

3. கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுதல்

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2.1 பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் இருக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வறுமையை குறைப்பதில் தாட்கோ ஓர் உந்துசக்தியாக செயல்படுகிறது. அரசு மானியம் மற்றும் வங்கிகள், தேசிய ஆதி திராவிடர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (NSCFDC) மற்றும் தேசிய பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (NSTFDC) ஆகிய நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கடனுதவியுடன் பல்வேறு தேவை அடிப்படையிலான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் இக்கழகத்தால் வகுக்கப்பட்டு, மாவட்ட மேலாளர்கள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ், விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகள், சிறு தொழில், போக்குவரத்து, வர்த்தகம் மற்றும் சேவைத் துறை ஆகிய பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு மூலதனச் சொத்துகளை உருவாக்க ஆதி திராவிடர்களுக்கு திட்டத் தொகையில் 30 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.2.25 இலட்சம் இவற்றுள் குறைவான தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

பழங்குடியினருக்கு திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.3.75 இலட்சம் இவற்றுள் குறைவான தொகையும், அவர்கள் இலகு ரக வாகனம் வாங்கிட ரூ.4.00 இலட்சம் வரையிலும், கனரக வாகனம் வாங்கிட ரூ.5.50 இலட்சம் வரையிலும் மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டங்களின்கீழ் உதவி பெறுவதற்கான ஆண்டு வருமான உச்சவரம்பு ஆதி திராவிடருக்கு ரூ.2.00 இலட்சம் ஆகவும், பழங்குடியினருக்கு ரூ.3.00 இலட்சம் ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் நிதியாண்டில், பல்வேறு திட்டங்களின்கீழ் 32,369 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின பயனாளிகளுக்கு, ரூ.185.57 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

2.1 அ. மானியத்துடன்கூடிய கடன் திட்டங்கள்

i) நிலம் வாங்கும் திட்டம் மற்றும் நில மேம்பாட்டுத் திட்டம்

நிலமற்ற ஆதி திராவிட மகளிரை நில உடமையாளர்களாக்கி அவர்களது சமூக நிலையினை உயர்த்திட வழிவகுக்கும் இச்சிறப்புத்

2022 மே 6]

திட்டம் 2004—05 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. மகளிர் இல்லாத குடும்பங்களில் ஆண்களுக்கு நிதியுதவி வழங்கப்படும்.

இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

- நிலம் ஆதி திராவிட பயனாளி பெயரில் பதிவு செய்யப்படுகிறது.
- இத்திட்டத்தின்கீழ் வாங்கப்படும் நிலங்களுக்கு முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணத்தில் முழு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது..
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் அல்லாத பிற இனத்தவரிடமிருந்து நிலம் வாங்கப்பட வேண்டும்.

ஆதி திராவிட இனத்தவரின் நில உடைமையை அதிகரிப்பதுடன், அந்நிலத்தின் பயன்பாட்டை உயர்த்தி ஆழ்துளைக் கிணறு/ திறந்தவெளிக் கிணறுகள் அமைத்தல், பவர் டில்லர் வாங்குதல் போன்ற விவசாய நில மேம்பாடு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வங்கிகள் மூலம் மானியத்துடன்கூடிய கடனுதவிகள் வழங்குவதன் மூலம் வருவாய் ஈட்ட வழி செய்யும் நில மேம்பாட்டுத் திட்டம் 2013-2014 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் 2021-22 ஆம் ஆண்டு 175 பயனாளிகளுக்கு ரூ.2.28 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

(ii) ஆதி திராவிடர்களுக்கான தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

18 வயது முதல் 65 வயது வரை உள்ள ஆதி திராவிட இனத்தை சார்ந்த தனிநபர் மற்றும் குழுக்கள் வருவாய் ஈட்டும் தொழில் புரிந்து, தமது பொருளாதார நிலையினை உயர்த்திக்கொள்ளும்பொருட்டு, கல்வித் தகுதி ஏதுமின்றி இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் திட்டத் தொகையில் 30 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.2.25 இலட்சம், இவற்றுள் குறைவான தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், 2021-2022 ஆம் ஆண்டு 4,362 பயனாளிகளுக்கு ரூ.64.63 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

சட்டமன்றம் LEGISLATURE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(iii) பழங்குடியினருக்கான தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

பழங்குடியின மக்கள் தொடர் வருமானம் ஈட்டக்கூடிய தொழில் புரிவதன் மூலம் தங்களது பொருளாதார நிலையினை உயர்த்திக்கொள்ளும்பொருட்டு இத்திட்டத்தின்கீழ் மானியம் வழங்கப்படுகிறது.

திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது ரூ.3.75 இலட்சம் இவற்றுள் எது குறைவான தொகையோ, அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் ஆண்டு 410 பயனாளிகளுக்கு ரூ.9.50 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

(iv) ஆதி திராவிடர் இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்

18 வயது முதல் 45 வயதிற்குட்பட்ட படித்த ஆதி திராவிட இளைஞர்கள் தங்களுக்குத் தெரிந்த/விருப்பமான சுய தொழில் துவங்க இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், 2021-2022 ஆம் ஆண்டு 1,259 பயனாளிகளுக்கு ரூ.19.47 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

(v) பழங்குடியின இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்

பழங்குடியின இளைஞர்கள் வருமானம் ஈட்டக்கூடிய தொழில்புரிந்து, தங்களது பொருளாதார நிலையினை உயர்த்திக்கொள்ளும்பொருட்டு திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது ரூ.3.75 இலட்சம் இவற்றுள் குறைவான தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

ஓட்டுநர் உரிமம் மற்றும் பேட்ஜ் வைத்துள்ள பழங்குடியின இளைஞர்களுக்கு பயணியர் வாகனம்/ஈப்பு வாங்கிட திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்ச மானியம் ரூ.4.00 இலட்சம் வரையிலும் கனரக வாகனம் வாங்கிட திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.5.50 இலட்சம்

2022 மே 6]

வரையும், இதர தொழில்களுக்கு திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.3.75 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் ஆண்டு ரூ.23.75 இலட்சம் நிதியுதவி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

(vi) இளைஞர்களுக்கான சிறப்பு சுய வேலைவாய்ப்புத் திட்டம்

மருத்துவம் (MBBS), பல் மருத்துவம் (BDS), சித்த மருத்துவம் (BSMS), ஆயுர்வேத மருத்துவம் (BAMS) இயற்கை மருத்துவம் மற்றும் யோகா (BNYS) ஆகிய படிப்புகளில் பட்டம் பெற்றவர்கள், சொந்தமாக மருத்துவ சிகிச்சை/ஆய்வகம்/மருந்தகம் அமைப்பதற்கு இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி வழங்கப்படுகிறது. 2013—14 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் முடநீக்கு வல்லுநர், மருந்தாளுநர், கண்ணாடி வினைஞர் (optician) மற்றும் ஆய்வகத் தொழில்நுட்ப வல்லுநர் முதலிய மருத்துவம் சார்ந்த படிப்புகளில் தகுதி பெற்றுள்ளவர்களுக்கு சொந்தமாக மருத்துவ சிகிச்சை மையம்/ கண் கண்ணாடி கடை/ஆய்வகம்/மருந்தகம் அமைப்பதற்கும், விரிவுபடுத்தப்பட்டுள்ளது. விண்ணப்பிப்பவர்கள் உரிய மன்றத்தில் பதிவு பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின்கீழ், 2021—2022 ஆம் ஆண்டு 8 பயனாளிகளுக்கு ரூ.15.58 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

(vii) ஆதி திராவிட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார உதவித் திட்டம்

ஆதி திராவிட மகளிரின் பொருளாதார முன்னேற்றத்திற்காக அவர்கள் வருமானம் ஈட்டத்தக்க தொழிலில் முதலீடு செய்வதற்காக குறைந்த வட்டியுடன் கூடிய நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் இருமுறை தர நிர்ணயம் செய்யப்பட்ட ஆதி திராவிடர் சுய உதவிக் குழுக்கள் தங்களது வருமானம் ஈட்டக்கூடிய தொழிலினை செய்வதற்காக கடன் வழங்கப்படுகிறது. தங்களுக்குத் தெரிந்த வருமானம் ஈட்டக்கூடிய தொழில் அல்லது வணிக நிறுவனத்தினை துவங்குவதற்காக ஒவ்வொரு குழுவிற்கும், திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.2.50 இலட்சம் இவற்றுள் குறைவான தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், 2021-2022 ஆம் ஆண்டு 4,730 உறுப்பினர்களைக்கொண்ட 389 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.9.69 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

(viii) பழங்குடியின மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார உதவித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், பழங்குடியின மகளிரை மட்டுமே உறுப்பினர்களாக கொண்டு இயங்கும், இரு முறை தர நிர்ணயம் செய்யப்பட்ட சுய உதவிக் குழுக்கள், வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களான கைவினைப் பொருட்கள், தோட்டக்கலை, மலரியல், சுற்றுலாத் தலங்களில் சிற்றுண்டி கடைகள் அமைத்தல், சுற்றுலா சார்ந்த தொழில்கள் செய்ய திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சம் மானியம் விடுவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், 2021-22 ஆம் ஆண்டு 72 உறுப்பினர்கள் கொண்ட 6 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.22.35 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

2.1.ஆ. மானிய உதவித் திட்டங்கள்

(i) விவசாயிகளுக்கான துரித மின் இணைப்பு மானிய உதவித் திட்டம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் துரித மின் இணைப்பு பெற்றிட தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு வைப்புத் தொகை செலுத்தும் இத்திட்டம் 2008-2009 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்த நிதியுதவி ரூ.75,000/—லிருந்து 2021-2022 ஆம் நிதியாண்டு முதல் பின்வருமாறு உயர்த்தப்பட்டுள்ளது:—

குதிரைசக்தித் திறன்	வைப்புத் தொகை (ரூ. இலட்சத்தில்)	90 சதவீத நிதியுதவி (ரூ. இலட்சத்தில்)
5 HP	2.50	2.25
7.5 HP	2.75	2.47
10 HP	3.00	2.70
15 HP	4.00	3.60

இத்திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் ஆண்டு 827 நபர்களுக்கு நிலுவையில் இருந்த பகுதி வைப்புத் தொகை ரூ.5.35 கோடி தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்திற்கு செலுத்தப்பட்டு, விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், 1,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் சார்பாக 90 விழுக்காடு வைப்புத் தொகை செலுத்தி இலவச மின் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆக மொத்தம் இத்திட்டத்தில் 1,827 விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.28.65 கோடி செலவிடப்பட்டுள்ளது.

(ii) விவசாயிகளுக்கு மின் மோட்டார் வாங்க மானியம் வழங்கும் திட்டம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் ஆழ்துளை மற்றும் திறந்தவெளிக் கிணறுகள் மூலம் நீர்ப் பாசனத்திற்கு பயன்படுத்தப்படும் புதிய மின் மோட்டார் வாங்குவதற்கு 1,800 ஆதி திராவிட விவசாயிகள் மற்றும் 200 பழங்குடியின விவசாயிகள் என மொத்தம் 2,000 விவசாயிகளுக்கு, ஒரு விவசாயிக்கு தலா ரூ.10,000/- வீதம் மொத்தம் ரூ.2.00 கோடி செலவினத்தில் இத்திட்டத்தினை செயல்படுத்திட 2021-22 ஆம் நிதியாண்டில் அரசாணை வெளியிடப்பட்டு நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

(iii) விவசாயிகளுக்கு நீரேற்றக் குழாய்கள் வாங்க மானியம் வழங்கும் திட்டம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் தங்கள் நில மேம்பாட்டிற்காக ஆழ்துளைக் கிணறு மற்றும் திறந்தவெளிக் கிணறுகள் மூலம் நீர்ப் பாசனத்திற்கு தேவைப்படும் நீரேற்றக் குழாய்களை (பிவிசி குழாய்) வாங்குவதற்கு ஒரு விவசாயிக்கு ரூ.15,000/- வீதம் 1,300 ஆதி திராவிட விவசாயிகள் மற்றும் 700 பழங்குடியின விவசாயிகள் என மொத்தம் 2,000 விவசாயிகளுக்கு ரூ.3.00 கோடி செலவினத்தில் இத்திட்டத்தினை செயல்படுத்திட 2021-22 ஆம் நிதியாண்டில் அரசாணை வெளியிடப்பட்டு நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

2.2 திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்

சமூகத்தின் விளிம்பு நிலைப் பிரிவுகளான ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் பொருளாதார வலுவூட்டலுக்கு தாட்கோ உதவுகிறது. இவ்வின மக்களில் பெரும்பாலானோர் குறைந்தபட்ச பொருளாதார சொத்துகளையே கொண்டுள்ளனர். அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு அவர்களின் திறனை மேம்படுத்துவதும் மற்றும் பயிற்சி அளிப்பதும் அவசியம் ஆகும். எனவே, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்/ தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

- தாட்கோ மூலம் நடத்தப்படும் முக்கியமான பயிற்சிகள்
- ஆயத்த ஆடை வடிவமைத்தல், வீட்டு அலங்கார பொருட்கள் வடிவமைத்தல் தொடர்பான பயிற்சிகள்
- தானியங்கி மற்றும் தொடர்புடைய பயிற்சிகள்
- வங்கி, நிதிச் சேவைகள் மற்றும் காப்பீட்டுத்துறை தொடர்பான பயிற்சிகள்
- அழகு மற்றும் ஆரோக்கியம் தொடர்பான பயிற்சிகள்

- மின்னணு மற்றும் வன்பொருள் தொடர்பான பயிற்சிகள்
- மருத்துவச் சேவைகள் தொடர்பான பயிற்சிகள்
- தோல் தொழில்நுட்பம் அதனுடன் தொடர்புடைய பயிற்சிகள்
- தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பயிற்சிகள்
- சரக்கு வாகன போக்குவரத்து தொடர்பான பயிற்சிகள்
- ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு தொடர்பான பயிற்சிகள்
- குழாய் செப்பனிடுதல் மற்றும் அதன் தொடர்புடைய பணிகள்
- மின்சாரம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பயிற்சிகள்
- சில்லரை வணிகம் மற்றும் தொடர்புடைய பயிற்சிகள்

2021-2022 ஆம் நிதியாண்டில் 7,666 ஆதி திராவிடர் மற்றும் 360 பழங்குடியினருக்கு 106 பயிற்சி நிறுவனங்கள் மூலம் ரூ.5.32 கோடி மதிப்பீட்டில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

(i) விவசாயிகளுக்கு தோட்டக்கலை, வேளாண் தொழில்நுட்ப பயிற்சி

2021-2022 ஆம் நிதியாண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினத்தை சார்ந்த விவசாயிகளுக்கு தோட்டக்கலை மற்றும் வேளாண் தொழில்நுட்பப் பயிற்சிகளை ரூ.1.70 கோடி செலவில் பின்வருமாறு வழங்கிட அரசாணைகள் வெளியிடப்பட்டு, மாவட்டங்களுக்கு நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி	விவசாயிகளின் எண்ணிக்கை	செலவினம் (ரூபாய் இலட்சத்தில்)
தோட்டக்கலை	3000	60.00
வேளாண் காடுகள், நர்சரி செடிகள் உருவாக்கி விற்பனை செய்தல், மண்புழு உரம் தயாரித்தல், விவசாய மேலாண்மை	1000	40.00
அறுவடை தொழில்நுட்ப இயந்திரங்கள் மற்றும் ஆழ்துளைக் கிணறு அமைக்கும் இயந்திரங்கள் ஆகிய இயந்திரங்கள் தொடர்பான பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் செய்தல்	3500	70.00

(ii) தொழில் முனைவோருக்கு தொழில் மேலாண்மை பயிற்சி வழங்கும் திட்டம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 4,500 ஆதி திராவிடர் மற்றும் 500 பழங்குடியினர் என கடன் ஒப்புதல் ஆணை வழங்கப்பட்ட 5,000 தொழில் முனைவோருக்கு, தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் (Entrepreneurship Development Institute of India (EDII) மூலம் மாவட்ட அளவில் 7 நாட்கள் தொழில் மேலாண்மை பயிற்சிகள் வழங்கிட ஆணைகள் வெளியிடப்பட்டு, 2021—2022 ஆம் நிதியாண்டில் ரூ.1.08 கோடி செலவில் 2,520 தொழில் முனைவோருக்கு மாவட்ட அளவில் தொழில் மேலாண்மைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

2022 மே 6]

2.3 கட்டுமானப் பணிகள்

தாட்கோ நிறுவனத்தின் கட்டுமானப் பிரிவு, இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகள் மற்றும் விடுதிகளின் கட்டுமானப் பணிகளையும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக சமுதாயக் கூடங்கள் கட்டும் பணியினையும் மேற்கொண்டு வருகிறது. ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் கூடுதல் வசதிகளை ஏற்படுத்துதல் முதலிய பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

தாட்கோ கட்டுமானப் பிரிவு மூலம் தற்போது பல்வேறு திட்டங்களின்கீழ் ரூ.337.91 கோடி மதிப்பிலான 357 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(i) ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் பணிகள்

ஆதி திராவிடர் மாணாக்கருக்கான விடுதிக் கட்டடங்கள் கட்டுதல் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கான ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல் ஆகிய பணிகள் ஒன்றிய அரசிடமிருந்து பெறப்படும் நிதியுதவியைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாபு ஜெகஜீவன் ராம் சத்ரவாஸ் யோஜனா திட்டத்தில் 13 மாணவ, மாணவியருக்கான விடுதிக் கட்டடங்கள் ரூ. 21.80 கோடி மதிப்பீட்டில் 11 மாவட்டங்களில் கட்டப்பட்டு வருகின்றன.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவுக் கூறு 275(1)-ன்கீழ் செங்கல்பட்டு மாவட்டம்-குமிழி, திருப்பத்தூர் மாவட்டம்—கீழூர், திருவண்ணாமலை மாவட்டம்—புளியம்பட்டி, நாமக்கல் மாவட்டம்—செங்கரை மற்றும் நீலகிரி மாவட்டம்—மு. பாலாடா ஆகிய 5 இடங்களில் இயங்கிவரும் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கான பள்ளி வகுப்பறை மற்றும் ஆய்வுக் கூடங்கள் மற்றும் இருபாலருக்கான விடுதிக் கட்டடங்கள் ரூ.60.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன.

(ii) மாநில அரசின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகள்

நிலை உயர்த்தப்பட்ட ஆதி திராவிடர் நல மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும்

ஆய்வுக் கூடங்கள், விடுதிகள், சுற்றுச் சுவர் மற்றும் சமுதாயக் கூடங்கள் கட்டுதல், சிறப்பு பழுதுபார்க்கும் பணி மற்றும் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டத்தின்கீழ் கல்வராயன் மலையில் உள்ள அரசு பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகள் மாநில அரசின் நிதியுதவியின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2021-2022 ஆம் ஆண்டில் மாநில அரசின் நிதியிலிருந்து ரூ.186.85 கோடி மதிப்பீட்டிலான 238 பணிகள் கையாளப்பட்டு வருகின்றன.

(iii) நபார்டு திட்டப் பணிகள்: (ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி)

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கரின் நலனுக்காக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிக் கட்டடங்களுக்கு கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள் கட்டுதல், அடிப்படை வசதிகளான சுற்றுச்சுவர், குடிநீர் வசதி, கழிவறைக் கூடம் ஆகியவற்றை ஏற்படுத்துதல் மற்றும் விடுதிக் கட்டடங்கள் கட்டுதல் ஆகிய பணிகள் நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியுதவியுடன் ரூ.69.26 கோடி மதிப்பீட்டிலான 101 கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், 2021-2022 ஆம் ஆண்டில் 150 பள்ளிகளில் 480 வகுப்பறைகள் மற்றும் 15 அறிவியல் ஆய்வுக்கூடங்கள் ரூ.100.00 கோடி மதிப்பீட்டில் கட்டுவதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

2022 மே 6]

IV. நலக் குழுக்கள்

அ) மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) விதிகள் 1995 மற்றும் திருத்த விதிகள், 2016, விதி 16(1)—ன்படி மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட வேண்டும். அதன்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மாண்புமிகு அமைச்சர்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு 20—7—2021 அன்று திருத்தியமைக்கப்பட்டு, இக்குழுவின் முதல் கூட்டம் 19—8—2021 அன்று நடைபெற்றது.

இக்குழு ஆண்டுக்கு குறைந்தபட்சம் இரு முறை கூடி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) விதிகள் 1989 மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) திருத்த சட்டம், 2015, ஆகியவற்றின் செயலாக்கம் மற்றும் இச்சட்டத்தின்கீழ் பதியப்பட்டுள்ள வழக்குகள் குறித்து ஆய்வு செய்வதோடு, வன்கொடுமைக்கு ஆளானோருக்கு வழங்கப்பட வேண்டிய தீருதவிகள் மற்றும் இச்சட்டத்தை செயல்படுத்தும் பல்வேறு அலுவலர்கள்/அமைப்புகளின் பணி/பங்கு குறித்தும் ஆய்வு செய்கிறது.

2022 ஆம் ஆண்டிற்கான இக்குழுவின் கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது தலைமையில் 12-4-2022 அன்று நடைபெற்றது.

ஆ) தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றம்

தமிழ்நாட்டில் வாழும் பழங்குடியினரின் நலன் மற்றும் அவர்களது முன்னேற்றத்திற்கு ஆலோசனை வழங்கும் விதமாக இந்திய அரசமைப்புச் சட்டத்தின் ஐந்தாவது அட்டவணையில் விதி எண் 4(1)-ன்படி பழங்குடியினர் ஆன்றோர் மன்றம் 1961 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இம்மன்றத்தின் தலைவராக மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களும் மற்றும் உறுப்பினர்—செயலராக பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களும் உள்ளனர். இம்மன்றத்தில் 3 அலுவல் சார்ந்த உறுப்பினர்களும், 15 அலுவல் சாரா உறுப்பினர்களும்,

2 பழங்குடியினத்தைச் சாராத உறுப்பினர்களும் சேர்த்து 20 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இம்மன்றத்தின் பதவிக் காலம் 3 ஆண்டுகள் ஆகும். ஆண்டுக்கு குறைந்தபட்சம் இரு முறை இம்மன்றத்தின் கூட்டம் கூட்டப்பட வேண்டும்.

V. தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையம்

தமிழ்நாட்டில் வசிக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சட்டபூர்வமான உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களது முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையம் தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் வகையில் உருவாக்கப்பட்டு 13-10-2021 முதல் இயங்கி வருகிறது.

ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி திரு. சிவக்குமார் அவர்களின் தலைமையில் இயங்கும் இவ்வாணையத்திற்கு ஒரு துணைத் தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாணையத்தின் தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகள் ஆகும்.

இவ்வாணையம் தற்போது, தாட்கோ தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வருகிறது. இவ்வாணையத்தால் 700 மனுக்கள் பெறப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

VI. நல வாரியங்கள்

1. புதிரை வண்ணார் நல வாரியம்

ஆதி திராவிட இனத்தின் உட்பிரிவுகளில் ஒன்றான புதிரை வண்ணார் சமுதாயத்தின் சமூக, பொருளாதார கல்வி மேம்பாட்டிற்கென மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 2009 ஆம் ஆண்டு புதிரை வண்ணார் நல வாரியம் அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் 12 அலுவல் சார்ந்த உறுப்பினர்களும், 13 அலுவல் சாரா உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆதி திராவிடர் நல ஆணையர் இவ்வாரியத்தின் உறுப்பினர்—செயலராக உள்ளார்.

2022 மே 6]

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் நிதியுதவி வழங்கிட 2009 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை ரூ.1.00 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

2. தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியம்

தூய்மைப் பணிபுரிவோரின் கல்வி, சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கென அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களின் செயலாக்கத்தைக் கண்காணித்து, அவற்றின் முன்னேற்றத்தை உறுதிசெய்திடும் பொருட்டு மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 2007 ஆம் ஆண்டு 'தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியம்' அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் ஓர் உப தலைவர், 13 அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் 14 அலுவல் சாரா உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாரியத்தின் உறுப்பினர்—செயலராக தாட்கோ மேலாண்மை இயக்குநர் உள்ளார். இவ்வாரியம், தாட்கோ வங்கி வளாகம், எண் 1, காந்தி இர்வின் சாலை, தாளமுத்து நடராஜன் மாளிகை, எழும்பூர், சென்னை—6 என்ற இடத்தில் செயல்பட்டு வருகிறது. இவ்வாரியத்தின் மூலம் கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை, முதியோர் ஓய்வூதியம் உள்ளிட்ட நலத் திட்ட உதவிகள் வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது.

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் நிதியுதவி வழங்கிட 2008 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை ரூ.3.00 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாரியத்தால் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத் திட்டங்களுக்கான உதவித் தொகைகள் 2021—2022 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளன. இவ்வாரியத்தின் மூலம் நலத் திட்ட உதவித் தொகை வழங்கிடும் பொருட்டு 2021—2022 ஆம் நிதியாண்டில் ரூ.1.53 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

3. பழங்குடியினர் நல வாரியம்

தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியின மக்களின் சமூக,பொருளாதார, கல்வி நிலைகளில் திட்டமிடப்பட்ட உறுதியான முன்னேற்றத்தை அடைவதற்கென பழங்குடியினர் நல வாரியம் மாண்புமிகு ஆதி

திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களை தலைவராக கொண்டு 2007 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் 8 அலுவல் சார்ந்த உறுப்பினர்களும், 13 அலுவல் சாரா உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். பழங்குடியினர் நல இயக்குநர் இவ்வாரியத்தின் உறுப்பினர்—செயலராக உள்ளார்.

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் நிதியுதவி வழங்க 2008 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை ரூ.4.00 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

VII. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு 2022-2023 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு

(ரூ. கோடியில்)

வ. எண்.	அலுவலகங்கள்	வருவாய்	மூலதனம்	கடன்	மொத்தம்
1.	தலைமைச் செயலகம்	11.80	0.00	0.40	12.20
2.	ஆதி திராவிடர் நலத் துறை	3,503.96	158.04	0.00	3,662.00
3.	பழங்குடியினர் நலத் துறை	351.16	256.40	0.00	607.56
மொத்தம்		3,866.92	414.44	0.40	4,281.76

———

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the
Tamil Nadu Legislative Assembly Rules and
printed by the
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.